Bible. O.T. Tamil

THE

OLD TESTAMENT,

IN TAMIL.

மனிதர்கள் இரட்சிக்கப்படுவதற்காகச்

சருவலோக தயாபரரான கர்த்தர் அருளிச்செய்த

சத்தியவேதமென்கிற

பழைய ஏற்பாடு.

இது

மூலவாக்கியம் பெபுரிசியசையரால்

எபிரேயுபாஷையிலிருந்து

தமிழிலே திருப்பப்பட்டது.

இ. பி. ௲௮௱௬௰—ஹுலே

சென்னபட்டணத்தில் அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

NEW YORK PUBLIC LIBRARY

MADRAS:
THE MADRAS AUXILIARY BIBLE SOCIETY,
Printed at the American Mission Press.
1860.

Digitized by Google

மோசே எழுதின

முதலாம் ஆகமம்.

௧. அதிகாரம்.

ஆதியிலே பராபரன் *வானத்தையும்
பூமியையும் சிருஷ்டித்தார். *சங். ௩௩.
௬: ௱௨. ௨௬. கொலோ. ௧. ௰௬. எபிரே.
௰௧. ௩.
௨ பூமியோவெனில் ரூபமற்றதும் வெ
றுமையுமாயிருந்தது; ஆழத்தின்மேல் இரு
ளுமாயிருந்தது. *ஆனால் பராபரனுடைய
ஆவி தண்ணீர்களின்மேலே அசைவாடிக்
கொண்டிருந்தது. *சங். ௩௩. ௬.
௩ ¶ *பராபரன் வெளிச்சம் உண்டா
கக்கடவதென்றார், அப்போது வெளிச்சம்
உண்டாயிற்று. *௨ கொரி. ௪. ௬.
௪ பராபரன் வெளிச்சத்தை நல்லதென்
று கண்டார்; வெளிச்சத்தையும், இருளை
யும், பராபரன் வெவ்வேறாகப் பிரித்தார்.
௫ பராபரன் வெளிச்சத்துக்குப் பக
லென்று பேரிட்டார்; இருளுக்கோ இரா
வென்று பேரிட்டார்; இப்படியே சாயங்
காலமானதினாலும் விடியுங்காலமானதினா
லும் முதலாம்நாளுண்டாயிற்று.
௬ ¶ பிற்பாடு பராபரன் தண்ணீர்க
ளுக்கு நடுவாக *ஆகாசவிரிவுண்டாகக்க
டவதென்றும், அது தண்ணீர்களுக்குக்
தண்ணீர்களுக்கும் பிரிவுண்டாக்கக்கடவ
தென்றுஞ்சொன்னார். *சங். ௱௩௬. ௫.
௭ அப்படியே பராபரன் ஆகாசவிரி
வையுண்டுபண்ணி, ஆகாசவிரிவுக்குக்கீழா
யிருக்கிற தண்ணீர்களுக்கும்; *ஆகாச
விரிவுக்கு மேலாயிருக்கிற தண்ணீர்களுக்
கும், பிரிவுண்டாக்கினார்; அது அப்படி
யே ஆயிற்று. *சங். ௱௪௮. ௪.
௮ ஆகாசவிரிவுக்குப் பராபரன் வான
மென்று பேரிட்டார்; இப்படியே சாயங்
காலமானதினாலும் விடியுங்காலமானதினா
லும் இரண்டாம்நாள் உண்டாயிற்று.
௯ ¶ பிற்பாடு பராபரன் வானத்தின்கீ
ழிருக்கிற தண்ணீர்கள் *ஒரு இடத்திலே
சேரவும் வெட்டாந்தரை காணப்படவுங்க
டவதென்றார்; அது அப்படியே ஆயிற்று.
*யோபு. ௩௮. ௮, ௰. ௰௧. சங். ௩௩. ௭:
௱௪. ௭–௯.
௰ பராபரன் வெட்டாந்தரைக்குப் பூமி
யென்றும், சேர்ந்த தண்ணீர்களுக்குச் சமு
த்திரங்களென்றும் பேரிட்டார்; பராபரன்
அது நல்லதென்று கண்டார்.
௰௧ அப்போது பராபரன், பூமியானது
புல்லையும், விதையைப் பிறப்பிக்கிற பூண்டு
களையும், பூமியின்மேலே தங்களில் தங்
கள் விதையையுடைய கனிகளைத் தங்கள்
தங்கள் சாதியின்படியே கொடுக்கும் கனி
விருட்சங்களையும், முளைப்பிக்கக்கடவதெ
ன்றார்; அது அப்படியே ஆயிற்று.
௰௨ பூமி தங்கள் தங்கள் சாதியின்படி
யே புல்லையும், விதையைப் பிறப்பிக்கிற
பூண்டுகளையும், தங்கள் தங்கள் சாதியின்
படியே தங்களில் தங்கள் விதையையுடை
ய கனிகளைக்கொடுக்கும் விருட்சங்களை
யும் முளைப்பித்தது; பராபரன் அது நல்
லதென்று கண்டார்.
௰௩ அப்போது சாயங்காலமும் விடியுங்
காலமுமானதினால் மூன்றாம்நாள் உண்
டாயிற்று.
௰௪ ¶ பிற்பாடு பராபரன், பகலுக்கும்
இராவுக்கும் வித்தியாசம் பண்ணத்தக்க

Digitized by Google

*வெளிச்சங்கள் வானமென்ற ஆகாசவிரிவிலே உண்டாகக்கடவதென்றும், அவைகள் அடையாளங்களாகவும் குறித்தகாலங்கள் நாள்கள் வருஷங்களை அறிகிறதற்காகவுமிருந்து, *சங். ௱௩௬. ௭–௯.

௰௫ பூமியின்மேலே பிரகாசிக்கும்படிக்கு, வானமென்ற ஆகாசவிரிவிலே வெளிச்சங்களாயிருக்கக்கடவதென்றும் சொன்னார்; அது அப்படியே ஆயிற்று.

௰௬ பராபரன் பகலை ஆளப் பெரிதாயிருக்கிற வெளிச்சமும், இரவை ஆளச் சிறிதாயிருக்கிற வெளிச்சமுமாகிய இரண்டு பெரிய வெளிச்சங்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.

௰௭ அவைகளைப் பராபரன் பூமியின் மேற் பிரகாசிக்கவும்,

௰௮ பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசமுண்டாக்கவும், வானமென்ற ஆகாசவிரிவிலே வைத்தார்; பராபரன் அது நல்லதென்று கண்டார்.

௰௯ அப்போது சாயங்காலமும் விடியுங்காலமுமானதினால் நாலாம்நாளுண்டாயிற்று.

௨௰ ¶ பிற்பாடு பராபரன் தண்ணீர்கள், நீந்தும் உயிர்ப்பிராணிகளையும், பூமியின் மேல் ஆகாசவிரிவிலே பறக்கும் பறவைகளையும் திரளாய்ச் செனிப்பிக்கக்கடவதென்றார்.

௨௧ அப்படியே பராபரன் பெரிய திமிங்கலங்களையும், தண்ணீர்கள் சாதி சாதியாகத் திரளாய்ச் செனிப்பித்த சகலவித நீச்சுப்பிராணிகளையும், சாதி சாதியாயிருக்கிற செட்டைகளுள்ள சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார்; பராபரன் அது நல்லதென்று கண்டார்.

௨௨ பராபரன் அவைகளை ஆசீர்வதித்து, *நீங்கள் பலுகிப் பெருகிக் கடல்களிலுள்ள தண்ணீர்களை நிரப்புங்களென்றும், பறவைகள் பூமியிற் பெருகக்கடவதென்றும் சொன்னார். *அ. ௰௭.

௨௩ அப்போது சாயங்காலமும் விடியுங்காலமுமானதினால் ஐந்தாம்நாள் உண்டாயிற்று.

௨௪ ¶ பிற்பாடு பராபரன் பூமியானது சாதி சாதியான சீவசெந்துக்களாயிருக்கிற மிருகங்களையும், ஊர்வனவற்றையும், பூமியின் காட்டுமிருகங்களையும், சாதி சாதியாக எழும்பப்பண்ணக் கடவதென்றார்; அது அப்படியே ஆயிற்று.

௨௫ பராபரன் சாதி சாதியான பூமியின் காட்டுமிருகங்களையும், சாதி சாதியான மிருகங்களையும், சாதி சாதியான சகல பூமியின் ஊர்வனவற்லறயும் உண்டாக்கினார்; பராபரன் அது நல்லதென்று கண்டார்.

௨௬ ¶ பிற்பாடு பராபரன் *நம்முடைய சாயலாக, நம்முடைய ரூபத்தின்படியே மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரங்களின் மச்சங்களையும், ஆகாசத்துப் பறவைகளையும், மிருகசீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊருகிற சகல ஊர்வனவற்றையும், ஆளக் கடவர்களென்றார். *௫. ௧: ௯. ௬. ௧ கொரி. ௰௧. ௭. எபே. ௪. ௨௩, ௨௪. கொலோ. ௩. ௰.

௨௭ *அப்படியே பராபரன் மனுஷனைத் தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்தார்; அவனைப் பராபரனுடைய சாயலாகச் சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். *மத்தே. ௰௯. ௪.

௨௮ அப்போது பராபரன் அவர்களை ஆசீர்வதித்து, *நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரம்பப்பண்ணி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாசத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல மிருகசீவன்களையும் ஆண்டுகொள்ளுங்களென்று பராபரன் அவர்களுக்குச் சொன்னார். *அ. ௰௭: ௯. ௧.

௨௯ ¶ பின்னையும் பராபரன் சொன்னதாவது: *இதோ பூமியின்மீதெங்குமிருக்கிற விதைதரும் சகலவித பூண்டுகளை

Digitized by Google

யும், விதைதரும் கனிமரங்களாகிய சகல த விருட்சங்களையும், உங்களுக்குக் கொ த்தோம்; அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது. *கூ. ௩.

௩௰ சீவபிராணனுள்ள பூமியினுடைய சகல மிருகங்களுக்கும், ஆகாசத்தினுடைய சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊர்வன எல்லாவற்றுக்கும், சகல பச்சைப்பூண்டு பயிர்களையும், ஆகாரமாகக் கொடுத்தோமென்றார்; அது அப்படியே ஆயிற்று.

௩௧ அப்போது பராபரன் தாமுண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார்; இதோ *மெத்தவும் நன்றாயிருந்தது; அப்படியே சாயங்காலமும் விடியுங்காலமுமான நிறைல் ஆறாம்நாள் உண்டாயிற்று. *௫ மோ. ௩௨. ௪.

௨. அதிகாரம்.

இந்தப்பிரகாரமாக வானமும் பூமியும் அவைகளுடைய எல்லாச்சேனையும் உண்டாக்கப்பட்டுத்தீர்ந்தன.

௨ *பராபரன் உண்டாக்கின தம்முடைய கிரியையை ஏழாம்நாளிலே நிறைவேற்றினபிற்பாடு, அவர் தாமுண்டாக்கின தம்முடைய கிரியையையெல்லாம் முடித்தபின், ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார். *௨ மோ. ௨௰. ௰௧: ௩௧. ௰௭. ௫ மோசே ௫. ௰௪. எபிரே. ௪. ௪.

௩ பராபரன் ஏழாம்நாளை ஆசிர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்; அதேதெனில், பராபரன் உண்டுபண்ணிச் சிருஷ்டித்த தம்முடைய கிரியையையெல்லாம் முடித்தபின் அதிலே ஓய்ந்திருந்தார்.

௪ ¶ பராபரனாகிய கர்த்தர் பூமியையும், வானத்தையும், உண்டாக்குகிற நாளிலே வானமும், பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட பூர்வோத்தரங்கள் இவைகள்தான்.

௫ நிலத்தினுடைய சகலவித செடிகள் பூமியின்மேல் இன்னமிருந்ததில்லை; நிலத்தினுடைய சகலவித பூண்டுகள் இன்னம் முளைத்ததுமில்லை; ஏனென்றால், பராபரனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னம் வருஷிக்கப்பண்ணினதில்லை; நிலத்தைக் கையாள மனுஷனுமில்லை.

௬ அப்போது மூடுபனி பூமியிலிருந்தெழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது.

௭ பராபரனாகிய கர்த்தர் மனுஷனைப் *பூமியின் மண்ணினாலே உருவாக்கிச் சீவனின் சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; அப்போது மனுஷன் †சீவாத்துமாவானான். *௧ கொரி. ௰௫. ௪௭. †௧ கொரி. ௰௫. ௪௫.

௮ ¶ பராபரனாகிய கர்த்தர் ஏதேனிலே கிழக்கே ஒரு தோட்டத்தை நாட்டி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.

௯ பார்வைக்கு விருப்பமும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே *சீவனின் விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும், பராபரனாகிய கர்த்தர் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார். *அறி. ௨. ௭.

௰ *ஏதேனிலேயிருந்து ஒரு நதி தோட்டத்துக்குப் பாயப் புறப்பட்டு, அங்கேயிருந்து பிரிந்து நாலுதலையான ஆறுகளாயிற்று.

௰௧ முதலாவதற்குப்பேர் பீசோன்: இது பொன்னுண்டாயிருக்கும் ஆவிலா தேசத்தையெல்லாம் சுற்றி ஓடுகிறது.

௰௨ அந்தத் தேசத்தின் பொன் நல்லது; அவ்விடத்திலே பெதோலாகும் கோமேதகக்கல்லும் உண்டு.

௰௩ இரண்டாம் ஆற்றுக்குப் பேர் கீகோன்: இது எத்தியோப்பிய தேசத்தையெல்லாம் சுற்றி ஓடுகிறது.

௰௪ மூன்றாம் ஆற்றினுடைய பேர் *இதெக்கேல்: இது அசூரியாவுக்குக் கிழக்காய் ஓடுகிறது. நாலாம் ஆறேவென்றால் ஐபிராத்து. *தானி. ௰. ௪.

௰௫ ¶ பராபரனாகிய கர்த்தர் மனுஷனை அழைத்துக்கொண்டு, அவனை ஏதேன்

Digitized by Google

தோட்டத்திலே அதைக் கையாளவும் காக்கவும் வைத்தார்.

௰௬ பராபரனாகிய கர்த்தர் மனுஷனுக்குக் கற்பித்துச் சொன்னதாவது: நீ தோட்டத்தினுடைய சகல விருட்சத்தின் கனியிலும் புசிக்கவே புசிக்கலாம்.

௰௭ ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியிலே புசியாயாக; ஏனெனில், அதிலே நீ புசிக்கிறநாளிலே *சாவவே சாவாயென்றார். *உரோ. ௬. ௰௨.

௰௮ ¶ பின்னையும் பராபரனாகிய கர்த்தர் மனுஷன் ஒண்டியாயிருக்கிறது நல்லதல்ல; அவனுக்குமுன்பாக இருக்க ஒரு துணையை அவனுக்கு உண்டாக்குவோமென்றார்.

௰௯ ஏனெனில், பராபரனாகிய கர்த்தர் மண்ணினாலே வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாசத்தினுடைய சகல பறவைகளையும் உருவாக்கியிருந்து, மனுஷனண்டைக்கு அவைகளுக்கெப்படிப் பேரிடுவானென்று பார்ப்பதற்கும், அந்தந்தச் சீவபிராணிக்கு மனுஷன் எந்தெந்தப் பேரிடுவானோ அதுவே அதற்குப் பேராயிருப்பதற்கும் கூட்டிவந்தார்.

௨௰ அப்படியே மனுஷன் சகலவித மிருகத்துக்கும், ஆகாசத்துப் பறவைக்கும், வெளியின் சகல சீவனுக்கும் பேரிட்டான்; ஆனால் தனக்குமுன்பாக இருக்கும் துணையை மனுஷன் கண்டதில்லை.

௨௧ ¶ அப்போது பராபரனாகிய கர்த்தர் மனுஷன்மேல் அயர்ந்த நித்திரையை விழப்பண்ணினார்; அவன் நித்திரைபோனான்; அப்போது அவர் அவன் விலாவெலும்புகளிலொன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

௨௨ *தாம் மனுஷனில் எடுத்த விலாவெலும்பைப் பராபரனாகிய கர்த்தர் ஸ்திரியாக உண்டாக்கி, அவளை மனுஷனண்டைக்குக் கொண்டுவந்தார்: *க கொரி. ௰௧. ௮, ௯. க திமோ. ௨. ௰௩.

௨௩ அப்போது மனுஷன்: இவள் இப்போது *என் எலும்பில் எலும்பும், என் மாமிசத்தில் மாமிசமுமானாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினாலே, இவள் மனுஷியென்று பேரிடப்படுவாளென்றான். *எபே. ௫. ௩௰, ௩௧.

௨௪ *இதினிமித்தமாகப் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டுத் தன் பெண்சாதியுடனே இசைந்திருப்பான்; †இருவரும் ஒரே மாமிசமாக இருப்பார்களென்றார். *மத்தே. ௰௯. ௫. மாற். ௰. ௭. †எபே. ௫. ௨௮, ௨௯.

௨௫ ஆதாம் அவன் பெண்சாதி இருவரும் *நிருவாணமாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள். *௩. ௭.

௩. அதிகாரம்.

சர்ப்பமோவெனில், பராபரனாகிய கர்த்தர் உண்டாக்கின வெளியினுடைய சகல சீவன்களைப்பார்க்கிலும் தந்திரமுள்ளதாயிருந்து, ஸ்திரியுடனே: நீங்கள் தோட்டத்தினுடைய எல்லா விருட்சங்களின் கனியிலும் புசிக்கவேண்டாமென்று பராபரன் சொன்னாரோவென்றது.

௨ அப்போது ஸ்திரி சர்ப்பத்துடனே சொன்னதாவது: தோட்டத்தினுடைய விருட்சங்களின் கனியிற் புசிக்கிறோம்.

௩ ஆனால் தோட்டத்தின் நடுவிலேயிருக்கிற விருட்சத்தின் கனியைக்குறித்துப் பராபரன், நீங்கள் சாவாதபடிக்கு அதிலே புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாமென்றாரென்று சொன்னாள்.

௪ *அப்போது சர்ப்பம் ஸ்திரியுடனே: நீங்கள் சாவவே சாவதில்லை. *யோவா. ௮. ௪௪. ௨ கொரி. ௰௧. ௩.

௫ ஏனெனில், நீங்கள் அதிலே புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படுமென்றும், நீங்கள் நன்மையும் தீமையும் அறிந்து, பராபரனைப்போல இருப்பீர்களென்றும், பராபரன் அறிவாரென்றது.

௬ ¶ *அப்போது ஸ்திரியானவள், அந்த விருட்சம் போசனத்துக்கு நல்லதென்றும், அது கண்களுக்கு விருப்பமும் புத்தியைத்

Digitized by Google

தருகிறதற்கான இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருக்கிறதென்றும் பார்த்து, அதின் கனியிலே அறுத்துப் புசித்து, தன் புருஷனுக்குங்கூடக் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.* ௧ தீமோ. ௨. ௰௪.

௭ அப்போது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டன; அவர்கள் தாங்கள் நிருவாணிகளென்று கண்டறிந்து, அத்தியிலைகளைத் தைத்துத் தங்களுக்குக் கச்சைகளை உண்டுபண்ணினார்கள். *௨. ௨௫.

௮ பகல் குளிர்ச்சியான வேளையிலோவென்றால், தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கிற பராபரனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள்; அப்போது ஆதாமும், அவன் பெண்சாதியும், பராபரனாகிய கர்த்தரின் சந்நிதியை விலக, தோட்டத்து விருட்சங்களின் நடுவில் ஒளித்துக் கொண்டார்கள்.

௯ ¶ ஆனால் பராபரனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, அவனை நீ எங்கேயென்றார்.

௰ அதற்கவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிருவாணியானபடியினாலே பயந்து, ஒளித்துக்கொண்டேனென்றான்.

௰௧ அப்போது அவர் நீ நிருவாணியென்று உனக்கறிவித்தவனார்? *புசிக்கவேண்டாமென்று நாம் உனக்குக் கற்பித்த விருட்சத்தின் கனியைப் புசித்தாயோவென்றார்.* ௨. ௰௬, ௰௭.

௰௨ அதற்கு ஆதாம்: என்னுடனேயிருக்கத் தேவரீர் கட்டளையிட்ட ஸ்திரீயானவள் விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேனென்றான்.

௰௩ அப்போது பராபரனாகிய கர்த்தர் ஸ்திரீயைநோக்கி, நீ இதைச்செய்ததென்னவென்றார்; ஸ்திரீயானவள்: சர்ப்பம் என்னை மோசம்போக்கினதினாலே புசித்தேனென்றாள்.

௰௪ ¶ அப்போது பராபரனாகிய கர்த்தர் சர்ப்பத்துடனே சொன்னதாவது: நீ இதைச் செய்தபடியினாலே எல்லா மிருகங்களிலும், வெளியினுடைய எல்லாச் சீவன்களிலும், நீ சபிக்கப்பட்டது; நீ உன் வயிற்றினாலே நகர்ந்து, உயிரோடிருக்கிறநாளெல்லாம் மண்ணைத் தின்பாய்.

௰௫ ¶ உனக்கும் ஸ்திரீக்கும், உன்னுடைய வித்துக்கும், அவளுடைய வித்துக்கும், பகையை உண்டாக்குவோம்; *இவர் உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிகாலை நசுக்குவாயென்றார். *௧ யோவா. ௩. ௮.

௰௬ ¶ * ஸ்திரீயோடே அவர் சொன்னதாவது: நீ கர்ப்பவதியாயிருக்கும் வருத்தத்தை மிகவும் பெருகப்பண்ணுவோம்; வேதனையோடே பிள்ளைகளைப் பெறுவாயென்றும், உன்னுடைய இச்சை உன் புருஷனுக்குக் கீழாயிருப்பதாக, அவன் உன்னை ஆளக்கடவானென்றும் சொன்னார். *௧ கொரி. ௰௧: ௩: ௰௪. ௩௪. எபே. ௫. ௨௨, ௨௩.

௰௭ பிற்பாடு ஆதாமோடே அவர் சொன்னதாவது: நீ உன் பெண்சாதியின் சத்தத்துக்குச் செவிகொடுத்து, புசியாயாகவென்று நாம் உனக்குக் கற்பித்த விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கிற நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.

௰௮ அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும், வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.

௰௯ நீ பூமிக்குள் திரும்புமட்டும் *உன் முகத்தின் வேர்வையால் அப்பம் புசிக்கக்கடவாய்; அதேனெனில், அதில் எடுக்கப்பட்டாய்; ஏனென்றால், †நீ மண்ணாயிருக்கிறாய்; மண்ணுக்குத் திரும்புவாயென்றார். *௨ தெச. ௩. ௰. †௰௮. ௨௭.

௨௰ ஆதாம் தன் பெண்சாதிக்கு, ஏவாளென்று பேரிட்டான்; ஏனெனில், அவள் சீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.

௨௧ ¶ பராபரனாகிய கர்த்தர் ஆதாமுக்

Digitized by Google

கும் அவன் பெண்சாதிக்கும் தோல் அங்கி
யையுண்டாக்கி, அவர்களுக்குத்தரிப்பித்தார்.
௨௨ ¶ பிற்பாடு பராபரனாகிய கர்த்தர்
இதோ மனுஷன், நன்மை தீமை அறியத்
தக்கவனாய் நம்மிலொருத்தரைப்போலி
ருந்தான்; இப்போதும், அவன் தன் கை
யை நீட்டி, ஜீவவிருட்சத்தின் கனியையும்
அறுத்துப் புசித்து, என்றைக்கும் உயிரோ
டிராதபடிக்குக் கட்டளைபண்ணவேணுமெ
ன்று சொல்லி,
௨௩ பராபரனாகிய கர்த்தர் அவனை, அவன்
எடுக்கப்பட்ட பூமியைப் பயிரிடும்படிக்
கு, ஏதேன்தோட்டத்திலிருந்து அனுப்பி
விட்டார்.
௨௪ அவர் மனுஷனைத் துரத்திவிட்டு,
ஏதேனென்ற தோட்டத்துக்குக் கிழக்கே
கேருபீன்களையும், அசைவாடுகிற சுடர் ஒளி
யுள்ள பட்டயத்தையும், ஜீவவிருட்சத்துக்
குப் போகிறவழியைக் காப்பதற்காக வைத்
தார்.

௪. அதிகாரம்.

பிற்பாடு ஆதாம் தன் பெண்சாதியாகிய
ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பந்தரித்
து, காயீனைப்பெற்றுக் கர்த்தராகிய புரு
ஷன் எனக்கிருக்கிறாரென்றாள்.
௨ அப்புறம் அவன் சகோதரனாகிய ஆ
பேலைப் பெற்றாள்; ஆபேல் ஆட்டுமேய்ப்
பனானான்; காயீனோவெனில், நிலத்திற்
பயிரிடுகிறவனானான்.
௩ சிலநாள் சென்றபிற்பாடு சம்பவித்த
தேதென்றால், காயீன் நிலத்தின் கனியிலே
கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டு
வந்தான்.
௪ ஆபேலோவென்றால், அவனும் தன்
மந்தையின் தலையீற்றுகளிலும், அவைக
ளின் கொழுப்பிலும் சிலவற்றைக் கொண்
டுவந்தான்; ஆனால் *கர்த்தர் ஆபேலையும்,
அவன் காணிக்கையையும் நோக்கிப்பார்த்
தார். *எபிரே. ௰௧. ௪.
௫ காயீனையும் அவன் காணிக்கையையும்
நோக்கிப் பாராதேபோனார்; அப்போது
காயீனுக்கு மிகவும் எரிச்சலுண்டாய், அவ
னுடைய முகநாடி வேறுபட்டது.
௬ அப்போது கர்த்தர் காயீனோடே சொ
ன்னதாவது: உனக்கேன் எரிச்சலுண்டா
யிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?
௭ நீ நன்மைசெய்தால், மேன்மையில்லை
யோ? நீ நன்மைசெய்யாயேயாகில், பாவம்
வாசற்படியிலே படுத்துக்கொண்டிருக்கி
ன்றது; அதின்இச்சை உன்பேரில் வைக்கப்
பட்டது; *நீயோவெனில், அதை ஆண்டு
கொள்ளுவாயாகவென்றார். *உரோ. ௬. ௰௨.
௮ ¶ அப்போது காயீன் தன் சகோதர
னாகிய ஆபேலோடே பேசினான்; அவர்கள்
வெளியிலேயிருக்கிறபோதோவெனில் ச
ம்பவித்ததேதென்றால், காயீன் தன் சகோ
தரனாகிய ஆபேலுக்கு விரோதமாயெழும்
பி, *அவனைக் கொன்றுபோட்டான். *மத்.
௨௩. ௩௫. ௧ யோவா. ௩. ௰௨. யூதா. ௰௧.
௯ கர்த்தர் காயீனுடனே: உன் சகோதர
னாகிய ஆபேல் எங்கேயென்றார்; அதற்
கவன், நான் அறியேன்; நான் என் சகோ
தரனுக்குக் காவலாளியோவென்றான்.
௰ அப்போது அவர் சொன்னதாவது:
என்னசெய்தாய்? உன் சகோதரனுடைய
இரத்தத்தின் சத்தம் *பூமியிலிருந்து நம்
மைநோக்கிக் கூப்பிட்டுக்கொண்டிருக்
கின்றது. *எபி. ௰௨. ௨௪.
௰௧ இப்போது உன் சகோதரனுடைய
இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொ
ள்ளத் தன் வாயைத்திறந்த இந்தப் பூமியி
லே, நீ இராதபடிக்குச் சபிக்கப்பட்டிருப்
பாய்.
௰௨ நீ நிலத்தைப் பயிரிடும்போது
அது இனித் தன் சாரத்தை உனக்குக் கொ
டாது; நீ பூமியில் நிலையற்றவனும் அலைகி
றவனுமாயிருப்பாயென்றார்.
௰௩ அப்போது காயீன் கர்த்தரோடே
சொன்னதாவது: என் அக்கிரமம் மன்னிக்
கப்படக்கூடாதபடிக்குப் பெரிதாயிருக்
கின்றது.

Digitized by Google

௰௪ இதோ இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து துரத்திவிடுகிறீர்; நான் தேவரீருடைய சமுகத்தை விலகி மறைந்து, *பூமியில் நிலையற்றவனும், அலைகிறவனுமாயிருப்பேன்; இப்படி என்னைக் கண்டுபிடிக்கிறவனெல்லாம் என்னைக் கொன்றுபோடுவானென்றான். *யோபு. ௰௫. ௨௰, ௨௧.

௰௫ அப்போது கர்த்தர் அவனுடனே: ஆகையால், காயீனைக் கொல்லுகிற எவன் மேலும் ஏழுபழி சுமருமென்றுசொல்லி, காயீனைக் கண்டுபிடிக்கிறவனெல்லாம் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவனுக்கொரு அடையாளம்போட்டார்.

௰௬ அப்படியே காயீன் கர்த்தருடைய சமுகத்தைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோதென்ற தேசத்தில் குடியிருந்தான்.

௰௭ காயீன் தன் பெண்சாதியை அறிந்தான்; அவள் கர்ப்பந்தரித்து, ஆனோக்கைப் பெற்றாள்; காயீன் ஒரு பட்டணத்தைக்கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரன் ஆனோக்குடைய பேரைத் தரித்தான்.

௰௮ ஆனோக்குக்கு இராத் பிறந்தான்; இராத், மெகூயவேலைப் பெற்றான்; மெகூயவேல், மெத்தூஷவேலைப் பெற்றான்; மெத்தூஷவேல், லாமேகைப் பெற்றான்.

௰௯ ¶ லாமேக் இரண்டு பெண்சாதிகளை விவாகம் பண்ணினான்; முதலாம் பெண்சாதியின்பேர் ஆதாள்; இரண்டாம் பெண்சாதியின்பேர் சில்லாள்.

௨௰ ஆதாள் யாபாலைப் பெற்றாள்; அவன் கூடாரங்களில் வாசம்பண்ணி, மந்தை வைக்கிறவர்களுக்குத் தகப்பனானான்.

௨௧ அவன் சகோதரனுடையபேர் யூபால்; அவன் சகல சுரமண்டலக்காரருக்கும் கின்னரக்காரருக்கும் தகப்பனானான்.

௨௨ சில்லாளும் கர்ப்பந்தரித்துத் தூபால் காயீனைப் பெற்றாள்; அவன் சகல கன்னாருக்கும் கொல்லருக்கும் முதலாளி; தூபால் காயீனுடைய சகோதரி நாமாள்.

௨௩ லாமேக் தன் பெண்சாதிகளாகிய ஆதாளோடும் சில்லாளோடும் சொன்னதாவது: லாமேகின் பெண்சாதிகளே, என் சத்தத்தைக் கேட்டு என் சொல்லுக்குக் கவனமாயிருங்கள்; ஒரு மனுஷனை எனக்குக் காயமுண்டாகவும், ஒரு வாலிபனை எனக்குத் தழும்புண்டாகவும் கொன்றுபோட்டேன்.

௨௪ காயீனுக்காக ஏழு பழியும், லாமேகுக்காக எழுபத்தேழு பழியும் சுமருமென்றான்.

௨௫ ¶ ஆதாம் பின்னையும் தன் பெண்சாதியை அறிந்தான், அவள் ஒரு குமாரனைப் பெற்று, காயீன் கொன்றுபோட்ட ஆபேலுக்குப் பதிலாகப் பராபரன் எனக்கு வேறொரு வித்தைக் கொடுத்தாரென்று சொல்லி, அவனுக்குச் *சேத் என்று பேரிட்டாள். *௫. ௩.

௨௬ சேத்துக்கும் *ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அப்போது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளத்துவக்கமாயிற்று. *௫. ௬.

௫. அதிகாரம்.

ஆதாமுடைய *சந்ததிகளின் அட்டவணையாவது: பராபரன் மனுஷனைச் சிருஷ்டிக்கிறநாளிலே †அவனைப் பராபரனுடைய சாயலாக உண்டாக்கினார். *௧ நாளா. ௧. ௧. † ௧. ௨௭.

௨ அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து, அவர்களை ஆசீர்வதித்து, அவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலே அவர்களுக்கு மனுஷரென்று பேரிட்டார்.

௩ ஆதாம் நூற்றுமுப்பதுவருஷம் உயிரோடிருந்தபோது, தன் சாயலாகத் தன்னுடைய ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று, *அவனுக்குச் சேத்தென்று பேரிட்டான். *௪. ௨௫.

௪ ஆதாம் சேத்தைப் பெற்றபிற்பாடு,

Digitized by Google

எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ரு ஆகையால், ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பதுவருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

சா ¶ சேத் நூற்றைந்து வயதாயிருந்து, ஏனோசைப் பெற்றான்.

எ சேத் ஏனோசைப் பெற்றபிற்பாடு, எண்ணூற்றேழு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

அ ஆகையால், சேத்துடைய நாளெல்லாம் தொளாயிரத்துப் பன்னிரண்டு வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

கூ ¶ ஏனோஸ் தொண்ணூறு வயதாயிருந்து, கேனானைப் பெற்றான்.

ய ஏனோஸ் கேனானைப் பெற்றபிற்பாடு, எண்ணூற்றுப் பதினைந்து வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

யக ஆகையால், ஏனோசுடைய நாளெல்லாம் தொளாயிரத்தைந்து வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

யஉ கேனான் எழுபது வயதாயிருந்து, மக்லாலேயேலைப் பெற்றான்.

யங கேனான் மக்லாலேயேலைப் பெற்றபிற்பாடு, எண்ணூற்று நாற்பதுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

யச ஆகையால், கேனானுடைய நாளெல்லாம் தொளாயிரத்துப் பத்துவருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

யரு ¶ மக்லாலேயேல் அறுபத்தைந்து வயதாயிருந்து, யாரேத்தைப் பெற்றான்.

யசா மக்லாலேயேல் யாரேத்தைப் பெற்றபிற்பாடு, எண்ணூற்றுமுப்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

யஎ ஆகையால், மக்லாலேயேலுடைய நாளெல்லாம் எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

யஅ யாரேத் நூற்றறுபத்திரண்டு வயதாயிருந்து, ஏனோக்கைப் பெற்றான்.

யகூ யாரேத் ஏனோக்கைப் பெற்றபிற்பாடு, எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

உய ஆகையால், யாரேத்துடைய நாளெல்லாம் தொளாயிரத்தறுபத்திரண்டு வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

உக ¶ ஏனோக் அறுபத்தைந்து வயதாயிருந்து, மெத்தூசலாவைப் பெற்றான்.

உஉ ஏனோக் மெத்தூசலாவைப் பெற்றபிற்பாடு, முந்நூறு வருஷம் பராபரனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

உங ஏனோக்குடைய நாளெல்லாம் முந்நூற்றறுபத்தைந்து வருஷமாயிருந்தது.

உச *ஏனோக் பராபரனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், இராதேபோனான்; ஏனெனில், பராபரன் அவனை †எடுத்துக்கொண்டார். * எபி. யக. ரு. யூதா. யச. வச. † உ இரா. உ. யக.

உரு ¶ மெத்தூசலா நூற்றெண்பத்தேழு வயதாயிருந்து, லாமேக்கைப்பெற்றான்.

உசா மெத்தூசலா லாமேக்கைப் பெற்றபிற்பாடு, எழுநூற்றெண்பத்திரண்டுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

உஎ ஆகையால், மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்தறுபத்தொன்பதுவருஷமாயிருந்தது; பிற்பாடுமரித்தான்.

உஅ ¶ லாமேக் நூற்றெண்பத்திரண்டு வயதாயிருந்து, ஒரு குமாரனைப்பெற்று,

உகூ கர்த்தர் சபித்த பூமியிலே உண்டான நம்முடைய வேலையிலும் நம்முடைய கைகளின் வருத்தத்திலும் இவன் நம்மைத் தேற்றுவானென்று சொல்லி, அவனுக்கு நோவாவென்று பேரிட்டான்.

ஙய லாமேக் நோவாவைப் பெற்றபிற்பாடு, ஐந்நூற்றுத் தொண்ணூற்றைந்துவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

Digitized by Google

௩௧ ஆகையால் லாமேகுடைய நாளெல்லாம் எழுநூற்றெழுபத்தேழு வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

௩௨ நோவா ஐந்நூறு வயதானபோது, நோவா *சேமையும், காமையும், யாப்பேத்தையும் பெற்றான். *௬. ௰.

௬. அதிகாரம்.

மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவக்கி அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது, சம்பவித்ததேதென்றால்,

௨ பராபரனுடைய குமாரர் மனுஷருடைய குமாரத்திகளை அவர்கள் சவுந்தரியமுள்ளவர்களென்று பார்த்துத் தாங்கள் தெரிந்துகொண்ட அனைவரிலும் பெண்களைக் கொண்டார்கள்.

௩ அப்போது கர்த்தர் *நம்முடைய ஆவி என்றென்றைக்கும் மனுஷரோடே போராடுவதில்லை; ஏனெனில், அவர்கள் தானும் மாமிசம்; அவர்கள் இருக்கப்போகிற நாள்கள் நூற்றிருபதுவருஷமென்றார். *ஏசா. ௬. ௰. அப். ௭. ௫௧.

௪ அந்நாள்களில் இராட்சதர் பூமியிலேயிருந்தார்கள்; பிற்பாடு பராபரனுடைய குமாரர் மனுஷருடைய குமாரத்திகளோடே கூடுகிறதினால் இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது இவர்களும் பூருவத்தில் பேர்போன மனுஷராகிய பலவான்களானார்கள்.

௫ ஆனால், மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெரியதென்றும்,* அவன் இருதயத்தினுடைய நினைவுகளின் தோற்றுதலெல்லாம் நித்தம் பொல்லாததே என்றும், † கர்த்தர் கண்டபோது, *௮. ௨௧. மத். ௰௫. ௰௯. † சங். ௰௪. ௨.

௬ தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்குக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு நோவாயிருந்தது.

௭ அப்போது கர்த்தர் சொன்னதாவது: நாம் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின்மேல்வைக்காமல், மனுஷன்முதற்கொண்டு மிருகங்கள்பரியந்தமும், ஊர்வனபரியந்தமும், ஆகாசத்துப்பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவோம்; ஏனெனில், நாம் அவர்களை உண்டாக்கினது நமக்கு மனஸ்தாபமாயிருக்கிறதென்றார்.

௮ ¶ ஆனால், *நோவாவுக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபைகிடைத்தது. *எபி. ௰௧. ௭.

௯ நோவாவின் சந்ததியாவது: நோவா தன் காலத்தில் இருக்கிறவர்களுக்குள்ளே நீதியும் உத்தமமுமான மனுஷனாயிருந்தான்; *நோவா பராபரனோடே சஞ்சரித்துவந்தான். *௫. ௨௨.

௰ *நோவா சேம், காம், யாப்பேத்தென்ற மூன்று குமாரரைப்பெற்றான். *௫. ௩௨.

௰௧ பூமியோவெனில், பராபரனுக்கு முன்பாகக் கெடுக்கப்பட்டிருந்தது; கொடுமையினாலே பூமி நிறைந்தது.

௰௨ பராபரன் பூமியைப் பார்த்தார்; இதோ கெடுக்கப்பட்டதாயிருந்தது; ஏனெனில், மாமிசமெல்லாம் பூமியின்மேல் தன் வழியைக் கெடுத்தது.

௰௩ அப்போது பராபரன் நோவாவுக்குச் சொன்னதாவது: எல்லா மாமிசத்தின் முடிவும் நமக்கு முன்பாகவந்தது; ஏனெனில், அவர்களால் பூமி கொடுமையினாலே நிறைந்தது; இதோ நாம் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவோம்.

௰௪ ¶ நீ கொப்பேர் மரங்களால் உனக்கொரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளையுண்டாக்கி, அதன் உள்ளும்புறம்புமாகக் கிசில் பூசுவாயாக.

௰௫ நீ அதைப் பண்ணவேண்டிய பிரகாரமாவது: பேழையின் நீளம் முந்நூறு முழமும் அதின் அகலம் ஐம்பது முழமும் அதின் உயரம் முப்பதுமுழமுமாயிருப்பதாக.

௰௬ நீ பேழைக்கு வெளிச்சம்வரும் திறப்பைப்பண்ணி, மேல்தட்டுக்கு ஒரு முழத்தாழ்த்தியிலே அதைச் செய்து முடித்

Digitized by Google

து, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்துக் கீழ் அறைகளையும், இரண்டாந் தட்டின் அறைகளையும், மூன்றாந்தட்டின் அறைகளையும் பண்ணுவாயாக.

௰௭ ஏனென்றால் இதோ, வானத்தின்கீழே சீவசுவாசமுள்ள எல்லா மாமிசத்தையும் அழிக்க, நாம் பூமியின்மேல் சலப்பிரளயத்தை வரப்பண்ணுவோம்; பூமியிலுள்ளவையெல்லாம் மாண்டுபோம்.

௰௮ ஆனால் உன்னோடே நம்முடைய உடம்படிக்கையை நிலைநிறுத்துவோம்; நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உன் பெண்சாதியும் உன் குமாரரின் பெண்சாதிகளும் பேழைக்குள் பிரவேசிக்கக்கடவீர்கள்.

௰௯ உன்னோடேகூட உயிரோடே காப்பதற்கு நீ எல்லாவித மாமிசமான சகல சீவன்களிலும் *வகை ஒன்றுக்கு ஆணும் பெண்ணுமாயிருக்கிற ஒவ்வொரு சோடு பேழைக்குள் சேர்த்துக்கொள்வாயாக. *௭. ௯.

௨௰ சாதி சாதியான பறவைகளிலும் சாதி சாதியான மிருகங்களிலும் சாதி சாதியான பூமியின் எல்லா ஊர்வனவற்றிலும், வகை ஒன்றுக்கு ஒவ்வொருசோடு உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னண்டைக்கு வரக்கடவது.

௨௧ ஆகையால், நீ தின்கிற சகலவித பண்டங்களையும் எடுத்துக்கொண்டு, உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாயிருப்பதற்காக உன்னண்டையிலே சேர்த்துக்கொள்ளக்கடவாயென்றார்.

௨௨ *நோவா அப்படிச்செய்தான்; பராபரன் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் அவன்செய்தான். *௭. ௫. எபி. ௰௧. ௭.

௭. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் நோவாவோடே சொன்னதாவது: *நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; ஏனெனில், இந்தச் சந்ததியில் உன்னை நமக்கு முன்பாகநீதிமானாகக்கண்டோம். *௨பேது. ௨. ௫.

௨ பூமியின்மீதெங்கும் வித்தை உயிரோடே காக்கும்படிக்கு நீ சுத்தமான சகல மிருகங்களிலும் ஆணும் பெண்ணுமாயிருக்கிற எவ்வேழு சோடும், சுத்தமல்லாத மிருகங்களிலோவென்றால், ஆணும் பெண்ணுமாயிருக்கிற ஒவ்வொருசோடும்,

௩ ஆகாசத்துப் பறவைகளிலும் சேவலும் பேடுமாயிருக்கிற எவ்வேழுசோடும் உன்னண்டையிற் சேர்த்துக்கொள்ளக்கடவாய்.

௪ ஏனெனில், இன்னம் ஏழுநாள் சென்றபிற்பாடு நாம் பூமியின்மேல் இரவுபகல் நாற்பதுநாளாக மழையை வருஷிக்கப்பண்ணி, நாம் உண்டாக்கின சீவசெந்து அனைத்தையும் பூமியின்மேலிராதபடிக்கு நிக்கிரகம் பண்ணுவோமென்றார்.

௫ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் நோவா செய்தான்.

௬ பூமியின்மேல் சலப்பிரளயத்தின் தண்ணீர்கள் உண்டாகிறபோது நோவா அறுநூறுவயதாயிருந்தான்.

௭ நோவாவும் அவனோடேகூட அவன் குமாரரும் அவன் பெண்சாதியும் அவன் குமாரரின் பெண்சாதிகளும் சலப்பிரளயத்தின் தண்ணீர்களுக்குத் தப்பப் *பேழைக்குள் பிரவேசித்தார்கள். *மத். ௨௪. ௩௮, ௩௯. லூக். ௰௭. ௨௭.

௮ பராபரன் நோவாவுக்குக் கற்பித்தபடியே சுத்தமான மிருகங்களிலும் சுத்தமில்லாத மிருகங்களிலும் பூமியின்மேல் ஊர்வனவெல்லாவற்றிலும்,

௯ *ஆணும் பெண்ணும் சோடுசோடாய் நோவாவண்டையிலே பேழைக்குட்பட்டன. *௬. ௰௯.

௰ ஏழுநாள் சென்றபிற்பாடு சம்பவித்ததேதென்றால், பூமியின்மேல் சலப்பிரளயத்தின் தண்ணீர்களுண்டாயின.

௰௧ நோவா அறுநூறாம்வயதாகிறவருஷத்தில் இரண்டாம்மாதம் பதினேழாந்தேதியா

Digitized by Google

கிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக
ளெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுக
ளும் திறவுண்டன.
௰௨ இரவும் பகலும் நாற்பதுநாளாகப்
பூமியின்மேல் பெருமழை உண்டாயிருந்
தது.
௰௩ அந்த நாளில்தானே நோவாவும்,
நோவாவின் குமாரராகிய சேமும், காமும்,
யாப்பேத்தும், அவர்களோடேகூட நோவா
வின் பெண்சாதியும், அவன் குமாரரின்
மூன்று பெண்சாதிகளும் பேழைக்குட் பிர
வேசித்தார்கள்.
௰௪ இவர்கள்தவிரச் சாதி சாதியான சக
லவித சீவன்களும், சாதி சாதியான சகல
வித மிருகங்களும், பூமியின்மேல்ஊருகிற
சாதி சாதியான சகலவித ஊர்வனவும், சாதி
சாதியான சகலவித பறவைகளும், எப்ப
டிப்பட்ட சிறகுமுள்ள சகலவித பட்சி
களும் உட்பட்டன.
௰௫ இப்படியே சீவசுவாசமுள்ள எல்
லா மாமிசத்திலேயும் சோடு சோடானவை
கள் நோவாவண்டையிலே பேழைக்குள்
போயின.
௰௬ உட்போனவைகள், பராபரன் அவ
னுக்குக் கற்பித்தபடியே சகலவித மாமிசத்
தில் ஆணும்பெண்ணுமாய் உட்போயின;
அப்போது, கர்த்தர் அவனுக்குப்பின்னாகக்
கதவடைத்தார்.
௰௭ சலப்பிரளயம் நாற்பதுநாள் பூமி
யின்மேலுண்டாகிறபோது தண்ணீர்கள்
பெருகி, பேழையைக் கிளம்பப்பண்ணி,
அது பூமியைவிட்டு உயரவந்தது.
௰௮ தண்ணீர்கள் மகா வெள்ளமாகிப் பூ
மியின்மேல் மிகவும் பெருகிற்று; ஆனால்,
பேழை தண்ணீர்களின்மேல் மிதந்துகொ
ண்டிருந்தது.
௰௯ தண்ணீர்கள் பூமியின்மேல் மிக
வும் மிகுந்த வெள்ளமானதினாலே, வானத்
தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த பருவதங்க
ளெல்லாம் மூடப்பட்டன.
௨௰ மூடப்பட்ட பருவதங்களுக்கு மே
லாய்ப் பதினைந்துமுழ உயரத்திற்குத் தண்
ணீர்கள் பெருகிப்போயிற்று.
௨௧ அப்போது பூமியின்மேல் அசை
வாடுகிற எல்லா மாமிசமுமாகிய பறவைக
ளும், சாதுமிருகங்களும், துஷ்டமிருகங்க
ளும், பூமியின்மேல் ஊருகிற சகல ஊர்
வனவும், *எல்லா மனுஷசீவனும் மாண்
டது. *லூக். ௰௭. ௨௭.
௨௨ வெட்டாந்தரையில் உண்டானவை
யெல்லாவற்றிலும், நாசியில் சீவசுவாச
மான ஆவியையுடையவையெல்லாம் செ
த்துப்போயின.
௨௩ பூமியின்மேல் மனுஷனைத்துவக்கி
மிருகங்கள்பரியந்தமும், ஊர்வனபரியந்
தமும், ஆகாசத்துப் பறவைகள்பரியந்த
மும், இருந்த உயிருள்ள வஸ்து யாவும்
நிக்கிரகமாயின; அவைகள் பூமியில் இரா
தபடிக்கு நிக்கிரகமாயின; நோவாவும்,
அவனுடனே பேழையிலிருந்தவைகளுமா
த்திரமே உயிரோடே வைக்கப்பட்ட மீதி
யாயின.
௨௪ தண்ணீர்கள் பூமியின்மேல் நூற்
றைம்பதுநாள் மிகவும் பெருத்திருந்தது.

௮. அதிகாரம்.

பராபரனோவென்றால், நோவாவையும்,
அவனோடேகூடப் பேழையிலிருந்த எல்
லாச் சீவன்களையும், எல்லா மிருகங்களையு
ம் நினைத்தார்; ஆகையால், பராபரன் பூமி
யின்மேல் காற்றை அடிக்கப் பண்ணினார்;
அப்போது தண்ணீர்கள் அமர்ந்தது.
௨ ஆழத்தின் ஊற்றுகளும், வானத்தின்
மதகுகளும் அடைபட்டு, வானத்திலிருந்
துண்டான மழை நிறுத்தப்பட்டுப்போயிற்று.
௩ அப்போது தண்ணீர்கள் போகப்போ
கப் பூமியைவிட்டுத் திரும்பிற்று; *நூற்
றைம்பதுநாளுக்குப்பிற்பாடு, தண்ணீர்கள்
குறைந்தது. *௭. ௨௪.
௪ ¶ ஏழாமாதம் பதினேழாந்தேதியிலே,
பேழை *ஆராத்தென்ற மலைகளின்மேல்
தங்கிற்று. *எசா. ௩௭. ௩௮.

Digitized by Google

௫ பத்தாமாதமட்டும் தண்ணீர்கள் குறைந்துவருகையில், பத்தாமாதமுதல்தேதியிலே, பருவதங்களின் சிகரங்கள் காணப்பட்டது.

௬ நாற்பதுநாள் சென்றபிற்பாடு சம்பவித்ததேதென்றால், நோவா தான்பேழையிலுண்டாக்கியிருந்த பலகணியைத் திறந்து,

௭ ¶ ஒரு காகத்தை வெளியே விட்டான்; அது புறப்பட்டுப் பூமியின்மேலிருந்த தண்ணீர்கள் சுவறிப்போகுமட்டும் போகிறதும் வருகிறதுமாயிருந்தது.

௮ பிற்பாடு பூமியின்மேல் தண்ணீர்கள் கொஞ்சமாயிற்றோவென்று பார்க்கிறதற்கு, ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியிலே விட்டான்.

௯ அந்தப் புறாவோவெனில், பூமியின்மீதெங்கும் தண்ணீர்கள் இன்னமிருந்தபடியினாலே, தன்னுள்ளங்காலுக்கு இளைப்பாறும் இடத்தைக்காணாமல், திரும்ப அவனண்டையில் பேழைக்கு வந்தது; அப்போது அவன் தன் கையை நீட்டி, அதைப் பிடித்து, அதைத் தன்னிடமாகப் பேழைக்குட் சேர்த்துக்கொண்டான்.

௰ இன்னம் வேறே ஏழுநாட்பொறுத்து மறுபடியும் புறாவைப் பேழையிலிருந்து வெளியிலே விட்டான்.

௰௧ அந்தப் புறாச் சாயங்காலத்திலே அவனண்டைக்கு வந்துசேர்ந்தது; இதோ அது கொத்திக்கொண்டுவந்த ஒரு ஒலீவமரத்தின் இலை அதின் வாயிலேயிருந்தது; அதினாலே, நோவா பூமியின்மேல் தண்ணீர்கள் கொஞ்சமாயிற்றென்றறிந்தான்.

௰௨ அவன் இன்னம் வேறே ஏழுநாட்பொறுத்துப் புறாவை வெளியிலே விட்டான்; அது மறுபடியும் அவனண்டைக்குத் திரும்பிவந்ததில்லை.

௰௩ ¶ அவன் அறுநூற்றொருவயதாயிருந்தவருஷம் முதல்மாதம் முதல்தேதியிலே சம்பவித்ததேதென்றால், பூமியின்மேலேயிருந்த தண்ணீர்கள் வற்றிப்போனபடியினாலே நோவா பேழையின்மேல் தட்டைவாங்கிப் போட்டுப்பார்த்தான்; இதோ பூமியின்மேல் தண்ணீரில்லாதிருந்தது.

௰௪ பிறகு இரண்டாமாதம் இருபத்தேழாந்தேதியிலே பூமி காய்ந்திருந்தது.

௰௫ ¶ அப்போது பராபரன் நோவாவோடே சொன்னதாவது:

௰௬ நீயும், உன்னோடேகூட உன் பெண்சாதியும், உன் குமாரரும், உன் குமாரரின் பெண்சாதிகளும், பேழையிலிருந்து புறப்பட்டுவாருங்கள்.

௰௭ பறவைகளும், மிருகங்களும், பூமியின்மேல் ஊருகிற சகல ஊர்வனவுமாகிய எல்லாவித மாமிசத்திலும், உன்னண்டையிலேயிருக்கிற சீவனையெல்லாம் உன்னோடேகூட வெளியிலே வரவிடு, *அவைகள் பூமியிலே திரளாய் வர்த்தித்து, பூமியின்மேல் பலுகிப் பெருகக்கடவதென்றார். *௧. ௨௨.

௰௮ அப்போது நோவாவும், அவனோடேகூட அவனுடைய குமாரரும், அவன் பெண்சாதியும், அவன் குமாரருடைய பெண்சாதிகளும் புறப்பட்டுவந்தார்கள்.

௰௯ சகல மிருகங்களும், சகல ஊர்வனவும், சகல பறவைகளுமாகிய பூமியின்மேல் நடமாடுகிற யாவும், சாதி சாதியாகப் பேழையிலிருந்து புறப்பட்டுவந்தன.

௨௰ ¶ அப்போது நோவா கர்த்தருக்குப் பலிபீடங்கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும், சிலவற்றை எடுத்துப் பீடத்தின்மேலே தகனபலிகளாகப் பலியிட்டான்.

௨௰௧ ஆற்றுகிற வாசனையைக் கர்த்தர் மோந்தார்; அப்போது கர்த்தர் தம்முடைய இருதயத்திலே சொன்னதாவது: நாம் இனிப் பூமியை மனுஷன் நிமித்தமாகத் திரும்பச் சபியோம்; ஏனெனில, *மனுஷனுடைய இருதயத்தின் தோற்றுதல் அவன் சிறுவயது துவக்கிப் பொல்லாததாயிருக்கின்றது; இனித் திரும்ப நாம்செய்ததுபோல, எல்லாச் சீவசெந்துக்களையும் சங்கரியோம். *௬. ௫. மத். ௰௫. ௰௯.

Digitized by Google

உஉ பூமியிலிருக்கும் சகல நாள்மட்டும் விதைப்பும் அறுப்பும், குளிரும் அனலும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இராவும் ஒய்ந்துபோகாதிருக்குமென்றார்.

கூ. அதிகாரம்.

பிற்பாடு பராபரன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து, அவர்களோடே சொன்னதாவது: *நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள். *க. உஅ: அ. ௰எ.

உ பூமியினுடைய சகல மிருகங்களின் மேலும், ஆகாசத்தினுடைய சகல பறவைகளின்மேலும், உங்கள் பயமும், உங்கள் அதிர்வும் உண்டாயிருப்பதாக; பூமியில் நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும், உங்கள் கையிலே கொடுக்கப்பட்டது.

௩ நடமாடுகிற சீவசெந்து யாவும், உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக; *பச்சைப் பூண்டுகளைப்போல, அதையெல்லாம் உங்களுக்குக் கொடுத்தோம். *க. உகூ.

ச ஆனால் மாமிசத்தை அதின் உயிராகிற *அதின் இரத்தத்தோடே புசியாதிருப்பீர்களாக. *௩ மோ. ௰எ. ௰உ-௰ச: ௰கூ. உகூ. ரு மோ. ௰உ. உ௩, உச.

ரு உங்கள் உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்துக்கும் பழியைவாங்குவோம்; சகல மிருகத்தின்கையிலும் அதை வாங்குவோம்; மனுஷன்கையிலும், அவனவன் சகோதரன்கையிலும், மனுஷனுடைய உயிருக்குப் பழியைவாங்குவோம்.

சா *எவன் மனுஷனுடைய இரத்தத்தைச் சிந்துகிறானோ, அவனிரத்தம் மனுஷனால் சிந்தப்படக்கடவது; ஏனெனில், பராபரனுடைய சாயலாக அவர் மனுஷனை உண்டாக்கினார். *உ மோ. உக. ௰உ. மத். உசா. ருஉ.

எ *நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியிலே திரளாய் வர்த்தித்து, அதிலே பெருகிப் போங்களென்றார். *க, வசனம்.

அ ¶ பின்னையும் பராபரன் நோவாவோடும், அவன் குமாரரோடுங்கூடச் சொன்னதாவது:

கூ இதோ நாம் உங்களோடும், உங்களுக்குப் பின்னாகவரும் உங்களுடைய வித்தோடும்,

௰ உங்களண்டையிலிருக்கிற சகல சீவசெந்துக்களாகிய பறவைகளோடும், மிருகங்களோடும், உங்களண்டையிலிருக்கிற பூமியினுடைய எல்லாச் சீவன்களோடும், நம்முடைய உடம்படிக்கையை ஏற்படுத்துகிறோம்; பேழையிலிருந்து புறப்பட்டதெல்லாம் முதற்கொண்டு பூமியிலிருக்கப்போகிற எல்லாச் சீவன்களோடுங்கூடத்தானே.

௰க *இனி மாமிசமெல்லாம் சலப்பிரளயத்தின் தண்ணீர்களால் சங்கரிக்கப்படாதென்றும், பூமியை அழிக்க இனிச் சலப்பிரளயம் வராதென்றும், உங்களோடே நம்முடைய உடம்படிக்கையை ஏற்படுத்துகிறோமென்றார். *அ. உக, உஉ. ஏசா. ருச. கூ.

௰உ பின்னையும் பராபரன் சொன்னதாவது: நாம் நமக்கும், உங்களுக்கும், உங்களண்டையிலிருக்கிற எல்லாச் சீவசெந்துக்களுக்கும், என்றுமுள்ள தலைமுறைகளுக்கென்று பண்ணுகிற உடம்படிக்கையின் அடையாளமாவது:

௰௩ நம்முடைய வில்லை மேகத்திலே வைத்தோம்; அது நமக்கும் பூமிக்குமுண்டான உடம்படிக்கைக்கு, அடையாளமாயிருக்கும்.

௰ச ஆகையால் சம்பவிப்பதேதெனில், நாம் பூமியின்மேல் மேகமந்தாரத்தை வரப்பண்ணும்போது மேகத்திலே அந்த வில் காணப்படும்.

௰ரு அப்பொழுது, சலப்பிரளயத்தின் தண்ணீர்கள் இனி எல்லா மாமிசத்தையும் அழிக்க வராதபடிக்கு, நமக்கும் உங்களுக்கும் எல்லாவித மாமிசமாகிய சகல சீவசெந்துக்களுக்குமுண்டான நம்முடைய உடம்படிக்கையை நினைப்போம்.

Digitized by Google

௰௬ அந்த வில் மேகத்திலிருக்கும்போது பராபரனுக்கும், பூமியின்மேலுள்ள எல்லாவித மாமிசமாகிய சகல சீவனுக்கும் உண்டான நித்திய உடம்படிக்கையை நாம் நினைக்கும்படிக்கு, அதை நோக்கிப்பார்ப்போம்.

௰௭ இது நமக்கும், பூமியின்மேலுள்ள சகல மாமிசத்துக்கும், நாம் ஏற்படுத்தின உடம்படிக்கையின் அடையாளமென்று பராபரன் நோவாவோடே சொன்னார்.

௰௮ ¶ பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர் சேம், காம், யாப்பேத்தென்றவர்களே; காமோவென்றால், கானானுடைய தகப்பன்.

௰௯ இந்த மூன்றுபேர் நோவாவினுடைய குமாரர்; இவர்களாலே பூமியெங்கும் சனம் பரம்பிற்று.

௨௰ ¶ நோவா பயிரிடும் குடியாயிருக்கத்துவக்கி, திராட்சத்தோட்டத்தை நாட்டினான்.

௨௧ அவன் திராட்சப்பழ இரசத்திலே குடித்து, வெறித்திருந்து, தன் கூடாரத்துக்குள்ளே வஸ்திரம்விலகிப் படுத்திருந்தான்.

௨௨ அப்போது கானானின் தகப்பனாகிய காம், தன் தகப்பனுடைய நிருவாணத்தைக் கண்டு, வெளியிலேயிருந்த தன் இரண்டு சகோதரருக்கு அறிவித்தான்.

௨௩ அப்போது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தையெடுத்து, தங்கள் இருவரின் தோள்மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டுவந்து, தங்கள் தகப்பனுடைய நிருவாணத்தை மூடினார்கள்; அவர்கள் முகங்கள் பின்புறமாயிருந்தபடியினாலே, அவர்கள் தங்கள் தகப்பனுடைய நிருவாணத்தைக் கண்டதில்லை.

௨௪ நோவா தன் திராட்சப்பழ இரசத்தின் வெறிதெளிந்து விழித்தபோது தன் இளையகுமாரன்தனக்குச்செய்ததையறிந்து,

௨௫ கானான் சபிக்கப்பட்டவனாகி, தன் சகோதரருக்கு அடியாரின்அடியானாயிருக்கக்கடவானென்றான்.

௨௬ பின்னையும் அவன் சொன்னதாவது: சேமுடைய பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கானானோவெனில், அவனுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

௨௭ யாப்பேத்தைப் பராபரன் பரிபாலனம்பண்ணக்கடவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பானாக; கானானோவெனில், அவனுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவானென்றான்.

௨௮ ¶ சலப்பிரளயத்துக்குப் பிற்பாடு நோவா முந்நூற்றைம்பதுவருஷம் உயிரோடிருந்தான்.

௨௯ ஆகையால், நோவாவின் நாள்களெல்லாம் தொளாயிரத்தைம்பது வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

௰. அதிகாரம்.

நோவாவுடைய குமாரராகிய *சேம், காம், யாப்பேத்தென்றவர்களின் சந்ததிகளாவது: அவர்களுக்குச் சலப்பிரளயத்துக்குப்பிற்பாடு பிறந்த குமாரர் ஆரென்றால், *௰. ௩௨.

௨ ¶ *யாப்பேத்துடைய குமாரர், கோமேர், மாகோக், மாதாய், யாவான், தூபால், மேசேக், தீராஸ். *௧ நாளா. ௧. ௫.

௩ கோமேருடைய குமாரர், அஸ்கேனாஸ், ரிப்பாத், தொகர்மா.

௪ யாவானுடைய குமாரர், எலீசா, தர்சீஸ், கித்தீம், தோதானீம்.

௫ இவர்களால் சாதிகளுடைய தேசத்தீவுகள் அவனவன் பாஷையின்படியேயும், அவர்களுடைய சாதிகளிலுள்ள அவர்களுடைய வமிசங்களின்படியேயும், அவரவர் தேசங்களாய்ப் பிரிந்தது.

௬ ¶ காமுடைய குமாரர், கூஷ், மிஸ்றாயிம், பூத், கானான்.

௭ கூஷுடைய குமாரர், சேபா, காவிலா, சப்தா, ராமா, சப்தேகா; ராமாவினுடைய குமாரர், சேபா, தேதான்.

௮ கூஷ் நிம்ரோத்தைப்பெற்றான்; இவன் பூமியிலே பலவானாயிருக்கத்துவக்கினான்.

Digitized by Google

௯ இவன் கர்த்தருக்குமுன்பாகப் பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்; ஆகையால், நிம்ரோத்தைப்போலக் கர்த்தருக்குமுன்பாகப் பலத்த வேட்டைக்காரனாயிருக்கிறானென்று சொல்லப்படும்.

௰ சிநேயார் தேசத்திலுள்ள பாபேலும், ஏரேக்கும், அக்காதும், கல்நேயும், அவனுடைய இராச்சியத்தின்துவக்கமாயிருந்தது.

௰௧ இந்தத் தேசத்திலிருந்து அசூர் புறப்பட்டுப்போய், நினிவேயையும், ரெகோபோத் பட்டணத்தையும், காலாகையும்,

௰௨ நினிவேக்கும் காலாகுக்கும் நடுவாக ரேசேனையும் கட்டினான்; இது பெரிய பட்டணம்.

௰௩ மிஸ்ராயீம், லூதிமையும், அனாமீமையும், லெகாபீமையும், நப்தூகீமையும்,

௰௪ பத்ருசீமையும், பெலிஸ்தரின் சந்ததி உண்டான கஸ்லூகீமையும், கப்தோரீமையும் பெற்றான்.

௰௫ *கானான் சீதோனென்ற தன் தலைச்சனையும், கேத்தையும்,

௰௬ எபூசியையும், எமோரியையும், கிர்காசியையும்,

௰௭ ஈவியையும், அற்கியையும், சீனியையும்,

௰௮ அர்வாதியையும், செமாரியையும், காமாத்தியையும் பெற்றான்; பிற்பாடு கானானரின் வமிசங்கள் சிதறிப்போயின.

௰௯ கானானரின் எல்லை சீதோனிலிருந்து கேரார்வழியாய்க் காசாமட்டுக்கும் போய், சோதோம், கொமரா, ஆதாமா, செபோயும் வழியாய் லாசாமட்டுக்கும் போயிற்று.

௨௰ இவர்களே தங்கள் தேசங்களிலும், தங்கள் சாதிகளிலுமுள்ள தங்கள் வமிசங்களின்புடியேயும், தங்கள் பாஷைகளின்படியேயும், காமுடைய பிள்ளைகளானவர்கள்.

௨௧ ¶ சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள்; அவன் ஏபேருடைய புத்திரருக்கெல்லாம் தகப்பனும், யாபேத்தென்கிற மூத்தவனுக்குத் தம்பியுமாயிருந்தான்.

௨௨ சேமுடைய குமாரர், ஏலாம், அசூர், அற்பக்சாத், லூத், ஆராம்.

௨௩ ஆராமுடைய குமாரர், ஊத்ல், கூல், கேத்தேர், மாஸ்.

௨௪ *அற்பக்சாத் சாலாகைப்பெற்றான்; சாலாக் ஏபேரைப்பெற்றான். * ௰௧. ௰௨.

௨௫ *ஏபேருக்கு இரண்டுகுமாரர் பிறந்தார்கள்; ஒருவன்பேர் பேலெக், ஏனெனில், அவன் நாள்களில் பூமி பிரிவுண்டது; அவனுடைய சகோதரன்பேர் யொக்கெத்தான். *௰௧. ௰௯.

௨௬ யொக்கெத்தான் அல்மோதாதையும், சாலோப்பையும், ஆசர்மாவெத்தையும், யாராகையும்,

௨௭ ஆதோராமையும், ஊசாலையும், திக்லாவையும்,

௨௮ ஓபாலையும், அபிமாவேலையும், சேபாவையும்,

௨௯ ஒப்பீரையும், காவிலாவையும், யோபாபையும்பெற்றான்; இவர்கள் அனைவரும் யொக்கெத்தானுடைய குமாரர்.

௩௰ அவர்களுடைய குடியிருப்பு மேசாதுவக்கி, கிழக்குமலையாகிய செப்பாருக்குப்போகிற வழிமட்டுமிருந்தது.

௩௰௧ இவர்களே தங்கள் தேசங்களிலும் தங்கள் சாதிகளிலுமுள்ள தங்கள் வமிசங்களின்படியேயும் தங்கள் பாஷைகளின்படியேயும் சேமுடைய குமாரரானவர்கள்.

௩௰௨ இதுகளே தங்கள் சாதிகளிலுள்ள தங்களுடைய சந்ததிகளின்படியே நோவாவுடைய குமாரரின் வமிசங்கள்; சலப்பிரளயத்துக்குப்பிற்பாடு இவர்களால் பூமியிலே சாதிகள் பிரிந்தன.

௰௧. அதிகாரம்.

அக்காலத்திலே பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவித வார்த்தைகளுமிருந்தன.

௨ அப்போது சம்பவித்ததேதென்றால், அவர்கள் கிழக்கேயிருந்து பயணம்பண்ணுகையில், சீனேயார் தேசத்திலே பள்ளத்

Digitized by Google

தாக்கைக்கண்டு, அங்கேகுடியிருந்து, *௰.௰.

௩ ¶ ஒருவரோடொருவர், நாம் செங்கல் அறுத்து, அவைகளை நற்கோடாய்ச் சுடுவோம் வாருங்களென்றார்கள்; பிற்பாடு செங்கல் அவர்களுக்குக் கல்லாகவும், பிசின் அவர்களுக்குச் சாந்தாகவுமிருந்தது.

௪ அவர்கள் நாம் பூமியின்மீதெங்கும் சிதறுண்டுபோகாதபடிக்கு, நமக்கு நாம் ஒரு பட்டணத்தையும், *வானத்தை எட்டுகிற சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாக்குவோம் வாருங்களென்று சொல்லிக்கொண்டார்கள்.

*௫ மோ. ௧. ௨௮.

௫ ஆனால் மனுப்புத்திரர் கட்டுகிற பட்டணத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்காகக் *கர்த்தர் இறங்கினார். *௰௮. ௨௧.

௬ அப்போது கர்த்தர் சொன்னதாவது: இதோ சனம் ஒரே கூட்டமானது; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையுமிருக்கிறது; இதை அவர்கள் செய்யத்தொடங்கினார்கள்; இப்போதும் தாங்கள் செய்ய நினைத்ததெல்லாம் தங்களுக்குத் தடுக்கப்படுவதில்லை என்றிருக்கிறார்கள்.

௭ நாம் இறங்கி, ஒருவர் பாஷையை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோமாகவென்றார்.

௮ அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்; அப்போது பட்டணத்தைக் கட்டி ஓய்ந்தார்கள்.

௯ ஆனதுகொண்டு பூமி அனைத்தின் பாஷையைக் கர்த்தர் அங்கே தாறுமாறாக்கினபடியினாலும், கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினபடியினாலும், அதின்பேர் பாபேலென்னப்பட்டது.

௰ ¶ *சேமுடைய சந்ததியாவது: சேம் நூறுவயதாயிருந்து, அற்பக்சாத்தைச் சலப்பிரளயம்போன இரண்டு வருஷத்துக்குப் பிற்பாடு பெற்றான். *௰. ௨௨.

௰௧ சேம் அற்பக்சாத்தைப் பெற்றபிற்பாடு, ஐந்நூறுவருஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

௰௨ அற்பக்சாத் முப்பத்தைந்து வயதாயிருந்து, சாலாகைப்பெற்றான்.

௰௩ சாலாகைப் பெற்றபிற்பாடு, அற்பக்சாத் நானூற்றுமூன்றுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

௰௪ சாலாக் முப்பது வயதாயிருந்து, ஏபேரைப்பெற்றான்.

௰௫ ஏபேரைப் பெற்றபிற்பாடு, சாலா நானூற்றுமூன்று வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

௰௬ ஏபேர் முப்பத்துநாலு வயதாயிருந்து, பேலேகைப்பெற்றான்.

௰௭ பேலேகைப் பெற்றபிற்பாடு, ஏபேர் நானூற்றுமுப்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

௰௮ பேலேக் முப்பதுவயதாயிருந்து, ரெகூவைப்பெற்றான்.

௰௯ ரெகூவைப்பெற்றபிற்பாடு பேலேக் இருநூற்றொன்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

௨௰ ரெகூ முப்பத்திரண்டுவயதாயிருந்து, செரூகைப்பெற்றான்.

௨௰௧ செரூகைப் பெற்றபிற்பாடு, ரெகூ இருநூற்றேழுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

௨௰௨ செரூக் முப்பதுவயதாயிருந்து, நாகோரைப் பெற்றான்.

௨௰௩ நாகோரைப் பெற்றபிற்பாடு, செரூக இருநூறுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

௨௰௪ நாகோர் இருபத்தொன்பது வயதாயிருந்து, தேராகைப்பெற்றான்.

௨௰௫ தேராகைப் பெற்றபிற்பாடு நாகோர் நூற்றுப்பத்தொன்பதுவருஷம் உயிரோடி

Digitized by Google

ருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.

௨௬ தேராக் எழுபது வயதாயிருந்து, ஆபிராமையும், நாகோரையும், ஆரானையும் பெற்றான்.

௨௭ ¶ தேராகுடைய சந்ததியாவது: தேராக் ஆபிராமையும், நாகோரையும், ஆரானையும் பெற்றான்; ஆரான் லோத்தைப்பெற்றான்.

௨௮ ஆரானோவெனில், தன் சென்ம பூமியாகிய ஊர் என்ற கல்தேயர் தேசத்துப் பட்டணத்திலே தன் தகப்பனாகிய தேராகுக்கு முன்னே மரித்தான்.

௨௯ ஆபிராமும் நாகோரும் தங்களுக்குப் பெண்கொண்டார்கள்; ஆபிராமுடைய பெண்சாதியின்பேர் சாராய்; நாகோருடைய பெண்சாதியின் பேர் மில்காள்; இவள் ஆரானின் குமாரத்தி; இவளுடைய தகப்பன் மில்காளுக்கும், இல்காளுக்கும் தகப்பனானவன்.

௩௰ ஆனால், சாராய் புத்திரசந்தானமில்லாமல் மலடியாயிருந்தாள்.

௩௧ ¶ தேராக் தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானின் குமாரன் தன் பேரனாகிய லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய பெண்சாதியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக்கொண்டு, அவர்களோடேகூட *ஊர் என்ற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து கானான்தேசத்துக்குப்போகப் புறப்பட்டான்; ஆனால், அவர்கள் காரான்மட்டுக்கும் வந்தபோது, அங்கே இருந்துவிட்டார்கள். *௰௫. ௭.

௩௨ தேராகுடைய நாள்கள் இருநூற்றைந்து வருஷமாயிருந்தது; பிற்பாடு தேராக் காரானிலே மரித்தான்.

௰௨. அதிகாரம்.

கர்த்தர் ஆபிராமோடே சொன்னதாவது: *நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காண்பிக்கப்போகிற தேசத்துக்குப்போ. *அப். ௭. ௩. எபி. ௰௧. ௮.

௨ நாம் உன்னைத் திரட்சியான சாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன்பேரை மேன்மையாக்குவோம்; நீ ஆசீர்வாதமாகஇருப்பாய்.

௩ உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்போம்; உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்போம்; *உன்னில் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுமென்றார்.
*௰௮. ௰௮: ௨௨. ௰௮: ௨௬. ௪: ௨௮. ௰௪. அப். ௩. ௨௫. கலா. ௩. ௮—௰௬.

௪ ¶ அப்போது ஆபிராம் கர்த்தர் தனக்குச் சொன்னபடியே போனான்; லோத்தும் அவனோடேகூடப் போனான்; ஆபிராம் ஆரானிலேயிருந்து புறப்படுகிறபோது எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்.

௫ ஆபிராம் தன் பெண்சாதி சாராயையும், தன் சகோதரன்குமாரனாகிய லோத்தையும், தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சௌதரித்துக்கொண்ட ஆத்துமாக்களையும் கூட்டிக்கொண்டபிற்பாடு கானான்தேசத்துக்குப் போகப் புறப்பட்டுக் கானான்தேசத்துக்கு வந்தார்கள்.

௬ ¶ ஆபிராம் சீகேமென்ற இடம்மட்டுக்கும், மோரேயென்ற சமனான பூமிமட்டுக்கும் தேசத்தைக் கடந்துவந்தான்; கானானியன் அப்போது தேசத்திலேயிருந்தான்.

௭ கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனையாகி, *உன் வித்துக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்போமென்றார்; அப்போது அவன் தனக்குத் தரிசனையான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினான். *௰௩. ௰௫: ௰௫. ௰௮: ௰௭. ௮: ௨௬. ௩.

௮ பிற்பாடு அவன் அவ்விடம்விட்டுப் பேர்ந்து, பேத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குவந்து, பேத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயீ கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.

Digitized by Google

௯ அதின்பிறகு ஆபிராம் புறப்பட்டு, தெற்கே பயணம்பண்ணிக்கொண்டேபோனான்.

௰ ¶ ஆனால் தேசத்திலே பஞ்சமுண்டாயிற்று; ஆகையால், ஆபிராம் எகிப்துதேசத்துக்கு அங்கே தங்கும்படிக்கு இறங்கிப்போனான்; ஏனெனில், தேசத்திலே பஞ்சம் கடினமாயிருந்தது.

௰௧ அப்போது சம்பவித்ததேதென்றால், அவன் எகிப்துக்குச் சமீபமாக வந்தபோது தன் பெண்சாதி சாராயோடே சொன்னதாவது: இதோ, நீ பார்வைக்கு அழகுள்ள ஸ்திரி என்றறிவேன்.

௰௨ ஆனதுகொண்டு சம்பவிப்பதேதென்றால், எகிப்தியர் உன்னைக் காணும்பொழுது, இவள் அவன் பெண்சாதியென்று சொல்லி, என்னைக் கொன்று, உன்னை உயிரோடேவைப்பார்கள்.

௰௩ ஆகையால் உன் நிமித்தம் எனக்கு நலமாகும்படிக்கும், உன்னைத் தொட்டு என் ஆத்துமா உயிரோடிருக்கும்படிக்கும், *உன்னை என் சகோதரியென்று நீ சொல்லென்றான். *௨௰. ௨, ௰௨: ௨௯. ௭.

௰௪ ¶ ஆபிராம் எகிப்திலே வந்தபோது, சம்பவித்ததேதென்றால், எகிப்தியர் அந்த ஸ்திரியை மகா அழகுள்ளவளென்று பார்த்தார்கள்.

௰௫ பார்வோனுடைய பிரபுக்களும் அவளைக்கண்டு, அவளைப் பார்வோனுக்குமுன்பாகப் புகழ்ந்தார்கள்; அப்போது அந்த ஸ்திரி பார்வோன் வீட்டிலே வைத்துக்கொள்ளப்பட்டாள்.

௰௬ அவன் அவள் நிமித்தமாய் ஆபிராமுக்கு நன்மைசெய்தான்; இவனுக்கு ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும் உண்டாயிற்று.

௰௭ ஆனால் *ஆபிராமுடைய பெண்சாதியாகிய சாராயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகா வாதைகளாலே வாதித்தார். *சங். ௱௫. ௰௪.

௰௮ அப்போது பார்வோன் ஆபிராமை அழைத்துச் சொன்னதாவது: இதை எனக்கு ஏன் செய்தாய்? இவள் உன் பெண்சாதியென்று நீ எனக்கு அறிவிக்காதே போனதென்ன?

௰௯ இவள் உன் சகோதரியென்று நீ சொல்லுவானேன்? அவளை நான் எனக்குப்பெண்சாதியாகப் படைக்கவேணுமென்றிருப்பேனே; இப்போதோவெனில், இதோ உன் பெண்சாதியிருக்கிறாள்; அவளை அழைத்துக்கொண்டு போவென்றுசொல்லி,

௨௰ பார்வோன் அவனுக்காகச் சில மனிதரைக் கட்டளைபண்ணினான்; அவர்கள் அவனையும், அவன் பெண்சாதியையும், அவனுக்குண்டானதெல்லாவற்றையும் வழிவிட்டனுப்பினார்கள்.

௰௩. அதிகாரம்.

அப்படியே ஆபிராமும், அவன் பெண்சாதியும், அவனுக்குண்டான யாவும், அவனோடேகூட லோத்தும், எகிப்திலிருந்து தெற்குப்புறத்திலே ஏறிவந்தார்கள்.

௨ ஆபிராமோவெனில், மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்தியிலே மகா கனவானாயிருந்தான்.

௩ அவன் தன் பயணங்களில் தெற்கேயிருந்து பெத்தேல்மட்டாகவும், *பெத்தேலுக்கும் ஆயீக்கும் நடுவாகத் தனக்கு முதல் கூடாரமிருந்ததும் தான் முதல் ஒரு பீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டாகவும் போனான். *௰௨. ௮.

௪ அங்கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.

௫ ஆபிராமோடேகூடவந்த லோத்துக்கும், ஆடுமாடுகளும் கூடாரங்களுமிருந்தன.

௬ அவர்கள் ஒருமிக்கக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கமாட்டாதே போயிற்று. ஏனெனில், (ஒருமிக்க) அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தது; ஆகையால், அவர்கள் கூடக் குடியிருக்கக் கூடாதிருந்தது.

Digitized by Google

௭ ¶ ஆபிராமுடைய மந்தையின் மேய்ப்பருக்கும், லோத்துடைய மந்தையின் மேய்ப்பருக்கும் வாக்குவாதமுண்டாயிருந்தது; கானானியரும், பெரிசியரும் அப்போது தேசத்திலே குடியிருந்தார்கள்.

௮ ஆகையால், ஆபிராம் லோத்தோடே சொன்னதாவது: எனக்கும் உனக்கும், என்னுடைய மேய்ப்பருக்கும், உன்னுடைய மேய்ப்பருக்கும், வாக்குவாதம் இருக்கவேண்டாம்; ஏனெனில், நாம் சகோதரரானவர்கள்.

௯ இந்தச் சீமையெல்லாம் உனக்குமுன்பாக இருக்கின்றதல்லவோ? என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறத்திலே சாய்ந்துபோனால், நான் வலதுபுறத்திலே சாய்ந்துபோவேன்; நீ வலதுபுறத்திலே சாய்ந்துபோனால், நான் இடதுபுறத்திலே சாய்ந்துபோவேனென்றான்.

௰ ¶ அப்போது லோத் தன் கண்களை ஏறெடுத்து, யோர்தான் நதிக்கருகான சமனான பூமியையெல்லாம் அது எங்கும் நீர்ப்பாய்ச்சலானதென்று பார்த்தான்; ஏனெனில், கர்த்தர் சோதோமையும், கொமோராவையும் அழிக்காததற்குமுன்னே, அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும், சோவார்மட்டுக்கும் எகிப்துதேசத்தைப் போலவுமிருந்தது.

௰௧ அப்போது லோத் யோர்தானுக்கருகான சமனான பூமியையெல்லாம் தெரிந்துகொண்டு, கிழக்கே பயணம்போனான்; இப்படிச் சகோதரர் ஒருத்தரையொருத்தர் விட்டுப் பிரிந்தார்கள்.

௰௨ ஆபிராம் கானான்தேசத்தில் குடியிருந்தான்; லோத்தோவெனில், அந்தச் சமனான பூமியின் பட்டணங்களிலே குடியிருந்து, சோதோம்மட்டுக்கும் போய்க் கூடாரம்போட்டான்.

௰௩ ஆனால் *சோதோமின் மனிதர் கர்த்தருக்குமுன்பாக மிகவும் பொல்லாதவர்களும் பாவிகளுமாயிருந்தார்கள். * ௰௮. ௨௰. எசே. ௰௬. ௪௯.

௰௪ ¶ லோத் ஆபிராமைவிட்டுப் பிரிந்தபிற்பாடு கர்த்தர் ஆபிராமுடனே சொன்னதாவது: நீ உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கும், தெற்கும், கிழக்கும், மேற்கும் நோக்கிப்பார்.

௰௫ ஏனெனில், நீ பார்க்கிற பூமியையெல்லாம் *நாம் உனக்கும், உன் வித்துக்கும், என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, *௰௨. ௭: ௰௪. ௭: ௰௫. ௭.

௰௬ உன் வித்தைப் * பூமியின் தூளைப் போலாக்குவோம்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் வித்தும் எண்ணப்படும். *௰௫. ௫.

௰௭ நீ எழுந்து தேசத்தின் நீளத்திலும் அகலத்திலும் நடந்து திரி; ஏனெனில், உனக்கு அதைக் கொடுப்போமென்றார்.

௰௮ ¶ அப்போது ஆபிராம் கூடாரத்தைப் பேர்த்துப்போய், எபிரோனிலிருக்கும் *மம்ரேயினுடைய சமனான பூமியில் வந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்குப் பலிபீடத்தைக் கட்டினான்.

* ௰௪. ௰௩: ௰௮. ௧.

௰௪. அதிகாரம்.

சினேயாரின் இராசாவாகிய அம்ராப்பேலும், ஏலாசாரின் இராசாவாகிய ஆரியோகும், ஏலாமின் இராசாவாகிய கெதொர்லகோமேரும், சாதிகளின் இராசாவாகிய திதேயாலும் இருந்த நாள்களில் சம்பவித்ததேதென்றால்,

௨ அவர்கள் சோதோமின் இராசாவாகிய பேராவோடும், கொமோராவின் இராசாவாகிய பிர்சாவோடும், அத்மாவின் இராசாவாகிய சினேயாவோடும், செபோயீமின் இராசாவாகிய செமேபரோடும், சோவார் என்னப்படுகிற பேலாவின் இராசாவோடும் யுத்தம்பண்ணினார்கள்.

௩ இவர்களெல்லாரும் இப்பொழுது உப்புக்கடல் இருக்கிற சித்தீமின் பள்ளத்தாக்கிலே கூடினார்கள்.

௪ பன்னிரண்டுவருஷம் கெதொர்லகோ

Digitized by Google

மேரைச் சேவித்து, பதின்மூன்றாம் வரு
ஷத்திலே கலகம்பண்ணினார்கள்.
௫ ஆனபடியால் பதினாலாம்வருஷத்திலே
கேதொர்லகோமேரும் அவனோடேகூட இ
ருந்த இராசாக்களும் வந்து, அஸ்தேரோத்
கற்னாயீமிலே இருந்த ரெப்பாவரையும்,
காமிலே இருந்த சூசியரையும், சாவே கீரி
யத்தாயீமிலே இருந்த ஏமியரையும்,
௬ சேயீர்மலைகளில் இருந்த ஓரியரையும்,
வனாந்தரத்துக்கருகான பாரானின் சமனா
ன பூமிமட்டும் முறியடித்து,
௭ திரும்பிக் காதேஸ் என்னப்பட்ட ஏ
ன்மிஸ்ப் பாத்துக்குவந்து, ஆமலேக்கியரு
டைய நாடனைத்தையும், ஆத்சாத்சோன்தா
மாரில் குடியிருந்த ஏமோரியரையுங்கூடப்
பாழ்க்கடித்தார்கள்.
௮ அப்போது சோதோமின் இராசாவும்,
கொமோராவின் இராசாவும், ஆத்மாவின்
இராசாவும், செபோயீமின் இராசாவும்,
சோவாரென்னப்படுகிற பேலாவின் இரா
சாவும் புறப்பட்டுச் சித்தீமின் பள்ளத்தாக்
கிலே,
௯ ஏலாமின் இராசாவாகிய கேதொர்ல
கோமேரோடும், சாதியாரின் இராசாவாகி
ய திதேயாலோடும், சீனேயாரின் இராசா
வாகிய அம்ராப்பேலோடும், ஏலாசாரின்
இராசாவாகிய ஆரியோகோடும் யுத்தம்
பண்ணுகிறதற்கு ஆயத்தப்பட்டார்கள்;
அந்த ஐந்து இராசாக்களோடே இந்த நாலு
இராசாக்கள் யுத்தம்பண்ணினார்கள்.
௰ ஆனால் சித்தீமின் பள்ளத்தாக்குப் பி
சின் எடுக்கிற கேணி கேணிகளாயிருந்தது;
சோதோமின் இராசாவும், கொமோராவின்
இராசாவும் முறிந்தோடி, அங்கே விழுந்
தார்கள்; மீந்தவர்கள் பர்வதங்களுக்கு ஓ
டிப்போனார்கள்.
௰௧ ¶ அப்பொழுது சோதோமிலும் கொ
மோராவிலுமுள்ள எல்லா ஆஸ்தியையும்,
அவர்களுடைய எல்லா வஸ்துக்களையும்
எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.
௰௨ ¶ ஆபிராமுடைய சகோதரன் குமா
ரனாகிய லோத்தையும், அவன் ஆஸ்தியை
யும் கொண்டுபோனார்கள்; ஏனென்றால்,
அவன் சோதோமிலே குடியிருந்தான்.
௰௩ ஆனால் தப்பிப்போன ஒருவன் வந்
து, எபிரேயனாகிய ஆபிராமுக்கு அதை
அறிவித்தான்; ஆபிராமோடே உடம்படிக்
கையான மனிதராகிய எஸ்கோலுக்கும்
ஆநேருக்கும் சகோதரனாகிய *மம்ரே
யென்ற எமோரியனுடைய சமனான பூமியி
லே அவன் அப்பொழுது குடியிருந்தான்.
*௰ ௩. ௰௮.
௰௪ ¶ தன் சகோதரன் சிறையாகக் கொ
ண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேட்ட
போது, அவன் தன் வீட்டிலே பிறந்த மூந்
நூற்றுப் பதினெட்டுக் கைபடிந்த ஆள்க
ளுக்கு ஆயுதந்தரிப்பித்து, தாண் என்ற
ஊர்மட்டாக அவர்களைத் தொடர்ந்து,
௰௫ இராத்திரியிலே அவனும் அவன்
வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அ
வர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்
துத் தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபா
மட்டுக்கும் அவர்களைத் துரத்தி,
௰௬ எல்லா ஆஸ்தியையும் திருப்பிக்கொ
ண்டுவந்தான்; தன் சகோதரனாகிய லோத்
தையும் அவனுடைய ஆஸ்தியையும், இது
வுமல்லாமல் ஸ்திரிகளையும் சனத்தையுங்கூ
டத் திருப்பிக்கொண்டுவந்தான்.
௰௭ ¶ அவன் கேதொர்லகோமேரையும்
அவனோடேகூட இருந்த இராசாக்களையும்
முறியடித்துத் திரும்பி வந்தபிற்பாடு, சோ
தோமின் இராசா புறப்பட்டு, இராசாவின்
பள்ளத்தாக்கென்னப்படுகிற சாவே பள்
ளத்தாக்குமட்டும் அவனுக்கெதிர்கொண்டு
வந்தான்.
௰௮ ஆனால் சாலேமின் இராசாவாகிய
*மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சப்
பழ இரசமும் வெளியே கொண்டுவந்தா
ன்; இவன் உன்னதமான பராபரனுடைய
ஆசாரியனாயிருந்து, *சங். ௱௰. ௪. எபி. ௭.
௧. ௲.
௰௯ அவனை ஆசீர்வதித்து, வானத்துக்

Digitized by Google

கும் பூமிக்கும் எசமானாகிய உன்னதமான பராபரனாலே ஆபிராம் ஆசீர்வதிக்கப்பட்டவனென்றும்,

௨௰ உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான பராபரன் ஸ்தோத்திரிக்கப்பட்டவரென்றும் சொன்னான்; இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் பத்திலொன்றைக் கொடுத்தான்.

௨௧ ¶ சோதோமின் இராசா ஆபிராமுடனே: ஆத்துமாக்களை எனக்குத் தா; ஆஸ்தியை நீ எடுத்துக்கொள்ளென்றான்.

௨௨ ஆனால் ஆபிராம் சோதோமின் இராசாவோடே சொன்னதாவது: நான் ஆபிராமை ஐசுவரியவானாக்கினேனென்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாராயாகிலும் உமக்கு உண்டானதிலே எல்லாம் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேனென்று,

௨௩ வானத்துக்கும் பூமிக்கும் எசமானாகிய உன்னத பராபரனான கர்த்தருக்கு நேராக என் கையை ஏறெடுக்கிறேன்.

௨௪ வாலிபர் சாப்பிட்டதும் என்னோடேகூடவந்த ஆநேர், எஸ்கோல், மம்ரே என்ற புருஷருடைய பங்குமாத்திரம் வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுக்கட்டுமென்றான்.

௰௫. அதிகாரம்.

இந்தக் காரியங்கள் நடந்த பிற்பாடு ஆபிராமுக்குத் தரிசனத்திலே கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர் சொன்னதாவது: ஆபிராமே! *பயப்படாதே, நாம் உனக்குக் †கேடயமும், உன்னுடைய மகா பெரிய பலனுமாயிருக்கிறோமென்றார். *ஏசா. ௪௧. ௰. †சங். ௩. ௪.

௨ அப்பொழுது ஆபிராம், கர்த்தராகிய ஆண்டவரே! அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாதே போகிறேனே, தமஸ்கு ஊரானாகிய இந்த எலியேசேர் என் வீட்டு விசாரிப்புக்குக் கர்த்தனாயிருப்பானேவென்றான்.

௩ பின்னையும் ஆபிராம், இதோ தேவரீர் எனக்கு வித்தைத் தந்ததில்லை, இதோ என் வீட்டிலே பிறந்தபிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாய் இருப்பானென்றான்.

௪ அப்பொழுது இதோ கர்த்தருடைய வார்த்தை அவனுக்குண்டாகி, இவன் உனக்குச் சுதந்தரவாளியாகாமல், உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவானென்றுசொல்லி,

௫ அவனை வெளியே புறப்படப்பண்ணி, நீ வானத்தை அண்ணாந்துபார்; *நட்சத்திரங்களை எண்ண உனக்குக் கூடுமானால் அவைகளை எண்ணென்றுசொல்லி, பிற்பாடு அவனோடே, உன் வித்து இவ்வண்ணமாய் இருக்குமென்றார். *௰௩. ௰௬. உரோ. ௪. ௰௮. எபி. ௰௧. ௰௨.

௬ *அவன் கர்த்தர்பேரிலே விசுவாசித்தான்; இதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். *உரோ. ௪. ௩: ௯. ௨௨. கலா. ௩. ௬. யாக். ௨. ௨௩.

௭ பின்னையும் அவனுடனே, இந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு உனக்குக் கொடுக்க, உன்னை ஊர் என்ற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நாமே என்றார்.

௮ அப்பொழுது அவன், கர்த்தராகிய ஆண்டவரே! நான் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவேனென்கிறதை எதினாலே அறிவேனென்றான்.

௯ அவர் அவனுடனே, மூன்றுவயதுக் கிடாரியையும், மூன்றுவயது வெள்ளாட்டையும், மூன்றுவயது ஆட்டுக்கடாவையும், ஒரு காட்டுப்புறாவையும், ஒரு புறாக்குஞ்சையும் நமக்குக் கொண்டுவாவென்றார்.

௰ அவன் அவருக்கு இவைகளையெல்லாம் கொண்டுவந்து, அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பட்சிகளையோவெனில், அவன் துண்டித்ததில்லை.

௰௧ அந்த உடல்களின்மேல், உருஞ்சு

Digitized by Google

கிற பட்சிகள் இறங்கிற்று; ஆனால், ஆபிராம் அவைகளைத் துரத்தினான்.

௰௨ சூரியன் அஸ்தமிக்கும்போதோவெனில், ஆபிராமின்மேல் கனநித்திரை இறங்கிற்று; இதோ, திகிலும் மகா இருளும் அவனைப் பிடித்தது.

௰௩ அப்பொழுது அவர் ஆபிராமோடே சொன்னதாவது: உன் வித்தார் தங்களுடையதல்லாத தேசத்திலே, *நானூறு வருஷம் பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்களென்றும், அவர்கள் இவர்களை உபத்திரவப்படுத்துவார்களென்றும், நீ அறியவே அறியவேண்டும். *௨ மோ. ௰௨. ௪௰. அப். ௭. ௬.

௰௪ ஆனால் இவர்கள் சேவிக்கும் சாதியையும் நாம் நியாயந்தீர்ப்போம்; பிற்பாடு *வெகு ஆஸ்தியுடனே புறப்பட்டு வருவார்கள். *௨ மோ. ௩. ௨௧, ௨௨: ௰௧. ௨, ௩: ௰௨. ௩௫, ௩௬.

௰௫ நீயோவென்றால், சமாதானத்தோடே *உன் பிதாக்களண்டையிலே சேருவாய், நல்ல நரைவயதிலே அடக்கம்பண்ணப்படுவாய். *௨௫. ௭, ௮.

௰௬ நாலாந்தலைமுறையாரோ இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனெனில், எமோரியருடைய அக்கிரமம் இதுவரைக்கும் நிறைவேறினதில்லையென்றார்.

௰௭ சூரியன் அஸ்தமித்துக் கன இருளான பிற்பாடு, இதோ புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிச்சுவாலையும் உண்டாயின.

௰௮ அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடம்படிக்கைபண்ணிச் சொன்னதாவது: எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்தே நதியென்ற பெரிய நதிமட்டுக்கும் இருக்கிறதும்,

௰௯ கேனியனும், கெனீசியனும், கத்மோனியனும்,

௨௰ ஏத்தியனும், பெரிசியனும், ரெப்பாவியனும்,

௨௰௧ எமோரியனும், கானானியனும், கிர்காசியனும், எபூசியனுமென்றவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை *உன் வித்துக்குக் கொடுத்தோமென்றார். *௰௨. ௭: ௰௭. ௭, ௮.

௰௬. அதிகாரம்.

ஆபிராமுடைய பெண்சாதியாகிய சாராய் அவனுக்குப் பிள்ளை பெறாதிருந்தாள்; ஆனால், ஆகாரென்று பேர்கொண்ட எகிப்துதேசத்தாளாகிய ஒரு அடிமைப்பெண் அவளுக்கிருந்தாள்.

௨ சாராய் ஆபிராமுடனே, இதோ நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்தார்; என் அடிமைப்பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படுமென்றாள்; ஆபிராம் சாராயின் சொல்கேட்டான்.

௩ ஆபிராம் கானான்தேசத்தில் பத்துவருஷம் குடியிருந்தபின்பு, ஆபிராமின் பெண்சாதியாகிய சாராய் எகிப்துதேசத்தாளாயிருக்கிற தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து, அவளைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தாள்.

௪ ¶ அவன் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள் கர்ப்பந்தரித்தாள்; தான் கர்ப்பந்தரித்ததை அவள் கண்டபோதோவெனில், அவள் நாச்சியார் அவள் பார்வைக்கு அற்பமாய் எண்ணப்பட்டாள்.

௫ அப்போது சாராய் ஆபிராமுடனே, நான் அநுபவிக்கிற அநியாயம் உம்முடையமேல் சுமரும்; நான் என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்; தான் கர்ப்பந்தரித்ததை அவள் கண்டபோதோவெனில், நான் அவள் பார்வைக்குக் கொஞ்ச எண்ணிக்கையானேன்; கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுவாக நியாயந்தீர்ப்பாராகவென்றாள்.

௬ அப்போது ஆபிராம் சாராயுடனே, இதோ, உன் அடிமைப்பெண் உன் கையில் அகப்பட்டிருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய்யென்றான்;

Digitized by Google

அப்போது சாறாய் அவளைத் தண்டிக்கையில், இவள் அவளைவிட்டோடிப்போனாள்.

௭ ஆனால் கர்த்தருடைய தூதர் அவளை வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகேயிருக்கிற நீரூற்றாகிய கிணற்றண்டையிலே கண்டுபிடித்து,

௮ சாறாயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே! எங்கேயிருந்துவருகிறாய், எங்கே போகிறாயென்றார்; அவள், நான் என் நாச்சியாராகிய சாறாயைவிட்டு ஓடிப்போகிறேனென்றாள்.

௯ அப்பொழுது கர்த்தருடைய தூதர் அவளுடனே, நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிருவென்றார்.

௰ பின்னையும் கர்த்தருடைய தூதர் அவளோடே, உன் வித்தை மிகவும் பெருகப் பண்ணுவோம்; திரட்சியினாலே அது எண்ணத் தொலையாததாயிருக்குமென்றார்.

௰௧ அப்புறம் கர்த்தருடைய தூதர் அவளோடே சொன்னதாவது: இதோ கர்ப்பவதியாயிருக்கிறாய்; நீ ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினாலே, அவனுக்கு இஸ்மவேலென்று பேரிடுவாயாக.

௰௨ இவன் துஷ்ட மனிதனாயிருப்பான்; இவன் கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கை இவனுக்கு விரோதமாகவுமிருக்கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிரே குடியிருப்பானென்றார்.

௰௩ அப்பொழுது அவள், தன்னோடே பேசின கர்த்தரைத் தேவரீர் பார்க்கிற பராபரனென்ற நாமமாக அழைத்தாள்; ஏனெனில், என்னைப் பார்த்தவரைப் பிற்பாடு நான் அவரை இவ்விடத்திலே கண்டிருக்கவில்லையோ என்றாள்.

௰௪ ஆகையால், அந்தக் கிணறு என்னைப் பார்க்கிற சீவனுள்ளவரின் கிணறென்னப்பட்டது; இதோ, காதேசுக்கும் பேரேதுக்கும் நடுவே அது இருக்கின்றது.

௰௫ ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அப்பொழுது ஆபிராம் ஆகார் பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேலென்று பேரிட்டான்.

௰௬ ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெறுகிறபொழுது, ஆபிராம் எண்பத்தாறு வயதாயிருந்தான்.

௰௭. அதிகாரம்.

ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனையாகி, அவனோடே சொன்னதாவது: நாம் சர்வத்துக்கும் வல்ல பராபரன்; *நீ நம்முடைய முகத்துக்குமுன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. *௨௪. ௪௰.

௨ நாம் நமக்கும் உனக்கும் நடுவாக *நம்முடைய உடம்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகுதியும் மிகுதியாய்ப் பெருகப்பண்ணுவோமென்றார். *௰௫. ௰௮.

௩ அப்போது ஆபிராம் முகங்குப்புற விழுந்தான்; பராபரன் அவனோடே பேசிச் சொன்னதாவது:

௪ இதோ நாம் உன்னோடேபண்ணுகிற நம்முடைய உடம்படிக்கையாவது: *நீ திரள் சாதிகளுக்குத் தகப்பனாவாய். *உரோ. ௪. ௰௭.

௫ இனி உன்பேர் ஆபிராமென்னப்படாததாக; நாம் உன்னைத் திரள் சாதிகளுக்குத் தகப்பனாக வைத்தபடியினாலே, உன்பேர் ஆபிரகாமென்றிருக்கக்கடவது.

௬ உன்னை மிகுதியும் மிகுதியாய்ப் பலுகப்பண்ணி, உன்னைச் சாதிகளாக்குவோம்; உன் சந்ததியில் இராசாக்கள் பிறப்பார்கள்.

௭ நாம் உனக்கும், உனக்குப்பிற்பாடு உன்வித்துக்கும், பராபரனாயிருக்கத்தக்கதாக நாம் நமக்கும் உனக்கும், உனக்குப் பிற்பாடு தலைமுறை தலைமுறையாக இருக்கப்போகிற உன் வித்துக்கும் நடுவே நம்முடைய உடம்படிக்கையை நித்திய உடம்படிக்கையாகத் திடப்படுத்துவோம்.

௮ உனக்கும் உனக்குப்பிற்பாடு உன்வித்

Digitized by Google

துக்கும், நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான்தேசத்தையெல்லாம் நித்திய உம்பிளிக்கையாகக் கொடுத்து, அவர்களுக்குப் பராபரனாயிருப்போமென்றார்.

௯ ¶ பின்னையும் பராபரன் ஆபிரகாமோடே சொன்னதாவது: இப்பொழுது நீயும், உனக்குப் பிற்பாடு தலைமுறை தலைமுறையார்க இருக்கப்போகிற உன் வித்தாரும், நம்முடைய உடம்படிக்கையைக் கைக்கொள்வீர்களாக.

௰ நமக்கும் உங்களுக்கும், உனக்குப் பிற்பாடு உன் வித்துக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ளவேண்டியதுமான நம்முடைய உடம்படிக்கையாவது: உங்களில் ஆணாய்ப்பிறந்ததெல்லாம் சுன்னத்துப் பண்ணப்படவேண்டியது.

௰௧ உங்கள் நுனித்தோலின் மாம்சத்தைச் சுன்னத்துப்பண்ணக் கடவீர்கள்; அது நமக்கும் உங்களுக்குமிருக்கிற *உடம்படிக்கையின் அடையாளமாயிருக்கும்.
*அப். ௭. ௰௧. உரோ. ௪. ௰௧.

௰௨ உங்களில் தலைமுறை தலைமுறையாக ஆணாய்ப் பிறக்கிறவைகளெல்லாம் எட்டுநாள் பிள்ளையாய்ச் சுன்னத்துப்பண்ணப்படவேண்டியது; வீட்டுப்பிள்ளையும், உன்னுடைய வித்தல்லாத எந்த அந்நியனிடத்திலும் பணத்தினாலே கொள்ளப்பட்ட பிள்ளையும் அப்படித்தானே.

௰௩ உன் வீட்டுப்பிள்ளையும், உன் பணத்தினாலே கொள்ளப்பட்டவனும், அவசியமாய்ச் சுன்னத்துப் பண்ணப்படவேண்டும்; இப்படி நம்முடைய உடம்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடம்படிக்கையாக இருக்கக்கடவது.

௰௪ நுனித்தோலின் மாம்சம் சுன்னத்துப்பண்ணப்படாதிருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால், அந்த ஆத்துமா நம்முடைய உடம்படிக்கையை முறித்தபடியினாலே, தன் சனத்திலிராதபடிக்கு அறுப்புண்டுபோவானென்றார்.

௰௫ ¶ பின்னையும் பராபரன் ஆபிரகாமோடே சொன்னதாவது: உன் பெண்சாதி சாருயினுடைய பேரைச் சாருயென்றழையாயாக; சாருளென்பது அவளுடைய பேராயிருக்கும்.

௰௬ நாம் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தந்து, அவள் சாதிகளாய்ப் பலுகவும், அவளாலே சாதிகளின் இராசாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்போமென்றார்.

௰௭ அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து, நூறுவயதானவனுக்குப் பிள்ளைபிறக்குமோ, தொண்ணூறுவயதான சாருள் பெறுவாளோவென்று, தன்னிருதயத்திலே சொல்லிக்கொண்டு,

௰௮ இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாகவென்று, ஆபிரகாம் பராபரனை விண்ணப்பம்பண்ணினான்.

௰௯ அப்போது பராபரன் சொன்னதாவது: *உன் பெண்சாதியாகிய சாருள் உனக்கு ஒரு குமாரனைப்பெறுவாள்; அவனுக்கு இசாக்கென்று பேரிடுவாயாக; அவனோடே நாம் நம்முடைய உடம்படிக்கையை அவனுக்குப்பிற்பாடு அவன் வித்துக்கு என்றென்றைக்கும் நிற்கிற உடம்படிக்கையாக ஏற்படுத்துவோம். *௰௮. ௰: ௨௧. ௩.

௨௰ இஸ்மவேலுக்காகவும் உன் விண்ணப்பத்தைக்கேட்டோம்; இதோ, நாம் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகுதியும் மிகுதியுமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவோம்; *பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய சாதியாக்குவோம்.
*௨௫. ௰௬.

௨௧ ஆனால் நம்முடைய உடம்படிக்கையை நாம் மறுவருஷத்தில் இக்காலத்திலே சாருள் உனக்குப் பெறப்போகிற இசாக்குடனே ஏற்படுத்துவோமென்றார்.

௨௨ பராபரன் அவனோடே பேசி முடித்தபிற்பாடு, அவர் ஆபிரகாமைவிட்டேறினார்.

௨௩ ¶ அப்பொழுது, ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்மவேலையும், தன் வீட்டிலே

Digitized by Google

பிறந்த யாவரையும், தான் பணத்தினாலே
கொண்ட யாவரையும், ஆபிரகாமாகிய தன்
வீட்டுமனிதரிலுள்ள ஆண்பிள்ளைகளையெல்
லாம் சேர்த்து, பராபரன் தன்னோடே சொ
ன்னபடி, அவர்கள் நுனித்தோலின் மாம்
சத்தை அந்நாளிலேதானே சுன்னத்துப்
பண்ணினான்.
௨௪ ஆபிரகாமுடைய நுனித்தோலின் மா
ம்சம் சுன்னத்தடைகிறபொழுது, அவன்
தொண்ணூற்றொன்பது வயதாயிருந்தான்.
௨௫ அவனுடைய குமாரன் இஸ்மவே
லோவெனில், அவனுடைய நுனித்தோ
லின் மாம்சம் சுன்னத்துப்பண்ணப்படுகி
றபொழுது, பதின்மூன்றுவயதாயிருந்தான்.
௨௬ அந்நாளிலேதானே ஆபிரகாமும்,
அவன் குமாரன் இஸ்மவேலும் சுன்னத்த
டைந்தார்கள்.
௨௭ வீட்டில் பிறந்தவர்களும் அந்நியரி
டத்தில் பணத்துக்குக் கொள்ளப்பட்டவர்
களுமாகிய அவன் வீட்டு மனிதரெல்லா
ரும் அவனோடேகூடச் சுன்னத்தடைந்
தார்கள்.

௰அ. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் அவனுக்கு மம்ரேயின்
சமனான பூமியிலே தரிசனமானார்; அவன்
பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலி
லே உளுக்காந்திருந்து,
௨ தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்
கும்பொழுது, இதோ மூன்று புருஷர் அவ
னுக்கு எதிராக நின்றார்கள்; அவர்களைக் கா
ண்கையில், அவன் கூடாரவாசலிலிருந்து
அவர்களுக்கு எதிர்கொண்டோடித் தரை
மட்டுங்குனிந்து,
௩ ஆண்டவரே! உம்முடைய கண்க
ளில் எனக்குக் கிருபைகிடைத்ததானால்,
*நீர் உமதடியானைவிட்டு விலகிப் போகா
திருப்பீராக. * எபி. ௰௩. ௨.
௪ கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும்,
உங்கள் கால்களைக் கழுவி மரத்தின் கீழே
சாய்ந்துகொண்டிருங்கள்.
௫ நீங்கள் உங்கள் இருதயத்தைத் திடப்
படுத்த ஒரு துணுக்கை அப்பங்கொண்டுவ
ருவேன், பிற்பாடு அப்புறம் நடப்பீர்கள்;
ஏனெனில், இதற்காக உங்கள் அடியானண்
டைக்குக் கடந்து வந்தீர்களென்றான்; அ
தற்கு நீ சொன்னபடியே செய்யென்றார்
கள்.
௬ அப்பொழுது ஆபிரகாம் தீவரமாய்க்
கூடாரத்தில் சாராளண்டைக்குப்போய், நீ
சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவெ
டுத்துப் பிசைந்து, அப்பங்களைச் சுடுவென்
றான்.
௭ மாட்டுமந்தைக்கும் ஆபிரகாம் ஓடி,
இளசாயிருக்கிற நல்ல கன்றுக்குட்டியைப்
பிடித்துப் பணிவிடைக்காரன் கையிலே
கொடுத்து, அதைச் சமைக்கத் தீவரித்து,
௮ வெண்ணெயையும் பாலையும் தான்
சமைப்பித்த கன்றுக்குட்டியையும் எடுத்து
வந்து, அவர்கள் முன்பாக வைத்தான்; அ
வனோவென்றால், அவர்களண்டை மரத்
தின்கீழே நின்றுகொண்டிருந்தான்; அவர்
கள் புசித்து,
௯ ¶ அவனுடனே, உன் பெண்சாதி சா
ராள் எங்கே என்றார்கள்; அதோ, கூடா
ரத்திலிருக்கிறாளென்றான்.
௰ அப்பொழுது அவர் ஒரு பிராண உற்
பத்திகாலத் திட்டத்திலே உன்னண்டைக்
குத் திரும்ப வருவோம்; அப்பொழுது இ
தோ, *உன் பெண்சாதியாகிய சாராளுக்கு
ஒரு குமாரன் இருப்பானென்றார்; சாராள்
அவருக்குப் பின்புறமான கூடாரவாசலிலி
ருந்து இதைக்கேட்டாள். *௰எ. ௰௬—௨௧.
௰௧ ஆபிரகாமும் சாராளுமோவெனில்,
முதிர்ந்தவர்களும் வயது சென்றவர்களு
மாயிருந்தார்கள்; ஸ்திரிகளுக்குள்ள வழி
பாடு சாராளுக்கு நின்றுபோயிற்று.
௰௨ ஆகையால், சாராள் *தன் உள்ளத்தி
லே நகைத்து, நான் கிழவியும் †என் எச
மானன் முதிர்ந்தவயதுள்ளவருமானபின்பு,
எனக்கின்பம் உண்டாயிருக்குமோ என்
றாள். * ௰எ. ௰எ. †௧ பேது. ௩. ௬.

Digitized by Google

௰௩ அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமோடே சொன்னதாவது: சாராள் நகைத்து, நான் கிழவியாயிருந்தும் பிள்ளைபெறுவது மெய்யோவென்பானேன்?

௰௪ * கர்த்தரால் ஆகாத அதிசயமுண்டோ? ஒருபிராண உற்பத்திக்காலத்திட்டத்திலே உன்னண்டைக்குத் திரும்ப வருவோம்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பானென்றார். * மத். ௰௯. ௨௬.

௰௫ சாராளோவெனில், நான் நகைத்ததில்லையென்று மறுதலித்தாள்; ஏனெனில், பயந்தாள்; ஆனால் அவர் இல்லை, நீ நகைத்தாயென்றார்.

௰௬ பிற்பாடு அந்தப் புருஷர் எழுந்திருந்து, அவ்விடம்விட்டுச் சோதோமைநோக்கிப் போனார்கள்; ஆனால், ஆபிரகாம் அவர்களை வழிவிட்டனுப்ப அவர்களோடே கூடப்போனான்.

௰௭ அப்பொழுது கர்த்தர் சொன்னதாவது: ஆபிரகாம் பெரியவைகளான பெலத்த சாதியாய்ப்போகவும், அவனில் * பூமியின் சாதிகளெல்லாம் ஆசீர்வதிக்கப்படுபவைகளாயிருக்கவும், *௰௨. ௩.

௰௮ நாம் செய்யப்போகிறதை நாம் ஆபிரகாமுக்கு மறைப்போமோ?

௰௯ ஏனெனில், கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை அவன்மேல் வரப்பண்ணத்தக்கதாக, அவன் தன்பிள்ளைகளுக் கும் தனக்குப்பிற்பாடு இருக்கும் தன் வீட்டாருக்கும், நீங்கள் நீதியும், நியாயமும் செய்யும்படிக்கு, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்களென்று கற்பிப்பவனென்று அவனை அறிவோமென்று சொல்லி,

௨௰ கர்த்தர் அப்புறம் சொன்னதாவது: *சோதோம் கொமோரா ஊர்களின் கூக்குரல் பெரிதானபடியினாலும், அவைகளின் பாவம் மகா கனமானபடியினாலும்,
*௰௩. ௰௩.

௨௧ நாம் இப்பொழுது இறங்கிப்போய், நம்மண்டைக்கு வந்தெட்டின அதினுடைய கூப்பிடுதலின்படியே அவர்கள் செய்து நிறைவேறிற்றோ இல்லையோவென்று பார்த்து அறிவோமென்றார்.

௨௨ அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம்விட்டுச் சோதோமைநோக்கிப் போனார்கள்; ஆனால் ஆபிரகாம் இன்னம் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்.

௨௩ ¶ ஆபிரகாம் சேர்ந்து வந்து சொன்னதாவது: ஆகாதவனோடே நீதிமானையும் அழிப்பீரோ?

௨௪ பட்டணத்துக்குள்ளே ஐம்பது நீதிமான்கள் இருப்பார்களாக்கும், அதற்குள்ளிருக்கும் ஐம்பது நீதிமான்களின்நிமித்தம் ஸ்தலத்திற்கு மன்னியாமல் அதை அழிப்பீரோ?

௨௫ இப்படிக்கொத்த செயல் உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானும் பொல்லாதவனும் சரியாக, பொல்லாதவனோடே நீதிமானையும் கொல்வது உமக்குத் தூரமாயிருப்பதாக; * பூமிக்கெல்லாம் நியாயாதிபதியானவர் நீதி செய்யாதிருப்பாரோ என்றான். * அப். ௰௭. ௩௧.

௨௬ அதற்குக் கர்த்தர் சோதோம் பட்டணத்திற்குள் ஐம்பது நீதிமான்களைக் கண்டோமாகில், அவர்களின் நிமித்தம் ஸ்தலத்திற்கெல்லாம் மன்னிப்போமென்றார்.

௨௭ அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்தரமாக, இதோ, அடியேன் தூளும் சாம்பலுமாயிருந்தும் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்.

௨௮ ஐம்பது நீதிமான்களுக்கு ஒருவேளை ஐந்துபேர் குறைந்தால், அந்த ஐந்துபேர்நிமித்தம் பட்டணத்தையெல்லாம் அழிப்பீரோ என்றான்; அதற்கவர்: நாம் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லையென்றார்.

௨௯ அவன் இன்னம் அவரோடே பேசத்தொடர்ந்து, ஒருவேளை நாற்பது நீதிமான்கள் அங்கே காணப்படுவார்களென்றான்; அதற்கவர் நாற்பது நீதிமான்களின் நிமித்தம் அப்படிச் செய்யாதிருப்போமென்றார்.

Digitized by Google

௩௰ அப்பொழுது அவன், நான் அப்புறம் பேச ஆண்டவருக்குக் கோபம்வராமல் வேண்டுகிறேன்; ஒருவேளை முப்பது நீதிமான்கள் அங்கே காணப்படுவார்களென்றான்; அதற்கவர், நாம் முப்பது நீதிமான்களை அங்கே கண்டால், அப்படிச் செய்யாதிருப்போமென்றார்.

௩௧ அப்பொழுது அவன்: இதோ, ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்; ஒருவேளை இருபது நீதிமான்கள் அங்கே காணப்படுவார்களென்றான்; அதற்கவர், நாம் இருபது நீதிமான்களினிமித்தம் அதை அழிக்காதிருப்போமென்றார்.

௩௨ அப்பொழுது அவன், நான் இன்னம் இந்த ஒருவிசைமாத்திரம் பேச ஆண்டவருக்குக் கோபம்வராமல் வேண்டுகிறேன்; ஒருவேளை பத்து நீதிமான்கள் அங்கே காணப்படுவார்களென்றான்; அதற்கவர்: பத்து நீதிமான்களினிமித்தம் அதை அழிக்காதிருப்போமென்றார்.

௩௩ கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடித்தபிற்பாடு புறப்பட்டுப்போனார்; ஆபிரகாம் தன்னிடத்திற்குத் திரும்பினான்.

௰௯. அதிகாரம்.

அந்த இரண்டு தூதர் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத் சோதோமின் வாசலிலே உளுக்காந்திருந்தான்; அப்பொழுது லோத் அவர்களைக் கண்டு, எதிர்கொண்டெழுந்திருந்து, தரைமட்டும் முகங்குனிந்து,

௨ என்னாண்டவர்களே! *இதோ, உங்கள் ஊழியக்காரரின் வீட்டுமுகமாய் நீங்கள் திரும்பி, இராத்தங்கி, உங்கள் கால்களைக் கழுவி, காலமே எழுந்திருந்து உங்கள் வழிப்பயணம் போங்களென்றான்; அதற்கவர்கள், அல்ல, வீதியிலே இராத்தங்குவோமென்றார்கள். * எபிரே. ௰௩. ௨.

௩ அவனோவெனில், அவர்களை மிகவும் வருந்திக்கொண்டான்; அப்பொழுது அவனண்டைக்குத் திரும்பி, அவன் வீட்டுக்குவந்தார்கள்; அவன் அவர்களுக்கு விருந்துபண்ணிப் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டான்; அவர்கள் புசித்தார்கள்.

௪ ஆனால் அவர்கள் சயனித்துக்கொள்ளுகிறதற்கு முன் சோதோமிலே வாலிபர்முதல் கிழவர்மட்டுமுள்ள ஊர் மனிதராகிய சனங்கள் அனைவரும் கடைக்கோடிகளிலுமிருந்துவந்து, *வீட்டைச் சூழ்ந்துகொண்டு, *நியா. ௰௯. ௨௨.

௫ லோத்தைக்கூப்பிட்டு, இந்த இராத்திரியிலே உன்னண்டைக்குவந்த மனிதரெங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களண்டைக்கு வெளியே கொண்டுவாவென்று அவனோடேசொன்னார்கள்.

௬ லோத்தோவெனில், அவர்களண்டைக்கு வாசற்படியிலே புறப்பட்டுப்போய், தனக்குப்பின்னாலே கதவைப்பூட்டி,

௭ என் சகோதரரே! *பொல்லாப்புச் செய்யாதிருங்கள். வாக். ௰௯. ௨௩.

௮ இதோ புருஷனை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்குண்டே, அவர்களையாகிலும் உங்களண்டைக்கு வெளியேகொண்டுவருவேன்; உங்கள் பார்வைக்குச் சம்மதியானபடி அவர்களுக்குச் செய்யுங்கள்; இந்தப் புருஷருக்குமாத்திரம் ஒன்றும் செய்யாதிருங்கள்; ஏனெனில், இதற்காக என் இறப்பின் நிழலிலே வந்தார்களென்றான்.

௯ ஆனால் அவர்கள் அப்பாலே ஒத்திப்போவென்றும், பரதேசியாய்வந்த இவனொருவன் நியாயம்பேசுவானென்றும், இப்பொழுது அவர்களைப்பார்க்கிலும் உனக்குப் பொல்லாப்புச் செய்வோமென்றும் சொல்லி, லோத்தென்ற புருஷனை மிகவும் நெருக்கிக் கதவையுடைக்கக் கிட்டினார்கள்.

௰ அப்பொழுது அந்தப் புருஷர் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்களண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப்பூட்டி,

Digitized by Google

௰௧ வாசலுக்கு முன்னிருந்த சிறியோரும், பெரியோருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள்; அப்பொழுது அவர்கள் வாசலைத்தேடி, இளைத்துப்போனார்கள்.

௰௨ ¶ அப்பொழுது அந்தப் புருஷர் லோத்தோடே சொன்னதாவது: இன்னம் இவ்விடத்தில் உனக்கு யாரிருக்கிறார்கள்? மருமகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளாவது, பட்டணத்தில் உனக்கிருக்கிற எவர்களானாலும்சரி; அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துப்போ.

௰௩ ஏனெனில், நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம்; *அதேனென்றால், அவர்கள் கூக்குரல் கர்த்தருடைய முகத்திற்குமுன்பாகப் பெரிதாயிருக்கின்றது; அதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள். *௰௮. ௨௰.

௰௪ அப்பொழுது லோத் புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம் பண்ணப்போகிற தன் மருமக்களோடே பேசி, நீங்கள் எழுந்து இந்தஸ்தலத்தைவிட்டுப் புறப்படுங்கள்; ஏனெனில், கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிப்பாரென்றான்; ஆனால் அவனுடைய மருமக்களின் பார்வைக்கு அவன் பரியாசம்பண்ணுகிறதாகக் கண்டது.

௰௫ ¶ கிழக்கு வெளுக்கும்பொழுது அந்தத் தூதர் லோத்தைத் தீவரித்து, நீ பட்டணத்தின் அக்கிரமத்திலே அழியாதபடிக்கு எழுந்து, உன் பெண்சாதியையும், இங்கேயிருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துப்போவென்றார்கள்.

௰௬ அவன் தாமதித்துக்கொண்டிருக்கிறபொழுது, அந்தப் புருஷர் கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே அவன் கையையும், அவன் பெண்சாதியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப்பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டார்கள்.

௰௭ ¶ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், இவர்கள் அவர்களை வெளியே கொண்டுவந்தபிற்பாடு அவர் சொன்னதாவது: உன் சீவன் தப்ப ஓடிப்போ: பின்னிட்டுப்பாராதே; இந்தச் சமனான பூமியெங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்குப் பர்வதத்திற்கு ஓடிப்போவென்றார்.

௰௮ ஆனால், லோத் அவர்களோடே சொன்னதாவது: அப்படியல்ல ஆண்டவரே!

௰௯ இதோ உம்முடைய கண்களில் உமதடியானுக்குக் கிருபைகிடைத்ததே, என் பிராணனைக் காக்கத் தேவரீர் எனக்குச் செய்த கிருபையைப் பெரிதாயிருக்கப் பண்ணினீர்; ஆனால் நான் பர்வதத்திற்கு ஓடிப்போகமாட்டேன்; தீங்கு என்னைத் தொடர்ந்து பிடித்தால் மரிப்பேனே.

௨௰ அதோ அந்த ஊர், நான் அதற்கோடிப்போகக் கிட்டியிருக்கின்றதே, அது சின்னதுமாயிருக்கின்றது; என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடிப்போகட்டுமே, அது சின்னதல்லவோ என்றான்.

௨௧ அப்பொழுது அவர் அவனுடனே சொன்னதாவது: இதோ, நீ சொன்ன ஊரை நாம் கவிழ்த்துப்போடாதபடிக்கு, இந்தக் காரியத்திலும் உன் முகத்தைப் பார்த்தோம்.

௨௨ தீவரமாய் அங்கே ஓடித் தப்பித்துக்கொள்; ஏனெனில், நீ அங்கே வந்து சேருமட்டும் நாம் ஒன்றும்செய்யக்கூடாதென்றார்; ஆகையால், அந்த ஊர் சோவார் என்னப்பட்டது.

௨௩ லோத் சோவாருக்குள் வந்தபொழுது, பூமியின்மேல் சூரியன் உதித்தது.

௨௪ அப்பொழுது கர்த்தர் *சோதோமின்மேலும், கொமோராவின்மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கெந்தகத்தையும், அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, *௫ மோ. ௨௯. ௨௩. ஏசா. ௰௩. ௰௯. எரே. ௫௰. ௪௰. ஓசே. ௰௧. ௮. ஆமோ. ௪. ௰௧. லூக். ௰௭. ௨௯. ௨ பே. ௨. ௬. யூதா. ௭. வச.

Digitized by Google

௨௫ அந்தப் பட்டணங்களையும், அந்தச் சமனான பூமிஅனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் கவிழ்த்துப்போட்டார்.

௨௬ ஆனால், *அவன் பெண்சாதி பின்னிட்டுப்பார்த்து, உப்புத்தூணானாள்.

* லூக். ௰௭. ௩௨.

௨௭ ஆபிரகாமோவெனில், காலமே எழுந்திருந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய்,

௨௮ சோதோம் கொமோரூபட்டணங்களின் திக்கையும், சமனான பூமியினுடைய எல்லாத் திக்கையும் நோக்கிப்பார்த்தான்; அப்பொழுது இதோ, நிலத்துப்புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று.

௨௯ ¶ அப்படியே பராபரன் அந்தச் சமனான பூமியின் பட்டணங்களை அழிக்கிறபொழுது, பராபரன் ஆபிரகாமை நினைத்து, லோத் குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்தக் கவிழ்த்தலின் நடுவிலிருந்து தப்பவிட்டனுப்பினார்.

௩௰ ¶ பிற்பாடு லோத் சோவாரைவிட்டுப் போய், அவனும், அவனோடேகூட அவன் இரண்டு குமாரத்திகளும், பர்வதத்திலே குடியேறினார்கள்; ஏனெனில், சோவாரிலே குடியிருக்கப் பயந்தான்; அங்கே அவனும், அவன் இரண்டு குமாரத்திகளும், ஒரு கெபியிலே குடியிருந்தார்கள்.

௩௧ அப்பொழுது, மூத்தவள் இளையவளோடே சொன்னதாவது: நம்முடைய தகப்பன் முதிர்வயதானார்; பூமியெங்கும் நடக்கிற முறைமையின்படியே நம்மோடே சேரப் பூமியிலே ஒரு புருஷனுமில்லையே.

௩௨ வா, நம்முடைய தகப்பனுக்கு வித்தைப் பிறப்பிக்கும்படிக்கு அவருக்கு மதுவைப் பானம்பண்ணக் கொடுத்து, அவரோடே சயனிப்போமென்றாள்.

௩௩ அப்படியே அன்று இராத்திரியிலே, தங்கள் தகப்பனுக்கு மதுவைப் பானம்பண்ணக்கொடுத்தார்கள்; மூத்தவள் போய், தன் தகப்பனோடே சயனித்தாள்; ஆனால், அவன் சயனித்துக்கொண்டதையும் எழுந்திருந்ததையும் உணராதிருந்தான்.

௩௪ மறுநாளிலே சம்பவித்ததேதென்றால், மூத்தவள் இளையவளோடே, இதோ, நேற்று என் தகப்பனோடே சயனித்தேன், நம்முடைய தகப்பனுக்கு வித்தைப் பிறப்பிக்கும்படிக்கு அவருக்கு இன்று இராத்திரிக்கும் மதுவைப் பானம்பண்ணக் கொடுப்போம்; அப்பொழுது நீ போய் அவரோடே சயனியென்றாள்.

௩௫ அப்படியே அன்று இராத்திரியிலும் தங்கள் தகப்பனுக்கு மதுவைப் பானம் பண்ணக்கொடுத்தார்கள்; அப்பொழுது இளையவள் எழுந்துபோய், அவனோடே சயனித்தாள்; ஆனால், அவன் சயனித்துக் கொண்டதையும் எழுந்திருந்ததையும் உணராதிருந்தான்.

௩௬ இந்த அடைவாய், லோத்தின் குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்பனாலே, கர்ப்பந்தரித்தார்கள்.

௩௭ மூத்தவள் ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்கு மோவாப் என்று பேரிட்டாள்; அவனே இந்நாள்வரைக்கும் இருக்கிறமோவாபியருக்குத் தகப்பன்.

௩௮ இளையவளும் ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்குப் பேன்அம்மியென்று பேரிட்டாள்; அவன் இந்நாள்வரைக்கும் இருக்கிற அம்மோன்புத்திரருக்குத் தகப்பன்.

௨௰. அதிகாரம்.

ஆபிரகாம் அவ்விடத்தை விட்டுத் தென்தேசத்திற்குப் பயணம்பண்ணி, காதேசுக்கும் சூருக்கும் நடுவாகக் குடியேறி, கேராரிலே தங்கி,

௨ *தன் பெண்சாதியாகிய சாராளைத் தன் சகோதரியென்றான்; அப்பொழுது கேராரின் இராசாவாகிய அபிமேலேக் ஆளனுப்பிச் சாராளை எடுத்துக்கொண்டான்.

*௰௨. ௰௩: ௨௬. ௭.

௩ ஆனால், இராத்திரியில் சொப்பனத்

Digitized by Google

திலே பராபரன் அபிமெலேக் அண்டைக்
கு வந்து அவனுடனே, இதோ நீ எடுத்துக்
கொண்ட ஸ்திரியின்நிமித்தம் நீ சாவுக்குள்
ளானவன்; ஏனெனில், அவள் புருஷன்கீ
ழ்ப் பெண்சாதியாயிருக்கிறாளென்றார்.
௪ அபிமெலேக்கோவெனில், அவளைச் சே
ராதிருந்தான்; ஆகையால், அவன் சொன்
னதாவது: ஆண்டவரே! நீதியுள்ள சாதி
யையும் கொல்லுவீரோ?
௫ இவள் தன் சகோதரியென்று அவன்
என்னோடே சொன்னதில்லையோ? இவள்
தன் சகோதரனென்று அவள்தானும் சொ
ன்னாளே; என் இருதயத்தின் உத்தமத்தோ
டும் என் கைகளின் குற்றமில்லாமையோ
டும் இதைச் செய்தேனே என்றான்.
௬ அப்பொழுது பராபரன் சொப்பனத்
திலே அவனோடே சொன்னதாவது: உன்
இருதயத்தின் உத்தமத்தோடே நீ இதைச்
செய்தாயென்று நாம் அறிந்துமிருக்கிறோ
ம்; நீ நமக்கு விரோதமாகப் பாவஞ்செய்
யாதபடிக்கு நாம் உன்னைத் தடுத்தும் இருந்
தோம்; ஆகையால், உன்னை அவளைத் தொட
ஒட்டாதிருந்தோம்.
௭ இப்பொழுதும் ஸ்திரியைப் புருஷ
னுக்குத் திரும்பக் கொடு; ஏனெனில்,
*அவன் தீர்க்கதரிசி, நீ பிழைக்கும்படிக்
கு அவன் உனக்காக வேண்டுதல்செய்வா
ன்; திரும்பக் கொடாயேயாகில், நீயும் உ
னக்கிருக்கிற அனைவரும் சாவவே சாவீர்க
ளென்றறியென்றார். *சங். ௱௫. ௰௪, ௰௫.
௮ அபிமெலேக் அதிகாலமே எழுந்திருந்
து, தன் ஊழியக்காரரை எல்லாம் அழை
ப்பித்து, இந்த எல்லா வார்த்தைகளையும்
அவர்கள் கேட்கச்சொன்னான்; அந்த மனி
தர் மிகவும் பயந்தார்கள்.
௯ அப்பொழுது அபிமெலேக் ஆபிரகா
மை அழைப்பித்து, அவனுடனே: நீ எங்
களுக்கு என்னசெய்தாய்? நீ என்மேலும்
என் இராச்சியத்தின்மேலும் கன பாவத்தை
ச்சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கென்ன கு
ற்றஞ்செய்தேன்? செய்யத்தகாத காரியங்
களை என்னிடத்திலே செய்தாயென்றான்.
௰ பின்னையும் அபிமெலேக் ஆபிரகாமோ
டே, நீ இந்தக் காரியத்தைச் செய்வதற்
காக என்ன கண்டாயென்றான்.
௰௧ ஆபிரகாம் சொன்னதாவது: இவ்வி
டத்தில் தெய்வபயமே இல்லையென்றும்,
என் பெண்சாதியின்நிமித்தம் என்னைக்
கொல்லுவார்களென்றும் நினைத்தேன்.
௰௨ அவள் என் சகோதரி என்கிறதும்
நிசந்தான்; அவள் என் தகப்பனுக்குக் கு
மாரத்தி; ஆனால் என் தாயாருக்குக் குமா
ரத்தியல்ல, அவள் எனக்குப் பெண்சாதி
யானாள்.
௰௩ பராபரன் என்னைத் தகப்பன் வீட்டி
லிருந்து சிதறப்பண்ணினபொழுது, சம்ப
வித்ததேதென்றால், நாம் எந்த ஸ்தலத்தி
லேவந்தாலும், இவன் என் சகோதரனென்
று சொல்வது நீ எனக்குச் செய்யவேண்டி
ய தயையென்று அவளோடே சொல்லியி
ருக்கிறேனென்றான்.
௰௪ அப்பொழுது அபிமெலேக் ஆடுமா
டுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரி
களையும் ஆபிரகாமுக்குக் கொடுத்து, அவ
ன் பெண்சாதியாகிய சாராளை அவனுக்குத்
திரும்பக் கொடுத்து,
௰௫ இதோ, என் தேசம் உனக்குமுன்பா
க இருக்கின்றது; உன் பார்வைக்குச் சம்மதி
யான இடத்திலே குடியிருவென்று அபிமெ
லேக் சொல்லி,
௰௬ ¶ சாராளுடனே, உன் சகோதரனு
க்கு ஆயிரம் வெள்ளிக்காசைக் கொடுத்
தேன்; இதோ, உன்னோடிருக்கிற எல்லார்
முன்பாகவும் மற்ற அனைவர்முன்பாகவும்
இது உனக்குக் கண்களின் முக்காட்டுக்கா
வதாகவென்றான்; இப்படிப் புத்திசொல்
லப்பட்டாள்.
௰௭ ஆபிரகாம் பராபரனை வேண்டிக்
கொண்டான்; அப்பொழுது பராபரன் அ
பிமெலேக்கையும், அவன் பெண்சாதியை
யும், அவன் வேலைக்காரிகளையும், பிள்ளை
பெறும்படியாகக் குணமாக்கினார்.

Digitized by Google

௰௮ ஏனெனில், ஆபிரகாமுடைய பெண்சாதியாகிய சாராளினிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டுக் கர்ப்பங்களையெல்லாம் அடைக்கவே அடைத்திருந்தார்.

௨௧. அதிகாரம்.

கர்த்தரோவென்றால், *தாம் சொல்லியிருந்தபடியே சாராளை நோக்கிப்பார்த்தார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தார். *௰௭. ௰௬: ௰௮. ௰.

௨ *சாராள் கர்ப்பந்தரித்து, ஆபிரகாமுக்கு அவன் முதிர்வயதிலே, பராபரன் அவனுக்குச் சொல்லியிருந்த காலத்திட்டத்திலே, ஒரு குமாரனைப்பெற்றாள். *எபி. ௰௧. ௰௧, ௰௨.

௩ அப்பொழுது ஆபிரகாம் தனக்குப் பிறந்தவனும் சாராள் தனக்குப் பெற்றவனுமான தன் குமாரனுக்கு *இசாக்கென்று பேரிட்டான். *௰௭. ௰௯.

௪ எட்டுநாள் குழந்தையான தன் குமாரன் இசாக்கை ஆபிரகாம் பராபரன் தனக்குக் கற்பித்திருந்தபடியே, சுன்னத்துப் பண்ணினான்.

௫ ஆபிரகாமுக்கு அவன் குமாரனாகிய இசாக்குப் பிறந்தபொழுது, அவன் நூறு வயதாயிருந்தான்.

௬ சாராள் சொன்னதாவது: பராபரன் எனக்கொரு நகைப்பை உண்டாக்கினார்; இதைக்கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்.

௭ சாராள் பிள்ளைகளுக்கு முலைகொடுப்பாளென்று ஆபிரகாமுக்கு எவன்சொல்லுவான்; ஏனென்றால், அவர் முதிர்வயதிலே அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றேனே என்றாள்.

௮ ¶ பிள்ளை வளர்ந்து முலைமறந்தது; இசாக் முலைமறந்தநாளிலே, ஆபிரகாம் பெரிய விருந்துபண்ணினான்.

௯ பிற்பாடு சாராள்: எகிப்துதேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப்பெற்ற குமாரன் ஆகடியம் பண்ணுகிறவனென்று கண்டு,

௰ ஆபிரகாமுடனே, *இந்த அடிமைப் பெண்ணையும், அவள் மகனையும் புறம்பே தள்ளும்; ஏனெனில் இந்த அடிமைப் பெண்ணின் மகன் என் குமாரனாகிய இசாக்கோடே சுதந்தரவாளனாயிருப்பதில்லை என்றாள். *கலா. ௪. ௩௰.

௰௧ தன் குமாரனைக்குறித்துச் சொல்லப்பட்ட இந்த வார்த்தை ஆபிரகாமின் பார்வைக்கு மிகவும் ஆகாததாயிருந்தது.

௰௨ ஆனால், பராபரன் ஆபிரகாமோடே சொன்னதாவது: அந்தப் பிள்ளையையும் உன் அடிமைப் பெண்ணையுங்குறித்துச் சொல்லப்பட்டது உன் பார்வைக்கு ஆகாததாயிருக்கவேண்டாம்; சாராள் உன்னோடே சொன்னதெல்லாவற்றிலும், அவள் சொல்லைக்கேள்; ஏனெனில், *இசாக்கினிடத்தில் உன் வித்து விளங்கும். *௰௭. ௨௧. உரோ. ௯. ௭.

௰௩ அடிமைப்பெண்ணின் குமாரனையும், அவன் உன் வித்தானபடியினாலே, ஒரு சாதியாக்குவோமென்றார்.

௰௪ ஆபிரகாம் அதிகாலமே எழுந்திருந்து, அப்பத்தையும் ஒரு துருத்தி தண்ணீரையுமெடுத்து, ஆகாருக்குத் தோளின்மேல் தூக்கிவிட்டு, பிள்ளையையும் கொடுத்து, அவளை அனுப்பிவிட்டான்; அவள் புறப்பட்டுப்போய், பேயெர்சேபாவின் வனாந்தரத்திலே வழிதப்பித்திரிந்தாள்.

௰௫ துருத்தியிலிருந்த தண்ணீர் போனபிற்பாடு, அவள் பிள்ளையை ஒரு செடியின் கீழே விட்டுப்போய்,

௰௬ எதிராக வில்லெய்யும் தூரத்திலே உளுக்காந்தாள்; ஏனெனில், பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேனென்றாள்; அவள் எதிரே உளுக்காந்து, தன் சத்தமெடுத்தழுதாள்.

௰௭ ஆனால், பராபரன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்; பராபரனுடைய தூதனானவர் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு, அவளுடனே: ஆகாரே! உனக்கென்னவேண்டும்? பயப்படாதே, பராபரன்

Digitized by Google

பிள்ளையிருக்கிற இடத்திலே, அவனுடைய
சத்தத்தைக் கேட்டார்.
௰௮ நீ எழுந்திருந்து பிள்ளையை எடுத்து,
அவனை உன் கையினால் பிடித்துக்கொண்
டுபோ; ஏனெனில், அவனைப் பெரியசா
தியாக்குவோமென்றார்.
௰௯ பராபரன் அவள் கண்களைத் திறந்
தார்; அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த்
துரவைக் கண்டுபோய், துருத்தியைத் தண்
ணீரினால் நிரப்பிப் பிள்ளைக்குக் குடிக்கக்
கொடுத்தாள்.
௨௰ பராபரன் பிள்ளையோடேகூட இருந்
தார்; அவன் வளர்ந்து, வனாந்தரத்தில் குடி
யிருந்து, வில்வித்தையிலே வல்லவனாயி
ருந்தான்.
௨௧ அவன் பாரானென்ற வனாந்தரத்தி
லே குடியிருந்தான்; அவனுடைய தாய்
எகிப்துதேசத்தாளாகிய ஒரு பெண்ணை
அவனுக்கு விவாகம் பண்ணுவித்தாள்.
௨௨ ¶ அக்காலத்தில் சம்பவித்ததேதெ
ன்றால், அபிமெலேக்கும் அவன் சேனாபதி
யாகிய பீகோலும் ஆபிரகாமோடே சொன்
னதாவது: நீ செய்கிறதெல்லாவற்றிலும்
பராபரன் உன்னோடேகூட இருக்கிறார்.
௨௩ இப்பொழுதும் நீ என்னையாகிலும்,
என் குமாரனையாகிலும், என் பேரனையென்
கிலும் கபடுசெய்யாமல், நான் உனக்குச்
செய்த தயவின்படியே நீ எனக்கும், நீ
தங்கியிருக்கிற இந்தத் தேசத்திற்கும் செய்
வதென்று பராயரன்பேரிலே எனக்கு இங்
கே ஆணையிடுவென்றான்.
௨௪ அப்பொழுது ஆபிரகாம்: நான் ஆணை
யிடுகிறேனென்றான்.
௨௫ ஆனால் அபிமெலேக்குடைய வேலைக்
காரர் பறித்துக்கொண்ட தண்ணீர்த்துரவின்
நிமித்தம் ஆபிரகாம் அபிமெலேக்கைக் கடி
ந்துகொண்டான்.
௨௬ அதற்கு அபிமெலேக், யார் இந்தக்
காரியத்தைச் செய்தாரென்று அறியேன்;
நீ எனக்கு அறிவித்ததுமில்லை; இன்று நான்
அதைக் கேட்டதேயொழிய இதற்கு முன்
அதை நான் கேட்டதுமில்லை என்றான்.
௨௭ அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடு
களைக் கொண்டுவந்து, அபிமெலேக்குக்குக்
கொடுத்தான்; அவர்களிருவரும் உடம்ப
டிக்கை பண்ணிக்கொண்டார்கள்.
௨௮ ஆபிரகாம் ஏழு பெண் ஆட்டுக்குட்
டிகளைத் தனியே நிறுத்தினான்.
௨௯ அப்பொழுது அபிமெலேக் ஆபிரகா
மோடே, நீ தனியே நிறுத்தின இந்த ஏழு
பெண் ஆட்டுக்குட்டிகள் எதற்கென்றான்.
௩௰ அதற்கவன், நான் இந்தத் துரவை எ
டுத்ததற்கு எனக்குச் சாட்சியாக நீர் இந்த
ஏழு பெண்குட்டிகளை என் கையில் வாங்
கிக்கொள்ளவேண்டுமென்றான்.
௩௧ அவர்களிருவரும் அவ்விடத்தில்
ஆணையிட்டுக்கொண்டபடியினாலே, அந்த
இடம் பேயேர்சேபாவென்னப்பட்டது.
௩௨ அவர்கள் பேயேர்சேபாவிலே உடம்
படிக்கை பண்ணிக்கொண்ட பிற்பாடு,
அபிமெலேக்கும், அவன் சேனாபதியாகிய
பீகோலும் எழுந்திருந்து, பெலிஸ்தருடை
ய தேசத்திற்குத் திரும்பினார்கள்.
௩௩ ¶ ஆபிரகாம் பேயேர்சேபாவிலே
ஒரு தோப்பை நாட்டி, என்றுமுள்ள பரா
பரனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்வி
டத்திலே தொழுதுகொண்டான்.
௩௪ ஆபிரகாம் அநேகநாள் பெலிஸ்தரு
டைய தேசத்தில் தங்கினான்.

௨௨. அதிகாரம்.

இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு சம்ப
வித்ததேதெனில், பராபரன் ஆபிரகாமைச்
சோதித்து அவனுடனே, ஆபிரகாமே! எ
ன்றார்; அதற்கவன் இதோ அடியேனென்
றான்.
௨ அப்பொழுது அவர் சொன்னதாவது:
*நீ சிநேகிக்கிறவனும், உனக்கு ஒரே பேரு
ளவனுமாகிய உன்னுடைய குமாரன் இ
சாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொ
ண்டு மோரியதேசத்திற்குப்போய், அங்கே
அவனை நாம் உனக்குச் சொல்லப்போகிற

Digitized by Google

மலைகளில் ஒன்றின்மேல் தகனபலியாகப் பலியிடுவென்றார். *எபி. ௰௧. ௰௭.

௩ அப்பொழுது, ஆபிரகாம் அதிகாலமே எழுந்திருந்து, தன் கழுதையின்மேல் விரி கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளைப் பிளந்து புறப்பட்டுப் பராபரன் தனக்குச் சொன்ன ஸ்தலத்திற்கு நடந்துபோனான்.

௪ மூன்றாம் நாளிலே ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே அந்த ஸ்தலத்தைக் கண்டான்.

௫ அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரோடே, நீங்கள் இங்கே கழுதையை நிறுத்தி, உளுக்காந்திருங்கள்; நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம்மட்டும் போய், பணிந்துகொண்டு, உங்களண்டைக்குத் திரும்பி வருவோமென்றான்.

௬ ஆபிரகாம் தகனபலிக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின் மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டு, இருவரும் ஏகமாய்ப் போனார்கள்.

௭ அப்பொழுது ஈசாக் தன் தகப்பனாகிய ஆபிரகாமோடே, என் தகப்பனே என்று சொன்னான்; அதற்கவன், என் மகனே, இதோ நானென்றான். அப்பொழுது அவன், இதோ நெருப்பும் கட்டையுமிருக்கின்றது; ஆனால் தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான்.

௮ அப்பொழுது ஆபிரகாம், என் மகனே, பராபரன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப்பார்த்துக்கொள்ளுவாரென்றான்; அப்புறம் இருவரும் ஏகமாய்ப் போய்,

௯ ¶ பராபரன் அவனுக்குச் சொல்லியிருந்த ஸ்தலத்திற்கு வந்தார்கள்; அப்பொழுது ஆபிரகாம் அங்கே ஒரு பீடத்தைக் கட்டி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அவனை அந்தப் பீடத்திலே கட்டைகளின்மீதில் கிடத்தினான்.

௰ பிற்பாடு ஆபிரகாம் தன் கையை நீட்டி, தன் குமாரனைக் குரல்வளை அறுக்கும்படிக்கு, கத்தியை எடுத்துக்கொண்டான்.

௰௧ அப்பொழுது கர்த்தருடைய தூதர் வானத்திலிருந்து அவனைக் கூப்பிட்டு, ஆபிரகாமே, ஆபிரகாமே, என்றார்; அவன், இதோ அடியேன் என்றான்.

௰௨ அப்பொழுது அவர் பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்போடாதே; அவனுக்கு ஒன்றும் செய்யாதே; ஏனெனில், நீ பராபரனுக்குப் பயந்திருந்து, நமக்காக உனக்கொரேபேறான உன்னுடைய குமாரனைப் பாராதேபோனாயென்று இப்பொழுது அறிந்திருக்கிறோமென்றார்.

௰௩ ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறபொழுது, இதோ பின்னாகப் புதரிலே தன் கொம்புகளால் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்.

௰௪ ஆபிரகாம் அந்த ஸ்தலத்திற்குக் கர்த்தர் பார்த்துக்கொள்ளுவாரென்று பேரிட்டான்; அதினாலே இந்நாள்வரைக்கும் கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படுமென்று சொல்லப்படும்.

௰௫ கர்த்தருடைய தூதர் இரண்டாம் விசை வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டுச் சொன்னதாவது:

௰௬ நீ நம்முடைய சொல்லைக் கேட்டு இந்தக் காரியத்தைச் செய்து, நமக்காக உனக்கொரேபேறான உன்னுடைய குமாரனைப் பாராதே போனபடியினாலே,

௰௭ நாம் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, *உன் வித்தை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரையிலிருக்கிற மணலைப்போலவும் பெருகவே பெருகப் பண்ணுவோமென்றும், உன் வித்தார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்த

Digitized by Google

ரித்துக்கொள்ளுவார்களென்றும், *௰௩.
௰௬: ௰௫. ௫.
௰௮ *உன் வித்தினாலே பூமியினுடைய
எல்லாச் சாதிகளும் ஆசீர்வதிக்கப்படுமெ
ன்றும், †நம்முடைய பேரிலே ஆணையிட்
டோமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்
றார். *௰௨. ௩: ௰௮. ௰௮. †எபி. ௬. ௰௩, ௰௪.
௰௯ ஆபிரகாம் தன் வேலைக்காரரண்டைக்
குத் திரும்பிவந்தான்; அப்பொழுது எழுந்
து புறப்பட்டு, ஏகமாய்ப் பேயோர்சேபாவுக்
குப் போனார்கள்; ஏனென்றால், ஆபிரகாம்
பேயோர்சேபாவிலே குடியிருந்தான்.
௨௰ ¶ இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு,
ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்டதாவது:
இதோ, மில்க்காளும் உன் சகோதரனாகிய
நாகோருக்குப் பிள்ளைகளைப்பெற்றாள்.
௨௧ யாரையென்றால், அவனுடைய மு
தற்பேறான ஊத்ஸையும், இவன் தம்பியா
கிய பூஸையும், ஆராமுக்குத் தகப்பனாகிய
கேமுவேலையும்,
௨௨ கேசேதையும், ஆசோவையும், பில்
தாஸையும், இத்லாப்பையும், பெத்துவேலை
யும் பெற்றாள்; பெத்துவேலோவெனில்
ரெபேக்காளைப் பெற்றானென்று அவனுக்கு
அறிவிக்கப்பட்டது.
௨௩ அந்த எட்டுப்பேரை மில்க்காள் ஆபி
ரகாமுடைய சகோதரனாகிய நாகோருக்
குப் பெற்றாள்.
௨௪ ரேயுமாளென்று பேர்கொண்ட அவ
னுடைய வைப்பாட்டியும், தேபாகையும்,
காகாமையும், தாகாஸையும், மாகாவையும்
பெற்றாள்.

௨௩. அதிகாரம்.

சாராள் உயிரோடிருந்தகாலம் நூற்றிரு
பத்தேழுவருஷம், இதுவே சாராளுடைய
வயது.
௨ பிற்பாடு சாராள் கானான்தேசத்திலே
யிருக்கிற எபிரோன் ஊராகிய கீரியாத் அர்
பாவிலே மரித்தாள்; அப்பொழுது ஆபிர
காம் சாராளுக்காகப் புலம்பவும், அழவும்
வந்தான்.
௩ ¶ பிற்பாடு ஆபிரகாம் தன் சவத்தை விட்
டெழுந்து, ஏத்தின் புத்திரரோடே பேசி,
௪ நான் உங்களிடத்தில் பரதேசியும் அந்
நியனுமாயிருக்கிறேன்; எனக்குமுன்பாகக்
கிடக்கிற என் சவத்தை நான் அடக்கம்
பண்ணுவதற்கு, எனக்கு உங்களிடத்தில்
பிரேதம் அடக்கம்பண்ணும் நிலத்தைச்
சொந்தமாகத் தாருங்களென்றான்.
௫ ¶ அப்பொழுது ஏத்தின்புத்திரர் ஆபிர
காமுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதா
வது:
௬ எங்கள் ஆண்டவனே, நாங்கள் சொல்
லுகிறதைக் கேளும்; எங்கள் நடுவிலே நீர்
தெய்வப் பிரபுவாயிருக்கிறீர்; எங்கள் கல்ல
றைகளில் தெரிந்துகொள்ளப்பட்டதிலே
உம்முடைய சவத்தை அடக்கம்பண்
ணும்; நீர் உம்முடைய சவத்தை அடக்கம்
பண்ண எங்களில் ஒருவனும் தன் கல்ல
றையை உமக்குத் தடைசெய்வதில்லையெ
ன்றார்கள்.
௭ ¶ அப்பொழுது ஆபிரகாம் எழுந்திருந்து
ஏத்தின் புத்திரராகிய தேசத்தாரை வணங்கி,
௮ அவர்களோடே சம்பாஷித்துச் சொன்
னதாவது: எனக்கு முன்பாகக்கிடக்கிற
என் சவத்தை நான் அடக்கம்பண்ண உங்
களுக்குச் சம்மதியானால், நீங்கள் என்
வார்த்தையைக் கேட்டு, சோகாருடைய
குமாரனாகிய எப்பெரோனுடனே,
௯ அவர் தமது நிலத்தின் கடைசியிலே
தமக்கிருக்கிற மக்பேலா என்னப்பட்ட
கெபியை எனக்குத்தர எனக்காக மனுக்கே
ளுங்கள்; உங்களிடத்தில் எனக்குப் பிரே
தம் அடக்கம்பண்ணும் சொந்த நிலம் இ
ருக்கும்படிக்கு, அவர் அதை அது பெறும்
விலைக்குத் தருவாராகவென்றான்.
௰ ¶ ஆனால் எப்பெரோன் ஏத்தின் புத்தி
ரர் நடுவிலே உட்கார்ந்திருந்தான்; அப்
பொழுது ஏத்தியனாகிய எப்பெரோன் தன்
ஊர்வாசலுக்குள் பிரவேசிக்கிற ஏத்தின்
புத்திரர் அனைவருங்கேட்க ஆபிரகாமுக்
குப் பிரதியுத்தாரமாக,

Digitized by Google

௰௧ அல்ல என்னாண்டவனே, என் வார்த்தையைக்கேளும்; நிலத்லத உமக்குத் தருகிறேன்; அதிலிருக்கும் கெபியையும் உமக்குத் தருகிறேன்; என் சனப் புத்திரருடைய கண்களுக்குமுன்பாக அதை உமக்குத் தருகிறேன்; உம்முடைய சவத்தை அடக்கம் பண்ணுமென்றான்.

௰௨ ¶ அப்பொழுது ஆபிரகாம் தேசத்தாரை வணங்கி,

௰௩ தேசத்துச் சனம்கேட்க எப்பெரோனுடனே சொன்னதாவது: கொடுக்க நீர் மனதானால் என் வார்த்தையைக் கேளும்; நிலத்தின் விலைக்கிரயத்தைத் தருகிறேன்: என் கையில் அதை வாங்கிக்கொள்ளும், அப்பொழுது அவ்விடத்தில் என் சவத்தை அடக்கம்பண்ணுவேனென்றான்.

௰௪ ¶ அப்பொழுது எப்பெரோன் ஆபிரகாமுக்குப் பிரதியுத்தாரமாக:

௰௫ என்னாண்டவனே, நான் சொல்லுகிறதைக்கேளும்; இந்த நிலம் நானூறு வெள்ளிக்காசுபெறும்; எனக்கும் உமக்கும் அது எவ்வளவுகாரியம்; நீர் உம்முடைய சவத்தை அடக்கம்பண்ணுமென்றான்.

௰௬ ¶ அப்பொழுது ஆபிரகாம் எப்பெரோனின் சொல்லைக் கேட்டு, எப்பெரோன் ஏத்துடைய புத்திரரின் காதுகளில் கேட்கச் சொன்னதாகிய வர்த்தகரிடத்தில் செல்லும்படியான நானூறு வெள்ளிக்காசை அவனுக்கு நிறுத்துக்கொடுத்தான்.

௰௭ இந்தப் பிரகாரமாக *மம்ரேக்கெதிரே மக்பேலாவிலிருந்த எப்பெரோனுடைய நிலமாகிய அந்தப் பூமியும், அதிலுள்ள கெபியும் நிலத்திலுடைய எல்லைகளெல்லாம் சுற்றியிருந்த எல்லா மரங்களும்,

*௪௯. ௨௯, ௩௰: ௫௰. ௰௩.

௰௮ அவனுடைய ஊர்வாசலுக்குள்பிரவேசிக்கிற ஏத்தின் புத்திரர் எல்லாரும் அறிய ஆபிரகாமுக்குச் சொந்தமாக ஏற்பட்டது.

௰௯ ¶ அதற்குப்பிற்பாடு ஆபிரகாம் தன் பெண்சாதியாகிய சாராளைக் கானான்தேசத்தில் எப்பெரோன் ஊர்ப்பூமியான மம்ரேக்கெதிரேகிடக்கிற மக்பேலா என்ற நிலத்தின் கெபியிலே அடக்கம்பண்ணினான்.

௨௰ இப்படியே ஏத்தின் புத்திரர்கையில் கொள்ளப்பட்ட அந்த நிலமும், அதிலுள்ள கெபியும், ஆபிரகாமுக்குப் பிரேதங்களை அடக்கம்பண்ணும் சொந்தநிலமாக ஏற்பட்டது.

௨௪. அதிகாரம்.

ஆபிரகாம் வயதுசென்ற கிழவனானான்; கர்த்தர் ஆபிரகாமை எல்லாவற்றிலும் ஆசீர்வதித்துக்கொண்டிருந்தார்.

௨ அப்பொழுது ஆபிரகாம் தன் வீட்டிலே வயதில் மூத்தவனும், தனக்குண்டானதையெல்லாம் ஆளுகிறவனுமாகிய தன் ஊழியக்காரனோடே சொன்னதாவது:

௩ *நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்ணைக்கொள்ளாமல்,

*௨௮. ௧.

௪ நீ என் சீமைக்கும், என் இனத்தண்டைக்கும்போய், என் குமாரனாகிய இசாக்குக்குப் பெண்ணைக் கொள்வதற்கு நான் உன்னை வானத்திற்குப் பராபரனும், பூமிக்குப் பராபரனுமாகிய கர்த்தர்பேரிலே ஆணையிடும்படிக்கு, *உன் கையை என்னிடுப்பின்கீழே போடென்றான்.

*௪௭. ௨௯.

௫ ¶ அப்பொழுது அந்த ஊழியக்காரன் அவனுடனே, ஒருவேளை அந்தப் பெண் என்பிறகே இந்தத் தேசத்திற்கு வர மனதில்லாதிருப்பாள்; அப்பொழுது உம்முடைய குமாரனை நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே மறுபடியும் அழைத்துப் போவேனோ என்றான்.

௬ ஆனால், ஆபிரகாம் அவனோடே சொன்னதாவது: நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துப்போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

௭ *என்னை என் தகப்பனுடைய வீட்டிலும் என் இனத்தாரிருக்கிற தேசத்திலுமிருந்து அழைத்துவந்தவரும், †உன் வித்

Digitized by Google

துக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்போ
மென்று எனக்குச் சொன்னவரும், எனக்கு
ஆணையிட்டவருமான வானத்தினுடைய
பராபரனாகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து
என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்
டுவரும்படிக்குத் தம்முடைய தூதனை
உனக்குமுன்பாக அனுப்புவார். *௰௨. ௧.
† ௰௨. ௭: ௰௩. ௰௫—௰௮.

௮ பெண் உன்னைப் பின்செல்ல மன
தில்லாதிருந்தாளேயாகில், அப்பொழுது நீ
இந்த என்னுடைய ஆணைக்கு நீங்கலான
வன்; அங்கேமாத்திரம் என் குமாரனை
மறுபடியும் அழைத்துப்போகாயாகவென்
றான்.

௯ அப்பொழுது அந்த ஊழியக்காரன்
தன் கையைத் தன் எசமானாகிய ஆபிரகா
முடைய இடுப்பின்கீழே போட்டு, இந்
தக் காரியத்திற்காக அவனுக்கு ஆணையிட்
டான்.

௰ ¶ பிற்பாடு ஊழியக்காரன் தன் எசமான
னுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்
களைக் கூட்டிக்கொண்டு போனான்; அவன்
எசமானனுடைய சகலவித உச்சிதங்களு
ம் அவன்கையிலிருந்தன; அவன் எழுந்து
புறப்பட்டுப்போய், மெசொப்பொத்தா
மியாவிலே நாகோருடைய ஊருக்குவந்து,

௰௧ ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த்
துரவண்டையில் தண்ணீர் மொள்ளுகிற
ஸ்திரிகள் புறப்படுகிற சாயங்கால வேளையி
லே ஒட்டகங்களை மடக்கிச் சொன்னதா
வது:

௰௨ ¶ என் எசமானாகிய ஆபிரகாமுடை
ய பராபரனாயிருக்கிற கர்த்தாவே, தேவரீர்
இன்றைக்கு எனக்குக் காரியம் நேரிடப்
பண்ணி, என் எசமானாகிய ஆபிரகாமுக்
குக் கிருபைசெய்யும்.

௰௩ இதோ நான் தண்ணீர்த் துரவண்
டையில் நிற்கிறேன்; ஊராரின் குமாரத்தி
கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டுவரு
வார்களே.

௰௪ நான் குடிக்க உன் பானையைச் சா
யென்று நான் சொல்லும்பொழுது, குடி
உன் ஒட்டகங்களுக்கும் குடிக்க வார்ப்பே
னென்று சொல்லும் பெண்பிள்ளையே நீர்
உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்
குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எச
மானனுக்குக் கிருபை செய்தீரென்று நான்
இதினாலே அறியவும் கடவதென்றான்.

௰௫ ¶ அவன் இன்னம் பேசி முடியவில்
லை; அப்பொழுது சம்பவித்ததேதென்றால்,
இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய
நாகோரின் பெண்சாதி மில்க்காளுடைய
குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிற
ந்த *ரெபேக்காள் தன் பானையைத் தன்
தோளின்மேல் வைத்துக்கொண்டு புறப்
பட்டுவந்தாள். *௨௨. ௨௩.

௰௬ அந்தப் பெண்பிள்ளை மகா ரூபவதி
யும், புருஷனை அறியாத கன்னியாஸ்திரியு
மாயிருந்தாள்; அவள் துரவுக்கிறங்கிப்போ
ய், தன் பானையை நிரப்பிக்கொண்டேறி
வந்தாள்.

௰௭ அப்பொழுது ஊழியக்காரன் அவ
ளுக்கு எதிர்கொண்டோடி, உன் பானையி
லே நான் கொஞ்சம் தண்ணீர் குடிக்கட்டு
மென்றான்.

௰௮ அதற்கவள், குடியும் என்னாண்டவ
னே! என்று தீவிரமாய்த் தன் பானையைத்
தன் கையிலிறக்கிக்கொண்டு, அவனுக்குக்
குடிக்கக் கொடுத்தாள்.

௰௯ கொடுத்துத் தீர்ந்தபின்பு, உம்முடை
ய ஒட்டகங்களுக்கும் அவைகள் குடித்துத்
தீருமட்டும் மொண்டுவார்ப்பேனென்று
சொல்லி,

௨௰ தீவிரமாய்த் தன் பானையைத் தண்
ணீரைத் தொட்டியிலே ஊற்றி, இன்னம்
மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவ
னுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொ
ண்டுவார்த்தாள்.

௨௧ அந்தப் புருஷன் அவள்மேல் ஆச்
சரியப்பட்டு, கர்த்தர் தன் பயணத்தை
வாய்க்கப்பண்ணினாரோ, இல்லையோவெ
ன்றறிய மவுனமாயிருந்தான்.

Digitized by Google

௨௨ ¶ ஒட்டகங்கள் குடித்துத்தீர்ந்தபிற்பாடோவென்றால், அந்தப் புருஷன் அரைச்சேக்கல் எடைப்பொன்னான நெற்றிப் பட்டத்தையும், அவள் கைகளுக்குப் பத்துச்சேக்கல் எடைப்பொன்னான இரண்டு சரிகளையும் எடுத்துக்கொடுத்து,

௨௩ நீ யாருடைய குமாரத்தியென்று எனக்கு அறிவி; உன் தகப்பன் வீட்டில் இராத்தங்க எங்களுக்கிடமுண்டோ என்றான்.

௨௪ அவள் அவனுடனே, நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகளென்றுசொல்லி,

௨௫ அவனுடனே: எங்களிடத்தில் வைக்கோலும், தீனியும் நிரம்ப இருக்கிறது; இராத்தங்க இடமுமிருக்கின்றதென்றாள்.

௨௬ அப்பொழுது அந்தப் புருஷன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு,

௨௭ என் எசமானனாகிய ஆபிரகாமின் பராபரனாயிருக்கிற கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; அவர் தம்முடைய கிருபையையும் தம்முடைய உண்மையையும், என் எசமானனைவிட்டு விலகப்பண்ணினதில்லை; நான் வழிப்பயணம் வருகையில், கர்த்தர் என்னை என் எசமானனுடைய சகோதரர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தாரென்றான்.

௨௮ ¶ பெண்பிள்ளை ஓடி, தன் தாயின்வீட்டிலே இந்த நடபடியை அறிவித்தாள்.

௨௯ ரெபெக்காளுக்கு ஒரு சகோதரனிருந்தான், அவன் பெயர் லாபான்; இந்த லாபான் வெளியே துரவருகே இருக்கிற அந்தப் புருஷனண்டைக்கு ஓடினான்.

௩௦ அதேனெனில், இவன் அந்த நெற்றிப் பட்டத்தையும், தன் சகோதரியின் கைகளிலிருக்கிற சரிகளையும் கண்டபடியினாலும், இன்ன இன்னபடி அந்தப் புருஷன் என்னோடே சொன்னானென்று தன் சகோதரி ரெபெக்காள் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டபடியினாலும், அந்தப் புருஷனண்டைக்குவந்தான்; இதோ, அவன் துரவருகே ஒட்டகங்களண்டையிலே நின்றிருந்தான்.

௩௧ அப்பொழுது இவன், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவனே, உள்ளேவா; நீ வெளியே நிற்பானேன்? நான் வீட்டையும் ஒட்டகங்களுக்கு இடத்தையும் ஆயத்தம்பண்ணினேனென்றான்.

௩௨ அப்பொழுது அந்தப் புருஷன் வீட்டுக்கு வந்தான்; இவனோவென்றால், ஒட்டகங்களைக் கட்டவிழ்த்து, ஒட்டகங்களுக்கு வைக்கோலும் தீனியும்போட்டு, அவன் கால்களையும், அவனோடேகூட இருந்த மனிதர் கால்களையும் கழுவுகிறதற்குத் தண்ணீர்கொடுத்தான்.

௩௩ பிற்பாடு அவனுக்குமுன்பாகச் சாப்பாடு வைக்கப்பட்டது; ஆனால், அவன் நான் என் வார்த்தைகளைச் சொல்லாததற்குமுன்னே சாப்பிடேனென்றான்; அதற்கு இவன் சொல்லென்றான்.

௩௪ ¶ அப்பொழுது அவன் சொன்னதாவது: நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன்.

௩௫ கர்த்தர் என் எசமானனை மிகவும் ஆசீர்வதித்தார்; இவர் பெரியவரானார்; அவர் இவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கட்டளையிட்டார்.

௩௬ என் எசமானன் பெண்சாதியாகிய சாராள் முதிர்வயதானபிற்பாடு என் எசமானனுக்கு ஒரு குமாரனைப்பெற்றாள்; இவனுக்கவர் தமக்குண்டானதையெல்லாம் கொடுத்து,

௩௭ நான் குடியிருக்கிற கானான்தேசத்தாருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்ளாமல்,

௩௮ நீ என் தகப்பன் வீட்டுக்கும் என் இனத்தண்டைக்கும் போய், என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்வாயாகவென்று என் எசமானன் என்னை ஆணையிட்டார்.

௩௯ அப்பொழுது நான் என் எசமானனோடே, ஒருவேளை அந்தப் பெண் என் பிறகே வாராதேபோவாளென்றேன்.

௪௰ ஆனால், அவர் எனக்குச் சொன்னதாவது: நான் பயந்து நடக்கிற கர்த்தரானவர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, நீ என் இனத்திலும், என் தகப்பன் வீட்டிலும், என் குமாரனுக்குப் பெண்ணைக்கொள்வதற்காக உன் பயணத்தை வாய்க்கப்பண்ணுவார்.

௪௧ நீ என் இனத்தண்டைக்குப் போனால், அப்பொழுது என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அவர்கள் உனக்குக் கொடாதே போனார்களாகில், என்னாணைக்கு நீங்கலாயிருப்பாயென்றார்.

௪௨ அப்படியே இன்று நான் அந்தத் துரவண்டையிலே வந்து சொன்னதாவது: என் எசமானாகிய ஆபிரகாமின் பராபரனாகிய கர்த்தரே, இப்பொழுதும் நான் பயணம்பண்ணுகிற என் வழியைத் தேவரீர் வாய்க்கப்பண்ணினீரானால்;

௪௩ இதோ நான் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன்; தண்ணீர்மொள்ளப் புறப்பட்டு வரப்போகிறவளும், நான் அவளுடனே, உன் பானையிலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்குக் குடிக்கத் தாவென்று சொல்ல,

௪௪ அவள் என்னுடனே, நீயும்குடி, உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேனென்று சொல்பவளுமான கன்னியாஸ்திரியே கர்த்தர் என் எசமாநனுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரியாகவேண்டுமென்றேன்.

௪௫ இன்னம் இதை நான் என் இருதயத்திலே சொல்லி முடிக்கவில்லை; அப்பொழுது இதோ, ரெபேக்காள் தன் பானையைத் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டவளாய்ப் புறப்பட்டு வந்து, துரவுக்கிறங்கிப் போய் மொண்டாள்; அப்பொழுது அவளோடே, எனக்குக் குடிக்கத் தாவென்றேன்.

௪௬ அவள் தீவிரமாய்த் தன்மேலிருந்த பானையை இறக்கி, குடியும் உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேனென்றாள்; அப்படியே நான் குடித்தேன்; அவள் ஒட்டகங்களுக்கும் வார்த்தாள்.

௪௭ அப்பொழுது நீ யாருடைய குமாரத்தியென்று அவளைக் கேட்டேன்; அதற்கவள், நான் மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனான பேத்துவேலின் மகளென்றாள்; அப்பொழுது நான் அவள் நெற்றியிலே நெற்றிப்பட்டத்தையும் அவள் கைகளில் சரிகைகளையும் அணிந்து,

௪௮ தலை குனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, நான் என் எசமாநனுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை உண்மையான வழியிலே அழைத்துவந்த என் எசமாநனாகிய ஆபிரகாமின் பராபரனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்.

௪௯ இப்பொழுதும் நீங்கள் என் எசமாநனுக்குத் தயையும் உண்மையும் செய்கிறவர்களானால், எனக்கு அறிவியுங்கள்; அல்லவென்றால், நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையென்கிலும் நோக்கிப் போகும்படிக்கு, அதையும் எனக்கு அறிவியுங்களென்றான்.

௫௰ ¶ அப்பொழுது லாபானும் பேத்துவேலும் பிரதியுத்தாரமாக, இந்தக் காரியம் கர்த்தராலே வந்தது; உனக்கு நாங்கள் இளப்பமானாலும் நலமானாலும் சொல்லக்கூடாது.

௫௧ இதோ, ரெபேக்காள் உன் முன்பாக இருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உன் எசமாநனுடைய குமாரனுக்குப் பெண்சாதியாகும்படிக்கு, அவளை அழைத்துக்கொண்டு போவென்றார்கள்.

௫௨ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டபொழுது, தரைமட்டும் குனிந்து கர்த்தரைப் பணிந்துகொண்டான்.

௫௩ பிற்பாடு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் எடுத்து, ரெபேக்

Digitized by Google

காளுக்குக் கொடுத்து, அவள் சகோதரனுக்கும் தாய்க்கும் உச்சிதங்களைக் கொடுத்தான்.

௫௪ பிற்பாடு அவனும் அவனோடிருந்த மனிதரும் புசித்துக்குடித்து இராத்தங்கினார்கள்; காலமே எழுந்திருந்த பின்பு அவன் என் எசமானனண்டைக்கு என்னை அனுப்புங்களென்றான்.

௫௫ அப்பொழுது அவள் சகோதரனும் அவளுடைய தாயும், பெண் பத்துநாளாகிலும் எங்களோடே இருந்து, பிற்பாடு போகட்டுமென்றார்கள்.

௫௬ அவனோவெனில் அவர்களோடே, கர்த்தர் என் பயணத்தை வாய்க்கப்பண்ணியிருக்க என்னைத் தடுக்காதிருங்கள்; நான் என் எசமானனண்டைக்குப் போக என்னை அனுப்புங்களென்றான்.

௫௭ அப்பொழுது அவர்கள் பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போமென்றுசொல்லி,

௫௮ ரெபேக்காளை அழைத்து, அவளுடனே, நீ இந்தப் புருஷனோடேகூடப் போவாயோவென்றார்கள்; அவள் போவேனென்றாள்.

௫௯ அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபேக்காளையும், அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும், அவன் மனிதரையும் அனுப்புவித்து,

௬௦ ரெபேக்காளை ஆசீர்வதித்து அவளுடனே, எங்கள் சகோதரியே, நீ ஆயிரம் பதினாயிரங்களாகவும் உன் வித்துத் தன் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளவுங்கடவது என்றார்கள்.

௬௧ ¶ அப்பொழுது ரெபேக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மீதிலேறி, அந்த மனிதனைப் பின்சென்றார்கள்; ஊழியக்காரன் ரெபேக்காளை அழைத்துக்கொண்டு போனான்.

௬௨ ஈசாக்கோவெனில், *என்னைப் பார்க்கிற ஜீவனுள்ளவருடைய கிணறென்னப்பட்ட கிணற்றின் வழியாய்ப் புறப்பட்டு வந்தான்; ஏனெனில் தென்தேசத்தில் குடியிருந்தான். * ௰௬. ௰௩, ௰௪.

௬௩ ஈசாக்குச் சாயங்கால வேளையிலே செபத்தியானம்பண்ண வெளியே போயிருந்து, தன் கண்களை ஏறெடுக்கையில், இதோ ஒட்டகங்கள் நடந்துவரக்கண்டான்.

௬௪ ரெபேக்காள் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் காண்கிறபொழுது, ஒட்டகத்தை விட்டிறங்கி,

௬௫ ஊழியக்காரனோடே, இங்கே வெளியிலே நமக்கெதிரே நடந்துவருகிற அந்தப் புருஷன் யாரென்றாள்; அவர் என் எசமானனென்று ஊழியக்காரன் சொன்னான்; அப்பொழுது அவள் முக்காடிட்டுக்கொண்டாள்.

௬௬ ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்தான்.

௬௭ அப்பொழுது ஈசாக்கு இவளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்திலே அழைத்துப்போய், பிற்பாடு ரெபேக்காளை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்குப் பெண்சாதியானாள்; அவன் அவளைச் சிநேகித்தான்; இப்படி ஈசாக்குத் தன் தாய்க்குப் பிற்பாடு ஆறுதல் அடைந்தான்.

௨௫. அதிகாரம்.

ஆபிரகாம் மறுபடியும் ஒரு பெண்சாதியை விவாகம்பண்ணினான்; அவள் பேர் கேத்தூராள்.

௨ இவள் அவனுக்குச் சிம்ரானையும், யக்கெஷானையும், மெதானையும், மீதேயானையும், இஷ்பாக்கையும், சூவாகையும் பெற்றாள்.

௩ யக்கெஷானோவெனில், சேபாவையும், தேதானையும் பெற்றான்; தேதானுடைய குமாரர், அசூரீம், லெத்தூரீம், லெயூமீம் என்பவர்கள்.

௪ மீதேயானுடைய குமாரர், ஏப்பா, ஏப்பேர், ஆனோக், அபீதா, எல்தா என்பவர்கள்; இவர்களெல்லாரும் கேத்தூராளின் பிள்ளைகள்.

Digitized by Google

௫ ¶ ஆபிரகாம் *தனக்குண்டானவை எல்லாவற்றையும் இசாக்குக்குக் கொடுத்தான். *௨௪. ௩௬.

௬ ஆனால் ஆபிரகாமுக்கிருந்த வைப்பாட்டிகளின் பிள்ளைகளுக்கு ஆபிரகாம் இவுகளைக் கொடுத்து, தான் இன்னம் உயிரோடிருக்கையில் அவர்களைத் தன் குமாரனாகிய இசாக்கைவிட்டு, கிழக்கே போகக் கீழ்த்தேசத்திற்கு அனுப்பிவிட்டான்.

௭ ¶ ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசுநாள் நூற்றெழுபத்தைந்து வருஷம்.

௮ பிற்பாடு ஆபிரகாம் நல்ல நரைவயதிலும் முதிர்ந்த பூரண ஆயுசிலும் சீவித்து மரித்து, தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

௯ அப்பொழுது அவனை அவன் குமாரராகிய இசாக்கும், இஸ்மவேலும் *மம்ரேக்கெதிரே ஏத்தியனான சோகாரின் குமாரனாகிய எப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா என்னப்பட்ட கெபியிலே அடக்கம்பண்ணினார்கள். *௨௩. ௨௰.

௰ அது ஆபிரகாம் ஏத்தின் புத்திரர்கையிலே கொண்ட நிலந்தான்; அங்கே ஆபிரகாமும் அவன் பெண்சாதியாகிய சாராளும் அடக்கம்பண்ணப்பட்டார்கள்.

௰௧ ¶ ஆபிரகாம் மரித்தபிற்பாடு சம்பவித்ததேதென்றால், பராபரன் அவன் குமாரனாகிய இசாக்கை ஆசீர்வதித்தார்; என்னைப் பார்க்கிற சீவனுள்ளவருடைய கிணறென்னப்பட்ட கிணற்றண்டையிலே இசாக்குக் குடியிருந்தான்.

௰௨ ¶ சாராளுடைய அடிமைப்பெண்ணாகிய எகிப்துதேசத்தாளான ஆகார், ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரனாகிய இஸ்மவேலின் சந்ததியும் பலபல சந்ததிகளாய்ப்போன இஸ்மவேல் புத்திரர் அழைக்கப்பட்ட நாமங்களுமாவது:

௰௩ இஸ்மவேலுடைய முதல்பேறான குமாரன் நேபயோத், மற்றவர்கள் கேதார், அத்பேயேல், மிப்சாம்,

௰௪ மிஷ்மா, தூமா, மாசா.

௰௫ ஆதாத், தேமா, ஏத்தூர், நாப்பீஸ், கெத்மா.

௰௬ தங்கள் கிராமங்களிலும் அரண்மனைகளிலும் குடியிருந்து, தங்கள் சனத்தாருக்குப் *பன்னிரண்டு பிரபுக்களான இஸ்மவேலின் குமாரர் இவர்கள்தான்; அவர்களுடைய நாமங்களும் இவைகள்தானே. *௰௭. ௨௰.

௰௭ இஸ்மவேலின் வயது நூற்றுமுப்பத்தேழுவருஷமாயிருந்து, பிற்பாடு சீவித்து மரித்து தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

௰௮ அவிலா துவக்கி எகிப்துக்கெதிராக அசூருக்குப் போகிற வழியிலிருக்கும் சூர் மட்டும் குடியிருந்தார்கள்; இது அவன் சகோதரரெல்லாருக்கும் எதிராய் அவன் பங்கிலே விழுந்த பூமி.

௰௯ ¶ ஆபிரகாமின் குமாரனாகிய இசாக்குடைய சந்ததியாவது: ஆபிரகாம் இசாக்கைப்பெற்றான்.

௨௰ இசாக்கு, பதான்அராம் என்ற சூரியாவின் தேசத்தானாகிய பெத்துவேலுக்குக் குமாரத்தியும் சூரிய தேசத்தானாகிய லாபானுக்குச் சகோதரியுமான ரெபேக்காளை விவாகம்பண்ணுகிறபொழுது நாற்பதுவயதாயிருந்தான்.

௨௧ இசாக்கு மலடியாயிருந்த தன் பெண்சாதிக்காகக் கர்த்தரை வேண்டிக்கொண்டான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; அவன் பெண்சாதி ரெபேக்காள் கர்ப்பந்தரித்தாள்.

௨௨ ஆனால் அவள் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டிருந்தன; அப்பொழுது அவள் இப்படியானால் இந்தக் கர்ப்பத்தோடே நான் இருப்பானேனென்று சொல்லி, கர்த்தரைக் கேட்கப்போனாள்.

௨௩ அப்பொழுது கர்த்தர் அவளுடனே: இரண்டுசாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாய், இரண்டுசனசதளங்கள் உன் குடல்களிலிருந்து பிரியும்; *அவைகளில் ஒரு சனச

Digitized by Google

தனம் மற்றச் சனசதனத்தைப்பார்க்கிலும் பலத்துப்போம், பெரியவன் சிறியவனைச் சேவிப்பானென்றார். *உரோ. ௯. ௰, ௰௨.

௨௪ பெற அவளுக்கு நாள்கள் நிறைவேறினபொழுது, இதோ இரட்டைப்பிள்ளைகள் அவள் கர்ப்பத்திலிருந்தன.

௨௫ முந்தினவன் சிவந்தவனும் முழுதும் ரோமமான உடையின் சாயலுமாயிருந்து வெளிப்பட்டான்; அவனுக்கு ஏசாவென்று பெயரிட்டார்கள்.

௨௬ அதற்குப்பிறகு அவன் சகோதரன் ஏசாவின் குதிகாலைத் தன் கையினாலே பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான்; அவனுக்கு யாக்கோபென்று பேரிட்டார்கள்; அவள் இவர்களைப் பெறுகிறபொழுது இசாக்கு அறுபது வயதாயிருந்தான்.

௨௭ ¶ இந்தப் பிள்ளைகள் பெரியவர்களானபொழுது, ஏசா வேட்டையை அறிந்த வெளிச்சஞ்சார மனிதனும், யாக்கோபோவெனில் கூடாரங்களில் தங்கித்திரிகிற நற்குண மனிதனுமாயிருந்தான்.

௨௮ இசாக்கு ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான்; ஏனெனில் வேட்டையாடினது அவன் வாய்க்கு ருசிகரமாயிருந்தது; ஆனால் ரெபேக்காள் யாக்கோபின்மேல் பட்சமாயிருந்தாள்.

௨௯ ஏசா வெளியிலிருந்து வருகிற ஒரு நாளிலே இளைப்பாய் வருகிறபொழுது யாக்கோபு கூழைச் சமைத்திருந்தான்.

௩௰ அப்பொழுது ஏசா யாக்கோபோடே: சிவப்பாயிருக்கிறதே, அந்தச் சிவப்பானதிலே நான் ருசிபார்க்கட்டும்; ஏனெனில் இளைப்பாயிருக்கிறேனென்றான்; இதைத் தொட்டு அவன்பேர் ஏதோமென்னப்பட்டது.

௩௧ அப்பொழுது யாக்கோபு, உன்னுடைய முதற்பிறப்புச் சுதந்தரத்தை இன்று எனக்கு வில்லென்றான்.

௩௨ அதற்கு ஏசா, இதோ நான் சாகப்போகிறேனே, இந்த முதற்பிறப்புச் சுதந்தரம் எனக்கேதுக்கென்றான்.

௩௩ அப்பொழுது யாக்கோபு இன்று எனக்காணையிடுவென்றான்; *அவன் இவனுக்காணையிட்டு, தன் முதற்பிறப்புச் சுதந்தரத்தை யாக்கோபுக்கு விற்றான்.
*எபி. ௰௨. ௰௬.

௩௪ அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பமும் பயற்றங்கூழும் கொடுத்தான்; அவன் புசித்துக் குடித்து எழுந்திருந்து போனான்; இப்படி ஏசா முதற்பிறப்புச் சுதந்தரத்தை அசட்டைபண்ணினான்.

௨௬. அதிகாரம்.

ஆபிரகாமின் நாள்களில் வந்த முந்தின பஞ்சம்தவிரப் பின்னொரு பஞ்சம் தேசத்திலுண்டாயிற்று; அப்பொழுது இசாக்குக் கேராருக்குப் பெலிஸ்தருடைய இராசாவாகிய அபிமேலேக் அண்டைக்குப் போனான்.

௨ ¶ கர்த்தர் அவனுக்குத் தரிசனையாகிச் சொன்னதாவது: நீ எகிப்துக்கிறங்கிப் போகாமல் நாம் உனக்குச் சொல்லுகிற சீமையிலே குடியிரு.

௩ இந்தச் சீமையிலே தங்கியிரு; நான் உன்னோடேகூட இருந்து உன்னை ஆசீர்வதிப்போம்; ஏனெனில், நாம் உனக்கும் உன் வித்துக்கும் இந்தத் தேசங்களை எல்லாம் கொடுத்து, *உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நாம் இட்ட ஆணையைத் திட்டப்படுத்துவோம். *௨௨. ௰௬, ௰௮.

௪ ஆபிரகாம் நம்முடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, நம்முடைய திட்டத்தையும், நம்முடைய கற்பனைகளையும், நம்முடைய கட்டளைகளையும், நம்முடைய நியாயப்பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினாலே,

௫ நாம் உன் வித்தை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் வித்துக்கு இந்தத் தேசங்களையெல்லாம் கொடுப்போம்; உன் வித்தினாலே பூமியினுடைய சாதிகளெல்லாம் ஆசீர்வதிக்கப்படுமென்றார்.

௬ ¶ அப்படியே ஈசாக்குக் கேராரிலே குடியிருந்தான்.

௭ அவ்விடத்து மனிதர் அவன் பெண்சாதியின் செய்தியை விசாரிக்கும்பொழுது, அவன் *இவள் என் சகோதரியென்பான்; ஏனெனில் ரெபேக்காள் பார்வைக்கழகியானபடியால், அவ்விடத்து மனிதர் அவள் நிமித்தமாய்த் தன்னைக் கொல்லுவார்களென்று, அவளைத் தன் பெண்சாதியென்று சொல்லப் பயந்தான். *௰௨. ௰௩.

௮ ஆனால் அவன் அங்கே நெடுநாளிருக்கும்பொழுது சம்பவித்ததேதெனில், பெலிஸ்தரின் இராசாவாகிய அபிமேலேக் பலகணிவழியாய்ப் பார்த்து, இதோ ஈசாக்குத் தன் பெண்சாதியாகிய ரெபேக்காளோடே சரசம்பண்ணுகிறதைக் கண்டான்.

௯ அப்பொழுது அபிமேலேக் ஈசாக்கை அழைத்து, இதோ அவள் உன் பெண்சாதியாமே, பின்னை ஏன் அவளை உன் சகோதரியென்று சொன்னாய் என்றான்; அப்பொழுது ஈசாக்கு அவனுடனே, அவள் நிமித்தம் நான் சாவாதபடிக்கு, இப்படிச் சொன்னேனென்றான்.

௰ ஆனால் அபிமேலேக் இப்படி எங்களுக்கேன் செய்தாய்? சனத்திலொருவன் உன் பெண்சாதியோடே சயனிக்கவும், இப்படியே நீ எங்கள்மேல் குற்றம் வரப்பண்ணவும், அது மோசமாயிருந்ததே என்றான்.

௰௧ பிற்பாடு அபிமேலேக் எல்லாச் சனத்திற்கும், இந்தப் புருஷனையாகிலும் அவன் பெண்சாதியையென்கிலும் தொடுகிறவன் கொலையுண்ணவே கொலையுண்பானென்று கட்டளையிட்டான்.

௰௨ ¶ ஈசாக்கு அந்தத் தேசத்திலே விதை விதைத்து, அந்த வருஷத்திலே நூறத்தனை பலனடைந்தான்; ஏனெனில் கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

௰௩ அப்படியே அந்தப் புருஷன் பெருகினான்; அவன் மிகுதியும் பலத்தவனாகுமட்டும் வரவரப் பெருகினான்.

௰௪ அவனுக்கு ஆட்டுமந்தையும், மாட்டுமந்தையும், வெகு பணிவிடைச்சனமுமிருந்தன; ஆகையால் பெலிஸ்தர் அவன்பேரில் பொறாமையாகி,

௰௫ அவன் தகப்பனுடைய வேலைக்காரர் அவன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டின *துரவுகளையெல்லாம் தூற்று மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள். *௨௧. ௩௰.

௰௬ அபிமேலேக் ஈசாக்குடனே, எங்களைவிட்டுப்போ, ஏனெனில் எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாயென்றான்.

௰௭ ¶ அப்பொழுது ஈசாக்கு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம்போட்டு, அங்கே குடியிருந்து,

௰௮ தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும் ஆபிரகாம் மரித்தபிற்பாடு பெலிஸ்தர் தூற்றுப்போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் எடுத்து, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பெயர்களின்படியே அவைகளுக்குப் பெயரிட்டான்.

௰௯ ஈசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கிற நீரூற்றைக் கண்டுபிடித்தார்கள்.

௨௰ ஆனால் கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையதென்று ஈசாக்குடைய மேய்ப்பருடனே சண்டைபண்ணினார்கள்; அவர்கள் தன்னோடே சண்டைபண்ணினபடியினாலே, அந்தத் துரவுக்கு ஏசேக்கென்று பேரிட்டான்.

௨௰௧ வேறொரு துரவை வெட்டினார்கள்; அதைக்குறித்தும் சண்டைபண்ணினார்கள்; ஆகையால் அதற்குச் சித்னாவென்று பெயரிட்டான்.

௨௰௨ ¶ அவ்விடத்தைவிட்டுப்பேர்ந்துபோய், வேறொரு துரவைவெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் சண்டைபண்ணாதிருந்தார்கள்; அப்பொழுது அவன் நாம் தேசத்

Digitized by Google

தில் பலுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர்
நமக்கிடமுண்டாக்கினாரென்று சொல்லி,
அதற்கு ரேகோபோத்தென்று பேரிட்டான்.
௨௩ ¶ அங்கேயிருந்து பேர்சேபாவுக்குப்
போய் ஏறினான்.
௨௪ அன்று இராத்திரியிலே கர்த்தர் அவ
னுக்குத் தரிசனமாகி, நாம் உன் தகப்ப
னாகிய *ஆபிரகாமுடைய பராபரன், பயப்
படாதே, ஏனெனில் நாம் உன்னோடே
கூட இருந்து, நம்முடைய ஊழியக்காரனா
கிய ஆபிரகாமின்நிமித்தம் உன்னை ஆசீர்வ
தித்து, உன் வித்தைப் பெருகப்பண்ணு
வோமென்றார்.
௨௫ அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக்
கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழு
துகொண்டு, அங்கே தன் கூடாரத்தைப்
போட்டான்; அங்கே இசாக்கின் வேலைக்
காரர் ஒரு துரவை வெட்டினார்கள்.
௨௬ ¶ ஆனால் *அபிமெலேக்கும், அவன்
சிநேகிதனாகிய அகூசாத்தும் அவன் சேனா
பதி பீகோலும், கேராரிலிருந்து அவனண்
டைக்கு வந்தார்கள். *௨௧. ௨௨.
௨௭ அப்பொழுது இசாக்கு அவர்களுட
னே, ஏன் என்னண்டைக்கு வருகிறீர்கள்?
நீங்கள் என்னைப் பகைத்து, என்னை உங்க
ளிடத்தில் இராதபடிக்கு, அனுப்பிவிட்டீர்
களே என்றான்.
௨௮ அதற்கவர்கள் சொன்னதாவது: கர்
த்தர் உம்மோடேகூட இருக்கிறாரென்கிற
தைக் காணவே கண்டோம்; ஆகையால்
எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்
பாடு உண்டாகக்கடவதென்று சொல்லிக்
கொண்டோம்.
௨௯ இப்பொழுதும் நாங்கள் உம்மைத்
தொடாமல் நன்மையையே உமக்குச் செ
ய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்
புவித்ததுபோல நீர் எங்களுக்கும் தீங்கு
செய்யாதபடிக்கு உம்மோடே உடம்படிக்
கை பண்ணிக்கொள்ளுவோம்; நீர் இப்
பொழுது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட
வரமே என்றார்கள்.
௩௦ அவர்களுக்கு விருந்துபண்ணினான்;
அவர்கள் புசித்துக் குடித்தார்கள்.
௩௧ அதிகாலமே எழுந்திருந்து ஒருவருக்
கொருவர் ஆணையிட்டார்கள்; பிற்பாடு
இசாக்கு அவர்களை அனுப்புவித்தான்; அ
வர்கள் சமாதானத்தோடே அவனைவிட்டுப்
போனார்கள்.
௩௨ அந்நாளில்தானே இசாக்கின் வேலைக்
காரர் வந்து, தாங்கள் வெட்டின துரவின்
செய்தியை அவனுக்கு அறிவித்து, தண்
ணீரைக் கண்டுபிடித்தோமென்றார்கள்.
௩௩ அப்பொழுது அதற்குச் சேபாவென்
று பேரிட்டான்; ஆகையால் அந்த ஊரின்
பெயர் இந்நாள்வரைக்கும் பேர்சேபாவெ
ன்னப்படும்.
௩௪ ¶ ஏசா நாற்பது வயதானபொழுது,
ஏத்தியனான பெயெரியின் குமாரத்தியாகிய
எகூதித்தையும், ஏத்தியனான ஏலோனின்
குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம்
பண்ணினான்.
௩௫ இவர்கள் இசாக்குக்கும் ரெபெக்கா
ளுக்கும் மனநோவாயிருந்தார்கள்.

௨௭. அதிகாரம்.

ஈசாக்கு முதிர்வயதாகிறதினால் அவன்
கண்கள் இருளடைந்து பார்வையற்றுப்
போனபொழுது சம்பவித்ததேதென்றால்,
அவன் தன் மூத்தகுமாரனாகிய ஏசாவை
அழைத்து, அவனோடே என் மகனே என்
றான்; இவன் அவனுடனே, இதோ இருக்
கிறேனென்றான்.
௨ அப்பொழுது அவன் சொன்னதாவது:
இதோ முதிர்வயதானேன், என் மரணநா
ளை அறியேன்.
௩ இப்பொழுது நீ உன் ஆயுதங்களாகிய
உன் அம்பறாத்தூணியையும் உன்வில்லையு
ம் எடுத்துக்கொண்டு வெளியேபோய் எ
னக்காக வேட்டையாடிக்கொண்டுவந்து,
௪ எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்
ள ஒரு பதார்த்தத்தைப் பண்ணி, நான் புசிக்
கவும் மரிக்காததற்குமுன்னே என் ஆத்து

மா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னண்டைக்குக் கொண்டுவாவென்றான்.

௫ ஆனால் இசாக்குத் தன் குமாரனாகிய ஏசாவோடே பேசுகையில், ரெபேக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள்; ஏசா வேட்டையாடிக் கொண்டுவர வெளியே போனான்.

௬ ¶ அப்பொழுது ரெபேக்காள் தன் குமாரனாகிய யாக்கோபோடே சொன்னதாவது: இதோ உன் தகப்பன் உன் சகோதரனாகிய ஏசாவோடே,

௭ நான் புசித்து என் மரணத்திற்கு முன்னே, உன்னைக் கர்த்தருக்குமுன்பாய் ஆசீர்வதிப்பதற்கு நீ எனக்காக வேட்டையாடிக் கொண்டுவந்து, ருசியுள்ள ஒரு பதார்த்தத்தை எனக்குப் பண்ணென்று சொல்லக் கேட்டேன்.

௮ இப்பொழுதும் என் மகனே, நான் உனக்குக் கற்பிக்கிற பிரகாரமாக என் சொல் கேட்டுச்செய்.

௯ நீ ஆட்டுமந்தைக்குப்போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக் குட்டிகளை எனக்கு அங்கேயிருந்து கொண்டுவா; நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தமாக்குவேன்.

௰ உன் தகப்பன் தம்முடைய மரணத்திற்கு முன்னே உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கு, நீ அதை அவரண்டைக்கு அவர் புசிக்கத்தக்கதாகக் கொண்டுபோவாயாகவென்றாள்.

௰௧ ¶ ஆனால் யாக்கோபு தன் தாயாகிய ரெபேக்காளோடே சொன்னதாவது: இதோ என் சகோதரனாகிய ஏசா *ரோமமுள்ள மனுஷன்; நானோவெனில் ரோமமில்லாதவன். *௨௫. ௨௫.

௰௨ ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என்மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்ளுவேனே என்றான்.

௰௩ ஆனால் அவன் தாய் அவனுடனே, என் மகனே உனக்கு வரும் சாபம் என்மேல் இருக்கக்கடவது; என் சொல்லைமாத்திரம் நீ கேட்டுப்போய் எனக்குக் கொண்டுவாவென்றாள்.

௰௪ அவன் போய்ப்பிடித்து, தன் தாயண்டைக்குக் கொண்டுவந்தான்; அப்பொழுது அவனுடைய தாய் அவன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள ஒரு பதார்த்தத்தைப் பண்ணினாள்.

௰௫ ¶ பிற்பாடு ரெபேக்காள் வீட்டிலே தன்னிடமாயிருந்த தன் மூத்தகுமாரனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்களை எடுத்து, தன் இளையகுமாரனாகிய யாக்கோபுக்கு உடுத்து,

௰௬ வெள்ளாட்டுக் குட்டிகளின் தோல்களை அவன் கைகளின்மேலும், ரோமமில்லாத அவன் கழுத்திலும் தரித்து,

௰௭ தான் பண்ணின ருசியுள்ள பதார்த்தத்தையும் அப்பத்தையும் தன் குமாரனாகிய யாக்கோபின் கையிலே கொடுத்தாள்.

௰௮ ¶ அவன் தன் தகப்பனண்டையிலே வந்து, என் தகப்பனே என்றான்; அதற்கவன், இதோ இருக்கிறேன் என் மகனே, நீ யாரென்றான்.

௰௯ அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனுடனே, நான் உமக்கு முதல் பிறந்தவனாகிய ஏசா; நீர் என்னோடே சொன்னபடியே செய்தேன்; இப்பொழுதும் உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படிக்கு, நீர் எழுந்து, உட்கார்ந்து, நான் வேட்டையாடினதிலே புசியுமென்றான்.

௨௰ அப்பொழுது இசாக்குத் தன் குமாரனுடனே, என் மகனே, இது உனக்கு இத்தனைச் சீக்கிரமாய் அகப்பட்டதெப்படி என்றான்; இவன் உம்முடைய பராபரனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினாரென்றான்.

௨௧ அப்பொழுது இசாக்கு யாக்கோபுடனே, என் மகனே, நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல்லவோ என்று நான் உன்னைத் தடவிப்பார்க்கக் கிட்டிவாவென்றான்.

Digitized by Google

௨௨ யாக்கோபு தன் தகப்பனாகிய இசாக்கண்டையிலே கிட்டிப்போனான்; அவன் இவனைத் தடவிச் சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகளென்று சொல்லி,

௨௩ இவன் கைகள் இவன் சகோதரனாகிய ஏசாவின் கைகளைப்போல ரோமமானபடியினாலே, இவனை அறியாதேபோய், இவனை ஆசீர்வதித்து,

௨௪ நீ என் குமாரனாகிய ஏசாதானோ என்றான்; இவன் நான்தானென்றான்.

௨௫ அப்பொழுது அவன் என் குமாரனாகிய நீ வேட்டையாடினதிலே நான் புசித்து என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கு, என் கிட்டக் கொண்டுவாவென்றான்; அவன் கிட்டக் கொண்டுவந்தான்; அப்பொழுது அவன் புசித்தான்; பிற்பாடு திராட்சப்பழ இரசம் அவனுக்குக் கொண்டுவந்தான், அவன் குடித்தான்.

௨௬ அப்பொழுது இவன் தகப்பனாகிய இசாக்கு இவனோடே, என் மகனே, நீ கிட்டிவந்து என்னை முத்தம்செய்யென்றான்.

௨௭ இவன் கிட்டிவந்து அவனை முத்தம் செய்தான்; அப்பொழுது அவன் இவன் வஸ்திரங்களின் வாசனையை முகந்து, இவனை ஆசீர்வதித்துச் சொன்னதாவது: இதோ என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப்போலிருக்கின்றது.

௨௮ *பராபரன் உனக்கு வானத்துப் பனியினும் பூமியின் புஷ்டியிலும் கொடுத்துத் திரள்தானியத்தையும் திராட்சப்பழ இரசத்தையும் கட்டளையிடுவாராக. *எபி. ௰௧. ௨௰.

௨௯ சனசதளங்கள் உன்னைச் சேவிக்கவும் சாதிகள் உன்னை வணங்கவும்கடவது; *உன் சகோதரருக்கு எசமானனாயிரு; உன் தாயின்பிள்ளைகள் உன்னை வணங்கக்கடவர்கள்; உன்னைச் †சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாயிருப்பார்களாக என்றான். *௨௫. ௨௩. †௰௨. ௩. ௪ மோ. ௨௪. ௯.

௩௰ ¶ இசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்துத் தீர்ந்தபொழுது சம்பவித்ததேதென்றால், யாக்கோபு தன் தகப்பனாகிய இசாக்கின் முகத்தைவிட்டுப் புறப்பட்டவுடனே, அவன் சகோதரனாகிய ஏசா வேட்டையாடிக்கொண்டுவந்தான்.

௩௧ இவனும் ருசியுள்ள பதார்த்தத்தைப் பண்ணி, தன் தகப்பனண்டைக்குக் கொண்டுவந்து, தன் தகப்பனுடனே, உம்முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படிக்கு, என் தகப்பனார் எழுந்திருந்து, தம்முடைய குமாரன் வேட்டையாடினதிலே புசிப்பாராகவென்றான்.

௩௨ அப்பொழுது அவன் தகப்பனாகிய இசாக்கு அவனுடனே, நீ யார் என்றான்; அதற்கவன், நான் உமக்கு முதல்பிறந்த குமாரனாகிய ஏசாவென்றான்.

௩௩ அப்பொழுது இசாக்கு மகா அதிர்வாய் அதிர்ந்து சொன்னதாவது: வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வாரரததற்கு முன்னே நான் அவை எல்லாவற்றிலும் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனுமாய் இருப்பானென்றான்.

௩௪ ஏசா தன் தகப்பனுடைய வார்த்தைகளைக் கேட்டபொழுது, *மகா உரத்த கசப்பான சத்தமாய் அலறி, தன் தகப்பனோடே, என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியுமென்றான். *எபி. ௰௨. ௰௭.

௩௫ அதற்கவன், உன் சகோதரன் தந்திரமாய் வந்து உன்னுடைய ஆசீர்வாதத்தை எடுத்துக்கொண்டானென்றான்.

௩௬ அப்பொழுது இவன், அவன் பெயர் யாக்கோபு என்னப்படுகிறது சரி அல்லவோ? அதேனென்றால் இத்தோடே இரண்டுமுறை என்னைக் கீழ்ப்படுத்தினான்; என் *முதற்பிறப்புச் சுதந்தரத்தை எடுத்துக்கொண்டான்; இதோ என் ஆசீர்வாதத்தையும் இப்பொழுது எடுத்துக்கொண்

Digitized by Google

டானென்று சொல்லி, நீர் எனக்கு ஆசீர்வாதத்தை வைத்துவைத்ததில்லையோ என்றான். *௨௫. ௩௩.

௩௭ இசாக்கு ஏசாவுக்குப் பிரதியுத்தாரமாக, இதோ நான் அவனை உனக்கு எசமானாக வைத்தேன்; அவன் சகோதரனையெல்லாம் அவனுக்கு ஊழியக்காரராகக் கொடுத்து, அவனைத் தானியத்தினாலும் திராட்சப்பழ இரசத்தினாலும் ஆதரித்தேனே, இப்பொழுதும் உனக்கு நான் என்ன செய்யலாம் என் மகனே என்றான்.

௩௮ ஏசா தன் தகப்பனோடே, என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதம்தான் உமக்கிருக்கிறதோ? என்னையும் ஆசீர்வதியும் என் தகப்பனே என்று ஏசா சொல்லி, தன் சத்தத்தை உயர்த்தி அழுதான்.

௩௯ அப்பொழுது அவன் தகப்பனாகிய இசாக்கு அவனுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: இதோ உன் குடியிருப்புப் பூமியின் புஷ்டியோடும் உயர வானத்திலிருந்திறங்கும் பனியோடுமிருக்கும்.

௪௰ உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து உன் சகோதரனைச் சேவிப்பாய்; *நீ மேற்கொள்ளும்காலம் வரும்பொழுதோவெனில், நீ உன் கழுத்திலிருக்கிற அவனுடைய நுகத்தடியை உதறிப்போடுவதுண்டென்றான். *௨ இரா. ௮. ௨௰.

௪௧ ¶ ஏசாவோவெனில் யாக்கோபைத் தன் தகப்பன் அவனை ஆசீர்வதித்த ஆசீர்வாதத்தின் நிமித்தம் பகைத்து, என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாள்கள் சமீபிக்கும்; அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேனென்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டான்.

௪௨ ஆனால் ரெபேக்காளுக்கு அவனுடைய மூத்தகுமாரனாகிய ஏசாவின் வார்த்தைகள் அறிவிக்கப்பட்டன; அப்பொழுது அவன் தன் இளையகுமாரனாகிய யாக்கோபை அழைத்தனுப்பி, அவனோடே சொன்னதாவது: இதோ உன் சகோதரனாகிய ஏசா உன்னைக் கொன்றுபோட நினைக்கிறதினாலே தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான்.

௪௩ இப்பொழுதும் என் மகனே, நீ என் சொற்படிகேட்டு, எழுந்து புறப்பட்டு, ஆரானிலிருக்கிற என் சகோதரனாகிய லாபானண்டைக்கோடிப்போய்,

௪௪ உன் சகோதரனுடைய உக்கிரம் ஆறுமமட்டும் சிலநாள் அவனண்டையிலே,

௪௫ உன் சகோதரனுடைய கோபம் உன்னைவிட்டு நீங்கும்மட்டாகவும், நீ தனக்குச் செய்ததை அவன் மறக்கும்மட்டாகவும் இரு; பிற்பாடு அவ்விடத்திலிருந்து உன்னை அழைத்தனுப்புவேன்; நான் ஒரே நாளிலே உங்கள் இருவரையும் ஏன் இழந்துபோகவேண்டும் என்றாள்.

௪௬ பிற்பாடு ரெபேக்காள் இசாக்குடனே, *ஏத்தின் குமாரத்திகளைத்தொட்டு, என் சீவன் எனக்கு அரோசிக்கிறது; இந்தத் தேசத்துக் குமாரத்திகளாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு இவர்களுக்கொத்த பெண்ணைக்கொண்டால், எனக்குச் சீவன் ஏதுக்கென்றாள். *௨௬. ௩௪, ௩௫.

௨௮. அதிகாரம்.

அப்பொழுது இசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனுக்குக் கற்பித்துச் சொன்னதாவது: *நீ கானான் குமாரத்திகளில் பெண்ணைக்கொள்ளாமல், *௨௪. ௩.

௨ எழுந்து புறப்பட்டு, பதான்அராமிலிருக்கிற உன் தாயின் தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளிலே பெண்ணைக்கொள்.

௩ ஆனால் சர்வத்திற்கும் வல்ல பராபரன் உன்னை ஆசீர்வதித்து, நீ சனசதனங்களான கூட்டமாகும்படிக்கு உன்னைப் பலுகவும், பெருகவும் பண்ணி,

௪ பராபரன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ள *ஆபிர

Digitized by Google

காமுடைய ஆசீர்வாதத்தை உனக்கும்,
உன்னோடேகூட உன் வித்துக்கும் கொடுக்
கக்கடவரென்றுசொல்லி, *௰௨. ௩.
௫ இசாக்கு யாக்கோபை அனுப்புவித்
தான்; அப்பொழுது இவன் பதான்அரா
மிலிருக்கும் சூரியனாகிய பேத்துவேலு
டைய குமாரனும் தனக்கும் ஏசாவுக்கும்
தாயாகிய ரெபேக்காளின் சகோதரனுமான
லாபானண்டைக்குப் போகப் புறப்பட்
டான்.
௬ ¶ இசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்
து, அவனைப் பதான்அராமுக்கு அங்கே
ஒரு பெண்ணைக்கொள்ள அனுப்பினதை
யும், அவனை ஆசீர்வதிக்கையில் நீ கானான்
குமாரத்திகளில் பெண்ணைக்கொள்ளாயாக
வென்று அவனுக்குக் கற்பித்ததையும்,
௭ யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன்
தாய்க்கும் கீழ்ப்படிந்து பதான்அராமுக்
குப் புறப்பட்டுப் போனதையும், ஏசா கண்
டான்.
௮ கானான் குமாரத்திகள் தன் தகப்பனா
கிய இசாக்கின் பார்வைக்குப் பொல்லாத
வர்களென்றதை ஏசா கண்டபடியினாலே,
௯ ஏசா இஸ்மவேலண்டைக்குப்போய்,
தனக்கிருக்கிற பெண்சாதிகள்தவிர, ஆபிர
காமுடைய குமாரனாகிய இஸ்மவேலின்
குமாரத்தியும் நேப்யோத்தின் சகோதரியு
மாகிய மகலாத்தை விவாகம்பண்ணினான்.
௰ ¶ யாக்கோபு பேர்செபாவைவிட்டுப்
புறப்பட்டு, ஆரானுக்குப்போகப் பயணம்
பண்ணி,
௰௧ ஓரிடத்திலே வந்து சூரியன் அஸ்த
மித்தபடியினாலே, அங்கே இராத்தங்கி,
அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து,
தன் தலைமாட்டிலே போட்டு, அவ்விடத்தி
லே படுத்துக்கொண்டு,
௰௨ கண்ட சொப்பனமாவது: இதோ
ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்
தது; அதின் தலைப்புறம் வானத்தை எட்டி
யிருந்தது; இதோ அதிலே *பராபரனு
டைய தூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிற
வர்களுமாயிருந்தார்கள். *யோவா. ௧. ௫௧.
௰௩ இதோ அதின்மீதில் கர்த்தர் நின்று
கொண்டிருந்து சொன்னதாவது: நாம்
உன் தகப்பனாகிய ஆபிரகாமின் பராபர
னும் இசாக்கின் பராபரனுமாகிய கர்த்தர்;
நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும், உன்
வித்துக்கும் தருவோம்.
௰௪ உன் வித்துப் *பூமியின் தூளைப்
போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கே
யும், வடக்கேயும், தெற்கேயும், பரம்பிப்
போவாய்; †உன்னிலும், உன் வித்திலும்
பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்
கப்படும். *௰௩. ௰௬. †௰௨. ௩.
௰௫ இதோ நாம் உன்னோடேகூட இருந்
து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக்
காத்து, இந்தத் தேசத்திற்கு உன்னைத் திரு
ம்பி வரப்பண்ணுவோம்; ஏனெனில் நாம்
உனக்குச் சொன்னதை நாம் செய்யும்
அளவும் உன்னைக் கைவிடோமென்றார்.
௰௬ ¶ யாக்கோபு நித்திரை தெளிந்து விழி
த்தபொழுது, மெய்யாகவே கர்த்தர் இந்த
ஸ்தலத்தில் இருக்கிறார், இதை நான் அறி
யாதிருந்தேனென்றான்.
௰௭ அவன் பயந்து, இந்த ஸ்தலம் எத்த
னை பயப்படத்தக்கதாயிருக்கின்றது; இது
பராபரனுடைய வீடொழிய வேறொன்றல்
ல, இது வானத்தின் வாசலென்று சொல்லி,
௰௮ யாக்கோபு அதிகாலமே எழுந்திருந்
து, தன் தலைமாட்டிலே போட்டுக்கொண்டி
ருந்த கல்லை எடுத்துக்கொண்டு அதைத்
தூணாக நிறுத்தி, அதின்மீதில் எண்ணெ
யை வார்த்து,
௰௯ அந்த ஸ்தலத்திற்குப் பேத்தேலென்று
பெயரிட்டான்; அவ்வூருக்கு முந்தின பெ
யரோவென்றால், லூஸ் என்பது.
௨௰ யாக்கோபு ஒரு பொருத்தனையைப்
பண்ணிச் சொன்னதாவது: பராபரன் என்
னோடேகூட இருந்து, நான் நடக்கிற இந்த
வழியிலே என்னைக் காப்பாற்றிப் புசிக்க
அப்பமும், உடுக்க வஸ்திரமும் எனக்குக்
கொடுத்து,

Digitized by Google

௨௧ என்னை என் தகப்பன் வீட்டுக்குச்
சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணி,
இப்படியே கர்த்தர் எனக்குப் பராபரனு
யிருந்தாராகில்,
௨௨ நான் தூணாக நிறுத்தின இந்தக் கல்
பராபரனுடைய வீடாகும்; தேவரீர் எனக்
குக் கொடுப்பதெல்லாவற்றிலும் பத்தி
லொன்றை உமக்குச் செலுத்துவேனென்
றான்.

௨௯. அதிகாரம்.

பிற்பாடு யாக்கோபு கால் எட்டி நடந்து,
கிழக்குத் திசையாரின் தேசத்தில் வந்தான்.
௨ அப்பொழுது இதோ வயல்வெளியி
லே ஒரு கிணற்றையும் அங்கே அதின்
அருகே மடக்கியிருக்கிற மூன்று ஆட்டுமந்
தைகளையும் கண்டான்; ஏனெனில் அந்தக்
கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர்
மொண்டு காட்டுவார்கள்; கிணற்றினுடை
ய வாயின்மேலோவென்றால், ஒரு பெரி
ய கல் வைக்கப்பட்டிருந்தது.
௩ அவ்விடத்தில் மந்தைகளெல்லாம் சே
ர்ந்ததற்குப் பிற்பாடு அவர்கள் கிணற்று
வாயின்மேலிருக்கும் கல்லைப்புரட்டி, ஆடு
களுக்குத் தண்ணீர் காட்டி, மறுபடியும்
கல்லை அந்தத் தானத்தில் கிணற்றுவாயின்
மேலே வைப்பார்கள்.
௪ யாக்கோபு அவர்களுடனே, என் சகோ
தரரே, நீங்கள் எவ்விடத்தாரென்றான்; அ
வர்கள் நாங்கள் ஆரானூர் மனிதர்களென்
றார்கள்.
௫ அப்பொழுது அவர்களோடே, நாகோ
ரின் குமாரனாகிய லாபானை அறிவீர்களோ
என்றான்; அறிவோமென்றார்கள்.
௬ அப்பொழுது அவர்களை, அவன் சுகமா
யிருக்கிறானோ என்று கேட்டான்; அவர்கள்,
சுகமாயிருக்கிறானென்றும், அதோ அவன்
குமாரத்தியாகிய ராகேல் ஆடுகளை ஓட்டி
வருகிறாளென்றும் சொன்னார்கள்.
௭ அப்பொழுது அவன், இதோ, இன்னம்
வெகு பொழுதிருக்கின்றது; இது மந்தை
சேர்க்கிற வேளை அல்லவே, ஆடுகளுக்குத்
தண்ணீர் காட்டிப்போய் மேயுங்களென்
றான்.
௮ அதற்கவர்கள் எல்லா மந்தைகளும்
சேருமட்டும் எங்களுக்குக் கூடாது; கிண
ற்று வாயின்மேலிருக்கும் கல்லைப் புரட்டு
வார்கள்; அதற்குப்பிறகு மந்தைக்குத் தண்
ணீர்காட்டுகிறோமென்றார்கள்.
௯ ¶ அவன் இவர்களோடே இன்னம் பே
சிக்கொண்டிருக்கையில், ராகேல் தன் த
கப்பனுடைய ஆடுகளோடே வந்தாள்;
ஏனெனில் அவைகளை மேய்க்கிறவளாயி
ருந்தாள்.
௰ *சம்பவித்ததேதென்றால், யாக்கோபு
தன் தாயின் சகோதரனான லாபானுடை
ய குமாரத்தியாகிய ராகேலையும் தன் தாயின்
சகோதரனாகிய லாபானின் ஆடுகளையும் க
ண்டபொழுது, யாக்கோபு சேர்ந்துபோய்,
கிணற்றுவாயின்மேலிருந்த கல்லைப் புரட்
டி, தன் தாயின் சகோதரனாகிய லாபானின்
ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.

*௨ மோ. ௨. ௰௭.

௰௧ பிற்பாடு யாக்கோபு ராகேலை முத்தம்
செய்து, சத்தமிட்டழுது,
௰௨ தான் அவள் தகப்பனுடைய மருமக
னென்றும், தான் ரெபேக்காளின் குமார
னென்றும், யாக்கோபு ராகேலுக்கு அறிவித்
தான்; அப்பொழுது அவள் ஓடி, தன்
தகப்பனுக்கு அறிவித்தாள்.
௰௩ அப்பொழுது சம்பவித்ததேதென்றா
ல், லாபான் தன் சகோதரியின் குமாரனா
கிய யாக்கோபுடைய செதியைக் கேட்ட
பொழுது, அவன் இவனுக்கெதிர்கொண்
டோடி, இவனைக் கட்டிக்கொண்டு முத்தம்
செய்து, தன் வீட்டுக்கு அழைத்துப்போனா
ன்; அப்பொழுது இவன் லாபானுக்கு இந்
தக் காரியங்களை எல்லாம் விவரித்தான்.
௰௪ அப்பொழுது லாபான் இவனுடனே,
நீ என்னெலும்பும் என் மாம்சமுமாமே
என்றான்; அவனண்டையிலே இவன் ஒரு
மாதக்காலம் இருந்தபிற்பாடு,

Digitized by Google

௰௫ ¶ லாபான் யாக்கோபுடனே, நீ என் மருமகனானதினாலே, இலவசமாய் எனக்கு வேலைசெய்யவேண்டுமோ? உனக்குக் கூலி என்னவென்று எனக்குச் சொல்லென்றான்.

௰௬ லாபானுக்கோவெனில், இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள்; மூத்தவள்பேர் லேயாள், இளையவள்பேர் ராகேல்.

௰௭ ஆனால் லேயாளுடைய கண்கள் கூச்சப் பார்வையாயிருந்தன; ராகேலோவெனில், அந்தமுள்ள ரூபமும் அழகான பார்வையுமாயிருந்தாள்.

௰௮ யாக்கோபு ராகேல்பேரில் பிரியப்பட்டு, உம்முடைய இளையகுமாரத்தியாகிய ராகேலுக்காக உமக்கு ஏழுவருஷம் வேலைசெய்வேனென்றான்.

௰௯ அதற்கு லாபான், நான் அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப் பார்க்கிலும், அவளை உனக்குக் கொடுக்கிறது தாவிலை, என்னோடே தரித்திருவென்றான்.

௨௰ அப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழுவருஷம் வேலைசெய்தான்; அவைகள் அவனுக்கு இவள்பேரிலிருந்த பிரியத்தினாலே கொஞ்சநாளாகக் கண்டது.

௨௰௧ ¶ பிற்பாடு யாக்கோபு லாபானோடே, என் பெண்சாதியை எனக்குத் தாரும்; ஏனெனில், நான் அவளிடத்தில் பிரவேசிக்க என் நாள்கள் நிறைவேறினவென்றான்.

௨௰௨ அப்பொழுது லாபான் அந்தத்தலத்து மனிதரை எல்லாம்கூட்டி விருந்துபண்ணினான்.

௨௰௩ ஆனால் இராத்திரியிலே சம்பவித்ததேதெனில், இவன் தன் குமாரத்தியாகிய லேயாளை அவனண்டைக்கு அழைத்துப் போய் விட்டான்; இவளிடத்தில் அவன் உட்பிரவேசித்தான்.

௨௰௪ தன் குமாரத்தியாகிய லேயாளுக்கு லாபான் தன் வேலைக்காரியாகிய சில்பாளை வேலைக்காரியாகக் கொடுத்தான்.

௨௰௫ சம்பவித்ததேதென்றால், காலமே இதோ அவள் லேயாள்தானே; அப்பொழுது அவன் லாபானோடே, ஏன் இதை எனக்குச்செய்தீர்? ராகேலுக்காக அல்லவோ உம்மிடத்திலே வேலைசெய்தேன்; பின்னையேன் என்னை வஞ்சகம்பண்ணினீர் என்றான்.

௨௰௬ லாபான் சொன்னதாவது: இளையவளை மூத்தவளுக்கு முன்னே கொடுக்கிறது எங்கள் தலத்து நடபடியல்ல.

௨௰௭ இவளுடைய வாரத்தை நிறைவேற்று; அப்பொழுது நீ இன்னம் வேறு ஏழுவருஷம் என்னிடத்தில் செய்யும் வேலைக்காக அவளையும் உனக்குக் கொடுப்பேனென்றான்.

௨௰௮ ¶ யாக்கோபு இப்படிச்செய்து, இவளுடைய வாரத்தை நிறைவேற்றினான்; அப்பொழுது தன் குமாரத்தியாகிய ராகேலையும் அவனுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தான்.

௨௰௯ தன் குமாரத்தியாகிய ராகேலுக்கு லாபான் தன் வேலைக்காரியாகிய பில்காளை வேலைக்காரியாகக் கொடுத்தான்.

௩௰ அவன் ராகேலிடத்திலும் பிரவேசித்து லேயாளைப்பார்க்கிலும் ராகேலைச் சிநேகித்து, இன்னம் வேறே ஏழுவருஷம் அவனிடத்திலே வேலைசெய்தான்.

௩௰௧ ¶ லேயாள் பகைக்கப்பட்டவளென்று கர்த்தர் கண்டபொழுது, அவளுடைய கர்ப்பத்தைத் திறந்தார்; ராகேலோவெனில் மலடியாயிருந்தாள்.

௩௰௨ லேயாள் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப்பெற்று அவனுக்கு ரூபனென்று பெயரிட்டாள்; ஏனெனில் கர்த்தர் என் சிறுமையைப்பார்த்தார்; ஆகையால் இப்பொழுது என் புருஷன் என்னைச் சிநேகிப்பாரென்றாள்.

௩௰௩ அப்புறம் அவள் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப் பெற்று, நான் பகைக்கப்பட்டவளென்று கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குக் கொடுத்தாரென்று சொல்லி. அவனுக்குச் சிமையோனென்று பெயரிட்டாள்.

Digitized by Google

௩௪ அப்புறம் அவள் கர்ப்பம்தரித்து,
ஒரு குமாரனைப்பெற்று, இப்பொழுது இந்
தமுறை என் புருஷன் என்னோடே சேர்
வார்; ஏனெனில் அவருக்கு மூன்று குமா
ரரைப் பெற்றேனென்று சொல்லி, அவ
னுக்கு லேவியென்று பெயரிட்டாள்.
௩௫ அப்புறம் அவள் கர்ப்பம்தரித்து
ஒரு குமாரனைப்பெற்று, இப்பொழுது கர்த்
தரைத் துதிப்பேனென்று சொல்லி, அவ
னுக்கு யூதாவென்று பெயரிட்டாள்; பிற்
பாடு அவள் பெறுகிறது நின்றது.

௩௰. அதிகாரம்.

ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளை
களைப் பெறாததைக் கண்டாள்; ஆனது
கொண்டு ராகேல் தன் சகோதரியின்பே
ரிலே பொறாமையாகி, யாக்கோபுடனே,
எனக்குப் பிள்ளைகளைக் கொடும்; இல்லா
விட்டால் நான் மரித்தவளாவேனே என்
றாள்.
௨ அப்பொழுது யாக்கோபுக்கு ராகே
லின்மேல் கோபம்மூண்டு, உனக்குக் கர்ப்
பக்கனியைக் கட்டளையிடாத பராபரனுக்
கு நான் நிகரோ என்றான்.
௩ அப்பொழுது அவள், இதோ என் வே
லைக்காரியாகிய பில்க்காளிருக்கிறாள்; அ
வள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும்,
*அவளாலாகிலும் என் வீடு கட்டப்பட
வும், அவளிடத்தில் பிரவேசியுமென்று சொ
ல்லி, *௧ மோ. ௰௬. ௨.
௪ அவனுக்குத் தன் வேலைக்காரியாகிய
பில்க்காளைப் பெண்சாதியாகக் கொடுத்
தாள்; அப்படியே யாக்கோபு அவளிடத்
தில் பிரவேசித்தான்.
௫ ¶ பில்க்காள் கர்ப்பம்தரித்து யாக்கோ
புக்கு ஒரு குமாரனைப்பெற்றாள்.
௬ அப்பொழுது ராகேல், பராபரன் என்
வழக்கைத்தீர்த்து என் சத்தத்தையும்கேட்
டு, எனக்கு ஒரு குமாரனைக்கொடுத்தாரென்
று சொல்லி, அவனுக்குத் தாணென்று பெ
யரிட்டாள்.
௭ மறுபடியும் ராகேலின் வேலைக்காரியா
கிய பில்க்காள் கர்ப்பம்தரித்து யாக்கோ
புக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.
௮ அப்பொழுது ராகேல், நான் தேவ
போராட்டமாய் என் சகோதரியோடே
போராடிமேற்கொண்டேனென்றுசொல்லி,
அவனுக்கு நப்தலியென்று பெயரிட்டாள்.
௯ ¶ லேயாள் தான் பெறுகிறது நின்றதெ
ன்று கண்டு, தன் வேலைக்காரியாகிய சில்ப்
பாளை அழைத்து, அவளை யாக்கோபுக்குப்
பெண்சாதியாகக் கொடுத்தாள்.
௰ லேயாளின் வேலைக்காரியாகிய சில்ப்
பாள் யாக்கோபுக்கு ஒரு குமாரனைப்பெற்
றாள்.
௰௧ அப்பொழுது லேயாள், ஏராளமாகி
றதென்றுசொல்லி, அவனுக்குக் காத்தென்
று பெயரிட்டாள்.
௰௨ பிற்பாடு லேயாளின் வேலைக்காரியா
கிய சில்ப்பாள் யாக்கோபுக்கு இரண்டாம்
குமாரனைப் பெற்றாள்.
௰௩ அப்பொழுது லேயாள், என் பாக்
கியத்திற்காயிற்று; ஏனெனில் குமாரத்தி
கள் என்னைப் பாக்கியவதி என்பார்க
ளென்று சொல்லி, அவனுக்கு ஆசேர் என்
று பெயரிட்டாள்.
௰௪ ¶ கோதுமை அறுப்பு நாள்களிலே
ரூபன் புறப்பட்டு வெளியிலே தூதாயீக
ளைக் கண்டுபிடித்து, அவைகளைத் தன் தா
யாகிய லேயாளண்டைக்குக் கொண்டுவந்
தான்; அப்பொழுது ராகேல் லேயாளுட
னே, உன் குமாரனுடைய தூதாயீகளில்
எனக்குக் கொஞ்சம் தாவென்றாள்.
௰௫ அப்பொழுது அவள் இவளுடனே,
நீ என் புருஷனை எடுத்துக்கொண்டது
கொஞ்சக்காரியமோ, என் குமாரனுடைய
தூதாயீகளையும் எடுத்துக்கொள்வாயோ
என்றாள்; அப்பொழுது ராகேல், உன்
குமாரனுடைய தூதாயீகளுக்கிடாக இன்று
இரவிற்கு அவர் உன்னோடே சயனம்பண்
ணட்டுமென்றாள்.
௰௬ யாக்கோபு சாயங்காலத்திலே வெ

Digitized by Google

வெளியிலிருந்து வருகையில் லேயாள் புறப்
பட்டு அவனுக்கு எதிர்கொண்டுபோய்,
என்னிடத்தில் வருவீராக; ஏனெனில் என்
குமாரனுடைய தூதாயிகளாலே உம்மைச்
சம்பாதித்தேனென்றாள்; ஆகையால் அன்
று இராத்திரியில் அவளோடே சயனித்
தான்.
௰௭ ¶ பராபரன் லேயாளைக் கேட்டருளி
னார்; அவள் கர்ப்பம்தரித்து யாக்கோபுக்
கு ஐந்தாம் குமாரனைப் பெற்றாள்.
௰௮ அப்பொழுது லேயாள், நான் என்
வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொ
டுத்த பலனைப் பராபரன் எனக்குத் தந்தா
ரென்றுசொல்லி, அவனுக்கு இசக்காரென்
று பெயரிட்டாள்.
௰௯ அப்புறம் லேயாள் கர்ப்பம்தரித்
து யாக்கோபுக்கு ஆறாம் குமாரனைப்பெற்
றாள்.
௨௰ அப்பொழுது லேயாள், பராபரன்
எனக்கு நல்ல இவைத்தந்தார்; இந்தமு
றை என் புருஷன் என்னுடனே வாசமா
வார்; ஏனெனில் அவருக்கு ஆறு குமார
ரைப் பெற்றேனென்று சொல்லி, அவனுக்
குச் சேபுலோனென்று பெயரிட்டாள்.
௨௧ பிற்பாடு அவள் ஒரு குமாரத்தி
யைப்பெற்று, அவளுக்குத் தீனாளென்று
பெயரிட்டாள்.
௨௨ ¶ ஆனால் பராபரன் ராகேலை நி
னைத்தார்; அவளைப் பராபரன் கேட்டருளி,
அவள் கர்ப்பத்தைத் திறந்தார்.
௨௩ அவள் கர்ப்பம்தரித்து ஒரு குமார
னைப்பெற்று, *பராபரன் என் நிந்தையை
நீக்கிவிட்டாரென்றும், *லூக். ௧. ௨௫.
௨௪ கர்த்தர் எனக்கு இன்னம் ஒரு கு
மாரனைக் கொடுப்பாராகவென்றும் சொல்
லி, அவனுக்கு யோசேப்பென்று பெயரிட்
டாள்.
௨௫ ¶ அப்பால் சம்பவித்ததேதெனில்,
ராகேல் யோசேப்பைப் பெற்றபிற்பாடு,
யாக்கோபு லாபானோடே சொன்னதாவது:
நான் என் தானத்திற்கும் என் தேசத்
திற்கும் போக என்னை அனுப்புவியும்.
௨௬ நான் உமக்கு ஊழியம்செய்து சம்
பாதித்த என் பெண்சாதிகளையும் என் பிள்
ளைகளையும் எனக்குத் தாரும்; நான் போ
வேன்; ஏனெனில் நான் உம்மிடத்தில் சே
வித்த சேவகத்தை நீர் அறிந்திருக்கிறீரென்
றான்.
௨௭ ¶ அப்பொழுது லாபான் அவனோடே
சொன்னதாவது: உன் கண்களில் எனக்
குத் தயவுகிடைத்ததேயானால் இரு; உன்
நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தா
ரென்கிறது எனக்குத் தெரியவந்தது.
௨௮ உன் சம்பளம் இன்னதென்று எனக்
குக் குறித்துச் சொல், நான் தருவே
னென்றான்.
௨௯ ¶ அப்பொழுது அவன் இவனோடே
சொன்னதாவது: நான் உம்மை எப்படிச்
சேவித்தேனென்றும், உம்முடைய மந்
தை என்கிட்ட எப்படி இருந்ததென்றும்
அறிந்திருக்கிறீர்.
௩௰ ஏனெனில் எனக்குமுன் உமக்கி
ருந்தது கொஞ்சம், அது திரளாயிற்று;
கர்த்தர் உம்மை என் கால்வருத்தத்தினால்
ஆசீர்வதித்தார்; இப்பொழுதும் நான் என்
வீட்டுக்குச் சம்பாதித்துக்கொள்வது எப்
பொழுதென்றான்.
௩௧ அப்பொழுது இவன், நான் உனக்
கென்ன கொடுக்கவேண்டும் என்றான்.
யாக்கோபு சொன்னதாவது: நீர் எனக்கு
ஒன்றும் கொடுக்கவேண்டாம்; நான் சொ
ல்வதை நீர் எனக்குச் செய்தால், உம்மு
டைய மந்தையைத் திரும்ப மேய்த்துக்
காப்பேன்.
௩௨ நான் இன்றைக்கு உம்முடைய மந்
தையையெல்லாம் கடந்துவந்து, அதிலே
இருக்கிற ஆடுகளில் புள்ளியுள்ளதும்,
மறுப்பற்றினதுமானயாவையும், கறுப்பான
யாவையும், வெள்ளாடுகளில் மறுப்பற்றி
னதும், புள்ளியுள்ளதுமான யாவையும் பி
ரித்துப்போடுவேன்; அப்படிக்கொத்தவை
இனி என்னுடைய சம்பளமாயிருப்பது.

Digitized by Google

௩௩ அப்படியே இனிமேல் என் சம்பளக்காரியம் உமக்கு முன்பாகத் திரத்தக்கதாக நீர் வரும்பொழுது, என்னுடைய நீதி எனக்குப் பேசும்; வெள்ளாடுகளில் புள்ளியில்லாததும், மறுப்பற்றியிராததும், ஆடுகளில் கறுப்பில்லாததுமானவை எவையாகிலும் என்னிடத்திலே இருந்தால், அவை திருடினவைகளாயிருக்குமென்றான்.

௩௪ ¶ அப்பொழுது லாபான், இதோ உன் வார்த்தையின்படியானால் வாசியென்று சொல்லி,

௩௫ அந்நாளிலே கலப்பு நிறமுள்ளதும் மறுப்பற்றினதுமான கடாக்களையும், புள்ளியுள்ளதும் மறுப்பற்றினதுமான எல்லா வெள்ளாடுகளையும், ஆடுகளில் வெண்மை பற்றினவைகளெல்லாவற்றையும், கறுப்பானவைகளெல்லாவற்றையும், பிரித்துக்கொண்டு, தன் குமாரர்கையில் ஒப்புவித்து,

௩௬ தனக்கும் யாக்கோபுக்கும் மூன்று நாள் பயணதூரம் வைத்தான்; லாபானுடைய மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்த்தான்.

௩௭ ¶ அப்பொழுது யாக்கோபு பச்சையாயிருக்கிற புன்னைமரமும், அவேலான் கொட்டைச்செடியும், கஸ்தானியக் கொட்டை மரமுமான கொப்புகளை வாங்கிக்கொண்டு, கரணைகரணையாய் வெண்மைகாணப் பட்டையை உரித்து,

௩௮ தான் உரித்த கொப்புகளை ஆடுகள் குடிக்கவருகிற கால்வாய்களிலும் தண்ணீர்த்தொட்டிகளிலும், ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைத்தான்; ஏனென்றால் அவைகள் குடிக்கவருகையில் பொலியும்.

௩௯ ஆடுகள் கொப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியினாலே, ஆடுகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் மறுப்பற்றினதுமான குட்டிகளைப்போட்டன.

௪௰ அந்த ஆட்டுக்குட்டிகளை யாக்கோபு பிரித்து, ஆடுகளை லாபானுடைய மந்தையிலிருக்கும் கலப்பு நிறமானவைகளுக்கும் கறுப்பானவைகள் எல்லாவற்றிற்கும் எதிராக நிறுத்தி, தனக்குத் தனிப்புற மந்தைகளை வைத்துக்கொண்டு, இவைகளை லாபானின் மந்தையோடே வைக்காதிருந்தான்.

௪௧ சம்பவித்ததேதென்றால், காலத்திலே பொலிகிற ஆடுகள் பொலியும்பொழுதெல்லாம் யாக்கோபு அந்தக் கொப்புகளைக் கால்வாய்களில் ஆடுகளின் கண்களுக்கு முன்பாக அவைகள் கொப்புகளுக்கெதிரே பொலியும்படிக்குப் போட்டுவைப்பான்.

௪௨ ஆடுகள் காலம் பிந்திப் பொலியும்பொழுதோவெனில், அவைகளைப் போடாதேபோனான்; ஆகையால் காலம் பிந்திப் பிறந்தவைகள் லாபானையும், காலத்திலே பிறந்தவைகளோவெனில், யாக்கோபையும் சேர்ந்தது.

௪௩ இந்தப்பிரகாரமாக இந்தப் புருஷன் மிகுதியும் பெருகினான்; அவனுக்குத் திரளாடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உண்டாயின.

௩௧. அதிகாரம்.

எங்கள் தகப்பனுக்குண்டானவைகளை எல்லாம் யாக்கோபு எடுத்துக்கொண்டானென்றும், எங்கள் தகப்பனுக்குண்டானதினாலே இந்த ஆஸ்தியை எல்லாம் சம்பாதித்தானென்றும், லாபானின் குமாரர் சொன்ன வார்த்தைகளை அவன் கேட்டான்.

௨ லாபானின் முகத்தை யாக்கோபு பார்த்தபொழுது, இதோ அது நேற்றும் முந்தநேற்றும் இருந்ததுபோலத் தனக்கிருந்ததில்லை என்று கண்டான்.

௩ ¶ கர்த்தரோவென்றால் யாக்கோபுடனே, உன் பிதாக்களின் தேசத்திற்கும் உன் இனத்தண்டைக்கும் திரும்பிப்போ; * உன்னோடேகூட இருப்போம் என்றார்.

*௧ மோ. ௨௮. ௧௫.

௪ அப்பொழுது யாக்கோபு ராகேலையும் லேயாளையும் வெளியிலே தன் மந்தையண்டைக்கழைத்தனுப்பி,

Digitized by Google

௫ இவர்களோடே சொன்னதாவது: உங்கள் தகப்பனுடைய முகம் நேற்றும் முந்தநேற்றும் இருந்ததுபோல எனக்கிருக்கவில்லை என்று நான் காண்கிறேன்; ஆனால் என் தகப்பனுடைய பராபரன் என்னோடேகூட இருந்தார்.

௬ உங்கள் தகப்பனுக்கு என் முழுப்பலத்தினாலும் ஊழியஞ்செய்தேனென்று நீங்கள் அறிவீர்கள்.

௭ உங்கள் தகப்பனோவெனில், என்னை எத்தி என் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினான்; ஆனால் எனக்குத் தீங்குசெய்யப் பராபரன் அவனுக்கு இடம்கொடுத்ததில்லை.

௮ புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாயிருக்குமென்று அவன் சொன்னபொழுது, மந்தையெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டது; கலப்புநிறமானவைகள் உன் சம்பளமாயிருக்குமென்று அவன் சொன்னபொழுதோவெனில், மந்தையெல்லாம் கலப்புநிறக் குட்டிகளைப் போட்டது.

௯ இந்தப்பிரகாரமாகப் பராபரன் உங்கள் தகப்பனுடைய மந்தையைப் பறித்து எனக்குக் கொடுத்தார்.

௰ ஆடுகள் பொலியும்காலத்திலே சம்பவித்ததேதென்றால், நான் சொப்பனத்தில் என் கண்களை ஏறெடுக்கும்பொழுது, இதோ ஆடுகளின்மேல் ஏறுகிற கடாக்கள் கலப்புநிறமானவைகளும் புள்ளியுள்ளவைகளும் பொட்டுள்ளவைகளுமாயிருந்ததென்று கண்டேன்.

௰௧ பராபரனுடைய தூதனவர் சொப்பனத்தில் என்னுடனே. யாக்கோபே என்றார்; இதோ இருக்கிறேனென்றேன்.

௰௨ அப்பொழுது அவர் சொன்னதாவது: உன் கண்களை ஏறெடுத்துப்பார்; ஆடுகளின்மேல் ஏறுகிற கடாக்களெல்லாம் கலப்புநிறமானவைகளும், புள்ளியுள்ளவைகளும், பொட்டுள்ளவைகளுமாயிருக்கின்றன; ஏனெனில் லாபான் உனக்குச் செய்கின்றவைகளையெல்லாம் கண்டோம்.

௰௩ *நீ தூணை அபிஷேகம்பண்ணி, நமக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பேத்தேலிலே உனக்குத் தரிசனையான பராபரன் நாம்தானே; இப்பொழுதும் நீ எழுந்து இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தின் தேசத்திற்குத் திரும்பிப் போ என்று சொன்னாரென்றான்.

*௧ மோ. ௨௮. ௰௩. ஷ.

௰௪ ¶ அப்பொழுது ராகேலும் லேயாளும் அவனுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: எங்கள் தகப்பன் வீட்டிலே எங்களுக்கு இனிப் பங்கும் சுதந்தரமும் உண்டோ?

௰௫ அவரால் நாங்கள் அந்நியராய் எண்ணப்பட்டதில்லையோ? ஏனெனில் அவர் எங்களை விற்று, எங்கள் பணத்தைத் தின்னவே தின்றார்.

௰௬ ஆகையால் பராபரன் எங்கள் தகப்பனிடத்தில் பறித்த ஈசுவரியமெல்லாம் எங்களுடையதும் எங்கள் பிள்ளைகளுடையதும்தானே; இப்பொழுதும் பராபரன் உம்மோடே சொன்னவை எல்லாவற்றையும் செய்யும் என்றார்கள்.

௰௭ ¶ அப்பொழுது யாக்கோபு எழுந்து, தன் பிள்ளைகளையும் தன் பெண்சாதிகளையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்கொண்டு,

௰௮ தன் மிருகஜீவன்கள் அனைத்தையும் தான் பதான்அராமிலே தேடிச் சம்பாதித்த தன்னுடைய மந்தை ஆஸ்தி எல்லாவற்றையும் கூட்டிக்கொண்டு, கானான்தேசத்திலே தன் தகப்பனாகிய ஈசாக்கண்டைக்குப் போகப் புறப்பட்டான்.

௰௯ லாபானோவெனில், தன் ஆடுகளை மயிர் கத்திரிக்கப் போயிருந்தான்; அந்தச் சமயத்திலே ராகேல் தன் தகப்பனுடைய விக்கிரகங்களைத் திருடிக்கொண்டாள்.

௨௰ அப்படியே யாக்கோபு, தான் ஓடிப்போகிறதைச் சூரியனாகிய லாபானுக்கு அறிவியாததினால், அவன் மனதைக் கள்வு செய்து,

௨௧ தனக்குண்டானவைகளை எல்லாம்

Digitized by Google

கூட்டிக்கொண்டு ஓடிப்போனான்; அவன்
எழுந்து ஆற்றைக்கடந்து, கீலேயாத் பர்
வதத்திற்கு நேராய்த் தன் முகத்தைத் திருப்
பிப்போனான்.
௨௨ ¶ ஆனால் யாக்கோபு ஓடிப்போனது
மூன்றாம் நாளிலே லாபானுக்கு அறிவிக்
கப்பட்டது.
௨௩ அப்பொழுது அவன் தன் சகோதர
ரைக் கூட்டிக்கொண்டு, ஏழுநாள் பயணம்
அவனைப் பின்தொடர்ந்து, கீலேயாத் பர்வ
தத்திலே அவனைக் கிட்டிச்சேர்ந்தான்.
௨௪ ஆனால் பராபரன் இராத்திரியிலே சூ
ரியனாகிய லாபானண்டைக்குச் சொப்ப
னத்திலே வந்து, அவனோடே, நீ யாக்கோ
போடே நலம்தப்பித் தீங்காய்ப் பேசாத
படிக்கு எச்சரிக்கையாயிருவென்றார்.
௨௫ லாபான் யாக்கோபைக் கிட்டிச்
சேர்ந்தான்; யாக்கோபு பர்வதத்திலே தன்
கூடாரத்தைப் போட்டிருந்தான்; லாபா
னும் தன் சகோதரரோடேகூடக் கீலேயாத்
பர்வதத்திலே கூடாரம்போட்டான்.
௨௬ ¶ அப்பொழுது லாபான் யாக்கோபோ
டே சொன்னதாவது: நீ என் மனதைக்
களவுசெய்து, என் குமாரத்திகளைப் பட்ட
யத்தினால் சிறைபிடித்தவர்களைப்போலக்
கொண்டுபோனது என்ன செய்கை?
௨௭ நீ ஓடிப்போவதை மறைத்து, எனக்
கு அதை அறிவியாமல் திருட்டளவாய் என்
னைவிட்டுப் போனதென்ன? நான் உன்னைச்
சந்தோஷத்தோடும், சங்கீதங்களோடும்,
மேளத்தோடும், சுரமண்டலத்தோடும், அ
னுப்புவேனே.
௨௮ என் பிள்ளைகளையும், என் குமாரத்தி
களையும் நான் முத்தம்செய்ய நீ இடங்கொ
டாதேபோனதென்ன? இப்பொழுதும் நீ
இப்படிச் செய்ததை மதியில்லாமல் செய்
தாய்.
௨௯ உங்களுக்குப் பொல்லாப்புச்செய்ய
என் கையிலே வல்லமை இருக்கும்; ஆ
னால், நீ யாக்கோபோடே நலம்தப்பித் தீங்
காய்ப் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு
வென்று உங்கள் தகப்பனுடைய பராபரன்
இராத்திரி என்னோடே சொன்னார்.
௩௰ இப்பொழுதும் உன் தகப்பனுடைய
வீட்டின்மேலுள்ள வாஞ்சையினாலே நீ பு
றப்பட்டுப் போகிறபொழுது, என் தேவர்
களை ஏன் திருடிக்கொண்டாய் என்றான்.
௩௧ ¶ யாக்கோபு லாபானுக்குப் பிரதியுத்
தாரமாகச் சொன்னதாவது: உம்முடைய
குமாரத்திகளை என்னிடத்திலிருந்து பறித்
துக்கொள்வீரோ என்று நான் பயப்பட்ட
தினாலே இப்படி வந்துவிட்டேன்.
௩௨ ஆனால் யாரிடத்தில் உம்முடைய தே
வர்களைக் கண்டுபிடிப்பீரோ, அவன் உயி
ரோடிருக்கவேண்டாம்; என் வசத்திலே
உம்முடையதாயிருக்கிறதேதென்று நீர் நம்
முடைய சகோதரருக்கு முன்பாகப் பார்த்
தறிந்து, அதை எடுத்துக்கொள்ளுமென்
றான்; ஏனெனில் ராகேல் அவைகளைத் திரு
டினதை யாக்கோபு அறியாதிருந்தான்.
௩௩ அப்பொழுது லாபான் யாக்கோ
பின் கூடாரத்திலும் லேயாளின் கூடாரத்
திலும் இரண்டு வேலைக்காரிகளின் கூடா
ரத்திலும் பிரவேசித்து, அவைகளைக் கண்டு
பிடியாமல், லேயாளின் கூடாரத்திலிருந்து
புறப்பட்டு ராகேலின் கூடாரத்திலே வந்
தான்.
௩௪ ராகேலோவெனில் சுருபங்களை எடு
த்து, ஒட்டகக்கல்லணையில்போட்டு, அவை
கள்மேல் உட்கார்ந்திருந்தாள்; லாபான்
கூடாரமெங்கும் தடவிப்பார்த்து, அவை
களைக் கண்டுபிடியாதே போனான்.
௩௫ அவள் தன் தகப்பனோடே, நான்
உமக்கு முன்பாக எழுந்திருக்கக்கூடாதது,
என் ஆண்டவனுடைய கண்களுக்குத் தா
ங்கலாயிருக்கவேண்டாம்; ஏனெனில்
ஸ்திரிகளுக்குள்ள வழிபாடு எனக்கு வந்தி
ருக்கின்றது என்றாள்; அப்படியே அவன்
சோதித்தும் அந்தச் சுருபங்களைக் கண்டுபி
டியாதே போனான்.
௩௬ ¶ அப்பொழுது யாக்கோபுக்குக்
கோபம்மூண்டு லாபானோடே வாக்குவா

Digitized by Google

தம்பண்ணி, லாபானுக்குப் 'பிரதியுத்தாரமாகச்சொன்னதாவது: நீர் என்னை எரிபந்தமாய்ப் பின்றொடருகிறதற்கு என்னுடைய மீறுதலென்ன? என் பாவமென்ன?

௩௭ என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப்பார்த்தீரே; உம்முடைய வீட்டுத் தட்டுமுட்டுகளிலெல்லாம் எதைக் கண்டுபிடித்தீர்; என் சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும்முன்பாக இங்கே வையும்; அவர்கள் எங்கள் இருவருக்கும் நடுவருக்கக்கடவர்கள்.

௩௮ இந்த இருபதுவருஷம் உம்மிடத்திலே நான் இருந்தேன்; உம்முடைய ஆடுகளும் வெள்ளாடுகளும் சினை அழிந்ததில்லை; உம்முடைய மந்தையின் கடாக்களை நான் தின்றதில்லை.

௩௯ பீறுண்டதை நான் உம்மண்டைக்குக் கொண்டுவாராமல், அதற்கு நான் உத்தரவாதம் பண்ணினேன்; பகலில் களவுபோனதையும், இரவில் களவுபோனதையும், என் கையில் கேட்டீர்.

௪௰ பகலிலே வெயிலும், இரவிலே குளிரும், என்னைப் பட்சித்தன; என் நித்திரை என் கண்களைவிட்டு விலகிற்று; இப்படியிருந்தேன்.

௪௧ இந்த இருபதுவருஷம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலுவருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும் ஆறுவருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மைச் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர்.

௪௨ என் பிதாவின் பராபரனாகிய ஆபிரகாமின் பராபரனும், ஈசாக்கின் பயமும் எனக்கிராதேபோனால், நீர் இப்பொழுது வெறுமையே என்னை அனுப்பிவிடுவீர்; பராபரனோவென்றால், என் சிறுமையையும், என் கைகளின் வருத்தத்தையும் பார்த்து, இராத்திரி உம்மைக் கடிந்துகொண்டாரென்றான்.

௪௩ ¶ அப்பொழுது லாபான் யாக்கோபுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: குமாரத்திகள் என் குமாரத்திகளும், பிள்ளைகள் என் பிள்ளைகளும், மந்தை என் மந்தையும்தானே; நீ காண்கிறவைகள் எல்லாம் என்னுடையவைகள்; இந்த என்னுடைய குமாரத்திகளுக்கும் அல்லது அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கும் இன்றுஎன்னசெய்குவேன்?

௪௪ இப்பொழுதும் வா; நானும் நீயும் ஒரு உடம்படிக்கையைப் பண்ணிக்கொள்ளுவோம்; அது எனக்கும் உனக்கும் நடுவான சாட்சியாயிருப்பதாக என்றான்.

௪௫ ¶ அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தினான்.

௪௬ பிற்பாடு யாக்கோபு தன் சகோதரரோடே கற்களைச் சேருங்களென்றான்; அப்பொழுது, கற்களை எடுத்துக்கொண்டுவந்து, ஒரு குவியலுண்டாக்கி, அந்தக் குவியலின்மேல் அசனம்பண்ணினார்கள்.

௪௭ அதற்கு லாபான் எகார்சகதுத்தா என்று பெயரிட்டான்; யாக்கோபோவெனில் அதற்குக் காலெயேத் என்று பெயரிட்டான்.

௪௮ ¶ இந்தக் குவியல் இன்று எனக்கும் உனக்கும் நடுவான சாட்சி என்று லாபான் சொன்னபடியினாலே, அதின்பெயர், காலெயேத் என்னப்பட்டது.

௪௯ மிஸ்பாவென்றும் சொல்லப்பட்டது; ஏனெனில் அவன் சொன்னதாவது: நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபிற்பாடு நீ என் குமாரத்திகளை உபத்திரவப்படுத்தி, என் குமாரத்திகளைத்தவிர வேறு ஸ்திரிகளை விவாகம்பண்ணினாயானால், கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுவராய்க் கண்காணிக்கக்கடவர்.

௫௰ நம்முடனே ஒருவருமில்லை; பார், பராபரனே எனக்கும் உனக்கும் நடுவான சாட்சி என்றான்.

௫௧ பின்னையும் லாபான் யாக்கோபோடே சொன்னதாவது: இதோ இந்தக் குவியல், இதோ எனக்கும் உனக்கும் நடுவாக நான் போட்ட தூண்.

௫௨ தீங்குசெய்ய நான் இந்தக் குவியலை

Digitized by Google

கடந்து உன்னண்டைக்கு வாராமலும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும்கடந்து என்னண்டைக்கு வாராமலும் இருக்கிறதற்கு, இந்தக் குவியலும் சாட்சி, இந்தத் தூணும் சாட்சி.

௫௰௩ ஆபிரகாமின் பராபரனும் நாகோரின் பராபரனும் அவர்கள் பிதாக்களின் பராபரனுமானவர் நமக்குள்ளே நடுவராயிருக்கக்கடவரென்ருன்; அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனுகிய இசாக்குடைய பயத்தின்மேல் ஆணையிட்டான்.

௫௰௪ ¶ பிற்பாடு யாக்கோபு பர்வதத்தின் மேல் பலியிட்டு, தன் சகோதரரை அப்பம் புசிக்க அழைத்தான்; அப்படியே அப்பம் புசித்து, பர்வதத்திலே இராத்தங்கினுர்கள்.

௫௰௫ லாபான் அதிகாலமே எழுந்திருந்து, தன் பிள்ளைகளையும் தன் குமாரத்திகளையும் முத்தம்செய்து, அவர்களை ஆசீர்வதித்தான்; பிற்பாடு லாபான் புறப்பட்டுத் தன்னிடத்திற்குத் திரும்பிப்போனுன்.

௩௰௨. அதிகாரம்.

யாக்கோபு தன் வழியே போகப்புறப்பட்டான்; அப்பொழுது *பராபரனுடைய தூதர் அவனைச் சந்தித்தார்கள். *சங். ௩௰௪. ௮.

௨ *யாக்கோபு அவர்களைக் காண்கிறபொழுது, இது பராபரனுடைய இராணுவமென்று சொல்லி, அந்தத் தலத்திற்கு மக்னயீமென்று பெயரிட்டான். *௨ இரா. ௬. ௰௬, ௰௭.

௩ ¶ பிற்பாடு யாக்கோபு தனக்குமுன்னுக ஏதோம் சீமையாகிய சேயீர் தேசத்திலிருக்கிற தன் சகோதரனுகிய ஏசாவண்டைக்குத் தூதரை அனுப்பி,

௪ அவர்களுக்குக் கற்பித்ததாவது: நீங்கள் என் ஆண்டவனுகிய ஏசாவோடே சொல்லவேண்டியதேதெனில், நான் லாபானிடத்திலே இற்றைவரைக்கும் தங்கித்தரித்திருந்தேன்.

௫ எனக்கு எருதுகளும், கழுதைகளும், ஆடுகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும் உண்டு; உம்முடைய கண்களில் எனக்குத் தயவுகிடைக்கத்தக்கதாக என் ஆண்டவனுக்கு இதை அறிவிக்க மனிதரை அனுப்பினேனென்று உம்முடைய ஊழியக்காரனுகிய யாக்கோபு சொல்லச் சொன்னுனென்பதுதான் என்ருன்.

௬ ¶ அந்தத் தூதர்கள் யாக்கோபண்டைக்குத் திரும்ப வந்து, நாங்கள் உம்முடைய சகோதரனுகிய ஏசாவண்டைக்குப் போய் வந்தோம்; அவனும் நானூறுபேரோடே உமக்கெதிராக வருகிருன் என்ருர்கள்.

௭ ¶ அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, மன இடுக்கம் அடைந்து, தன்னண்டையிலிருந்த சனத்தையும், ஆடுமாடுகளையும், ஒட்டகங்களையும் இரண்டு பாளயமாகப் பிரித்து,

௮ ஏசா ஒரு பாளயத்தின்மேல் வந்து அதை முறிய அடித்தால், மறுபாளயம்தப்ப இடம் உண்டு என்ருன்.

௯ ¶ பிற்பாடு யாக்கோபு சொன்னதாவது: *என் தகப்பனுகிய ஆபிரகாமின் பராபரனும், என் தகப்பனுகிய இசாக்கின் பராபரனுமானவரே, உன் தேசத்திற்கும், உன் இனத்தண்டைக்கும் திரும்பிப்போ; உனக்கு நன்மை செய்வோம் என்று என்னோடே சொல்லியிருக்கிற கர்த்தாவே, *௧ மோ. ௩௰௧. ௩.

௰ *தேவரீர் உம்முடைய அடியாருக்குச் செய்துவந்த எல்லாக் கிருபைகளுக்கும், எல்லா உண்மைக்கும் நான் எம்மாத்திரம்? ஏனெனில் நான் என் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுதோவெனில், இரண்டு பாளயங்களுக்கு உடையவனுனேன்.
*௨ சாமு. ௭. ௰௮.

௰௧ என் சகோதரனுகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்; அதேனெனில் அவன் வந்து என்னைத் தாயும் பிள்ளைகளுமாய் மடங்கடிப்பானேவென்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன்.

௰௨ நீரோவெனில் *நாம் உனக்கு நன்மை

Digitized by Google

செய்யவே செய்து, உன் வித்தை ஏராளத்
தினாலே எண்ணித்தொலையாத கடற்கரைம
ணலைப்போலாக்குவேனென்று சொன்னீ
ரே என்றான். *க மோ. ௨௮. ௰௩, ௰௫.
௰௩ ¶ அவன் அன்று இராத்திரி அங்கே
தங்கி, தன் கைக்கு உதவினவைகளிலே
தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமான
மாக,
௰௪ இருநூறு வெள்ளாடுகளையும், இருப
து வெள்ளாட்டுக் கடாக்களையும், இருநூறு
ஆடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களை
யும்,
௰௫ பால்கொடுக்கிற முப்பது ஒட்டகங்க
ளையும், அவைகளின் குட்டிகளையும், நாற்ப
து கிடாரிகளையும், பத்துக் காளை எருதுகளை
யும், இருபது கோளிகைக் கழுதைகளையும்,
பத்துக் கழுதைக்குட்டிகளையும் பிரித்தெ
டுத்து,
௰௬ வேலைக்காரர்கையில் ஒவ்வொரு மந்
தைகளைத் தனித் தனியாக ஒப்புவித்து,
தன் வேலைக்காரரோடே நீங்கள் எனக்கு
முன்னாய்த் தாண்டிப்போய், மந்தை மந்
தைக்கும் இடம்விடுங்களென்று சொல்லி,
௰௭ முந்தினவனுக்குக் கற்பித்ததாவது:
என் சகோதரனாகிய ஏசா உனக்கு எதிர்ப்
பட்டு நீ யாருடைய மனிதன்? நீ எங்கே
போகிறாய்? உனக்கு முன்னாகப் போகிற
இவைகள் யாருடையவைகளென்று உன்
னைக் கேட்டால்,
௰௮ அப்பொழுது நீ இது உம்முடைய
ஊழியக்காரனாகிய யாக்கோபுடையது; இ
து என் ஆண்டவனாகிய ஏசாவுக்கு அனுப்
பப்படும் வெகுமானம்; இதோ அவனும்
எங்கள் பிறகாலே வருகிறானென்று சொல்
என்றான்.
௰௯ இரண்டாம் மூன்றாம் வேலைக்காரனுக்
கும் மந்தைகளின் பிறகாலே போகிற அனை
வருக்கும் அவன் கற்பித்ததாவது: நீங்கள்
ஏசாவைக் காணும்பொழுது, இந்தப்பிரகா
ரமாக அவனோடே சொல்லி,
௨௰ இதோ உன் ஊழியக்காரனாகிய யாக்
கோபு எங்கள் பிறகாலே வருகிறானென்பதி
றதையும் சொல்லுங்களென்று கற்பித்தான்;
ஏனெனில் எனக்குமுன்னாகப்போகிற வெ
குமானத்தினாலே அவன் முகத்தைக் குளி
ரப்பண்ணுவேன்; பிற்பாடு அவன் முகத்
தைப் பார்ப்பேன்; அப்பொழுது என்பே
ரில் தயவு வைப்பானாக்கும் என்றான்.
௨௧ ¶ அப்படியே வெகுமானம் அவனுக்
குமுன்னாகப் போயிற்று; அவனோவெனில்
அன்று இராத்திரிப் பாளயத்திலே தங்கி,
௨௨ இராத்திரியிலே எழுந்திருந்து, தன்
இரண்டு பெண்சாதிகளையும் தன் இர
ண்டு வேலைக்காரிகளையும் தன்னுடைய பதி
னொரு குமாரரையும் அழைத்துக்கொண்
டு, யாப்போக்கென்ற ஆற்றின் துறையைக்
கடந்தான்.
௨௩ அவர்களை அழைத்துக்கொண்டு, ஆற்
றைக் கடக்கப்பண்ணி, தனக்குண்டான
வைகளையும் அக்கரைப்படுத்தினான்.
௨௪ ¶ ஆனால் யாக்கோபு பிந்தித் தனித்
திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன்
பொழுதுவிடியும்மட்டும் அவனோடே போ
ராடி,
௨௫ அவனை மேற்கொள்ளக் கூடாதென்
று கண்டு, அவனுடைய கால் இடுப்புச்
சந்து தொட்டார்; அதினால் யாக்கோபின்
தொடை அவரோடே போராடுகையில் சு
ளுக்கிற்று.
௨௬ அவர் நாம் போகட்டும்; ஏனெனில்
பொழுது விடிகிறது என்றார்; ஆனால் இவ
ன், *நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்
மைப் போகவொட்டேனென்றான். *ஓசே.
௰௨. ௪.
௨௭ அவர் இவனுடனே, உன் பேரென்ன
வென்றார்; யாக்கோபென்றான்.
௨௮ அப்பொழுது அவர், *உன் பேர்
இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ர
வேலென்னப்படும்; ஏனெனில் பராபர
னோடும் மனிதரோடும் போராடி மேற்
கொண்டாயென்றார். *க மோ. ௩௫. ௰.
௨௯ அப்பொழுது யாக்கோபு, உம்மு

Digitized by Google

டைய நாமத்தை எனக்கறிவியுமென்று
கேட்டான்; அதற்கவர், நீ நம்முடைய நா
மத்தைக் கேட்கிறதென்னவென்று சொல்
லி, அங்கே அவனை ஆசீர்வதித்தார்.
௩௰ அப்பொழுது யாக்கோபு, பராபரனை
முகமுகமாய்க் கண்டேன்; என்னுத்துமா
வும் தப்புவிக்கப்பட்டதென்று சொல்லி,
அந்த ஸ்தலத்திற்குப் பெனீயேலென்று பே
ரிட்டான்.
௩௧ ¶ அவன் பெனீயேலைக் கடந்துபோ
கையில், சூரியன் அவனுக்கு உதயமாயிற்
று; அவனோவெனில் இடுப்புச் சுளுக்கி
னாலே நொண்டி நடந்தான்.
௩௨ அவர் யாக்கோபுடைய தொடைக்
கீலின் ஒட்டுநரம்பைத் தொட்டபடியினா
லே, இஸ்ரவேல் புத்திரர் இந்நாள்வரைக்
கும் துடையின் கீலிலிருக்கிற ஒட்டுநரம்
பைப் புசியாதே போகிறார்கள்.

௩௩. அதிகாரம்.

பிற்பாடு யாக்கோபு தன் கண்களை ஏ
றெடுத்து, இதோ, *ஏசாவையும், அவனோ
டேகூட நானூறு மனிதரையும் வரக்கண்
டு, பிள்ளைகளை லேயாளண்டையிலும், ரா
கேலண்டையிலும், இரண்டு வேலைக்காரி
களண்டையிலும் வெவ்வேறே பிரித்து
வைத்து, *௧ மோ. ௩௨. ௬.
௨ வேலைக்காரிகளையும், அவர்கள் பிள்ளை
களையும் முன்னாகவும், லேயாளையும் அவள்
பிள்ளைகளையும் பிறகாலேயும், ராகேலை
யும் யோசேப்பையும் பின்னாகவும் நிறுத்தி,
௩ தான் அவர்களுக்கு முன்னாக நடந்
துபோய், தன் சகோதரன் கிட்டச் சேரும்
அளவும் ஏழுவிசை தரைமட்டும் குனிந்து
வணங்கினான்.
௪ அப்பொழுது ஏசா அவனுக்கு எதிர்
கொண்டோடி, அவனைக் கட்டிக்கொண்டு,
அவன் கழுத்திறுகப்பூண்டு, அவனை முத்
தம்செய்தான்; இருவரும் அழுதார்கள்.
௫ அவன் தன் கண்களை ஏறெடுத்து, பெ
ண்சாதிகளையும் பிள்ளைகளையும்கண்டு, உன்
னோடிருக்கிற இவர்கள் யார் என்றான்?
அதற்கிவன், பராபரன் உம்முடைய ஊழி
யக்காரனுக்கு அருளினபிள்ளைகளென்றான்.
௬ அப்பொழுது வேலைக்காரிகளும், அ
வர்கள் பிள்ளைகளும் சேரவந்து வணங்கி
னார்கள்.
௭ லேயாளும் அவள் பிள்ளைகளும் சேர
வந்து வணங்கினார்கள்; பிற்பாடு யோசேப்
பும் ராகேலும் சேர்ந்துவந்து வணங்கினார்
கள்.
௮ அப்பொழுது அவன், நான் சந்தித்த
அந்த உன்னுடைய தண்டெல்லாம் எதுக்
கென்றான்; அதற்கிவன், என் ஆண்டவனு
டைய கண்களில் எனக்குத் தயவுகிடைக்
கிறதற்கு என்றான்.
௯ ஆனால் ஏசா, எனக்கு நிரம்ப இருக்
கின்றது என் சகோதரனே, உன்னுடை
யது உனக்கிருக்கட்டும் என்றான்.
௰ யாக்கோபோவெனில் சொன்னதாவ
து: அப்படி அல்ல, உம்முடைய கண்க
ளில் எனக்குத் தயவுகிடைத்ததேயாகில்,
என் காணிக்கையை என் கையிலே வாங்
கிக்கொள்ளும்; ஏனென்றால் நீர் என்னைப்
பிரியமாய்ப் பார்க்கையில், நான் உம்மு
டைய முகத்தைப் பராபரனுடைய முகத்
தைக் காண்கிறதுபோலக் கண்டேன்.
௰௧ உமக்குக் கொண்டுபோகப்பட்ட
*என்னுடைய ஆசீர்வாதத்தை வாங்கிக்
கொள்ளும்; ஏனெனில் பராபரன் எனக்
குத் தந்தருளினார்; வேண்டியவைகளெல்
லாம் எனக்கிருக்கின்றன என்று சொல்லி,
அவனை வருந்திக்கொண்டான்; அப்பொ
ழுது அவன் அதை வாங்கிக்கொண்டு,
*௧ சாமு. ௨௫. ௨௭; ௩௰. ௨௬.
௰௨ நாம் பயணம் புறப்பட்டுப்போ
வோம் வா, உனக்குமுன்னாக நடப்பே
னென்றான்.
௰௩ அப்பொழுது இவன் அவனோடே
சொன்னதாவது: பிள்ளைகள் இளம்பிள்ளை
களென்றும், பால்கொடுக்கிற ஆடுமாடுகள்
என்னோடிருக்கின்றதென்றும், என் ஆண்

Digitized by Google

டவன் அறிவார்; அவைகளை ஒரேநாளில்
துரிதமாய் ஓட்டினால் மந்தை எல்லாம்
செத்துப்போம்.
௰௪ என் ஆண்டவன் தன் ஊழியக்கார
னுக்கு முன்னாகப்போவாராக; நானோவெ
னில், சேயீரிலே என் ஆண்டவனண்டைக்
கு வரும்மட்டும் எனக்குமுன் நடக்கிற ம
ந்தைகளின் கால்நடைக்கும் பிள்ளைகளின்
கால்நடைக்கும் தக்க மெதுவாய் அவை
களை நடத்திக்கொண்டு வருவேனென்றான்.
௰௫ அப்பொழுது ஏசா என்னோடிருக்
கிற சனத்தில் சிலரை நான் உன்னிடத்தில்
நிறுத்தட்டுமே என்றான்; அதற்கிவன், அ
தேதுக்கு, என் ஆண்டவனுடைய கண்க
ளில் எனக்குத் தயவுமாத்திரம் கிடைக்
கட்டுமென்றான்.
௰௬ ¶ அப்படியே ஏசா அந்நாளிலே தி
ரும்ப தன் வழியே சேயீருக்குப்போனான்.
௰௭ யாக்கோபோவென்றால், சுக்கோத்
திற்குப் பயணம்பண்ணி, தனக்கு வீடுகட்
டி, தன் மிருகஜீவன்களுக்குக் கொட்டா
ரங்களைப் போட்டான்; அதினாலே அந்த
ஸ்தலத்திற்குச் சுக்கோத்தென்று பேர்தரித்
தான்.
௰௮ ¶ யாக்கோபு பதான்அராமிலிருந்து
வந்தபிற்பாடு கானான் தேசத்திலிருக்கிற
சீகேமின் ஊருக்குச் சுகமாய் வந்து, ஊருக்
கெதிரே பாளயம் இறங்கி,
௰௯ தன் கூடாரத்தை நாட்டும் வயல்
வெளியின் நிலத்தைச் சீகேமின் தகப்ப
னாகிய ஏமோர் புத்திரர்கையிலேநூறுவெள்
ளிக்காசுக்குக் கொண்டு,
௨௰ அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்
டி, பராபரன் இஸ்ரவேலின் பராபரனென்
று அதற்குப் பேரிட்டான்.

௩௪. அதிகாரம்.

லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற அவ
னுடைய குமாரத்தியாகிய தீனாள் தேசத்
துக் குமாரத்திகளைப் பார்க்கப் புறப்பட்
டாள்.
௨ அவளை ஏவியனான ஏமோரின் குமா
ரனும் தேசத்தின் பிரபுவுமாகிய சீகேமென்
றவன் கண்டு, அவளை அழைத்துப்போய்,
அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்
தான்.
௩ அவன் ஆத்துமா யாக்கோபின் குமா
ரத்தியாகிய தீனாள்மேலே பிடிப்பாயிருக்
கது; அவன் அந்தப் பெண்ணைச் சிநேகித்
து, அந்தப் பெண்ணின் மனதுக்கு நட்
பாய்ப் பேசினான்.
௪ சீகேம் தன் தகப்பனாகிய ஏமோரு
டனே, இந்தப் பெண்ணை எனக்குக் கொள்
ளுமென்று சொன்னான்.
௫ தன் குமாரத்தியாகிய தீனாளை அவன்
தீட்டுப்படுத்தினதை யாக்கோபு கேட்ட
பொழுது, அவன் குமாரர் அவனுடைய
மந்தை அண்டையில் வெளியிலே இருந்
தார்கள்; அவர்கள் வரும்மட்டும் யாக்கோ
பு மவுனமாயிருந்தான்.
௬ ¶ ஆனால் சீகேமின் தகப்பனாகிய
ஏமோர் யாக்கோபோடே பேச அவனண்
டைக்குப் புறப்பட்டுவந்தான்.
௭ யாக்கோபின் குமாரர் செய்தியை
கேட்டபொழுது, வெளியிலிருந்து வந்தார்
கள்; அவன் யாக்கோபின் குமாரத்தியோ
டே சயனித்ததென்கிற செய்யப்படாதமதி
கெட்டகாரியத்தை இஸ்ரவேலிலே செய்த
தினாலே, அந்த மனிதருக்கு மனம்நொந்து
அவர்களுக்கு மிகவும் கோபமூண்டது.
௮ ஏமோர் அவர்களோடே பேசிச்சொன்
னதாவது: என் குமாரனாகிய சீகேமின்
ஆத்துமா உங்கள் குமாரத்தியின்மேல்
வாஞ்சையாயிருக்கின்றது; அவளை அவ
னுக்குப் பெண்சாதியாகக் கொடுங்கள்.
௯ நீங்கள் எங்களோடே சம்பந்தம்கலந்
து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக்
கொடுத்து, எங்கள் குமாரத்திகளை உங்க
ளுக்குக் கொண்டு,
௰ எங்களோடே குடியிருங்கள்; தேசம்
உங்கள் முன்பாகக் கிடக்கிறது; அதிலே
குடியிருந்து, வியாபாரம்பண்ணி, ஆஸ்தி

Digitized by Google

சம்பாதித்து, அதைக் கையாண்டுகொண்டி
ருங்களென்றான்.
௰௧ சீகேம் அவள் தகப்பனோடும் அவள்
சகோதரரோடும் சொன்னதாவது: உங்கள்
கண்களில் எனக்குத் தயவுகிடைக்கட்டும்;
நீங்கள் எனக்குச் சொல்வதைத் தருவேன்.
௰௨ என்மேல் பரியத்தையும் காணிக்கை
யையும் திரளாய்ச் சுமத்துங்கள்; நீங்கள்
எனக்குச் சொல்லும்படி தருவேன்; அந்
தப் பெண்ணைமாத்திரம் எனக்குப் பெண்
சாதியாகக் கொடுங்களென்றான்.
௰௩ ¶ அப்பொழுது யாக்கோபின் குமாரர்
இவன் தங்கள் சகோதரியாகிய தீனாளைத்
தீட்டுப்படுத்தினபடியால், சீகேமுக்கும்
அவன் தகப்பனாகிய ஏமோருக்கும் சர்ப்
பனையாய் மறுமொழி கொடுத்து, அவர்க
ளோடே சொன்னதாவது:
௰௪ எங்கள் சகோதரியைச் சுன்னத்தில்லா
த புருஷனுக்குக் கொடுக்குங்காரியத்தை
நாங்கள் செய்யக்கூடாது; ஏனென்றால்
அது எங்களுக்கு நிந்தையாயிருக்கும்.
௰௫ நீங்கள் உங்களிலிருக்கும் ஆண் அனை
த்தையும் சுன்னத்துப்பண்ணுகிறதினாலே
எங்களைப்போலானீர்களேயாகில், நாங்கள்
உங்களுக்குச் சம்மதித்து,
௰௬ உங்களுக்கு எங்கள் குமாரத்திகளைக்
கொடுத்து, உங்கள் குமாரத்திகளை எங்
களுக்குக் கொண்டு, உங்களோடே குடியி
ருந்து ஏகசனமாவோம்.
௰௭ சுன்னத்துப்பண்ணிக்கொள்ள எங்
கள் சொல்கேளாதே போனீர்களேயானால்,
நாங்கள் எங்கள் குமாரத்தியை அழைத்
துக்கொண்டு போவோமென்றார்கள்.
௰௮ ¶ அவர்கள் வார்த்தைகள் ஏமோருக்
கும், ஏமோரின் குமாரனாகிய சீகேமுக்கும்,
நன்றாய்க் கண்டன.
௰௯ அப்படிச்செய்ய அந்த வாலிபன் தா
மதம்பண்ணினதில்லை; ஏனெனில் யாக்
கோபுடைய குமாரத்தியின்மேல் பிரியம்
வைத்தான்; அவன் தன் தகப்பன்வீட்டார்
அனைவரிலும் கனமாய் எண்ணப்பட்டவ
னுமாயிருந்தான்.
௨௰ ஏமோரும் அவன் குமாரன் சீகேமும்
தங்கள் பட்டணத்தின் ஒலிமுகவாசலில்
வந்து, தங்கள் பட்டண மனிதரோடே
பேசிச் சொன்னதாவது:
௨௧ இந்த மனிதர் நம்மோடே சமாதான
மாயிருக்கிறார்கள்; ஆகையால் அவர்கள்
தேசத்திலே குடியிருந்து அதிலே வியாபா
ரம்பண்ணட்டும்; இதோ அவர்களுக்கு
முன்பாகத் தேசம் இருபுறமும் விஸ்தார
மாய்க் கிடக்கிறது; அவர்கள் குமாரத்திகளை
நாம் நமக்குப் பெண்சாதிகளாகக்கொண்
டு, நம்முடைய குமாரத்திகளை அவர்களுக்
குக் கொடுப்போமே.
௨௨ இந்த மனிதர் சுன்னத்துப்பண்ணப்
பட்டவர்களாயிருக்கிறதுபோல, நாம் நம்
மிலுள்ள ஆண் அனைத்தையும் சுன்னத்து
மாத்திரம்பண்ணினோமாகில், அவர்கள் நம்
மோடே ஏகசனமாகக் குடியிருப்பதற்
குச் சம்மதிப்பார்கள்.
௨௩ அவர்கள் மந்தைகளும் அவர்கள் ஆஸ்
தியும் அவர்கள் மிருகசீவன்களுமெல்லாம்
நம்மைச் சேர்வதில்லையோ? அவர்களுக்கு
ச் சம்மதியாகமாத்திரம் செய்தோமானால்,
நம்முடனே குடியிருப்பார்களென்றார்கள்.
௨௪ அப்பொழுது ஏமோரின் பட்டணத்
துவாசலால் புறப்படுகிறவர்களாகிய அனை
வரும் அவன் சொல்லையும் அவன் குமா
ரனாகிய சீகேமின் சொல்லையும் கேட்டு,
அவன் பட்டணத்து வாசலால் புறப்படு
கிறவர்களாகிய ஆண்சாதியாரெல்லாரும்
சுன்னத்தடைந்தார்கள்.
௨௫ ¶ மூன்றாம்நாளில் அவர்களுக்கு நோ
வெடுத்துக்கொண்டபொழுது சம்பவித்த
தேதென்றால், யாக்கோபின் குமாரரும் தீனா
வின் சகோதரருமாகிய *சிமெயோனும்
லேவியுமென்ற இரண்டுபேர் அவனவன்
தன் தன் பட்டயத்தை எடுத்துக்கொண்டு
பயமில்லாமல் பட்டணத்தின்மேல் வந்து,
ஆண் அனைத்தையும் கொன்று,

*௧ மோ. ௪௯. ௫,௬.

Digitized by Google

௨௬ ஏமோரையும் அவன் குமாரன் சிகே
மையும் பட்டயக்கருக்காலே கொன்று
போட்டு, தீனாளைச் சிகேமின் வீட்டிலிருந்து
அழைத்துப் புறப்பட்டுப்போனார்கள்.
௨௭ யாக்கோபின் குமாரர் வெட்டுண்
டவர்கள்மேல் வந்து, அவர்கள் தங்கள்
சகோதரியைத் தீட்டுப்படுத்தினதற்காகப்
பட்டணத்தைக் கொள்ளையிட்டு,
௨௮ அவர்களுடைய ஆடுமாடுகளையும்
கழுதைகளையும் ஊரிலும் ஊர் வெளியி
லும் இருந்தவைகள் எல்லாவற்றையும்
எடுத்து,
௨௯ அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்
டுகளையும் அவர்களுடைய எல்லாக் குழந்
தைகளையும் பெண்சாதிகளையும் வீட்டிலி
ருந்த எல்லாவற்றையும் பிடித்துக்கொண்
டு கொள்ளையாடினார்கள்.
௩௰ அப்பொழுது யாக்கோபு சிமெயோ
னோடும் லேவியோடும் சொன்னதாவது:
நீங்கள் தேசத்திற்குடியிருக்கிற கானானிய
ரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என் வாச
னையைக் கெடுத்ததினாலே என்னைக் கலங்
கப்பண்ணினீர்கள்; நான் கொஞ்சச் சன
மாயிருக்கிறேன்; அவர்கள் எனக்கு விரோத
மாகக் கூட்டங்கூடி, நானும் என் வீடும்
அழிய என்னை வெட்டுவார்களே என்றான்.
௩௧ அதற்கவர்கள், எங்கள் சகோதரி
யை அவர்கள் ஒரு வேசியைப்போல நடத்
தலாமோ என்றார்கள்.

௩௫. அதிகாரம்.

பராபரனோவென்றால் யாக்கோபுடனே,
நீ எழுந்து பேத்தேலுக்குப் போயேறி, அங்
கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய
ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிற
பொழுது, *உனக்குத் தரிசனையான பரா
பரனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்
டாக்கு என்றார். *௧ மோ. ௨௮. ௰௨—௰௯.
௨ அப்பொழுது யாக்கோபு தன் வீட்
டாரோடும் தன்னோடேகூட இருந்த அனை
வரோடும் சொன்னதாவது: உங்கள் நடுவி
லிருக்கிற அந்நிய தேவர்களை விலக்கிப்போ
ட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு,
உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்.
௩ நாம் எழுந்து பேத்தேலுக்குப் போ
யேறுவோம்; என் அவதிநாளிலே எனக்கு
உத்தரவு அருளிச்செய்து, நான் நடந்தவழி
யிலே என்னோடேகூட இருந்த பராபரனுக்
கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு
வேனென்றான்.
௪ அப்பொழுது அவர்கள் தங்கள் கை
யிலிருந்த எல்லா அந்நியதேவர்களையும்,
தங்கள் காதுகளிலிருந்த கடுக்கன்களையும்,
யாக்கோபுக்குக் கொடுத்தார்கள்; யாக்
கோபு அவைகளைச் சிகேம் ஊர் அருகே
இருந்த ஒரு கர்வாலியுமரத்தின்கீழே பு
தைத்தான்.
௫ பிற்பாடு பயணம் புறப்பட்டார்கள்;
அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணங்க
ளின்மேலே பராபரனாலே பயங்கரம் உண்
டாகையால், யாக்கோபின் குமாரரைப்
பின்தொடராதிருந்தார்கள்.
௬ ¶ யாக்கோபும் அவனோடேகூட இருந்
த எல்லாச்சனமும், கானான் தேசத்திலி
ருக்கும் லூசுக்குவந்தார்கள்; அதுவே பேத்
தேல்.
௭ அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக்
கட்டி, தான் தன் சகோதரனுடைய முகத்
திற்கு விலகி ஓடிப்போகிறபொழுது, அங்
கே பராபரன் தனக்கு வெளிப்பட்டபடி
யினாலே அந்த ஸ்தலத்திற்கு ஏல்பேத்தே
லென்று பேரிட்டான்.
௮ ¶ ரெபேக்காளின் தாதியாகிய தேப்
போராள் மரித்து, பேத்தேலின் பள்ளத்
தாக்கில் வெளியிலே ஒரு கர்வாலியுமரத்
தின்கீழே அடக்கம்பண்ணப்பட்டாள்; அ
துபுலமபலின் கர்வாலியுமரமென்றழைக்
கப்பட்டது.
௯ ¶ யாக்கோபு பதான்அராமிலிருந்து
வந்தபிற்பாடு பராபரன் அவனுக்குப் பின்
னையும் தரிசனையாகி, அவனை ஆசீர்வதித்து,
௰ அவனுடனே உன்பேர் யாக்கோபென்

பது, இனி உன்பேர் யாக்கோபு என்னப்படாமல், இஸ்ரவேலென்ற பேர் உனக்கிருக்குமென்றுசொல்லி, அவனுக்கு இஸ்ரவேலென்று பேரிட்டார்.

௰௧ பின்னையும் பராபரன் அவனோடே சொன்னதாவது: நாம் சர்வத்திற்கும்வல்ல பராபரனாயிருக்கிறோம்; நீ பலுகிப்பெருகு; சாதியும் சாதிகளின் கூட்டமும் உன்னாலுண்டாகும்; இராசாக்களும் உன் இடுப்பின் பிறப்பாயிருப்பார்கள்.

௰௨ நாம் ஆபிரகாமுக்கும் இசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்குத் தருவோம்; உனக்குப்பிற்பாடு உன் வித்துக்கும் இந்தத் தேசத்தைத் தருவோமென்று சொல்லி,

௰௩ பராபரன் அவனோடே பேசின ஸ்தலத்திலிருந்து அவனை விட்டேறிப்போனார்.

௰௪ அப்பொழுது யாக்கோபு அவர் தன்னோடே பேசின ஸ்தலத்திலே கல்லானதாகிய ஒரு தூணை நிறுத்தி, அதின்மேல் ஊற்றுதலை யூற்றி, அதின்மேல் எண்ணெயை வார்த்தான்.

௰௫ பராபரன் தன்னோடே பேசின அந்த ஸ்தலத்திற்கு யாக்கோபு பேத்தேலென்ற பெயரைத் தான் தரித்தான்.

௰௬ ¶ பேத்தேலிலிருந்து பயணம்புறப்பட்டார்கள்; எப்பருத்தாவுக்கு வர இன்னம் கொஞ்சம்தூரமிருக்கிறபொழுது, ராகேல் பிள்ளைபெற்றாள்; பெறுகையில் அவளுக்குக் கடுவருத்தமாயிற்று.

௰௭ அப்பொழுது சம்பவித்ததாவது: பெறுகிறதிலே அவளுக்குக் கடுவருத்தமாயிருக்கையில், மருத்துவச்சி அவளுடனே, பயப்படாதே, ஏனென்றால் இந்தப் புத்திரனும் உனக்கிருப்பானென்றாள்.

௰௮ சம்பவித்ததேதென்றால், மரணம் அடைய அவள் ஆத்துமா புறப்படுகையில், அவள் அவனுக்குப் பெனோனி என்று பேரிட்டாள்; அவன் தகப்பனோவெனில், அவனைப் பென்யமீனென்றழைத்தான்.

௰௯ ராகேல் மரித்து, பெத்லகேமென்னப்படுகிற எப்பருத்தா ஊர்வழியிலே அடக்கம்பண்ணப்பட்டாள்.

௨௰ அவள் கல்லறையின்மேல் யாக்கோபு ஒரு தூணை நிறுத்தினான்; அதுவே இந்நாள்வரைக்கும் இருக்கிற ராகேலுடைய கல்லறையின் தூண்.

௨௧ ¶ இஸ்ரவேல் பயணம்பண்ணி, ஏதேரென்ற கோபுரத்திற்கு அப்புறத்தே தன் கூடாரத்தைப் போட்டான்.

௨௨ இஸ்ரவேல் அந்தச் சீமையில் குடியிருக்கிறபொழுது சம்பவித்ததேதென்றால், *ரூபன் போய், தன் தகப்பனுடைய வைப்பாட்டியாகிய பில்க்காளோடே சயனித்தான்; அது இஸ்ரவேலுக்குக் கேள்வியாயிற்று; யாக்கோபின் குமாரரோவென்றால் பன்னிரண்டுபேராயிருந்தார்கள். *௧ மோ. ௪௯. ௪.

௨௩ ¶ யாக்கோபுக்கு முதல் புத்திரனான ரூபனும், சிமெயோனும், லேவியும், யூதாவும், இசஷாரும், செபுலோனும், லேயாளின் குமாரரானவர்கள்.

௨௪ ராகேலின் குமாரர் யோசேப்பும், பென்யமீனுமென்றவர்கள்.

௨௫ ராகேலுடைய வேலைக்காரியாகிய பில்க்காளின் குமாரர் தாணும், நப்தலியும் என்றவர்கள்.

௨௬ லேயாளின் வேலைக்காரியாகிய சில்ப்பாளின் குமாரர் காதும், ஆசேரும் என்றவர்கள்; இவர்கள் யாக்கோபுக்குப் பதான் அராமிலே பிறந்த குமாரர்.

௨௭ ¶ யாக்கோபு அர்பாவின் ஊராகிய மம்ரேக்குத் தன் தகப்பனாகிய இசாக்கண்டையிலேவந்தான்; அது ஆபிரகாமும் இசாக்கும் தங்கியிருந்த எபிரோனென்கிற ஊர்தானே.

௨௮ இசாக்கின் நாள்கள் நூற்றெண்பது வருஷமாயிருந்தன.

௨௯ பிற்பாடு இசாக்கு முதிர்ந்த பூரண ஆயுசிலே ஜீவித்து மரித்து, தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்; அவனை அவன் குமாரராகிய ஏசாவும் யாக்கோபும் அடக்கம்பண்ணினார்கள்.

Digitized by Google

௩௬ அதிகாரம்.

இது ஏதோமியரின் தகப்பனாகிய ஏசாவின் சந்ததி.

௨ ஏசா கானான் குமாரத்திகளில் ஏத்தியனான ஏலோனின் குமாரத்தியாகிய ஆதாளையும், ஏவியனாகிய சிபெயோனின் பேத்தியும் ஆனாகின் குமாரத்தியுமாகிய அகோலிபாமாளையும்,

௩ இஸ்மவேலின் குமாரத்தியும் நேப்யோத்தின் சகோதரியுமாகிய பஸ்மாத்தையும், விவாகம்பண்ணினான்.

௪ ஆதாள் ஏசாவுக்கு எலிப்பாசைப் பெற்றாள்; பஸ்மாத் ரேகுவேலைப் பெற்றாள்.

௫ அகோலிபாமாள் எயூஷையும், யாலாமையும், கோராகையும் பெற்றாள்; இவர்கள் ஏசாவுக்குக் கானான்தேசத்திலே பிறந்த குமாரர்.

௬ ¶ ஏசா தன் பெண்சாதிகளையும் தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் தன் வீட்டிலுள்ள எல்லா ஆத்துமாக்களையும் தன் ஆடுமாடுகளையும் தன்னுடைய எல்லா மிருக சீவன்களையும் தான் கானான் தேசத்திலே சம்பாதித்த தன்னுடைய எல்லா ஆஸ்தியையும் சேர்த்துக்கொண்டு, தன் சகோதரனாகிய யாக்கோபைவிட்டு வேறே தேசத்திற்குப் போனான்.

௭ ஏனெனில் அவர்கள் ஒருமிக்கக் குடியிருக்கக் கூடாதபடிக்கு, அவர்களுடைய சம்பத்து மிச்சமாயிருந்தது; அவர்கள் தங்கியிருந்த பூமி அவர்களுடைய மந்தைகளின் முகாந்தரத்தினாலே அவர்களைத் தாங்கமாட்டாதே போயிற்று.

௮ ஆகையால் ஏசா சேயீர் பர்வதத்திலே குடியேறினான்; ஏசாவே ஏதோமென்றவன்.

௯ ¶ சேயீர் பர்வதத்திலிருக்கிற ஏதோமியருடைய தகப்பனாகிய ஏசாவின் சந்ததிகளும்,

௰ ஏசாவின் குமாரருடைய நாமங்களுமாவன: ஏசாவின் பெண்சாதியாகிய ஆதாளுடைய குமாரன்பேர் எலிப்பாஸ்; ஏசாவின் பெண்சாதியாகிய பஸ்மாத்துடைய குமாரன்பேர் ரேகுவேல்.

௰௧ எலிப்பாசுடைய குமாரர்; தேமான், ஓமார், செப்போ, காத்தாம், கேனாஸ்.

௰௨ திம்னாள் ஏசாவின் குமாரனாகிய எலிப்பாசுக்கு வைப்பாட்டியாயிருந்து, எலிப்பாசுக்கு ஆம்லேக்கைப் பெற்றாள்; இவர்களே ஏசாவின் பெண்சாதியாகிய ஆதாளுடைய குமாரர்.

௰௩ ரேகுவேலுடைய குமாரர்; நாகாத், சேராக், சம்மா, மீசா, இவர்களே ஏசாவின் பெண்சாதியாகிய பஸ்மாத்துடைய குமாரர்.

௰௪ சிபெயோனின் பேத்தியும் ஆனாகின் குமாரத்தியுமான அகோலிபாமாளென்ற ஏசாவுடைய பெண்சாதியின் குமாரர் யாரென்றால், அவள் ஏசாவுக்கு எயூஷையும், யாலாமையும், கோராகையும் பெற்றாள்.

௰௫ ¶ ஏசாவின் குமாரரிலிருந்த பிரபுக்கள்; ஏசாவுக்கு முதல்குமாரனாகிய எலிப்பாசுடைய குமாரரில் தேமான்பிரபுவும், ஓமார்பிரபுவும், செப்போபிரபுவும், கேனாஸ்பிரபுவும்,

௰௬ கோராக்பிரபுவும், காத்தான்பிரபுவும், ஆம்லேக்பிரபுவும் இருந்தார்கள்; இவர்கள் ஏதோம்தேசத்தில் எலிப்பாசின் சந்ததியும் ஆதாளின் குமாரருமாயிருந்த பிரபுக்கள்.

௰௭ ¶ ஏசாவின் குமாரனாகிய ரேகுவேலின் குமாரரோவெனில், நாகாத்பிரபு, சேராக்பிரபு, சம்மாபிரபு, மீசாபிரபு, இவர்கள் ஏதோம்தேசத்தில் ரேகுவேலின் சந்ததியும் ஏசாவின் பெண்சாதியாகிய பஸ்மாத்தின் குமாரருமாயிருந்த பிரபுக்கள்.

௰௮ ¶ ஏசாவின் பெண்சாதியாகிய அகோலிபாமாளின் குமாரரோவென்றால், எயூஸ்பிரபு, யாலாம்பிரபு, கோராக்பிரபு; இவர்கள் ஆனாகின் குமாரத்தியும் ஏசாவுடைய பெண்சாதியுமாகிய அகோலிபாமாளின் சந்ததியாயிருந்த பிரபுக்கள்.

௰௯ இவர்களே ஏதோமென்ற ஏசாவின்

Digitized by Google

குமாரர்; இவர்களே அவர்களிலிருந்த பிர
புக்கள்.
௨௰ ¶ அந்தத் தேசத்தில் குடிகளாகிய
ஓரியனான சேயீரின் குமாரர், லோத்தான்,
சோபால், சிபெயோன், ஆனாக்,
௨௧ திஷோன், எத்சேர், திஷான்; இவர்கள்
ஏதோம்தேசத்தில் சேயீரின் புத்திரராகிய
ஓரியருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள்.
௨௨ லோத்தானுடைய குமாரர், ஓரி,
ஏமாம்; லோத்தானின் சகோதரி திம்னாள்.
௨௩ சோபாலுடைய குமாரர், அல்வான்,
மனாகாத், ஏபால், சேப்போ, ஓனாமென்ற
வர்கள்.
௨௪ சிபெயோனுடைய குமாரர், ஆயா,
ஆனா என்றவர்கள்; வனாந்தரத்திலே தன்
தகப்பனாகிய சிபெயோனின் கழுதைகளை
மேய்க்கையில், கோவேறு கழுதைகள் பிறக்
கும் விதத்தைக் கண்டுபிடித்த ஆனா இவன்
தான்.
௨௫ ஆனாவின் பிள்ளைகள் திஷோனும்,
அகோலிபாமாளுமென்றவர்கள்; இவள் ஆ
னாவின் குமாரத்தி.
௨௬ திஷோனுடைய குமாரர், எம்தான், எ
ஸ்பான், இத்தரான், கோரான் என்றவர்கள்.
௨௭ எத்சேருடைய குமாரர், பில்க்கான்,
சாவான், ஆக்கான் என்றவர்கள்.
௨௮ திஷானுடைய குமாரர், ஊத்ஸ், ஆரான்
என்றவர்கள்.
௨௯ ஓரியரின் சந்ததிப் பிரபுக்கள், லோத்
தான்பிரபு, சோபால்பிரபு, சிபெயோன்பிர
பு, ஆனாபிரபு,
௩௰ திஷோன்பிரபு, எத்சேர்பிரபு, திஷா
ன்பிரபு, இவர்களே சேயீர் தேசத்திலே தங்
கள் தங்கள் இடங்களிலிருந்த ஓரியர் சந்த
தியான பிரபுக்கள்.
௩௧ ¶ இஸ்ரவேல் புத்திரரை ஒரு இரா
சா ஆளாததற்குமுன்னே ஏதோம்தேசத்தி
லே ஆண்ட இராசாக்கள்.
௩௨ ஏதோமிலே பேயோருடைய குமார
னாகிய பேலா இராசாவாயிருந்தான்; அவ
னுடைய பட்டணத்தின்பேர் தின்காபா.

௩௩ பேலா மரித்தபொழுது, போத்ஸ்ரா
பட்டணத்தானாகிய சேராகுடைய குமார
னான யோவாப் அவன் பட்டத்திற்கு வந்
தான்.
௩௪ யோவாப் மரித்தபொழுது, தேமா
னிய தேசத்தானாகிய ஊஷாம் அவன் பட்
டத்திற்கு வந்தான்.
௩௫ ஊஷாம் மரித்தபொழுது, அவன்
பட்டத்திற்கு மோவாபின் நாட்டிலே மீதி
யானியரை முறியடித்த பேதாதின் குமார
னாகிய ஆதாத் வந்தான்; அவனுடைய பட்
டணத்தின் பேர் ஆவீத்.
௩௬ ஆதாத் மரித்தபொழுது, மஸ்ரேக்கா
ஊரானாகிய சம்லா அவன் பட்டத்திற்கு
வந்தான்.
௩௭ சம்லா மரித்தபொழுது, நதிக்கருகா
ன ரேகோபோத்தூரானாகிய சவுல் அவன்
பட்டத்திற்கு வந்தான்.
௩௮ சவுல் மரித்தபொழுது, அக்போரு
டைய குமாரனாகிய பாகால் ஆனான் அவன்
பட்டத்திற்கு வந்தான்.
௩௯ அக்போருடைய குமாரனாகிய பாகால்
ஆனான் மரித்தபொழுது, அவன் பட்டத்
திற்கு ஆதார் வந்தான்; அவனுடைய பட்ட
ணத்தின் பேர் பாகு; அவன் பெண்சாதியி
ன்பெயர் மெகேதாபெயேல், அவள் மத்
ரேத்துடைய குமாரத்தியும் மேசகாபின்
பேத்தியுமாயிருந்தாள்.
௪௰ பலபல வம்சத்தாரும் தலத்தாரும்
நாமத்தாருமாகிய ஏசாவின் சந்ததி பிரபுக்க
ளுடைய நாமங்களாவன: திம்னாபிரபு, அ
ல்வாபிரபு, எத்தேத்பிரபு,
௪௧ அகோலிபாமாபிரபு, ஏலாபிரபு, பீ
னோன்பிரபு,
௪௨ கேனாஸ்பிரபு, தேமான்பிரபு, மிப்
சார்பிரபு,
௪௩ மக்தியேல்பிரபு, ஈராம்பிரபு, இவர்
களே தங்கள் கைவசமானதேசத்திலே பல
பல இடங்களிலே குடியிருந்த ஏதோம்
சந்ததி பிரபுக்கள்; இந்த ஏதோமியருடை
ய தகப்பன் ஏசாவே.

Digitized by Google

௩௭. அதிகாரம்.

யாக்கோபு தன் தகப்பன் தங்கின கானா
ன்தேசமான சீமையிலே குடியிருந்தான்.
௨ யாக்கோபுடைய சந்ததியின் நடபடி
யாவது: யோசேப்பு பதினேழு வயதிலே
தன் சகோதரரோடே ஆடுகளை மேய்த்துக்
கொண்டிருந்தான்; அந்த இளைஞன் பில்க்
காள் சில்ப்பாளென்ற தன் தகப்பனுடைய
பெண்சாதிகளின் குமாரரோடே இருந்து,
இவர்கள் துர்க்கீர்த்தியை அவர்கள் தகப்
பனண்டைக்கு வந்து சொல்லுவான்.
௩ யோசேப்பு தனக்கு முதிர்வயதிலே
பிறந்தபடியினாலே இஸ்ரவேல் தன்னு
டைய எல்லாக் குமாரரைப் பார்க்கிலும்
அவனைச் சிநேகித்து, பலவருணமான அங்
கியை அவனுக்குச் செய்வித்தான்.
௪ தங்கள் தகப்பன் அவனை அவனு
டைய எல்லாச் சகோதரரைப்பார்க்கிலும்
சிநேகிக்கிறதை அவன் சகோதரர் கண்ட
பொழுதோவெனில், அவர்கள் அவனோ
டே பட்சமாய்ப் பேசமாட்டாதபடியாய்,
அவனைப் பகைத்தார்கள்.
௫ ¶ இதுவும்அல்லாமல் யோசேப்பு ஒரு
சொப்பனத்தைக் கண்டு, தன்சகோதரருக்
கு அறிவித்தான்; அதின்நிமித்தம் அவனை
இன்னம் அதிகமாய்ப் பகைத்தார்கள்.
௬ அவன் இவர்களோடே சொன்னதே
தெனில், நான் கண்ட சொப்பனத்தைக்
கேளுங்கள்.
௭ இதோ நாம் நடு வயல்வெளியிலே
அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்
தோம்; அப்பொழுது இதோ என்னுடைய
அரிக்கட்டு நிமிர்ந்தும் நின்றும் இருந்தது;
ஆனால் இதோ உங்கள் அரிக்கட்டுகள்
அதைச் சுற்றி என்னுடைய அரிக்கட்டை
வணங்கிக்கொண்டனவென்றான்.
௮ அப்பொழுது அவன் சகோதரர் அவ
னோடே, நீ எங்கள்மேல் துரைத்தனம்பண்
ணவே பண்ணுவாயோ, நீ எங்களை ஆள
வே ஆளுவாயோ என்று சொல்லி, அவனை
அவன் சொப்பனங்களின் நிமித்தமும்,
அவன் வார்த்தைகளின் நிமித்தமும், இன்
னம் அதிகமாய்ப் பகைத்தார்கள்.
௯ ¶ அவன் வேறொரு சொப்பனத்தைக்
கண்டு, அதைத் தன் சகோதரருக்கு விவ
ரித்துச் சொன்னதாவது: இதோ இன்னம்
ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; இதோ
சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்
திரங்களும் என்னை வணங்கிக்கொண்டன
வென்றான்.
௰ இதை அவன் தன் தகப்பனுக்கும்
தன் சகோதரருக்கும் விவரித்தபொழுது,
அவன் தகப்பன் அவனை அதட்டி அவனோ
டே, நீ கண்ட இந்தச் சொப்பனமேது,
தரைமட்டும் குனிந்து உன்னை வணங்க நா
னும் உன் தாயாரும் உன் சகோதரரும் வர
வே வருவோமோ என்றான்.
௰௧ அவன் சகோதரர் அவன்மேல் பொ
றாமை ஆனார்கள்; அவன் தகப்பனோவெ
னில், இந்த வர்த்தமானத்தை மனதிலே
வைத்துக்கொண்டான்.
௰௨ ¶ அவன் சகோதரர் சீகேமிலே தங்
கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கப்
போனார்கள்.
௰௩ இஸ்ரவேல் யோசேப்போடே, உன்
சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறார்
கள்அல்லவோ? அங்கேபோ, உன்னைஅவர்
களண்டைக்கு அனுப்புவேன், வா என்
றான்; இவன் இதோ நான் போகிறேனென்
றான்.
௰௪ அப்பொழுது அவன், நீ போய், உன்
சகோதரர் எப்படி இருக்கிறார்களென்றும்
ஆடுகள் எப்படி இருக்கின்றனவென்றும்
பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டுவா
என்று அவனுக்குச் சொல்லி, எபிரோன்
பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப்
பினான்; அப்படியே சீகேமுக்குப்போனான்.
௰௫ ¶ அப்பொழுது இதோ, ஒரு மனி
தன் அவனை வெளியிலே வழிதப்பி நடக்
கக்கண்டு, என்ன தேடுகிறாயென்று அவ
னைக் கேட்டான்.

Digitized by Google

௰௬ அதற்கு அவன், என் சகோதரரைத்
தேடுகிறேன், அவர்கள் எங்கே ஆடுமேய்க்
கிறார்களென்று எனக்கு அறிவியுமென்றான்.
௰௭ அந்த மனிதன் அவர்கள் இங்கேயி
ருந்து புறப்பட்டுப்போனார்கள்; ஏனென்
றால் தோத்தானுக்குப் போவோமென்று
அவர்கள் சொல்லக் கேட்டேனென்றான்;
அப்பொழுது யோசேப்பு தன் சகோதர
ரைப் பின்றொடர்ந்துபோய், அவர்களைத்
தோத்தானிலே கண்டுபிடித்தான்.
௰௮ அவர்கள் அவனைத் தூரத்திலே கண்ட
பொழுது, அவன் தங்கள் அருகில் சேராத
தற்கு முன்னே அவனுக்கு விரோதமாய்
அவனைக் கொலைசெய்யச் சதியோசனை
பண்ணி,
௰௯ ஒருவரோடொருவர், இதோ சொப்
பனக்காரன் அங்கே வருகிறான்.
௨௰ இப்பொழுதும் நாம் அவனைக் கொ
ன்று, குழிகளில் ஒன்றிலே அவனைப் போட்
டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்த
தென்றுசொல்லி, அவன் சொப்பனங்கள்
என்னவாமென்று பார்ப்போம் வாருங்க
ளென்றார்கள்.
௨௧ ஆனால் ரூபன் இதைக்கேட்டு,
அவன் சீவனைக் கொல்லாதிருப்போமாக
வென்று சொல்லி, அவனை அவர்கள் கைக்
குத் தப்புவித்து,
௨௨ நீங்கள் இரத்தம் சிந்தவேண்டாம்;
நீங்கள் அவன்மேல் கைபோடாமல், அவ
னை வனாந்தரத்தில் இருக்கிற அந்தக் குழி
யிலே போடுங்களென்று, ரூபன் அவனை
அவர்கள் கைக்குத் தப்புவிக்கும்படிக்கும்
அவனை அவன் தகப்பனண்டைக்குத் திரு
ம்பக் கொண்டுபோகும்படிக்கும் அவர்க
ளோடே சொன்னான்.
௨௩ ¶ சம்பவித்ததேதென்றால் யோசேப்பு
தன் சகோதரரண்டைக்கு வந்தபொழுது,
அவர்கள் யோசேப்பு உடுத்துக்கொண்டி
ருந்த பலவருணை அங்கியாகிய அவன்
அங்கியைக் கழற்றி,
௨௪ அவனை எடுத்து, அந்தக் குழியிலே
போட்டார்கள்; அது தண்ணீரில்லாத
வெறுங்குழியாய் இருந்தது.
௨௫ பிற்பாடு அவர்கள் அப்பம்சாப்பிட
உட்கார்ந்தார்கள்; அவர்கள் தங்கள் கண்
களை ஏறெடுக்கும் பொழுதோவெனில்,
இதோ கிலேயாத்திலிருந்து வருகிற இஸ்ம
வேலருடைய கூட்டத்தை வரக்கண்டார்
கள்; அவர்களுடைய ஒட்டகங்கள் சம்பா
ரங்களையும் பிசின்தயிலத்தையும் வெள்ளைப்
போளத்தையும் எகிப்திற்குக்கொண்டுபோ
கச் சுமந்துநடந்தன.
௨௬ அப்பொழுது யூதா தன் சகோதர
ரோடே சொன்னதாவது: நாம் நம்முடை
ய சகோதரனைக் கொன்று, அவன் இரத்தத்
தை மறைப்பதினாலே ஆதாயம் என்ன?
௨௭ அவனை இஸ்மவேலருக்கு விற்போம்
வாருங்கள்; நமது கை அவன்மேல் இரா
திருப்பதாக; ஏனெனில் அவன் நம்மு
டைய சகோதரனும், நம்முடைய மாம்
சமுமாய் இருக்கிறானென்றான்; அவன்
சகோதரர் அவன் சொல்லைக் கேட்டார்கள்.
௨௮ ஆனால் வர்த்தகரான மீதியானியர்
கடந்துபோகிறபொழுது, அவர்கள் யோ
சேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கி
எடுத்து, யோசேப்பை இஸ்மவேலர் கை
யில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றார்
கள்; இவர்கள் யோசேப்பை எகிப்திற்குக்
கொண்டுபோனார்கள்.
௨௯ ரூபன் திரும்ப அந்தக் குழி அண்
டைக்கு வந்து, இதோ யோசேப்பு குழியில்
இல்லையென்று கண்டு, தன் வஸ்திரங்களைக்
கிழித்து,
௩௰ தன் சகோதரரண்டைக்குத் திரும்பி
வந்து, இளைஞன் இல்லையே, நான் எங்கே
போகப்போகிறேன் என்றான்.
௩௧ ¶ அவர்கள் யோசேப்பின் அங்கியை
எடுத்துக்கொண்டு, ஒரு வெள்ளாட்டுக்க
டாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்
திலே கறைப்படுத்தி,
௩௨ பலவருணமான அந்த அங்கியைத் தங்
கள் தகப்பன் அண்டைக்குக் கொண்டு

Digitized by Google

போகச்சொல்லி, இதை நாங்கள் கண்டுபிடித்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ அல்லவோ என்று பாரும் என்றுசொல்லி அனுப்பினார்கள்.

௩௩ அவன் அதை அறிந்து, இது என் குமாரனுடைய அங்கி, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது; யோசேப்பு பீறுண்ணவே பீறுண்டானென்றான்.

௩௪ யாக்கோபு தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தன் அரையில் இரட்டுக்கட்டிக்கொண்டு, அநேகநாள் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

௩௫ அவனுடைய எல்லாக்குமாரரும் அவனுடைய எல்லாக்குமாரத்திகளும் அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்துநின்றார்கள்; ஆனால் அவன் ஆறுதலுக்கு இடம் கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனண்டையில் குழியில் இறங்குவேனென்று சொல்லி, அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான்.

௩௬ மீதியானியரோவென்றால், அவனை எகிப்திலே பார்வோனின் பிரதானியாகிய போத்திபாரென்ற தலையாரிகளின் அதிபதிக்கு விற்றார்கள்.

௩௮. அதிகாரம்.

அக்காலத்திலே சம்பவித்ததேதென்றால், யூதா தன் சகோதரரைவிட்டு இறங்கிப்போய், அதொல்லாம் ஊரானாகிய ஒரு மனிதனைச் சேர்ந்தான்; அவன்பேர் இரா.

௨ அங்கே யூதா, சூவாவென்று பேருள்ள ஒரு கானானிய மனிதன் குமாரத்தியைக் கண்டு, அவளை விவாகம்பண்ணி, அவளிடத்தில் பிரவேசித்தான்.

௩ அவள் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு ஏரென்று பேரிட்டான்.

௪ அவள் மறுபடியும் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்கு ஓனானென்று பேரிட்டாள்.

௫ அவள் திரும்பக் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்குச் சேலாவென்று பேரிட்டாள்; அவள் இவனைப் பெறுகிறபொழுது அவன் கேசிபிலே இருந்தான்.

௬ ¶ யூதா தனக்கு முதல்பிறந்தவனாகிய ஏருக்கு, தாமாரென்று பேருள்ள ஒரு பெண்ணைக்கொண்டான்.

௭ ஆனால் யூதாவுக்கு முதல்பிறந்த ஏரென்றவன் கர்த்தரின் கண்களுக்குமுன்பாகப் பொல்லாதவனானதினாலே, கர்த்தர் அவனைக் கொன்றுபோட்டார்.

௮ அப்பொழுது யூதா ஓனானுடனே, நீ உன் தமையன் பெண்சாதியினிடத்தில் பிரவேசித்து, அவளை மைத்துனச்சுதந்தரமாய்ப் படைத்து, உன் தமையனுக்கு வித்தை உண்டாக்கென்றான்.

௯ ஆனால் அந்த வித்துத் தன்னுடைய தாயிராதென்று ஓனான் அறிந்தபடியினாலே, அவன் தன் தமையன் பெண்சாதியினிடத்தில் பிரவேசிக்கும்பொழுது, தன் தமையனுக்கு வித்தைக் கொடாதபடிக்கு அதைத் தரையிலே விழவிட்டுக் கெடுத்தான்.

௰ அவன் செய்தது கர்த்தரின் கண்களுக்குமுன்பாகப் பொல்லாததானதினாலே, அவனையும் அவர் கொன்றுபோட்டார்.

௰௧ அப்பொழுது யூதா தன் மருமகளாகிய தாமாருடனே, என் குமாரனாகிய சேலா பெரியவனாகும்மட்டும் உன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்சாதியாய்த் தங்கியிரு என்றான்; ஏனெனில் இவனும் தன் சகோதரரைப்போலச் சாவானோ என்று அஞ்சிக்கையாயிருந்தான்; அப்படியே தாமார் போய்த் தன் தகப்பன்வீட்டிலே தங்கியிருந்தாள்.

௰௨ ¶ அநேகநாள் சென்றபிற்பாடு சூவாவின் குமாரத்தியாகிய யூதாவின்பெண்சாதி மரித்தாள்; யூதா துக்கம் ஆறினபிற்பாடு, திம்னாவுக்குத் தன் ஆடுகளை மயிர்கத்திரிக்கிறவர்களண்டையில் போயேறினான்; அவனும் அதொல்லாம் ஊரானாகிய இரா என்ற அவன் சிநேகிதனும் கூடத்தானே.

Digitized by Google

௰௩ அப்பொழுது தாமாருக்கு, இதோ உன் மாமனார் தம்முடைய ஆடுகளை மயிர் கத்திரிக்கத் திம்னாவுக்குப் போயேறுகிறாரென்று அறிவிக்கப்பட்டது.

௰௪ அப்பொழுது அவள், சேலா பெரியவனாயிருந்தும் தான் அவனுக்குப் பெண்சாதியாகக் கொடுக்கப்பட்டதில்லையென்று கண்டபடியினாலே, தன் கைம்பெண் இருப்பின் வஸ்திரங்களைத் தன்னைவிட்டு விலக்கி, முக்காடுபோட்டு மூடிக்கொண்டு, திம்னாவுக்குப் போகிற வழியிலிருக்கிற நீரூற்றுகளுக்குமுன்பாக உட்கார்ந்தாள்.

௰௫ யூதா அவளைக் கண்டு அவள் ஒரு வேசியென்று நினைத்தான்; ஏனெனில் தன் முகத்தை மூடியிருந்தாள்.

௰௬ அவன் வழியிலே அவளிடமாய்த் திரும்பி, அவள் தன் மருமகளென்றறியாமல், நான் உன்னிடத்தில் பிரவேசிக்கட்டும் என்றான்; அப்பொழுது அவள், நீர் என்னிடத்தில் பிரவேசிக்கும்படிக்கு எனக்கென்ன தருவீரென்றாள்.

௰௭ அதற்கவன், நான் மந்தையிலிருந்து ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அனுப்புவேன் என்றான்; இதற்கவள், நீர் அதை அனுப்புமட்டும் ஒரு அடைமானம் கொடுத்தால் ஆமென்றாள்.

௰௮ அப்பொழுது அவன், நான் உனக்குக் கொடுக்கவேண்டிய அடைமானம் என்னவென்று கேட்டான்; அப்பொழுது அவள், உம்முடைய மோதிரமும் உம்முடைய கைச்சிலையும் உம்முடைய கையிலிருக்கிற உம்முடைய கோலுமே என்றாள்; அவன் இவைகளை அவளுக்குக் கொடுத்து, அவளிடத்தில் பிரவேசித்தான்; அவள் அவனால் கர்ப்பந்தரித்து,

௰௯ பிற்பாடு எழுந்திருந்துபோய், தன் முக்காட்டைத் தன்னைவிட்டு விலக்கி, தன் கைம்பெண் இருப்பின் வஸ்திரங்களை உடுத்துக்கொண்டாள்.

௨௰ அந்த அடைமானத்தை ஸ்திரியின் கையிலே வாங்கிவர யூதா அதொல்லாம் ஊரானாகிய தன் சிநேகிதன் கையிலே வெள்ளாட்டுக்குட்டியை அனுப்பினான்; இவன் அவளைக் காணாமல்,

௨௧ அவ்விடத்து மனிதரை வழியண்டை நீரூற்றுகளருகே இருந்த சோரஸ்திரி எங்கே என்று கேட்டான்; அதற்கவர்கள், இங்கே சோரஸ்திரி இருந்ததில்லை என்றார்கள்.

௨௨ அவன் யூதாவண்டைக்குத் திரும்பி வந்து, அவளைக் காணேன், அங்கே சோரஸ்திரி இருந்ததில்லை என்று அவ்விடத்து மனிதரும் சொல்லுகிறார்கள் என்றான்.

௨௩ அப்பொழுது யூதா, நாங்கள் அவகீர்த்திப்படாதபடிக்கு அவள் அதைக் கொண்டுபோகட்டும், இதோ இந்த ஆட்டுக்குட்டியை அனுப்பினேனே, நீயோவென்றால் அவளைக் காணாதேபோனாயென்றான்.

௨௪ ஏறக்குறைய மூன்றுமாதம் சென்றபின்பு சம்பவித்ததேதெனில், உன் மருமகளாகிய தாமார் வேசித்தனம்பண்ணினாள்; இதோ வேசித்தனத்தில் கர்ப்பிணியுமானாள் என்று யூதாவுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது யூதா அவள் சுட்டெரிக்கப்பட அவளை வெளியே கொண்டுவாருங்கள் என்றான்.

௨௫ அவள் வெளியே கொண்டுவரப்பட்டபொழுது, அவள் தன் மாமனாரண்டைக்கு ஆள் அனுப்பி, இவைகள் எவருடையவைகளோ அவராலே நான் கர்ப்பிணியாயிருக்கிறேன்; இந்த மோதிரமும் இந்தக் கைச்சிலையும் இந்தக் கோலும் யாருடையவைகளென்று பாருமென்று சொல்லி அனுப்பினாள்.

௨௬ அப்பொழுது யூதா அவைகளை அறிந்து, என்னிலும் நீதியுள்ளவளாய் இருக்கிறாள்; ஏனென்றால் அவளை என் குமாரனாகிய சேலாவுக்குக் கொடாதேபோனேன் என்றான்; அப்புறம் அவன் அவளை அறிந்ததில்லை.

௨௭ ¶ அவளுக்குப் பேறுகாலம் வந்தபொழுது, இதோ இரட்டைப்பிள்ளைகள் அவள் கர்ப்பத்திலிருந்தன.

௨௮ அவள் பெறுகிறபொழுது ஒன்று கை

Digitized by Google

யை நீட்டிற்று; அப்பொழுது மருத்துவச்சி அதின் கையைப்பிடித்து, அதில் சிவப்புநூலைக்கட்டி, இது முந்த வெளிப்படுகிறதென்றாள்.

௨௯ ஆனால் அது தன் கையைத் திரும்ப வாங்கிக்கொண்டபொழுது, இதோ அதின் சகோதரன் வெளிப்பட்டான்; அப்பொழுது அவள் நீ பீறிப்புறப்பட்டதென்ன? உன்மேல் இந்தப் பீறுதல் இருக்கிறதென்றாள், அதினாலே அவனுக்குப் *பேரேஸ் என்று பேரிடப்பட்டது. *மத். ௧. ௩.

௩௰ பிற்பாடு கையில் சிவப்புநூல் கட்டியிருந்த, அவன் தம்பி வெளிப்பட்டான்; அவனுக்குச் சேராவென்று பேரிடப்பட்டது.

௩௰௯. அதிகாரம்.

யோசேப்பு *எகிப்திலே கொண்டுபோகப்பட்டான்; பார்வோனின் பிரதானியும் தலையாரிகளின் அதிபதியுமாகிய போத்திபாரென்ற எகிப்திய மனிதன் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரின் கையிலே கொண்டான். *க மோ. ௩௭. ௩௬.

௨ ஆனால் கர்த்தர் யோசேப்போடேகூட இருந்தார்; அவன் காரிய சமர்த்தனான மனிதனாய், எகிப்தியனாகிய தன் எசமானனுடைய வீட்டிலே இருந்தான்.

௩ கர்த்தர் அவனோடே இருக்கிறாரென்றும், அவன் செய்கிறவைகளை எல்லாம் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறாரென்றும், அவன் எசமானன் கண்டான்.

௪ ஆகையால் யோசேப்புக்கு அவன் கண்களில் தயவுகிடைத்தது; அவனுக்கு இவன் ஊழியக்காரனானான்; அவன் இவனைத் தன் வீட்டுக்கு விசாரிப்புக்காரனாக்கி, தனக்கு உண்டானவை எல்லாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.

௫ சம்பவித்ததேதெனில், அவன் இவனைத் தன் வீட்டுக்கும் தனக்குண்டானவைகள் எல்லாவற்றிற்கும் விசாரிப்புக்காரனாக்கினதுமுதல்கொண்டு, கர்த்தர் யோசேப்பின்நிமித்தம் எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்குண்டானவைகளிலெல்லாம் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது.

௬ ஆகையால் அவன் தனக்குண்டானவைகளை எல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புவித்துவிட்டு, தான் புசிக்கிற போசனம் தவிர இவனிடத்திலிருந்த மற்றொன்றுக்கும் கவலைப்படாதிருந்தான்; யோசேப்போவெனில், அழகான ரூபமும் பார்வைக்குச் சவுந்தரியமுமாய் இருந்தான்.

௭ ¶ இந்த வர்த்தமானங்களுக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில், அவனுடைய எசமானனின் பெண்சாதி யோசேப்பின் மேலே கண்ணோட்டமாகி, என்னோடே சயனி என்றாள்.

௮ ஆனால் அவன் அவள் சொல்லைக்கேளாமல், தன் எசமானனின் பெண்சாதியோடே சொன்னதாவது: இதோ வீட்டிலே என்னோடிருக்கிறவைகளில் ஒன்றுக்காகிலும் என் ஆண்டவன் கவலைப்படாமல், தமக்குண்டானவைகளை எல்லாம் என் கையில் ஒப்புவித்தார்.

௯ இந்தவீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கிவைத்ததில்லை; ஏனெனில் நீ அவருடைய பெண்சாதி; இப்பொழுதும் நான் இத்தனைபெரிய இந்தப் பொல்லாப்பைப்பண்ணி, பராபரனுக்கு விரோதமாய்ப் பாவம்செய்வது எப்படி என்றான்.

௰ அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே அப்படிக்கொத்த பேச்சைச் சொல்லுவாள்; ஆனால் அவன் அவளுக்குச் சமீபமாய்ப் படுத்துக்கொள்ளவும் அவளோடிருக்கவும் அவளுக்குச் செவிகொடாதே போகிறபொழுது,

௰௧ ஒருநாள் சம்பவித்ததேதெனில், அவன் தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டுக்குள் வந்தான்; வீட்டு மனிதரில் ஒருவரும் அப்பொழுது அங்கே வீட்டிலே இல்லை.

Digitized by Google

௰௨ அப்பொழுது அவள் அவனை அவன் வஸ்திரத்தைப் பற்றிப்பிடித்து, என்னோடே சயனி என்றாள்; அவனோவென்றால் தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டோடி வெளியே புறப்பட்டுப்போனான்.

௰௩ அவன் தன் வஸ்திரத்தைத் தன் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனதை அவள் கண்டபொழுது,

௰௪ அவள் தன் வீட்டு மனிதரைக் கூப்பிட்டு அவர்களுக்குச் சொன்னதாவது: பாருங்கள், எபிரேய மனிதனை நம்மைச் சரசம்பண்ணும்படிக்கு நமக்குக் கொண்டு வந்தார், அவன் என்னோடே சயனிக்கிறதற்காக என்னண்டை வந்தான்; ஆனால் மகா சத்தமாய்க் கூப்பிட்டேன்.

௰௫ நான் என் சத்தத்தை உயர்த்திக் கூப்பிடுகிறதை அவன் கேட்டபொழுது, அவன் தன் வஸ்திரத்தை என்னண்டையில் விட்டோடி வெளியே புறப்பட்டுப்போனான் என்று சொல்லி,

௰௬ அவனுடைய எசமானன் வீட்டிற்கு வரும்மட்டும் அவன் வஸ்திரத்தைத் தன் கிட்டவைத்து,

௰௭ அவனோடே அந்த வார்த்தைகளுக்குச் சரியாகப்பேசி, நீர் எங்களுக்குக் கொண்டுவந்த அந்த எபிரேய வேலைக்காரன் என்னைச் சரசம்பண்ண என்னண்டை வந்தான்.

௰௮ அப்பொழுது சம்பவித்ததேதெனில், நான் என்சத்தத்தை உயர்த்திக் கூப்பிடுகிறபொழுது, அவன் தன் வஸ்திரத்தை என்னண்டைவிட்டு வெளியே ஓடிப்போனான் என்றாள்.

௰௯ உம்முடைய வேலைக்காரன் எனக்கு இப்படிச் செய்தானென்று தன் பெண்சாதி தன்னோடே சொன்ன வார்த்தைகளை அவனுடைய எசமானன் கேட்டபொழுதோவெனில், அவனுக்குக் கோபம் மூண்டது.

௨௰ அப்பொழுது யோசேப்பின் எசமானன் அவனைப் பிடித்து, இராசாவின் கட்டளையால் கட்டுண்டவர்கள் கிடக்கிற காவல் வீட்டிலே அவனை ஒப்புவித்தான்; அங்கே அந்தக் காவல்வீட்டில் அவன் இருந்தான்.

௨௧ ஆனால் கர்த்தர் யோசேப்போடே கூட இருந்து, அவன்மேலே கிருபைவைத்து, அவனுக்குக் காவல்வீட்டுத் தலைவன் கண்களில் தயவுகிடைக்கப்பண்ணினார்.

௨௨ காவல்வீட்டுத் தலைவன் காவல்வீட்டிலே கட்டுண்டிருந்த யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான்; அங்கே செய்யவேண்டியவைகளை எல்லாம் அவன் செய்தான்.

௨௩ அவன் கையிலிருந்த ஒன்றையும் காவல்வீட்டுத்தலைவன் கண்ணோக்கினதில்லை; ஏனெனில் கர்த்தர் அவனோடேகூட இருந்தார்; அவன் எதைச்செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினார்.

௪௰. அதிகாரம்.

இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில், எகிப்தின் இராசாவுக்குப் பானம்கொடுக்கிறவனும் அப்பம் சுடுகிறவனும் எகிப்தின் இராசாவாகிய தங்கள் ஆண்டவனுக்குக் குற்றம்செய்தார்கள்.

௨ அப்பொழுது பார்வோன் தன்னுடைய இரண்டு பிரதானிகளாகிற பானம்கொடுக்கிறவர்களின் தலைவன்மேலும் அப்பம் சுடுகிறவர்களின் தலைவன்மேலும் கடுங்கோபமாகி,

௩ அவர்களை யோசேப்புக்கட்டுண்டிருந்த காவல் வீடாகிய தலையாரிகளின் தலைவன் வீட்டிலே காவல்பண்ணுவித்தான்.

௪ ¶ அப்பொழுது தலையாரிகளின்தலைவன் அவர்களை விசாரிக்கும் வேலைக்கு யோசேப்பை வைத்தான்; இவன் அவர்களுக்கு ஊழியம்செய்தான்; அவர்கள் அநேகம் நாள் காவலில் இருந்தார்கள்.

௫ ¶ ஆனால் எகிப்தின் இராசாவுக்குப் பானம்கொடுத்தவனும் அப்பம் சுட்டவனுமாகியகாவல்வீட்டில் கட்டுண்டிருந்த அவ்விரண்டுபேரும் ஒரே இராத்திரியில் அவனும் இவனும் தங்களுக்கு வெவ்வேறே அர்த்

Digitized by Google

தமுள்ள சொப்பனங்களைக் கண்டார்கள்.

௬ காலமே யோசேப்பு அவர்களண்டை வந்து அவர்களைப் பார்க்கும்பொழுது, இதோ, கலங்கி இருந்தார்கள்.

௭ அப்பொழுது தன் எசமானனின் வீட்டில் தன்னோடே காவல்பண்ணப்பட்டிருந்த பார்வோனின் பிரதானிகளை அவன், உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது ஏதென்று கேட்டான்.

௮ அவர்கள் அவனுடனே, சொப்பனம் கண்டோம், அதை வியார்த்திபண்ணுகிறவன் இல்லை என்றார்கள்; அப்பொழுது யோசேப்பு அவர்களுடனே, வியார்த்திபண்ணுதல் பராபரனுடையதல்லவோ? எனக்கதை விவரியுங்கள் என்றான்.

௯ அப்பொழுது பானம்கொடுக்கிறவர்களின் தலைவன் யோசேப்புக்குத் தன் சொப்பனத்தை விவரித்து அவனுக்குச் சொன்னதாவது: என் சொப்பனத்தில் இதோ, ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாக இருந்தது.

௰ அந்தத் திராட்சச்செடியிலே மூன்று கொடிகள் இருந்தது; அது துளிர்க்கிறதாயிருந்தது; அதின் பூக்கள் புறப்பட்டன; அதின் குலைகள் பழங்களாகப் பழுத்தது.

௰௧ பார்வோனின் பாத்திரம் என் கையில் இருந்தது; நான் அந்தப் பழங்களை வாங்கி, அவைகளைப் பார்வோனின் பாத்திரத்தில் பிழிந்து, அந்தப் பாத்திரத்தைப் பார்வோனின் கையிலே கொடுத்தேன் என்றான்.

௰௨ அப்பொழுது யோசேப்பு அவனுக்குச் சொன்னதாவது: அதின் அர்த்தமென்னவெனில், அந்த மூன்று கொடிகள் மூன்றுநாளாய் இருக்கின்றன.

௰௩ இன்னம் மூன்று நாளுக்குள்ளே பார்வோன் உம்முடைய தலையை உயர்த்தி, உம்மைத் திரும்ப உமது நிலையிலே நிறுத்துவார்; அப்பொழுது நீர் அவருக்குப் பானம்கொடுத்த முந்தின வழக்கத்தின்படியே, பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பீர்.

௰௪ ஆனால் நீர் சுகவாழ்வாய் இருக்கிறபொழுது, என்னை நினைத்து, என்மேலே தயவுவைத்து, பார்வோனுக்கு என் செய்தியை நினைப்பூட்டி, என்னை இந்த வீட்டிலிருந்து வெளிப்படப்பண்ணும்.

௰௫ ஏனெனில் எபிரேயதேசத்திலிருந்து திருட்டளவாய் விலைப்பட்டுவந்தேன்; என்னை இந்தக் கிடங்கிலே வைக்கிறதற்கு இவ்விடத்திலே நான் ஒன்றும் செய்ததுமில்லை என்றான்.

௰௬ ¶ நன்றாய் அர்த்தம் சொன்னானென்று அப்பம் சுடுகிறவர்களின் தலைவன் கண்டு, யோசேப்போடேசொன்னதாவது: நானும் என் சொப்பனத்தில் கண்டதேதென்றால், இதோ வெண்மையான மூன்று கூடை என் தலையின்மேல் இருந்தன.

௰௭ மேல்கூடையிலே அப்பம்சுடுகிறவனுடைய வேலையான பார்வோனுடைய சகலவித போசனத்திலும் சில இருந்தன; அவைகளைப் பறவைகள் வந்து என் தலையின்மேல் இருந்த கூடையிலெடுத்துப்பட்சித்தன என்றான்.

௰௮ அப்பொழுது யோசேப்புப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: அதின் அர்த்தம் ஏதெனில், அந்த மூன்று கூடைகள் மூன்றுநாளாய் இருக்கின்றன.

௰௯ இன்னம் மூன்று நாளுக்குள்ளே பார்வோன் உம்முடைய மேலிருக்கிற உம்முடைய தலையை உயர்த்தி, உம்மை மரத்திலே தூக்கிப்போடுவிப்பார்; அப்பொழுது பறவைகள் உம்முடைய மாம்சத்தைத் தின்னுமென்றான்.

௨௰ ¶ பார்வோன் சென்மநாளாகிய மூன்றாம் நாளில் சம்பவித்ததேதெனில், அவன் தன் ஊழியக்காரருக்கு எல்லாம் ஒரு விருந்துபண்ணி, பானம்கொடுக்கிறவர்களுடைய தலைவன் தலையையும் அப்பம்சுடுகிறவர்களுடைய தலைவன் தலையையும் தம்முடைய ஊழியக்காரரின் நடுவே உயர்த்தி,

௨௰௧ பானம் கொடுக்கிறவர்களின் தலைவனைப் பானம்கொடுக்கிற தன் உத்தியோ

Digitized by Google

கத்திற்குத் திரும்பிவரப்பண்ணினான்; அப்படியே அவன் பார்வோன்கையிலே பாத்திரத்தைக் கொடுத்தான்.

௨௨ அப்பம் சுடுகிறவர்களின் தலைவனையோவென்றால், தூக்கிப்போடுவித்தான்; யோசேப்பு அவர்களுக்கு அர்த்தம் சொன்னதற்குச் சரியாகத்தானே.

௨௩ ஆனால் பானம்கொடுக்கிறவர்களின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்தான்.

௪௧. அதிகாரம்.

இரண்டுவருஷம் சென்றபிற்பாடு சம்பவித்ததேதென்றால், பார்வோன் ஒரு சொப்பனத்தைக் கண்டான்; அதேதெனில் இதோ, நதியண்டையிலே நின்றான்.

௨ அப்பொழுது இதோ நேர்த்தியான ரூபமும் மாம்சக் கொழுப்புமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிப் புல்மேய்ந்தன.

௩ ஆனால் இதோ, அவைகளின்பிறகே அவலட்சணரூபமும் மாம்சச்சீவனுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறி, நதி ஓரத்திலே அந்தப் பசுக்களண்டையிலே நின்றன.

௪ அவலட்சண ரூபமும் மாம்சச்சீவனுமான இந்தப் பசுக்கள், நேர்த்தியான ரூபமும் கொழுப்புமான அந்த ஏழுபசுக்களைப் பட்சித்தன; அப்பொழுது பார்வோனுக்கு நித்திரை தெளிந்தது.

௫ பிறகு அவன் நித்திரைபோய் இரண்டாம்விசை கண்ட சொப்பனமாவது: இதோ, கனமான ஏழு நல்ல கதிர்கள் ஒரே முதலிலிருந்து ஓங்கிவளர்ந்தன.

௬ ஆனால் இதோ, அவைகளுக்குப்பிற்பாடு சாவியானவைகளும்கொண்டல்காற்றினால் தீய்ந்தவைகளுமான ஏழு கதிர்கள் முளைத்தன.

௭ சாவியான இந்தக் கதிர்கள் கனமும் நிறைபலனுமான அந்த ஏழுகதிர்களை விழுங்கின; அப்பொழுது பார்வோன் விழித்துக்கொண்டான்; இதோ அது சொப்பனமாயிருந்தது.

௮ ¶ சம்பவித்ததேதெனில், காலமே அவனுடைய ஆவி கலங்கியிருந்தது; அப்பொழுது அவன் எகிப்திலுடைய சகல சாஸ்திரிகளையும் சகல ஞானிகளையும் அழைத்தனுப்பி, அவர்களுக்குத் தன் சொப்பனங்களைப் பார்வோன் விவரித்தான்; ஆனால் பார்வோனுக்கு அவைகளின் அர்த்தத்தைச் சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை.

௯ அப்பொழுது பானம்கொடுக்கிறவர்களின் தலைவன் பார்வோனுடனே பேசிச் சொன்னதாவது: இன்று நான் என் பாவங்களை நினைக்கிறேன்.

௰ பார்வோன் தம்முடைய ஊழியக்காரர்மேல் கடுங்கோபம் அடைந்து, என்னையும் அப்பம்சுடுகிறவர்களின் தலைவனையும் தலையாரிகளின் தலைவன் வீட்டிலே காவலிலே வைத்தாரே.

௰௧ அப்பொழுது நானும் அவனும் ஒரே இராத்திரியிலே எங்களுக்கு வெவ்வேறே அர்த்தமாகிய சொப்பனங்களைக் கண்டோம்.

௰௨ அப்பொழுது தலையாரிகளின் தலைவனுக்கு வேலைக்காரனாகிய எபிரேய பிள்ளையாண்டான் ஒருவன் அங்கே எங்களோடே இருந்தான்; அவனுக்கு அவைகளை விவரித்தோம்; அப்பொழுது எங்கள் சொப்பனங்களுக்கிருந்த வெவ்வேறே அர்த்தங்களின்படியே, எங்களுக்கு அவன் எங்கள் சொப்பனங்களின் வியார்த்தியைச் சொன்னான்.

௰௩ அவன் எங்களுக்கு எப்படி வியார்த்தி சொன்னானோ, அப்படியே வந்து சம்பவித்தது; என்னைத் திரும்ப என் நிலையிலே நிறுத்தி, அவனைத் தூக்கிப்போடுவித்தாரென்றான்.

௰௪ ¶ அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைத்தனுப்பினான்; அவனைத் தீவிரமாய்க் கிடங்கிலிருந்து புறப்படப்பண்ணினார்கள்; அவன் சவரம்பண்ணிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றிப் பார்வோனண்டைக்கு வந்தான்.

௰௫ அப்பொழுது பார்வோன் யோசேப்

Digitized by Google

யோடே சொன்னதாவது: ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; அதின் அர்த்தத்தைச் சொல்லுகிற ஒருவரும் இல்லை; நீயோவென்றால் ஒரு சொப்பனத்தைக் கேட்டால், அதின் அர்த்தத்தைச் சொல்லலாமென்று நான் உன்னைக்குறித்துக் கேள்விப்பட்டேன் என்றான்.

௰௬ அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தாரமாக: *நான் அல்ல, பராபரன்தானே பார்வோனுக்குச் சமாதானமுள்ள உத்தரவு அருளிச்செய்வாரென்றான். *௧ மோ. ௪௰. ௮. தானி. ௨. ௩௰.

௰௭ பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: என் சொப்பனத்திலே இதோ நான் நதியோரத்திலே நின்றேன்.

௰௮ அப்பொழுது இதோ, மாம்சக்கொழுப்பும் நேத்தியான ரூபமுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்தேறிப் புல்மேய்ந்தன.

௰௯ ஆனால் இதோ அவைகளின் பிறகாலே நரம்பனும் மகா அவலட்சண ரூபமும் மாம்சச் சிவனுமான வேறே ஏழுபசுக்கள் ஏறிவந்தன; இவைகளைப்போல அவலட்சணமான பசுக்களை எகிப்துதேசமெங்கும் நான் கண்டதில்லை.

௨௰ சிவனும் அவலட்சணமுமான இந்தப் பசுக்கள் கொழுப்பான அந்த முந்தின ஏழு பசுக்களைப் பட்சித்துப்போட்டன.

௨௧ அவைகள் இவைகளின் வயிற்றிற்குள் பேசியும் இவைகளின் வயிற்றிற்குள் போயிற்றென்று தெரியப்படவில்லை; முன்னிருந்ததுபோல இவைகளின் ரூபம் அவலட்சணமாயிருந்தது; அப்பொழுது எனக்கு நித்திரை தெளிந்தது.

௨௨ பின்னையும் என் சொப்பனத்திலே நான் கண்டதாவது: இதோ, நிறைந்திருக்கிற ஏழு நல்ல கதிர்கள் ஒரே முதனிலிருந்து ஓங்கிவளர்ந்தன.

௨௩ ஆனால் அவைகளுக்குப்பிற்பாடு, இதோ, சாவியானவைகளும் கொண்டல் காற்றினால் தீய்ந்து பதரானவைகளுமான ஏழு கதிர்கள் முளைத்தன.

௨௪ சாவியான இந்தக் கதிர்கள் நல்லவைகளான அந்த ஏழு கதிர்களை விழுங்கின என்பதுதானே; இதைச் சாஸ்திரிகளுக்குச் சொன்னேன்; ஆனால் இதின் அர்த்தத்தை எனக்கு விடுவிக்கிறவன் இல்லை என்றான்.

௨௫ ¶ அப்பொழுது யோசேப்பு பார்வோனோடே சொன்னதாவது: பார்வோனின் சொப்பனம் ஒன்றுதான்; தாம் செய்யப்போகிறதைப் பராபரன் பார்வோனுக்கு அறிவித்தார்.

௨௬ அந்த ஏழு நல்ல பசுக்கள் ஏழு வருஷமாய் இருக்கின்றன; அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷம்தான்; இவை ஒரே சொப்பனமாய் இருக்கின்றன.

௨௭ அவைகளின் பிறகாலே ஏறிவந்த சிவனும் அவலட்சணமுமான ஏழு பசுக்கள் ஏழு வருஷமாய் இருக்கின்றன; கொண்டல் காற்றினால்தீய்ந்து சாவியான ஏழு கதிர்களும் அப்படித்தான்; இவைகள் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களாயிருக்கும்.

௨௮ பராபரன் செய்யப்போகிறதைப் பார்வோனுக்குக் காண்பித்தாரென்று பார்வோனுக்குச் சொன்னேனே, அது இந்த வர்த்தமானம்தான்.

௨௯ இதோ எகிப்து தேசமெங்கும் மகா பரிபூரணம் உண்டாயிருக்கிற ஏழு வருஷங்கள் வருகின்றன.

௩௰ ஆனால் அவைகளுக்குப்பிற்பாடு பஞ்சமுள்ள ஏழு வருஷங்கள் எழும்பும்; அப்பொழுது எகிப்துதேசத்தில் அந்தப் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டிருக்கும்; அந்தப் பஞ்சம் தேசத்தை மாளப்பண்ணும்.

௩௧ தேசத்திலிருந்த பரிபூரணம் பிற்பாடு வருகிற அந்தப் பஞ்சத்தினாலே தெரியப்படாதிருக்கும்; ஏனெனில் மகா கனமானதாயிருக்கும்.

௩௨ பார்வோனுக்கு இந்தச் சொப்பனம் இரட்டித்து வந்ததற்கு அர்த்தம் என்னவென்றால், இந்தக் காரியம் பராபரனால் நிச்சயமாய் நிருணிக்கப்பட்டது; அதைச்

Digitized by Google

செய்யப் பராபரன் தீவிரிக்கிறாரென்பது தானே.

௩௩ இப்பொழுதும் பார்வோன் உணர்வும் ஞானமுமுள்ள ஒரு மனிதனைப்பார்த்து, அவனை எகிப்துதேசத்தின்மேல் அதிகாரியாக வைக்கக்கடவர்.

௩௪ இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் மணியக்காரரை வைத்து, பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்து தேசத்தின் பலனிலே ஐந்தில் ஒருபங்கை வாங்குவாராக.

௩௫ அவர்கள் வருகிற இந்த நல்ல வருஷங்களின் ஆகாரத்தை எல்லாம் சேர்த்து, பட்டணங்களில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு, பார்வோனுடைய கையின் கீழ்த் தானிய அம்பாரங்களை வைத்துவைப்பார்களாக.

௩௬ தேசம் பஞ்சத்தினால் சங்காரமாகாதபடிக்கு, அந்த ஆகாரம் எகிப்துதேசத்தில் வரும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்காகத் தேசத்திற்கு ஒரு வைப்பாயிருக்கக்கடவதென்றான்.

௩௭ ¶ இந்த வார்த்தை பார்வோன் கண்களுக்கும் அவனுடைய எல்லா ஊழியக்காரரின் கண்களுக்கும் நன்றாயிருந்தது.

௩௮ அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரோடே, பராபரனுடைய ஆவியுள்ள இந்த மனிதனைப்போல ஒருவன் அகப்படுவானோ என்றான்.

௩௯ பிற்பாடு பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: பராபரன் இவை எல்லாம் உனக்கு அறிவித்திருக்கிறபடியால், உன்னைப்போல உணர்வும் ஞானமுமுள்ளவன் இல்லை.

௪௰ நீ என் வீட்டு விசாரிப்புக்காரனாய் இருப்பாய்; உன் வாக்கின்படியே என் சனமெல்லாம் வணங்கிச் செய்யக்கடவது; இராசா சனத்திற்குமாத்திரம் உன்னிலும் பெரியவனாய் இருப்பேனென்றான்.

௪௧ பின்னையும் பார்வோன் யோசேப்புடனே, பார், உன்னை எகிப்துதேசத்தின்மேலெல்லாம் அதிகாரியாக்கினேன் என்று சொல்லி,

௪௨ பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன்னுடைய மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய புடவையான வஸ்திரங்களை அவனுக்குத் தரிப்பித்து, பொன்சரப்பணியை அவன் கழுத்திலே போட்டு,

௪௩ தனக்கிருந்த இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏறப்பண்ணி, முழங்கால் படியிடுங்களென்று அவனுக்குமுன்பாகக் கூறுவித்து, அவனை எகிப்துதேசத்தின்மேலெல்லாம் அதிகாரியாக்கினான்.

௪௪ பார்வோன் யோசேப்புடனே, நான் பார்வோன்; ஆனால் உன்னை அல்லாமல் எகிப்துதேசமெங்கும் ஒருவரும் தன் கையையும் தன் காலையும் எடுப்பதில்லை என்றான்.

௪௫ பார்வோன் யோசேப்புக்கு, இரகசியங்களை வெளிப்படுத்துகிறவனென்ற பெயரைத்தரித்து, அவனுக்கு ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபேராவின் குமாரத்தியாகிய அஸ்நாத்தைப் பெண்சாதியாகக் கொடுத்தான்; யோசேப்பு எகிப்துதேசத்தைச் சுற்றிவரப் புறப்பட்டான்.

௪௬ ¶ யோசேப்பு எகிப்தின் இராசாவாகிய பார்வோனுக்குமுன்பாக நிற்கிறபொழுது, முப்பது வயதாயிருந்தான்; யோசேப்பு பார்வோனைவிட்டுப் புறப்பட்டு, எகிப்துதேசத்தை எல்லாம் கடந்தான்.

௪௭ பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் தேசம் மிகுதியாய்ப் பலன்தந்தது.

௪௮ எகிப்துதேசத்தில் வந்த அந்த ஏழு வருஷங்களின் ஆகாரத்தை எல்லாம் அவன் சேர்த்து, அந்த ஆகாரத்தைப் பட்டணங்களில் கட்டிவைத்தான்; ஒவ்வொரு பட்டணத்திற்குள்ளே அதினதின் சுற்றுப்புறத்து ஆகாரத்தையே கட்டிவைத்தான்.

௪௯ அப்படியே யோசேப்பு தானியத்தைக் கடற்கரை மணலைப்போல மிகவும் திரட்சியாக எண்ணி ஓயும்மட்டும் குவித்து

Digitized by Google

வைத்தான்; ஏனெனில் எண்ணிக்கைக்கு அடங்காததாயிருந்தது.

௫௰ ¶ பஞ்சமுள்ளவருஷங்கள்வராததற்கு முன்னே யோசேப்புக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள்; அவர்களை ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபேராவின் குமாரத்தியாகிய அஸ்நாத் அவனுக்குப் பெற்றாள்.

௫௧ யோசேப்பு முந்திப் பிறந்தவனுக்கு மனாசே என்று பேரிட்டான்; ஏனெனில் என்னுடைய எல்லா வருத்தத்தையும் என் தகப்பனுடைய வீட்டனைத்தையும் பராபரன் என்னை மறக்கப்பண்ணினாரென்றான்.

௫௨ இரண்டாம் குமாரனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்; ஏனெனில் நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்திலே பராபரன் என்னைப் பலுகப்பண்ணினாரென்றான்.

௫௩ ¶ எகிப்துதேசத்தில் வந்த பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களும் முடிந்தபொழுது,

௫௪ பஞ்சமுள்ள ஏழுவருஷங்கள் யோசேப்பு சொன்னபடியே வரத்துவக்கின; அப்பொழுது எல்லாத் தேசங்களிலும் பஞ்சம் உண்டாயிற்று; ஆனால் எகிப்துதேசமெங்கும் ஆகாரமிருந்தது.

௫௫ எகிப்துதேசமெங்கும் பஞ்சம் உண்டாகும்போது, சனம் அப்பத்திற்காகப் பார்வோனைநோக்கிக் கூப்பிட்டது; அப்பொழுது பார்வோன் எல்லா எகிப்தியருக்கும் நீங்கள் யோசேப்பண்டைக்குப்போய், அவன் உங்களுக்குச் சொல்லும்படியே செய்யுங்களென்றான்.

௫௬ பஞ்சம் தேசமெங்கும் உண்டாகும்போது, யோசேப்பு களஞ்சியங்களை எல்லாம் திறந்து, எகிப்தியருக்கு விற்றான்; ஏனெனில் பஞ்சம் எகிப்துதேசத்தில் கனமானதாயிற்று.

௫௭ சகல தேசங்களின் மனிதரும் யோசேப்பினிடத்திலே கொள்ள எகிப்திற்கு வந்தார்கள்; ஏனெனில் பூமியெங்கும் பஞ்சம் மிகுதியாயிருந்தது.

௪௨. அதிகாரம்.

எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு அறிந்தபொழுது, யாக்கோபு தன் குமாரருக்கு, நீங்கள் ஒருவரை ஒருவர் பார்க்கிறதென்ன?

௨ இதோ எகிப்திலே தானியம் உண்டென்றுகேட்டேன்; நாம் சாகாமல் உயிரோடிருக்கும்படிக்கு அங்கே இறங்கிப்போய், நமக்காகத் தானியம் கொள்ளுங்களென்றான்.

௩ அப்பொழுது யோசேப்பின் சகோதரரில் பத்துப்பேர் எகிப்திலே தானியம் கொள்ள இறங்கிப்போனார்கள்.

௪ ஆனால் யோசேப்பின் தம்பியாகிய பென்யமீனை யாக்கோபு அவன் சகோதரரோடேகூட அனுப்பாதே இருந்தான்; ஏனென்றால் அவனுக்கு ஒருவேளை ஒரு சேதம் வருமோவென்று சொன்னான்.

௫ அப்படியே கொள்ளுகிறதற்காக வருகிறவர்களோடேகூட இஸ்ரவேலின் குமாரரும் வந்தார்கள்; ஏனெனில் கானான்தேசத்திலே பஞ்சம் உண்டாயிருந்தது.

௬ யோசேப்போவென்றால், தேசத்தின் மேல் அதிகாரியாயிருந்து, அவனே தேசத்தின் சனத்திற்கெல்லாம் விற்றான்; யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள்.

௭ யோசேப்பு தன் சகோதரரைப் பார்க்கிறபொழுது அவர்களை அறிந்தான்; ஆனால் அறியாதவன்போல அவர்களுக்குக் காண்பித்து, அவர்களோடே கடினமாய்ப் பேசி, அவர்களுடனே, எங்கேயிருந்து வந்தீர்களென்றான்; அப்பொழுது அவர்கள் ஆகாரங்கொள்ள கானான்தேசத்திலிருந்து வந்தோமென்றார்கள்.

௮ யோசேப்பு தன் சகோதரரை அறிந்தான்; அவர்களோவெனில் அவனை அறியாதிருந்தார்கள்.

௯ யோசேப்பு அவர்களைக்குறித்துத் தான் கண்டிருந்த *சொப்பனங்களை நினைத்து, அவர்களோடே, நீங்கள் வேவுகாரர், தேசம்

Digitized by Google

எங்கே திறந்துகிடக்கிறதென்று பார்க்கவந்தீர்களென்றான். *௧ மோ. ௩௭. ௫—௰.

௰ அவர்களோவென்றால் அவனோடே சொன்னதாவது: அல்ல எங்களாண்டவனே, ஆகாரம்கொள்ள உம்முடைய அடியார் வந்தார்கள்.

௰௧ நாங்கள் எல்லாரும் ஒருவருடைய பிள்ளைகள்; நாங்கள் உண்மையுள்ளவர்கள்; உம்முடைய அடியார் வேவுகாரரல்ல என்றார்கள்.

௰௨ அவனோவெனில் அவர்களோடே, இப்படியல்ல, தேசம் எங்கே திறந்துகிடக்கிறதென்று பார்க்கவே வந்தீர்களென்றான்.

௰௩ அப்பொழுது அவர்கள் சொன்னதாவது: உம்முடைய அடியார் கானான்தேசத்திலிருக்கிற ஒருவருக்குக் குமாரராகிய பன்னிரண்டு சகோதரர்; ஆனால் இதோ, இளையவன் இந்நாளில் எங்கள் தகப்பனண்டையிலிருக்கிறான்; ஒருவனோவென்றால் காணாமல்போனான் என்றார்கள்.

௰௪ யோசேப்பு அவர்களோடே சொன்னதாவது: நீங்கள் வேவுகாரரென்று நான் உங்களோடே சொன்னபடியே இருக்கும்.

௰௫ உங்கள் இளைய சகோதரன் இங்கே வந்தாலொழிய நீங்கள் இங்கேயிருந்து புறப்படுவதில்லை என்று பார்வோனின் சீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதினால் சோதிக்கப்படுவீர்கள்.

௰௬ உங்கள் சகோதரனை அழைத்துவர உங்களில் ஒருவனை அனுப்புங்கள்; நீங்களோவென்றால் கட்டுண்டிருப்பீர்கள்; உங்களில் நிசமுண்டோவென்று உங்கள் வார்த்தைகள் சோதிக்கப்படும்; இல்லாவிட்டால் நீங்கள் வேவுகாரரென்று பார்வோனின் சீவனைக்கொண்டு சொல்லுகிறேனென்றுசொல்லி,

௰௭ அவர்களை ஏகமாய் மூன்றுநாள் காவலிலே போடுவித்தான்.

௰௮ மூன்றாம்நாளிலே யோசேப்பு அவர்களோடே சொன்னதாவது: நீங்கள் உயிரோடே இருக்கும்படிக்கு ஒன்று செய்யுங்கள்; நான்பராபரனுக்குப்பயப்படுகிறவன்.

௰௯ நீங்கள் நிசமுள்ள மனிதரானால், உங்கள் சகோதரனாகிய ஒருவன்நீங்கள் காவல்பண்ணப்பட்டவீட்டில் கட்டுண்டிருக்கட்டும்; நீங்களோவென்றால் புறப்பட்டு, உங்கள் வீட்டாரின் பசிக்காகத் தானியம்கொண்டுபோய்,

௨௰ உங்கள் இளைய சகோதரனை என்னண்டைக்கு அழைத்துவாருங்கள்; அப்பொழுது நீங்கள் சாவாதபடிக்கு, உங்கள் வார்த்தைகள் மெய்ப்பட்டிருக்குமென்றான்; அவர்கள் அப்படிச் செய்யப்போய்,

௨௧ ஒருவரோடொருவர் சொன்னதாவது: நாம் நம்முடைய சகோதரனுக்குச் செய்த குற்றமே நம்முடையமேல் சுமருகிறது; அவன் நம்மை இரக்கம் கேட்கும்போது, அவன் ஆத்துமத்திற்கு இருந்த இடுக்கத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாதேபோனோமே; ஆகையால் இந்த இடுக்கம் நம்முடையமேல் வருகிறதென்றார்கள்.

௨௨ அப்பொழுது ரூபன் அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக, *இளைஞனுக்கு விரோதமாகப் பாவம்செய்யாதிருங்களென்று நான் உங்களோடே சொன்னதில்லையோ? நீங்களோ கேளாதேபோனீர்கள்; இப்பொழுது இதோ அவன் இரத்தப்பழி கேட்கப்படுகிறதென்றான். *௧ மோ. ௩௭. ௨௧, ௨௨.

௨௩ ஆனால் யோசேப்பு இதைக் கேட்டானென்று அவர்கள் அறியாதேபோனார்கள்; ஏனெனில் துபாசித்தனம் பண்ணுகிறவன் அவர்களுக்குள்ளே இருந்தான்.

௨௪ அவன் அவர்களைவிட்டு அப்பாலேபோய் அழுது, திரும்ப அவர்களண்டைவந்து, அவர்களோடே பேசி, அவர்களுக்குள்ளே சிமெயோனைப் பிடித்து, அவனை அவர்கள் கண்களுக்குமுன்பாகக் கட்டுவித்தான்.

௨௫ ¶ பிறகு அவர்களுடைய சாக்குகளைத் தானியத்தால் நிரப்பவும், அவர்களுடைய பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே போடவும், அவர்களுக்கு வழிக்கு ஆகாரம்

கொடுக்கவும் யோசேப்பு கற்பித்தான்; அப்படியே அவர்களுக்குச் செய்யப்பட்டது.

௨௬ அவர்கள் தங்கள் தானியத்தைத் தங்கள் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போனார்கள்.

௨௭ தங்குகிற இடத்திலே அவர்களில் ஒருவன் தன் கழுதைக்குக் கவளம்கொடுக்கத் தன் சாக்கைத் திறக்கிறபொழுது, இதோ தன் சாக்கின் வாயிலே தன் பணம் இருக்கிறதை அவன் கண்டு,

௨௮ தன் சகோதரரோடே, என் பணம் எனக்குத் திரும்ப வந்தது; இதோ என் சாக்கிலே இருக்கிறதென்றான்; அப்பொழுது அவர்கள் திடனற்றுப்போய், ஒருவரை ஒருவர் கலக்கமாய்ப் பார்த்து, பராபரன் நமக்கு இதைச் செய்தது ஏதென்றார்கள்.

௨௯ ¶ அவர்கள் கானான்தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோபண்டையிலே வந்து சேர்ந்தபொழுது, தங்களுக்குச் சம்பவித்தவைகளை எல்லாம் அவனுக்கு அறிவித்துச் சொன்னதாவது:

௩௰ தேசத்தின் அதிகாரியாயிருக்கிறவன் எங்களோடே கடினமாய்ப்பேசி, எங்களைத் தேசத்தை வேவுபார்க்கிறவர்களாக எண்ணினான்.

௩௧ நாங்களோவெனில், அவனோடே சொன்னதாவது: நாங்கள் வேவுகாரராயிராமல் நிசமுள்ள மனிதராயிருக்கிறோம்.

௩௨ எங்கள் தகப்பனுக்குப் பிறந்த நாங்கள், பன்னிரண்டு சகோதரர்; ஒருவன் காணாமல்போனான்; இளையவனோவென்றால், இந்நாளில் கானான்தேசத்தில் எங்கள் தகப்பனண்டையிலே இருக்கிறான் என்றோம்.

௩௩ அப்பொழுது தேசத்தின் அதிகாரியாயிருக்கிறவன் எங்களோடே சொன்னதாவது: நீங்கள் நிசமுள்ளவர்களாயிருக்கிறதை எதினாலே அறிவேனென்றால், உங்கள் சகோதரனாகிய ஒருவனை நீங்கள் என்னிடத்திலே வைத்து, உங்கள் வீட்டாரின் பசிக்காகத் தானியம் வாங்கிக்கொண்டு போய்,

௩௪ உங்கள் இளையசகோதரனை என்னண்டைக்கு அழைத்துவாருங்கள்; அதினாலே நான், நீங்கள் வேவுகாரராயிராமல், நிசமுள்ளவர்கள்தான் என்று அறிந்துகொண்டு, உங்கள் சகோதரனை உங்களுக்குக் கொடுத்துவிடுவேன், நீங்கள் தேசத்திலே தொழிலும் பண்ணலாமென்றான் என்று சொன்னார்கள்.

௩௫ சம்பவித்ததேதென்றால், அவர்கள் தங்கள் சாக்குகளில் இருக்கிறதைக் கொட்டுகையில், இதோ, அவனவன் சாக்கிலே அவனவன் பணமுடிப்பு இருந்தது; தங்கள் பணங்களின் முடிப்புகளை அவர்களும் அவர்கள் தகப்பனும் கண்டு பயந்தார்கள்.

௩௬ அவர்கள் தகப்பனாகிய யாக்கோபு அவர்களுடனே, என்னைப் பிள்ளைகள்அற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்பு இல்லாதேபோனான்; சிமெயோனும் இல்லாதேபோனான்; பென்யமீனையும் அழைத்துக்கொண்டுபோகிறீர்கள்; என்மேலே இவை எல்லாம் வருகிறதென்றான்.

௩௭ அப்பொழுது ரூபன் தன் தகப்பனோடே, அவனை நான் உம்மண்டைக்கு அழைத்து வராதேபோனால், என் இரண்டு குமாரரைக் கொன்றுபோடுவீராக; என் கையிலே அவனை ஒப்புவியும், நான் அவனை உம்மண்டைக்குத் திரும்ப அழைத்து வருவேன் என்றான்.

௩௮ அவனோவென்றால் என் மகன் உங்களோடேகூட இறங்கிப் போவதில்லை; ஏனெனில் அவன் தமையன் மரணமடைந்தான்; இவன் ஒருவன் மீதியானவன்; நீங்கள் போகும் வழியிலே இவனுக்கு ஒரு சேதம் வந்தால், நீங்கள் என் நரையைச் சஞ்சலத்தோடே குழியில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றான்.

௪௩. அதிகாரம்.

பஞ்சமோவென்றால் தேசத்திலே மிகுதியாயிருந்தது.

Digitized by Google

௨ ஆகையால் அவர்கள் எகிப்திலிருந்து கொண்டுவந்த தானியம் சாப்பிட்டுத் தீர்ந்

தபொழுது, அவர்கள் தகப்பன் அவர்களு
டனே, நீங்கள் திரும்பப்போய்க் கொஞ்
சம் ஆகாரம் நமக்குக் கொள்ளுங்கள் என்
றான்.
௩ அப்பொழுது யூதா அவனோடே சொன்
னதாவது: உங்கள் சகோதரன் உங்களோ
டேகூட வராவிட்டால், நீங்கள் என் முகத்
தைப் பார்ப்பதில்லை என்கிறதை அந்த
மனிதன் எங்களுக்குத் திடச்சாட்சியாய்ச்
சொல்லிக் கற்பித்தான்.
௪ நீர் எங்கள் சகோதரனை எங்களோடே
கூட அனுப்புகிறதுண்டானால், நாங்கள்
இறங்கிப்போய், உமக்கு ஆகாரம்கொள்ளு
வோம்.
௫ அனுப்பாமல் போனீரேயானால், நாங்
கள் இறங்கிப்போவதில்லை; ஏனெனில்
உங்கள் சகோதரன் உங்களோடேகூட
வராவிட்டால், நீங்கள் என் முகத்தைப்
பார்ப்பதில்லையென்று அந்த மனிதன் எங்
களோடே சொன்னானே என்றான்.
௬ அப்பொழுது இஸ்ரவேல், உங்களுக்கு
இன்னம் ஒரு சகோதரன் இருக்கிறதை
நீங்கள் அந்த மனிதனுக்கு அறிவித்ததினா
லே எனக்கேன் பொல்லாப்பு உண்டுபண்
ணினீர்கள் என்றான்.
௭ அதற்கவர்கள் சொன்னதாவது: உங்
கள் தகப்பன் இன்னம் உயிரோடிருக்கிறா
னோ என்றும், உங்களுக்கு இன்னம் ஒரு
சகோதரன் உண்டோ என்றும், அந்த மனி
தன் எங்கள் செய்தியையும் எங்கள் வம்
சத்தின் செய்தியையும் கேட்கவே கேட்
டான்; அந்தக் கேள்விகளுக்குத்தக்கதாக
அவனுக்கு அறிவித்தோம்; உங்கள் சகோ
தரனை உங்களோடேகூட இங்கே அழைத்
துவாருங்கள் என்று அவன் சொல்லுவான்
என்கிறதை அறிந்தோமோ என்றார்கள்.
௮ பின்னையும் யூதா தன் தகப்பனாகிய இஸ்
ரவேலோடே சொன்னதாவது: நாங்களும்
நீரும் எங்கள் குழந்தைகளும் சாவாமல்
உயிரோடிருக்கும்படிக்கு, நாங்கள் எழுந்
திருந்து போகத்தக்க விதமாகப் பிள்ளை
யாண்டானை என்னோடேகூட அனுப்பும்.
௯ அவனுக்காக நான்பிணையாயிருப்பேன்;
என் கையில் அவனைக் கேட்பீராக; நான்
அவனை உம்மண்டைக்குக் கொண்டுவந்து
அவனை உமக்குமுன்பாக நிறுத்தாதேபோ
னால், சகல நாளும் உமக்கு நேரஸ்தனாயி
ருப்பேன்.
௰ ஏனெனில் நாங்கள் தாமதிக்காதிருந்
தோமானால், இப்பொழுது இரண்டுவிசை
திரும்பிவந்திருப்போமே என்றான்.
௰௧ அப்பொழுது அவர்கள் தகப்பனாகிய
இஸ்ரவேல் அவர்களோடே சொன்னதாவ
து: இப்படி வேண்டியதேயானால், ஒன்று
செய்யுங்கள்; இந்தத் தேசத்தின் உச்சிதங்
களாகிய கொஞ்சம் பிசின் தயிலத்தையும்,
கொஞ்சம் தேனையும், சம்பாரங்களையும்,
வெள்ளைப் போளத்தையும், தேரேபிந்து
கொட்டைகளையும், வாதுமைக்கொட்டை
களையும் உங்கள் சாக்குகளில்போட்டு, அ
ந்த மனிதனுக்குக் காணிக்கையாகக் கொ
ண்டுபோங்கள்.
௰௨ இரட்டிப்பாய்ப் பணத்தை உங்கள்
கைகளிலும் வைத்து, உங்கள் சாக்குகளின்
வாயிலே திரும்பிவந்த பணத்தை மறுபடி
யும் உங்கள் கைகளிலே கொண்டுபோங்
கள்; அது பிசகாயிருந்ததாக்கும்.
௰௩ உங்கள் சகோதரனையும் கூட்டிக்கொ
ண்டு, எழுந்து, அந்த மனிதனண்டைக்குத்
திரும்பிப்போங்கள்.
௰௪ ஆனால் அந்த மனிதன் உங்களுடைய
மற்றச் சகோதரனையும் பென்யமீனையும்
உங்களோடே கூட அனுப்பிவிடும்படிக்
கு, சர்வத்திற்கும் வல்ல பராபரன் அவன்
முன்பாக உங்களுக்கு இரக்கம்கிடைக்கப்
பண்ணுவாராக; நானோவெனில் பிள்ளை
அற்றுப்போனவனைப்போல இருப்பேன்
என்றான்.
௰௫ ¶ அப்பொழுது அவர்கள் அந்தக் கா
ணிக்கையையும், தங்கள் கைகளில் இரட்
டிப்பான பணத்தையும் எடுத்து, பென்ய
மீனைக் கூட்டிக்கொண்டு, பயணம் புறப்

Digitized by Google

பட்டு எகிப்திற்கு இறங்கிப்போய், யோசேப்புக்கு முன்பாக வந்து நின்றார்கள்.

௧௬ அப்பொழுது பென்யமீன் அவர்களோடேகூட இருக்கிறதை யோசேப்பு கண்டு, தன் வீட்டு விசாரிப்புக்காரனோடே, நீ இந்த மனிதரை வீட்டிற்கு அழைத்துப்போய், சாப்பாட்டுக்கு வேண்டியவைகளை அடித்து ஆயத்தம்பண்ணு; ஏனெனில் மத்தியானத்திலே இந்த மனிதர் என்னோடே சாப்பிடுவார்கள் என்றான்.

௧௭ அவன் யோசேப்பு தனக்குச் சொன்னபடியே செய்து, அந்த மனிதரை யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துப்போனான்.

௧௮ அப்பொழுது அவர்கள், தாங்கள் யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துப்போகப்படுகிறதைக் கண்டு பயந்து, முந்தினமுறை நம்முடைய சாக்குகளில் திரும்பிவந்த பணத்தினிமித்தம் நம்முடைய பேரில் குற்றம்சாற்றி நம்முடைய மேல்விழுந்து, நம்மைச்சிறைகளாக்கி, நம்முடைய கழுதைகளை எடுத்துக்கொள்வதற்காக நாம்கொண்டு போகப்படுகிறோம் என்றுசொல்லி,

௧௯ யேசேப்பின் வீட்டு விசாரிப்புக்காரனண்டையிலே சேர்ந்து, வீட்டு வாசற்படியிலே அவனோடே பேசிச் சொன்னதாவது:

௨௦ எங்களாண்டவனே, ஆகாரம்கொள்ள முந்த இறங்கிவந்திருந்து போனோமே.

௨௧ அப்பொழுது சம்பவித்ததேதெனில், நாங்கள் தங்கும் இடத்தில் வந்து எங்கள் சாக்குகளைத் திறந்தபொழுது, இதோ, நாங்கள் எங்கள் பணத்தை நிறுத்துக்கொடுத்த நிறையாய் அவனவன் பணம் அவனவன் சாக்கின் வாயில் இருந்தது; அதை எங்கள் கையிலே திரும்பக் கொண்டுவந்தோம்.

௨௨ ஆகாரம்கொள்ள வேறே பணத்தையும் எங்கள் கையிலே எடுத்துக்கொண்டு வந்தோம்; எங்கள் பணத்தை யார் எங்கள் சாக்குகளில் வைத்தான் என்கிறதை அறியோம் என்றார்கள்.

௨௩ அவனோவென்றால் உங்களுக்குச் சமாதானம், நீங்கள் பயப்படவேண்டாம், உங்கள் பராபரனும் உங்கள் தகப்பனுடைய பராபரனுமானவர் உங்கள் சாக்குகளில் உங்களுக்குப் பொக்கிஷங்களைக் கட்டளையிட்டார்; உங்கள் பணம் எனக்கு வந்து சேர்ந்ததென்று சொல்லி, சிமெயோனை வெளியே அவர்களண்டையில் அழைத்துவந்துவிட்டு,

௨௪ அவர்களை யோசேப்பின் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோய், தங்கள் கால்களைக் கழுவ அவர்களுக்குத் தண்ணீர்கொடுத்து, அவர்கள் கழுதைகளுக்கு இரை போட்டான்.

௨௫ மத்தியானத்திலே யோசேப்பு வருமளவும் அவர்கள் காணிக்கையை ஆயத்தமாய் வைத்தார்கள்; ஏனெனில் தாங்கள் அங்கே அப்பம் சாப்பிடப்போகிறதைக் கேட்டிருந்தார்கள்.

௨௬ யோசேப்பு வீட்டிற்கு வந்தபொழுது, அவர்கள் தங்கள் கையிலிருந்த காணிக்கையை அவனுக்கு வீட்டிற்குள் கொண்டுபோய், *தரைமட்டும்குனிந்து, அவனை வணங்கினார்கள். *௧ மோ. ௩௭. ௭.

௨௭ அப்பொழுது அவன், சுகமாயிருக்கிறீர்களோ என்று கேட்டு, நீங்கள் சொன்ன முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறானோ? அவன் இன்னம் உயிரோடிருக்கிறானோ என்று விசாரித்தான்.

௨௮ அவர்கள், எங்கள் தகப்பனாகிய உம்முடைய ஊழியக்காரன் சுகமாயிருக்கிறான், இன்னம் உயிரோடிருக்கிறானென்று சொல்லி, குனிந்து வணங்கினார்கள்.

௨௯ அவன் தன் கண்களை ஏறெடுத்து, தன் தாயின் குமாரனாகிய தன்னோடேகூடப் பிறந்த பென்யமீனைக் கண்டு, இவன் நீங்கள் என்னோடே சொன்ன உங்கள் இளைய சகோதரனோ என்று கேட்டு, என் மகனே, பராபரன் உன்மேலே கிருபைவைக்கக்கடவரென்றான்.

௩௦ ஆனால் தன் சகோதரனுக்காக யோசேப்பின் உள்ளம் பொங்கினபடியினாலே, அவன் அழுகிறதற்கு இடம்தேடித் தீவிரித்

Digitized by Google

து, அறையிலே போய், அங்கே அழுதான்.
௩௧ பிறகு அவன் தன் முகத்தைக் கழு
விப் புறப்பட்டு, தன்னை அடக்கிக்கொண்
டு போசனம் வையுங்கள் என்றான்.
௩௨ அப்பொழுது அவனுக்குத் தனிப்
படவும், அவர்களுக்குத் தனிப்படவும்,
அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத்
தனிப்படவும் வைத்தார்கள்; ஏனெனில்
எகிப்தியர் எபிரேயரோடே அப்பம் சாப்பி
டமாட்டார்கள்; அதேனென்றால் அது
எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்.
௩௩ அவர்கள் அவனுக்குமுன்பாக மூத்த
வன் தன் மூத்தவயதின்படியேயும் இளைய
வன் தன் இளையவயதின்படியேயும் உளுக்
காரவைக்கப்பட்டார்கள்; அதற்காக அவர்
கள், ஒருவருக்கொருவர் ஆச்சரியப்பட்
டார்கள்.
௩௪ அவன் தன் முன்னே இருக்கிறதில் அ
வர்களுக்குப் பங்கிட்டு அனுப்பினான்; ஆனா
ல் அவர்கள் எல்லாருடைய பங்குகளைப்பா
ர்க்கிலும், பென்யமீனுடைய பங்கு ஐந்தத்
தனை அதிகமாயிற்று; அவர்கள் குடித்து,
அவனோடே சந்தோஷமாயிருந்தார்கள்.

௪௪. அதிகாரம்.

பிற்பாடு அவன் தன் வீட்டு விசாரிப்புக்
காரனுக்குக் கற்பித்ததாவது: நீ இந்த மனி
தருடைய சாக்குகளை,அவர்கள் ஏற்றிக்கொ
ண்டு போகத்தக்க பாரமாய் ஆகாரத்தினா
லே நிரப்பி, அவனவன் பணத்தை அவன
வனுடைய சாக்கின் வாயிலே போட்டு,
௨ இளையவனுடைய சாக்கின் வாயிலே
வெள்ளிப்பாத்திரமாகிய என்னுடைய பாத்
திரத்தையும், அவனுடைய தானியத்தின்
பணத்தையும் போடு என்று கற்பித்தான்;
அவன் யோசேப்புச் சொன்ன வார்த்தை
யின்படியே செய்தான்.
௩ ¶ காலமே வெளிச்சமாகிறபொழுது,
அந்த மனிதர் தங்கள் கழுதைகளோடும்
கூட அனுப்பிவிடப்பட்டார்கள்.
௪ அவர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்
பட்டுத் தூரமாய்ப் போகாததற்குமுன்
னே, யோசேப்பு தன் வீட்டுவிசாரிப்புக்
காரனோடே சொன்னதாவது: நீ எழுந்து
அந்த மனிதரைப் பின்தொடர்ந்து, அவர்
களைக் கிட்டிப்பிடிக்கும்பொழுது அவர்க
ளோடே சொல்லவேண்டியது ஏதெனில்
நீங்கள் நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்
டினதென்ன?
௫ அது என் எசமானன் குடிக்கிறபாத்திரம்
அல்லவோ? அது போன வகை அவருக்கு
ஞானதிருஷ்டியால் தெரியாதோ? நீங்கள்
செய்தது பொல்லாத காரியமாயிருக்கிற
தென்று சொல்லென்றான்.
௬ அவன் அவர்களைத் தொடர்ந்து பிடித்து,
இந்த வார்த்தைகளை அவர்களோடே சொ
ன்னான்.
௭ அப்பொழுது அவர்கள் அவனோடே
சொன்னதாவது: எங்கள் ஆண்டவன் இப்
படிக்கொத்த வார்த்தைகளைச் சொல்லுவா
னேன்? இப்படிக்கொத்த காரியத்தை உம்
முடைய அடியார் ஒருக்காலும் செய்வ
தில்லை.
௮ இதோ, எங்கள் சாக்குகளின் வாயிலே
நாங்கள் கண்ட பணத்தைக் கானான்தே
சத்திலிருந்து திரும்ப உம்மண்டைக்குக்
கொண்டுவந்தோமே? நாங்கள் உம்முடை
ய எசமானனின் வீட்டிலிருந்து வெள்ளி
யையாகிலும் பொன்னையாகிலும் திருடிக்
கொண்டு போவது எப்படி?
௯ உம்முடைய அடியாரில் எவனிடத்தி
லே அது கண்டுபிடிக்கப்படுமோ, அவன்
சாவக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்
டவனுக்குஅடிமைகளாவோம்என்றார்கள்.
௰ அதற்கு அவன், இப்பொழுதும் நீங்கள்
சொன்ன வார்த்தைகளின்படியே ஆகக்க
டவது; எவனிடத்தில் அது கண்டுபிடிக்
கப்படுமோ, அவன் எனக்கு அடிமையா
வான்; நீங்களோவென்றால் குற்றமற்றிருப்
பீர்கள் என்றான்.
௰௧ அவர்கள் தீவிரித்து அவனவன் தன்னுடைய
ன் சாக்கைத் தரையிலே இறக்கிப்போட்டு,

Digitized by Google

ஒவ்வொருவராய்த் தங்கள் சாக்குகளைத்
திறந்துவைத்தார்கள்.
௰௨ அவன் மூத்தவனைத் துவக்கி இளைய
வன்மட்டும் சோதிக்கிறபொழுது, பாத்தி
ரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபி
டிக்கப்பட்டது.
௰௩ அப்பொழுது அவர்கள் தங்கள் வஸ்
திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனவன்
தன் தன் கழுதையின்மேலே சுமையை
ஏற்றி, பட்டணத்திற்குத் திரும்பினார்கள்.
௰௪ யூதாவும் அவன் சகோதரரும் யோ
சேப்பின் வீட்டிலே வந்தார்கள்; ஏனெ
னில் அவன் அதுவரையில் அங்கே இருந்
தான்; அவனுக்குமுன்பாகத் தரையிலே
விழுந்தார்கள்.
௰௫ யோசேப்பு அவர்களுடனே, நீங்கள்
செய்த இந்தக் கிரியை ஏது? என்னைப்
போலொத்த மனிதனுக்குக் காரியம் ஞான
திருஷ்டியினால் தெரியுமென்று, அறியாதே
போனீர்களோ என்றான்.
௰௬ அப்பொழுது யூதா, என் ஆண்டவ
னுக்கு நாங்கள் என்ன சொல்லப்போகி
றோம்? என்ன பேசுவோம்? எதினால் எங்
களை நீதிமான்களாக்குவோம்? பராபரன்
உம்முடைய அடியாரின் அக்கிரமத்தைக்
கண்டுபிடித்தார்; இதோ நாங்கள் என்
ஆண்டவனுக்கு அடிமைகள்; நாங்களும்
பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்ட அவனும்
தானே என்றான்.
௰௭ அவனோவென்றால் இப்படிக்கொத்த
செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக;
எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்
பட்டதோ, அவனே எனக்கு அடிமையாய்
இருப்பான்; நீங்களோவெனில் சமாதா
னத்தோடே உங்கள் தகப்பனண்டைக்
குப் போயேறுங்கள் என்றான்.
௰௮ அப்பொழுது யூதா அவனண்டையிலே
சேர்ந்து சொன்னதாவது: ஆ, என் ஆண்ட
வனே, உம்முடைய அடியான் என் ஆண்ட
வனுடைய செவிகளுக்குமுன்பாக ஒரு
வார்த்தை பேசட்டும்; உம்முடைய கோ
பம் எரியாதிருப்பதாக; ஏனெனில் நீர்
பார்வோனைப்போல இருக்கிறீர்.
௰௯ உங்களுக்குத் தகப்பனாவது ச
கோதரனாவது உண்டோ என்று என் ஆ
ண்டவன் உம்முடைய அடியாரைக் கேட்
டீர்.
௨௰ அப்பொழுது என் ஆண்டவனுடனே,
எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனும்
அவருக்கு முதிர்வயதிலே பிறந்த இளைய ச
கோதரனும் உண்டு; இவனுடைய தமை
யன் செத்துப்போனான்; இவன் ஒருவன்
தன் தாயாருக்கு மீதியானவன்; இவனுடை
ய தகப்பன் இவன்மேலே பட்சமாயிருக்
கிறாரென்றோம்.
௨௧ அப்பொழுது நீர் உம்முடைய அடி
யாரோடே, அவனை என்னண்டைக்கு அ
ழைத்துவாருங்கள்; என் கண்ணை அவன்
மேலே வைப்பேன் என்றீர்.
௨௨ நாங்களோவென்றால் என் ஆண்டவ
னோடே, அந்த இளைஞன் தன் தகப்பனை
விடக்கூடாது; தன் தகப்பனை விட்டால்
அவர் செத்துப்போவாரென்றோம்.
௨௩ நீரோவெனில் உம்முடைய அடியா
ருடனே, உங்கள் இளைய சகோதரன் உங்க
ளோடேகூட இறங்கிவாராதேபோனால்.
நீங்கள் என் முகத்தை இனிப் பார்ப்பதில்
லை என்று சொன்னீர்.
௨௪ நாங்கள் உம்முடைய அடியானாகிய
என் தகப்பனண்டைக்கு வந்தேறினபொ
ழுது சம்பவித்ததேதென்றால், என் ஆண்ட
வனுடைய வார்த்தைகளை அவருக்கு அறி
வித்தோம்.
௨௫ நீங்கள் திரும்பப் போய், கொஞ்சம்
ஆகாரம் நமக்குக் கொள்ளுங்களென்று
எங்கள் தகப்பனார் சொன்னார்.
௨௬ அதற்கு நாங்கள் சொன்னதேதெ
னில், நாங்கள் இறங்கிப்போகக்கூடாது;
எங்கள் இளைய சகோதரன் எங்களோடு
இருந்தானேயானால் இறங்கிப்போவோம்;
ஏனென்றால் எங்கள் இளைய சகோதரன்
எங்களோடே இராவிட்டால், நாங்கள் அந்

Digitized by Google

தப் புருஷனுடைய முகத்தைப் பார்க்கக் கூடாதென்றோம்.

௨௭ அப்பொழுது உம்முடைய அடியானாகிய என் தகப்பன் எங்களோடே சொன்னதாவது: என் பெண்சாதி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள் என்கிறதையும்,

௨௮ அவர்களில் ஒருவன் என்னிடத்தில் இருந்து புறப்பட்டுப் போனான், அவன் பீறுண்ணவே பீறுண்டானென்று முன் சொல்லி, இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன் என்கிறதையும் நீங்கள் அறிவீர்கள்.

௨௯ நீங்கள் இவனையும் என் முன்பாக இராதபடிக்கு அழைத்துப்போகும்போது, ஒரு சேதம் அவனுக்கு வந்தால், என் நரையை நிர்ப்பந்தத்தோடே குழியில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றான்.

௩௰ இப்பொழுதும் இளையவன் எங்களோடிராமல், நான் என் தகப்பனாகிய உம்முடைய அடியானண்டையிலே போனால், அப்பொழுது அவருடைய ஆத்துமா இவனாத்துமாவோடே ஒட்டிக்கொண்டிருக்கிறபடியினாலே சம்பவிப்பது ஏதெனில்,

௩௰௧ அவர் இளையவன் இல்லை என்று காணும்பொழுது, செத்துப்போவார்; அப்படியே உம்முடைய அடியாரும் உம்முடைய ஊழியக்காரனாகிய எங்கள் தகப்பனுடைய நரையைச் சஞ்சலத்தோடே குழியில் இறங்கப்பண்ணுவோமே.

௩௰௨ ஏனெனில் நான் அவனை உம்மண்டைக்கு அழைத்துவாராதேபோனால், நான் சகலநாளும் என் தகப்பனுக்கு நேரஸ்தனாய் இருப்பேனென்று உம்முடைய அடியானாகிய நான் என் தகப்பனிடத்திலே இந்த இளையவனுக்காகப் பிணைப்பட்டேன்.

௩௰௩ இப்பொழுதும் இளையவன் தன் சகோதரரோடே கூடப்போய் ஏறும்படிக்கு, உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாய் இருக்கட்டும்.

௩௰௪ ஏனெனில் இளையவன் என்னோடே இல்லாவிட்டால் எப்படி என் தகப்பனண்டைக்குப் போயேறுவேன்? என் தகப்பனைப் பிடிக்கும் தீங்கை அப்பொழுது காண்பேனே என்றான்.

௪௫. அதிகாரம்.

அப்பொழுது யோசேப்பு தன்னண்டையில் நிற்கிற எல்லார்முன்பாகவும் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல், யாவரையும் என்னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்களென்று கூப்பிட்டான்; யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை அறியப்படுத்துகையில் ஒருவரும் அவனண்டையிலே நின்றதில்லை.

௨ அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள்; பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்.

௩ யோசேப்பு தன் சகோதரரோடே நான் யோசேப்பு; என் தகப்பன் இன்னம் உயிரோடிருக்கிறாரோ என்றான்; ஆனால் அவன் சகோதரர் அவனுக்குமுன்பாகக் கலங்கினதினாலே, அவனுக்குப் பிரதியுத்தாரம் சொல்ல அவர்களுக்குக் கூடாதேபோயிற்று.

௪ அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரோடே, என்னண்டையிலே கிட்டிவாருங்கள் என்றான்; அவர்கள் கிட்டிப்போனார்கள்; அப்பொழுது அவன் சொன்னதாவது: நீங்கள் எகிப்திற்குப் போகிறவர்களுக்கு விற்ற உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நானே.

௫ இப்பொழுதும் நீங்கள் என்னை இவ்விடத்திற்கு விற்றுப்போட்டதினாலே, நீங்கள் சஞ்சலப்படவும் அது உங்கள் பார்வைக்குப் பொல்லாப்பாயிருக்கவும் வேண்டாம்; ஏனெனில் உங்கள் ஜீவனுக்காகப் பராபரன் என்னை உங்களுக்குமுன்னாக அனுப்பினார்.

௬ ஏனென்றால் இந்த இரண்டுவருஷம் தேசத்திற்குள்ளே பஞ்சம் உண்டாயிருந்தது; உழவும் அறுப்பும் இல்லாத ஐந்து வருஷங்களும் இன்னம் வரும்.

Digitized by Google

எ ஆனால், உங்களைத் தேசத்தில் மீதியாக
வைப்பதற்கும் உங்களைப் பெரிய இரட்சிப்
பினாலே உயிரோடே காப்பதற்குமாக, பரா
பரன் என்னை உங்களுக்குமுன்னாக அனுப்
பினார்.
அ இப்பொழுதும் நீங்களல்ல, பராபரன்
என்னை இங்கே அனுப்பி, என்னைப் பார்
வோனுக்குத் தகப்பனாகவும், அவர் வீட்
டிற்கெல்லாம் துரையாகவும், எகிப்துதே
சத்தை எல்லாம் ஆளுகிறவனாகவும் வைத்
தார்.
கூ நீங்கள் தீவிரத்தோடே என் தகப்ப
னண்டைக்குப் போயேறி, அவரோடே
சொல்லவேண்டியதேதெனில், உம்மு
டைய குமாரனாகிய யோசேப்புச் சொல்லி
அனுப்புகிறதாவது: பராபரன் என்னை எகிப்
திற்கெல்லாம் துரையாக வைத்தார்; என்
னண்டைக்கு இறங்கிவாரும், தாமதிக்க
வேண்டாம்.
௰ நீர் கோசேன் தேசத்திலே வாசம்பண்
ணி, எனக்குச் சமீபத்திலே இருப்பீர்;
நீரும் உம்முடைய பிள்ளைகளும் உம்மு
டைய பிள்ளைகளின் பிள்ளைகளும் உம்மு
டைய ஆடுகளும் உம்முடைய மாடுக
ளும் உமக்குண்டான யாவும் கூடத்தானே.
௰௧ நீரும் உம்முடைய வீட்டாரும் உமக்
கிருக்கிற யாவும் தாழ்வுபடாதபடிக்கு, அங்
கே உம்மைப் பராமரிப்பேன்; ஏனெனில்
பஞ்சம் இன்னம் ஐந்து வருஷம்மட்டும்
இருக்குமென்கிறான் என்று சொல்லுங்கள்.
௰௨ இதோ என்னுடைய வாய் உங்க
ளோடே பேசுகிறது என்கிறதை உங்கள்
கண்களும் என் தம்பியாகிய பென்யமீனின்
கண்களும் காண்கிறதே.
௰௩ எகிப்திலே எனக்கு இருக்கிற என்னு
டைய எல்லா மகிமையையும் நீங்கள் கண்
டவை எல்லாவற்றையும் என் தகப்பனுக்
கு அறிவித்து, தீவிரமாய் என் தகப்பனை
இவ்விடத்திற்கு இறங்கிவரப்பண்ணுங்கள்
என்றுசொல்லி,
௰௪ தன் தம்பியாகிய பென்யமீனுடைய
கழுத்திறுக்கக் கட்டிக்கொண்டு அழுதான்;
பென்யமீனும் அவன் கழுத்தைக் கட்டிக்
கொண்டு அழுதான்.
௰௫ தன்னுடைய எல்லாச் சகோதரரை
யும் முத்தம்செய்து அவர்கள் முன்பாக
அழுதான்; அதற்குப் பிற்பாடு அவன் சகோ
தரர் அவனோடே பேசினார்கள்.
௰௬ ¶ யோசேப்பின் சகோதரர் வந்தார்க
ளென்று பார்வோன் வீட்டிலே செய்தி
கேட்கப்பட்டபொழுது, அது பார்வோன்
பார்வைக்கும் அவன் ஊழியக்காரரின்
பார்வைக்கும் நன்றாய் இருந்தது.
௰௭ அப்பொழுது பார்வோன் யோசேப்
போடே சொன்னது: நீ உன் சகோதர
ரோடே சொல்லவேண்டியதாவது: நீங்கள்
செய்யவேண்டியதேதெனில், உங்கள் மிரு
கஜீவன்களின்மேல் பொதியேற்றிப் புறப்
பட்டு, கானான்தேசத்திற்குப்போய்,
௰௮ உங்கள் தகப்பனையும் உங்கள் வீட்
டாரையும் கூட்டிக்கொண்டு என்னண்
டைக்கு வாருங்கள், நான் உங்களுக்கு
எகிப்துதேசத்தின் நன்மையைக் கொடுப்
பேன்; தேசத்தின் கொழுப்பைச் சாப்பிடு
வீர்கள்.
௰௯ நீங்கள் செய்யவேண்டியது ஏதெ
னில், நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கா
கவும் உங்கள் பெண்சாதிகளுக்காகவும்
வண்டில்களை எகிப்துதேசத்திலிருந்து கொ
ண்டுபோய், உங்கள் தகப்பனையும் ஏற்றி
வாருங்கள்.
௨௰ உங்கள் கண் உங்களுடைய தட்டு
முட்டுகளைப் பார்க்கவேண்டாம்; ஏனெ
னில் எகிப்துதேசமெங்கும் நன்மையா
யிருக்கிறது உங்களுடையதாய் இருக்கு
மென்று அவர்களோடே சொல்ல நீ கட்
டளைபெற்றாய் என்றான்.
௨௧ இப்படியே இஸ்ரவேலின் குமாரர்
செய்தார்கள்; யோசேப்பு அவர்களுக்குப்
பார்வோனுடையகட்டளையின்படியே வண்
டில்களைக்கொடுத்து, வழிக்கு ஆகாரத்தை
யும் அவர்களுக்குக் கொடுத்தான்.

Digitized by Google

௨௨ அவர்களில் ஒவ்வொருவனுக்கு அவன் மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து, பென்யமீனுக்கோ முந்நூறு வெள்ளிக்காசையும் ஐந்து மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து,

௨௩ அப்படியே தன் தகப்பனுக்கு எகிப்தின் உச்சிதங்களைச் சுமந்துபோகிற பத்துக் கழுதைகளையும், தன் தகப்பனுக்காக வழிக்குத் தானியமும் அப்பமும் தின்பண்டங்களும் சுமந்துபோகிற பத்துக் கோளிகைக் கழுதைகளையும் அனுப்பினான்.

௨௪ அப்படியே அவன் தன் சகோதரரை அனுப்பிவிட்டு, இவர்கள்போகிறபொழுது, வழியிலே சண்டைபண்ணீர்களாக என்று அவர்களோடே சொன்னான்.

௨௫ ¶ அவர்கள் எகிப்திலிருந்து போயேறி, கானான்தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோபண்டைக்கு வந்து,

௨௬ யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறான் என்றும், அவன் எகிப்துதேசத்தை எல்லாம் ஆளுகிறான் என்றும் அவனுக்கு அறிவித்தார்கள்; ஆனால் அவன் இருதயம் தளம்பிற்று; ஏனெனில் அவர்களை நம்பாதிருந்தான்.

௨௭ அவர்களோவென்றால் யோசேப்புத் தங்களுடனே பேசின எல்லா வார்த்தைகளையும் அவனுக்குச் சொல்லுகிறபொழுதும், தன்னை ஏற்றிக்கொண்டுபோக யோசேப்பு அனுப்பின வண்டில்களை அவன் காண்கிறபொழுதும், அவர்களுடைய தகப்பனாகிய யாக்கோபின் ஆவி திடப்பட்டது.

௨௮ அப்பொழுது இஸ்ரவேல், என் குமாரனாகிய யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறபொழுதும், நான் மரணம் அடையாததற்கு முன்னேபோய் அவனைப் பார்ப்பேன் என்றான்.

௪௬. அதிகாரம்.

இஸ்ரவேல் தனக்குண்டானவைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு பயணம் புறப்பட்டுப் பேர்செபாவுக்குவந்து, தன் தகப்பனாகிய ஈசாக்குடைய பராபரனுக்குப் பலிகளை இட்டான்.

௨ இராத்தரிசனைகளில் பராபரன் இஸ்ரவேலோடே பேசி, யாக்கோபே யாக்கோபே, என்றார்; அவன் இதோ அடியேனென்றான்.

௩ அப்பொழுது அவர் சொன்னதாவது: நாம் உன் தகப்பனுடைய தேவனாகிய பராபரன்; எகிப்திற்கு இறங்கிப்போகப் பயப்படாயாக; ஏனெனில் அங்கே உன்னைப் பெரியசாதி ஆக்குவோம்.

௪ நாம் உன்னோடேகூட எகிப்திற்கு இறங்கிப்போவோம்; நாம் உன்னைத் திரும்பி வந்து ஏறவும் பண்ணுவோமென்றும், யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவானென்றும் சொன்னார்.

௫ அதற்குப் பிற்பாடு யாக்கோபு பேர்சேபாவிலிருந்து பயணம்புறப்பட்டுப் போனான்; இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையும் தங்கள் குழந்தைகளையும் தங்கள் பெண்சாதிகளையும், பார்வோன் அவனை ஏற்றிவர அனுப்பின வண்டில்களின்மேல் ஏற்றிக்கொண்டுபோனார்கள்.

௬ அவர்கள், தங்கள் ஆடுமாடுகளையும் தாங்கள் கானான்தேசத்தில் சம்பாதித்த தங்கள் ஆஸ்தியையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு வந்தார்கள், யாக்கோபும் அவன் வித்தார் அனைவரும் அவனோடு கூடத்தானே.

௭ தன் குமாரரையும் தன் குமாரரின் குமாரரையும் தன் குமாரத்திகளையும் தன் குமாரரின் குமாரத்திகளையும் தன் வித்தார் அனைவரையும் அவன் தன்னோடேகூட எகிப்திற்கு அழைத்துக்கொண்டு வந்தான்.

௮ எகிப்திலே வந்த இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள்; யாக்கோபும் அவன் குமாரரும்; யாக்கோபுடைய முதல் பேறானவன் ரூபன்.

௯ ரூபனுடைய குமாரர்; ஆனோக், பல்

Digitized by Google

லூ, எஸ்ரோன், கர்மீ என்றவர்கள்.
௰ சிமெயோனுடைய குமாரர்; எமுவேல்,
யாமின், ஒகாத், யாகீன், சோகார், கானான்
தேசத்தாளின் குமாரனாகிய சவுல் என்ற
வன்.
௰௧ லேவியின் குமாரர்; கேர்சோன், கே
காத், மெராரி என்றவர்கள்.
௰௨ யூதாவின் குமாரர்; ஏர், ஒனான், சேலா,
பேரேஸ், சேரா என்றவர்கள்; ஏரும் ஒனானு
மோவென்றால் கானான்தேசத்திலே செத்
துப்போனார்கள்; பேரேசுடைய குமாரர்;
எஸ்ரோன், அமூல் என்றவர்கள்.
௰௩ இசஷாருடைய குமாரர்; தேலா,
பூவா, யோப், சிம்ரோன் என்றவர்கள்.
௰௪ செபுலோனுடைய குமாரர்; சேரேத்,
ஏலோன், யாலேயேல் என்றவர்கள்.
௰௫ இவர்கள் லேயாளின் குமாரர்; இவர்க
ளையும் யாக்கோபுடைய குமாரத்தியாகிய
தீனாளையும் அவன் அவனுக்குப் பதான்அ
ராமிலே பெற்றாள்; அவன் குமாரரும்
அவன் குமாரத்திகளுமாகிய எல்லா ஆத்து
மாக்களும் முப்பத்துமூன்று.
௰௬ காத்துடைய குமாரர்; சிப்பியோன்,
அகி, சூனி, எஸ்போன், ஏரி, அரோதி,
அரேலி என்றவர்கள்.
௰௭ ஆசேருடைய குமாரர்; இம்னா, இஸ்
வா, இஸ்வி, பெரியா என்றவர்கள்; இவர்
களுடைய சகோதரி சேராக்கு என்றவள்.
பெரியாவின் குமாரர்; ஏபேர், மல்க்கியேல்
என்றவர்கள்.
௰௮ இவர்கள் லாபான் தன் குமாரத்தியா
கிய லேயாளுக்குக் கொடுத்த சில்பாளு
டைய பிள்ளைகள்; அவள் யாக்கோபுக்கு
இந்தப் பதினாறு ஆத்துமாக்களைப் பெற்
றாள்.
௰௯ யாக்கோபின் பெண்சாதியாகிய ராகே
ளுடைய குமாரர்; யோசேப்பும் பென்ய
மீனுந்தானே.
௨௰ யோசேப்புக்கு எகிப்துதேசத்திலே
மனாசேயும் எப்பிராயீமும் பிறந்தார்கள்;
அவர்களை ஒன்பட்டணத்து ஆசாரியனாகிய
போத்திப்பேராவின் குமாரத்தியாகிய அஸ்
னாத் அவனுக்குப் பெற்றாள்.
௨௰௧ பென்யமீனுடைய குமாரர்; பேலா,
பேகேர், அஸ்பெல், கேரா, நாமான், ஏகி,
ரோஸ், மூப்பிம், உப்பிம், ஆர்து என்பவர்
கள்.
௨௰௨ ராகேல் யாக்கோபுக்குப் பெற்ற கு
மாரராகிய இவர்கள் எல்லாரும் பதினாலு
ஆத்துமாவே.
௨௰௩ தாணுடைய குமாரன்; ஊசிம் என்ற
வன்.
௨௰௪ நப்தலியின் குமாரர்; யாத்சேயேல்;
கூனி, எத்சேர், சில்லேம் என்றவர்கள்.
௨௰௫ இவர்கள் லாபான் தன் குமாரத்தியா
கிய ராகேலுக்குக் கொடுத்த பில்க்காள்
யாக்கோபுக்குப் பெற்றவர்கள்; இவர்கள்
எல்லாரும் ஏழு ஆத்துமாக்கள்.
௨௰௬ ¶ யாக்கோபுடைய குமாரரின் பெண்
சாதிகளைத் தவிர, அவனுடைய கர்ப்பப்
பிறப்பாய் இருந்து அவனோடேகூட எகிப்
திலே வந்த ஆத்துமாக்கள் எல்லாம் அறு
பத்தாறு ஆத்துமாக்கள்.
௨௰௭ யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த கு
மாரர் இரண்டு ஆத்துமாக்கள்; எகிப்திலே
வந்த யாக்கோபின் வீட்டாராகிய ஆத்து
மாக்கள் எல்லாம் எழுபது.
௨௰௮ ¶ கோசேனுக்குப்போகிற வழியைத்
தனக்குக் காட்டுவிக்க, அவன் தனக்குமுன்
னாக யோசேப்பண்டைக்கு யூதாவை அ
னுப்பினான்; அப்படியே கோசேன்தேசத்
திலே வந்தார்கள்.
௨௰௯ யோசேப்பு தன் இரதத்தை ஆயத்
தம்பண்ணி ஏறி, கோசேனுக்குத் தன்
தகப்பனாகிய இஸ்ரவேலுக்குஎதிர்கொண்டு
போய், அவனுக்குத் தன்னைக் காண்பித்து,
அவனுடைய கழுத்திறுகக் கட்டிக்கொண்
டு, அதிக நேரமாய் அவன் கழுத்தைவிடா
மல் அழுதான்.
௩௰ அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்
புடனே, நீ இன்னும் உயிரோடிருக்கிறாய்
என்று நான் உன் முகத்தைக் கண்டபடியி

Digitized by Google

னாலே இனி மரணம் எனக்கு எப்போதாகி
லும் வரட்டும் என்றான்.
௩௧ பிற்பாடு யோசேப்பு தன் சகோதர
ரோடும் தன் தகப்பனுடைய வீட்டாரோ
டும் சொன்னதாவது: நான் போயேறிக் கா
னான்தேசத்திலிருந்த என்னுடைய சகோ
தரரும், என் தகப்பன்வீட்டாரும் என்
னண்டைக்கு வந்தார்களென்று பார்வோ
னுக்கு அறிவித்து,
௩௨ இந்த மனிதர் ஆடுகளைமேய்க்கிறவர்
கள்; ஏனெனில் மிருகஜீவன்களையுடைய
வர்களாய் இருக்கிறார்கள்; அவர்கள் தங்
கள் ஆடுகளையும் தங்கள் மாடுகளையும் தங்
களுக்குண்டானவை எல்லாவற்றையும்
கொண்டுவந்தார்களென்று அவரோடே
சொல்லுவேன்.
௩௩ ஆகையால் பார்வோன் உங்களை அ
ழைத்து, உங்கள் தொழில் என்னவென்று
கேட்கிறதுண்டானால்,
௩௪ அப்பொழுது நீங்கள் கோசேன்தே
சத்திலே குடியிருக்கும்படிக்குச் சொல்ல
வேண்டியதாவது: எங்கள் பிதாக்களைப்
போல உம்முடைய அடியாராகிய நாங்க
ளும் எங்கள் சிறுவயது துவக்கி இதுவரை
க்கும் மிருகஜீவன்களை உடையவர்களாய்
இருந்தோமென்று சொல்லுங்கள்; ஏனெ
னில் *மந்தைமேய்க்கிறவர்கள் எல்லா
ரும் எகிப்தியருக்கு அருவருப்பாய்இருக்
கிறார்கள் என்றான். *௧ மோ. ௪௩. ௩௨.

௪௭. அதிகாரம்.

• யோசேப்பு வந்து பார்வோனுக்கு அறி
வித்து, என் தகப்பனும் என் சகோதரரும்,
தங்கள் ஆடுகளோடும், தங்கள் மாடுக
ளோடும், தங்களுக்குண்டானவை எல்லா
வற்றோடும்கூடக் கானான்தேசத்திலிருந்து
வந்தார்கள்; இதோ கோசேன்தேசத்திலே
இருக்கிறார்கள் என்றுசொல்லி,
௨ தன் சகோதரரில் ஒருபங்காகிய ஐந்து
பேரை அழைத்துக்கொண்டு, அவர்களைப்
பார்வோனுக்குமுன்பாக நிறுத்தினான்.
௩ அப்பொழுது பார்வோன் அவன் சகோ
தரரோடே உங்கள் தொழில் என்னவென்
றான்; அவர்கள் பார்வோனோடே, உம்மு
டைய அடியாராகிய நாங்களும் எங்கள்
பிதாக்களும் மந்தைமேய்க்கிறவர்கள் என்
றுசொல்லி,
௪ பின்னையும் பார்வோனோடே, தேசத்தி
லே தங்கவந்தோம்; ஏனெனில் உம்மு
டைய அடியாருக்கு இருக்கிற மந்தைக்கு
மேய்ச்சலில்லை, அதேனென்றால் பஞ்சம்
கானான்தேசத்திலே கடினமாய் இருக்கி
றது; இப்பொழுதும் உம்முடைய அடி
யார் கோசேன்தேசத்திலே குடியிருக்கட்
டும் என்றார்கள்.
௫ அப்பொழுது பார்வோன் யோசேப்
போடே சொன்னதாவது: உன் தகப்பனும்
உன் சகோதரரும் உன்னண்டைக்கு வந்
தார்கள்.
௬ எகிப்துதேசம் உனக்குமுன்பாகக் கி
டக்கிறது; தேசத்தில் நலமான இடத்தி
லே உன் தகப்பனையும் உன் சகோதரரை
யும் குடியேற்று; அவர்கள் கோசேன்தே
சத்திலே குடியிருக்கட்டும்; அவர்களுக்
குள்ளே திறமையான மனிதருண்டென்று
அறிந்திருந்தாயானால் அவர்களை எனக்கி
ருக்கிற ஆடுமாடுகளை விசாரிக்கிற தலைவ
ராக வையென்றான்.
௭ யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்
கோபையும் அழைத்துக்கொண்டு வந்து,
அவனைப் பார்வோனுக்குமுன்பாக நிறுத்
தினான்; யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்
தான்.
௮ பார்வோன் யாக்கோபோடே, உன்னு
டைய ஆயுசின் நாள்கள் எத்தனை என்றான்.
௯ யாக்கோபு பார்வோனோடே, நான் பர
தேசம்பண்ணின நாள்கள் நூற்றுமுப்பது
வருஷங்கள்; என் ஆயுசின் நாள்கள் பர
தேசிகளான என் பிதாக்களுடைய ஆயு
சின் நாள்களுக்கு வாராமல் கொஞ்சமும்
பொல்லாப்புமாய் இருந்தன என்றான்.
௰ பிற்பாடு யாக்கோபு பார்வோனை ஆசீர்

Digitized by Google

வித்து, பார்வோனிடத்திலிருந்து புறப்பட்டான்.

௰௧ யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும் குடியேற்றி, பார்வோன் கட்டளை இட்டபடி, அவர்களுக்கு எகிப்துதேசத்தின் நாட்டிலே நல்ல நாடாகிய ராமேசேஸ் சீமையிலே காணி கொடுத்தான்.

௰௨ ¶ யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய வீட்டார் அனைவரையும் பிள்ளைகளின் இலக்கத்திற்குத்தக்கதாய் ஆகாரம்கொடுத்துப் பராமரித்துவந்தான்.

௰௩ தேசமெங்கும் அப்பம் இல்லாதே போயிற்று; ஏனெனில் பஞ்சம் மிகவும் கடினமாய் இருந்தது; பஞ்சத்தினாலே, எகிப்துதேசமும் கானான்தேசமும் இளைத்துப்போயின.

௰௪ அப்பொழுது அவர்கள் கொள்ளும் தானியத்திற்கு இடாக யோசேப்பு எகிப்துதேசத்திலும் கானான்தேசத்திலும் உண்டான திரவியத்தை எல்லாம் சேர்த்தான்; அந்தத் திரவியத்தை யோசேப்பு பார்வோன் வீட்டிலே கொண்டுவந்துவைத்தான்.

௰௫ எகிப்துதேசத்திலும் கானான்தேசத்திலும் திரவியம் செலவழிந்து போனபொழுதோவெனில், எகிப்தியர் எல்லாரும் யோசேப்பண்டைக்கு வந்து, எங்களுக்கு அப்பம்தாரும்; திரவியம் இல்லாதேபோனதினாலே, நாங்கள் உமக்கு முன்பாகச் சாவானேன் என்றார்கள்.

௰௬ அப்பொழுது யோசேப்பு திரவியம் இல்லாதேபோயிற்றானால், உங்கள் மிருகசீவன்களைக் கொடுங்கள்; உங்கள் மிருகசீவன்களுக்கு இடாக உங்களுக்குத் தருகிறேன் என்றான்.

௰௭ அப்பொழுது தங்கள் மிருகசீவன்களை யோசேப்பண்டைக்குக் கொண்டுவந்தார்கள்; யோசேப்பு குதிரைகளையும் ஆடுகளையும் மாடுகளையும் கழுதைகளையும் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு அப்பம்கொடுத்து, அந்த வருஷத்திலே அவர்களுடைய எல்லா மிருகசீவன்களுக்கும் இடாக அவர்கள் பிழைப்பை நடப்பித்துக்கொண்டுவந்தான்.

௰௮ ¶ அந்த வருஷம் முடிந்தபொழுது, அவர்கள் மறுவருஷத்திலே அவனண்டைக்கு வந்து அவனோடே சொன்னதாவது: திரவியமும் செலவழிந்துபோயிற்று; மிருகசீவன்களின் மந்தையும் எங்கள் ஆண்டவனைச் சேர்ந்தது; எங்கள் சரீரமும் எங்கள் நிலமுமே ஒழிய, எங்கள் ஆண்டவனுக்குமுன்பாக ஒன்றும் மீதியானதில்லை என்கிறதை எங்கள் ஆண்டவனுக்கு மறைக்கமாட்டோம்.

௰௯ நாங்களும் எங்கள் நிலமும் உம்முடையகண்களுக்குமுன்பாக மடிவானேன்? நீர் எங்களையும் எங்கள் நிலத்தையும் கொண்டு, அப்பம்தாரும்; நாங்கள் எங்கள் நிலத்தோடும்கூடப் பார்வோனுக்கு அடிமைப்பட்டிருப்போம்; நாங்கள் சாவாமல் உயிரோடிருக்கும்படிக்கும் நிலம் பாழாய்ப் போகாதபடிக்கும் விதையைத் தாரும் என்றார்கள்.

௨௰ அப்படியே யோசேப்பு எகிப்தின் நிலத்தை எல்லாம் பார்வோனுக்குக் கொண்டான்; ஏனெனில் எகிப்தியர் அவரவர், பஞ்சம் தங்கள்மேல் பலத்துக்கொண்டபடியினாலே, தங்கள் வயல்களை விற்றார்கள்; ஆனதுகொண்டு நிலம் பார்வோனைச் சேர்ந்தது.

௨௧ ஆனால் சனத்தை அவன் எகிப்தினுடைய எல்லையின் இந்த முனைதுவக்கி அந்த முனைமட்டும் இருந்த பட்டணங்களில் குடிமாறிப்போகப் பண்ணினான்.

௨௨ ஆசாரியன் நிலத்தைமாத்திரம் கொள்ளாதே போனான்; ஏனெனில் அது பார்வோனாலே ஆசாரியருக்குப் படித்திட்டமாகக் கட்டளைபண்ணப்பட்டது; பார்வோன் தங்களுக்குக் கட்டளைபண்ணின தங்கள் படியைச் சாப்பிட்டார்கள்; ஆகையால்

Digitized by Google

அவர்கள் தங்கள் நிலத்தை விற்றதில்லை.

௨௩ யோசேப்பு சனத்தோடே சொன்னதாவது: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலத்தையும் பார்வோனுக்குக் கொண்டேன்; இதோ உங்களுக்குத் தரப்படுகிற விதை, அதினால் நிலத்தை விதையுங்கள்.

௨௪ பலனானபொழுது நடப்பதேதென்றால், பார்வோனுக்கு ஐந்தில் ஒரு பங்கைக் கொடுப்பீர்கள்; நாலுபங்கோவென்றால், வயலுக்கு விதையும் உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரம் உண்டாக உங்களுடையவைகளாய் இருக்கும் என்றான்.

௨௫ அப்பொழுது அவர்கள் எங்களை உயிரோடேகாத்தீர்; எங்கள் ஆண்டவனுடைய கண்களில் எங்களுக்குத் தயவே கிடைக்கட்டும், நாங்கள் பார்வோனுக்குஅடிமையாயிருப்போம் என்றார்கள்.

௨௬ அப்படியே ஐந்தில் ஒன்று பார்வோனுக்குச் சேரும்வாரம் என்பதை, யோசேப்பு எகிப்து நிலத்தின்மேலே இந்நாள்மட்டும் செல்லும் கட்டளையாக்கினான்; ஆசாரியரின் நிலம்மாத்திரம் பார்வோனைச் சேராமல் நீங்கலாயிற்று.

௨௭ ¶ இஸ்ரவேல் எகிப்துதேசத்திலிருக்கும் கோசேன் சீமையிலே குடியிருந்தான்; அதில் காணியாட்சிக்காரராகி, மிகவும் பலுகிப் பெருகினார்கள்.

௨௮ யாக்கோபு எகிப்துதேசத்திலே பதினேழுவருஷம் உயிரோடிருந்தான்; ஆகையால் யாக்கோபுடைய ஆயுசின் நாள்கள் நூற்றுநாற்பத்தேழு வருஷங்களாயின.

௨௯ மரணமடைய இஸ்ரவேலின் காலம் சமீபித்தபொழுது, அவன் தன் குமாரனாகிய யோசேப்பை வரவழைத்து, அவனுக்குச் சொன்னதாவது: உன் கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததானால், என்னை எகிப்திலே அடக்கம்பண்ணாயாக என்ற தயவையும் உண்மையையும் நீ எனக்குச் செய்வதற்காக உன் கையை என் இடுப்பின்கீழேபோடு.

௩௰ நான் என் பிதாக்களோடே படுத்துக்கொள்ளுவேன்; ஆகையால் நீ என்னை எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், அவர்கள் அடக்கம்பண்ணப்பட்ட நிலத்திலே என்னை அடக்கம்பண்ணுவாயாக என்றான்; அதற்கு அவன், உம்முடைய சொற்படி நான் செய்வேன் என்றான்.

௩௧ அப்பொழுது அவன், எனக்குஆணையிடு என்றான்; அவனுக்கு ஆணையிட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து பணிந்துகொண்டான்.

௪௮. அதிகாரம்.

இதற்குப்பிற்பாடு சம்பவித்ததேதென்றால், இதோ, உம்முடைய தகப்பனார் வியாதியாயிருக்கிறார் என்று யோசேப்புக்குச் சொல்லப்பட்டது; அப்பொழுது அவன் தன் இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னோடேகூட அழைத்துக்கொண்டு போனான்.

௨ இதோ, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு உம்மண்டைக்கு வருகிறானென்று யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது இஸ்ரவேல் தன்னைத் திடனாக்கி, கட்டிலின்மேல் உட்கார்ந்தான்.

௩ யாக்கோபு யோசேப்போடே சொன்னதாவது: சர்வத்திற்கும் வல்ல பராபரன் கானான்தேசத்திலிருக்கிற லூசிலே எனக்குத் தரிசனையாகி, என்னை ஆசீர்வதித்து,

௪ *இதோ நாம் உன்னைப் பலுகவும் உன்னைப் பெருகவும்பண்ணி, உன்னைச் சனசதளங்களான கூட்டமாக்கி, உனக்குப் பிற்பாடு இருக்கும் உன் வித்திற்கு இந்தத் தேசத்தை நித்தியகாணியாட்சியாகக் கொடுப்போமென்று என்னோடே சொன்னார்.

*க மோ. ௩௫. ௰௧, ௰௨.

௫ ¶ இப்பொழுதும் நான் உன்னண்டைக்கு எகிப்திலே வாராததற்குமுன்னே உனக்கு எகிப்துதேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரர் என்னுடையவர்கள்; ரூபன் சிமெயோன்என்றவர்களைப்போலஎப்பிராயீமும்

Digitized by Google

மனாசேயும் என்னுடையவர்களாய் இருப்
பார்கள்.
௬ இவர்களுக்குப் பிறகு நீ பெறுகிற சந்
தானமோவெனில், உன்னுடையதாயிருக்
கும்; இவர்கள் தங்கள் சகோதரருடைய
சுதந்தரத்தில் அவர்களுக்கொத்த பேராய்
அழைக்கப்படுவார்கள்.
௭ நான் பதானிலிருந்து வருகையில், ரா
கேல் கானான்தேசத்தின் வழியிலே எப்பி
ருத்தாவுக்கு வர இன்னம் கொஞ்சந்தூரமி
ருக்கிறபொழுது, எனக்குமுன்பாக மரணம்
அடைந்தாள்; அவளை அங்கே பெத்லகேம்
என்னப்படுகிற எப்பிருத்தா ஊரின் வழியி
லே அடக்கம்பண்ணினேன் என்றான்.
௮ ¶ பிற்பாடு இஸ்ரவேல் யோசேப்பின்
குமாரரைக்கண்டு இவர்கள் யாரென்றான்.
௯ யோசேப்புத் தன் தகப்பனோடே, இ
வர்களே பராபரன் இவ்விடத்தில் எனக்
குக் கொடுத்த என்னுடைய குமாரர் என்
றான்; அப்பொழுது இவன், நான் அவர்களை
ஆசீர்வதிக்கும்படிக்கு அவர்களை என்னிட்
டக் கொண்டுவா என்றான்.
௰ இஸ்ரவேலின் கண்களோவென்றால்
பெரியவயதினால் இருண்டுபோயிற்று; பா
ர்க்கக்கூடாதிருந்தான்; அவர்களை அவனண்
டையிலே சேரப்பண்ணினான்; அப்பொ
ழுது அவன் அவர்களை முத்தம்செய்து அ
ணைத்துக்கொண்டான்.
௰௧ பிறகு இஸ்ரவேல் யோசேப்போடே
உன் முகத்தைப் பார்ப்பேன் என்று நினை
யாதே போனேன்; ஆனால் இதோ, பரா
பரன் என்னை உன் வித்தையும் காணப்
பண்ணினார் என்றான்.
௰௨ அப்பொழுது யோசேப்பு அவன்
முழங்கால்களுக்குள்ளிருக்கிற அவர்களைப்
பின்னிடப்பண்ணி, அவன் முகத்திற்கு
முன்பாகத் தரைமட்டும் குனிந்து வணங்
கினான்.
௰௩ பிற்பாடு யோசேப்பு இருவரையும்
கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வல
துகையினாலே இஸ்ரவேலின் இடதுகைக்கு
நேராகவும் மனாசேயைத் தன் இடதுகையி
னாலே இஸ்ரவேலின் வலதுகைக்கு நேரா
கவும் அவனண்டையிலே சேரப்பண்ணி
னான்.
௰௪ ஆனால் இஸ்ரவேல் தன் வலதுகை
யை நீட்டி, இளையவனாகிய எப்பிராயீமு
டைய தலையின்மேலும் மனாசே மூத்தவனா
யிருந்தாலும், தன் இடதுகையை மனாசே
யினுடைய தலையின்மேலும் வைத்தான்;
அவன் அறிந்து அப்படித் தன் கைகளை
வைத்து,
௰௫ ¶ யோசேப்பை ஆசீர்வதித்துச் சொன்
னதாவது: பராபரனுக்குமுன்பாக என்
பிதாக்களாகிய ஆபிரகாமும் இசாக்கும் ந
டந்துகொண்டார்களே, நான் உண்டான
நாள்துவக்கி இந்நாள்வரைக்கும் என்னை
ஆதரித்துவந்த அந்தப் பராபரனும்,
௰௬ என்னை எல்லாத் தீமைக்கும் நீங்க
லாக்கி மீட்ட தூதனுமானவர் இந்த இளை
ஞரை ஆசீர்வதிக்கக்கடவர்; என் பேரும்
ஆபிரகாம் இசாக்கென்ற என் பிதாக்களின்
பேரும் அவர்களுக்குத் தரிக்கப்படக்கட
வது; தேசத்தின் நடுவிலே ஏராளமான
திரட்சியாய்ப் பலுகக்கடவர்களென்றான்.
௰௭ தன் தகப்பன் தன் வலதுகையை
எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்
ததை யோசேப்பு காண்கிறபொழுதோ
வெனில், அவனுக்கு ஆகாததாய்க் கண்
டது; ஆகையால் எப்பிராயீமுடைய தலை
யின்மேல் இருந்த தன் தகப்பனுடைய
கையை யோசேப்பு மனாசேயினுடைய
தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து,
௰௮ தன் தகப்பனோடே அப்படியல்ல,
என் தகப்பனே, ஏனெனில் இவன் மூத்
தவன்; இவன் தலையின்மேல் உம்முடைய
வலதுகையை வையுமென்றான்.
௰௯ அவன் தகப்பனோவெனில், தட்டுதல்
பண்ணி, அறிவேன், என் மகனே, அறி
வேன்; இவனும் சனசதனமாவான்; இவ
னும் பெருகிப்போவான்; ஆகிலும் இவனு
டைய தம்பி இவனைப்பார்க்கிலும் பெரு

Digitized by Google

கிப்போவான்; அவன் வித்துச் சனசதளங்
களால் நிறைந்த திரட்சியாமென்றான்.
௨௰ அப்படியே அவன் அந்நாளிலே அ
வர்களை ஆசீர்வதித்து, பராபரன் உன்னை
எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப்
போலவும் இருக்கப்பண்ணுவாராக என்று
இஸ்ரவேலர் உன்னைத்தொட்டு வாழ்த்து
வார்கள் என்று சொல்லி, எப்பிராயீமை
மனாசேக்குமுன்னே வைத்தான்.
௨௰௧ ¶ பிற்பாடு இஸ்ரவேல் யோசேப்போ
டே சொன்னதாவது: இதோ நான் மரணம்
அடைகிறேன்; ஆனால் பராபரன் உங்க
ளோடிருந்து, உங்கள் பிதாக்களின் தேசத்
திற்கு உங்களைத் திரும்பிவரப்பண்ணுவார்
என்றும்,
௨௰௨ நான் என் பட்டயத்தாலும் என் வில்
லினாலும், எமோரியர் கையிலே வாங்கின
*ஒரு நிலத்தை உன் சகோதரரைப்பார்க்க
உனக்கு அதிகமான பங்காகக் கொடுத்
தேன் என்றும் சொன்னான். *யோவா. ௪. ௫.

௪௯. அதிகாரம்.

பிற்பாடு யாக்கோபு தன் குமாரரை அழை
ப்பித்துச் சொன்னதாவது: கூடி வாருங்
கள்; முடிவுநாள்களில் உங்களுக்கு வந்து
சம்பவிப்பதை உங்களுக்கு அறிவிப்பேன்.
௨ ¶ யாக்கோபின் குமாரரே, கூடிவந்து
கேளுங்கள்; உங்கள் தகப்பனாகிய இஸ்ர
வேலைக் கேளுங்கள்.
௩ ¶ ரூபனே, நீ என்னுடைய தலைச்சனும்
என் சத்துவமும் என் முந்தின பலமுமா
னவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்
லமையில் பிரதானமுமானவன்.
௪ தண்ணீரைப்போலப் பாய்ந்தவனே,
நீ பிரதானமாய் இருப்பதில்லை; ஏனெனில்
*உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேலே
ஏறினாய்; அதை அப்பொழுது தீட்டுப்ப
டுத்தினாய்; என் படுக்கையின்மேல் அவன்
ஏறினான். *௧ மோ. ௩௫. ௨௨.
௫ சிமெயோனும் லேவியும் ஏக சகோதர
ராயிருக்கிறார்கள்; அவர்களுடைய பட்ட
யங்கள் கொடுமையின் ஆயுதங்கள்.
௬ என் ஆத்துமா அவர்கள் இரகசிய ஆ
லோசனையில் வாராதிருப்பதாக; என் மகி
மை அவர்கள் கூட்டத்தோடே ஒன்றிப்
போகாதிருப்பதாக; ஏனெனில் அவர்கள்
தங்கள் கோபத்திலே *ஒரு புருஷனைக்
கொன்றுபோட்டு, தங்கள் ஆங்காரத்திலே
பலவான்களை அதம்பண்ணினார்கள்.
*௧ மோ. ௩௪. ௨௫.
௭ வலிதான அவர்களுடைய கோபமும்
கடினமான அவர்களுடைய மூர்க்கமும்
சபிக்கப்படக்கடவது; அவர்களை யாக்கோ
பிலே *பிரியவும் இஸ்ரவேலிலே சிதறவும்
பண்ணுவேன். *யோசு. ௰௯. ௧.
௮ ¶ யூதாவே, நீயே பிரதானமானவன்;
உன்னை உன் சகோதரர் புகழுவார்கள்;
உன்னுடைய கை உன் சத்துருக்களுடை
ய பிடரியின்மேல் இருக்கும்; உனக்கு
முன்பாக உன் தகப்பனுடைய புத்திரர்
வணங்குவார்கள்.
௯ யூதா சிங்கக்குட்டியானவன்; என் மக
னே, நீ இரை எடுத்து உயர்ந்தாய்; சிங்
கத்தைப்போலவும் கிழச்சிங்கத்தைப்போ
லவும் மடங்கிப் படுத்துக்கொள்ளுகிறான்;
அவனை எழுப்பப்போகிறவன் யார்?
௰ *சமாதான கர்த்தர் வரும்மட்டும் செங்
கோல் யூதாவிலிருந்தும், நியாயம்கற்பிக்கி
றவன் அவன் பாதங்களிலிருந்தும், அற்றுப்
போவதில்லை; அவரைச் சனசதளங்கள்
சேரும். *சங். ௭௨. ௭. ஏசா. ௯. ௬, ௭. எபே.
௨. ௰௭.
௰௧ தம்முடைய கழுதை மறியைத் திராட்
சச்செடியோடும் தம்முடைய கோளிகைக்
கழுதையின் குட்டியை நற்குல திராட்சச்
செடியோடும் கட்டிப்போடுவார்; தம்மு
டைய உடுப்பைத் திராட்சப்பழ இரசத்தி
லும் தமது சால்வையைத் திராட்சப்பழங்
களின் இரசத்திலும் வெளுப்பார்.
௰௨ அவருடைய கண்கள் திராட்சப்பழ
இரசத்திலும் சிவப்பும், அவருடைய பல்லு
கள் பாலிலும் வெண்மையுமாய் இருக்கும்.

௰௩ ¶ செபுலோன் *கடல்துறை அருகே குடியிருப்பான்; அவன் கப்பல்துறை அருகே இருப்பான்; அவன் எல்லை சீதோனுக்கு எதிராக இருக்கும். *யோசு. ௰௯. ௰, ௰௧.

௰௪ ¶ இசக்கார் பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த எலும்புள்ள கழுதை.

௰௫ அவன் இளைப்பாறுதலை நல்லதென்றும் சீமையை வசதியானதென்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதி கட்டுகிறவனானான்.

௰௬ ¶ தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றைப்போல தன் சனத்தை நியாயம் விசாரிப்பான்.

௰௭ தாண் குதிரையின் குதிகால்களை, அதில் ஏறி இருக்கிறவன் மல்லாக்க விழக்கடிக்கிற வழி அருகான சர்ப்பமும், பாதை அருகான விரியனுமாய் இருப்பான்.

௰௮ ¶ கர்த்தாவே, *உம்முடைய இரட்சிப்புக்குக் காத்துக்கொண்டிருக்கிறேன். *சங். ௱௰௯. ௱௬௬.

௰௯ ¶ காத்தென்றவன்மேல் இராணுவக் கூட்டம் பாய்ந்துவிழும்; அவனோவென்றால் கடைசியிலே அதின்மேல் பாய்ந்து விழுவான்.

௨௰ ¶ ஆசேருடைய அப்பம் புஷ்டியாய் இருக்கும்; இராசாக்களுக்கான ருசிவர்க்கங்களை இடுவான்.

௨௰௧ ¶ நப்தலி நீங்கலாய் விடப்பட்ட பெண்மான்; வடிப்பமான வசனங்களைத் தருகிறான்.

௨௰௨ ¶ யோசேப்பு கனிதருகிற செடி; அவன் நீரூற்றண்டையிலே கனிதருகிற செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்.

௨௰௩ அம்பை எய்கிறவர்கள் அவனை மனமடிவாக்கி எய்து, அவனை விரோதித்தார்கள்.

௨௰௪ ஆனால் அவனுடைய வில் கெட்டியாய் நின்றது; அவன் கைகளின் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களாலே பலத்தன; இதைத்தொட்டு மேய்ப்பனும் இஸ்ரவேலின் அஸ்திபாரக்கல்லும் ஆனான்.

௨௰௫ உன் தகப்பனுடைய பராபரனாலே அப்படி ஆயிற்று; அவர் உனக்குத் துணையாய் இருப்பார்; சர்வத்திற்கும் வல்லவராலே அப்படி ஆயிற்று; அவர் உயர வானத்திலிருந்து உண்டாகிய ஆசீர்வாதங்களாலும், கீழே கிடக்கிற பாதாளத்தின் ஆசீர்வாதங்களாலும், முலைகளுக்கும் கர்ப்பங்களுக்கும் உண்டாகிற ஆசீர்வாதங்களாலும், உன்னை ஆசீர்வதிப்பார்.

௨௰௬ உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேல்வட்டமாய் இருந்து, நித்திய மேடுகளின் முடிவுமட்டும் போகின்றன; அவைகள் யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக.

௨௰௭ ¶ பென்யமீன் பீறிப்போடுகிற ஓனாய், காலமே எடுத்து அதைப் பட்சிப்பான்; சாயங்காலத்திலே கொள்ளையிட்டதைப் பங்கிடுவான்.

௨௰௮ ¶ இஸ்ரவேலின் கோத்திரங்களாகிய இவைகள் எல்லாம் பன்னிரண்டு; அவர்கள் தகப்பன் அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களுக்குச் சொன்னது இதுதான்; அவர்களில் அவ்னவனை அவனவனுக்கு அடுத்த ஆசீர்வாதத்தினாலே ஆசீர்வதித்தான்.

௨௰௯ பிற்பாடு அவன் அவர்களுக்குக் கற்பித்துச் சொன்னதாவது: நான் என் சனத்தோடே சேர்க்கப்படுகிறேன்; ஏத்தியனான எப்பெரோனின் நிலத்திலுள்ள கெபியிலே என்னை என் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணுங்கள்.

௩௰ கானான்தேசத்திலே மம்ரேக்கெதிராக இருக்கிறதும், ஆபிரகாம் நிலத்தோடேகூட ஏத்தியனாகிய எப்பெரோனின் கையிலே பிரேதங்களை அடக்கம்பண்ணும் சொந்த நிலமாகக் கொண்டதுமான மக்பேலா என்னப்பட்ட நிலத்தின் கெபியிலேதானே.

௩௰௧ அங்கே ஆபிரகாமையும் அவர் பெண்சாதியாகிய சாராளையும் அடக்கம்பண்ணி

Digitized by Google

ஞர்கள்; அங்கே ஈசாக்கையும் அவர் பெ
ண்சாதியாகிய ரெபேக்காளையும் அடக்கம்
பண்ணினார்கள்; அங்கே லேயாளையும் அ
டக்கம்பண்ணினேன்.
௩௨ அந்த நிலமும் அதில் இருக்கிற கெபி
யும் ஏத் புத்திரரின் கையிலே கொள்ளப்
பட்டது என்றான்.
௩௩ யாக்கோபு தன் குமாரருக்குக் கற்பனை
தந்து முடித்தபிற்பாடு, அவன் தன் கால்க
ளைக் கட்டிலின்மேல் சேர்த்துக்கொண்டு,
ஜீவித்துப்போய்த் தன் சனத்தாரோடே சே
ர்க்கப்பட்டான்.

ரு௰. அதிகாரம்.

அப்பொழுது *யோசேப்பு தன் தகப்ப
னுடைய முகத்தின்மேல் விழுந்து, அவன்
மேல் அழுது, அவனை முத்தம்செய்தான்.
*௧ மோ. ௪௬. ௪.
௨ பிற்பாடு தன் தகப்பனுக்குக் கந்தவர்க்
கங்களை இட யோசேப்பு வயித்தியராகிய
தன்னுடைய ஊழியக்காரருக்குக் கற்பித்
தான்; அப்படியே வயித்தியர் இஸ்ரவேலுக்
குக் கந்தவர்க்கங்களை இட்டார்கள்.
௩ அது ஆகிற நாற்பதுநாளும் நிறைவே
றிற்று; ஏனெனில் கந்தவர்க்கங்களை இடும்
வேலை இத்தனைநாளில் நிறைவேறும்; எகிப்
தியர் அவனுக்கு எழுபதுநாள் துக்கம்கொ
ண்டாடினார்கள்.
௪ அவனுக்குத் துக்கம் கொண்டாடின
நாள் முடிந்தபொழுது, யோசேப்பு பார்
வோனின் வீட்டாரோடே பேசிச் சொன்ன
தாவது: உங்கள் கண்களில் எனக்குத் தய
வுகிடைத்ததானால், நீங்கள் பார்வோனு
டைய காதுகளுக்குமுன்பாகப் பேசி,
௫ இதோ நான் சாகிறேன்; நான் கானான்
தேசத்திலே எனக்கு வெட்டியிருக்கிற என்
பிரேதக்குழியிலேதானே என்னை அடக்கம்
பண்ணுவாயாக என்று *என் தகப்பன்
என்னை ஆணை இடுவித்துக்கொண்டார்; இப்
பொழுதும் நான் போயேறி என் தகப்பனை
அடக்கம்பண்ணி வரவேண்டும் என்று
வேண்டிக்கொள்ளுகிறேன் என்று சொல்
லுங்கள் என்றான். *௧ மோ. ௪௭. ௨௯.
௬ ¶ அதற்குப் பார்வோன் உன் தகப்பன்
உன்னை ஆணை இடுவித்தபடியே, நீ போ
யேறி அவரை அடக்கம்பண்ணென்றான்.
௭ அப்படியே யோசேப்பு தன் தகப்ப
னை அடக்கம்பண்ணப் போயேறினான்; பார்
வோனுடைய வீட்டின் மூப்பராகிய அவ
னுடைய சகல ஊழியக்காரரும் எகிப்து
தேசத்தினுடைய சகல மூப்பரும்,
௮ யோசேப்புடைய எல்லா வீட்டாரும்
அவன் சகோதரரும் அவன் தகப்பன் வீட்
டாரும் அவனோடேகூடப் போயேறினார்
கள்; தங்கள் குழந்தைகளையும் தங்கள் ஆடு
மாடுகளையும் மாத்திரம் கோசேன்தேசத்தி
லே விட்டுப்போனார்கள்.
௯ அவனோடே இரதங்களும் குதிரைக்கா
ரரும் போயேறினார்கள்; மிகவும் பலத்த
தண்டாய் இருந்தது.
௰ அவர்கள் யோர்தானுக்கு அக்கரையில்
இருக்கிற முள்காட்டின் சமனான வெளியி
லே வந்தபொழுது, அவ்விடத்திலே மகா
பலத்த பெரிய புலம்பலாய் புலம்பினார்
கள்; அங்கே தன் தகப்பனுக்கு ஏழுநாள்
துக்கம் கொண்டாடினான்.
௰௧ தேசத்தின் குடிகளாகிய கானானியர்
முள்காட்டின் சமனான வெளியிலே கொ
ண்டாடப்படுகிற துக்கத்தைக் காண்கை
யில், இது எகிப்தியரின் கன துக்கிப்பென்
றார்கள்; ஆனதுகொண்டு யோர்தானுக்கு
அப்பால் இருக்கிற அந்த ஸ்தலத்திற்கு
எகிப்தியரின் துக்கிப்பென்று பேர் உண்டா
யிற்று.
௰௨ அவன் குமாரர் அவன் தங்களுக்குக்
கற்பித்திருந்தபடியே அவனுக்குச் செய்து,
௰௩ அவனைக்கானான்தேசத்திலேகொண்டு
போய், மம்ரேக்கெதிராயிருக்கிறதும், *ஆபி
ரகாம் நிலத்தோடேகூட ஏத்தியனாகிய எப்
பேரோன் கையிலே பிரேதங்களை அடக்கம்
பண்ணும் சொந்த நிலமாகக்கொண்டது
மான மக்பேலா என்னப்பட்ட நிலத்தின்

Digitized by Google

கெபியிலே அவனை அடக்கம்பண்ணினார்கள். * ௧ மோ. ௨௩. ௰௬.

௰௪ ¶ யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்பண்ணினபிற்பாடு; அவனும் அவன் சகோதரரும், அவனுடைய தகப்பனை அடக்கம்பண்ணுவதற்கு அவனோடேகூட எறிவந்தவர்கள் எல்லாரும் எகிப்திற்குத் திரும்பினார்கள்.

௰௫ ஆனால் தங்கள் தகப்பன் மரணமடைந்ததை யோசேப்பின் சகோதரர் கண்டு, ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் தனக்குச் செய்த எல்லாப் பொல்லாப்பையும் நமக்குச் சரிக்குச்சரிக்கட்டுவானென்று சொல்லி,

௰௬ உம்முடைய தகப்பனார் மரணம் அடையாததற்குமுன்னே, ஆ, உன் சகோதரரின் துரோகத்தையும் அவர்கள் உனக்குப் பொல்லாப்புச் செய்த அவர்கள் பாவத்தையும் மன்னி என்றதாய் யோசேப்புக்குச் சொல்லுங்களென்று கற்பித்தார் என்றும்,

௰௭ இப்பொழுதும் உம்முடைய தகப்பனுடைய பராபரனின் ஊழியக்காரர் செய்த துரோகத்தை மன்னியுமென்றும் யோசேப்புக்குச் சொல்லி அனுப்பினார்கள்; அப்படி அவர்கள் யோசேப்புக்குச் சொல்லி அனுப்புகிறபொழுது, அவன் அழுதான்.

௰௮ பிற்பாடு அவன் சகோதரரும் போய், அவனுக்குமுன்பாகத் தாழவிழுந்து, இதோ உமக்கு நாங்கள் அடிமைகள் என்றார்கள்.

௰௯ அப்பொழுது யோசேப்பு அவர்களோடே சொன்னதாவது: பயப்படாதிருங்கள்; ஏனெனில் நான் பராபரனுடைய ஸ்தலத்தில் இருக்கிறவனோ?

௨௰ * நீங்களோ எனக்கு விரோதமாகப் பொல்லாத நினைவாய் இருந்தீர்கள்; பராபரனோவென்றால், திரளான சனத்தை உயிரோடே காக்க இந்நாள்வரைக்கும் இருக்கிறபடிச் செய்யும்படிக்கு, அதை நன்மையாக நினைத்தார். * ௧ மோ. ௪௫. ௫.

௨௧ இப்பொழுதும் பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று சொல்லி, அவர்களைச் சலிப்பாற்றி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.

௨௨ ¶ அப்படியே யோசேப்பும் அவன் தகப்பன் வீட்டாரும் எகிப்திலே குடியிருந்தார்கள்; யோசேப்பு நூற்றுப்பத்துவருஷம் உயிரோடிருந்தான்.

௨௩ யோசேப்பு எப்பிராயீமுக்குப் பிறந்த மூன்றும் தலைமுறைப் பிள்ளைகளைக் கண்டான், மனாசேயின் குமாரனாகிய மாகீரின் பிள்ளைகளும் யோசேப்புடைய மடியின் மேல் இருக்கப் பிறந்தது.

௨௪ ¶ யோசேப்பு தன் சகோதரரோடே நான் சாகிறேன்; ஆனால் *பராபரன் உங்களை விசாரிக்கவே விசாரித்து, உங்களை இந்தத் தேசத்திலிருந்து தாம் ஆபிரகாமுக்கும் இசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணைஇட்ட தேசத்திலே போய் ஏறப்பண்ணுவார் என்றான். *எபி. ௰௧. ௨௨.

௨௫ பராபரன் உங்களை விசாரிக்கவே விசாரிக்கும்பொழுது, *என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்று யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரை ஆணை இடுவித்துக்கொண்டான். *௨ மோ. ௰௩. ௰௯. யோசு. ௨௪. ௩௨.

௨௬ பிற்பாடு யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரித்தான்; அப்பொழுது அவனுக்குக் கந்தவர்க்கங்களை இட்டு, அவனை எகிப்துதேசத்தில் ஒரு பெட்டியிலே வைத்துவைத்தார்கள்.

Digitized by Google

மோசே எழுதின

இரண்டாம் ஆகமம்.

௧. அதிகாரம்.

எகிப்திலே வந்த இஸ்ரவேலுடைய குமாரரின் நாமங்கள்; யாக்கோபுடனே அவரவர் தங்கள் வீட்டாரோடுங்கூட வந்தார்கள்.

௨ ரூபன், சிமெயோன், லேவி, யூதா,

௩ இசக்கார், செபுலோன், பென்யமீன்,

௪ தாண், நப்தலி, காத், ஆசேர் என்பவர்கள்.

௫ *யாக்கோபின் கர்ப்பப்பிறப்பாகிய எல்லா ஆத்துமாக்களும், எழுபது ஆத்துமாக்கள்; யோசேப்போவென்றால், எகிப்தில் இருந்தான். *௧ மோ. ௪௬. ௨௭.

௬ யோசேப்பும் அவனுடைய எல்லாச் சகோதரரும் அந்த எல்லாத் தலைமுறையாரும் மரித்தபிற்பாடோவெனில்,

௭ இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி ஏராளமாகிப் பெருகிப் பலத்துப்போனார்கள், தேசம் அவர்களால் நிறைந்தது.

௮ ¶ யோசேப்பை அறியாத புதிய இராசாவும் எகிப்திலே எழும்பினான்.

௯ அவன் தன் சனத்தோடே சொன்னதாவது: இதோ, இஸ்ரவேல் புத்திரராகிய சனம் நம்மிலும் பெரியதும் பலத்ததுமாய் இருக்கின்றது.

௰ அது பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால் அதுவும் நம்முடைய பகைஞரோடேகூட நமக்கு விரோதமாய் யுத்தம் பண்ணித் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகாதபடிக்கும், நாம் அவர்கள்நிமித்தம் புத்தியுள்ளவர்களாய் இருப்போமாக என்றான்.

௰௧ அப்படியே அவர்களைத் தங்கள் சுமைகளால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள்மேல் பகுதிக்காரரான தலைவரை வைத்தார்கள்; ஏனெனில் படைமுஸ்திப்புகளை வைக்கும் பட்டணங்களாகிய பீத்தோமும், ராமசேசும், பார்வோனுக்குக் கட்டப்பட்டது.

௰௨ ஆனால் எத்தனைக்குச் சனத்தை ஒடுக்கினார்களோ, அத்தனைக்கும் அது பெருகிப் பரம்பிற்று; ஆகையினாலே இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து விதனப்பட்டார்கள்.

௰௩ எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடூரமாய் வேலைகொண்டு,

௰௪ களிமண்ணிலும் செங்கல்லிலும் செய்யும் கடினமான வேலையினாலும், வயலில் செய்யும் எல்லாவித வேலையினாலும், அவர்களைக் கொடூரமாய்ப் பணிசெய்விக்கப் பண்ணும் தங்களுடைய மற்ற எல்லா வேலையினாலும், அவர்களுக்குச் சிவனைக் கசப்பாக்கினார்கள்.

௰௫ ¶ இதுவுமல்லாமல், எகிப்தின் இராசா எபிரேய மருத்துவச்சிகளோடே பேசினான்; அவர்களில் ஒருத்தியின் பேர் சிப்பிறாள்; மற்றவள் பேர் பூவாள்.

௰௬ அவர்களோடே அவன் சொன்னதாவது: பெற ஆசனங்களில் உலுக்காந்த எபிரேய பெண்சாதிகளுக்கு நீங்கள் மருத்துவம் பார்க்கையில், அது ஆண்பிள்ளையானால் அதைக் கொல்லுங்கள்; அது பெண்பிள்ளையானால் உயிரோடு இருக்கட்டும் என்றான்.

௰௭ ஆனால் மருத்துவச்சிகள் பராபரனுக்குப் பயந்து, எகிப்தின் இராசா தங்களுக்

Digitized by Google

குச் சொன்னபடி செய்யாமல், பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றினார்கள்.

௰௮ ஆகையால் எகிப்தின் இராசா மருத்துவச்சிகளை அழைப்பித்து, அவர்களோடே நீங்கள் பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றுகிற இந்தக் காரியத்தை ஏன் செய்கிறீர்கள் என்றான்.

௰௯ அப்பொழுது மருத்துவச்சிகள் பார்வோனோடே, எபிரேய பெண்சாதிகள் எகிப்திய பெண்சாதிகளைப்போல இருக்கிறதில்லை; அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள்; மருத்துவச்சி அவர்களண்டைக்கு வாராததற்குமுன்னே அவர்கள் பெற்றுத் தீர்ந்தது என்றார்கள்.

௨௰ இதின்நிமித்தம் பராபரன் மருத்துவச்சிகளுக்கு நன்மைசெய்தார்; சனம் பெருகி மிகுதியும் பலத்துப்போயிற்று.

௨௧ சம்பவித்தது ஏதென்றால், மருத்துவச்சிகள் பராபரனுக்குப் பயந்தபடியினாலே, அவர் இவர்களுக்கு வீடுகளை உண்டாக்கினார்.

௨௨ அப்பொழுது பார்வோன் பிறக்கிற ஆண்பிள்ளையை எல்லாம் ஆற்றிலே போட்டுவிட்டு, பெண்பிள்ளையை எல்லாம் உயிரோடே வையுங்கள் என்று தன்னுடைய எல்லாச் சனத்திற்கும் கற்பித்தான்.

௨. அதிகாரம்.

ஆனால் *இலேவி வீட்டாரில் ஒரு மனிதன் போய் இலேவியின் குமாரத்தி ஒருத்தியை விவாகம்பண்ணினான். *௨ மோ. ௬. ௨௰.

௨ அந்தப் பெண்சாதி கர்ப்பந்தரித்து, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளதென்று கண்டு, *அதை மூன்றுமாதம் ஒளித்தான். *எபி. ௰௧. ௨௩.

௩ அதை அவள் அப்புறம் ஒளிக்கக்கூடாதபொழுதோவெனில், அவள் நாணல் பெட்டியை வாங்கிக்கொண்டு, அதைப் பிசினும் கீலாலும்பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, ஆற்றோரமாய் நாணலிலே வைத்தாள்.

௪ அதற்கு என்ன சம்பவிக்குமென்று அறிய அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்.

௫ ¶ அப்பொழுது பார்வோனின் குமாரத்தி ஆற்றிலே குளிக்க இறங்கி வந்தாள்; அவளுடைய பணிவிடைக்காரிகள் ஆற்றங்கரையிலே நடந்தார்கள்; அவள் நாணல் நடுவிலே இருக்கிற பெட்டியைக் கண்டு, அதைக் கொண்டுவரத் தன் வேலைக்காரியை அனுப்பினாள்.

௬ அதைத் திறந்து அந்தப் பிள்ளையைக் கண்டாள்; இதோ, பிள்ளை அழுதது; அப்பொழுது அவள் அதின்மேல் இரக்கமாகி, இது எபிரேயரின் பிள்ளைகளில் ஒன்று என்றாள்.

௭ அப்பொழுது அதின் தமக்கை பார்வோனின் குமாரத்தியோடே, உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படிக்கு எபிரேய பெண்சாதிகளில் முலைகொடுக்கிற ஒருத்தியை உமக்கு அழைத்துவர நான் போகட்டுமோ என்றாள்.

௮ அப்பொழுது பார்வோனின் குமாரத்தி அவளோடே போவென்றாள்; அந்தப் பெண்பிள்ளை போய்ப் பிள்ளையின் தாயை அழைத்துவந்தாள்.

௯ அவளோடே பார்வோனின் குமாரத்தி, நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டு போய், அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்குக் கூலியைக் கொடுப்பேன் என்றாள்; அப்படியே அந்தப் பெண்சாதி பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய் அதை வளர்த்தாள்.

௰ பிள்ளை பெரியதானபொழுது, அவள் அதைப் பார்வோனின் குமாரத்தியண்டையில் கொண்டுபோனாள்; அவளுக்கு அது குமாரனாயிற்று; அவள் அதற்கு மோசே என்று பேரிட்டாள்; ஏனென்றால் அதைத் தண்ணீரினின்று தூக்கினேன் என்றாள்.

௰௧ ¶ *மோசே பெரியவனாய்ப்போன அந்நாள்களில் சம்பவித்ததேதென்றால், அவன் தன் சகோதரரண்டையிலே புறப்

Digitized by Google

பட்டுப் போய், அவர்கள் பாரமான வேலை
களைப்பார்த்து, தன் சகோதரரில் எபிரேய
மனிதனாகிய ஒருவனை அடித்துக்கொண்
டிருக்கிற எகிப்திய மனிதனைக் கண்டு,
*எபி. ௰௧. ௨௪, ௨௫.
௰௨ இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் தி
ரும்பிப்பார்த்து ஒருவரும் இல்லை என்று
கண்டபொழுது, எகிப்தியனை வெட்டி, அ
வனை மணலிலே அடக்கிப்போட்டான்.
௰௩ மறுநாளிலும் வெளியே போனான்;
இதோ எபிரேய மனிதர் இரண்டுபேர்
சண்டைபண்ணினார்கள்; அப்பொழுது அ
நியாயம்செய்கிறவனோடே, நீ உனக்கடுத்
தவனை அடிக்கிறது என்னவென்றான்.
௰௪ அதற்கவன் உன்னை எங்கள்மேல்
துரைத்தனக்காரனும் நியாயாதிபதியுமாக
வைத்தவர் யார்? நீ எகிப்தியனைக் கொன்று
போட்டதுபோல, என்னையும் கொன்று
போட இதைச் சொல்லுகிறாயோ என்
றான்; அப்பொழுது மோசே பயந்து, அந்
தக்காரியம் வெளியானது நிச்சயம் என்
றான்.
௰௫ பார்வோன் அந்தக் காரியத்தைக் கே
ட்டு, மோசேயைக் கொலைசெய்யத் தேடி
னான்; ஆனால் மோசே பார்வோனுக்கு
விலகி ஓடிப்போய், மீதியான் தேசத்திலே
தங்கி, ஒரு துரவண்டையிலே உளுக்கார்ந்
தான்.
௰௬ ¶ மீதியானில் இருக்கிற ஆசாரியனு
க்கு ஏழு குமாரத்திகள் இருந்தார்கள்;
அவர்கள் தங்கள் தகப்பனுடைய ஆடுக
ளுக்குத் தண்ணீர்காட்டும்படிக்கு அங்கே
வந்து மொண்டு, தொட்டிகளை நிரப்பினார்
கள்.
௰௭ ஆனால் மேய்ப்பர் வந்து அவர்களைத்
துரத்தினார்கள்; அப்பொழுது மோசே எழு
ந்திருந்து அவர்களைக் காப்பாற்றி, *அவர்
களுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்
டினான். *௧ மோ. ௨௯. ௰.
௰௮ அவர்கள் தங்கள் தகப்பனாகிய ரேகு
வேலண்டையிலே வந்தபொழுது, அவன்
நீங்கள் இன்று இத்தனை சீக்கிரமாய் வந்த
தென்ன என்றான்.
௰௯ அதற்கு அவர்கள், எகிப்திய மனி
தன் ஒருவன் மேய்ப்பரின் கைகளுக்கு
எங்களைத் தப்புவித்து, எங்களுக்கு மொண்
டும்கொடுத்து, ஆடுகளுக்குத் தண்ணீரும்
காட்டினான் என்றார்கள்.
௨௰ அப்பொழுது அவன் தன் குமாரத்தி
களோடே, அவன் எங்கே இருக்கிறான்? அ
ந்த மனிதனை நீங்கள் விட்டுவந்ததென்ன?
அவன் அப்பம் சாப்பிடுகிறதற்கு அவனை
அழைத்துவாருங்களென்றான்.
௨௧ மோசே அந்த மனிதனிடத்திலே தங்
கித்தரிக்கச் சம்மதப்பட்டான்; அவன்
மோசேக்குத் தன் குமாரத்தியாகிய சிப்
போராளைக் கொடுத்தான்.
௨௨ இவள் ஒரு குமாரனைப் பெற்றாள்;
அவனுக்குக் கேர்சோனென்று பேரிட்டா
ன்; ஏனெனில் அந்நியதேசத்திலே பரதேசி
யாய் இருக்கிறேன் என்றான்.
௨௩ ¶ சம்பவித்ததேதெனில், அநேக நா
ள்வட்டத்திலே எகிப்தின் இராசர் செத்து
ப்போனான்; இஸ்ரவேல் புத்திரரோவென்
றால் அடிமைத்தனத்திலிருந்து தவித்துக்
கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்
கள் அடிமைத்தனத்திலிருந்து கூப்பிடுகிற
சத்தம் பராபரனண்டைக்கு ஏறிற்று.
௨௪ பராபரன் அவர்கள் தவிப்பைக் கே
ட்டு தாம் ஆபிரகாமோடும் இசாக்கோடும்
யாக்கோபோடும்பண்ணின உடம்படிக்கை
யைப் பராபரன் நினைவுகூர்ந்தார்.
௨௫ பராபரன் இஸ்ரவேல் புத்திரரை நோக்
கிப்பார்த்தார், பராபரன் அவர்களை அறிந்
தார்.

௩. அதிகாரம்.

மோசேயோவென்றால், மீதியானில் ஆ
சாரியனாயிருக்கிற தன் மாமனாகிய எத்தி
ரோவின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்
தான்; அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்
புறத்திலே ஓட்டி, பராபரனுடைய பர்வத
மாகிய ஓரேப்மட்டும் வந்தான்.

Digitized by Google

௨ அங்கே கர்த்தருடைய தூதனானவர்
ஒரு முள்செடியின் நடுவிலிருந்து உண்
டாகிற அக்கினிச்சுவாலையிலே அவனுக்
குத் தரிசனையானார்; இதோ முள்செடி
அக்கினியாய் எரிந்தாலும் முள்செடி வெந்
துபோகாதிருக்கிறதென்று கண்டான்.

௩ அப்பொழுது மோசே, நான் சேரப்
போய், அந்த முள்செடி வெந்துபோகா
திருக்கிறதேதென்கிற அந்தப் பெரிய தரிச
னையைப் பார்ப்பேனாகவென்றான்.

௪ ஆனால் பார்க்கிறதற்காக அவன் சேர
வருகிறதைக் கர்த்தர் கண்டு, பராபரன்
முள்செடியின் நடுவிலிருந்து அவனுக்கு
நேராகக் கூப்பிட்டு, மோசேயே, மோசே
யே, என்றார்; அவன் இதோ, அடியேன்
என்றான்.

௫ அப்பொழுது அவர், இங்கே கிட்டிச்
சேராயாக; உன் கால்களிலிருக்கிற உன்
பாதரட்சைகளைக் கழற்று; ஏனெனில் நீ
நிற்கிற ஸ்தலம் பரிசுத்த பூமியாயிருக்
கிறதென்று சொல்லி,

௬ பின்னையும் *நாம் ஆபிரகாமுடைய பரா
பரனும் இசாக்குடைய பராபரனும் யாக்
கோபுடைய பராபரனுமாகிய உன் பிதாக்
களுடைய பராபரனென்றார்; அப்பொழுது
மோசே தன் முகத்தை மூடிக்கொண்டான்;
ஏனென்றால் பராபரனை நோக்கிப்பார்க்கப்
பயந்தான். *மாற். ௰௨. ௨௬, ௨௭.

௭ ¶ கர்த்தர் சொன்னதாவது: நாம் எகிப்
திலிருக்கிற நமது சனத்தின் உபத்திரவத்
தைப் பார்க்கவே பார்த்து, தங்கள் ஆளோ
ட்டிகளினிமித்தம் அவர்கள் கூப்பிடுகிற
கூப்பிடுதலைக் கேட்டோம்; ஏனென்றால்
அவர்கள் வேதனைகளை அறிந்தோம்.

௮ ஆகையால் அவர்களை எகிப்தியரின் கை
க்கு நீங்கலாக்கிவிடவும், அவர்களை அந்தத்
தேசத்திலிருந்து கானானியரும், ஏத்தியரும்,
எமோரியரும், பெரிசியரும், ஏவியரும், எ
பூசியரும் இருக்கிறஇடமாகிய பாலும் தே
னும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேச
த்திற்கு ஏறிவரப்பண்ணவும் இறங்கினோம்.

௯ இப்பொழுதும் இதோ இஸ்ரவேல் புத்
திரரின் கூப்பிடுதல் நம்மண்டைக்கு வந்
தது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்
குதலையும் பார்த்தோம்.

௰ இப்பொழுதும் நீ இஸ்ரவேல் புத்திர
ராகிய நமது சனத்தை எகிப்திலிருந்து வெ
ளியே அழைத்துவரும்படிக்கு உன்னைப்
பார்வோனண்டைக்கு அனுப்புவோம் வா
வென்றார்.

௰௧ ¶ அப்பொழுது மோசே பராபரனோ
டே, பார்வோனண்டைக்குப் போகிறதற்
கும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து
வெளியே அழைத்துவருகிறதற்கும், நான்
எம்மாத்திரமென்றான்.

௰௨ அதற்கவர், நாம் உன்னுடனே இருப்
போம்; நீ சனத்தை எகிப்திலிருந்து வெளி
யே அழைத்துவந்தபொழுது, இந்தப் பர்
வதத்திலே பராபரனுக்கு ஆராதனைசெய்
வீர்களென்பது, நாம் உன்னை அனுப்பின
தற்கு அடையாளமாய் இருக்குமென்றார்.

௰௩ ¶ அப்பொழுது மோசே பராபரனோ
டே சொன்னதாவது: இதோ நான் இஸ்ர
வேல் புத்திரரண்டைக்கு வந்து, உங்கள்
பிதாக்களுடைய பராபரன் என்னை உங்களி
ண்டைக்கு அனுப்பினாரென்று அவர்களுக்
குச் சொல்லும்பொழுது, அவர்கள், அவரு
டைய நாமம் என்னவென்று என்னைக்
கேட்டால், அவர்களோடே என்ன சொல்
லுவேன் என்றான்.

௰௪ ¶ அப்பொழுது பராபரன், இருக்கிறவ
ராக இருப்போமென்று மோசேயுடனே
சொல்லி, இருப்போம் என்பவர் என்னை
உங்களண்டைக்கு அனுப்பினார் என்று
இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக
என்றார்.

௰௫ அப்புறம் பராபரன் மோசேயோடே
சொன்னதாவது: நீ இஸ்ரவேல் புத்திரரு
டனே, ஆபிரகாமுடைய பராபரனும் இசாக்
குடைய பராபரனும் யாக்கோபுடைய பரா
பரனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடை
ய பராபரனாகிய கர்த்தர் என்னை உங்களண்

Digitized by Google

டைக்கு அனுப்பினார் என்பாயாக, இது என்றைக்கும் நம்முடைய நாமமும், இது தலைமுறை தலைமுறையாக நம்முடைய பேர்ப் பிரஸ்தாபமுமாயிருக்கும்.

௧௬ நீ போய், இஸ்ரவேலின் மூப்பரைக் கூட்டி, அவர்களோடே சொல்லவேண்டியதாவது: ஆபிரகாம், இசாக்கு, யாக்கோபு என்றவர்களுடைய பராபரனாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர் எனக்குத் தரிசனையாகி, உங்களையும் எகிப்திலே உங்களுக்குச் செய்யப்பட்டதையும் விசாரிக்கவே விசாரித்தோமென்றும்,

௧௭ நாம் உங்களை எகிப்தின் சிறுமையிலிருந்து ஏறிவரப்பண்ணி, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய, கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியருடைய தேசத்திற்குக் கொண்டுபோவோமென்றும் சொன்னோமென்றார் என்று சொல்லு.

௧௮ அவர்கள் உன் சத்தத்திற்குக் கேள்வி கொடுப்பார்கள்; அப்பொழுது நீயும் இஸ்ரவேலின் மூப்பரும் எகிப்தின் இராசாவண்டைக்குப் போய், அவனோடே, எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் எங்களைச் சந்தித்தார்; இப்பொழுதும் நாங்கள் மூன்று நாள்பயணம் வனாந்தரத்திலே போய், எங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பலியிடட்டும் என்பீர்களாக.

௧௯ ஆனால் எகிப்தின் இராசா வல்லமையான கையைக் கண்டாலும், உங்களைப் போகவிடானென்று நாம் அறிவோம்.

௨௰ ஆகையால் நாம் நம்முடைய கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நாம் செய்யும் நம்முடைய சகலவித அதிசயங்களாலும் அதை அடிப்போம்; அதற்குப்பிறகு உங்களை அனுப்பிவிடுவான்.

௨௧ அப்பொழுது நாம் இந்தச் சனத்திற்கு எகிப்தியரின் கண்களுக்குமுன்பாகத் தயவுகிடைக்கப்பண்ணுவதினால் சம்பவிப்பதேதெனில், நீங்கள் போகிறபொழுது வெறுமையாய்ப் போகப்போகிறதில்லை.

௨௨ ஒவ்வொரு ஸ்திரி, தன்தன் அயலகத்தாள் கையிலும் தன்தன் வீட்டுக்காரிகள் கையிலும் வெள்ளி உடைமைகளையும் பொன் உடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டு வாங்குவாள்; அவைகளை உங்கள் குமாரர்மேலும் உங்கள் குமாரத்திகள்மேலும் வைத்து, * எகிப்தியரைக் கொள்ளையிட்டுப் போவீர்களென்றார். * ௨ மோ. ௰௧. ௨: ௰௨. ௩௫, ௩௬.

௪. அதிகாரம்.

அப்பொழுது மோசே பிரதியுத்தாரமாக, ஆனால் இதோ அவர்கள் என்னை நம்பாமலும் என் சத்தத்திற்குக் கேள்விகொடாமலும் போவார்கள்; ஏனெனில் கர்த்தர் உனக்குத் தரிசனையானதில்லையென்று சொல்லுவார்கள் என்றான்.

௨ அப்பொழுது கர்த்தர் அவனுடனே, உன் கையிலிருக்கிறது என்னவென்றார்; ஒரு கோலென்றான்.

௩ அதைத் தரையிலே போடென்றார்; அவன் அதைத் தரையிலே போட்டபொழுது, அது சர்ப்பமாயிற்று; அதற்கு மோசே விலகி ஓடினான்.

௪ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே உன் கையை நீட்டி அதின் வாலைப்பிடி என்றார்; அவன் தன் கையை நீட்டி அதைப் பிடிக்கிறபொழுது, அது அவன் கையிலே கோலாயிற்று.

௫ இது ஆபிரகாமுடைய பராபரனும் இசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிற தங்கள் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர், உனக்குத் தரிசனையானதை அவர்கள் நம்புகிறதற்கான அடையாளமென்றார்.

௬ ¶ பின்னையும் கர்த்தர் அவனுக்கு உன் கையை உன் மடியிலே போடென்றார்; அவன் தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே வாங்குகிறபொழுது, இதோ அவன் கை உறைந்த மழையைப் போல வெண்குஷ்டம் பிடித்திருந்தது.

Digitized by Google

௭ பிறகு அவர் உன் கையைத் திரும்ப உன் மடியிலே போடென்றார், அவன் தன் கையைத் திரும்பத் தன் மடியிலே போட்டு, தன் மடியிலிருந்து அதை வெளியே வாங்குகிறபொழுது, இதோ அது திரும்ப அவனுடைய மற்றச் சலதையைப்போல ஆயிற்று.

௮ அப்பொழுது அவர் சொன்னதாவது: அவர்கள் முந்தின அடையாளத்தைக் கண்டு, உன்னை விசுவாசியாமலும் உனக்குக் கேள்விகொடாமலும்போனால், பிந்தின அடையாளத்தைக் கண்டு விசுவாசிப்பார்கள்.

௯ அவர்கள் இவ்விரண்டு அடையாளங்களையும் விசுவாசியாமலும் உன் சத்தத்திற்குக் கேள்விகொடாமலும் போனார்களேயாகில், அப்பொழுது நீ நதியின் தண்ணீரை மொண்டு, பூமியில் ஊற்றுவாயாக; அப்பொழுது நீ நதியிலே மொண்ட தண்ணீர் பூமியிலே இரத்தமாமென்றார்.

௰ ¶ மோசேயோவென்றால் கர்த்தரோடே சொன்னதாவது: ஆ, ஆண்டவரே, முன்னும் எப்பொழுதும், தேவரீர் உம்முடைய அடியானோடே பேசினது முதற்கொண்டும் நான் பேச்சுக்காரன் அல்ல, ஏனெனில் நான் திக்குவாயனும் திக்குநாவுக்காரனுமானவன் என்றான்.

௰௧ ¶ அப்பொழுது கர்த்தர் அவனோடே சொன்னதாவது: மனிதனுக்கு வாயைக் கொடுத்தவர் யார்? அல்லவென்று ஊமையனையும் அல்லது செவிடனையும் அல்லது பார்வையுள்ளவனையும் அல்லது குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நாமல்லவோ?

௰௨ இப்பொழுதும் நீ போ; நாம் உன் வாயோடே இருந்து, *நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்போமென்றார். * மத். ௰. ௰௯, ௨௰.

௰௩ ¶ அவனோவென்றால், ஆ, ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்புமென்றான்.

௰௪ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயின்மேல் கோபமூண்டவராகிச் சொன்னதாவது: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவோ? அவன் நன்றாய்ப் பேசுகிறவனென்று அறிவோம்; இதோ அவன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு வந்து உன்னைக் கண்டு, தன் இருதயத்திலே மகிழ்ச்சியாயிருப்பான்.

௰௫ * நீ அவனோடே பேசி, வார்த்தைகளை அவன் வாயில்போடுவாயாக; நாமோவென்றால் உன் வாயோடும் அவன் வாயோடுமிருந்து, நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்குப் போதிப்போம். *௨ மோ. ௭. ௨.

௰௬ அவன் உனக்குப் பதிலாகச் சனத்தோடே பேசுவான்; இப்படியே அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய்.

௰௭ நீ அடையாளங்களைச்செய்யும் இந்தக் கோலை உன்கையில்பிடித்துக்கொண்டு போ என்றார்.

௰௮ ¶ மோசே போய்த் திரும்ப, தன் மாமனாகிய எத்திரோஅண்டைக்கு வந்து, நான் புறப்பட்டு எகிப்திலிருக்கிற என் சகோதரரண்டைக்குத் திரும்பிப்போய், அவர்கள் இன்னம் உயிரோடே இருக்கிறார்களோ என்று பார்க்கட்டுமே என்று அவனோடே சொன்னான்; அப்பொழுது எத்திரோ மோசேக்குச் சமாதானமாய்ப் போ என்றான்.

௰௯ பின்னையும் கர்த்தர் மீதியானிலே மோசேயோடே, எகிப்திற்குத் திரும்பிப்போ; ஏனெனில் உன் பிராணனை வாங்கத் தேடின மனிதர் எல்லாரும் செத்துப்போனார்கள் என்றார்.

௨௰ அப்பொழுது மோசே தன் பெண்சாதியையும் தன் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களைக் கழுதையின்மேல் ஏற்றி, எகிப்துதேசத்திற்குத் திரும்பினான்; மோசே பராபரனுடைய கோலைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு போனான்.

Digitized by Google

௨௰௧ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ எகிப்திலே திரும்பி வந்து சேர்ந்த

பொழுது, நாம் உன் கையிலே கொடுத்த எல்லா அற்புதங்களையும் பார்வோனுக்கு முன்பாகச் செய்யப் பார்; நாமோவெனில் அவன் இருதயத்தைச் சனத்தைவிடாத படிக்குக் கெட்டிப்படுத்துவோம்.

௨௨ அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியதாவது: கர்த்தர் உரைக்கிறதேதெனில் இஸ்ரவேல் நம்முடைய முதல் பேறான குமாரன்.

௨௩ நம்முடைய குமாரனை நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடுவென்று நாம் உன்னோடே சொல்லியும், நீ அவனை விடமாட்டோம் என்றாய்; இதோ நாம் உன் முதல் பேறான உன் குமாரனைக் கொன்றுபோடுகிறோமென்று உரைத்தாரென்று சொல்லுவாயாக என்றார்.

௨௪ ¶ வழியில் தங்குமிடத்திலே சம்பவித்ததேதென்றால் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லவேண்டுமென்று இருந்தார்.

௨௫ அப்பொழுது சிப்போராள், *கருக்கான கல்லை எடுத்து, தன் பிள்ளையின் நுனித்தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்குமுன்பாகப் போட்டு, நீர் எனக்கு இரத்தப்பழிக்கான மாப்பிள்ளையாமே என்றாள்.
*யோசு. ௫. ௨.

௨௬ அப்பொழுது அவனைவிட்டு விலகினார்; அவள் சுன்னத்துகளின்நிமித்தம் அப்பொழுது அவனை இரத்தப்பழிக்கான மாப்பிள்ளை என்றாள்.

௨௭ ¶ கர்த்தர் ஆரோனுடனே, நீ வனாந்தரத்திலே மோசேக்கு எதிர்கொண்டு போவென்றார்; அவன் போய்ப் பராபரனுடைய பர்வதத்திலே அவனைச் சந்தித்து, அவனை முத்தம்செய்தான்.

௨௮ அப்பொழுது மோசே தன்னை அனுப்பின கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் அவர் தனக்குக் கற்பித்த எல்லா அடையாளங்களையும் ஆரோனுக்கு அறிவித்தான்.

௨௯ ¶ மோசேயும் ஆரோனும் போய் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரை எல்லாம் கூட்டினார்கள்.

௩௰ ஆரோனேவென்றால் கர்த்தர் மோசேயோடே பேசின எல்லா வார்த்தைகளையும் சொல்லி, சனத்தின் கண்களுக்குமுன்பாக அந்த அடையாளங்களைச் செய்தான்.

௩௧ சனம் விசுவாசித்தது; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விசாரித்தாரென்றும் தங்கள் சிறுமையைப் பார்த்தார் என்றும் அவர்கள் கேட்டபொழுது, குனிந்து பணிந்துகொண்டார்கள்.

௫. அதிகாரம்.

பிற்பாடு மோசேயும் ஆரோனும் உள்பிரவேசித்துப் பார்வோனோடே, நமக்கு வனாந்தரத்திலே பண்டிகை ஆசரிக்கும்படிக்கு, நம்முடைய சனத்தைப் போகவிடுமென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறாரென்றார்கள்.

௨ பார்வோனோவென்றால் நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் சத்தத்தைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலை விடுவதுமில்லை என்றான்.

௩ அப்பொழுது அவர்கள் எபிரேயருடைய பராபரன் எங்களைச் சந்தித்தார்; அவர் பெருவாரிக் காய்ச்சலோடும் அல்லவென்று பட்டயத்தோடும் எங்களுக்கு நேரிடாதபடிக்கு நாங்கள் மூன்று நாள் பயணம் வனாந்தரத்திலே போய், எங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பலியிடட்டுமே என்றார்கள்.

௪ ஆனால் எகிப்தின் இராசா அவர்களுடனே, மோசே ஆரோனென்றவர்களே, நீங்கள் சனத்தைத் தங்கள் வேலைகளைவிட்டுக் கலையப்பண்ணுகிறதென்ன? உங்கள் சுமைகளைச் சுமக்கப் போங்களென்றான்.

௫ பின்னையும் பார்வோன் இதோ, தேசத்தின் சனம் அப்போதே திரட்சியாயிருக்க, அவர்களை நீங்கள் தங்கள் சுமைகளைவிட்டு ஓயப்பண்ணுவீர்களோ என்று சொல்லி,

Digitized by Google

௬ ¶ அக்காளிலே பார்வோன் சனத்தின்
விசாரிப்புக்காரருக்கும் அதின் தலைவருக்
கும் கற்பித்துச் சொன்னதாவது:
௭ நீங்கள் இனிச் சனத்திற்கு நேற்றைப்
போலவும், முந்துநேற்றைப்போலவும்,
செங்கல் வேலைக்கு வைக்கோல் கொடுக்க
வேண்டாம்; அவர்கள்தாமே போய்த் தங்
களுக்கு வைக்கோல் சேர்க்கக்கடவர்கள்.
௮ ஆனால் அவர்கள் நேற்றும் முந்துநேற்
றும் செய்த செங்கல்களுடைய இலக்கத்
தின் திட்டத்தைத் தானே அவர்கள்மேலே
சுமத்துவீர்களாக; அதிலே நீங்கள் ஒன்றும்
குறைக்கவேண்டாம்; ஏனென்னில் அவர்கள்
சும்மா இருக்கிறார்கள்; ஆகையால் போ
வோம் எங்கள் பராபரனுக்குப் பலியிடு
வோம் என்று கூப்பிடுகிறார்கள்.
௯ அந்த மனிதர்கள் பொய் வார்த்தைக
ளைக் கவனிக்காமல் தங்கள் பணிவிடை
வேலைகளில் முயற்சியாயிருக்கும்படிக்கு,
அது அவர்கள்மேல் அதிகரிக்கப்படக்கட
வதென்றான்.
௰ ¶ அப்பொழுது சனத்தின் ஆளோட்டி
களும் அதின் தலைவரும் புறப்பட்டுச் சன
த்தோடே சொன்னதாவது: நாம் உங்க
ளுக்கு வைக்கோல் கொடுப்பதில்லை என்
றும்,
௰௧ நீங்களே போய் உங்களுக்கு அகப்
படுகிற இடங்களில் வைக்கோலைச் சம்பா
தியுங்கள்; உங்கள் பணிவிடை வேலையி
லேவென்றால், ஒன்றும் குறைக்கப்படுவ
தில்லை என்றும் பார்வோன் சொன்னார் என்
றார்கள்.
௰௨ அப்பொழுது வைக்கோலுக்குப் பதி
லாகத் தாளடிகளைச் சேர்க்கும்படிக்குச்
சனம் எகிப்துதேசமெங்கும் சிதறிப்போ
யிற்று.
௰௩ ஆளோட்டிகளோவென்றால் துரிதம்
பண்ணி, வைக்கோலிருந்த நாளில் செய்த
தற்குச் சரியாக உங்கள் பங்கிடுவேலைகளை
ஒவ்வொருநாளிலே முடித்துத் தீருங்கள்
என்றார்கள்.
௰௪ பிற்பாடு நீங்கள் முந்தியதுபோல,
செங்கல்லில் உங்கள் திட்டத்தை நேற்றும்
இன்றும் முடிக்காதே போனதென்ன
என்று பார்வோனுடைய ஆளோட்டிகள்
இஸ்ரவேல் புத்திரர்மேலே வைத்த இவர்க
ளுடைய தலைவர்களைக் கேட்டு அடித்தார்
கள்.
௰௫ ¶ ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின்
தலைவர் உள்பிரவேசித்துப் பார்வோனை
நோக்கிக் கூப்பிட்டு, உமதடியாருக்கு நீர்
இப்படிச் செய்வானேன்?
௰௬ உமதடியாருக்கு வைக்கோல் கொடுக்
கப்படாவிட்டாலும், செங்கலை அறுத்துத்
தீருங்களென்று எங்களுக்குச் சொல்லுகி
றார்கள்; இதோ உம்முடைய சனத்தின்
மேலே குற்றம் இருக்கும்போது, உமதடி
யார் அடிக்கப்படுகிறார்கள் என்றார்கள்.
௰௭ அதற்கவன் சொன்னதாவது: நீங்கள்
சும்மா இருக்கிறீர்கள்; சும்மாதான் இருக்
கிறீர்கள்; ஆகையினாலே போவோம் கர்த்
தருக்குப் பலியிடுவோம் என்கிறீர்கள்.
௰௮ இப்பொழுதும் போங்கள், பணிவி
டைசெய்யுங்கள்; உங்களுக்கு வைக்கோல்
கொடுக்கப்படுவதில்லை; செங்கல்லுகளு
டைய இலக்கத்தின் திட்டத்தையோவெ
னில் நீங்கள் ஒப்புவிக்கவேண்டுமென்
றான்.
௰௯ நீங்கள் ஒவ்வொருநாளிலே அறுத்துத்
தீரவேண்டிய செங்கல்லுகளிலே ஒன்றும்
குறைக்காதிருங்கள்என்னப்பட்டதினாலே,
தங்களுக்கு வந்த இக்கட்டை இஸ்ரவேல்
புத்திரரின் தலைவர் கண்டு,
௨௰ ¶ பார்வோனைவிட்டுப் புறப்படுகை
யில், தங்களுக்கு எதிரே நிற்கிற மோசேக்
கும் ஆரோனுக்கும் எதிர்ப்பட்டு,
௨௰௧ அவர்களுடனே, நீங்கள் பார்வோ
னின் கண்களுக்குமுன்பாகவும் அவரு
டைய ஊழியக்காரரின் கண்களுக்கு முன்
பாகவும் எங்கள் வாசனையை நாறப்பண்
ணி, எங்களைக் கொல்ல அவர்கள் கையிலே
பட்டயத்தைக் கொடுத்ததினிமித்தம் கர்த்

Digitized by Google

தர் உங்களை நோக்கிப்பார்த்து, நியாயந்தீர்க்கக்கடவர் என்றார்கள்.

௨௨ ¶ அப்பொழுது மோசே கர்த்தரண்டைக்குத் திரும்பி, ஆண்டவரே, இந்தச் சனத்திற்கு ஏன் தீங்குவரப்பண்ணினீர்? நீர் என்னை அனுப்பினதேது?

௨௩ நான் உம்முடைய நாமத்திலே பேசப் பார்வோனண்டையில் உட்பிரவேசித்தது முதல்கொண்டுதானே இந்தச் சனத்தை உபத்திரவப்படுத்தினான்; நீரோவெனில் உம்முடைய சனத்தை விடுவித்ததே இல்லை என்றான்.

௬. அதிகாரம்.

அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, நாம் பார்வோனுக்குச் செய்வதை இப்பொழுது காண்பாய், அதேதென்றால் பலத்த கையைக் கண்டு அவர்களைப் போகவிட்டு, பலத்த கையைக் கண்டு அவர்களைத் தன் தேசத்திலிருந்து துரத்திவிடுவானென்றார்.

௨ ¶ பின்னையும் பராபரன் மோசேயுடனே பேசி அவனோடே சொன்னதாவது: நாம் கர்த்தர்.

௩ நாம் சர்வத்திற்கும் வல்ல பராபரனாய், ஆபிரகாமுக்கும் இசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனையானோம்; ஆனால் கர்த்தரென்ற நம்முடைய நாமத்தினாலே நாம் அவர்களுக்கு அறியப்பட்டதில்லை.

௪ அவர்கள் பரதேசிகளாய்த் தங்கின தேசமாகிற கானான்தேசத்தை அவர்களுக்குக் கொடுக்க, நாம் அவர்களோடே நம்முடைய உடம்படிக்கையையும் ஏற்படுத்தி,

௫ எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ரவேல் புத்திரரின் தவிப்பையும் நாம் கேட்டு, நமது உடம்படிக்கையை நினைத்தோம்.

௬ ஆகையால் இஸ்ரவேல் புத்திரருக்கு நீ சொல்லவேண்டியதேதெனில் நாம் கர்த்தர், நாம் உங்களை எகிப்தியருடைய சுமைகளின் கீழிருந்து புறப்படப்பண்ணி, உங்களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி விடுவித்து, உங்களை நீட்டப்பட்ட புயத்தினாலும் மகா நியாயத்தீர்ப்புகளினாலும் மீட்டு,

௭ உங்களை நமக்குச் சனமாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்குப் பராபரனாயிருப்போம்; நாம் உங்களை எகிப்தியருடைய சுமைகளின் கீழிருந்து புறப்படப்பண்ணுகிற உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று அறிவீர்கள்.

௮ நாம் ஆபிரகாமுக்கும் இசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்போமென்று நம்முடைய கரத்தை ஏறெடுத்த தேசத்திலே உங்களைக் கொண்டுபோய், அதை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்போம்; நாம் கர்த்தரென்று அவர்களுக்குச் சொல்லென்றார்.

௯ இந்தப்பிரகாரமாக மோசே இஸ்ரவேல் புத்திரரோடே பேசினான்; ஆனால் அவர்கள் ஆவியின் இடுக்கணினாலும் கடினவேலையினாலும் மோசேயைக் கேளாதேபோனார்கள்.

௰ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயுடனே பேசி,

௰௧ நீ உன்பிரவேசித்து, எகிப்தின் இராசாவாகிய பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிட அவனோடே பேசு என்றார்.

௰௨ ஆனால் மோசே கர்த்தருக்கு முன்பாகப் பேசி, இதோ இஸ்ரவேல் புத்திரர் என்னைக் கேட்கவில்லை; பார்வோன் என்னை எப்படிக் கேட்பான்? நான் சுன்னத்தில்லாத உதடுகளுமுள்ளவன் என்றார்.

௰௩ கர்த்தரோவென்றால் மோசேயோடும் ஆரோனோடும் பேசி, இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போகும்படிக்கு, அவர்களை இஸ்ரவேல் புத்திரரண்டைக்கும் எகிப்தின் இராசாவாகிய பார்வோனண்டைக்கும் அனுப்பிக் கட்டளைகளைக் கொடுத்துவந்தார்.

௰௪ ¶ அவர்களுடைய பிதாக்களின் வீட்டாரில் தலைவராவது, இஸ்ரவேலுக்கு முதல் பிறந்தவனான ரூபனின் குமாரர், அனோக்,

Digitized by Google

பல்லூ, எத்ஸரோன, கர்மீ; இவர்கள் ரூபனுடைய வம்சங்களின் தலைவர்.
௧௫ சிமெயோனின் குமாரர்; எமுவேல், யாமீன், ஓகாத், யாகின், சோகார், கானானித்தியின் குமாரனாகிய சவுல்; இவர்கள் சிமெயோனுடைய வம்சங்களின் தலைவர்.
௧௬ தங்கள் சந்ததிகளாய்ப் பிரிந்த இலேவியினுடைய குமாரரின் நாமங்கள், கெர்சோன், கோகாத், மேராரி, என்றவைகள்; இலேவி உயிரோடிருந்த வருஷங்களோவென்றால், நூற்று முப்பத்தேழு வருஷங்கள்.
௧௭ தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த கெர்சோனின் குமாரர்; லிப்னீயும், சிமேயீயும் தானே.
௧௮ கோகாத்தின் குமாரர்; அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல் என்றவர்கள்; கோகாத் உயிரோடே இருந்த வருஷங்களோவென்றால், நூற்று முப்பத்து மூன்று வருஷங்கள்.
௧௯ மேராரியின் குமாரர்; மகேலியும், மூசியும்தானே; இவர்கள் தங்கள் சந்ததிகளாய்ப்பிரிந்த இலேவியனுடைய வம்சங்களின் தலைவர்.
௨௰ அம்ராம் தன்னுடைய அத்தையாகிய யோகெபேத்தை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு ஆரோனையும் மோசேயையும் பெற்றாள்; அம்ராம் உயிரோடிருந்த வருஷங்களோவென்றால், நூற்று முப்பத்தேழு வருஷங்கள்.
௨௧ இத்சேயாரின் குமாரர்; கோராக், நெப்பேக், சித்ரி, என்றவர்கள்.
௨௨ ஊசியேலின் குமாரர்; மீசவேல், எல்சாபான், சித்திரி, என்றவர்கள்.
௨௩ ஆரோன் அம்மினதாபின் குமாரத்தியும் நகேசோனின் சகோதரியுமாகிய எலிசபாளை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு நாதாபையும், அபியூவையும், எலெயாசாரையும், இத்தாமாரையும் பெற்றாள்.
௨௪ கோராகின் குமாரர்; ஆசீர், எல்க்கானா, அபியாசாப், என்றவர்கள்; இவர்கள் கோராகியரின் வம்சங்களின் தலைவர்.
௨௫ ஆரோனின் குமாரனாகிய எலெயாசார் பூத்தியேலுடைய குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான்; இவள் அனுக்குப் பீனேகாசைப் பெற்றாள், இவர்கள் தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த இலேவியருடைய பிதாக்களாகிய தலைவர்.
௨௬ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் சேனைகளின்படியே எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போங்களென்று கர்த்தர் சொன்ன ஆரோனும் மோசேயும் இவர்கள்தான்.
௨௭ இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு போகும்படிக்கு எகிப்தின் இராசாவாகிய பார்வோனோடே பேசின மோசேயும் ஆரோனும் இவர்கள்தானே.
௨௮ ¶ கர்த்தர் எகிப்துதேசத்திலே மோசேயோடே பேசின நாளிலே சம்பவித்ததேதென்றால்,
௨௯ கர்த்தர் மோசேயுடனே, நாம் கர்த்தர்; நாம் உன்னோடே சொல்லுகிறவைகளையெல்லாம் நீ எகிப்தின் இராசாவாகிய பார்வோனோடே சொல்லென்று சொன்னபொழுது,
௩௰ மோசே கர்த்தருக்கு முன்பாக, இதோ, நான் சுன்னத்தில்லாத உதடுகளுள்ளவன்; பார்வோன் என்னை எப்படிக் கேட்பானென்றான்.

௭. அதிகாரம்.

பராபரன் மோசேயோடே சொன்னதாவது: பார், உன்னை நாம் பார்வோனுக்குத் தேவனாக்கினோம்; உன் சகோதரனாகிய ஆரோனோவென்றால், உன் தீர்க்கதரிசியாயிருப்பான்.
௨ நாம் உனக்குக் கற்பிப்பதை எல்லாம் நீ சொல்லும்போது *உன் சகோதரனாகிய ஆரோன் பார்வோனோடே, இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிடும்

Digitized by Google

படிக்குப் பேசக்கடவன். ௨ மோ. ௪. ௰௬.

௩ நாமோவெனில் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி, எகிப்துதேசத்தில் நம்முடைய அடையாளங்களையும் நம்முடைய அற்புதங்களையும் மிகுதியாய் நடக்கப்பண்ணுவோம்.

௪ பார்வோன் உங்களைக் கேளாதே போவான், ஆகையால் நாம் நம்முடைய கையை எகிப்திற்கு விரோதமாக நீட்டி, இஸ்ரவேல் புத்திரரென்ற நமது சனமாகிய நம்முடைய சேனைகளைப் பெரிய நியாயத்தீர்ப்புகளால் எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போவோம்.

௫ அப்படியே நாம் நம்முடைய கையை எகிப்தின்மேல் நீட்டி, இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து அழைத்துக் கொண்டு போகையில், நாம் கர்த்தரென்றதை எகிப்தியர் அறிவார்கள் என்றார்.

௬ மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்குக் கற்பித்தபடியே செய்தார்கள்.

௭ அவர்கள்பார்வோனோடேபேசுகிறபொழுது, மோசேக்கு எண்பதுவயதும் ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயதும் இருந்தது.

௮ ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது:

௯ உங்களுக்காக ஒரு அற்புதம் காட்டுங்களென்று பார்வோன் உங்களோடே சொன்னால், அப்பொழுது நீ ஆரோனுடனே, உன் கோலை எடுத்து அதைப் பார்வோனுக்கு முன்பாகப் போடென்பாயாக, அப்பொழுது அது சர்ப்பமாகுமென்றார்.

௰ மோசேயும் ஆரோனும் பார்வோனண்டையில் பிரவேசித்து, கர்த்தர் தங்களுக்குக்கற்பித்தபடியே செய்தார்கள்; ஆரோன் தன் கோலைப் பார்வோனுக்கும், அவன் ஊழியக்காரருக்கும் முன்பாகப்போட்டான்; அப்பொழுது அது சர்ப்பமாயிற்று.

௰௧ அப்பொழுது பார்வோனும் ஞானிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான், *எகிப்தின் சாஸ்திரிகளாகிய இவர்களும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்து, ௨ மோ. ௮. ௭, ௰௭, ௰௮. ௨ தீமோ. ௩. ௮, ௯.

௰௨ அவனவன் தன்தன் கோலைப் போட்டார்கள், அப்பொழுது அவைகள் சர்ப்பங்களாயின; ஆரோனுடைய கோலோவென்றால், இவர்களுடைய கோல்களை விழுங்கிவிட்டது.

௰௩ ஆனால் கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் உரம்கொண்டது, அவர்களைக் கேளாதே போனான்.

௰௪ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: பார்வோனின் இருதயம் அழுத்தமாயிருக்கிறது; சனத்தை விடமாட்டோமென்கிறான்.

௰௫ காலமே பார்வோனண்டைக்குப் போ; இதோ தண்ணீரண்டையிலே புறப்பட்டு வருவான்; நீ அவனுக்கு எதிராக நதியின் கரையிலே நின்று, சர்ப்பமாய் மாறி இருந்த கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு,

௰௬ அவனோடே சொல்லவேண்டியது: எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் என்னை உம்மண்டைக்கு அனுப்பி, நமது சனத்தை வனாந்தரத்திலே நமக்கு ஆராதனைசெய்யும்படிக்குப் போகவிடு என்று சொல்லச்சொல்லியும், இதோ இதுவரைக்கும் கேளாதே போனீர்.

௰௭ இதோ என் கையிலிருக்கிற கோலினாலே நான் நதியிலிருக்கிற தண்ணீரின்மேல் அடிப்பேன்; அப்பொழுது அது இரத்தமாய் மாறி,

௰௮ நதியிலிருக்கிற மீன்கள் செத்து, நதி நாறிப்போம்; அப்பொழுது நதியிலிருக்கிற தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்குக் குமட்டல் எடுக்கும்; நாம் கர்த்தர் என்பதை அதினால் அறிவாயென்று கர்த்தர் சொல்லுகிறாரென்று சொல்லென்றார்.

௰௯ ¶ பிறகு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ ஆரோனோடே சொல்லவேண்டியதேதெனில், உன் கோலை எடுத்

Digitized by Google

துக்கொண்டு, உன் கையை எகிப்தியரின் தண்ணீர்களாகிய அவர்கள் நதிகளின்மேலும் அவர்கள் ஆறுகளின்மேலும் அவர்கள் குளங்களின்மேலும் தண்ணீர் சேர்ந்து நிற்கிற அவர்களுடைய எல்லா இடங்களின்மேலும் அவைகள் இரத்தமாகும்படிக்கு நீட்டு; அப்பொழுது எகிப்துதேசமெங்கும் மரப்பாத்திரங்களிலும் கல்பாத்திரங்களிலும் இரத்தம் உண்டாயிருக்குமென்று சொல்லென்றார்.

௨௰ மோசேயும் ஆரோனும் கர்த்தர் கற்பித்தபடி செய்தார்கள்; இவன் பார்வோனுடைய கண்களுக்கும் அவன் ஊழியக்காரரின் கண்களுக்கும் முன்பாகக் கோலை ஓங்கி, நதியில் இருக்கிற தண்ணீரை அடித்தான்; அப்பொழுது நதியில் இருக்கிற தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று.

௨௧ நதியில் இருந்த மீன்கள் செத்து, நதி நாறிப்போயிற்று; நதியிலிருக்கிற தண்ணீரைக்குடிக்க எகிப்தியருக்குக் கூடாதே போயிற்று; எகிப்துதேசமெங்கும் இரத்தம் இருந்தது.

௨௨ எகிப்தின் சாஸ்திரிகளும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்தார்கள்; ஆனதுகொண்டு கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் உரம்கொண்டது; அவர்களைக் கேளாதேபோனான்.

௨௩ பார்வோன் திரும்பிக்கொண்டு தன் வீட்டிற்குள் பிரவேசித்து, தன் மனதை அதின்மேலும் வைக்காதேபோனான்.

௨௪ தண்ணீர் குடிக்க எகிப்தியரெல்லாரும் நதியைச்சுற்றி ஊற்றுவெட்டினார்கள்; ஏனெனில் நதியின் தண்ணீரைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது.

௨௫ கர்த்தர் நதியை அடித்து ஏழுநாள் நிறைவேறிற்று.

௮. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையிலே உள்பிரவேசித்து அவனோடே சொல்லவேண்டியது: கர்த்தர் உரைக்கிறதேதெனில், நமது சனத்தை நமக்கு ஆராதனை செய்யும்படிக்கு விடு.

௨ நீ அதை விடமாட்டேன் என்றாயாகில், இதோ நாம் உன் எல்லையை எல்லாம் தவளைகளாலே வாதிப்போம்.

௩ நதி தவளைகளைத் திரளாய்ப் பிறப்பிக்கும்; அவைகள் ஏறி, உன் வீட்டிலும் உன் படுக்கை அறையிலும் உன் மஞ்சத்தின்மேலும் உன் ஊழியக்காரர் வீடுகளிலும் உன் சனத்திற்குள்ளும் அப்பம்சுடுகிற உன் அடுப்புகளிலும் மாப்பிசைகிற உன் தொட்டிகளிலும் வரும்.

௪ அந்தத் தவளைகள் உன்மேலும், உன் சனத்தின்மேலும், உன்னுடைய எல்லா ஊழியக்காரர்மேலும் ஏறுமென்கிறார் என்று சொல்லென்றார்.

௫ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ ஆரோனோடே சொல்லவேண்டியதேதெனில், நீ உன் கோலோடே உன்னுடைய கையை நதிகளின்மேலும் ஆறுகளின்மேலும் குளங்களின்மேலும் நீட்டி, எகிப்து தேசத்தின்மேலே தவளைகளை ஏறிவரப்பண்ணென்று சொல்லென்றார்.

௬ அப்படியே ஆரோன் தன் கையை எகிப்தினுடைய தண்ணீர்களின்மேல் நீட்டினான்; அப்பொழுது தவளைகள் ஏறிவந்து, எகிப்துதேசத்தை மூடின.

௭ சாஸ்திரிகளும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்து, எகிப்துதேசத்தின்மேலே தவளைகளை ஏறிவரப்பண்ணினார்கள்.

௮ ¶ ஆனால் பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, கர்த்தர் அந்தத் தவளைகளை என்னையும் என் சனத்தையும் விட்டகற்ற அவரை வேண்டிக்கொள்ளுங்கள், கர்த்தருக்குப் பலியிடும்படிக்குச் சனத்தை விடுவேனென்றான்.

௯ அப்பொழுது மோசே பார்வோனுக்குத் தவளைகள் நதியிலேமாத்திரம் இருப்

Digitized by Google

பதற்கு, அவைகளை உம்மிடத்திலும் உம்முடைய வீட்டிலும் இராதபடிக்கு அழிக்க, நான் உமக்காகவும் உம்முடைய ஊழியக்காரருக்காகவும் உம்முடைய சனத்திற்காகவும் எப்பொழுது விண்ணப்பம்பண்ணவேண்டும் என்பதை எனக்குக் குறிக்கும் மேன்மை உமக்கே இருக்கட்டும் என்றான்.

௰ அவன் நாளை என்றான்; அப்பொழுது இவன் சொன்னதாவது: எங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது.

௰௧ தவளைகள் உம்மையும் உம்முடைய வீட்டையும் உம்முடைய ஊழியக்காரரையும் உம்முடைய சனத்தையும்விட்டகன்று நதியிலேமாத்திரம் இருக்குமென்றான்.

௰௨ மோசேயும் ஆரோனும் பார்வோனை விட்டுப் புறப்பட்டார்கள்; பிற்பாடு மோசே பார்வோனுக்கு வரப்பண்ணின தவளைகள் நிமித்தம் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.

௰௩ கர்த்தர் மோசேயின் சொல்படி செய்தார்; வீடுகளிலும் முற்றங்களிலும் வயல்களிலும் இருந்த தவளைகள் செத்துப்போயிற்று.

௰௪ அவைகளைக் குவியல் குவியலாகச் சேர்த்துப்போட்டார்கள்; அதினால் பூமி நாற்றம் எடுத்தது.

௰௫ இலகுவுண்டாயிற்றென்று பார்வோன் கண்டபொழுதோவெனில், அவன் கர்த்தர் சொல்லியிருந்தபடி தன் இருதயத்தைக் கடினப்படுத்தி அவர்களைக் கேளாதே போனான்.

௰௬ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ ஆரோனுடனே உன் கோலை நீட்டி, பூமியின் தூளை அடி; அப்பொழுது அது எகிப்துதேசமெங்கும் பேன்களாய்ப் போமென்று சொல்லென்றார்.

௰௭ இப்படிச் செய்தார்கள்; ஆரோன் தன் கோலோடே தன் கையை நீட்டி, பூமியின் தூளை அடித்தான், அப்பொழுது ஏராளமான பேன்கள் மனிதரிலும் மிருகசீவன்களிலும் உண்டாயின; எகிப்துதேசமெங்கும் பூமியின் தூளெல்லாம் பேன்களாய்ப் போயின.

௰௮ சாஸ்திரிகளும் தங்கள் சூனியங்களாலே பேன்களைப் பிறப்பிக்கும்படிக்கு அப்படிச் செய்தார்கள்; *ஆனால் அவர்களுக்குக் கூடாதேபோயிற்று; ஏராளமான பேன்கள் மனிதரிலும் மிருகசீவன்களிலும் இருந்தன. *௨ மோ. ௭. ௰௧, ௰௨, ௨௨: ௮. ௭. ௯, ௰௧.

௰௯ அப்பொழுது சாஸ்திரிகள் பார்வோனோடே, இது பராபரனுடைய விரல் என்றார்கள்; ஆனால் கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனுடைய இருதயம் உரம்கொண்டது; அவர்களைக் கேளாதே போனான்.

௨௰ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ நாளை அதிகாலமே எழுந்திருந்துபோய், பார்வோனுக்கு முன்பாக நில், இதோ தண்ணீரண்டையிலே புறப்பட்டு வருவான்; அவனோடே நீ சொல்லவேண்டியதாவது: கர்த்தர் உரைக்கிறதேதெனில், நம்முடைய சனத்தை நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடு.

௨௧ நீ நம்முடைய சனத்தை விடாயேயாகில் இதோ நாம் உன்மேலும் உன் ஊழியக்காரர்மேலும் உன் சனத்தின்மேலும் உன் வீடுகளின்மேலும் பலவித வண்டுகளை அனுப்புவோம்; எகிப்தியர் வீடுகளும் அவர்கள் இருக்கிற தேசமும் அந்த வண்டுகளாலே நிரம்பிப்போம்.

௨௨ பூமியின் நடுவில் நாமே கர்த்தர் என்பதை நீ அறியத்தக்கதாக, நாம் நம்முடைய சனமிருக்கிற கோசேன் சீமையை அந்நாளிலே அங்கே வண்டுச்சாதிகள் வாராதபடிக்கு விசேஷித்ததாக்கி,

௨௩ நம்முடைய சனத்திற்கும் உன் சனத்திற்கும் வித்தியாசம்பண்ணும் இரட்சிப்பைக் காண்பிப்போம்; நாளை இந்த அடை

Digitized by Google

யாளம் சம்பவிக்கும் என்றாரென்று சொல்லென்றார்.

௨௪ அப்படியே கர்த்தர் செய்தார்; மகா திரளான வண்டுச் சாதிகள் பார்வோன் வீட்டிலும் அவன் ஊழியக்காரர் வீடுகளிலும் எகிப்துதேசம் அனைத்திலும் வந்தன; வண்டுகளாலே தேசம் கெட்டுப்போயிற்று.

௨௫ ¶ அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, நீங்கள்போய் உங்கள் பராபரனுக்குத் தேசத்திலேதானே பலியிடுங்கள் என்றான்.

௨௬ அதற்கு மோசே சொன்னதாவது: இப்படிச் செய்யத்தகாது; ஏனெனில் எகிப்தியர் அருவருக்கிற பிரகாரமாய் எங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பலியிடுகிறோமே; இதோ எகிப்தியர் அருவருக்கிற பிரகாரமாக, நாங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பலியிட்டால் எங்களைக் கல் எறியார்களோ?

௨௭ *எங்கள் பராபரனாகிய கர்த்தர் எங்களுக்குச்சொன்னபடி, நாங்கள் மூன்றுநாள் பயணம் வனாந்தரத்திலே போய் அவருக்கு பலியிடுவோம் என்றான். *௨ மோ. ௩. ௧௮.

௨௮ அப்பொழுது பார்வோன், நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு வனாந்தரத்திலே பலியிடும்படிக்கு, நான் உங்களை விடுவேன்; நீங்கள் அதிதூரமாய்மாத்திரம் போகாமல், எனக்காக வேண்டுதல்செய்யுங்கள் என்றான்.

௨௯ மோசே சொன்னதாவது: இதோ நான் உம்மைவிட்டுப் புறப்பட்டபின், கர்த்தர் நாளை வண்டுச்சாதிகளைப் பார்வோனையும் அவர் ஊழியக்காரரையும் அவர் சனத்தையும் விட்டகற்ற, நான் அவரை வேண்டிக்கொள்ளுவேன்; ஆனால் சனத்தைக் கர்த்தருக்குப் பலியிட விடாததினாலே, பார்வோன் இனி வஞ்சனைமாத்திரம் பண்ணிக்கொண்டிராராக என்றான்.

௩௰ ¶ மோசே பார்வோனைவிட்டுப் புறப்பட்டுக் கர்த்தரை வேண்டிக்கொண்டான்.

௩௧ அப்பொழுது கர்த்தர் மோசேயின் சொல்படி செய்து, வண்டுச்சாதிகளைப் பார்வோனையும் அவன் ஊழியக்காரரையும் அவன் சனத்தையும் விட்டகற்றினார்; ஒன்றாகிலும் மீந்திருந்ததில்லை.

௩௨ பார்வோனோவென்றால் அந்த முறையும் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, சனத்தை விடாதேபோனான்.

௯. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையில் பிரவேசித்து அவனோடே சொல்லவேண்டியது, எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் உரைக்கிறதேதெனில், நம்முடைய சனத்தை நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடு.

௨ ஏனெனில் நீ அவர்களை விடமாட்டேனென்று இன்னம் அவர்களை நிறுத்திவைத்தால்,

௩ இதோ கர்த்தருடைய கை வெளியிலிருக்கிற உன் மந்தையாகிய குதிரைகளின் மேலும் கழுதைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் ஆடுமாடுகளின்மேலும் மகா கனமான பெருவாரிக்காய்ச்சல் உண்டாக வந்திருக்கும்.

௪ கர்த்தர் இஸ்ரவேலரின் மந்தைக்கும் எகிப்தியரின் மந்தைக்கும் விசேஷித்த வித்தியாசமும்பண்ணுவார்; இஸ்ரவேல் புத்திரரின் சகல மந்தையிலும் ஒன்றும் சாவதில்லை என்றார்.

௫ நாளைக்குக் கர்த்தர் இந்தக் காரியத்தைத் தேசத்திலே செய்வாரென்றும் கர்த்தர் காலத்தைக்குறித்தாரென்றும் சொல்லென்றார்.

௬ மறுநாளிலே கர்த்தர் இந்தக்காரியத்தைச் செய்தார்; எகிப்தியருடைய எல்லா விதமுமான மந்தை செத்துப்போயிற்று; ஆனால் இஸ்ரவேல் புத்திரரின் மந்தையில் ஒன்றாகிலும் செத்ததில்லை.

௭ பார்வோன் விசாரித்தனுப்பினான்; இதோ இஸ்ரவேலரின் மந்தையில் ஒன்று

Digitized by Google

ிலும் சாவ இல்லை; பார்வோனுடைய
இருதயமோவென்றால் கடினப்பட்டது;
அவன் சனத்தை விட்டதில்லை.
௮ அப்பொழுது கர்த்தர் மோசேயோடும்
ஆரோனோடும் சொன்னதாவது: உங்கள்
கைப்பிடிகள் நிறைய அடுப்பின் நீறு அள்
ளிக்கொள்ளுங்கள்; அதை மோசே பார்
வோனுடைய கண்களுக்கு முன்பாக வா
னத்திற்கு நேராக இறைக்கக்கடவன்.
௯ அப்பொழுது அது எகிப்துதேசம் மீ
தெங்கும் தூசியாகி, எகிப்து தேசமெங்
கும் மனிதரிலும் மிருகசீவன்களிலும் கொ
ப்புளங்களை எழும்பப்பண்ணுகிற எரிபந்த
மாய்ப் போம் என்றார்.
௰ அப்படியே அவர்கள் அடுப்பின் நீறு
அள்ளிக்கொண்டு, பார்வோனுக்கு முன்
பாக வந்து நின்றார்கள்; மோசே அதை
வானத்திற்கு நேராக இறைத்தான்; அப்
பொழுது மனிதரிலும் மிருகசீவன்களி
லும் கொப்புளங்களை எழும்பப்பண்ணு
கிற எரிபந்தம் உண்டாயிற்று.
௰௧ அந்த எரிபந்தத்தினிமித்தம் சாஸ்தி
ரிகளும் மோசேக்குமுன்பாக நிற்கக்கூடா
திருந்தது; ஏனெனில் அந்த எரிபந்தம்
சாஸ்திரிகளிலும் எல்லா எகிப்தியரிலும்
உண்டாயிருந்தது.
௰௨ ஆனால் கர்த்தர் மோசேயோடே
சொல்லியிருந்தபடியே, கர்த்தர் பார்வோ
னின் இருதயத்தை உரம்கொள்ளப்பண்
ணினார்; அவர்களைக் கேளாதேபோனான்.
௰௩ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோ
டே சொன்னதாவது: நீ அதிகாலமே எழுந்
திருந்து போய், பார்வோனுக்குமுன்பாக
நின்று, அவனோடே சொல்லவேண்டியது,
எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர்
உரைக்கிறதேதெனில், நம்முடைய சனத்
தை நமக்கு ஆராதனை செய்யும்படிக்கு
விடு.
௰௪ ஏனென்றால் பூமி எங்கும் நம்மைப்
போல வேறொருவரும் இல்லை என்பதை
நீ அறியும்படிக்கு, இந்தமுறை நாம் நம்மு
டைய வாதைகளை எல்லாம் உன் இருத
யத்திலும் உன் ஊழியக்காரரிலும் உன்
சனத்திலும் போகவிடுவோம்.
௰௫ ஏனெனில் அப்பொழுதே நாம் நம்
முடைய கையை நீட்டி, நீ பூமியில் இரா
மல் அற்றுப்போகும்படிக்கு, உன்னையும்
உன் சனத்தையும் பெருவாரிக்காய்ச்ச
லால் வாதிப்போம்.
௰௬ ¶ ஆனால் *நம்முடைய வல்லமையை
உனக்குக் காண்பிக்கிறதற்கும் நம்முடைய
நாமம் பூமி எங்கும் பிரஸ்தாபமாகிறதற்கு
மே உன்னை நிறுத்தினோம். *உரோ. ௯. ௰௭.
௰௭ இன்னம் நீ நமது சனத்தை விடாத
படிக்கு அதற்கு விரோதமாய் உன்னை
உயர்த்துகிறாயோ?
௰௮ இதோ எகிப்து அஸ்திவாரப்பட்ட
நாள் முதல்கொண்டு இற்றைவரைக்கும்
அதிலே வாராதிருக்கிற மகா கனமான
கல்மழையை நாம் நாளை இந்நேரத்திலே
வருஷிக்கப்பண்ணுவோம்.
௰௯ இப்பொழுதும் ஆள் அனுப்பி, உன்
மந்தையையும் வெளியில் உனக்கிருக்கிற
யாவையும் சேர்த்துக்கொள்; வீட்டிலே
சேர்த்துக்கொள்ளப்படாமல் வெளியிலே
அகப்படப்போகிற எல்லா மனிதசீவனும்
மிருகசீவனும் அந்தக் கல்மழை அவைகள்
மேல் இறங்குவதினாலே செத்துப்போம்
என்றாரென்று சொல்லென்றார்.
௨௰ பார்வோனுடைய ஊழியக்காரரில்
எவன் கர்த்தருடைய வார்த்தைக்கு பயப்
பட்டானோ, அவன் தன் வேலைக்காரரையும்
தன் மந்தையையும் வீடுகளுக்கு ஓடிவரப்
பண்ணினான்.
௨௰௧ ஆனால் எவன் கர்த்தருடைய வார்த்
தையைத் தன் மனதிலே வைக்காதேபோ
னானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன்
மந்தையையும் வெளியிலே வைத்துவிட்
டான்.
௨௰௨ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயு
டனே, எகிப்துதேசமெங்கும் மனிதர்மே
லும் மிருகசீவன்கள்மேலும் எகிப்துதே

Digitized by Google

சத்திலிருக்கிற சகலமான பயிர்வகைகள் மேலும் கல்மழை வர, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு என்றார்.

௨௩ அப்படியே மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டினான்; அப்பொழுது நெருப்பு தரையில் இறங்கி ஓடத்தக்கதாகக் கர்த்தர் இடிமுழக்கங்களையும் கல்மழையையும் கட்டளையிட்டு; எகிப்துதேசத்தின்மேல் கல்மழையை வருஷிக்கப் பண்ணினார்.

௨௪ கல்மழையும் கல்மழையின் நடுவிலே கலந்த நெருப்பும் மிகக்கொடியதாயிருந்தது; எகிப்துதேசம் குடி ஏறினதுமுதல் கொண்டு அதிலெங்கும் அப்படிக்கொத்தது உண்டானதில்லை.

௨௫ எகிப்துதேசமெங்கும் மனிதரைத் துவக்கி மிருகஜீவன்கள்மட்டும், எவைஎவை வெளியிலே இருந்தவைகளோ அவைகளை எல்லாம் அந்தக் கல்மழை அடித்துவிட்டது; அது வெளியின் பயிர்வகைகளை எல்லாம் அடித்து, வெளியின் செடிகளை எல்லாம் முறித்துவிட்டது.

௨௬ இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் சீமையிலேமாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது.

௨௭ ¶ அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைத்தனுப்பி, அவர்களோடே சொன்னதாவது: *இந்தமுறை பாவம்செய்தேன்; கர்த்தர் நீதியுள்ளவர், நானும் என் சனமுமோவென்றால் துன்மார்க்கராயிருக்கிறோம். *௨ மோ. ௰. ௰௬, ௰௭.

௨௮ பராபரனுடைய இடி முழக்கங்களும் கல்மழையும் இராதபடிக்கு, கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; இனிப் போதும், நீங்கள் இனி இங்கே தரித்திராதபடிக்கு உங்களை விடுவேனென்றான்.

௨௯ மோசே அவனோடே சொன்னதாவது: நான் பட்டணத்திலிருந்து புறப்பட்டபிற்பாடு, நான் என் உள்ளங்கைகளைக் கர்த்தருக்கு நேராக விரிப்பேன்; அப்பொழுது பூமி கர்த்தருடையதென்பதை நீர் அறியும்படிக்கு, இடிமுழக்கங்கள் ஓய்ந்து கல்மழை இனி இராது.

௩௰ ஆனால் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னம் பராபரனாகிய கர்த்தருக்குமுன்பாகப் பயப்படுவதில்லை என்கிறதை அறிவேனென்றான்.

௩௧ ¶ அப்படியே சணலும் வால்கோதுமைப் பயிரும் அழிக்கப்பட்டுப்போயின; ஏனெனில் வால்கோதுமை கதிர்ப்பயிரும் சணல் தாள்பயிருமாயிருந்தன.

௩௨ ஆனால் கோதுமையும் கம்பும் அழிக்கப்படவில்லை; ஏனென்றால் அவைகள் இன்னம் வளராதிருந்தன.

௩௩ ¶ மோசே பார்வோனைவிட்டுப் பட்டணத்திலிருந்து புறப்பட்டு, தன்னுள்ளங்கைகளைக் கர்த்தருக்கு நேராக விரித்தான்; அப்பொழுது இடிமுழக்கங்களும் கல்மழையும் ஓய்ந்து, மழை தரையில் இறங்காதேபோயிற்று.

௩௪ மழையும் கல்மழையும் இடிமுழக்கங்களும் ஓய்ந்துபோயினவென்று பார்வோன் கண்டபொழுதோவெனில், அவன் பாவம்செய்யத் தொடர்ந்து, தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான்; அவனும் அவன் ஊழியக்காரரும்தானே.

௩௫ கர்த்தர் மோசேயைக்கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் உரம்கொண்டது; அவன் இஸ்ரவேல் புத்திரரை விடாதே போனான்.

௰. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையில் பிரவேசி; ஏனெனில் அவர்கள் நடுவே நாம் இந்த நம்முடைய அடையாளங்களைச் செய்யும்படிக்கும்,

௨ நாம் எகிப்திலே நடப்பித்ததையும் நாம் அவர்களுக்குள் செய்த நம்முடைய அடையாளங்களையும் நீ உன் பிள்ளைகளின் செவிகளுக்குமுன்பாகவும் உன் பிள்ளைகளுடைய பிள்ளைகளின் செவிகளுக்குமுன்பாகவும்

Digitized by Google

விவரிக்கும்படிக்கும், நாமே கர்த்தரென்ப
தை நீங்கள் அறியும்படிக்கும், நாம் அவன்
இருதயத்தையும் அவன் ஊழியக்காரரின்
இருதயத்தையும் கடினப்படுத்தினோமென்
றார்.

௩ ¶ அப்படியே மோசேயும் ஆரோனும்
பார்வோனண்டையில் பிரவேசித்து, அவ
னோடே சொன்னதாவது: எபிரேயருடைய
பராபரனாகிய கர்த்தர் உரைக்கிறதேதெனி
ல், நமக்குமுன்பாக நீ உன்னைத் தாழ்த்த
எந்தமட்டும் மனதில்லாதேபோகிறாய்? நம
து சனத்தை நமக்கு ஆராதனை செய்யும்ப
டிக்கு விடு.

௪ நீ நமது சனத்தை விடமாட்டேன் என்
றாயேயாகில், இதோ நாம் நாளை உன் எல்
லையிலே வெட்டுக்கிளிகளை வரப்பண்ணு
வோம்.

௫ அவைகள் பூமியின் முகத்தைத் தரை
யைக் காணக்கூடாதபடிக்கு மூடி, கல்ம
ழைக்குத் தப்பி உங்களுக்கு மீதியாக வைக்
கப்பட்டதைப் பட்சித்து, வெளியிலே உங்
களுக்குத் துளிர்க்கிற செடிகளை எல்லாம்
தின்றுவிடும்.

௬ அவைகளால் உன் வீடுகளும் உன்னு
டைய எல்லா ஊழியக்காரரின் வீடுகளும்
எல்லா எகிப்தியரின் வீடுகளும் நிரம்பும்;
உன் பிதாக்களும் உன் பிதாக்களின் பிதாக்
களும் தாங்கள் தேசத்திலிருந்த நாள்துவக்
கி இந்நாள்வரைக்கும் அப்படிக் கண்டதில்
லை என்றாரென்று சொல்லி, திரும்பிக்கொ
ண்டு பார்வோனைவிட்டுப் புறப்பட்டான்.

௭ ¶ அப்பொழுது பார்வோனுடைய ஊழி
யக்காரர் அவனோடே சொன்னது: எந்தம
ட்டும் இவன் நமக்குக் கண்ணியாயிருக்க
வேண்டும்? அந்த மனிதரைத் தங்கள் பரா
பரனாகிய கர்த்தருக்கு ஆராதனைசெய்யும்ப
டிக்கு விடும்; எகிப்து அழிந்துபோயிற்
றென்று இன்னம் அறியீரோ என்றார்கள்.

௮ அப்பொழுது மோசேயும் ஆரோனும்
பார்வோனண்டைக்குத் திரும்ப அழைக்
கப்பட்டார்கள்; அவன் அவர்களுடனே,
நீங்கள் போய் உங்கள் பராபரனாகிய கர்த்த
ருக்கு ஆராதனை செய்யுங்களென்று சொல்
லி, போகிறவர்கள் யார், எவர்கள், என்று
கேட்டான்.

௯ மோசே சொன்னதாவது: எங்கள் இளை
ஞரோடும் எங்கள் முதிர்வயதுள்ளவர்க
ளோடும் எங்கள் குமாரரோடும் எங்கள்
குமாரத்திகளோடும் எங்கள் ஆடுகளோடும்
எங்கள் மாடுகளோடும்கூடப் போவோம்;
ஏனெனில் எங்களுக்குக் கர்த்தரின் பண்
டிகை உண்டாயிருக்குமென்றான்.

௰ அப்பொழுது அவன் அவர்களோடே
சொன்னதாவது: நான் உங்களையும் உங்கள்
குழந்தைகளையும் எப்படி விடுவேனோ, அப்
படிக் கர்த்தர் உங்களோடிருப்பாராக; உங்
கள் முகத்திற்குமுன்பாகப் பொல்லாப்பு
இருக்கிறதென்று பாருங்கள்.

௰௧ அப்படி அல்ல, புருஷராகிய நீங்கள்
போய், கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்;
ஏனெனில் நீங்கள் தேடினது இதுதானென்
று அவன் சொன்னபிற்பாடு அவர்கள் பார்
வோன் முகத்தைவிட்டுத் துரத்தப்பட்டார்
கள்.

௰௨ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுட
னே, வெட்டுக்கிளிகள் எகிப்துதேசத்தின்
மேல் ஏறி, கல்மழை பின்வைத்த பூமியின்
சகல பயிர்வகைகளை எல்லாம் தின்னும்ப
டிக்கு அவைகளுக்காக, உன் கையை எகிப்
து தேசத்தின்மேல் நீட்டென்றார்.

௰௩ அப்படியே மோசே தன் கோலை எகிப்
துதேசத்தின்மேல் நீட்டினான்; அப்பொழு
து கர்த்தர் அன்று பகல் முழுவதும் அன்று
இராமுழுவதும் கீழ்க்காற்றைத் தேசத்தின்
மேல் வரப்பண்ணினார்; விடியற்காலமாகி
றபொழுது, கீழ்க்காற்று வெட்டுக்கிளிக
ளைக் கொண்டுவந்தது.

௰௪ வெட்டுக்கிளிகள் எகிப்துதேசமெங்
கும் ஏறி, எகிப்தின் எல்லையிலெல்லாம்
மகா ஏராளமாய் இறங்கின; அதற்குமுன்
அப்படிக்கொத்த வெட்டுக்கிளிகள் இருந்த
துமில்லை; அதற்குப்பிறகு இருப்பதுமில்லை.

Digitized by Google

௰௫ அவைகள் பூமியின் முகத்தையெல்லாம் மூடின; தேசம் அவைகளால் அந்தகாரப்பட்டது; அவைகள் கல்மழை பின்வைத்த நிலத்தின் எல்லாப் பயிர்வகைகளையும் மரங்களின் எல்லாப் பலனையும் தின்றுவிட்டன; எகிப்துதேசமெங்கும் மரங்களிலாகிலும் நிலத்தின் பயிர்வகைகளிலென்கிலும் ஒரு பச்சிலையும் மீதியானதில்லை.

௰௬ ¶ *அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பிக்கத் தீவிரித்து, உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாகப் பாவஞ்செய்தேன். *௨ மோ. ௮. ௮, ௨௫: ௯. ௨௭.

௰௭ இப்பொழுதும் இந்த முறைமாத்திரம் நீ என் பாவத்தை மன்னி; உங்கள் பராபரனாகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டகற்ற அவரை விண்ணப்பம் பண்ணுங்களென்றான்.

௰௮ அவன் பார்வோனைவிட்டுப் புறப்பட்டு, கர்த்தரை விண்ணப்பம்பண்ணினான்.

௰௯ அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை திரும்ப வரவிட்டார்; அது வெட்டுக்கிளிகளை எடுத்து நாணல்சமுத்திரத்திலே போட்டது; எகிப்தின் எல்லையிலெல்லாம் அவைகளில் ஒரு வெட்டுக்கிளியாகிலும் மீதியாயிருந்ததில்லை.

௨௰ கர்த்தரோவென்றால் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் இஸ்ரவேல் புத்திரரை விட்டதில்லை.

௨௧ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் எகிப்துதேசத்தின்மேல் உண்டாகும்படிக்கு, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டென்றார்.

௨௨ மோசே தன் கையை வானத்திற்கு நேராக நீட்டினான்; அப்பொழுது எகிப்து தேசமெங்கும் மூன்றுநாள்மட்டும் காரிருள் உண்டாயிருந்தது.

௨௩ மூன்றுநாள்மட்டும் ஒருவரை ஒருவர் கண்டதுமில்லை; ஒருவரும் தம்மிடத்தைவிட்டு எழுந்ததுமில்லை; எல்லா இஸ்ரவேல் புத்திரருக்குமோவெனில், அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருந்தது.

௨௪ ¶ அப்பொழுது பார்வோன் மோசேயை அழைப்பித்து, நீங்கள் போய்க்கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்; உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளும்மாத்திரம் நிறுத்தப்பட வேண்டும்; உங்கள் குழந்தைகளும் உங்களோடேகூடப் போகலாம் என்றான்.

௨௫ மோசே சொன்னதாவது: நாங்கள் எங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் படைக்கும் பலிகளையும் தகனபலிகளையும் நீர் எங்கள் கையிலே கொடுக்கவேண்டும்.

௨௬ எங்கள் மந்தையும் எங்களோடேகூடப் போகவேண்டும்; ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை; ஏனெனில் எங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு அதிலே எடுப்போம்; இன்னதினாலே கர்த்தருக்கு ஆராதனைசெய்வோம் என்கிறதை நாங்கள் அங்கே வரும்மட்டும் அறியோம் என்றான்.

௨௭ ¶ ஆனால் கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவர்களைவிட மனதில்லாதேபோனான்.

௨௮ பார்வோன் அவனுக்கு, என்னைவிட்டு அப்பாலே போ; நீ இனி என்முகத்தைக் காணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; ஏனென்றால் நீ என் முகத்தைக் காணும் நாளிலே சாவாயென்றான்.

௨௯ அப்பொழுது மோசே, நீர் சொன்னபடி இனி உம்முடைய முகத்தை நான் காண்பதில்லை என்றான்.

௰௧. அதிகாரம்.

அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: இன்னம் ஒரு வாதையைப் பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வரப்பண்ணுவோம்; அதற்குப்பிறகு உங்களை இவ்விடத்திலிருந்து போகவிடுவான், சமூலமாய்ப் போகவிடுவதுமல்லாமல், உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தவே துரத்துவான்.

Digitized by Google

௨ *இப்பொழுதும் ஒவ்வொருவன் தன் அயலான் கையிலும் ஒவ்வொருத்தி தன் அயலாள் கையிலும் வெள்ளி உடைமைகளையும் பொன் உடைமைகளையும் கேட்கவேண்டுமென்று சனத்தின் செவிகளுக்குமுன்பாகச் சொல்லென்றார். *௨ மோ. ௩. ௨௧, ௨௨.

௩ அதற்காகக் கர்த்தர் சனத்திற்கு எகிப்தியருடைய கண்களுக்குமுன்பாகத் தயவு கிடைக்கப்பண்ணினார்; மோசே என்ற புருஷனும் எகிப்துதேசத்திலே பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் சனத்தின் பார்வைக்கும் மிகப் பெரியவனாயிருந்தான்.

௪ அப்படியே மோசே சொன்னதாவது: கர்த்தர் உரைக்கிறதேதெனில், பாதி இராத்திரியிலே நாம் எகிப்தின் நடுவாகப் புறப்பட்டுப்போவோம்.

௫ அப்பொழுது பார்வோனுடைய இராசாசனத்தின்மேல் உளுக்காரும் அவருடைய தலைச்சன் குமாரனைத் துவக்கி, எந்திரத்தின் பிறகாலே இருக்கிற அடிமைப் பெண்ணுடைய தலைச்சன்பிள்ளைமட்டும், எகிப்து தேசத்திலிருக்கிற முதல்பேறனைத்தும் மிருகசீவன்களுக்குள்ளேயும் தலையீற்றனைத்தும் சாகும்.

௬ அதினால் எகிப்து தேசமெங்கும் முன் ஒருக்காலும் உண்டாகாததும் இனி உண்டாகப்போகாததுமான பெரிய கூக்குரல் இருக்கும்.

௭ ஆனால் கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை நீங்கள் அறியும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும் மனிதரைத் துவக்கி மிருகசீவன்கள்மட்டும் ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை.

௮ அப்பொழுது இந்த உம்முடைய ஊழியக்காரர் எல்லாரும் என்னண்டைக்கு இறங்கிவந்து, நீயும் உன் கீழிருக்கிற எல்லாச் சனமுமாய்ப் புறப்படு என்று என்னை வணங்குவார்கள்; அதின்பிறகு புறப்படுவேனென்று சொல்லி, உக்கிரமான கோபத்தோடே பார்வோனை விட்டுப் புறப்பட்டான்.

௯ ¶ கர்த்தர் மோசேயுடனே, எகிப்துதேசத்தில் நம்முடைய அற்புதங்கள் அநேகமாகும்படிக்கு, பார்வோன் உங்களைக் கேளாதே போவானென்று சொல்லி இருந்தபடியே,

௰ மோசேயும் ஆரோனும் இந்த அற்புதங்களை எல்லாம் பார்வோனுக்குமுன்பாகச் செய்தாலும், கர்த்தர் பார்வோனின் இருதயத்தை உரம்கொள்ளப்பண்ணினார்; அவன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிட்டதில்லை.

௰௨. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் எகிப்துதேசத்தில் சொன்னதாவது:

௨ இந்த மாதம் உங்களுக்குத் தலையான மாதம்; இது உங்களுக்கு வருஷத்திலே முதலாம் மாதமாவது.

௩ ¶ நீங்கள் இஸ்ரவேல் சபையோடெல்லாம்பேசிச்சொல்லவேண்டியதேதெனில், இந்த மாதம் பத்தாம்தேதியிலே பிதாக்களாகிய வீட்டுக்காரர் அவரவர் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியை, ஒவ்வொரு வீட்டிற்கு ஒவ்வொரு ஆட்டுக்குட்டி இருக்கும்படிக்கு, பிடிக்கக்கடவர்கள்.

௪ வீட்டிலே இருக்கிறவர்கள் ஆட்டுக்குட்டியைப் புசிக்கப் போதாத கொஞ்சப் பேர்களாய் இருந்தார்களேயாகில், அப்பொழுது ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக ஒருவன் தானும் சமீபமான தன்னுடையஅயல்வீட்டுக்காரனுமாய் ஒன்றைப் பிடிக்கக்கடவன்; அவனவன் புசிப்பதற்குத்தக்கதாக ஆட்டுக்குட்டியின்மேலே இலக்கம் பார்க்கக்கடவீர்கள்.

௫ பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாகிய ஆட்டுக்குட்டி உங்களுக்கு இருக்கவேண்டும்; ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் அதை எடுப்பீர்களாக.

௬ ¶ அதை இந்த மாதம் பதினான்காம்

Digitized by Google

தேதிமட்டும் வைத்துக்கொண்டிருந்து, இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் அந்திசேரமான வேளையிலே அதின் குரல்வளையை அறுத்து,

௭ அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீடுகளிலே வாசல் இரண்டு நிலைகளிலும் வாசல்கூட்டின் மேல்சட்டத்திலும் பூசி,

௮ நெருப்பினாலே பொரித்ததாக அந்த மாம்சத்தையும் புளிப்பில்லாத அப்பங்களையும் அன்று இராத்திரியிலே புசிக்கக்கடவர்கள்; கசப்பான கீரைகளோடே அதைப் புசிக்கக்கடவர்கள்.

௯ பச்சையானதாய் அல்லது தண்ணீரிலே வேவித்ததாய் அல்ல, நெருப்பினாலே அதின் தலையும் அதின் தொடைகளும் அதற்குள் இருக்கிறதும் ஏகமாய்ப் பொரிக்கப்பட்டதாய் அதிலே புசிப்பீர்களாக.

௰ அதிலே விடியற்காலம்மட்டும் ஒன்றும் மீதியாக வைக்காமல், விடியற்காலம்மட்டும் அதிலே மீதியாய் இருக்கிறதை அக்கினியாலே சுட்டெரிப்பீர்களாக.

௧௧ நீங்கள் உங்கள் அரைகள் கட்டப்பட்டவைகளாகவும் உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலும் உங்கள் தடிகள் உங்கள் கைகளிலும் இருக்கிறவைகளாகவும் அதைப் புசித்து, தீவிரத்துடனே அதைப் புசிக்கக்கடவீர்கள்; அது கர்த்தருடைய பஸ்கா.

௧௨ ¶ அந்த இராத்திரியிலே நாம் எகிப்து தேசத்திலே கடந்துபோய், எகிப்துதேசத்திலே மனிதரைத்துவக்கி மிருகஜீவன்கள் மட்டும், முதற்பேறாயிருக்கிறவைகளை எல்லாம் அடித்து, எகிப்தின் தேவர்களில் நியாயத்தீர்ப்புகளைச் செய்வோம்; நாம் கர்த்தர்.

௧௩ நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்கான அடையாளமாயிருக்கும்; அந்த இரத்தத்தைக் கண்டு, உங்களை விலகிக் கடந்துபோவோம்; அப்படியே நாம் எகிப்துதேசத்தை அழிக்கும்பொழுது, அழிக்கிறவாதை உங்களுக்குள்ளே வாராதிருக்கும்.

௧௪ ¶ அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலுக்காக இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாய் ஆசரிப்பீர்களாக.

௧௫ ¶ ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவீர்கள்; ஆனால் முதல்நாளிலேதானே புளித்தமாவை உங்கள் வீடுகளில் அற்றுப்போகப்பண்ணக்கடவீர்கள்; ஏனெனில் முதல்நாள் துவக்கி ஏழாம்நாள் மட்டும் எவனாகிலும் புளித்த அப்பம் புசித்தால், அந்த ஆத்துமா இஸ்ரவேலில் இராமல் அறுப்புண்டுபோவான்.

௧௬ முதலாம்நாளிலே பரிசுத்தமான சபைகூடுதலும் ஏழாம்நாளிலே பரிசுத்தமான சபைகூடுதலும் உங்களுக்கு இருக்கக்கடவது; அவைகளில் ஒரு வேலையும் செய்யப்படவேண்டாம்; ஒவ்வொரு ஆத்துமாவுக்குச் சாப்பிடுகிறதற்குத் தேவையானது மாத்திரமே உங்களுக்காகச் செய்யப்படலாம்.

௧௭ புளிப்பில்லாத அப்பங்களின் புசிக்குதலைக் கைக்கொள்ளுவீர்களாக; ஏனெனில் அந்த நாளிலேதானே உங்கள் சேனைகளை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினேன்; ஆகையால் அந்த நாளை உங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாக ஆசரிப்பீர்களாக.

௧௮ முதலாம் மாதம் பதினான்காம் தேதி சாயங்காலம்துவக்கி மாதத்தின் இருபத்தோராம் தேதி சாயங்காலம்மட்டும் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவீர்கள்.

௧௯ ஏழுநாள்மட்டும் உங்கள் வீடுகளிலே புளித்தமா காணப்படாதிருப்பதாக; ஏனெனில் எவனாகிலும் புளித்த அப்பத்தைப் புசித்தால், அந்த ஆத்துமா பரதேசியானாலும் சரி, தேசத்திலே பிறந்தவனானாலும் சரி, இஸ்ரவேல் சபையிலிராமல் அறுப்புண்டுபோவான்.

Digitized by Google

௨௰ நீங்கள் புளித்த அப்பமான யாதொன்றையும் புசிக்கவேண்டாம்; உங்களுடைய எல்லா வாசஸ்தலங்களிலும் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவீர்களென்று சொல்லென்றார்.

௨௧ ¶ அப்பொழுது மோசே இஸ்ரவேலின் மூப்பரை எல்லாம் அழைப்பித்து அவர்களோடே சொன்னதாவது: நீங்கள் உங்களுக்கு உங்கள் வம்சத்திற்குத்தக்கவைகளாக ஆட்டுக்குட்டிகளைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, *பஸ்காவை அடித்து, *எபி. ௰௧. ௨௮.

௨௨ ஈசோப்புக் கிளைகளின் கட்டை வாங்கி, கிண்ணியிலே இருக்கும் இரத்தத்திலே தோய்த்து, கிண்ணியிலே இருக்கும் அந்த இரத்தத்தினால் வாசல்கூட்டின் மேல்சட்டத்திலும் வாசலின் இரண்டு நிலைகளிலும் பூசுங்கள்; உங்களிலோவென்றால் விடியற்காலம்மட்டும் ஒருவரும் தன் வீட்டு வாசலிலிருந்து புறப்படவேண்டாம்.

௨௩ ஏனெனில் கர்த்தர் எகிப்தியரை வாதிப்பதற்குக் கடந்துவருவார்; ஆனால் வாசல்கூட்டின் மேல்சட்டத்திலும் வாசலின் இரண்டு நிலைகளிலும் அந்த இரத்தத்தைக் காணும்பொழுது, கர்த்தர் அழிக்கிறவனை உங்கள் வீடுகளில் வாதிக்கிறதற்கு வரவொட்டாமல், வாசல்படியை விலகிக் கடந்துபோவார்.

௨௪ இந்தக் காரியத்தை என்றைக்கும் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் கட்டளையாகக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

௨௫ கர்த்தர் உங்களுக்குத் தாம் சொன்னபடி கொடுக்கப்போகிற தேசத்திலே நீங்கள் வந்திருக்கும்பொழுது, அந்த ஆராதனையைக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

௨௬ *அப்பொழுது உங்கள் பிள்ளைகள் உங்களுக்கிருக்கிற இந்த ஆராதனை என்னவென்று உங்களைக் கேட்கும்பொழுது, ௨ மோ. ௰௩. ௰௪.

௨௭ நீங்கள் சொல்வதாவது: எகிப்தியரை வாதிக்கையில் எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளை விலகிக் கடந்து, எங்கள் வீடுகளைத் தப்பப்பண்ணின கர்த்தருக்கு இது பஸ்கா என்னப்பட்ட பலி என்பீர்களாக என்றான்; அப்பொழுது சனம் குனிந்து பணிந்துகொண்டது.

௨௮ இஸ்ரவேல் புத்திரர் போய் அப்படிச் செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்கும் கற்பித்தபடியே செய்தார்கள்.

௨௯ ¶ அப்பொழுது சம்பவித்ததேதெனில், பாதிஇராத்திரியிலே கர்த்தர் பார்வோனுடனே ஆசனத்தின்மேல் உளுக்காரும் அவனுடைய தலைச்சன் குமாரனைத்துவக்கி, காவல் வீட்டிலிருந்த சிறையின் தலைச்சன் பிள்ளைமட்டும், எகிப்துதேசத்திலிருந்த முதல்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் அழித்தார்.

௩௰ அப்பொழுது பார்வோனும் அவனுடைய எல்லா ஊழியக்காரரும் எல்லா எகிப்தியரும் இராத்திரியிலே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; ஏனெனில் செத்தவனில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை.

௩௧ ¶ அவன் மோசேயையும் ஆரோனையும் இராத்திரியிலே அழைப்பித்துச் சொன்னதாவது: நீங்களும் இஸ்ரவேல் புத்திருமாய் எழுந்து, என் சனத்தின் நடுவிலிருந்து புறப்பட்டுப்போய், நீங்கள் சொன்னபடி கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்.

௩௨ உங்கள் ஆடுமாடுகளையும் நீங்கள் சொன்னபடிக்கு ஓட்டிக்கொண்டு போய், என்னையும் ஆசீர்வதியுங்களென்றான்.

௩௩ ¶ எகிப்தியர் தீவிரமாய்ச் சனத்தைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை வெகு துரிதம்பண்ணினார்கள்; ஏனெனில் நாங்கள் எல்லாரும் சாகிறோமென்றார்கள்.

௩௪ ஆகையால் சனம் இன்னம் உப்பாத தங்களுடைய பிசைந்தமாவிருந்த தங்கள் தொட்டிகளைத் தங்கள் சீலைகளில் கட்டி, தங்கள் தோள்களின்மேல் எடுத்துப்போனார்கள்.

Digitized by Google

௩௫ இஸ்ரவேல் புத்திரர் மோசேயினு

டைய வார்த்தையின்படி செய்து, *எகிப்தி
யரை வெள்ளியுடைமைகளையும் பொன்னு
டைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டி
ருந்தார்கள். *௨ மோ. ௩. ௨௧: ௰௧. ௨.

௩௬ அதற்காகக் கர்த்தர் சனத்திற்கு எகிப்
தியரின் கண்களிலே தயவுகிடைக்கப்பண்
ணி இருந்தார்; கேட்டதை அவர்களுக்குக்
கொடுத்தார்கள்; அப்படியே எகிப்திய
ரைக் கொள்ளையிட்டார்கள்.

௩௭ ¶ இஸ்ரவேல் புத்திரர் குழந்தைகள்
தவிர அறுநூறாயிரம் புருஷர் கால்நடை
யாய் ராமேசேசைவிட்டுப் பயணம்பண்
ணி, சுக்கோத்திற்கு வந்தார்கள்.

௩௮ அவர்களோடுங்கூடப் பலசாதியான
திரள்சனமும் ஆடுமாடுகள் முதலான ஏரா
ளமாகிய மிருகஜீவன்களும் ஏறிவந்தன.

௩௯ அவர்கள் எகிப்திலிருந்து கொண்டு
வந்த பிசைந்தமாவைப் புளிப்பில்லாத
அப்பங்களாகச் சுட்டார்கள்; ஏனெனில்
அவர்கள் தரித்துநிற்கக்கூடாமல், எகிப்தி
லிருந்து துரத்தப்பட்டபடியினாலே அது
உப்பாதிருந்தது; அவர்கள் தங்களுக்கு வ
ழிக்கு ஒன்றும் சேகரம்பண்ணினதுமில்லை.

௪௰ ¶ இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடி
யிருந்த குடியிருப்பு *நானூற்றுமுப்பது வ
ருஷமானது. *கலா. ௩. ௰௭.

௪௧ நானூற்றுமுப்பது வருஷங்களின் மு
டிவிலே சம்பவித்ததேதெனில், அந்நாளி
லேதானே கர்த்தருடைய சேனைகளெல்லா
ம் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டன.

௪௨ ¶ கர்த்தர் அவர்களை எகிப்துதேசத்தி
லிருந்து புறப்படப்பண்ணினதினாலே, இது
அவருக்குக் கவனமாய் ஆசரிக்கப்பட
வேண்டிய இராத்திரி; இதுதானே இஸ்ர
வேல் புத்திரரெல்லாரும் தங்கள் தலைமு
றைகளிலே கர்த்தருக்குக் கவனமாய் ஆச
ரிக்கவேண்டிய இராத்திரி.

௪௩ ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோ
டும் சொன்னதாவது: பஸ்காவின் கட்டளை
யேதெனில், அந்நிய புத்திரன் ஒருவனும்
அதிலே புசிக்கவேண்டாம்.

௪௪ ஆனால் பணத்தினாலே கொள்ளப்பட்
ட அடிமையெல்லாம் நீ அவனைச் சுன்னத்
துப்பண்ணினபிற்பாடு அதிலே புசிப்பா
னாக.

௪௫ அந்நியனும் கூலியாளும் அதிலே புசிக்
கவேண்டாம்.

௪௬ ஒவ்வொரு வீட்டில் ஒவ்வொன்று பு
சிக்கப்படக்கடவது; நீ அந்த மாம்சத்தில்
ஒன்றும் வீட்டிலிருந்து வெளியே கொண்
டுபோகவேண்டாம்; *அதிலே நீங்கள் ஒரு
எலும்பை முறிக்கவும் வேண்டாம். *௪ மோ.
௯. ௰௨. யோவா. ௰௯. ௩௬.

௪௭ இஸ்ரவேல் சபையெல்லாம் அதை
ஆசரிக்கக்கடவது.

௪௮ அந்நியன் ஒருவன் உன்னிடத்திலே
தங்கி, கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க
வேண்டுமென்று இருந்தானேயாகில், அவ
னிடத்திலிருக்கிற ஆணெல்லாம் சுன்னத்
தடையவேண்டும்; பிற்பாடு அவன் அதை
ஆசரிக்கிறதற்குச் சேர்ந்து, தேசத்திலே பி
றந்தவனைப்போல இருப்பானாக; ஆனால்
சுன்னத்தில்லாத ஒருவனும் அதிலே புசிக்
கவேண்டாம்.

௪௯ *தேசத்திலே பிறந்தவனுக்கும் உங்
கள் நடுவிலே தங்குகிற பரதேசிக்கும் ஒரே
நியாயப்பிரமாணம் இருக்கக்கடவதென்
றார். *௩ மோ. ௨௪. ௨௨.

௫௰ இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் இப்ப
டிச் செய்தார்கள்; கர்த்தர் மோசேக்கும்
ஆரோனுக்கும் கற்பித்தபடியே செய்தார்
கள்.

௫௧ ¶ இந்தப்பிரகாரமாக அந்நாளிலேதா
னே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அவர்க
ளுடைய சேனைகளின்படியே எகிப்துதே
சத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௰௩. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்
னதாவது:

௨ *இஸ்ரவேல் புத்திரரில் எங்கும் மனித
ரிலும் மிருகஜீவன்களிலும் கர்ப்பம்திறந்து

Digitized by Google

பிறக்கிற முதல்பேற்றை எல்லாம் நமக்குப் பரிசுத்தமாக்கு, அது நம்முடையதென்றார். *௨ மோ. ௨௨. ௨௯, ௩௰: ௩௪. ௰௯.

௩ ¶ அப்பொழுது மோசே சனத்தோடே சொன்னதாவது: நீங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நீங்கள் நினையுங்கள்; ஏனெனில் கர்த்தர் பலத்த கையினாலே உங்களை அவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார்; ஆனது கொண்டு புளித்த அப்பம் புசிக்கப்பட வேண்டாம்.

௪ *ஆபிப்மாதத்தினுடைய இந்த நாளிலே நீங்கள் புறப்பட்டீர்கள். *௨ மோ. ௨௩. ௰௫.

௫ ஆகையால் கர்த்தர் உனக்குக் கொடுப்போமென்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதும் பாலும் தேனும் ஓடுகிறதுமான தேசமாகிய கானானியர், ஏத்தியர், எமோரியர், ஏவியர், எபூசியர் என்றவர்களுடைய தேசத்திலே உன்னை வரப்பண்ணினபொழுது, நீ இந்த மாதத்திலே இந்த ஆராதனையைச் செய்வாயாக.

௬ ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவாய்; ஏழாம் நாளிலோவெனில், கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கப்படுவதாக.

௭ அந்த ஏழுநாளும் புளிப்பில்லாத அப்பங்கள் புசிக்கப்படக்கடவது; உன்னிடத்திலே புளித்த அப்பமும் காணப்படவேண்டாம்; உன் எல்லைகளிலெல்லாம் உன்னிடத்திலே புளித்தமாவும் காணப்படவேண்டாம்.

௮ அந்நாளிலே உன் குமாரனுக்கு, நான் எகிப்திலிருந்து புறப்படுகையில் கர்த்தர் எனக்குச் செய்ததற்காக இப்படிச் செய்கிறேனென்று அறிவிப்பாயாக.

௯ கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு, *இது உனக்கு உன் கையில் அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது; ஏனெனில் பலத்த கையினாலே கர்த்தர் உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். *௫ மோ. ௬. ௮.

௰ ஆகையால் வருஷத்திற்கு வருஷம் இந்தக் கட்டளையை குறித்த காலத்திலே கைக்கொண்டு வருவாயாக.

௰௧ ¶ பின்னையும் செய்யப்படவேண்டியதேதெனில், கர்த்தர் உனக்கும் உன் பிதாக்களுக்கும் ஆணையிட்டபடியே, உன்னைக் கானானியரின் தேசத்திலே வரப்பண்ணி, அதை உனக்குக் கொடுத்தபொழுது,

௰௨ கர்ப்பம்திறந்து பிறக்கிறவை அனைத்தையும் உனக்கிருக்கும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பாயாக; அவைகளிலிருக்கிற ஆண்கள் கர்த்தருடையவைகள்.

௰௩ ஆனால் கழுதையின் தலையீற்றையெல்லாம் ஒரு ஆட்டுக்குட்டியினால் மீட்டுக்கொள்வாயாக; மீட்காயேயாகில், அதின் தலையை வெட்டிப்போடு; உன் பிள்ளைகளில் முதல்பேறான சகல நரஜீவனையோவென்றால் மீட்டுக்கொள்வாயாக.

௰௪ ¶ இதென்னவென்று நாளை உன் குமாரன் உன்னைக் கேட்கிறதுண்டானால், நீ அவனோடே சொல்லவேண்டியதாவது: கர்த்தர் எங்களைப் பலத்த கையினாலே அடிமைவீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௰௫ அதேதெனில் எங்களை விடாதபடிக்கு, பார்வோன் கடினமனதாயிருக்கிறபொழுது, கர்த்தர் எகிப்துதேசத்தில், மனிதரின் தலைச்சன் பிள்ளைகள்துவக்கி, மிருகஜீவன்களின் தலையீற்றுகள்மட்டும், உண்டாயிருந்த முதல்பேறுகளை எல்லாம் கொன்றுபோட்டார்; ஆனபடியினாலே கர்ப்பம்திறந்து பிறக்கிற ஆணையெல்லாம் நான் கர்த்தருக்குப் பலியிட்டு, என் பிள்ளைகளின் முதல்பேறானவர்களை எல்லாம் மீட்டுக்கொள்ளுகிறேன்.

௰௬ ஆகையால் கர்த்தர் எங்களைப் பலத்த கையினாலே எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதற்கு, இது உன் கையில் அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நி

Digitized by Google

ளைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவதென்று சொல்லுவாயாக என்றான்.

௰௭ ¶ பார்வோன் சனத்தை விட்டபிற்பாடு சம்பவித்ததேதெனில், சமீபமான பெலிஸ்தரின் தேசவழியாய்ப் பராபரன் அவர்களை அழைத்துக்கொண்டு போகவில்லை; ஏனென்றால் சனம் யுத்தத்தைக் காணும்பொழுது, மனஸ்தாபப்பட்டு எகிப்திற்கு திரும்புமென்றார்.

௰௮ ஆகையால் பராபரன் நாணல் சமுத்திரத்தின் வனாந்தர வழியாய்ச் சனத்தைச் சுற்றிப்போகப்பண்ணினார்; இஸ்ரவேல் புத்திரரோவெனில் எகிப்துதேசத்திலிருந்து அணியணியாய் வந்து ஏறினார்கள்.

௰௯ மோசே தன்னோடேகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு வந்தான்; *ஏனெனில் பராபரன் உங்களை விசாரிக்கவே விசாரிப்பார்; அப்பொழுது உங்களோடேகூட என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து போய் ஏறப்பண்ணுங்களென்று அவன் இஸ்ரவேல் புத்திரரைக் கெட்டியாய் ஆணையிடுவித்துக்கொண்டிருந்தான். *௧ மோ. ௫௰. ௨௫. யோசு. ௨௪. ௩௨.

௨௰ ¶ அவர்கள் சுக்கோத்திலிருந்து பயணம் புறப்பட்டு, வனாந்தரத்தின் எல்லையான ஏத்தாமிலே பாளயம் இறங்கினார்கள்.

௨௰௧ கர்த்தரோவெனில் அவர்களை வழிநடத்தும்படிக்கு பகலிலே மேகத்தூணிலும், அவர்களுக்கு வெளிச்சம் காட்டும்படிக்கும் அவர்கள் இரவும் பகலும் போகக்கூடும்படிக்கும் இராத்திரியிலே அக்கினித்தூணிலும், அவர்களுக்குமுன்பாக நடந்தார்.

௨௰௨ பகலிலே மேகத்தூணும் இரவிலே அக்கினித்தூணும் சனத்திற்குமுன்பாக இருந்து விலகிப்போனதில்லை.

௰௪. அதிகாரம்.

கர்த்தர் மோசேயுடனே பேசிச் சொன்னதாவது:

௨ திரும்பிக்கொண்டு மிக்தோலுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவே பாகால்சேப்போனுக்கு முன்பாக இருக்கிற இரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயம் இறங்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லு; அதற்கெதிராகச் சமுத்திரக் கரையிலே பாளயம் இறங்குவீர்களாக.

௩ அப்பொழுது அவர்கள், தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள், வனாந்தரம் அவர்களை அடைத்துப்போட்டதென்று பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைக்குறித்துச் சொல்லுவான்.

௪ ஆகையால் பார்வோன் அவர்களைப் பின்தொடரும்படிக்கு, நாம் அவனிருதயத்தை உரம்கொள்ளப்பண்ணி, நாம் கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிகிறதற்காக, பார்வோனாலும் அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவோமென்றார்; அவர்கள் அப்படிச்செய்தார்கள்.

௫ ¶ சனம் ஓடிப்போயிற்றென்று எகிப்தின் இராசாவுக்கு அறிவிக்கப்பட்டபொழுது, சனத்திற்கு விரோதமாகப் பார்வோனும் அவன் ஊழியக்காரரும் வேறுமனதாகி, நாம் இஸ்ரவேலரை நமக்கு வேலைசெய்யாதபடிக்கு இப்படி விட்டது என்னசெய்கையாய் இருக்கிறதென்றார்கள்.

௬ அவன் தன் இரதங்களைப் பூட்டி, தன் சனத்தைக் கூட்டிக்கொண்டு,

௭ தெரிந்துகொள்ளப்பட்ட அறுநூறு இரதங்களையும் எகிப்தினுடைய எல்லா இரதங்களையும் அவைகள் எல்லாவற்றின்மேலும் அதிகாரிகளான ஆதிக்கக்காரரையும் கூட்டிக்கொண்டு போனான்.

௮ கர்த்தர் எகிப்தின் இராசாவாகிய பார்வோனின் இருதயத்தை உரமாக்கினபடியினாலே, அவன் இஸ்ரவேல் புத்திரரைப் பின்தொடர்ந்தான்; இஸ்ரவேல் புத்திரரோவெனில் உயர்ந்த கையினாலே புறப்பட்டிருந்தார்கள்.

௯ எகிப்தியர் அவர்களைப் பின்தொடர்ந்து, பார்வோனின் எல்லாக் குதிரைகளும் இரதங்களும் அவனுடைய குதிரைக்காரரும்

Digitized by Google

அவனுடைய இராணுவமுமாய், சமுத்திரத்தண்டையிலே பாகால் செப்போனுக்கு முன்பாக இருக்கிற இரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயம் இறங்கியிருக்கிற அவர்களைக் கிட்டினார்கள்.

௰ ¶ பார்வோன் சமீபித்துவருகிறபொழுது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்தார்கள்; இதோ, எகிப்தியர் தங்கள் பிறகாலே வருகிறதை அவர்கள் கண்டு மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைநோக்கிக் கூப்பிட்டு,

௰௧ மோசேயுடனே, எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லாததினாலேயோ எங்களை வனாந்தரத்திலே சாகும்படிக்கு அழைத்துவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினாலே, எங்களுக்கு இப்படிச் செய்ததென்னவென்றும்,

௰௨ நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, எங்களை எகிப்தியருக்கு வேலைசெய்ய விட்டுவிடும், ஏனெனில் நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்குத் தாவிலையென்று உம்மோடே சொன்ன வார்த்தை இதுதானல்லவோவென்றும் சொன்னார்கள்.

௰௩ ¶ ஆனால் மோசே சனத்தோடே சொன்னதாவது: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு கர்த்தர் இன்று உங்களுக்குச் செய்யும் அவருடைய இரட்சிப்பைப் பாருங்கள்; ஏனெனில் நீங்கள் இன்று காண்கிற எகிப்தியரை இனி என்றென்றைக்கும் திரும்பக் காண்பதில்லை.

௰௪ கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மா இருப்பீர்களென்றான்.

௰௫ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ நம்மைநோக்கிக் கூப்பிடுகிறதென்ன? பயணம் புறப்படவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லு.

௰௬ நீயோவென்றால் உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி, அதைப் பிளந்துபோடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.

௰௭ நாமோவெனில் இதோ, எகிப்தியர் உங்கள் பிறகாலே வரும்படிக்கு அவர்களிருதயத்தை உரமாக்கி, பார்வோனாலும் அவனுடைய எல்லா இராணுவத்தாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைக்காரராலும் மகிமைப்படுவோம்.

௰௮ இப்படி நாம் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைக்காரராலும் மகிமைப்படுகிறபொழுது, நாம் கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்களென்றார்.

௰௯ ¶ அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடக்கிற பராபரனுடைய தூதனானவர் தாண்டி வந்து, அவர்கள் பிறகாலே நடந்தார்; அவர்களுக்கு முன்பாக இருந்த மேகத்தூண் தாண்டிவந்து, அவர்கள் பிறகாலே நின்று,

௨௰ எகிப்தியரின் சேனைக்கும் இஸ்ரவேலரின் சேனைக்கும் நடுவாக வந்து, இராமுழுவதும் அது இதைச் சேராதபடியாய் அதற்கு மேகமும் அந்தகாரமுமாய் இருந்து, இதற்கோவென்றால் இரவை வெளிச்சமாக்கிற்று.

௨௰௧ ¶ மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேலே நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் சமுத்திரத்தை இராமுழுவதும் பலத்த கீழ்க்காற்றினாலே விலக்கி, அதை வறண்டுபோகப்பண்ணினார்; அப்படியே தண்ணீர்கள் பிளந்து பிரிந்துபோயின.

௨௰௨ இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே பிரவேசித்துப் போனார்கள்; அவர்களுடைய வலதுபுறமாகவும் அவர்களுடைய இடதுபுறமாகவும் தண்ணீர்கள் அவர்களுக்கு மதிலாக இருந்தன.

Digitized by Google

௨௰௩ ¶ அப்பொழுது எகிப்தியர் பின்தொடர்ந்து, பார்வோனுடைய எல்லாக் குதிரை

களும் அவனுடைய இரதங்களும் அவனு
டைய குதிரைக்காரரும் அவர்கள் பிறகா
லே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்
கள்.
உச கிழக்கு வெளுத்துவரும் சாமத்திலே
சம்பவித்ததேதென்றால், கர்த்தர் அக்கினி
யும் மேகமுமான தூணிலிருந்து எகிப்திய
ரின் சேனையை நோக்கிப்பார்த்து, அவர்கள்
சேனையைக் கலங்கடித்து,
உரு உருளைகள் அவர்கள் இரதங்களிலிருந்
து கழலவும், அவர்கள் வருத்தமாய் நடக்க
வும்பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர்,
இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோமாக;
ஏனெனில் கர்த்தர் அவர்களுக்காக எகிப்தி
யருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறா
ரென்றார்கள்.
உசா கர்த்தரோவெனில் மோசேயுடனே,
தண்ணீர்கள் எகிப்தியர்மேலும் அவர்களு
டைய இரதங்களின்மேலும் அவர்களுடை
ய குதிரைக்காரர்மேலும் திரும்பும்படிக்கு,
உன் கையைச் சமுத்திரத்தின்மேலே நீட்
டென்றார்.
உஎ அப்படியே மோசே தன் கையைச்
சமுத்திரத்தின்மேலே நீட்டினான்; அப்பொ
ழுது விடியற்காலத்திற்குமுன்னே சமுத்தி
ரம் தன் பலத்தோடே திரும்பி வந்தது;
எகிப்தியர் அதற்கெதிராக ஓடும்போது,
கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவிலே விழத்
தள்ளினார்.
உஅ தண்ணீர்கள் திரும்பி வந்து, இரதங்
களையும் குதிரைக்காரரையும் அவர்கள் பிற
காலே சமுத்திரத்திற்குள் பிரவேசித்திருந்த
பார்வோனின் இராணுவமனைத்தையும் மூ
டிப்போட்டன; அவர்களில் ஒருவனாகிலும்
மீதியானதில்லை.
உகூ இஸ்ரவேல் புத்திரரோவென்றால், சமு
த்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே
நடந்துபோனார்கள்; தண்ணீர்கள் அவர்க
ளுக்கு அவர்கள் வலதுபுறத்திலும் அவர்
கள் இடதுபுறத்திலும் மதிலாக இருந்தன.
௩௰ ¶ இப்படிக் கர்த்தர் அந்நாளிலே இஸ்
ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்
து இரட்சித்தார்; இஸ்ரவேலர் எகிப்திய
ரைக் கடற்கரையிலே செத்துக்கிடக்கக்
கண்டார்கள்.
௩க கர்த்தர் எகிப்தியரில் செய்த அவரு
டைய பெரிய கைக்கிரியையை இஸ்ரவேல்
கண்டது; ஆகையால் சனம் கர்த்தருக்குப்
பயந்து, கர்த்தர்பேரிலும் அவருடைய ஊழி
யக்காரனாகிய மோசேயின்பேரிலும் விசுவா
சித்தது.

௰ரு. அதிகாரம்.

அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல்
புத்திரரும் கர்த்தரைப் பாடின பாட்டாவ
து: கர்த்தரைப் பாடுவேன்; ஏனென்றால்
உயரவே உயர்ந்தார்; குதிரையையும் அதில்
ஏறினவனையும் கடலிலே தள்ளினார்.
உ ¶ *என் பலமும் என் கீதமும் கர்த்தர்;
அவர் எனக்கு இரட்சிப்பானவர்; அவரே
என் பராபரன், ஆகையால் அவருக்கு வா
சஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன்; அவ
ரே என் தகப்பனுடைய பராபரன்; ஆகை
யால் அவரை உயர்த்துவேன். *சங். ௱௰அ.
௰ச.
௩ கர்த்தரே யுத்தம்பண்ண வல்லவர்;
கர்த்தரென்பது அவருடைய நாமம்.
ச பார்வோனின் இரதங்களையும் அவன்
இராணுவத்தையும் சமுத்திரத்திலே தள்ளி
விட்டார்; தெரிந்துகொள்ளப்பட்ட அவன்
அதிக்கக்காரர் நாணல்சமுத்திரத்தில் அமி
ழ்ந்துபோனார்கள்.
ரு ஆழங்கள் அவர்களை மூடின; கல்லைப்
போலப் பள்ளங்களில் இறங்கினார்கள்.
சா கர்த்தாவே, உம்முடைய வலதுகரம்
பலத்தினால் மகிமையாயிருக்கின்றது; கர்த்
தாவே, உம்முடைய வலதுகரம் பகைஞனை
நொறுக்கிவிட்டது.
எ உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை
உமது முக்கியத்தின் மகத்துவத்தினாலே
நிர்மூலமாக்கினீர்; உம்முடைய உக்கிரத்
தை அனுப்பினீர்; அது அவர்களைத் தாளடி

Digitized by Google

லயைப்போலப் பட்சித்தது.

௮ உமது நாசியின் சுவாசத்தினாலே தண்ணீர்கள் குவிந்தன; நீரோட்டங்கள் குவியலாக நின்றன; ஆழங்கள் நடுக்கடலிலே கெட்டியாயின.

௯ பின் தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடிப் பங்கிடுவேன், என் ஆத்துமா அவர்களால் நிரப்பப்படும், என் பட்டயத்தை உருவுவேன், என் கை அவர்களைச் சிதறடிக்குமென்று பகைஞன் சொன்னான்.

௰ உம்முடைய காற்றினாலே ஊதினீர், கடல் அவர்களை மூடிற்று; ஈயத்தைப்போல மிகுந்த தண்ணீர்களில் அமிழ்ந்துபோனார்கள்.

௰௧ கர்த்தாவே, தேவர்களில் உமக்கொப்பானவனார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும் துதிகளில் பயப்படத்தக்கவரும் அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கொப்பானவனார்?

௰௨ உம்முடைய வலதுகையை நீர் நீட்டினீர், பூமி அவர்களை விழுங்கிவிட்டது.

௰௩ நீர் மீட்டுக்கொண்ட இந்தச் சனத்தை உம்முடைய கிருபையினாலே அழைத்துவந்தீர்; உம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திற்கு நேராக அதை உம்முடைய பலத்தினாலே வழிநடத்தினீர்.

௰௪ சனசதனங்கள் அதைக் கேட்டுத் தத்தளிக்கும்; பெலிஸ்தேயாவின் குடிகளை வேதனை பிடிக்கும்.

௰௫ அப்பொழுது ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள்; மோவாபில் வல்லமையுள்ளவர்களை நடுக்கம்பிடிக்கும்; கானானின் குடிகளெல்லாம் கரைந்துபோவார்கள்.

௰௬ பயங்கரமும் திகிலும் அவர்கள்மேலிறங்கும்; கர்த்தாவே, உமது சனம் கடக்குமட்டும், நீர் மீட்ட இந்தச் சனமே கடந்துபோகுமட்டும், அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினாலே கல்லைப்போல மவுனமாயிருப்பார்கள்.

௰௭ நீர் அவர்களை உட்பிரவேசிக்கப்பண்ணி, அவர்களைக் கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்குப் படைத்த தானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும், ஆண்டவராகிய தேவரீருடைய கரம் ஸ்தாபித்த பரிசுத்த ஸ்தலத்திலும் நாட்டுவீர்.

௰௮ *கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் இராசரிகம்பண்ணுவார்.

*சங். ௯௰. ௧.

௰௯ ¶ ஏனென்றால் பார்வோனின் குதிரை அவன் இரதங்களோடும் அவன் குதிரைக்காரரோடும் சமுத்திரத்துக்குள் பிரவேசித்தது; அப்பொழுது கர்த்தர் சமுத்திரத்தின் தண்ணீர்களை அவர்கள்மேலே திரும்பப்பண்ணினார்; இஸ்ரவேல் புத்திரரோவென்றால் சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்துவந்தார்களென்று பாடினார்கள்.

௨௰ ¶ ஆரோனின் சகோதரியாகிய மீரியாமென்ற தீர்க்கதரிசியும் தன் கையிலே உடுக்கை எடுத்துக்கொண்டாள்; சகல ஸ்திரிகளும் உடுக்கைகளையும் கீதவாத்தியங்களையும் எடுத்து, அவள் பிறகாலே புறப்பட்டார்கள்.

௨௧ ¶ மீரியாம் அவர்களுக்கு மறுமொழியாக, கர்த்தரைப் பாடுங்கள்; ஏனென்றால் உயரவே உயர்ந்தார்; குதிரையையும் அதிலேறினவனையும் கடலிலே தள்ளினாரென்பது முதலானவைகளைப் பாடினாள்.

௨௨ ¶ பிற்பாடு மோசே இஸ்ரவேலை சிவனல் சமுத்திரத்தைவிட்டுப் பயணம்புறப்படப்பண்ணினான்; அவர்கள் சூர்வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப்போய், மூன்று நாள் வனாந்தரத்திலே தண்ணீர் கிடையாமல் நடந்து,

௨௩ மாராவிலே வந்தார்கள்; ஆனால் மாராவின் தண்ணீரைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது; ஏனெனில் அது கசப்பாயிருந்தது; ஆனதுகொண்டு அவ்விடத்திற்கு மாராவென்று பேரிடப்பட்டது.

௨௪ அப்பொழுது சனம் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து, எதைக் குடிப்போமென்றார்கள்.

Digitized by Google

உரு மோசே கர்த்தரைநோக்கிக் கூப்பிட்
டான்; அப்பொழுது கர்த்தர் மோசேக்கு
ஒரு மரத்தைக் காண்பித்தார்; அதை அவன்
தண்ணீரிலே போட்டபொழுது, தண்ணீர்
தித்திப்பாயிற்று; அவர் அங்கே அவர்களுக்
குப் பிரமாணமும் நியாயமும் கட்டளை
யிட்டு, அங்கே அவர்களைச் சோதித்துச்
சொன்னதாவது:
உசா நீ உன் பராபரனாகிய கர்த்தரின் சத்தத்
தைக் கேட்கவே கேட்டு, அவர் கண்களுக்
குச் செம்மையானதைச் செய்து, அவர்
கற்பனைகளுக்குச் செவிகொடுத்து, அவ
ருடைய எல்லாக் கட்டளைகளையும் கைக்
கொண்டால், நாம் எகிப்தியரின்மேல் இற
க்கப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும்
உன்மேலே இறங்கப்பண்ணேம்; ஏனெ
னில் நாம் உன் பரிகாரியாகிய கர்த்தரென்
றார்.
உஎ ¶ பிற்பாடு ஏலிமுக்கு வந்தார்கள்;
அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுப
து பேரீச்சமரங்களும் இருந்தன; அங்கே
தண்ணீர்களண்டையிலே பாளயமிறங்கி
னார்கள்.

யசா. அதிகாரம்.

இஸ்ரவேல் புத்திரர் ஏலிமைவிட்டுப் பய
ணம் புறப்பட்டார்கள்; அவர்கள் எகிப்து
தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம்
மாதம் பதினைந்தாம் தேதியிலே, அவர்களு
டைய சபையெல்லாம் ஏலிமுக்கும் சீனா
ய்க்கும் நடுவே இருக்கிற சீன்வனாந்தரத்தி
லே வந்தது.
உ அங்கே வனாந்தரத்திலே இஸ்ரவேல்
புத்திரரின் சபையெல்லாம் மோசேக்கும்
ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து,
ங அவர்களோடே சொன்னதாவது: *நாங்
கள் இறைச்சிப் பானைகளண்டையிலே உ
ட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்
பிட்ட எகிப்துதேசத்திலே, கர்த்தரின் கை
யினாலே செத்துப்போனோமானால் தாவிலே;
ஏனெனில் இந்தக் கூட்டத்தை எல்லாம்
பட்டணியினாலே கொன்றுபோட எங்களைப்
புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே
அழைத்துவந்தீர்களென்றார்கள். *ச மோ.
யக. ச.
ச ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோ
டே சொன்னதாவது: இதோ, நாம் உங்க
ளுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்
கப்பண்ணுவோம், சனம் நமது நியாயப்பிர
மாணத்திலே நடக்குமோ இல்லையோ என்
று நாம் சோதிக்கும்படிக்கு, அது புறப்பட்
டு அன்றன்றுள்ள படியளய ஒவ்வொருநாளி
லே சேர்க்கக்கடவது.
ரு ஆறும் நாளிலோவென்றால், அவர்கள்
கொண்டுவருகிறதைச் சேகரம்பண்ணக்
கடவார்கள்; அவர்கள் தினம்தினம் சேர்க்
கிறதைப்பார்க்கிலும் அப்பொழுது இரண்
டத்தனை உண்டாயிருக்குமென்றார்.
சு ¶ அப்பொழுது மோசேயும் ஆரோனும்
இஸ்ரவேல் புத்திரரெல்லாரோடும் சொன்
னதாவது: கர்த்தர் உங்களை எகிப்துதேச
த்திலிருந்து புறப்படப்பண்ணினவரென்ப
தைச் சாயங்காலத்திலே அறிவீர்கள்.
எ விடியற்காலத்திலே கர்த்தருடைய ம
கிமையையும் காண்பீர்கள்; ஏனெனில்
கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமு
றுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்க
ளுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு
நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள்.
அ பின்னையும் மோசே சொன்னதாவது:
கர்த்தர் உங்களுக்குச் சாயங்காலத்திலே
நீங்கள் புசிக்கிறதற்கு இறைச்சியையும்,
விடியற்காலத்திலே நீங்கள் திர்ப்தியடை
யும்படிக்கு அப்பத்தையும் கொடுக்கை
யில் அதைக் காண்பீர்கள்; ஏனெனில்
கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமு
றுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர்
கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள்
முறுமுறுப்புகள் எங்களுக்கல்ல, கர்த்த
ருக்கே விரோதமாயிருக்கிறதென்றான்.
கூ பிற்பாடு மோசே ஆரோனுடனே, கர்த்
தருக்கு முன்பாகச் சேருங்கள்; ஏனெனில்

Digitized by Google

உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டாரென்று
இஸ்ரவேல் புத்திரரின் சபைக்கெல்லாம்
சொல்லென்றான்.
௰ ¶ ஆரோன் இஸ்ரவேல் புத்திரரின் சபை
க்கெல்லாம் இதைச் சொல்லுகிறபொழுது,
அவர்கள் வனாந்தர திசையாகத் திரும்பிப்
பார்த்தார்கள்; அப்பொழுது இதோ, கர்த்
தருடைய மகிமை மேகத்திலே காணப்பட்
டது.
௰௧ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்
னதாவது:
௰௨ இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்பு
களைக் கேட்டோம்; நீ அவர்களுடனே பேசி,
நீங்கள் சாயங்காலத்திலே இறைச்சியைப்
புசித்து, விடியற்காலத்திலே அப்பத்தால்
திர்ப்தியாகி, நாம் உங்கள் பராபரனாகிய
கர்த்தரென்பதை அறிவீர்களென்று சொல்
லென்றார்.
௰௩ ¶ சாயங்காலத்தில் சம்பவித்ததேதெ
ன்றால், *காடைகள் வந்தேறிப் பாளயத்
தை மூடின; விடியற்காலத்திலோவென்
றால், பாளயத்தைச் சுற்றிப் பனிவிழுந்தி
ருந்தது. *௪ மோ. ௰௧. ௩௧.
௰௪ விழுந்திருந்த பனி எடுபட்டபிற்பாடு,
இதோ, வனாந்தரத்தின்மீதெங்கும் உருட்
சியான பொடித்துணிக்கைகள் இருந்தன;
அவைகள் தரையின்மேல் உறைந்த பனி
யத்தனை பொடியாய்க் கிடந்தன.
௰௫ இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு,
ஒருவருக்கொருவர் அது மன்னாவென்றார்
கள்; ஏனெனில் அது இன்னதென்று அறி
யாதிருந்தார்கள்; அப்பொழுது மோசே
அவர்களோடே சொன்னதாவது: இது கர்த்
தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்
பம்.
௰௬ கர்த்தர் கற்பித்த காரியம் ஏதென்
றால், அவனவன் புசிக்கத்தகும்மட்டும்
அதிலெடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்
கள் ஆத்துமாக்களுடைய இலக்கத்தின்ப
டியே, அவனவன் தன்தன் கூடாரத்தில்
இருக்கிறவர்களுக்காக ஒவ்வொரு தலைக்கு
ஒவ்வொரு நாழியெழுக்காடு எடுத்துக்
கொள்ளக்கடவீர்களென்றான்.
௰௭ இஸ்ரவேல் புத்திரர் அப்படிச் செய்து,
சிலர் அநேகமும் சிலர் கொஞ்சமுமாய்ச்
சேர்த்தார்கள்.
௰௮ பிறகு நாழியினால் அளந்தார்கள்;
*அநேகமாய்ச்சேர்த்தவனுக்கு அதிகமான
துமில்லை; கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்கு
குறைச்சலானதுமில்லை; அவரவர் தாங்கள்
புசிக்கத்தகும்மட்டும் எடுத்துக்கொண்
டார்கள். *௨ கொரி. ௮. ௰௫.
௰௯ மோசே அவர்களுடனே, ஒருவனும்
அதில் விடியற்காலம்மட்டும் ஒன்றும்வைக்
கவேண்டாமென்றான்.
௨௰ ஆனால் மோசேயின் சொல்கேளாமல்
சிலர் அதில் விடியற்காலம்மட்டும் கொஞ்
சம் மீதியாய் வைத்தார்கள்; அது பூச்சி
பிடித்து நாற்றம் எடுத்தது; அவர்கள்பேரி
லே மோசே கடுங்கோபம் அடைந்தான்.
௨௰௧ அதைக் காலமே அவனவன் புசிக்கத்
தகும்மட்டும் சேர்த்தார்கள்; ஏனெனில்
வெயில் ஏறுகிறபொழுது உருகிப்போம்.
௨௰௨ ¶ ஆறாம் நாளிலே சம்பவித்ததேதென்
றால், அவர்கள் இரண்டத்தனை அப்பம்
ஒவ்வொருவனுக்கு இரண்டு இரண்டு நாழி
யாகச் சேர்த்தார்கள்; அப்பொழுது சபை
யின் தலைவரெல்லாரும் வந்து, அதை மோ
சேக்கு அறிவித்தார்கள்.
௨௰௩ அவன் இவர்களோடே சொன்னதா
வது: கர்த்தர் சொன்னது இதுதானே;
நாளைக் கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுகா
லமாகிய ஓய்ந்திருக்குதல்; நீங்கள் சுடப்
போகிறதைச் சுட்டு, சமைக்கப்போகிற
தைச் சமைத்து, மீதியாயிருக்கிறதையெல்
லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்து
வையுங்களென்றான்.
௨௰௪ மோசே கற்பித்தபடியே அதை மறு
நாள்மட்டும் வைத்தார்கள்; அப்பொழுது
அது நாறினதுமில்லை; அதிலே பூச்சி பிடித்
திருந்ததுமில்லை.
௨௰௫ அப்பொழுது மோசே சொன்னதாவது

Digitized by Google

௨௫ அதை இன்றைக்குப் புசியுங்கள்; ஏனெனில் இன்று கர்த்தரின் ஓய்வுநாள்; இன்று நீங்கள் அதை வெளியிலே கண்டுபிடிப்பதில்லை.

௨௬ ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம் நாள் ஓய்வுநாளாயிருக்கின்றது; அதிலே அது உண்டாயிராதென்றான்.

௨௭ ஏழாம் நாளிலே சம்பவித்ததேதெனில்; சனத்திலே சிலர் அதைச் சேர்க்கப் புறப்பட்டார்கள்; ஆனால் கண்டுபிடியாதே போனார்கள்.

௨௮ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நம்முடைய கற்பனைகளையும் நம்முடைய நியாயப்பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதே போகிறீர்கள்.

௨௯ பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளைக் கொடுத்தபடியினாலே அவர் உங்களுக்கு ஆறும் நாளிலே இரண்டுநாளுடைய அப்பத்தைக் கொடுக்கிறாரே; ஏழாம் நாளில் ஒருவனும் தன் தானத்திலிருந்து புறப்படாமல், நீங்கள் அவனவன் தன் தன் தானத்தில் இருங்களென்றார்.

௩௰ அப்படியே சனம் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தது.

௩௧ இஸ்ரவேல் வீட்டார் அதற்கு மன்னாவென்று பெயரிட்டார்கள்; *அது கொத்துமல்லி அம்மாத்திரமும் வெண்மையுமாயிருந்தது; அதின் ருசி தேனிட்ட கச்சாயத்திற்கொப்பாயிருந்தது. *௪ மோ. ௰௧. ௭.

௩௨ ¶ மோசே சொன்னதாவது: கர்த்தர் கற்பித்த காரியமேதெனில், நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபொழுது, உங்களுக்கு வனாந்தரத்திலே புசிக்கக்கொடுத்த அப்பத்தை உங்கள் தலைமுறைகள் பார்க்கும்படிக்கு, அவர்களுக்காகக் காத்துவைப்பதற்கு அதிலே ஒருநாழி நிரம்ப எடுத்துவை என்பதுதான் என்றான்.

௩௩ பின்னையும் மோசே ஆரோனுடனே, *நீ ஒரு பாத்திரத்தை வாங்கி, அதிலே ஒரு நாழி மன்னாவைப் போட்டு, அதை உங்கள் தலைமுறைகளுக்காகக் காப்பதற்குக் கர்த்தருக்குமுன்பாக வை என்றான். *எபி. ௯. ௪.

௩௪ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அது காக்கப்படும்படிக்கு, ஆரோன் அதைச் சாட்சிக்குமுன்பாக வைத்தான்.

௩௫ *இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்திற்குவரும்மட்டும் நாற்பது வருஷம் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான்தேசத்தின் எல்லையில் வரும்மட்டாகத்தானே மன்னாவைப் புசித்தார்கள். *யோசு. ௫. ௰௨.

௩௬ ஒருநாழியோவென்றால், மரக்காலிலே பத்தில் ஒரு பங்காயிருக்கின்றது.

௰௭. அதிகாரம்.

பிற்பாடு இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் சீன்வனாந்தரத்திலிருந்து பயணம் புறப்பட்டு, கர்த்தருடைய கட்டளையின்படியே பண்ணும் தங்கள் பயணங்களில் இரவீதிமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே சனம் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது.

௨ அப்பொழுது சனம் மோசேயோடே வாதுபண்ணி, நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தாருங்களென்றார்கள்; மோசேயோவென்றால் அவர்களுடனே, என்னோடே ஏன் வாதுபண்ணுகிறீர்கள்? கர்த்தரை ஏன் பரிட்சைபார்க்கிறீர்களென்றான்.

௩ ஆனால் சனம் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியினாலே, சனம் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து, நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினாலே கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து வந்து ஏறப்பண்ணினதேதென்றார்கள்.

௪ ¶ மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, இந்தச் சனத்திற்கென்னசெய்வேன்? *அவர்கள் என்னைக் கல்லெறியச் சற்றுத் தப்புமென்றான். *௪ மோ. ௰௪. ௰.

Digitized by Google

௫ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ சனத்திற்குமுன்பாக நடந்து, இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டி, நீ ஆற்றை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ.

௬ இதோ, நாம் அங்கே ஓரேபிலே உனக்குமுன்பாகக் கல்மலையின்மேல் நிற்போம்; அங்கே கல்மலையை அடிப்பாயாக; அப்பொழுது சனம் குடிக்க, அதிலிருந்து தண்ணீர் புறப்படுமென்றார்; இப்படியே மோசே இஸ்ரவேலருடைய மூப்பரின் கண்களுக்குமுன்பாகச் செய்தான்.

௭ இஸ்ரவேல் புத்திரருடைய வாதினிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரோ இல்லையோ என்று, அவர்கள் கர்த்தரைப் பரிட்சைபார்த்ததினிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு *மாசா என்றும் மெரிபாவென்றும் பெயரிட்டான். *சங். ௯௫. ௮, ௯.

௮ ¶ ஆமலேக்கியர் வந்து இரவீதிமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்.

௯ அப்பொழுது மோசே யோசுவாவுடனே, நீ நமக்கு மனிதரைத் தெரிந்துகொண்டு புறப்பட்டு, ஆமலேக்குக்கு விரோதமாக யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மேட்டினுடைய சிகரத்தின்மேலே பராபரனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான்.

௰ மோசே தனக்குச் சொன்னபடியே யோசுவா ஆமலேக்குக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்படிக்குச் செய்தான்; ஆனால் மோசேயும், ஆரோனும், ஊரும் மேட்டினுடைய சிகரத்தின்மேல் ஏறினார்கள்.

௰௧ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேல் மேல்கொண்டது; ஆனால் அவன் தன் கையைத் தாழவிடுகையில், ஆமலேக் மேல்கொண்டது.

௰௨ மோசேயின் கைகளோவென்றால்பாரமாயின; ஆகையால் ஒரு கல்லைக் கொண்டுவந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின் மேல் உட்காந்தான்; ஆரோனும் ஊரு மோவெனில் ஒருவன் இந்தப்பக்கமும் ஒருவன் அந்தப்பக்கமுமாயிருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இந்த அடைவாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்மட்டும் ஒரு நேராயிருந்தன.

௰௩ அப்படியே யோசுவா ஆமலேக்கையும் அவன் சனத்தையும் பட்டயத்தின்கருக்கினாலே முறிய அடித்தான்.

௰௪ *பிற்பாடு கர்த்தர் மோசேயுடனே, நீ இதை நினைவுகூருதலுக்காக ஒரு புத்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவிகளுக்கு ஒப்புவி; ஏனெனில் ஆமலேக்கை வானத்தின்கீழிராதபடிக்கு நாசம்பண்ணவே பண்ணுவோமென்றார். *௫ மோ. ௨௫. ௰௭, ௰௯. ௧ சாமு. ௰௫. ௨௩.

௰௫ மோசே ஒரு பீடத்தைக்கட்டி, அதற்குக் கர்த்தர் என்னுடைய கொடியென்று பேரிட்டு,

௰௬ ஆமலேக்கின் கை கர்த்தருடைய ஆசனத்திற்கு விரோதமானபடியினாலே, கர்த்தரின் யுத்தம் தலைமுறை தலைமுறையாக அவனுக்கு விரோதமாக இருக்குமென்றான்.

௰௮. அதிகாரம்.

பராபரன் மோசேக்கும் தமது சனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்ததெல்லாவற்றையும் கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும் *மீதியானில் ஆசாரியனாயிருக்கிற மோசேயின் மாமனாகிய எத்திரோ கேட்டபொழுது, *௨ மோ. ௩. ௧.

௨ அவன் *மோசே திரும்பத் தன்னண்டைக்கனுப்பி இருந்த அவன் பெண்சாதியாகிய சிப்போராளையும், *௨ மோ. ௪. ௨௫.

௩ அவனுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டுபயணப்பட்டான்; *ஒருவன் பேர் கேர்சோன்; ஏனென்றால் அந்நியதேசத்திலே பரதேசியானேனென்றான். *௨ மோ. ௨. ௨௨.

Digitized by Google

௪ மற்றவன் பேர் எலியேசர்; ஏனென்றால் என் பிதாவின் பராபரன் துணையாயிருந்து, என்னைப் பார்வோனின் பட்டயத்திற்குத் தப்புவித்தாரென்றான்.

௫ மோசேயின் மாமனாகிய எத்திரோ அவன் குமாரரோடும் அவன் பெண்சாதியோடும்கூட மோசே பாளயம் போட்டிருந்த பராபரனுடைய பர்வதம் இருக்கும் வனாந்தரத்திலே அவனண்டையில் வந்து,

௬ எத்திரோ என்ற உன் மாமனாகிய நானும் உன் பெண்சாதியும் அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உன்னண்டைக்கு வந்தோமென்று மோசேக்குச் சொல்லி அனுப்பினான்.

௭ அப்பொழுது மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டு போய், அவனை வணங்கி முத்தம்செய்தான்; ஒருவரை ஒருவர் சுகமுண்டோவென்று கேட்டு, கூடாரத்திலே வந்தார்கள்.

௮ பிற்பாடு மோசே தன் மாமனுக்குக் கர்த்தர் இஸ்ரவேலுக்காகப் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்தவை எல்லாவற்றையும் வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும் கர்த்தர் தங்களை நீங்கலாக்கி விடுவித்ததையும் விவரித்தான்.

௯ கர்த்தர் இஸ்ரவேலை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து, அதற்குச் செய்த எல்லா நன்மையின்நிமித்தமும் எத்திரோ சந்தோஷப்பட்டுச் சொன்னதாவது:

௰ உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து, எகிப்தியருடைய கையின் கீழிருந்த சனத்தை விடுவித்த கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்படடவர்.

௰௧ கர்த்தர் எல்லாத் தேவர்களையும்பார்க்கப் பெரியவரென்பதை இப்பொழுது அறிவேன்; ஏனெனில் அவர்கள் இடும்பு செய்த காரியத்திலே அவர்களை மேல் கொண்டாரென்று சொல்லி,

௰௨ மோசேயின் மாமனாகிய எத்திரோ சர்வாங்கதகனத்தையும் பலிகளையும் பராபரனுக்குக் கொண்டுபோய்ச் செலுத்தினான்; பிற்பாடு ஆரோனும் இஸ்ரவேல் மூப்பர் அனைவரும் மோசேயின் மாமனோடேகூடப் பராபரனுக்கு முன்பாக அப்பம் புசிக்கவந்தார்கள்.

௰௩ ¶ மறுநாளிலே சம்பவித்ததேதெனில், மோசே சனத்தை நியாயம்விசாரிக்க உட்கார்ந்தான்; சனம் காலமே துவக்கிச் சாயங்காலம்மட்டும் மோசேக்கு முன்பாக நின்றது.

௰௪ அவன் சனத்திற்காகச் செய்ததையெல்லாம் மோசேயின் மாமன் கண்டு, நீ சனத்திற்காகச் செய்கிற இந்தக் காரியமென்ன? நீ ஒருவனே உட்கார்ந்திருக்கச் சனமெல்லாம் காலமேதுவக்கிச் சாயங்காலம்மட்டும் உனக்குமுன்பாக நிற்பானேனென்றான்.

௰௫ அப்பொழுது மோசே தன் மாமனுக்குச் சொன்னது: பராபரனைக் கேட்கச் சனம் என்னண்டைக்கு வரும்.

௰௬ ஏனெனில் அவர்களுக்கு ஒருகாரியம் இருந்தால் என்னண்டைக்கு வருகிறார்கள்; அப்பொழுது நான் அவனவனுக்கும் அவனவனுக்கடுத்தவனுக்கும் நியாயம்தீர்த்து, பராபரனுடைய சட்டங்களையும் அவருடைய நியாயப்பிரமாணங்களையும் அறிவிக்கிறேனென்றான்.

௰௭ அப்பொழுது மோசேயின் மாமன் அவனோடே சொன்னதாவது: நீ செய்கிற காரியம் நல்லதல்ல.

௰௮ நீயும் தொய்யவே தொய்ந்துபோகிறாய்; உன்னோடிருக்கிற இந்தச் சனமும் அப்படித்தான்; ஏனென்றால் அது உனக்கு மிஞ்சின பாரமானகாரியம்; நீ ஒருவனாய் அதைச் செய்யக்கூடாது.

௰௯ இப்பொழுதும் என் சொல்லைக்கேள்; உனக்கு ஒரு ஆலோசனை சொல்லுவேன்; அப்பொழுது பராபரன் உன்னோடுகூட இருப்பார்; சனத்திற்காக நீ பராபரனுக்கு முன்பாக இரு; நீ விசேஷங்களைப் பராபரனண்டைக்குக் கொண்டுபோய்,

Digitized by Google

௨௰ கட்டளைகளையும் நியாயப்பிரமாணங்
களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவ
ர்கள் நடக்கவேண்டிய வழியையும் அவர்
கள் செய்யவேண்டிய கிரியையையும் அவர்
களுக்குத் தெரியப்பண்ணுவாயாக.
௨௧ ஆனால் நீ எல்லாச்சனத்திலும் பரா
பரனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்
ளவர்களும் பொருளாசையைப் பகைக்கி
றவர்களுமான திறமையுள்ள மனிதரைப்
பார்த்து, அவர்களை அவர்கள்மேல் ஆயிரம்
பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு
அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிப
திகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளா
கவும் வை.
௨௨ அவர்கள் சகல காலத்திலும் சனத்தை
நியாயம் விசாரித்து, சகல பெரியகாரியத்
தையும் உன்னண்டைக்குக் கொண்டுவந்
து, சகல சிறிய காரியத்தையும் தாங்கள்
தானே தீர்க்கக்கடவர்கள்; இப்படி உன்
மேல் இருக்கிற பாரத்தை லகுவாக்கு, அ
வர்கள் உன்னோடேகூடச் சுமப்பார்களாக.
௨௩ இந்தப்பிரகாரமாக நீ செய்வதும் இப்
படிப் பராபரன் உனக்குக் கட்டளையிடு
வதும் உண்டானால், நீ தரித்திருக்கக்கூ
டும்; இந்த எல்லாச் சனமும் சுகமாய்த்
தங்களிடத்திற்கு வந்து சேரலாமென்றான்.
௨௪ ¶ மோசே தன் மாமன் சொல்கேட்டு,
அவன் சொன்னபடி எல்லாம் செய்தான்.
௨௫ மோசே இஸ்ரவேலரிலெல்லாம் திற
மையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு,
அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாக
வும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்
பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்
பேருக்கு அதிபதிகளாகவும் சனத்தின்மே
லே தலைவராக்கினான்.
௨௬ அவர்கள் சகல காலத்திலும் சனத்
தை நியாயம் விசாரிப்பார்கள்; பலத்த
காரியத்தை மோசே அண்டைக்குக் கொ
ண்டுவந்து, சிறிய காரியத்தை எல்லாம்
தாங்கள்தானே தீர்ப்பார்கள்.
௨௭ பிற்பாடு மோசே தன் மாமனை அனுப்
பிவிட்டான்; இவன் திரும்பத் தன் தே
சத்திற்குப் போய்விட்டான்.

௰௯. அதிகாரம்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்தில்
ருந்து புறப்பட்ட மூன்றாம்மாதமாகிற அ
ன்றுதானே சீனாய்வனாந்திரத்திலே வந்தார்
கள்.
௨ அவர்கள் இரவீதிமிலிருந்து பயணம்
புறப்பட்டு, சீனாய்வனாந்தரத்திலே வந்து.
வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்; அ
ங்கே பர்வதத்திற்கெதிராக இஸ்ரவேல் பா
ளயம் இறங்கினபொழுது,
௩ மோசே பராபரனண்டைக்கேறினான்;
கர்த்தர் பர்வதத்திலிருந்து அவனைக் கூப்
பிட்டுச் சொன்னதாவது: நீ யாக்கோபு வீட்
டாருக்குச் சொல்லவும் இஸ்ரவேல் புத்திர
ருக்கு அறிவிக்கவும் வேண்டியதேதெனில்,
௪ நாம் எகிப்தியருக்குச் செய்ததையும்
*நாம் உங்களைக் கழுகுகளுடைய செட்டை
களின்மேலே சுமந்து, உங்களை நம்மண்டை
யில் சேர்த்ததையும் நீங்கள் கண்டீர்கள்.
*௫ மோ. ௩௨. ௰௧.
௫ இப்பொழுதும் நீங்கள் நமது சத்தத்
தைக் கேட்கவே கேட்டு, நமது உடம்ப
டிக்கையைக் கைக்கொண்டால், சகல சன
சதளங்களிலும் *நீங்கள் நமக்குச் சொந்த
சம்பத்தாயிருப்பீர்கள்; ஏனெனில் பூமி
யெல்லாம் நம்முடையது. *௫ மோ. ௭. ௬.
௬ நீங்கள் நமக்கு *ஆசாரிய இராசாங்க
மும் பரிசுத்த சாதியுமாய் இருப்பீர்களென்
பது, நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல
வேண்டிய வார்த்தைகளென்றார். *௧ பே.
௨. ௯.
௭ ¶ மோசே வந்து சனத்தின் மூப்பரை
அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த
இந்த வார்த்தைகளை எல்லாம் அவர்களுக்
குமுன்பாகச் சொன்னான்.
௮ அப்பொழுது சனமெல்லாம் ஏகமாய்ப்
பிரதியுத்தாரம் கொடுத்து, *கர்த்தர் சொன்
னவைகளை எல்லாம் செய்வோமென்றார்

Digitized by Google

கள்; மோசே சனத்தின் வார்த்தைகளை
கர்த்தரண்டைக்குத் திரும்பக் கொண்
போனான். *௨ மோ. ௨௪. ௩.

௯ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே,
இதோ, நாம் உன்னோடே சொல்லும் வார்த்
தைகளைச் சனம் கேட்டு, உன்னையும் என்
றைக்கும் விசுவாசிக்கும்படிக்கு, நாம் மே
கத்தின் இருட்டிலே உன்னண்டைக்கு
வருவோமென்றார்; ஏனெனில் சனத்தின்
வார்த்தைகளை மோசே கர்த்தருக்கு அறிவித்
திருந்தான்.

௰ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
சொன்னதாவது: நீ சனத்தண்டைக்குப்
போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்க
ளைப் பரிசுத்தமாக்கு; அவர்கள் தங்கள்
வஸ்திரங்களை வெளுத்து,

௰௧ மூன்றாம் நாளுக்கு ஆயத்தப்பட்டி
ருக்கக்கடவர்கள்; ஏனென்றால் மூன்றாம்
நாளிலே கர்த்தர் எல்லாச் சனத்தின் கண்க
ளுக்குமுன்பாகச் சீனாய்பர்வதத்தின்மேல்
இறங்குவார்.

௰௨ நீ சனத்திற்குச் சுற்றிலும் எல்லை
குறித்து, *பர்வதத்தில் ஏறுதபடிக்கும், அ
தின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும்,
எச்சரிக்கையாய் இருங்களென்று சொல்
லுவாயாக; ஏனெனில் பர்வதத்தைத் தொ
டுகிறவனெல்லாம் கொலையுண்ணவே கொ
லையுண்பான். *எபி. ௰௨. ௰௮.

௰௩ ஒரு கையாகிலும் அதைத் தொட
வேண்டாம்; மிருகமானாலும் மனிதனானா
லும் சரி, அதைத் தொட்டால் உயிரோடே
வைக்கப்படாமல் கல்லெறியுண்ணவே
எறியுண்டு, அல்லது எய்யவே எய்யுண்டு
சாவவேண்டும்; எக்காளம் நெடுந்தொனி
யாகத் தொனிக்கையிலே அவர்கள் பர்வ
தத்திலே ஏறக்கடவர்களென்றார்.

௰௪ ¶ அப்படியே மோசே பர்வதத்திலி
ருந்து சனத்தண்டைக்கு இறங்கி, சனத்
தைப் பரிசுத்தமாக்கினான்; அவர்கள் தங்
கள் வஸ்திரங்களை வெளுத்தார்கள்.

௰௫ அவன் சனத்துடனே, மூன்றாம் நா
ளைக்கு ஆயத்தப்பட்டிருங்கள், பெண்சாதி
யைச் சேராதிருங்களென்றான்.

௰௬ ¶ மூன்றாம் நாளிலே விடியற்காலமா
கிறபொழுது சம்பவித்ததேதெனில், இடி
முழக்கங்களும் மின்னல்களும் பர்வதத்
தின்மேலே கனமேகமும் மகா பலத்த எக்
காளசத்தமும் உண்டாயின; பாளயத்திலி
ருந்த சனமெல்லாம் நடுங்கின.

௰௭ அப்பொழுது மோசே சனத்தைப்
பராபரனுக்கு எதிர்கொண்டு போக, பாள
யத்திலிருந்து புறப்படப்பண்ணினான்; *அ
வர்கள் பர்வதத்தின் அடியிலே தாழத்
தரித்து நின்றார்கள். *௫ மோ. ௪. ௰௧.

௰௮ கர்த்தர் சீனாய்பர்வதத்தின்மேல் அக்கி
னியில் இறங்கினபடியினாலே, அவை எல்
லாம் புகைக்காடாய் இருந்தன; அதின்
புகை சூளையின் புகையைப்போல எழும்
பிற்று; பர்வதமெல்லாம் மிகவும் அதிர்ந்
தது.

௰௯ எக்காளசத்தம் வரவர மிகவும் பல
மாயிற்று; மோசே பேசினான், பராபரன்
அவனுக்குச் சத்தமாய் மறுமொழி கொடுத்
தார்.

௨௰ கர்த்தர் சீனாய்பர்வதத்தின்மீதில் இ
ருக்கிற கொடுமுடியிலே இறங்கினபொ
ழுது, கர்த்தர் மோசேயைப் பர்வதத்தின்
கொடுமுடியிலே வரவழைத்தார்; மோசே
ஏறினான்.

௨௧ அப்பொழுது கர்த்தர் மோசேயோ
டே சொன்னதாவது: சனம் கர்த்தரண்
டைக்கு ஏறிப்பார்க்கிறதற்கு எல்லையைக்
கடவாதபடிக்கும், அவர்களில் அநேகர்
விழுந்துபோகாதபடிக்கும், நீ இறங்கி அ
வர்களைத் திடச்சாட்சியாக எச்சரி.

௨௨ கர்த்தரண்டையிலே சேருகிற ஆசாரி
யர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே அழிக்
குதல் செய்யாதபடிக்கு, தங்களைப் பரிசுத்
தமாக்கக்கடவர்களென்றார்.

௨௩ அப்பொழுது மோசே கர்த்தருடனே,
சனம் சீனாய்பர்வதத்தில் ஏறமாட்டாது;
ஏனெனில் பர்வதத்தை எல்லை பிரித்து,

Digitized by Google

அதைப் பரிசுத்தமாக்கென்று தேவரீர் எங்களைத் திடச்சாட்சியாய் எச்சரித்தீர் என்றான்.

௨௪ ஆனால் கர்த்தர் மோசேயுடனே, இறங்கிப் போ; நீயும் உன்னோடேகூட ஆரோனுமாய் ஏறிவரக்கடவீர்கள்; ஆசாரியர்களும் சனமுமோவென்றால், கர்த்தர் தங்களுக்குள்ளே அழிக்குதல் செய்யாதபடிக்கு, அவரண்டைக்கு ஏற எல்லையைக் கடவாதிருப்பார்களாக என்றார்.

௨௫ அப்படியே மோசே சனத்தண்டைக்கு இறங்கி, அதை அவர்களுக்குச் சொன்னான்.

௨௰. அதிகாரம்.

அப்பொழுது பராபரன் பேசிச் சொன்ன எல்லா வார்த்தைகளுமாவது:

௨ ¶ *உன்னை அடிமைவீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் பராபரனாகிய கர்த்தர் நாமே. *௫ மோ. ௫. ௬. சங். ௮௧. ௰௧.

௩ நமக்குமுன்பாக உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

௪ ¶ உயர வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டானவைகளுக்கு ஒத்திருக்கிற *ஒரு சுருபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை என்கிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். *௩ மோ. ௨௬. ௧. சங். ௯௭. ௭.

௫ நீ அவைகளை நமஸ்கரிக்கவும் அவைகளைச் சேவிக்கவும் வேண்டாம்; ஏனென்றால் உன் பராபரனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, நம்மைப் பகைக்கிறவர்களுக்கோவென்றால் பிதாக்களுடைய அநியாயத்தைப் பிள்ளைகளிடத்திலே மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம்.

௬ ஆனால் நம்மைச் சிநேகித்து, நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, ஆயிரம் தலைமுறைமட்டும் தயவுசெய்கிறவராயிருக்கிறோம்.

௭ ¶ உன் பராபரனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காயாக; ஏனென்றால் கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

௮ ¶ ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்க நினைப்பாயாக.

௯ ஆறுநாள் நீ வேலைசெய்து உன் கிரியையை எல்லாம் நடப்பிப்பாயாக.

௰ ஆனால் ஏழாம்நாள் உன் பராபரனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற உன் பரதேசியானாலும் யாதொரு வேலையைச் செய்யவேண்டாம்.

௰௧ ஏனென்றால் கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி,*ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார். *௧ மோ. ௨. ௩.

௰௨ ¶ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாள்கள் நீடித்திருக்கிறதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

௰௩ ¶ கொலைசெய்யாயாக.

௰௪ ¶ விபசாரம்பண்ணாயாக.

௰௫ ¶ களவுசெய்யாயாக.

௰௬ ¶ உனக்கடுத்தவனுக்குவிரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாயாக.

௰௭ ¶ உனக்கடுத்தவன் வீட்டை இச்சியாயாக; உனக்கடுத்தவனுடைய பெண்சாதியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னையும் உனக்கடுத்தவனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாயாக என்றார்.

Digitized by Google

௰௮ ¶ சனமெல்லாம் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளச் சத்தத்தையும் பர்வதம் புகைகிறதையும் கண்டார்கள்; அதைக் காண்கையில், சனம் பின்வாங்கி, தூரத்திலே நின்று,

௰௯ மோசேயுடனே, நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; நாங்கள் சாவாதபடிக்குப் பராபரன் எங்களோடே பேசாதிருப்பாராக என்றார்கள்.

௨௰ மோசே சனத்துடனே, பயப்படாதிருங்கள்; ஏனெனில் உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவம்செய்யாதபடிக்கு அவர் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், பராபரன் வந்தாரென்றான்.

௨௧ ¶ சனம் தூரத்திலே நின்றது; மோசேயோவென்றால் பராபரன் இருந்த இருளுக்குள்ளே சேர்ந்துபோனான்.

௨௨ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியதேதெனில், நாம் வானத்திலிருந்து உங்களோடே பேசினதை நீங்கள் கண்டீர்கள்.

௨௩ நீங்கள் நமக்குமுன்பாக வெள்ளித்தேவர்களையாகிலும் பொன்தேவர்களையாகிலும் உங்களுக்கு உண்டாக்கவே உண்டாக்கவேண்டாம்.

௨௪ நீ மண்ணான பலிபீடத்தை நமக்குண்டாக்கி, அதின்மேல் உன் தகனபலிகளையும் உன் சமாதான பலிகளையும் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் பலி இடுவாயாக; நாம் எவ்விடத்திலாகிலும் நம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபம் பண்ணினால், அவ்விடத்தில் உன்னண்டைக்கு வந்து, உன்னை ஆசிர்வதிப்போம்.

௨௫ கல்லான பலிபீடத்தை நமக்கு உண்டாக்கப்போனாயேயாகில், அதை வெட்டின கல்லுகளாலே கட்டாயாக; ஏனென்றால் நீ உன் உளியை அதின்மேல் நடமாடப்பண்ணுகிறதினால், அதைப் பரிசுத்தக்குலைச்சல் ஆக்குவாய்.

௨௬ நமது பலிபீடத்திற்குமுன்பாக உன் நிருவாணம் காணப்படாதபடிக்கு, நீ அதற்குப் படிகளால் ஏறவும் வேண்டாம்.

௨௧. அதிகாரம்.

பின்னையும் நீ அவர்களுக்கு அறியப்பண்ணவேண்டிய நியாயங்களாவது:

௨ எபிரேய சாதியான அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே இலவசமாகத் தன்னிச்சைக்காரனாய்ப் புறப்பட்டுப் போவானாக.

௩ ஒண்டிக்காரனாய் வந்திருந்தானானால், ஒண்டிக்காரனாய்ப் புறப்படுவானாக; பெண்சாதிக்குப் புருஷனாயிருந்தானானால், அவன் பெண்சாதி அவனோடேகூடப் புறப்படுவாளாக.

௪ அவன் எசமானன் அவனுக்குப் பெண்சாதியைக் கொடுத்ததும், இவள் அவனுக்கு ஆண்பிள்ளைகளையாகிலும் பெண்பிள்ளைகளையாகிலும் பெற்றதும் உண்டானால், பெண்சாதியும் அவன் பிள்ளைகளும் அவன் எசமானனைச் சேர்வார்களாக; அவனோ ஒருவனாய்ப் புறப்படுவானாக.

௫ அந்த வேலைக்காரனோவென்றால், என் எசமானனையும் என் பெண்சாதியையும், என் பிள்ளைகளையும் சிநேகிக்கிறேன்; நான் தன்னிச்சைக்காரனாய்ப் புறப்படுவதில்லை என்று சொல்லவே சொன்னால்,

௬ அவன் எசமானன் அவனைத் தேவர்களண்டைக்கு அழைத்துப்போய், அவனைக் கதவின்கிட்ட, அல்லது கதவின் நிலையின்கிட்டச் சேரப்பண்ணக்கடவன்; அங்கே அவன் எசமானன் அவன் காதைக் கம்பியினாலே குத்துவானாக; அதற்குப்பின் என்றைக்கும் அவனுக்கு வேலைசெய்யக்கடவன்.

௭ ¶ ஒருவன் தன் மகளை வேலைக்காரியாக விற்றுப்போட்டானானால், அவன் வேலைக்காரர் புறப்படுகிறதுபோலப் புறப்பட ஒண்ணாது.

௮ அவளைத் தனக்கு நியமித்தது எசமான

Digitized by Google

னின் பார்வைக்கு ஆகாதேபோனால், அவன் மீட்கப்படட்டும்; அவன் அவளைத் துரோகம்பண்ணி, அவளை அந்நியசாதியார் கையிலே விற்றுப்போட அவனுக்கு அதிகாரமில்லை.

௯ அவன் தன் குமாரனுக்கு அவளை நியமித்தானானால், குமாரத்திகளின் நியாயத்திற்குத் தக்கதாய் அவளுக்குச் செய்யக்கடவன்.

௰ அவனுக்கு வேறொருத்தியைக் கொண்டானேயாகில், அவளுடைய பிழைப்பையும் உடுப்பையும் குடிஇருப்பையும் குறைக்காமலிருப்பானாக.

௰௧ அவன் இந்த மூன்றும் அவளுக்குச் செய்யாதேபோனால், அவள் கிரயமில்லாமல் இலவசமாய்ப் புறப்படவேண்டும்.

௰௨ ¶ *ஒருவனைச் சாக அடித்தவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.
*௧ மோ. ௯. ௯.

௰௩ * இவன் அவனுக்குச் சதிபண்ணாமல் பராபரன் அவனை இவன் கைக்கு நேரிடப்பண்ணினாரேயாகில், இவன் ஓடிப்போயிருக்கும் அடைக்கலத்தை உனக்குக் கட்டளையிடுவோம். *௪ மோ. ௩௫. ௯.

௰௪ ஒருவன் தனக்கடுத்தவனுக்கு விரோதமாக அவனைச் சர்ப்பனையாய்க் கொன்றுபோடும் அகங்காரத்தைப்பண்ணினானேயானால், அவன் சாவும்படிக்கு அவனை நம்முடைய பீடத்தண்டையிலும் இருந்து பிடித்துக்கொண்டு போவாயாக.

௰௫ தன் தகப்பனையாகிலும் தன் தாயையாகிலும் அடிக்கிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௰௬ ¶ எவனாகிலும் ஒருவன் ஒரு மனிதனைத் திருடி அவனை விற்றுப்போட்டால். அல்லது இவன் அவன் கையிலே கண்டு பிடிக்கப்பட்டானானால், அவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௰௭ ¶ *தன் தகப்பனையாகிலும் தன் தாயையாகிலும் சபிக்கிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன். *௩ மோ. ௨௰. ௯.

௰௮ மனிதர் சண்டைபண்ணி, ஒருவன் தனக்கடுத்தவனைக் கல்லினால் எறிந்து அல்லது கையினாலே அடித்ததினாலே, இவன் சாவாமல் கட்டில் கிடையாய் விழுந்து,

௰௯ திரும்ப எழுந்திருந்து, வெளியிலே தன் ஊன்றுகோலைப் பிடித்து நடமாடினால், அடித்தவன் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்; ஆனால் அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து, அவனை நன்றாகக் குணமாக்குவிக்கக்கடவன்.

௨௰ ¶ ஒருவன் தன் அடிமையை, அல்லது தன் அடிமைப்பெண்ணைக் கோலினால் அடிக்கிறதினாலே, இவன் அவன் கையின்கீழ்ச் செத்துப்போனால், பழிக்குப்பழிவாங்கப்படவேண்டும்.

௨௰௧ ஒருநாள் அல்லது இரண்டுநாள் இருந்தானேயாகில், பழிவாங்கப்படவேண்டாம்; ஏனெனில் இவன் அவனுடைய உடைமையாய் இருந்தவன்.

௨௰௨ ¶ மனிதர் சண்டைபண்ணி, கர்ப்பவதியான ஒரு ஸ்திரியை அடிக்கிறதினாலே. அவளுக்கு வேறே சேதமில்லாமல் கர்ப்பம் விழுந்துபோனால், அப்பொழுது அடித்தவன் ஸ்திரியின் புருஷன் தன்மேலே சுமத்துகிறதற்குத்தக்கதாய், தருமத்தாருடைய தீர்ப்பின்படியே தண்டம் கொடுக்கவே கொடுக்கவேண்டும்.

௨௰௩ வேறே சேதமுண்டாயிற்றேயானால், நீ சீவனுக்குச் சீவன்,

௨௰௪ கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்,

௨௰௫ சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு, பழிகொடுக்கக்கடவாய்.

௨௰௬ ¶ ஒருவன் தன் அடிமையின் கண்ணிலே, அல்லது தன் அடிமைப்பெண்ணின் கண்ணிலே அடிக்கிறதினாலே அதைக் கெடுத்தால், அவன் இவன் கண்ணுக்குப்பதிலாக இவனைத் தன்னிச்சைக்காரனாக அனுப்பிவிடவேண்டும்.

Digitized by Google

௨௭ அவன் தன் அடிமையின் பல்லை, அல்லது தன் அடிமைப்பெண்ணின் பல்லை விழப்பண்ணினால், அவன் இவன் பல்லுக்குப் பதிலாக இவனைத் தன்னிச்சைக்காரனாக அனுப்பிவிடவேண்டும்.

௨௮ ஒரு மாடு ஒரு ஆண்சாதியை, அல்லது ஒரு பெண்சாதியை முட்டிப்போட்டதினாலே சாவுண்டானால், அந்த மாடு கல்லெறியவே கல்லெறியப்படவும் அதின் மாம்சம் புசிக்கப்படாதே போகவும்கடவது, அப்பொழுது மாட்டின் எசமானன் ஆக்கினைக்கு நீங்கலானவன்.

௨௯ ஆனால் மாடு முதலே முட்டுகிறதாயிருந்து, அது அதின் எசமானனுக்கு அறிவிக்கப்பட்டும், அவன் அதைப் பத்திரம்பண்ணாததினாலே, அது ஒரு ஆண்சாதியை அல்லது ஒரு பெண்சாதியைக் கொன்றுபோட்டால், மாடும் கல்லெறியப்படவேண்டும், அதின் எசமானனும் கொலைசெய்யப்படவேண்டும்.

௩௰ மீட்புக்கு அபராதம் அவன்மேலே சுமத்தப்பட்டதேயானால், அவன் தன் சீவனை மீட்கும்பொருளாக, தன்மேலே சுமத்தப்பட்டபடி எல்லாம் செலுத்தக்கடவன்.

௩௧ அது ஒருவன் மகனை முட்டிப்போட்டாலும் சரி, ஒருவன் மகளை முட்டிப்போட்டாலும் சரி, இந்த நியாயத்தின்படியே அவனுக்குச் செய்யப்படக்கடவது.

௩௨ மாடு ஒரு அடிமையை, அல்லது அடிமைப்பெண்ணை முட்டிப்போட்டிருந்தால், அவன் இவர்களுடைய எசமானனுக்கு முப்பது சேக்கலிடை வெள்ளியைக் கொடுக்கவும் மாடு கல்லெறியப்படவும் வேண்டும்.

௩௩ ¶ ஒருவன் ஒரு குழியைத் திறந்து வைத்ததினாலே, அல்லது ஒரு குழியை வெட்டி அதை மூடாதே போனதினாலே, அதிலே ஒரு மாடாவது ஒரு கழுதையாவது விழுந்தால்,

௩௪ குழிக்குடையவன் அதின் விலையைக் கொடுத்து பணமாய் அதின் எசமானனுக்குச் செலுத்தவும் கடவன்; செத்ததோ அவனுடையதாகவேண்டியது.

௩௫ ¶ ஒருவனுடைய மாடு அவனுக்கு அடுத்தவனுடைய மாட்டை முட்டிப்போட்டதினாலே இது செத்தால், அவர்கள் உயிரோடிருக்கிற மாட்டை விற்று, அதின் கிரயத்தைப் பங்கிட்டு, செத்ததையும் பங்கிட்டுக்கொள்ளக்கடவர்கள்.

௩௬ அல்லவென்று, அந்த மாடு முதலே முட்டுகிறமாடென்று அறியப்பட்டிருந்தும், அதின் எசமானன் அதைப் பத்திரம்பண்ணாதிருந்தானானால், அவன் மாட்டுக்கு மாட்டைக் கொடுக்கவே கடவன்; செத்ததோ அவனுடையதாகவேண்டியது.

௨௨. அதிகாரம்.

எவனொருவன் மாட்டை அல்லது ஒரு ஆட்டைத் திருடி அதை அடித்தால், அல்லவென்று அதை விற்றுப்போட்டால், அவன் மாட்டுக்கு ஐந்துமாடுகளையும் ஆட்டுக்கு நான்கு ஆடுகளையும் திரும்பக் கொடுக்கக்கடவன்.

௨ ¶ திருடன் கன்னமிடுகையில் கண்டுபிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டுச் செத்தால், அவனுக்காக இரத்தப்பழி சுமராது.

௩ சூரியன் அவன்மீதில் உதித்திருந்ததேயானால், அவனுக்காக இரத்தப்பழி சுமரும்; திருடனோவென்றால், திரும்பச் செலுத்தவே செலுத்தக்கடவன்; அவனுக்கு இல்லாதிருந்தால், தன் களவுக்காக விலைப்படக்கடவன்.

௪ அவன் திருடின மாடாகிலும், கழுதையாகிலும், ஆடாகிலும் உயிருடனே அவன் கையிலே கண்டுபிடிக்கப்பட்டால், இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தக்கடவன்.

௫ ¶ வயலையாகிலும் திராட்சத்தோட்டத்தையாகிலும் பட்டிமேய, ஒருவன் தன் மிருகசீவன்களை வேறொருவன் நிலத்திலே விட்டால், அவன் தன் வயலிலே நலமானதிலும் தன் திராட்சத்தோட்டத்திலே நல

Digitized by Google

மானதிலும் எடுத்து, உத்தரவாதம்பண்
ணக்கடவன்.
௬ அக்கினி எழும்பி, முள்ளுக்களிலே
பற்றிக்கொண்டு, கதிர்ப்போராயாகிலும்
முதிர்ப்பயிராயாகிலும் நிலத்திலுள்ளதை
யாகிலும் சுட்டுப்போட்டால், அக்கினி
யைக் கொளுத்தினவன் அக்கினிச் சேதத்
திற்கு உத்தரவாதம் பண்ணவேண்டும்.
௭ ¶ ஒருவன் தனக்கடுத்தவன் வசத்திலே
திரவியத்தையாகிலும் உடைமைகளையாகி
லும் அடைக்கலமாக வைத்திருக்கும்போ
து அது அவன் வீட்டிலிருந்து திருடப்ப
ட்டுப்போனால், அப்பொழுது திருடன்
அகப்பட்டானேயாகில், அவன் இரட்டிப்
பாகத் திரும்பச் செலுத்தவேண்டும்.
௮ திருடன் அகப்படாதேபோனால், அப்
பொழுது அந்த வீட்டுக்காரன் தனக்கடுத்
தவனுடைய பொருளின்மேலே தன் கை
யைப் போட்டதில்லையோ என்பதற்காக,
*தேவர்களண்டைக்குக் கொண்டுபோகக்
கடவன். *௨ மோ. ௨௧. ௬.
௯ ஒரு மாட்டுக்காகிலும் கழுதைக்காகி
லும் ஆட்டுக்காகிலும் வஸ்திரத்திற்காகிலும்
ஒருவன் தன்னுடையதென்று சொல்லுகிற
காணாமல்போன யாதொரு பொருளுக்கா
கிலும் அடுத்த அநியாயத்தினுடைய யா
தொரு விசேஷமிருந்தால், இருதிறத்தாரு
டைய நியாயம் தேவர்களண்டைக்கு வரக்
கடவது; தேவர்கள் எவனைக் குற்றவாளிக
ளென்று தீர்க்கிறார்களோ, அவன் தனக்க
டுத்தவனுக்கு இரட்டிப்பாகத் திரும்பச்
செலுத்தக்கடவன்.
௰ ¶ ஒருவன் தனக்கடுத்தவன் வசத்தில்
ஒரு கழுதை, மாடு, ஆடு முதலான மிருக
ஜீவனை அடைக்கலமாக விட்டிருக்கும்
போது அது செத்தால், அல்லது சேதப்
பட்டால், அல்லது ஒருவரும் காணாமல்
ஓட்டிக்கொண்டு போகப்பட்டால்,
௰௧ அப்பொழுது அவன் தன் கையைத்
தனக்கடுத்தவனுடைய பொருளின்மேலே
போட்டதில்லையோ என்பதற்காக, கர்த்த
ருடைய ஆணை இருவருக்குள்ளும் நடுவ
ாக்கக்கடவது; ஆகில் அதின் எசமானன்
அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்; மற்ற
வன் கொடுக்கத் தேவையில்லை.
௰௨ அது அவன் வசத்திலிருந்து திருடப்
பட்டுப் போயிற்றேயானால், அவன் அதின்
எசமானனுக்கு அதற்காக உத்தரவாதம்
பண்ணக்கடவன்.
௰௩ அது பீறப்பட்டதேயானால், அதற்குச்
சாட்சியை ஒப்புவிப்பானாக, பீறுண்டதற்
காக அவன் உத்தரவாதம் பண்ணத்தே
வையில்லை.
௰௪ ¶ ஒருவன் தனக்கடுத்தவன் கையில்
இரவலாக வாங்கினது அதின் எசமானனு
ண்டையில் இராதிருக்கும்போது சேதப்
பட்டால், அல்லது செத்துப்போனால்,
அவன் உத்தரவாதம் பண்ணக்கடவன்.
௰௫ அதின் எசமானன் அண்டையில்இருந்
தானேயாகில், இவன் உத்தரவாதம் பண்
ணுவதில்லை; அது கொடைக்கூலிக்கு வாங்
கப்பட்டிருந்ததானால், அது அவன் கொ
டைக்கூலிக்கு வந்த சேதம்.
௰௬ ¶ நியமிக்கப்படாத ஒரு கன்னியா
ஸ்திரியை ஒருவன் மோசம்போக்கி அவ
ளோடே சயனித்தால், அவன் அவளுக்
காகப் பரியம்கொடுக்கவே கொடுத்து,
அவளை விவாகம்பண்ணவேண்டும்.
௰௭ அவள் தகப்பன் அவளை இவனுக்குக்
கொடுக்கமாட்டோம் என்றானேயாகில்.
இவன் கன்னியாஸ்திரிகளுக்காகக் கொடுக்
கப்படுகிற பரியமுறைமையின்படியே திர
வியம் நிறுத்துக்கொடுக்கவேண்டும்.
௰௮ ¶ சூனியக்காரியை நீ உயிரோடே
வைக்கவேண்டாம்.
௰௯ ¶ *மிருகத்தோடே புணர்ச்சிபண்ணு
கிறவனெல்லாம் கொலையுண்ணவே கொ
லையுண்ணக்கடவன். *௩ மோ. ௨௰. ௰௫.
௨௰ ¶ கர்த்தர் ஒருவருக்கே ஒழிய வேறே
தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்கரிக்
கப்படக்கடவன்.
௨௧ ¶ *பரதேசியைச் சிறுமைப்படுத்தாம

Digitized by Google

னும் ஒடுக்காமலும் இருப்பாயாக; ஏனெனில் நீங்கள் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள். *௩ மோ. ௰௯. ௩௩, ௩௪.

உஉ ஒரு கைம்பெண்சாதியையும் தாய்தகப்பனில்லாத பிள்ளையையும் ஒடுக்காமலிருப்பீர்களாக.

உ௩ அவர்களை நீ ஒடுக்கவே ஒடுக்கும்போது, அவர்கள் நம்மை நோக்கிக் கூப்பிடவே கூப்பிட்டால், அவர்கள் கூப்பிடுதலை நாம் கேட்கவே கேட்டு,

உ௪ நாம் கோபமூண்டவராகி, உங்கள் பெண்சாதிகள் கைம்பெண்சாதிகளும் உங்கள் பிள்ளைகள் தாய்தகப்பனில்லாத பிள்ளைகளுமாய்ப் போக, உங்களைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவோம்.

உ௫ ¶ *உன்னிடத்திலே சிறுமைப்பட்டிருக்கிற நம்முடைய சனத்தில் ஒருவனுக்கு நீ திரவியம் கடனாகக்கொடுத்தால், அவனுக்கு வட்டி சமத்துகிறவன்போல இராயாக. *௩ மோ. உ௫. ௩௫, ௩௬.

உ௬ *உனக்கு அடுத்தவனுடைய வஸ்திரத்தை நீ அடகாக வாங்கினால், பொழுது புகாததற்குமுன்னே அதை அவனுக்குத் திரும்பக் கொடுப்பாயாக. *௫ மோ. உ௪. ௰உ, ௰௩.

உ௭ ஏனெனில் அவன் மூடிக்கொள்ளுகிறது அதுமாத்திரந்தானே; அதுவே அவன் தன் தோலை மூடிக்கொள்ளுகிற அவனுடைய வஸ்திரம்; வேறு எதினாலே மூடிக்கொண்டு படுத்துக்கொள்ளுவான்; ஆகையால் சம்பவிப்பதேதெனில், அவன் நம்மை நோக்கிக் கூப்பிடும்பொழுது, நாம் கேட்போம்; ஏனெனில் நாம் இரக்கமுள்ளவர்.

உ௮ ¶ தேவர்களைத் தூஷணியாமலும் உன் சனத்தில் அதிபதியானவனைச் சபிக்காமலும் இருப்பாயாக.

உ௯ ¶ உன் போர்க்களத்தின் காணிக்கையையும் உன் ஆலையின் காணிக்கையையும் செலுத்தத் தாமதிக்கவேண்டாம்; உன் குமாரரில் முதல்பேறானவனை நமக்குக் கொடுப்பாயாக.

௩௰ உன் மாடுகளிலும் உன் ஆடுகளிலும் அப்படித்தான் செய்வாயாக; குட்டி ஏழு நாள் தன் தாயோடே இருக்கட்டும், எட்டாம் நாளிலே அதை நமக்குச் செலுத்துவாயாக.

௩௧ ¶ நீங்கள் நமக்குப் பரிசுத்த மனிதராயிருக்கக்கடவீர்கள்; ஆகையால் வெளியிலே பீறுண்டுபோன மாம்சத்தைப் புசியாமல், அதை நாய்களுக்குப் போடுவீர்களாக.

உ௩. அதிகாரம்.

அபாண்டமான விசேஷத்தை ஏற்றுக்கொள்ளாயாக; கொடுமையுள்ள சாட்சியாயிருக்க ஆகாதவனோடே கலவாயாக.

உ பொல்லாப்புச் செய்யப்போகிற திரளினைப் பின்செல்லாமலும், நியாயத்தைப் புரட்டப்போகிற திரளினர்களின் பிறகாலே சாய்கிறதற்கான உத்தரவை வழக்கிலே சொல்லாமலும் இருப்பாயாக.

௩ தரித்திரனுடைய முகத்தையும் அவன் வியாச்சியத்திலே பாராயாக.

௪ ¶ சிதறிப்போனதாகிய *உன் சத்துருவின் மாட்டையாகிலும் அவனுடைய கழுதையையாகிலும் சந்தித்தாயானால், அதை அவனண்டையிலே திருப்பவே திருப்பிக் கொண்டு போவாயாக. *லூக். ௬. உ௭.

௫ உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதையைத் தன் சுமையின்கீழ்க் கிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவாதிருப்பாயோ? அவனோடேகூட அதற்கு உதவவே உதவுவாயாக.

௬ ¶ உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்திலே அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக.

௭ கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக; குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலைப்படுத்தாயாக; ஏனெனில் ஆகாதவனை நீதிமானாகத் தீரோம்.

௮ ¶ *பரிதானம் வாங்காயாக; ஏனெனில் பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குரு

Digitized by Google

டாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்குகின்றது. *௫ மோ. ௰௬. ௰௯.

௯ ¶ *பரதேசியை ஒடுக்காயாக; ஏனெனில் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்த நீங்கள் பரதேசியின் இருதயத்தை அறிவீர்கள். *௨ மோ. ௨௨. ௨௧.

௰ ¶ நீ ஆறுவருஷம் உன் தேசத்தை விதைத்துப் பயிரிட்டு அதின் பலனைச் சேர்த்து,

௰௧ ஏழாம் வருஷத்திலோவென்றால் அதை உன் சனத்தில் எளியவர்கள் புசிக்கும்படிக்கும், மீதியானதை வெளியின் சிவன்கள் தின்னும்படிக்கும், சும்மா வைத்துவிடுவாயாக; உன் திராட்சத்தோட்டத்திற்கும் உன் ஒலீவத்தோப்புக்கும் அப்படியே செய்வாயாக.

௰௨ ¶ நீ ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம் நாளிலோவெனில் உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் பரதேசியும் மூசிப்பாறவும், ஓய்ந்திருப்பாயாக.

௰௩ நாம் உங்களுக்குச் சொன்னதிலெல்லாம் சாவதானமாய் இருங்கள்; வேறே தேவர்களின் பேரை நினையிர்களாக; அது உன் வாயினாலேகேட்கப்படாதிருப்பதாக.

௰௪ ¶ வருஷத்தில் மூன்றுதரம் நமக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக.

௰௫ நீ புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையைக் கைக்கொண்டு, நாம் உனக்குக் கற்பித்தபடி ஆபிப் மாதத்தினுடைய திட்டமான காலத்திலே ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பாயாக; ஏனெனில் அதிலே எகிப்திலிருந்து புறப்பட்டாய்; ஆனால் வெறுங்கையாய் நமக்கு முன்பாகக் காணப்படீர்களாக.

௰௬ நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதல்பலனைச் செலுத்துகிற அறுப்புநாளின் பண்டிகையையும், வருஷமுடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபொழுது, சேர்ப்பின் பண்டிகையையும் ஆசரிப்பாயாக.

௰௭ *வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்சாதியெல்லாம் கர்த்தராகிய ஆண்டவனுடைய சந்நிதிக்கு முன்பாகக் காணப்படக்கடவது. *௨ மோ. ௩௪. ௨௩.

௰௮ ¶ புளித்தமா இருக்கும்போது நமது பலியின் இரத்தத்தைப் பலியிடாயாக; நம்முடைய பண்டிகையின் கொழுப்பு விடியற்காலம்மட்டும் இராத்தங்கவும் வேண்டாம்.

௰௯ உன் சிமையின் முதல்விளைச்சல்களில் முந்தின கனியை உன் பராபரனாகிய கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவருவாயாக; *வெள்ளாட்டுக்குட்டியை அதினுடைய தாயின் பாலோடேகூடச் சமைக்காயாக. *௫ மோ. ௨௨. ௨௮.

௨௰ ¶ இதோ, உன்னை வழியிலே காக்கிறதற்கும், நாம் ஆயத்தம்பண்ணின தானத்திற்கு உன்னைக் கொண்டுபோகிறதற்கும். நாம் ஒரு தூதனை உனக்குமுன்பாக அனுப்புகிறோம்..

௨௧ நீ அவர் முகத்திற்கு முன்பாகச் சாவதானமாயிருந்து, அவர் சத்தத்தைக் கேள்; அவரைக் கோபப்படுத்தாதே; ஏனெனில் உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை, அதேனென்றால் நமது நாமம் அவருள்ளத்தில் இருக்கின்றது.

௨௨ நீ அவர் சத்தத்தைக் கேட்கவே கேட்டு, நாம் சொல்லுவதை எல்லாம் செய்தாயேயாகில், நாம் உன்னைப் பகைக்கிறவர்களைப் பகைத்து, உன்னை இறுகப்பிடிக்கிறவர்களை இறுகப்பிடிப்போம்.

௨௩ ஏனெனில் நம்முடைய தூதர் உனக்குமுன்பாக நடந்து, உன்னை எமோரியரும். எத்தியரும், பெரிசியரும், கானானியரும். எவியரும், எபூசியரும் இருக்கிற இடத்திலே கொண்டுபோவார்; அவர்களை நாம் அதம்பண்ணுவோம்.

௨௪ நீ அவர்கள் தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும் அவர்களைச் சேவிக்காமலும் அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும் அவர்களை நிர்மூலம்பண்ணவே

Digitized by Google

பண்ணி, அவர்கள் சிலைகளை உடைக்கவே உடைத்துப்போடுவாயாக.

௨௫ உங்கள் பராபரனாகிய கர்த்தரையே சேவிப்பீர்களாக; அப்பொழுது அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்; அப்பொழுது வியாதியை உன் நடுவிலிருந்து விலக்குவோம்.

௨௬ கர்ப்பம் விழுகிறவளும் மலடியும் உன் தேசத்திலே உண்டாயிருப்பதில்லை; உன் நாள்களின் இலக்கத்தை நிறைவேற்றுவோம்.

௨௭ நாம் நம்முடைய பயங்கரத்தை உ க்குமுன்பாக அனுப்பி, நீ வந்துசேரும் எல்லாச் சனத்தையும் கலங்கடித்து, உன் சத்துருக்களை எல்லாம் உனக்கு முதுகைக் காட்டப்பண்ணி,

௨௮ உன் முகத்திற்கு முன்பாக ஏவியரையும், கானானியரையும், ஏத்தியரையும் துரத்திவிட, வண்டுகளை உனக்குமுன்பாக அனுப்புவோம்.

௨௯ தேசம் பாழாகாமலும் வெளியின் மிருகங்கள் உனக்கு விரோதமாய் வர்த்திக்காமலும் இருக்கும்படிக்கு, நாம் அவர்களை ஒரே வருஷத்திற்குள்ளே உனக்கு முன்பாகத் துரத்திவிடாமல்,

௩௰ நீ பலுகி, தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்மட்டும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உனக்கு முன்பாகத் துரத்திவிட்டு,

௩௧ ¶ உன் எல்லையை நாணல்சமுத்திரம் துவக்கி, பெலிஸ்தரின் சமுத்திரம்மட்டாகவும்; வனாந்தரம்துவக்கி நதிமட்டாகவும் வைப்போம்; ஏனெனில் நாம் தேசத்தின் குடிகளை, நீ அவர்களை உனக்குமுன்பாகத் துரத்திவிடும்படிக்கு, உங்கள் கைகளில் ஒப்புக்கொடுப்போம்.

௩௨ அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடம்படிக்கை பண்ணாயாக.

௩௩ அவர்கள் உன்னை நமக்கு விரோதமாகப் பாவம்செய்யப் பண்ணாதபடிக்கு உன் தேசத்திலே குடியிரார்களாக; ஏனெனில் நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், உனக்குக் கண்ணியாகவே இருக்குமென்றார்.

௨௪. அதிகாரம்.

பிற்பாடு அவர் மோசேயோடே சொன்னதாவது: நீயும், ஆரோனும், நாதாபும், அபீகூவும், இஸ்ரவேலின் மூப்பரில் எழுபது பேருமாய்க் கர்த்தரண்டைக்கு ஏறிவந்து, தூரத்திலிருந்து பணியுங்கள்.

௨ இவர்கள் கர்த்தரண்டைக்குச் சேராமல், மோசே ஒருவனாய்ச் சேரக்கடவன்; சனம் இவனோடேகூட ஏறிவரவேண்டாமென்றார்.

௩ ¶ மோசே வந்து, கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் எல்லா நியாயங்களையும் சனத்திற்கு விவரித்தான்; அப்பொழுது சனம் எல்லாம் ஒரு சத்தமாய், கர்த்தர் பேசின எல்லா வார்த்தைகளின்படியேயும் செய்வோமென்று பிரதியுத்தாரம் சொன்னார்கள்.

௪ அப்பொழுது மோசே கர்த்தருடைய வார்த்தைகளை எல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே எழுந்திருந்து, பர்வதத்திற்கு அடியிலே ஒரு பலிபீடத்தையும் இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களையும் கட்டி,

௫ இஸ்ரவேல் புத்திரரில் வாலிபரை அனுப்பினான்; அவர்கள் தகனபலிகளைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதான பலிகளாகக் காளை எருதுகளைப் பலியிட்டார்கள்.

௬ அப்பொழுது மோசே பாதி இரத்தத்தைவாங்கி, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே தெளித்து,

௭ உடம்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு, சனத்தின் காதுகள்கேட்க வாசித்தான்; அப்பொழுது அவர்கள் கர்த்தர் சொன்னதை எல்லாம் செய்து, கீழ்ப்படிவோமென்றார்கள்.

Digitized by Google

௮ அப்பொழுது மோசே இரத்தத்தை வாங்

தி, *சனத்தின்மேலே தெளித்து, இதோ
இந்த எல்லா வார்த்தைகளின்மேலும் கர்த்
தர் உங்களோடே பண்ணின உடம்ப
டிக்கையின் இரத்தமென்றான். *எபி.கூ.உய.
கூ ¶ பிற்பாடு மோசேயும், ஆரோனும், நா
தாபும், அபீகூவும், இஸ்ரவேலருடைய
மூப்பரில் எழுபதுபேரும் ஏறிப்போய்,
ய *இஸ்ரவேலின் பராபரனைக் கண்டார்
கள்; அவருடைய பாதத்தின்கீழே நீலக்
கல்லின் வேலைக்கொப்பாகவும், வானத்
தின் காந்தியான பிரபைக்கு ஒப்பாகவும்
இருந்தது. *எசே. க. உகூ.
யக அவர் இஸ்ரவேல் புத்திரருடைய தலை
வர்பேரிலே தம்முடைய கையைப் போக
விடாதிருந்தார்; அவர்கள் பராபரனைத்
தரிசித்தபிற்பாடு புசித்துக் குடித்தார்கள்.
யஉ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயோடே
சொன்னதாவது: நீ நம்மண்டைக்குப் பர்
வதத்தின்மேல் ஏறிவந்து, அங்கே இரு;
நாம் உனக்குக் கற்பலகைகளையும், அவர்
களை உபதேசிப்பதற்கு நாம் எழுதின நியா
யப்பிரமாணத்தையும், கற்பனைகளையும்
கொடுப்போம் என்றார்.
யங அப்பொழுது மோசே தன் வேலைக்
காரனாகிய யோசுவாவோடுங்கூட எழுந்து
போனான்; மோசே பராபரனுடைய பர்
வதத்தில் ஏறினான்.
யச அவன் மூப்பரோடே சொன்னதாவ
து: நாங்கள் உங்களண்டைக்குத் திரும்பி
வரும்மட்டும்,இங்கே எங்களுக்காகக் காத்
திருங்கள்; இதோ, ஆரோனும் ஊரும் உங்
களிடத்தில் இருக்கிறார்கள்; எவனுக்குக்
கலைகாரியங்கள் உண்டோ, அவன் அவர்
களண்டையிலே சேரக்கடவனென்றான்.
யரு ¶ மோசே பர்வதத்தில் ஏறினபொழு
து, ஒரு மேகம் பர்வதத்தை மூடிற்று.
யசா கர்த்தருடைய மகிமை சீனாய்பர்வ
தத்தின்மேலே தங்கியிருந்தது; மேகம் ஆ
றுநாள் அதை மூடியிருந்தபிற்பாடு, அவர்
ஏழாம் நாளிலே மேகத்தின் நடுவிலிருந்து
மோசேயைக் கூப்பிட்டார்.
யஎ பர்வதத்தின் கொடுமுடியிலே கர்த்த
ருடைய மகிமையின் உருவு, இஸ்ரவேல்
புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற
அக்கினியைப்போலிருந்தது.
யஅ மோசே மேகத்தின் நடுவிலே பிரவே
சித்து, பர்வதத்தில் ஏறி, இரவும் பகலும்
நாற்பதுநாள் பர்வதத்திலிருந்தான்.

உரு. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்ன
தாவது:
உ நமக்குக் காணிக்கையை எடுத்துச் செ
லுத்தும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரரோடே
பேசு; நமக்குச் செலுத்தும் காணிக்கை
யை *மனப்பூர்வமான எல்லாருடைய கை
யிலும் வாங்குவீர்களாக. *உ மோ. நரு. இ.
உ கொரி. கூ. யங.
ங நீங்கள் அவர்கள் கையில் வாங்கவே
ண்டிய காணிக்கையாவது: பொன்னும்
வெள்ளியும் வெண்கலமும்,
ச இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவ
ப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்
ளாட்டுமயிரும்,
ரு சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்
களும், தகசுகளின் தோல்களும், சீத்திம்
மரங்களும்,
சா விளக்குக்கு எண்ணெயும், அபிஷேக
எண்ணெய்க்குப் பரிமளவர்க்கங்களும்,
தூபங்காட்டுதலுக்குச் சுகந்தவர்க்கங்க
ளும்,
எ ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்
திற்கும் கோமேதகக்கல்லுகளும், பதித்து
வைக்கும் இரத்தினங்களும்தானே.
அ நாம் தங்கள் நடுவிலே வாசம்பண்ண,
நமக்கொரு பரிசுத்த ஸ்தலத்தை உண்
டாக்குவார்களாக.
கூ வாசஸ்தலத்தின் மாதிரியையும், அதினு
டைய எல்லாப் பண்டம்பாடிகளின் மா
திரியையும், நாம் உனக்குக் காண்பிக்கும்
படி எல்லாம் அதைச் செய்வீர்களாக.
ய ¶ சீத்திம் மரங்களால் ஒரு பெட்டி

Digitized by Google

யைப் பண்ணக்கடவார்கள்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதின் உயரம் ஒன்றரை முழமுமாயிருப்பதாக.

௰௧ அதை எங்கும் சுத்தமான பொன்தகட்டால் மூடுவாயாக; நீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதனால் மூடி, அதின்மேல் சுற்றிலும் பொன்னான திரணையை உண்டாக்கி,

௰௨ அதற்கு நான்கு பொன் வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கோடிகளிலே, இந்தப்பக்கம் இரண்டு வளையங்களும், அந்தப்பக்கம் இரண்டு வளையங்களும் இருக்கும்படிக்குத் தைத்து,

௰௩ சீத்திம் மரங்களான வாரைகளைச் செப்பனிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,

௰௪ அந்த வாரைகளால் பெட்டியைச்சுமக்கும்படிக்கு, அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்சக்கடவாய்.

௰௫ அந்த வாரைகள் பெட்டியிலிருந்து கழற்றப்படாமல், அதின் வளையங்களிலே இருக்கக்கடவது.

௰௬ நீ அந்தப் பெட்டியிலே நாம் உனக்குக் கொடுக்கப்போகிற சாட்சியை வைத்து,

௰௭ ¶ சுத்தமான பொன்னினாலே கிருபாசனமான மூடியைப் பண்ணுவாயாக; அது இரண்டரைமுழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமாய் இருக்கக்கடவது.

௰௮ பொன்னான இரண்டு கேருபீன்களையும் அடிக்கப்பட்ட பொன்னினாலே உண்டாக்கி, கிருபாசனமான மூடியின் இரண்டு ஓரங்களில் இருக்கப்பண்ணக்கடவாய்.

௰௯ ஒரு கேருபீன் இந்தப்புறத்து ஓரத்திலும் மற்றக் கேருபீன் அந்தப்புறத்து ஓரத்திலும் இருக்கத்தானே; அந்தக் கேருபீன்களைக் கிருபாசனமான மூடியின் இரண்டு ஓரங்களிலே அதனோடே ஏக வேலையாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பண்ணக்கடவீர்கள்.

௨௰ அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளாலே கிருபாசனமான மூடியை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகங்களுமாயிருக்கக்கடவது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனமான மூடியை நோக்குகிறவைகளாயிருப்பதாக.

௨௧ நீ கிருபாசனமான மூடியைப் பெட்டியின்மீதில் வைத்து, பெட்டியிலோவென்றால், நாம் உனக்குக் கொடுக்கப்போகிற சாட்சியை வைப்பாயாக.

௨௨ *அங்கே உன்னைச் சந்திப்போம்; கிருபாசனமான மூடியின்மீதிலும் சாட்சியினுடைய பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலுமிருந்து நாம் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப்போகிறவைகளை எல்லாம் உன்னோடே சொல்லுவோம். *௪ மோ. ௭. ௮௯.

௨௩ ¶ சீத்திம் மரங்களால் ஒரு மேசையையும் பண்ணுவாயாக; அது இரண்டு முழ நீளமும் ஒருமுழ அகலமும் ஒன்றரைமுழ உயரமுமாயிருக்கக்கடவது.

௨௪ அதை நீ சுத்தமான பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்னான திரணையை உண்டாக்கி,

௨௫ சுற்றிலும் அதற்கு நான்கு விரல்கடையான சட்டத்தையும் அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன்னான திரணையையும் உண்டாக்கி,

௨௬ அதற்கு நான்கு பொன் வளையங்களைப் பண்ணி, அவைகளை அதின் நான்கு கால்களுக்கு இருக்கும் நான்கு கோடிகளில் தைக்கக்கடவாய்.

௨௭ அந்த வளையங்கள் மேசையைச் சுமக்கும் வாரைகளுக்கு இடங்களாயிருக்கும்படிக்கு, சட்டத்திற்கு எதிரே இருக்கவேண்டும்.

௨௮ அந்த வாரைகளைச் சீத்திம் மரங்களாலே பண்ணி, அவைகளைப் பொன்தகட்டால் மூடக்கடவாய்; அவைகளால் மேசை சுமக்கப்படுவது.

Digitized by Google

௨௯ அதின் கலங்களையும் தூபக்கிண்ணிகளையும், தட்டுகளையும், அதற்கு அடுத்தவைகளாகிய வார்க்கிற கரகங்களையும் பண்ணக்கடவாய்; சுத்தமான பொன்னினாலே உண்டாக்கக்கடவாய்.

௩௰ மேசையின்மேலே எப்பொழுதும் நமக்குமுன்பாகச் சமுகத்து அப்பங்களை வைக்கக்கடவாய்.

௩௧ ¶ சுத்தமான பொன்னினாலே ஒரு குத்துவிளக்கையும் உண்டாக்குவாயாக; அது அடிக்கப்பட்ட பொன்னினாலே பண்ணப்படவேண்டும்; அதின் தண்டும், அதின்கிளைகளும், அதின் மொக்குகளும், அதின் மாதளம்பழங்களும், அதின் பூக்களும் அதனோடொன்றாயிருப்பதாக.

௩௨ ஆறு கிளைகள் அதின் பக்கங்களிலிருந்து புறப்படுவது; குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் ஒரு பக்கத்திலும், குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் மறுபக்கத்திலுமிருந்து புறப்படுவது.

௩௩ ஒவ்வொரு கிளையிலே வாதுமைக்கொட்டைகளின் சாயலான மூன்று மொக்குகளும், ஒரு மாதளம்பழமும், ஒரு பூவும் இருப்பதாக; குத்துவிளக்கிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளிலும் அப்படி இருக்கவேண்டும்.

௩௪ விளக்குத்தண்டிலோவென்றால், வாதுமைக்கொட்டைகளின் சாயலான நான்கு மொக்குகளும், அதின் மாதளம்பழங்களும், அதின் பூக்களும் இருப்பதாக.

௩௫ அதிலிருந்து புறப்படுகிற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும், வேறு இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும், மற்ற இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் இருப்பதாக; விளக்குத்தண்டிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளுக்கும் அப்படி இருக்கவேண்டும்.

௩௬ அவைகளின் மாதளம்பழமும் அவைகளின் கிளைகளும் அதிலிருந்து உண்டானவைகளாயிருப்பதாக; இவையெல்லாம் அடிக்கப்பட்ட சுத்தமான பொன்னாகிய ஒரே துண்டாயிருக்கவேண்டும்.

௩௭ அதின்மேல் ஏழு விளக்குகளையும் உண்டாக்குவாயாக; அதற்கு நேரெதிராய் எரியும்படிக்கு ஏற்றப்படக்கடவது.

௩௮ அதின் கத்திரிகளும் விளக்கணைக்கிற கருவிகளும் சுத்தப் பொன்னாயிருப்பதாக.

௩௯ அதை இந்த எல்லா முஸ்தீதுகளோடுங்கூட ஒரு தாலந்து சுத்தமான பொன்னினாலே உண்டுபண்ணுவார்களாக.

௪௰ *பர்வதத்திலே உனக்குக் காண்பிக்கப்பட்ட அவைகளுடைய மாதிரியின்படியே அவைகளைச் செய்யப் பார்ப்பாயாக.

* ௨ மோ. ௨௬. ௩௰. எபி. ௮. ௫.

௨௬. அதிகாரம்.

* வாசஸ்தலத்தையோவென்றால், திரித்த மெல்லிய பஞ்சுநூலும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலுமான பத்துச் சமுக்காளங்களால் உண்டுபண்ணுவாயாக; அவைகளில் விநோத வேலையான கேருபீன்கள் இருக்கும்படியாக அவைகளைப் பண்ணக்கடவாய். * ௨ மோ. ௩௬. ௮.

௨ ஒவ்வொரு சமுக்காளம் இருபத்தெட்டுமுழ நீளமும் நாலுமுழ அகலமுமாயிருப்பதாக; சமுக்காளங்களுக்கெல்லாம் ஒரே அளவு இருக்கக்கடவது.

௩ ஐந்து சமுக்காளங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவும், மற்ற ஐந்து சமுக்காளங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவும் வேண்டும்.

௪ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடைஓரத்தில் இளநீலநூல்காதுகளை உண்டுபண்ணி, இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் கடைஓரத்திலும் அப்படியே உண்டுபண்ணுவாயாக.

௫ ஒரு சமுக்காளத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் காதுகள் ஒன்றுக்கொன்று எதிராய்ச் சேர்ந்திருக்கும்படிக்கு உண்டுபண்ணுவாயாக.

௬ ஏக வாசஸ்தலமாய்ப் போகும்படிக்கு

Digitized by Google

ஐம்பது பொன் துறடுகளையும்பண்ணி, சமுக்காளங்களை ஒன்றுக்கொன்று துறடுகளாலே இணைத்துப்போடுவாயாக.

௭ ¶ வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும் ஆட்டுமயிர்ச் சமுக்காளங்களாகிய பதினொரு சமுக்காளங்களையும் பண்ணக் கடவாய்.

௮ ஒவ்வொரு சமுக்காளம் முப்பதுமுழ நீளமும் நான்குமுழ அகலமுமாயிருப்பதாக; பதினொரு சமுக்காளங்களுக்கும் ஒரே அளவு இருக்கக்கடவது.

௯ ஐந்து சமுக்காளங்களை ஒன்றாகவும் ஆறு சமுக்காளங்களை ஒன்றாகவும் இணைத்து, ஆறாம் சமுக்காளத்தைக் கூடாரத்தின் முகப்பிற்குமுன்னே, இரட்டையாய்ப் போடுவாயாக.

௰ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடைஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணி,

௰௧ ஐம்பது வெண்கலத் துறடுகளைப்பண்ணி, துறடுகளைக் காதுகளில் பூட்டி, கூடாரத்தை அது ஒன்றாகும்படிக்கு இணைத்துவிடுவாயாக.

௰௨ கூடாரத்தின் சமுக்காளங்களில் மிச்சமான அரைச்சமுக்காளத்தின் மீதியோவென்றால், வாசஸ்தலத்தின் பின்புறத்திலே மிஞ்சித் தொங்குவதாக.

௰௩ கூடாரத்தினுடைய சமுக்காளங்களின் நீளத்திலும் மீதியானதிலே இந்தப்புறத்தில் ஒரு முழமும் அந்தப்புறத்தில் ஒரு முழமும் வாசஸ்தலத்தை மூடும்படிக்கு அதின் பக்கங்களிலே மிஞ்சித் தொங்குவதாக.

௰௪ ¶ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாக்களின் தோல்களாலே கூடாரத்திற்கு ஒரு மூடியையும் அதின்மேலே தகசுகளின் தோல்களால் ஒரு மூடியையும் உண்டுபண்ணுவாயாக.

௰௫ ¶ நிமிர்ந்துநிற்கிற பலகைகளையும் வாசஸ்தலத்திற்குச் சீத்திம் மரங்களால் செப்பனிடுவாயாக.

௰௬ ஒவ்வொரு பலகை பத்துமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமாயிருக்கக் கடவது.

௰௭ ஒன்றுக்கொன்று எதிரே இசைவான ஒழுங்காயிருக்கிற இரண்டு முளைகள் ஒவ்வொரு பலகைக்கு இருக்கவேண்டும்; இப்படியே வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் செய்வாயாக.

௰௮ ¶ நீ வாசஸ்தலத்திற்காகச் செப்பனிடுகிற பலகைகளில் இருபது பலகை தெற்கே தென்திசைக்கு எதிராக நிற்கக்கடவது.

௰௯ அந்த இருபது பலகைகளின்கீழே வைக்கும் நாற்பது வெள்ளிக்கால்களை ஒவ்வொரு பலகையின்கீழ் அதின் அதின் இரண்டிரண்டு முளைகளுக்கான கால்களாகத்தானே பண்ணக்கடவாய்.

௨௰ ¶ வாசஸ்தலத்தின் வடக்கான மறுபக்கத்திலும் இருபது பலகையும்,

௨௧ அவைகளின்கீழ் நாற்பது வெள்ளிக் கால்களும், ஒவ்வொரு பலகையின்கீழே இரண்டிரண்டு கால்களாக நிற்கக்கடவது.

௨௨ ¶ வாசஸ்தலத்தின் மேல்புறத்திற்கு ஆறு பலகைகளையும்,

௨௩ வாசஸ்தலத்தின் இரண்டு பக்கக் கோடிகளுக்கு இரண்டு பலகைகளையும் செப்பனிடுவாயாக.

௨௪ இவைகள் தாழத்துவக்கி இரண்டு பக்கங்களை ஏகமாய்ப் பிடித்து, உயரத்தை ஒரு அள்ளினாலே இசைத்திருக்கவேண்டும்; இரண்டு கோடிகளுக்கு அப்படியிருக்க இரண்டும் அப்படிச் செய்யப்படுவதாக.

௨௫ அப்படியே எட்டுப் பலகைகள் இருக்கவேண்டியது; அவைகளினுடைய வெள்ளிக்கால்கள் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டிரண்டு கால்களாகப் பதினாறு கால்கள் இருக்கவேண்டும்.

௨௬ ¶ சீத்திம் மரங்களால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும்,

௨௭ வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் வா

Digitized by Google

சஸ்தலத்தின் மேல்புறமான பின்பக்கத்
துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களை
யும் பண்ணுவாயாக.
௨௮ நடுத்தாழ்ப்பாள் ஒரு முனைதுவக்கி ம
றுமுனைமட்டும் பலகைகளின் மையத்தை
உருவிப் பாய்ச்சப்படுவதாக.
௨௯ பலகைகளைப் பொன்தகட்டால் மூடி,
தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைக
ளின் வளையங்களைப் பொன்னினாலே பண்
ணி, தாழ்ப்பாள்களைப் பொன்தகட்டால்
மூடக்கடவாய்.
௩௰ ¶ அப்படியே வாசஸ்தலத்தைப் பர்
வதத்தில் உனக்குக் காண்பிக்கப்பட்ட அதி
னுடைய நியாயத்தின்படியே எடுப்பிப்பா
யாக.
௩௧ ¶ *இளநீலநூலும் இரத்தாம்பரநூலும்
சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலு
மான ஒரு திரையையும் உண்டுபண்ணக்
கடவாய்; அதிலே விநோத வேலையான கே
ருபீன்கள் இருக்கும்படியாக அது பண்
ணப்படுவதாக. *௨ மோ. ௩௬. ௩௫.
௩௨ பொன்தகடு மூடியதும் பொன்னான
வளைவாணிகளுள்ளதும் நான்கு வெள்ளிக்
கால்கள்மேல் நிற்கிறதுமான நான்கு சீத்
திம் மரத்தூண்களிலே அதைத் தூக்கிவை
ப்பாயாக.
௩௩ துறடுகளின்கீழே அந்தத் திரையைத்
தூக்கிவைத்து, சாட்சியின் பெட்டியை
அங்கே திரைக்குள்ளாக வைப்பாயாக; அந்
தத் திரை உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலத்
திற்கும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான
ஸ்தலத்திற்கும் நடுவே இருப்பதாக.
௩௪ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்த
லத்திலே சாட்சியினுடைய பெட்டியின்மீ
தில் கிருபாசனமான மூடியை வைத்து,
௩௫ திரைக்குப் புறம்பாக மேசையையும்
மேசைக்கெதிரே வாசஸ்தலத்தின் தென்பு
றமாகக் குத்துவிளக்கையும் வைத்து, மே
சையையோ வடபுறமாக வைப்பாயாக.
௩௬ ¶ இளநீலநூலும் இரத்தாம்பரநூலும்
சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூ
லும் சித்திரத் தையல்வேலையுமான ஒரு
மறைவையும் கூடாரத்தின் வாசலுக்கு
உண்டாக்கி,
௩௭ அந்த மறைவுக்குச் சீத்திம் மரமான
ஐந்து தூண்களைச் செப்பனிட்டு, அவைக
ளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளுக்
குப் பொன் வளைவாணிகளை உண்டாக்கி,
அவைகளுக்கு ஐந்து வெண்கலக் கால்களை
வார்ப்பிக்கக்கடவாய்.

௨௭. அதிகாரம்.

ஐந்துமுழ நீளமும் ஐந்துமுழ அகலமு
மான பலிபீடத்தையும் சீத்திம் மரங்களால்
உண்டுபண்ணக்கடவாய்; அது நாற்சதுர
மும் மூன்றுமுழ உயரமுமாயிருப்பதாக.
௨ அதின் நான்கு கோடிகளின்மேல், அத
னோடே ஏகமாயிருக்கும் அதின் கொம்பு
களை உண்டாக்கி அதை வெண்கலத்தகட்
டால் மூடி,
௩ அதின் சாம்பலை எடுக்கும் அதின் செப்
புச் சட்டிகளையும், அதின் கரண்டிகளையும்,
அதின் கலங்களையும், அதின் முள்துறடுகளை
யும், அதின் கலசங்களையும் உண்டாக்கி,
அதின் முட்டுகளையெல்லாம் வெண்கலத்
தால் பண்ணி,
௪ வலைபோலிருக்கிற ஒரு வெண்கலச்
சல்லடையை அதற்குண்டாக்கி, அந்த
வலையின் நான்கு முனைகளின்மேல் நான்கு
வெண்கல வளையங்களை உண்டாக்கி,
௫ அந்த வலை பலிபீடத்தின் பாதிமட்டும்
வரும்படிக்கு, அதைத் தாழப் பலிபீடத்
தின் சுற்றிற்குக் கீழ்ப்புறமாக வைக்கக்கட
வாய்.
௬ பலிபீடத்திற்குச் சீத்திம் மரவாரைகளை
யும் பண்ணி, அவைகளை வெண்கலத்தகட்
டால் மூடி,
௭ பலிபீடம் எடுத்துப் போகப்படுகை
யில், அந்த வாரைகள் அதின் இரண்டு பக்
கங்களில் இருக்கும்படிக்கு, அவைகள்
வளையங்களிலே பாய்ச்சப்படுவதாக.
௮ அது குழாயாயிருக்கும்படிக்கு அதைப்

Digitized by Google

பலகைகளினாலே பண்ணுவாயாக; உனக்
குப் பர்வதத்தில் காண்பிக்கப்பட்டபடி
யே அதைப் பண்ணக்கடவார்கள்.
௯ ¶ *வாசஸ்தலத்தின் பிரகாரத்தையும்
உண்டுபண்ணுவாயாக; தெற்கே தென்றி
சைக்கு எதிரான பக்கத்திற்குத் திரித்த
மெல்லிய பஞ்சுநூலும் நூறுமுழ நீளமு
மான வெளி ஆடைகளும், *௨ மோ.
௩௮. ௯.
௰ அவைகளின் இருபதுதூண்களும் இ
ருப்பதாக; இவைகளின் இருபதுகால்கள்
வெண்கலமும், தூண்களின் வளைவாணிக
ளும் அவைகளின் வளையங்களும் வெள்ளி
யுமாயிருப்பதாக.
௰௧ அப்படியே வடபக்கத்தின் நீளத்திற்கு
நூறுமுழ நீளமான வெளி ஆடைகளும், அ
வைகளின் இருபது தூண்களுமிருப்ப
தாக; இவைகளின் இருபது கால்கள்
வெண்கலமும் தூண்களின் வளைவாணிகள்
வெள்ளியுமாயிருப்பதாக.
௰௨ பிரகாரத்தினுடைய மேல்ப்பக்கமான
அகலத்திற்கு ஐம்பதுமுழ நீளமான வெளி
ஆடைகளும், அவைகளுக்குப் பத்துத்
தூண்களும் இவைகளுக்குப் பத்துக் கால்
களுமிருப்பதாக.
௰௩ சூரியன் உதிக்கிற திசையாகிய பிரகா
ரத்தின் கீழ்ப்பக்கமான அகலமும் ஐம்பது
முழமாயிருப்பதாக.
௰௪ அங்கே ஒரு புறத்திற்குப் பதினைந்து
முழ நீளமான வெளிஆடைகளும், அவை
களுக்கு மூன்று தூண்களும், இவைகளுக்
கு மூன்று கால்களுமிருப்பதாக.
௰௫ மறுபுறத்திற்குப் பதினைந்துமுழ நீள
மான வெளிஆடைகளும் அவைகளுக்கு
மூன்று தூண்களும் இவைகளுக்கு மூன்று
கால்களுமிருப்பதாக.
௰௬ பிரகாரத்தின் வாசலுக்கோவென்றால்
இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்பு
நூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலும் சித்
திரத் தையல்வேலையும் இருபதுமுழ நீள
முமான ஒரு மறைவும் அதற்கு நான்கு
தூண்களும் இவைகளுக்கு நான்கு கால்க
ளும் இருப்பதாக.
௰௭ சுற்றிலும் இருக்கும் பிரகாரத்தின்
தூண்களெல்லாம் வெள்ளி வளையங்கள்
போடப்பட்டிருப்பதாக; அவைகளின்
வளைவாணிகள் வெள்ளியும் அவைகளின்
கால்கள் வெண்கலமுமாயிருப்பதாக.
௰௮ பிரகாரத்தின் நீளம் நூறுமுழமும் இ
ருபுறத்தகலம் ஐம்பது முழமும் உயரம்
ஐந்துமுழமுமாயிருப்பதாக; அது திரித்த
மெல்லிய பஞ்சுநூலும் அவைகளின் கால்
கள் வெண்கலமுமாய் இருப்பதாக.
௰௯ வாசஸ்தலத்தின் சகல வேலையிலும் அ
தற்குத் தேவையான எல்லாப் பணிமுட்டு
களும் அதினுடைய எல்லா முளைக்கூச்சுக
ளும் பிரகாரத்தினுடைய எல்லா முளைக்
கூச்சுகளும் வெண்கலமாயிருப்பதாக.
௨௰ ¶ குத்துவிளக்கை எப்பொழுதும் எ
ரியப்பண்ணும்படிக்கு, இஸ்ரவேல் புத்தி
ரர் இடித்து வடிக்கப்பட்ட தெளிவான ஒ
லிவ எண்ணெயை உன்னண்டைக்குக்கொ
ண்டுவர நீ அவர்களுக்குக் கற்பிப்பாயாக.
௨௰௧ ஆசரிப்பின் கூடாரத்தில் சாட்சிக்கு
முன்னிருக்கும் திரைக்கு வெளிப்புறமாக
ஆரோனும் அவன் குமாரரும் அதைச் சா
யங்காலந்துவக்கி, விடியற்காலம்மட்டும்
கர்த்தருக்குமுன்பாக எரியவைக்கக்கட
வர்கள்; இது அவர்களுக்குத் தலைமுறை
தலைமுறையாக இஸ்ரவேல் புத்திரராலே
நடக்கும் நித்திய கட்டளையாயிருக்கக்கட
வது.

௨௮. அதிகாரம்.

நீ உன் சகோதரனாகிய ஆரோனையும் அ
வனோடேகூட அவன் குமாரரையும் நமக்
கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படிக்கு இஸ்
ரவேல் புத்திரரின் நடுவிலிருந்து பிரித்து உ
ன்னண்டையில் சேர்த்துக்கொள், ஆரோ
னையும், நாதாப், அபீகூ, எலேயாசார், இத்
தமார் என்ற ஆரோனின் குமாரரையும்
தானே.

Digitized by Google

௨ உன் சகோதரனாகிய ஆரோனுக்கு, மகிமைக்கும் அலங்காரத்திற்குமான பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணுவாயாக.

௩ ஆரோனைப் பரிசுத்தம்பண்ணுகிறதற்கும் அவன் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்கிறதற்கும் அவனுடைய வஸ்திரங்களை உண்டாக்கும்படிக்கு, நாம் ஞானத்தின் ஆவியால் நிரப்பின ஞானமான இருதயமுள்ள யாவரோடும் நீ பேசுவாயாக.

௪ அவர்கள் உண்டாக்கவேண்டிய வஸ்திரங்களாவது: மார்ப்பதக்கமும், ஆசாரிய சால்வையும், அங்கியும், மூத்துவருணமான உன்சட்டையும், பாகையும், நடுக்கட்டும்தானே; அந்த அடைவாய் உன் சகோதரனாகிய ஆரோன் நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, அவனுக்கும் அவன் குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணக்கடவர்கள்.

௫ அவர்கள் பொன்னும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும் எடுத்து,

௬ ¶ ஆசாரிய சால்வையைப் பொன்னினாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், விநோத வேலையாய்ப் பண்ணக்கடவர்கள்.

௭ இரண்டு தோளின்மேலும் அதின் இரண்டு முனைகள் சேர்க்கப்பட்டு, அப்படி அது இணைக்கப்படவேண்டும்.

௮ அந்த ஆசாரிய சால்வையின்மேலிருக்கவேண்டிய விநோதமான நச்சை அந்த வேலையாகத்தானே, பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணப்பட்டு, அதனோடே ஏகத்துண்டாயிருப்பதாக.

௯ பின்னையும் நீ இரண்டு கோமேதகக் கல்லை வாங்கி, அவைகளில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டுவாயாக.

௰ அவர்கள் பிறந்த வரிசையின்படியே, அவர்கள் நாமங்களில் ஆறுநாமங்கள் ஒரு கல்லிலும், மற்ற ஆறுநாமங்கள் மறுகல்லிலும் இருக்கத்தானே.

௰௧ இரத்தினங்களில்முத்திரை வெட்டுகிறவர்கள் செய்கிறதுபோல, அந்த இரண்டு கற்களில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டி, அவைகளுக்குச் சுற்றிலும் தங்கம் இழைத்து,

௰௨ ஆரோன் கர்த்தருக்குமுன்பாகத் தன் இரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை நினைப்புக்காகச் சுமந்துவர, அந்த இரண்டு கற்களை ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேலே, அவர்கள் நினைப்புக்கான கற்களாக வைக்கக்கடவாய்.

௰௩ ஆகையால் பொன் வளையங்களையும் பண்ணி,

௰௪ சரியான அளவுகளும் முடிச்சுக்குத்திவேலையுமான இரண்டு சரப்பளிகளையும் சுத்தப்பொன்னினாலே உண்டாக்கி, முடிச்சுக்குத்திகளான சரப்பளிகளை அந்த வளையங்களில் சேர்க்கக்கடவாய்.

௰௫ ¶ விநோத வேலையாய் நியாயத்தின் மார்ப்பதக்கத்தையும் பண்ணுவாயாக; அதை ஆசாரிய சால்வையின் வேலைக்கொத்ததாய்ப் பண்ணக்கடவாய்; பொன்னினாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் அதைச் செய்வாயாக.

௰௬ அது நாற்சதுரமும் இரட்டையும் ஒரு சாண் நீளமும் ஒரு சாண் அகலமுமாய் இருக்கக்கடவது.

௰௭ அதிலே நான்கு பத்தி இரத்தினக் கற்களை நிறையப்பதிப்பாயாக; முதலாம் பத்தி கெம்பும், புஷ்பராகமும், மரகதமும்,

௰௮ இரண்டாம் பத்தி சிவப்புக்கல்லும், நீலக்கல்லும், வச்சிரமும்,

௰௯ மூன்றாம் பத்தி பத்மராகமும், வைடூரியமும், அமேத்தீஸ்தும்,

௨௰ நான்காம் பத்தி தர்சீஸ் இரத்தினமும், கோமேதகமும், யஸ்பியுமாய் இருப்பதாக; அவைகள் தங்களிடங்களில் பொன்னினு

Digitized by Google

லே பதித்திருக்கக்கடவது.
௨௧ இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும், அவர்களுடைய நாமங்கள் உள்ளவைகளுமாய் இருக்கவேண்டும்; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றினுடைய நாமம் ஒவ்வொன்றிலே முத்திரை வெட்டாய் வெட்டியிருக்கக்கடவது.
௨௨ அந்த மார்ப்பதக்கத்திற்கென்று நீ சரி அளவுகளும் முடிச்சுக்குத்திகள் வேலையுமான சுத்தப் பொன் சரப்பளிகளையும் பண்ணி,
௨௩ இரண்டு பொன்மோதிரங்களையும் மார்ப்பதக்கத்திற்குப் பண்ணி, இந்த இரண்டு மோதிரங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு முனைகளிலே வைத்து,
௨௪ பொன்னுன அந்த இரண்டு முடிச்சுக்குத்திகளை மார்ப்பதக்கத்தின் முனைகளில் இருக்கிற இரண்டு மோதிரங்களில் மாட்டி,
௨௫ இரண்டு முடிச்சுக்குத்திகளின் இரண்டு நுனிகளை ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேல் அதின் முன்புறத்திலிருக்கிற இரண்டு வளையங்களில் மாட்டிப்போடுவாயாக.
௨௬ நீ பின்னையும் இரண்டு பொன்மோதிரங்களைப்பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையின் கீழ்ப்புறத்திற்கு எதிரானமார்ப்பதக்கத்தினுடைய மற்ற இரண்டு முனைகளில் அதினுடைய ஓரத்திற்குள்ளாக வைத்து,
௨௭ வேறே இரண்டு பொன்மோதிரங்களையும் பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையினுடைய முன்புறத்தின் இரண்டு கீழ்ப் பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,
௨௮ மார்ப்பதக்கம் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்குமேலாக இருக்கும்படிக்கும், அது ஆசாரிய சால்வையிலிருந்து விட்டுப்போகாதபடிக்கும், அதை அதின் மோதிரங்களால் ஆசாரிய சால்வையின் மோதிரங்களோடே இளநீலமான கயிற்றினாலே கட்டுவார்களாக.
௨௯ அப்படியே ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கையில், தன் இருதயத்தின்மேல் நியாயத்தின் மார்ப்பதக்கத்திலே இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை எப்பொழுதும் கர்த்தருக்கு முன்பாக நினைப்புண்டாகும்படிக்குச் சுமந்துவரக்கடவன்.
௩௰ ¶ நியாயத்தின் மார்ப்பதக்கத்திலே வெளிச்சங்களையும் உத்தமங்களையும் ஆரோன் கர்த்தரின் சந்நிதிக்குள் பிரவேசிக்கையில், அவைகள் அவன் இருதயத்தின்மேல் இருக்கும்படிக்கு வைப்பாயாக; அப்படியே ஆரோன் தன் இருதயத்தின்மேலே இஸ்ரவேல் புத்திரருடைய நியாயத்தை எப்பொழுதும் கர்த்தருக்குமுன்பாகச் சுமந்துவரக்கடவன்.
௩௧ ¶ ஆசாரிய சால்வையின் கீழிருக்கும் அங்கியைமுழுவதும் இளநீலநூலால் உண்டாக்கக்கடவாய்.
௩௨ தலைநுழைகிற அதின் வாய் அதின் நடுவில் இருக்கவும் அதின் வாய்க்கு நெய்த வேலையான ஒரு நாடா சுற்றிலும் இருக்கவும்வேண்டும்; அது கிழியாதபடிக்கு மார்க்கவசத்தின் வாய்க்கொத்தது அதற்கு இருப்பதாக.
௩௩ அதின் கீழோரங்களிலோவென்றால். இளநீலநூல் இரத்தாம்பரநூல் சிவப்புநூல் வேலையான மாதளம்பழங்களையும், அவைகளின் நடுவே சுற்றிலும் பொன்மணிகளையும், அதின் ஓரங்களிலே சுற்றிலும் தொங்கப்பண்ணி வைப்பாயாக.
௩௪ அங்கியின் ஓரங்களிலே சுற்றிலும் ஒரு பொன்மணியும், ஒரு மாதளம்பழமும், ஒரு பொன்மணியும், ஒரு மாதளம்பழமுமாய்த் தொங்குவதாக.
௩௫ ஆரோன் ஆராதனைசெய்யக் கர்த்தருக்குமுன்பாகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், வெளியே வரும்பொழுதும் அவன் சாவாதபடிக்கு அத

Digitized by Google

அவனில் அவன் சத்தம் கேட்கப்படத் தரிக்கப்பட்டிருக்கவேண்டும்.
௩௬ ¶ நீ சுத்தப் பொன்பட்டத்தையும் பண்ணி, அதிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்பதை முத்திரை வெட்டாக வெட்டி,
௩௭ அது பாகையிலிருக்கும்படியாக, அதை இளநீலமான கயிற்றிலே பாகையின் முகப்பிலே கோத்துக் கட்டிவைப்பாயாக.
௩௮ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணிக்கைகளில் எல்லாம் பரிசுத்தம்பண்ணிச் செலுத்தும் பரிசுத்த வஸ்துக்களுடைய அக்கிரமத்தை ஆரோன் சுமந்துவரும்படிக்கு, அது ஆரோனுடைய நெற்றியின்மேல் இருப்பதாக; கர்த்தருக்குமுன்பாக அவர்கள்மேல் பிரியம் உண்டாகும்படிக்கு, அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருப்பதாக.
௩௯ ¶ மெல்லிய பஞ்சுநூலால் முத்துவருணமான உள்சட்டையையும் மெல்லிய பஞ்சுநூலால் பாகையையும் உண்டாக்கி, நடுக்கட்டையோவென்றால் சித்திரத் தையல்வேலையாகப் பண்ணுவாயாக.
௪௰ நீ ஆரோனுடைய குமாரருக்கும் சட்டைகளையும், நடுக்கட்டுகளையும், மகிமைக்கும் அலங்காரத்திற்குமான குல்லாக்களையும் உண்டுபண்ணுவாயாக.
௪௧ உன் சகோதரனாகிய ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்து, அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்கள் கைகளை நிரப்பி, அவர்களைப் பரிசுத்தம் பண்ணுவாயாக.
௪௨ அவர்களுக்கு இடுப்புதுவக்கி முழங்கால்கள்மட்டும் வருகிற சணல்நூல் சல்லடங்களையும், நிருவாணத்தின் சதையை மூடும்படிக்கு உண்டுபண்ணக்கடவாய்.
௪௩ ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனைசெய்ய ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், அல்லது பலிபீடத்தண்டைக்குச் சேரும்பொழுதும், அவர்கள் அக்கிரமம் சுமந்து சாவாதபடிக்கு, அவைகள் அவர்களின்மேல் தரித்திருக்கவேண்டும்; அவனுக்கும் அவனுக்குப்பிற்பாடு அவன் வித்தாருக்கும் அது நித்தியகட்டளை.

௨௯. அதிகாரம்.

நமக்கு ஆசாரிய ஊழியம்செய்ய அவர்களைப் பரிசுத்தம்பண்ணும்படிக்கு நீ அவர்களுக்குச் செய்யவேண்டியதாவது: நீ ஒரு காளை எருதையும் பழுதற்ற இரண்டு ஆட்டுக்கடாக்களையும்,
௨ கோதுமையின் மெல்லிய மாவினாலே சுட்ட புளிப்பில்லாத அப்பத்தையும், எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும் வாங்கு.
௩ நீ இவைகளை ஒரே கூடையிலே வைத்து, கூடையோடே இவைகளையும் காளை எருதையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து,
௪ ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசல்முன்பாகச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரினாலே கழுவி,
௫ வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு, ஆரோனுக்கு உள்சட்டையையும் ஆசாரிய சால்வையின் அங்கியையும் ஆசாரிய சால்வையையும் மார்ப்பதக்கத்தையும் தரித்து, அவனுக்கு ஆசாரிய சால்வையின் விசேதமான கச்சையைக் கட்டி,
௬ அவன் தலையிலே பாகையைப் போட்டு, பரிசுத்த கிரீடத்தைப் பாகையிலே தரித்து,
௭ ¶ அபிஷேகத்தெண்ணெயை வாங்கி, அவன் தலையின்மேலே வார்த்து, அவனை அபிஷேகம்பண்ணி,
௮ ¶ பிற்பாடு அவன் குமாரரைச் சேரப்பண்ணி, ஆசாரிய ஊழியம் அவர்களுக்கு நித்தியகட்டளையாக இருக்கும்படிக்கு அவர்களுக்குச் சட்டைகளை உடுத்து,

Digitized by Google

௯ ஆரோனையும் அவன் குமாரரையும் நடுக்கட்டுகளால் அரைக்கட்டி, இவர்களுக்குக் குல்லாக்களைப் போட்டுக் கட்டி, ஆரோனுடைய கையையும் அவன் குமாரரின் கையையும் நிரப்பி,

௰ ¶ காளை எருதை ஆசரிப்பின் கூடாரத்திற்குமுன்பாகக் கொண்டுவருவாயாக; அப்பொழுது ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளைக் காளை எருதினுடைய தலையின்மேலே வைக்கக்கடவர்கள்.

௰௧ பிற்பாடு நீ அந்தக் காளை எருதை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலண்டையிலே கர்த்தருக்குமுன்பாகக் குரல்வளை அறுத்து,

௰௨ அதின் இரத்தத்திலே கொஞ்சம் வாங்கி, உன் விரலினால் பலிபீடத்தில் கொம்புகள்மேல் இட்டு, மற்ற இரத்தத்தை எல்லாம் பலிபீடத்து அடியிலே ஊற்றி,

௰௩ குடல்களை மூடிய எல்லாக் கொழுப்பையும் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலிருக்கிற கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேலே கொளுத்திப்போட்டு,

௰௪ காளை எருதின் மாம்சத்தையும் அதின் தோலையும் அதின் சாணியையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியால் சுட்டெரிக்கக்கடவாய்; அது பாவம்போக்கும்பலி.

௰௫ ¶ அதற்குப்பிறகு அந்த ஆட்டுக்கடாக்களில் ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.

௰௬ பிற்பாடு நீ அதைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்தைப் பிடித்து, பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

௰௭ ஆட்டுக்கடாவை அதின் சந்து சந்தாய்த் துண்டித்து, அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் கழுவி, அவைகளை அந்தத் துண்டங்களின்மேலும் அதின் தலையின்மேலும் வைத்து,

௰௮ ஆட்டுக்கடாவை முழுவதும் பலிபீடத்தின்மேல் கொளுத்திப்போடுவாயாக; அது கர்த்தருக்கான சர்வாங்க தகனபலி; அது ஆற்றுகிற வாசனையும் கர்த்தருக்கான தகனமுமாயிருக்கும்.

௰௯ ¶ அதற்குப்பிறகு நீ மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.

௨௰ பிற்பாடு நீ அதைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் வாங்கி, ஆரோனின் வலதுகாது மடலிலும் அவன் குமாரரின் வலதுகாது மடலிலும் அவர்கள் வலதுகையினுடைய பெருவிரலின்மேலும் அவர்கள் வலதுகாலினுடைய பெருவிரலின்மேலும் இட்டு, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,

௨௰௧ பலிபீடத்தின்மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேக எண்ணெயிலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனும் அவன் வஸ்திரங்களும் அவனோடேகூட அவன் குமாரரும் அவர்கள் வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படிக்கு, அவன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும் அவன் குமாரர்மேலும் அவர்கள் வஸ்திரங்கள்மேலும் தெளித்து,

௨௰௨ அந்த ஆட்டுக்கடாக்கள் நிரப்புதலின் ஆட்டுக்கடாவானபடியினாலே, அதிலிருக்கும் கொழுப்பையும், வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலிருக்கிற கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும்,

௨௰௩ கர்த்தருக்குமுன்பாக வைத்திருக்கிற புளிப்பில்லாத அப்பங்களின் கூடையில் ஒரு அப்பத்தையும், எண்ணெய் அப்பமாகிய ஒரு அதிரசத்தையும், ஒரு அடையையும் எடுத்து,

௨௰௪ அவைகளை எல்லாம் ஆரோனின் உள்ளங்கைகள்மேலும் அவன் குமாரரின் உள்ளங்கைகள்மேலும் வைத்து, அவைகளைக்

Digitized by Google

கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டப்படு
கிற காணிக்கையாக அசைவாட்டி,
௨௫ பிற்பாடு அவைகளை அவர்கள் கைக
ளிலெடுத்து, பலிபீடத்தின்மேலே சர்வாங்
கதகனபலியின்மீதில் வைத்து, கர்த்தருக்
குமுன்பாக ஆற்றுகிற வாசனையாகக் கொ
ளுத்திப்போடக்கடவாய்; அது கர்த்தருக்
கான தகனம்.
௨௬ ஆரோனின் கைகளை நிரப்புதலின்
ஆட்டுக்கடாவிலே நீ மார்க்கண்டத்தை
எடுத்து, அதைக் கர்த்தருக்குமுன்பாக
அசைவாட்டக்கடவாய்; அது உன் பங்கா
யிருக்கும்.
௨௭ ஆரோனின் கைகளையும் அவன் குமார
ரின் கைகளையும் நிரப்புதலின் ஆட்டுக்கடா
விலே அசைவாட்டப்படுகிற மார்க்கண்
டத்தையும் ஏறெடுத்து, படைக்கப்படுகிற
முன்னம்தொடையையும் பரிசுத்தமாக்கு
வாயாக.
௨௮ இஸ்ரவேல் புத்திரர் பலியிடுகிறதி
லே அப்படிக்கொத்தவைகள் நித்தியகட்
டளையாக ஆரோனையும் அவன் குமாரரை
யும் சேர்வதாக; ஏனெனில் அது ஏறெடுக்
கிற படைப்பு; இஸ்ரவேல் புத்திரருடைய
சமாதானபலிகளிலே ஏறெடுக்கப்படும்
அவர்களுடைய படைப்புக் கர்த்தருடை
யது.
௨௯ ¶ ஆரோனுக்கிருக்கிற பரிசுத்த வஸ்தி
ரங்களை அவனுக்குப் பிற்பாடு அவன் குமா
ரர் உடுத்து, அபிஷேகம்பண்ணப்படவும்,
அவர்கள் கைகள் நிரப்பப்படவும், அவை
கள் இவர்களைச் சேர்வதாக.
௩௰ பரிசுத்த ஸ்தலத்தில் ஆராதனைசெய்ய
ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்கத்
தக்கதாக, அவன் குமாரரில் அவன் பட்
டத்திற்கு வருகிற ஆசாரியன் அவைகளை
ஏழுநாள்மட்டும் உடுத்துக்கொள்ளக்கட
வன்.
௩௧ கைகளை நிரப்புதலின் ஆட்டுக்கடா
வை நீ எடுத்து, அதின் மாம்சத்தைப் பரி
சுத்த இடத்தில் வேவிப்பாயாக.
௩௨ அந்த ஆட்டுக்கடாவின் மாம்சத்தை
யும், கூடையிலிருக்கிற அப்பத்தையும்,
ஆரோனும் அவன் குமாரரும் ஆசரிப்புக்
கூடாரத்தின் வாசலிலே புசிக்கக்கடவர்
கள்.
௩௩ ஏனெனில் அவர்களுடைய கைகளை
நிரப்பவும், அவர்களைப் பரிசுத்தம்பண்ண
வும், அதினாலே பாவநிவிர்த்தி செய்யப்பட்
டது; அந்நியனோவெனில் அவைகளிலே
புசிக்கவேண்டாம்; ஏனெனில் அவைகள்
பரிசுத்தம்.
௩௪ கைகளை நிரப்புதலின் மாம்சத்திலும்
அப்பத்திலும் ஏதாகிலும் விடியற்காலம்
மட்டும் மீந்திருந்ததேயானால், அதை அக்
கினியாலே சுட்டெரிப்பாயாக; அது புசிக்
கப்படவேண்டாம்; ஏனெனில் அது பரி
சுத்தம்.
௩௫ ¶ இந்தப்பிரகாரமாக நீ ஆரோனுக்
கும் அவன் குமாரருக்கும் நாம் உனக்குக்
கற்பித்தபடி எல்லாம் செய்வாயாக; நீ
ஏழுநாள்மட்டும் அவர்கள் கைகளை நிரப்பி,
௩௬ பாவநிவிர்த்திக்காக ஒவ்வொருநாளில்
ஒவ்வொரு காளை எருதைப் பாவம் போ
க்கும் பலியாக்கி, பலிபீடத்தையும் பாவ
நிவிர்த்தியை அதற்காகச் செய்கிறதினாலே
பாவமற்றதாக்கி, அதைப் பரிசுத்தமாக்கும்
படிக்கு அதை அபிஷேகம் பண்ணுவா
யாக.
௩௭ ஏழுநாள்மட்டும் பலிபீடத்திற்காகப்
பாவநிவிர்த்தியைப் பண்ணி, அதைப் பரி
சுத்தமாக்கக்கடவாய்; பலிபீடம் பரிசுத்
தத்திற்குப் பரிசுத்தமாய் இருப்பது; பலி
பீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்த
மாயிருப்பதாக.
௩௮ ¶ பலிபீடத்தின்மேல் நீ பலியிடவே
ண்டியதேதெனில், எப்பொழுதும் ஒவ்
வொரு நாளிலே ஒரு வயதான இரண்டி
ண்டு ஆட்டுக்குட்டிகள்தானே.
௩௯ ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும்
மற்ற ஆட்டுக்குட்டியை அந்திநேரமான
வேளையிலும் பலியிடுவாயாக.

Digitized by Google

௪௰ ஒரு மரக்காலிலே பத்திலொரு பங்கானதும், இடித்து வடிக்கப்பட்ட கால்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லியமாவையும், திராட்சப்பழ இரசத்திலே கால்படியாகிய ஒரு வார்த்தலையும், ஒரு ஆட்டுக்குட்டிக்காகப் படைத்து,

௪௧ மற்ற ஆட்டுக்குட்டியை அந்திநேரமாகிற வேளையிலே பலியிடுகிறபொழுது, காலையில் படைத்த காணிக்கைக்கும் அதின் வார்த்தலுக்கும் ஒத்த பிரகாரமாக அதை ஆற்றுகிற வாசனைக்காகச் செய்யக்கடவாய்; அது கர்த்தருக்கான தகனம்.

௪௨ நாம் உன்னுடனே பேச உங்களைச் சந்திக்கப்போகிற தானமாகிய ஆசரிப்புக்கூடாரத்தினுடைய வாசலென்ற கர்த்தரின் சந்நிதியிலே, இவைகள் உங்கள் தலைமுறை தலைமுறையாக எப்பொழுதும் செலுத்தப்படவேண்டிய சர்வாங்க தகனபலிகள்.

௪௩ *அங்கே இஸ்ரவேல் புத்திரரைச் சந்திப்போம்; அந்த ஸ்தலம் நம்முடைய மகிமையினாலே பரிசுத்தமாக்கப்படும்.

*௨ மோ. ௨௰. ௨௪.

௪௪ நாம் ஆசரிப்பின் கூடாரத்தையும் பலிபீடத்தையும் பரிசுத்தமாக்கி, ஆரோனையும் அவன் குமாரரையும் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படிக்குப் பரிசுத்தமாக்கி,

௪௫ இஸ்ரவேல் புத்திரரின் நடுவே வாசம்பண்ணி, அவர்களுக்குப் பராபரனாய் இருப்போம்.

௪௬ தங்கள் நடுவே நாம் வாசம்பண்ணும்படிக்கு, தங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாம் தங்கள் பராபரனாகிய கர்த்தரென்று அறிவார்களாக; நாம் அவர்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௰. அதிகாரம்.

தூபம்காட்டுகிறதற்கு *ஒரு தூபபீடத்தையும் சீத்திம் மரங்களினாலே உண்டாக்குவாயாக. *௨ மோ. ௩௭. ௨௫.

௨ அது ஒருமுழ நீளமும் ஒருமுழ அகலமுமான சதுரமும், இரண்டுமுழ உயர்சியும், அதின் கொம்புகள் அதனோடே ஏகமுமாயிருப்பதாக.

௩ நீ அதையெல்லாம் அதின்மேலே பலகையையும் சுற்றிலுமிருக்கும் அதின் பக்கங்களையும் அதின் கொம்புகளையும் சுத்தப்பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை உண்டுபண்ணி,

௪ அதினுடைய திரணையின்கீழ் அதின் இரண்டு பக்கங்களிலும் அதைச் சுமக்கும் வாரைகளின் இடங்களாகிற இவ்விரண்டு பொன்வளையங்களை அதற்குப் பக்கத்தின் இரண்டு கோடிகள் அருகே உண்டாக்கி,

௫ அதின் வாரைகளையும் சீத்திம் மரங்களாலே பண்ணி, பொன்தகட்டால் மூடக்கடவாய்.

௬ சாட்சியினுடைய பெட்டியின் முன்னேயும் சாட்சியின்மேல் இருக்கிறதும் நாம் உன்னைச் சந்திப்பதுமான கிருபாசன மூடியின்முன்னேயும் இருக்கும் திரைக்குமுன்பாக அதை வைக்கக்கடவாய்.

௭ ஆரோன் காலைமாறு விளக்குகளைச் சீர்ப்படுத்துகிறபொழுதும், அதின்மீதில் சுகந்தவர்க்கங்களினாலே தூபம் காட்டுவானாக; அந்திநேரமாகிற வேளையிலே விளக்குகளை ஏற்றுகிறபொழுதும், அதின்மீதில் கந்தவர்க்கங்களினாலே தூபம் காட்டக்கடவன்.

௮ அது எப்பொழுதும் உங்கள் தலைமுறை தலைமுறையாகக் கர்த்தருக்கு முன்பாகக் காட்டப்படும் தூபம்.

௯ அதின்மீதில் அந்நிய தூபவர்க்கத்தையாகிலும், ஒரு தகனபலியையாகிலும், காணிக்கையையாகிலும், ஏறப்பண்ணீர்களாக; அதின்மேல் ஒரு வார்த்தலையும் வார்த்தீர்களாக.

௰ வருஷத்தில் ஒருமுறை ஆரோன் அதின் கொம்புகளின்மேலே பாவங்களை நிவிர்த்தி பண்ணும் பலியின் இரத்தத்தாலே பாவநிவிர்த்தி பண்ணுவானாக; அப்படி அவன் உங்கள் தலைமுறை தலைமுறையாக வருஷத்தில் ஒருமுறை பாவநிவிர்த்திபண்ணுவானாக; அது கர்த்தருக்குப் பரிசுத்தத்திற்குப்

Digitized by Google

பரிசுத்தமாயிருக்குமென்றார்.

௰௧ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௨ நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படியே கணக்குப் பார்க்கிறபொழுது, அவர்களை எண்ணுகையில் அவர்களுக்குள்ளே ஒரு வாதை உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவர் தம் தம் ஆத்துமாவிற்காகக் கர்த்தருக்கு மீட்கும்பொருளைக் கொடுக்கக்கடவர்கள்.

௰௩ எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வருகிறவன் எல்லாம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி அரைச் சேக்கலைக் கொடுக்கவேண்டும்; சேக்கலானது இருபது கேரா; அரைச் சேக்கலே கர்த்தருக்குச் செலுத்தப்படுவது.

௰௪ எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வருகிற இருபது வயதுமுதல்கொண்டு மேல்பட்டவனெல்லாம் அதைக் கர்த்தருக்குச் செலுத்தவேண்டும்.

௰௫ உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்திபண்ணும் கட்டளையை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்துகையில், அரைச் சேக்கலுக்கு ஐசுவரியவான் ஏறக்கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் குறையக் கொடுக்கவும் வேண்டாம்.

௰௬ பாவநிவிர்த்தியின் அந்தத் திரவியத்தை நீ இஸ்ரவேல் புத்திரர்கையில் வாங்கி, அதை ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்குக் கொடுப்பாயாக; அப்படியே உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தியாகும்படிக்கு, அது கர்த்தருக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரின் நினைப்புக்காக இருக்குமென்றார்.

௰௭ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௮ *கழுவுகிறதற்கு நீ வெண்கலத்தால் ஒரு தொட்டியையும் வெண்கலத்தால் அதின் புரிமணையையும் உண்டாக்கி, அதை ஆசரிப்பின் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக. *௨ மோ. ௩௮. அ: ௪௰. ௩௰.

௰௯ அதினிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்.

௨௰ அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், அல்லவென்று கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலிபீடத்தண்டைக்கு ஆராதனைசெய்யவும் சேரும்பொழுதும், அவர்கள் சாவாதபடிக்குத் தண்ணீரினாலே தங்களைக் கழுவக்கடவர்கள்.

௨௧ அவர்கள் சாவாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் தாமே கழுவக்கடவர்கள்; அது அவனுக்கும், தலைமுறை தலைமுறையாக இருக்கும் அவன் வித்தாருக்கும் நித்தியகட்டளை என்றார்.

௨௨ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௩ நீ மேன்மைத்தரமான சுகந்தவர்க்கங்களாகிற தானாய் வடிந்த வெள்ளைப்போளத்திலே, பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலாலே ஐந்நூறு சேக்கலிடையையும், சுகந்த கறுவாப்பட்டையிலே பாதி அம்மாத்திரமான இருநூற்றைம்பது சேக்கலிடையையும், சுகந்த வசம்பில் இருநூற்றைம்பது சேக்கலிடையையும்,

௨௪ காசியாவில் ஐந்நூறு சேக்கலிடையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு படியையும், வாங்கிக்கொண்டு,

௨௫ அதனால் தயிலக்காரன் வேலையாகக் கூட்டப்பட்ட பரிமளத்தயிலமான *பரிசுத்த அபிஷேக எண்ணெயை உண்டுபண்ணுவாயாக; அது பரிசுத்த அபிஷேக எண்ணெயாயிருக்கக்கடவது. *௨ மோ. ௩௭. ௨௯.

௨௬ அதினாலே நீ ஆசரிப்பின் கூடாரத்தையும், சாட்சியின் பெட்டியையும்,

௨௭ மேசையையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், குத்துவிளக்கையும், அதின் முட்டுகளையும் தூபங்காட்டும் பீடத்தையும்,

௨௮ தகனபலிபீடத்தையும், அதினுடைய

Digitized by Google

எல்லா முட்டுகளையும், தொட்டியையும், அதின் புரிமணையையும், அபிஷேகம்பண்ணி,

௨௯ அவைகள் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பரிசுத்தமாக்குவாயாக; அவைகளைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருப்பது.

௩௰ நீ ஆரோனையும் அவன் குமாரரையும் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படிக்கு அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தமாக்குவாயாக.

௩௧ இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதாவது: இது உங்கள் தலைமுறை தலைமுறையாக நமக்குப் பரிசுத்த அபிஷேக எண்ணெயாயிருப்பது.

௩௨ அது மனிதனுடைய மாம்சத்தின்மேல் வார்க்கப்படவேண்டாம்; அவர்கள் அது செய்யப்பட்ட திட்டத்திற்கொத்தவிதமாகச் செய்யவும்வேண்டாம்; அது பரிசுத்தமானது; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக.

௩௩ அதைப்போலொத்த தயிலத்தைக் கூட்டுகிறவனும், அதிலெடுத்து அந்நிய வஸ்துவின்மேல் வார்க்கிறவனும், தன் சனத்திலிராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவனென்று சொல்லென்றார்.

௩௪ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ கந்தவர்க்கங்களாகிய வடிந்த வெள்ளைப்போளமும் குங்கிலியமும் அல்பான் பிசினுமென்ற கந்தவர்க்கங்களையும் சுத்தமான குங்கிலியத்தையும் ஒன்றுக்கொன்று சரிஇடையாக வாங்கிக்கொண்டு,

௩௫ அதைத் தயிலக்காரன் வேலையாகப் பரிமளமேற்றி, துப்புரவும் பரிசுத்தமுமான *தூபவர்க்கமாக்கி, *௨ மோ. ௩௭. ௨௯.

௩௬ அதிலே சிலவற்றை இடித்துப் பொடியாக்கி, நாம் உன்னைச் சந்திக்கப்போகிற ஆசரிப்பின் கூடாரத்திலிருக்கும் சாட்சிக்கு முன்பாக வைப்பாயாக; உங்களுக்கு அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கக்கடவது.

௩௭ இந்தத் தூபவர்க்கத்தை நீ செய்கிற திட்டத்திற்கு ஒத்தவிதமாக நீங்கள் உங்களுக்குச் செய்யவேண்டாம், அது உனக்குக் கர்த்தருக்கென்று பரிசுத்தமாயிருப்பதாக.

௩௮ அதைப்போலொத்ததை மோப்பதற்காகச் செய்கிறவன் தன் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவன் என்றார்.

௩௰௧ அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ இதோ நாம் யூதாவின் கோத்திரத்திலே ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெத்சாலேயேலைப் பேர்சொல்லி அழைத்து,

௩ விநோதமான வேலைகளை யோசித்துப் பண்ணுகிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்,

௪ இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதித்துவைக்கிறதற்கும், மரத்தில் நேர்த்தியான வேலைசெய்கிறதற்கும், சகலவித வேலையைப் பண்ணுகிறதற்கும்,

௫ ஞானமும் உணர்வும் அறிவும் சகலவித வேலைக்கான வித்தையும் அவனுக்குண்டாக, அவனைப் பராபரனுடைய ஆவியினாலே நிரப்பினேம்.

௬ இதோ நாம் தாண் கோத்திரத்திலே அகிசாமாகின் குமாரனாகிய அகோலியப்பை அவனோடே கூட்டி, ஞானமான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தைக் கொடுத்தோம்; நாம் உனக்குக் கற்பித்ததை எல்லாம் அவர்கள் செய்வார்கள்.

௭ ஆசரிப்பின் கூடாரத்தையும் சாட்சியின் பெட்டியையும் அதின்மேல் இருக்கும் கிருபாசனமூடியையும் கூடாரத்தினுடைய எல்லா முட்டுகளையும்,

௮ மேசையையும் அதின் முட்டுகளையும்

Digitized by Google

சுத்தமான குத்துவிளக்கையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தூபபீடத்தையும்,

௯ தகனபலிபீடத்தையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தொட்டியையும் அதின் புரிமணையையும்,

௧௦ ஆராதனையின் சீலைகளையும் ஆசாரிய ஊழியம் செய்கிறதற்கான ஆசாரியனாகிய ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும்,

௧௧ அபிஷேகத்தெண்ணெயையும் பரிசுத்த ஸ்தலத்திற்கான சுகந்தவர்க்கங்களாகிய தூபவர்க்கத்தையும் அவர்கள் நாம் உனக்குக் கற்பித்தபடி எல்லாம் செய்வார்களென்றார்.

௧௨ ¶ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

௧௩ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், நம்முடைய ஓய்வுநாள்களையே கைக்கொள்ளக்கடவீர்கள்; ஏனெனில் நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று நீங்கள் அறிவதற்கு அது உங்கள் தலைமுறை தலைமுறையாக நமக்கும் உங்களுக்கும் நடுவான அடையாளம்.

௧௪ ஆகையால் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுவீர்களாக; ஏனெனில் அது உங்களுக்குப் பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; அதிலே வேலை செய்கிற எந்த ஆத்துமாவும் தன் சனத்தின் நடுவிலிராதபடிக்கு அறுப்புண்பதாக.

௧௫ ஆறுநாள் வேலை செய்யப்படுவதாக; ஏழாம் நாளோவெனில் வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தம்; ஓய்வுநாளிலே வேலைசெய்கிறவன் எவனும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௧௬ ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைகளில் ஓய்வுநாளை நித்திய உடம்படிக்கையாக ஆசரிக்கும்படிக்கு, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள்.

௧௭ அது என்றைக்கும் நமக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவான அடையாளம்; ஏனெனில் ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்.

௧௮ ¶ அவர் சீனாய்பர்வதத்திலே மோசேயோடே பேசித் தீர்ந்தபிற்பாடு, அவர் அவனுக்குப் பராபரனுடைய விரலினாலே எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளைக் கொடுத்தார்.

௩௨. அதிகாரம்.

மோசே பர்வதத்திலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதைச் சனம் கண்டபொழுதோவெனில், சனம் ஆரோனண்டையிலே கூட்டமாகக் கூடி, அவனுடனே, நீர் எழுந்து, எங்கள்முன் நடந்துபோகிற தேவர்களை *எங்களுக்கு உண்டுபண்ணும்; ஏனென்றால் எங்களை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின அந்த மோசே என்கிறவருக்கு என்ன சம்பவித்ததென்று அறியோம் என்றார்கள். *௫ மோ. ௯. ௭.

௨ அப்பொழுது ஆரோன் அவர்களுடனே, உங்கள் பெண்சாதிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளிலிருக்கிற பொன் கடுக்கன்களைக் கழற்றி, என்னண்டைக்குக் கொண்டுவாருங்கள் என்றான்.

௩ அப்பொழுது சனமெல்லாம் தங்கள் காதுகளிலிருந்த பொன்கடுக்கன்களைக் கழற்றி, ஆரோனண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

௪ அவன் அவர்கள் கையிலே அதை வாங்கி, ஒரு எழுத்தாணியினாலே குறிபோட்டு, வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியை அதினால் உண்டுபண்ணினான்; அப்பொழுது அவர்கள், இஸ்ரவேலே இவைகள் உன்னை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின உன்னுடைய தேவர்கள் என்றார்கள்.

Digitized by Google

௫ ஆரோன் அதைக் கண்டு, அதற்கு முன்
பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்
கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான்.
௬ மறுநாள் அவர்கள் அதிகாலமே எழுந்
திருந்து, சர்வாங்க தகனபலிகளைப் பலி
யிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்
கள்; பிற்பாடு சனம் புசிக்கிறதற்கும் குடிக்
கிறதற்கும் உளுக்கார்ந்து, விளையாடுகிறதற்
கும் எழுந்திருந்தார்கள்.
௭ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே
சொன்னதாவது: இறங்கிப் போ; ஏனெ
னில் நீ எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்
பண்ணின உன்னுடைய சனம் தன்னைக்
கெடுத்துவிட்டது.
௮ நாம் தங்களுக்குக் கற்பித்த வழியைச்
சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள்
வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டி
யைத் தங்களுக்குண்டாக்கி, அதைப் பணி
ந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு, இஸ்ர
வேலே இவைகள் உன்னை எகிப்துதேசத்
திலிருந்து ஏறிவரப்பண்ணின உன்னுடைய
தேவர்கள் என்றார்களென்று சொல்லி,
௯ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
சொன்னதேதெனில், இந்தச் சனத்தைப்
பார்த்தோம்; இதோ, அது கடினக்கழுத்
துள்ள சனம்.
௰ இப்பொழுதும் நாம் அவர்களை அழிக்
கும்படிக்கு, நமது கோபம் அவர்களுக்கு
விரோதமாக எரிய, நம்மை விட்டுவிடு;
அப்பொழுது * உன்னைப் பெரிய சாதியாக்
குவோம் என்றார். * ௪ மோ. ௰௪. ௰௨.
௰௧ ¶ *ஆனால் மோசே தன் பராபரனாகிய
கர்த்தருடைய முகத்தை நோக்கிக் கெஞ்
சிச் சொன்னதாவது: கர்த்தாவே, தேவரீர்
மகா பலத்தினாலும் வல்லமையான கையி
னாலும் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்
பண்ணின உம்முடைய சனத்திற்கு விரோ
தமாக உம்முடைய கோபம் எரிவானேன்.
*௪ மோ. ௰௪. ௰௩.
௰௨ அவர்களை மலைகளிலே கொன்றுபோ
டவும், அவர்களைப் பூமியின்மேல் இராத
படிக்கு நிர்மூலம்பண்ணவும், அவர்களைத்
தீமைக்கென்றே புறப்படப்பண்ணினாரெ
ன்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்மு
டைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத்
திரும்பி, உமது சனத்திற்குத் தீங்குசெய்
யாதபடிக்குப் பரிதாபமாய் இரும்.
௰௩ உம்முடைய ஊழியக்காரராகிய ஆபி
ரகாமையும் இசாக்கையும் இஸ்ரவேலையும்
நினைத்தருளும்; உங்கள் வித்தை வானத்
தின் நட்சத்திரங்கள் அத்தனையாகப் பெரு
கப்பண்ணி, நாம் சொன்ன இந்தத் தேசத்
தை எல்லாம் உங்கள் வித்திற்கு, அதை
என்றைக்கும் சுதந்தரிக்கும்படிக்குக் கொ
டுப்போமென்று உம்மைக்கொண்டு அவர்
களுக்கு ஆணையிட்டு, அவர்களோடே
சொன்னீரே என்றான்.
௰௪ அப்பொழுது கர்த்தர் தமது சனத்திற்
குச் செய்வோமென்று சொன்ன தீங்கைச்
செய்யாதபடிக்குப் பரிதாபப்பட்டார்.
௰௫ ¶ அப்பொழுது மோசே திரும்பிக்
கொண்டு பர்வதத்திலிருந்து இறங்கிப்போ
னான்; சாட்சியின் இரண்டு பலகைகள்
அவன் கையிலிருந்தன; அவைகள் இருபு
றங்களிலும் இந்தப்பக்கமும் அந்தப்பக்க
மும் எழுதப்பட்ட பலகைகளாயிருந்தன.
௰௬ *அந்தப் பலகைகள் பராபரனுடைய
செய்கையும், அவைகளிலே பதிந்த எழு
த்து பராபரனுடைய எழுத்துமாயிருந்தன.
* உ மோ. ௩௧. ௰௮.
௰௭ சனம் கெம்பீரத்திலே கூப்பிடுகிற
சத்தத்தை *யோசுவா கேட்டு மோசேயோ
டே, யுத்தத்தின் இரைச்சல் பாளயத்தில்
உண்டாயிருக்கின்றதென்றான். * உ மோ.
௨௪. ௰௩, ௰௪.
௰௮ அவனோவென்றால் அது செயித்துக்
கூப்பிடுகிறவர்களின் சத்தமும் அல்ல, மு
றிந்து கூப்பிடுகிறவர்களின் சத்தமும் அல்
ல, பாடுகிறவர்களின் சத்தத்தை நான் கேட்
கிறேனென்றான்.
௰௯ அவன் பாளயத்திற்குச் சமீபித்து,
கன்றுக்குட்டியையும் கூத்துகளையும் காண்

Digitized by Google

கிறபொழுது சம்பவித்ததேதெனில், மோ
சே கோபம் மூண்டவனாகி, தன் கையில்
இருக்கிற பலகைகளைப் பர்வதத்தடியிலே
எறிந்து உடைத்துப்போட்டு,
௨௰ அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்
குட்டியை எடுத்து, அக்கினியில் எரித்
துப்போட்டு, அதைப் பொடியாகும்மட்
டும் அரைத்து, *தண்ணீரின்மேல் தூவி,
இஸ்ரவேல் புத்திரருக்குக் குடிக்கக்கொடுத்
தான். *௫ மோ. ௯. ௨௧.
௨௧ ¶ மோசே ஆரோனோடே, நீ இந்தச்
சனத்தின்மேலே பெரும் பாவத்தைச் சுமக்
கப்பண்ண, அது உனக்கு என்ன செய்த
தென்றான்.
௨௨ அப்பொழுது ஆரோன் சொன்னதா
வது: என் ஆண்டவனுக்குக் கோபம் மூளா
திருப்பதாக; இந்தச் சனத்தை நீர் அது
பொல்லாததென்று அறிவீர்.
௨௩ அவர்கள் என்னோடே, எங்கள் முன்
நடந்துபோகிற தேவர்களை எங்களுக்கு
உண்டுபண்ணும்; ஏனெனில் எங்களை
எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணி
ன அந்த மோசே என்கிறவருக்கு என்ன
சம்பவித்ததென்று அறியோம் என்றார்கள்.
௨௪ அப்பொழுது நான் அவர்களோடே, எ
வர்களுக்குப் பொன் உடைமை உண்டோ,
அவர்கள் அதைக் கழற்றி, எனக்குத் தரக்
கடவர்கள் என்றேன்; அதை அக்கினியி
லே போட்டேன்; அதனால் இந்தக் கன்
றுக்குட்டி உண்டாயிற்றென்றான்.
௨௫ ¶ சனம் நிருவாணமானதென்றும்,
அதற்கு விரோதமாய் எழும்புகிறவர்க
ளுக்கு முன்பாக அதற்கு இலச்சை வர
ஆரோன் அதை நிருவாணப்படுத்தினான்
என்றும் மோசே பார்த்து,
௨௬ அவன் பாளயத்தின் வாசலிலே நின்று
கொண்டு, எவர்கள் கர்த்தருடையவர்க
ளோ அவர்கள் என்னைச் சேரக்கடவர்கள்
என்றான்; அப்பொழுது இலேவியின் புத்
திரரெல்லாரும் அவனண்டையிலே வந்து
கூடினார்கள்.
௨௭ அவர்களோடே அவன் சொன்னதா
வது: நீங்கள் அவனவன் தன் பட்டயத்
தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு,
பாளயத்தில் வாசலுக்குவாசல் கடந்து தி
ரிந்து, அவனவன் தன் சகோதரனையும் அ
வனவன் தன் சிநேகிதனையும் தனக்கடுத்த
வனையும் கொன்றுபோடுங்களென்று இஸ்
ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகி
றார் என்றான்.
௨௮ இலேவியின் புத்திரர் மோசே சொன்
னபடி செய்தார்கள்; சனத்தில் அந்நாளி
லே ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்
தார்கள்.
௨௯ ஏனென்றால், கர்த்தர் இன்று உங்கள்
மேல் ஆசீர்வாதத்தைக் கட்டளை இடும்
படிக்கு, நீங்கள் இந்நாளிலே அவனவன்
தன் மகனுக்கும் தன் சகோதரனுக்கும்
விரோதமாகிறதினாலே, கர்த்தருக்கு உங்
கள் கைகளை நிரப்புங்களென்று மோசே
சொல்லியிருந்தான்.
௩௰ ¶ மறுநாளிலே சம்பவித்ததேதெனில்,
மோசே சனத்துடனே, நீங்கள் கன பாதக
மான பாவம் செய்தீர்கள்; இப்பொழுதும்
நாம் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி அடைய
லாமோவென்று கர்த்தரண்டைக்குப் போ
ய் ஏறுவேன் என்றான்.
௩௧ அப்படியே மோசே கர்த்தரண்டைக்
குத் திரும்பிச் சொன்னதாவது: ஆ, இந்தச்
சனம் கன பாதகமான பாவம்செய்து,
தங்களுக்குப் பொன்தேவர்களை உண்டாக்
கினார்கள்.
௩௨ இப்பொழுதும் அவர்கள் பாவத்தை
மன்னித்தருளும்; இல்லாவிட்டால் என்
னை நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்தி
லே கிறுக்கிப்போடுமென்றான்.
௩௩ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே
சொன்னதாவது: யார் நமக்கு விரோத
மாய்ப் பாவம்செய்கிறானோ அவனை நமது
புஸ்தகத்திலே கிறுக்கிப்போடுவோம்.
௩௪ இப்பொழுதும் நீ போய், நாம் உ
னக்குச் சொன்ன இடத்திற்குச் சனத்தை

Digitized by Google

அழைத்துப்போ; இதோ நம்முடைய தூ
தன் உனக்குமுன்பாக நடப்பான்; ஆனால்
நாம் விசாரிக்கும் நாளிலே அவர்களுடைய
பாவத்தை அவர்களிடத்திலே விசாரிப்
போம் என்றார்.
௩௫ அப்படியே சனம் உண்டுபண்ணின
தாகிய ஆரோனுடைய செய்கையான கன்
றுக்குட்டியின் நிமித்தம் கர்த்தர் அவர்களை
வாதித்தார்.

௩௩. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:
நீயும் எகிப்துதேசத்திலிருந்து நீ ஏறிவரப்
பண்ணின சனமுமாய் இவ்விடத்தைவிட்
டு, உன் வித்திற்குக் கொடுப்போமென்று
நாம் ஆபிரகாமுக்கும், இசாக்குக்கும், யாக்
கோபுக்கும் ஆணையிட்ட பாலும் தேனும்
ஓடுகிற தேசத்திற்குப் போயேறுங்கள்.
௨ நாம் ஒரு தூதனை உனக்குமுன்பாக அ
னுப்பி, கானானியனையும், எமோரியனையும்,
ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனை
யும், எபூசியனையும் துரத்திவிடுவோம்.
௩ ஆனால் வழியிலே நாம் உன்னை நிர்மூ
லம்பண்ணாதபடிக்கு, நாம் உன் நடுவே
நடக்கமாட்டோம்; ஏனெனில் நீங்கள் கடினக்
கழுத்துள்ள சனமென்றார்.
௪ ¶ தீங்கான இந்த வார்த்தையைச் சனம்
கேட்டபொழுது, ஒருவரும் தங்கள் ஆபர
ணங்களைப் போட்டுக்கொள்ளாமல் துக்
கித்துக்கொண்டிருந்தார்கள்.
௫ ஏனென்றால், நீங்கள் கடினக்கழுத்
துள்ள சனம்; நாம் ஒரு நிமிஷத்திலே உன்
நடுவிலே எழும்பினால் உன்னை நிர்மூலம்
பண்ணுவோம்; இப்பொழுதும் நாம் உ
னக்கு என்னசெய்யவேண்டுமென்று அறி
யும்படிக்கு, நீ போட்டிருக்கிற உன் ஆபர
ணங்களைக் கழற்றிப்போடென்று இஸ்ர
வேல் புத்திரருக்குச் சொல்லென்பதை,
கர்த்தர் மோசேயோடே சொல்லி இருந்
தார்.
௬ ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் ஓரேப்
பர்வதத்திற்கு முன்பாகத் தங்கள் ஆபர
ணங்களைக் கழற்றிப்போட்டார்கள்.
௭ ¶ மோசே கூடாரத்தைப் பேர்த்து, அ
தைப் புறம்பே பாளயத்திற்குத் தூரமாகப்
போட்டுக்கொண்டு, அதை ஆசரிப்பின்
கூடாரமென்றான்; ஆனதுகொண்டு கர்த்த
ரைக் கேட்பவனெல்லாம் பாளயத்திற்குப்
புறம்பான ஆசரிப்பின் கூடாரத்திற்குப்
புறப்பட்டுப் போவான்.
௮ மோசே கூடாரத்திற்குப் புறப்பட்டுப்
போகும்பொழுது, சனமெல்லாம் எழுந்தி
ருந்து, அவரவர் தம்தம் கூடாரத்தின் வா
சல்படியில் நின்று, அவன் கூடாரத்திற்கு
உட்படுமட்டும், அவன் பிறகே பார்த்துக்
கொண்டிருப்பார்கள்.
௯ ¶ மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக்
கையில் மேகத்தூண் இறங்கி, கூடாரத்
தின் வாசல்படியிலே நின்றது; அங்கே
மோசேயோடே பேசினார்.
௰ சனமெல்லாம் மேகத்தூணைக் கூடாரத்
தின் வாசல்படியிலே நிற்கக் காணும்பொ
ழுது, எழுந்திருந்து அவரவர் தங்கள் கூடா
ரத்தின் வாசல்படியிலே பணிந்துகொள்ளு
வார்கள்.
௰௧ *கர்த்தர் மோசேயோடே முகமுக
மாய் ஒருவன் தன் சிநேகிதனோடே பேசு
கிறதுபோலப் பேசுவார்; பிற்பாடு இவன்
பாளயத்திற்குத் திரும்பிவருவான்; ஆனால்
நூனின் குமாரனாகிய யோசுவாவென்ற அ
வன் வேலைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்
பின் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருப்
பான். *௪ மோ. ௰௨. ௮.
௰௨ ¶ மோசே கர்த்தரோடே சொன்னதா
வது: இதோ தேவரீர் என்னோடே இந்தச்
சனத்தைப்போய் ஏறப்பண்ணென்று சொ
ன்னீர்; ஆனால் உன்னைப் பேர்சொல்லி அ
றிந்திருக்கிறேமென்றும், நம்முடைய கண்
களில் உனக்குக் கிருபை கிடைத்ததென்
றும், தேவரீர் சொல்லியிருந்தும், யாரை
என்னோடேகூட அனுப்புவீரென்பதை எ
னக்கு அறிவிக்காதிருக்கிறீர்.

Digitized by Google

௰௩ இப்பொழுதும் உம்முடைய கண்க
ளில் எனக்குக் கிருபை கிடைத்ததேயா
ளுல், உம்முடைய வழியை எனக்கு அறி
வியும்; உம்முடைய கண்களில் எனக்குக்
கிருபை கிடைக்கும்படியாக உம்மை நான்
அறியட்டும்; இந்தச் சாதி உம்முடைய
சனமென்று பாருமென்ருன்.
௰௪ அதற்கவர் நாம் உன்னை இளைப்பாறப்
பண்ணும்படிக்கு, *நம்முடைய முகம்
உனக்குமுன்பாக நடந்துபோம் என்ருர்.
*யோவா. ௰௪. ௯. கொலோ. ௧. ௰௫. எபி.
௯. ௩.
௰௫ அப்பொழுது அவன் அவரோடே
சொன்னதாவது: உம்முடைய முகம் நடந்
துபோகாதிருந்தால் எங்களை இங்கேயிருந்
து புறப்படப்பண்ணீராக.
௰௬ ஏனெனில் எனக்கும் உமது சனத்திற்
கும் உம்முடைய கண்களிலே கிருபை
கிடைத்ததென்பது எதினுல் அறியப்பட
லாம்; நீர் எங்களோடே நடந்துபோகிறதி
ளுலே அல்லவோ, அப்படியே பூமியின்மீ
துள்ள எல்லாச் சனத்திலும் நானும் உம்மு
டைய சனமும் விசேஷித்தவர்களென்று
விளங்குமென்ருன்.
௰௭ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோ
டே, நீ சொன்ன இந்த வார்த்தையின்படி
யேயும் 'செய்வோம்; ஏனெனில் நம்மு
டைய கண்களில் உனக்குக் கிருபை கி
டைத்தது; உன்னைப் பேர்சொல்லி அறிந்தி
ருக்கிறேம் என்ருர்.
௰௮ அப்பொழுது அவன் உம்முடைய
மகிமையை எனக்குக் காண்பியுமென்ருன்.
௰௯ அதற்கு அவர், நாம் நம்முடைய தயை
எல்லாம் உனக்கு முன்பாகக் கடக்கப்
பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்
குமுன்பாகக் கூறி, நாம் கிருபைவைத்த
வன்மேல் கிருபையாயிருந்து, நாம் இரக்
கம்வைத்தவன்மேல் இரக்கமாயிருப்போ
மென்று சொல்லி,
௨௰ பின்னையும் நம்முடைய முகத்தைப்
பார்க்கமாட்டாய்; ஏனெனில் ஒரு மனித
னும் நம்மைப் பார்த்து, உயிரோடிருக்கக்
கூடாதென்ருர்.
௨௧ பின்னையும் கர்த்தர் சொன்னதாவது:
இதோ, நம்மண்டையில் ஒரு இடம் இ
ருக்கின்றது, அங்கே நீ கல்மலையில் நிற்பா
யாக.
௨௨ அப்பொழுது சம்பவிப்பதேதெனில்.
நம்முடைய மகிமை கடக்கும்போது, நாம்
உன்னை அந்தக் கல்மலையின் வெடிப்பிலே
வைத்து, நாம் கடந்துபோகும்மட்டும் நம்
முடைய கரத்தினுல் உன்னை மூடுவோம்.
௨௩ பிற்பாடு நம்முடைய கரத்தை வாங்
குவோம்; அப்பொழுது நமக்குப் பின்னு
கப் பார்ப்பாய்; நம்முடைய முகமோ
வென்ருல், பார்க்கப்படக்கூடாதென்ருர்.

௩௰௪. அதிகாரம்.

,கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:
முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்
பலகைகளை இழைத்துக்கொள், நீ உடைத்
துப்போட்ட முந்தின பலகைகளிலிருந்த
வார்த்தைகளை அவைகளில் எழுதுவோம்.
௨ நீ விடியற்காலத்திற்கு ஆயத்தமாயிருந்
து, காலமே சீனுய்பர்வதத்தில் ஏறி, அங்
கே பர்வதத்தின் கொடுமுடியிலே நமக்குக்
காத்துநில்.
௩ உன்னேடேகூட ஒருவரும் ஏறவும்,
பர்வதமெங்கும் ஒருவரும் காணப்படவும்
வேண்டாம்; இந்தப் பர்வதத்திற்கு எதிராக
ஆடுமாடு மேயவும் வேண்டாமென்ருர்.
௪ ¶ அப்பொழுது மோசே முந்தினவைக
ளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை இ
ழைத்து, அதிகாலேமே எழுந்திருந்து, கர்த்
தர் தனக்குக் கற்பித்தபடியே இரண்டு கற்
பலகைகளைத் தன் கையிலே பிடித்துக்
கொண்டு, சீனுய்பர்வதத்தில் ஏறினுன்.
௫ அப்பொழுது கர்த்தர் ஒரு மேகத்திலே
இறங்கி, அங்கே அவனண்டையிலே நின்று
கொண்டு, கர்த்தருடைய நாமத்தைக் கூறி
ஞர்.
Digitized by Google
௬ கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்து

போகிறபொழுது, அவர் கூறினதாவது: அ
வர் கர்த்தர், அவர் கர்த்தர், *அவர் மனஉ
ருக்கமும் இரக்கமும் நீடியசாந்தமும் மகா
கிருபையும் உண்மையுமுள்ள பராபரன்.
*௪ மோ. ௰௪. ௰௭, ௰௮. சங். ௮௬. ௰௫: ௱௩.
௭, ௮: ௱௪௫. ௮. யோவா. ௨. ௰௩.
௭ *அவர் ஆயிரம் தலைமுறைகளுக்குக் கிரு
பையைக் காக்கிறவர்; அவர் அக்கிரமத்தை
யும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கி
றவர்; அவர் குற்றமுள்ளவனைக் குற்றமற்று
நீங்கவொட்டாமல், பிதாக்களுடைய அக்
கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும் பிள்ளைக
ளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றும்
நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிற
வரென்று கூறினார். * சங். ௱௩. ௩. மீகா. ௭.
௰௮, ௰௯.
௮ மோசே தீவிரமாகத் தரைமட்டும் கு
னிந்து பணிந்துகொண்டு,
௯ ஆண்டவரே, உம்முடைய கண்களில்
எனக்குக் கிருபை கிடைத்ததேயாகில்,
ஆண்டவர் எங்கள் நடுவிலே நடந்துபோ
வாராக; ஏனெனில் அது கடினக்கழுத்
துள்ள சனம்; நீரோவெனில் எங்கள் அக்
கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்
னித்து, எங்களைச் சுதந்தரித்துக்கொள்வீ
ராக என்றான்.
௰ ¶ அப்பொழுது அவர் சொன்னதாவது:
இதோ, நாம் உடம்படிக்கைபண்ணுகி
றோம்; பூமி எங்கும் எந்தச் சாதிகளிடத்தி
லும் சிருஷ்டிக்கப்படாதிருக்கிற அதிச
யங்களை உன்னுடைய எல்லாச் சனத்திற்
கும் முன்பாகச் செய்வோம்; நீ தங்கியி
ருக்கிற சனமெல்லாம் கர்த்தருடைய செய்
கையைப் பார்க்கப் போம்; ஏனெனில்
நாம் உன்னோடே இருந்து செய்யப்போகி
றது பயங்கரமாயிருக்கும்.
௰௧ இன்று நாம் உனக்குக் கற்பிக்கிறதை
யே கைக்கொள்; இதோ, எமோரியனையும்,
கானானியனையும், ஏத்தியனையும், பெரிசிய
னையும், ஏவியனையும், எபூசியனையும் உனக்
குமுன்பாகத் துரத்திவிடுகிறோம்.
௰௨ நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடி
உன் நடுவே கண்ணி ஆகாதபடிக்கு நீ அவர்
களோடே உடம்படிக்கை பண்ணாதபடிக்
கு எச்சரிக்கையாய் இரு.
௰௩ அவர்களுடைய பலிபீடங்களை இடித்
து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள்
தோப்புகளை வெட்டிப்போடக்கடவீர்கள்.
௰௪ ஏனெனில் அந்நிய தேவனை நீ பணிந்
துகொள்ளலாகாது; அதேனென்றால் கர்த்
தருடைய நாமம் எரிச்சலுள்ளவரென்பது;
அவர் எரிச்சலுள்ள பராபரன்.
௰௫ அந்தத் தேசத்தின் குடிகளோடே உ
டம்படிக்கைபண்ணாயாக; மற்றப்படி அ
வர்களுடைய தேவர்களின் பிறகாலே சோ
ரம்போய், அவர்கள் தேவர்களுக்குப் பலி
யிடுவார்கள்; அவர்கள் உன்னை அழைக்
கையில், நீ போய் அவர்கள் பலியிட்டதி
லே புசித்து,
௰௬ அவர்கள் குமாரத்திகளில் உன் குமார
ருக்குப் பெண்களைக் கொள்ளுவாய்; அப்
படியே அவர்கள் குமாரத்திகள் தங்கள்
தேவர்களின் பிறகாலே சோரம்போகை
யில் உன் குமாரரையும் தங்கள் தேவர்க
ளின் பிறகாலே சோரம்போகப்பண்ணு
வார்கள்.
௰௭ வார்ப்பிக்கப்பட்ட தேவர்களை உனக்
குண்டாக்காயாக.
௰௮ ¶ நீ புளிப்பில்லாத அப்பங்களின்
பண்டிகையைக் கைக்கொண்டு, நாம் உ
னக்குக் கற்பித்தபடி ஆபீப் மாதத்தின் திட்
டமான காலத்திலே, ஏழுநாள் புளிப்பில்
லாத அப்பங்களைப் புசிப்பாயாக; ஏனெ
னில் ஆபீப் மாதத்திலே எகிப்திலிருந்து
புறப்பட்டாய்.
௰௯ கர்ப்பம் திறந்து பிறக்கிற யாவும் உன்
ஆடுமாடுகளின் மந்தையிலே தலையீற்றான
ஆண் யாவும் நம்முடையவைகள்.
௨௰ ஆனால் கழுதையின் தலையீற்றை ஒரு
ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்வாயாக;
மீட்காயேயானால் அதின் தலையை வெட்
டிப்போடக்கடவாய்; உன் பிள்ளைகளில்

Digitized by Google

முதல்பேறானவைகளை எல்லாம் மீட்டுக்
கொள்வாயாக; வெறுங்கையாய் நமக்கு
முன்பாகக் காணப்படார்களாக,
உக ¶ ஆறுநாள் வேலைசெய்து, ஏழாம் நா
ளில் ஓய்ந்திருப்பாயாக; உழுகிற காலமா
னாலும் அறுக்கிற காலமானாலும் ஓய்ந்திருப்
பாயாக.
உஉ ¶ கோதுமை அறுப்பின் முதல்பல
னைச் செலுத்தும் ஏழு வாரங்களின் பண்டி
கையையும் வருஷமுடிவிலே சேர்ப்பின்
பண்டிகையையும் ஆசரிப்பாயாக.
உ௩ ¶ வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்
சாதி எல்லாம் இஸ்ரவேலின் பராபரனாயி
ருக்கிற கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதிக்
குமுன்பாகக் காணப்படக்கடவது.
உ௪ ஏனெனில் நாம் புறச்சாதிகளை உனக்
குமுன்பாகத் துரத்திவிட்டு, உன் எல்லை
களை விஸ்தாரமாக்குவோம்; நீ வருஷத்தில்
மூன்றுதரம் உன் பராபரனாகிய கர்த்தரின்
சந்நிதிக்குமுன்பாகக் காணப்படப் போ
யேறுகையில், ஒருவரும் உன் தேசத்தை
இச்சிப்பதில்லை.
உ௫ ¶ புளித்தமா இருக்கும்போது, நமது
பலியின் இரத்தத்தைப் பலியிடாயாக; பஸ்
காப்பண்டிகையின் பலி விடியற்காலம்மட்
டும் இராத்தங்கவும் வேண்டாம்.
உ௬ உன் சீர்மையின் முதல் விளைச்சலில்
முந்தின கனியை உன் பராபரனாகிய கர்த்
தரின் வீட்டிற்குக் கொண்டுவருவாயாக;
வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின்
பாலோடேகூடச் சமைக்காயாக என்றார்.
உ௭ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயுடனே,
இந்த வார்த்தைகளை எழுதிக்கொள்; ஏனெ
னில் இந்த வார்த்தைகளின்படியே உன்
னோடும் இஸ்ரவேலோடும் உடம்படிக்கை
பண்ணினேமென்றார்.
உ௮ அவன் அங்கே கர்த்தரோடே இரவும்
பகலும் நாற்பதுநாள் அப்பம் புசியாமலும்
தண்ணீர் குடியாமலும் இருந்தான்; அவர்
பத்து வசனங்களாகிய உடம்படிக்கையின்
வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினார்.
உ௯ ¶ மோசே சாட்சியின் இரண்டு பல
கைகளைத் தன் கையிலே பிடித்து, சீனாய்
பர்வதத்திலிருந்து இறங்குகிறபொழுது, அ
வர் தன்னோடே பேசினதினாலே தன் முகத்
தின் தோல் பிரகாசிக்கின்றதென்கிறதை அ
வன் அறியாதிருந்தான்.
௩௰ ஆரோனும் இஸ்ரவேலின் எல்லாப்
புத்திரரும் மோசேயைப் பார்க்கும்பொழு
து, இதோ, அவன் முகத்தின் தோல் பிரகா
சித்தது; ஆகையால் அவனண்டைக்குச்
சேரப் பயந்தார்கள்.
௩௧ ஆனால் மோசே அவர்களைக் கூப்பிட்
டான்; அப்பொழுது ஆரோனும் சபையி
லுள்ள எல்லாப் பிரபுக்களும் அவனண்
டைக்குத் திரும்பினார்கள்; மோசே அவர்க
ளோடே பேசினான்.
௩௨ அதற்குப் பிறகு இஸ்ரவேல் புத்திரர்
எல்லாரும் அவனண்டையில் சேர்ந்தார்
கள்; அப்பொழுது அவன் சீனாய்பர்வ
தத்திலே கர்த்தர் தன்னோடே பேசினவைக
ளை எல்லாம் அவர்களுக்குக் கற்பித்தான்.
௩௩ மோசே அவர்களோடே பேசி * முடி
யும்மட்டும், தன் முகத்தின்மேல் முக்காடு
போட்டிருந்தான். *உ கொரி. ௩. ௭.
௩௪ ஆனால் மோசே கர்த்தரின் சந்நிதியி
லே அவரோடே பேசும்படிக்கு உள்பிரவே
சிக்கையில், முக்காட்டை வாங்கிப் புறப்
படும்மட்டும் போடாதிருந்தான்; அவன்
புறப்பட்டுவந்து, தனக்குக் கற்பிக்கப்பட்
டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லும்
பொழுதோவெனில்,
௩௫ இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை
அதின் தோல் பிரகாசிக்கிறதென்று பார்த்
தார்கள், ஆகையால் மோசே அவரோடே
பேசும்படிக்கு உள்பிரவேசிக்கும்மட்டும்,
முக்காட்டைத் திரும்பத் தன் முகத்தின்
மேலே போடுவான்.

௩௫. அதிகாரம்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சபை
யை எல்லாம் கூட்டி, அவர்களோடே

சொன்னதாவது: கர்த்தர் செய்யக் கற்பித்
ததேதெனில்,
௨ ஆறுநாளுக்குள்ளே உன் வேலையைச்
செய்வாயாக; ஏழாம் நாளோவென்றால்
உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக; அ
து கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு
நாள்; அதிலே வேலைசெய்கிறவனெல்லாம்
கொலையுண்ணக்கடவன்.
௩ ஓய்வுநாளில் உங்கள் வாசஸ்தலங்களி
லெல்லாம் நெருப்பு மூட்டாதிருப்பீர்களா
கவென்று கற்பித்தாரென்றான்.
௪ ¶ பின்னையும் மோசே இஸ்ரவேல் புத்
திரரின் சபையோடெல்லாம் சொன்னதா
வது: கர்த்தர் கற்பித்ததேதெனில்,
௫ *உங்களுக்குண்டானதிலே கர்த்தருக்கு
ஒரு காணிக்கையை எடுத்துச் செலுத்துங்
கள்; மனப்பூர்வமுள்ளவனெல்லாம் அ
தைக் கொண்டுவரக்கடவன்; கர்த்தருக்குச்
செலுத்தும் காணிக்கை என்னவெனில்,
பொன்னும், வெள்ளியும், வெண்கலமும்,
*௨ மோ. ௨௫. ௨.
௬ இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சி
வப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்
ளாட்டுமயிரும்,
௭ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்க
ளும், தகசுகளின்தோல்களும், சீத்திம் மரங்
களும்,
௮ விளக்குக்கு எண்ணெயும், அபிஷேகத்
தெண்ணெய்க்குப் பரிமளவர்க்கங்களும்,
தூபம் காட்டுதலுக்குச் சுகந்த வர்க்கங்க
ளும்,
௯ ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்
திற்கும் கோமேதகக் கற்களும் பதித்துவை
க்கும் இரத்தினங்களும்தானே.
௰ உங்களில் ஞானமான இருதயமுள்ள
அனைவரும் வந்து கர்த்தர் கற்பித்தவைகளை
எல்லாம் செய்வார்களாக.
௰௧ வாசஸ்தலத்தையும், அதின் கூடாரத்
தையும், அதின் மூடியையும், அதின் துற
டுகளையும், அதின் பலகைகளையும், அதின்
தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும்,
அதின் கால்களையும்,
௰௨ பெட்டியையும், அதின் வாரைகளையும்,
கிருபாசனமான மூடியையும், மறைவின்
திரையையும்,
௰௩ மேசையையும், அதின் வாரைகளையும்,
அதினுடைய எல்லா முட்டுகளையும், சமு
கத்து அப்பங்களையும்,
௰௪ வெளிச்சம்காட்டும் குத்துவிளக்கை
யும், அதின் முட்டுகளையும், அதின் விளக்கு
களையும், வெளிச்சத்திற்கு எண்ணெயை
யும்,
௰௫ தூபபீடத்தையும், அதின் வாரைகளை
யும், அபிஷேகத்தெண்ணெயையும், சுகந்
தங்களின் தூபவர்க்கத்தையும், வாசஸ்த
லத்தின் வாசலுக்கு மறைவையும்,
௰௬ தகனபலிபீடத்தையும், அதின் வெண்
கலச் சல்லடையையும், அதின் வாரைகளை
யும், அதினுடைய எல்லா முட்டுகளையும்,
தொட்டியையும், அதின் புரிமணையையும்,
௰௭ பிரகாரத்தின் வெளியாடைகளையும்,
அதின் தூண்களையும், அதின் கால்களையும்,
பிரகாரத்து வாசலின் மறைவையும்,
௰௮ வாசஸ்தலத்தின் முளைக் கூச்சுகளையும்,
பிரகாரத்தின் முளைக் கூச்சுகளையும், அவை
களின் கயிறுகளையும்.
௰௯ பரிசுத்த ஸ்தலத்திலே செய்கிற ஆராத
னையின் சேலைகளையும், ஆசாரிய ஊழியம்
செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களை
யும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும்,
அவர்கள் செய்வார்களாக என்றுரென்று
சொன்னான்.
௨௰ ¶ அப்பொழுது இஸ்ரவேல் புத்திர
ரின் சபை எல்லாம் மோசேயைவிட்டுப்
புறப்பட்டது.
௨௰௧ எவர்களை அவர்கள் இருதயம் எழுப்
பி, அவர்கள் ஆவி பூர்வமாக்கிற்றோ, அவர்
களெல்லாரும் வந்து, ஆசரிப்புக் கூடாரத்
தின் வேலைக்கும் அதின் சகல ஊழியத்திற்
கும் பரிசுத்த வஸ்திரங்களுக்கும் கர்த்தருக்
குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.
௨௰௨ கர்த்தருக்குப் பொன்னை அசைவாட்

Digitized by Google

டும் காணிக்கையாகச் செலுத்துகிற புருஷரும் பெண்சாதிகளுமான மனப்பூர்வமுள்ள அனைவரும் வந்து, சரடுகள், கடுக்கன்கள், மோதிரங்கள், காப்புகள் முதலான சகலவித பொன்பணிகளையும் கொண்டுவந்தார்கள்.

௨௩ தங்களிடத்தில் இளநீலநூலையும், இரத்தாம்பரநூலையும், சிவப்புநூலையும், மெல்லிய பஞ்சுநூலையும், வெள்ளாட்டுமயிரையும், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களையும், தகசுகளின் தோல்களையும் கண்டுபிடித்த யாவரும் கொண்டுவந்தார்கள்.

௨௪ வெள்ளியையும் வெண்கலத்தையும் கொடுக்கத்தக்க யாவரும் அவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள்; வேலையிலே சகலவித கிரியைக்குமான சீத்திம் மரங்களைத் தங்களிடத்தில் கண்டுபிடித்த யாவரும் கொண்டுவந்தார்கள்.

௨௫ ஞானமான இருதயமுள்ள ஸ்திரிகளெல்லாரும் தங்கள் கைகளினாலே நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும், இரத்தாம்பரநூலையும், சிவப்புநூலையும், மெல்லிய பஞ்சுநூலையும் கொண்டுவந்தார்கள்.

௨௬ எந்த ஸ்திரிகளை அவர்கள் இருதயம் ஞானமாகச்செய்ய எழுப்பிற்றோ, அவர்கள் வெள்ளாட்டுமயிரை நூற்றார்கள்.

௨௭ பிரபுக்கள் ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்திற்கும் என்று கோமேதகக் கல்லுகளையும், பதித்துவைக்கும் இரத்தினங்களையும்,

௨௮ பரிமள வர்க்கங்களையும், விளக்கெண்ணெயையும், அபிஷேகத்தெண்ணெய்க்கும் சுகந்தவர்க்கங்களின் தூபங்காட்டுதலுக்கும் வேண்டியவைகளையும் கொண்டுவந்தார்கள்.

௨௯ செய்கிறதற்குக் கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்த எல்லா வேலைக்கும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரரில் தங்கள் இருதயத்தால் மனப்பூர்வமாக்கப்பட்ட எல்லாப் புருஷரும் ஸ்திரிகளும் கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

௩௰ ¶ மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னதாவது: பாருங்கள், கர்த்தர் *யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரன் பெத்சாலேயேலைப் பேர்சொல்லி அழைத்து, *௨ மோ. ௩௧. ௨.

௩௧ அவன் விநோதமான வேலைகளை யோசித்துச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்யவும்,

௩௨ இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதித்துவைக்கவும், மரத்திலே தச்சுவேலைசெய்து சகல விநோதமான வேலையைப் பண்ணவும்,

௩௩ அவனுக்கு ஞானமும் உணர்வும் அறிவும் சகலவித வேலையின் வித்தையும் உண்டாக அவனைப் பராபரன் தம்முடைய ஆவியினாலே நிரப்பினார்.

௩௪ அவன் இருதயத்திலும், தாண் கோத்திர அகிசமாகின் குமாரனாகிய அகோலியாபின் இருதயத்திலும், போதிக்கிறதற்கான வரத்தையும் கொடுத்தார்.

௩௫ சகலவித தொழிலின் சூட்சமவேலையையும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணுகிற சித்திரத்தையல் வேலையையும், நெய்கிற எல்லா வேலையையும் செய்ய, அவர்களை இருதயத்தின் ஞானத்தினாலே நிரப்பினார்; அவர்கள் சகலவித வேலையைச் செய்த விநோதமான வேலைகளை யோசித்துப் பண்ணுவார்கள் என்றார்.

௩௬. அதிகாரம்.

அப்பொழுது பெத்சாலேயேலும், அகோலியாவும், பரிசுத்தவேலையின் எல்லாக் கிரியையும் கர்த்தர் கற்பித்தபடி எல்லாம் செய்ய அறியும்படிக்கு, கர்த்தர் ஞானமும் உணர்வும்கொடுத்த ஞானமான இருதயமுள்ள அனைவரும், வேலைக்குட்பட்டார்கள்.

௨ ஏனென்றால் மோசே பெத்சாலேயேலையும், அகோலியாவையும், கர்த்தர் ஞானம்

Digitized by Google

கொடுத்ததினாலே அந்த வேலையைச் செய்யச் சேருகிறதற்கு, தங்கள் இருதயத்தால் எழுப்பப்பட்ட ஞானமுள்ள இருதயத்தாராகிய எல்லாரையும் வரவழைத்தான்.

௩ அவர்கள் இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த வேலையின் கிரியைக்குக் கொண்டுவந்ததாகிய மோசேக்குமுன்பாக இருந்த காணிக்கையை எல்லாம் அதைச் செய்யும்படிக்கு ஒப்புவித்துக்கொண்டார்கள்; இவர்களோவென்றால் இன்னம் காலையில் மனப்பூர்வமான காணிக்கைகளை அவனண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

௪ ¶ அப்பொழுது பரிசுத்தவேலையையெல்லாம் செய்கிற சகல ஞானிகளும் அவரவர் தாங்கள் செய்கிற வேலையின் காரியமாய் வந்து,

௫ மோசேயுடனே, கர்த்தர் செய்யக் கற்பித்த கிரியையின் வேலைக்கு வேண்டியதைப்பார்க்கிலும் சனம் மிச்சமாய்க் கொண்டுவருகின்றதென்றார்கள்.

௬ அப்பொழுது மோசே இனிப் புருஷரும் ஸ்திரிகளும் பரிசுத்த காணிக்கைக்கென்று வேலைசெய்யார்களாகவென்று பாளயத்திலே கூறக் கட்டளையிட்டான்; அப்படியே சனம் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது.

௭ ஏனெனில் செய்யப்போகிற எல்லா வேலைக்கும் போந்த தளவாடம் அதிகமாயிருந்தது.

௮ ¶ வேலையைச் செய்கிறவர்களில் ஞானமான இருதயமுள்ள அனைவரும் *வாசஸ்தலத்தை உண்டாக்கினார்கள்; அதற்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், நெய்தலான விநோத வேலையாகிய கேருபீன்களுமுள்ள பத்துச் சமுக்காளங்களைப் பண்ணுவித்தான். *௨ மோ. ௨௬. ௧.

௯ ஒவ்வொரு சமுக்காளம் இருபத்தெட்டு முழ நீளமும், நான்குமுழ அகலமும், சமுக்காளங்களெல்லாம் ஒரே அளவுமாயிருந்தன.

௰ ஐந்து சமுக்காளங்களை ஒன்றோடொன்றாக இணைத்து, மற்ற ஐந்து சமுக்காளங்களையும் ஒன்றோடொன்றாக இணைத்தான்.

௰௧ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடையோரத்திலே இளநீலநூலால் ஐம்பது காதுகளை உண்டுபண்ணி, அப்படியே இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் கடையோரத்திலும் உண்டுபண்ணினான்.

௰௨ காதுகள் ஒன்றுக்கொன்று எதிராகச் சேர்ந்தவைகளாயிருந்தன.

௰௩ ஐம்பது பொன்துறடுகளையும் பண்ணி, அவைகளால் சமுக்காளங்களை ஏக வாசஸ்தலமாகப் போகும்படிக்கு, ஒன்றுக்கொன்று இணைத்துப்போட்டான்.

௰௪ ¶ வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாக ஆட்டுமயிரினால் நெய்த பதினொரு சமுக்காளங்களையும் பண்ணினான்.

௰௫ ஒவ்வொரு சமுக்காளம் முப்பது முழ நீளமும், நான்குமுழ அகலமும், பதினொரு சமுக்காளங்களும் ஒரே அளவுமாயிருந்தன.

௰௬ ஐந்து சமுக்காளங்களை ஒன்றாகவும் ஆறு சமுக்காளங்களை ஒன்றாகவும் இணைத்து,

௰௭ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடையோரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும், உண்டாக்கி,

௰௮ கூடாரத்தை ஒன்றாய் இணைத்துவிட ஐம்பது வெண்கலத் துறடுகளை உண்டாக்கினான்.

௰௯ ¶ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களினாலே கூடாரத்திற்கு ஒரு மூடியையும் அதின்மேலே தகசுத்தோல்களினாலே ஒரு மூடியையும் உண்டுபண்ணினான்.

௨௰ ¶ நிமிர்ந்துநிற்கிற பலகைகளையும் வாசஸ்தலத்திற்குச் சீத்திம் மரங்களாலே செப்பனிட்டான்.

௨௰௧ ஒவ்வொரு பலகை பத்துமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமாயிருந்தது.

௨௰௨ ஒன்றுக்கொன்று எதிரே இசைவான

ஒழுங்காயிருக்கிற இரண்டு முளைகள் ஒவ்வொரு பலகைக்கிருந்தன; இப்படி வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் செய்தான்.

௨௩ வாசஸ்தலத்திற்காகச் செப்பனிட்ட பலகைகளில் இருபதைத் தெற்கே தென்திசைக்கு எதிராக நிறுத்தி,

௨௪ அந்த இருபது பலகைகளின்கீழே நாற்பது வெள்ளிக்கால்களை, ஒவ்வொரு பலகையின்கீழ் அதின் இரண்டு முளைகளுக்கான இரண்டு கால்களாக, உண்டுபண்ணிவைத்து,

௨௫ வாசஸ்தலத்தின் வடக்கான மறுபக்கத்திலும் இருபது பலகைகளை நிறுத்தி,

௨௬ அவைகளின் நாற்பது வெள்ளிக்கால்களையும் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டு கால்களாகப் பண்ணுவித்தான்.

௨௭ வாசஸ்தலத்தின் மேல்ப்புறமாக ஆறு பலகைகளை நிறுத்தி,

௨௮ வாசஸ்தலத்தின் இரண்டு பக்கக்கோடிகளுக்கு இரண்டு பலகைகளையும் செப்பனிட்டான்.

௨௯ இவைகள் தாழத்துவக்கி இரண்டு பக்கங்களை ஏகமாய்ப் பிடித்து, உயர ஒரே சட்டமாய் இசைத்திருந்தன; இரண்டு கோடிகளிலுமிருக்கும் இரண்டையும் அப்படிச்செய்தான்.

௩௰ அப்படியே பலகைகள் எட்டும் அவைகளுடைய வெள்ளிக்கால்கள் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டிரண்டு காலாகப் பதினாறுமாயிருந்தன.

௩௧ ¶ சீத்திம் மரங்களால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும்,

௩௨ வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும், வாசஸ்தலத்தின் மேல்ப்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் பண்ணி,

௩௩ நடுத் தாழ்ப்பாளைப். பலகைகளின் மையத்திலே ஒருமுனைதுவக்கி மறுமுனைமட்டும் பாய்ச்சப்படுகிறதாக்கினான்.

௩௪ பலகைகளைப் பொன் தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினாலே பண்ணி, தாழ்ப்பாள்களைப் பொன்தகட்டால் மூடினான்.

௩௫ ¶ இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலும், நெய்தலின் விநோத வேலையாகிய கேருபீன்களுமுள்ள திரையை உண்டுபண்ணி,

௩௬ அதற்குச் சீத்திம் மரமான நான்கு தூண்களைச் செப்பனிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளின் வளைவாணிகளைப் பொன்னினாலே பண்ணி, அவைகளுக்கு நான்கு வெள்ளிக்கால்களை வார்ப்பித்தான்.

௩௭ ¶ கூடாரத்தின் வாசலுக்கு இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலும், சித்திரத்தையல்வேலையுமான ஒரு மறைவையும்,

௩௮ அதின் ஐந்து தூண்களையும், அவைகளின் வளைவாணிகளையும் உண்டாக்கி, அவைகளின் குமிழ்களையும், அதின் வளையங்களையும், பொன்தகட்டால் மூடினான்; அவைகளுக்கு வார்ப்பித்த ஐந்து கால்களோவெனில் வெண்கலம்.

௩௭. அதிகாரம்.

பெத்சாலேயேல் சீத்திம் மரங்களால் *பெட்டியை உண்டுபண்ணினான்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதின் உயரம் ஒன்றரை முழமுமானது. *உ மோ. உ௫. ௰.

௨ அதை உள்ளும் புறம்பும் சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை உண்டாக்கி,

௩ அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கோடிகளிலே, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும் மறுபக்கத்தில் இரண்டு வளை

Digitized by Google

பங்களும் இருக்கும்படிக்குத் தைத்து,
௪ சீத்திம் மரங்களான வாரைகளைச் செய்
பணிட்டு, அவைகளைப் பொன்தகட்டால்
மூடி,
௫ அந்த வாரைகளால் பெட்டியைச் சுமக்
கும்படிக்கு, அவைகளைப் பெட்டியின் பக்
கங்களிலுள்ள வளையங்களில் பாய்ச்சினான்.
௬ ¶ சுத்தப் பொன்னினாலே *கிருபாசன
மான மூடியையும் பண்ணினான்; அது இ
ரண்டரைமுழ நீளமும் ஒன்றரைமுழ அக
லமுமானது. *௨ மோ. ௨௫. ௰௭.
௭ பொன்னான இரண்டு கேருபீன்களையும்
அடிக்கப்பட்ட பொன்னினாலே உண்டாக்
கி, கிருபாசனமான மூடியின் இரண்டோ
ரங்களிலே,
௮ ஒரே கேருபீன் இந்தப்புறத்தினோரத்தி
லும், மற்றக் கேருபீன் அந்தப்புறத்தினோ
ரத்திலும் இருக்கும்படி பண்ணினான்; அ
ந்தக் கேருபீன்களைக் கிருபாசனமான மூ
டியின் இரண்டோரங்களில் அதிலிருந்து
உண்டானவைகளாக இருக்கப்பண்ணி
னான்.
௯ அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்
டைகளை உயர விரித்து, தங்கள் செட்டை
களாலே கிருபாசனமான மூடியை மூடுகி
றவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகங்
களுமாயிருந்தன; கேருபீன்களின் முகங்
கள் கிருபாசனமான மூடியை நோக்கிக்
கொண்டிருந்தன.
௰ ¶ சீத்திம் மரங்களாலே *மேசையை
யும் பண்ணினான்; அது இரண்டுமுழ நீள
மும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ
உயரமுமானது. *௨ மோ. ௨௫. ௨௩.
௰௧ அதைச் சுத்தப் பொன்தகட்டால்
மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை
உண்டாக்கி,
௰௨ சுற்றிலும் அதற்கு நான்கு விரல்கடை
யான சட்டத்தையும் சுற்றிலும் அதின் சட்ட
த்திற்கும் பொன்திரணையை உண்டுபண்ணி,
௰௩ அதற்கு நான்கு பொன்வளையங்களை
வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு
கால்களுக்கிருக்கும் நான்கு கோடிகளிலே
தைத்தான்.
௰௪ அந்த வளையங்கள் மேசையைச் சுமக்
கும் வாரைகளின் இடங்களாயிருக்கும்ப
டிக்குச் சட்டத்துக்கெதிரே இருக்கப்பண்
ணினான்.
௰௫ மேசையைச் சுமக்கும் அந்த வாரை
களைச் சீத்திம் மரங்களாலே பண்ணி, அ
வைகளைப் பொன்தகட்டால் மூடி,
௰௬ மேசையின்மேலிருக்கும் முட்டுக
ளாகிய அதின் கலங்களையும், அதின் தூபக்
கிண்ணிகளையும், அதின் கரகங்களையும், மூ
டுகிறதற்கான அதின் தட்டுகளையும், சுத்தப்
பொன்னினாலே உண்டாக்கினான்.
௰௭ ¶ *அடிக்கப்பட்ட சுத்தப் பொன்னி
னாலே குத்துவிளக்கையும் உண்டாக்கி
னான்; அதின் தண்டும் அதின் கிளைகளும்
அதின் மொக்குகளும் அதின் மாதளம்பழங்
களும் அதின் பூக்களும் அதிலிருந்து புறப்
படுகிறவைகளாயிருந்தன. *௨ மோ. ௨௫. ௩௧.
௰௮ குத்துவிளக்கின் பக்கங்களிலிருந்து
ஆறு கிளைகள், மூன்று அதின் ஒரு பக்கத்தி
லும் மூன்று அதின் மறு பக்கத்திலுமிருந்து
புறப்பட்டன.
௰௯ ஒவ்வொரு கிளையிலே வாதுமைக்
கொட்டைகளின் சாயலான மூன்று மொக்
குகளும் ஒரு மாதளம்பழமும் ஒரு பூவும்
இருந்தன; குத்துவிளக்கிலிருந்து புறப்படு
கிற ஆறு கிளைகளிலும் அப்படியிருந்தன.
௨௰ விளக்குத்தண்டிலோவென்றால், வா
துமைக்கொட்டைகளின் சாயலான நான்கு
மொக்குகளும் அதின் மாதளம்பழங்களும்,
அதின் பூக்களுமிருந்தன.
௨௰௧ அதிலிருந்து புறப்படுகிற இரண்டு கி
ளைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் வேறே
இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மாதளம்பழ
மும் குறை இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மா
தளம்பழமும் இருந்தன; விளக்குத்தண்டி
லிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளுக்கும்
அப்படி இருந்தன.
௨௰௨ அவைகளின் மாதளம்பழங்களும் அ

Digitized by Google

லைகளின் கிளைகளும் அதிலிருந்து உண்டானவைகளாக இருந்தன; எல்லாம் அடிக்கப்பட்ட சுத்தப் பொன்னாகிய ஒரு துண்டாயிருந்தது.

௨௩ அதின் ஏழு விளக்குகளையும் அதின் கத்தரிகளையும் விளக்கணைக்கிற எத்தனங்களையும் சுத்தப் பொன்னினாலே உண்டாக்கினான்.

௨௪ அதை அதினுடைய எல்லா முஸ்தீதுகளோடுங்கூட ஒரு தாலந்து சுத்தப் பொன்னினாலே உண்டுபண்ணினான்.

௨௫ ¶ சீத்திம் மரங்களினாலே *தூபபீடத்தையும் உண்டாக்கினான்; அது ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமுமாகிய சதுரமும், இரண்டு முழ உயரமும், அதின் கொம்புகள் அதனோடு, ஒரு துண்டுமாய் இருந்தன. *௨ மோ. ௩௰. ௧.

௨௬ அதை எல்லாம் அதின் மேல்பலகையையும், அதின் சுற்றுப்பக்கங்களையும், அதின் கொம்புகளையும், சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்திரணையை உண்டுபண்ணி,

௨௭ அதின் திரணையின்கீழ் அதின் இரண்டு பக்கங்களிலிருக்கும் இரண்டு கோடிகளில் இவ்விரண்டு பொன்வளையங்களை அதைச்சுமக்கும் வாரைகளினிடங்களாகத் தைத்து,

௨௮ சீத்திம் மரங்களால் அந்த வாரைகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடினான்.

௨௯ பரிசுத்த அபிஷேகத்தெண்ணெயையும் சுத்தமான சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும் தயிலக்காரன் வேலையாக உண்டுபண்ணினான்.

௩௰௮. அதிகாரம்.

சீத்திம் மரங்களால் *தகனபலிபீடத்தையும் உண்டாக்கினான்; அது ஐந்துமுழ நீளமும் ஐந்துமுழ அகலமுமான சதுரமும் மூன்றுமுழ உயரமுமானது. *௨ மோ. ௨௭. ௧.

௨ அதின் நான்கு கோடிகள்மேல் அதனோடு ஏகமாயிருக்கிற அதின் நான்கு கொம்புகளையும் உண்டாக்கி, அதை வெண்கலத் தகட்டால் மூடி,

௩ அந்தப் பீடத்தின் சகலமுட்டுகளாகிய செப்புச்சட்டிகளையும் சாம்பலெடுக்கும் கரண்டிகளையும் கலங்களையும் முள்துறடுகளையும் கலசங்களையும் உண்டாக்கினான்; அதின் முட்டுகளை எல்லாம் வெண்கலத்தினாலே பண்ணினான்.

௪ வலைபோலிருக்கிற ஒரு வெண்கலச் சல்லடையையும் பலிபீடத்திற்கு உண்டாக்கி, அதைத் தாழ அதின் சுற்றிற்குக் கீழ்ப்புறமாக அதின் பாதிமட்டும் வரவைத்து,

௫ வாரைகளின் இடங்களாகிய நான்கு வளையங்களை வார்ப்பித்து, வெண்கலச் சல்லடையின் நான்கு முனைகளில் வைத்து,

௬ சீத்திம் மரங்களால் வாரைகளைப் பண்ணி, அவைகளை வெண்கலத் தகட்டால் மூடி,

௭ அவைகளைப் பலிபீடத்தின் பக்கங்களிலிருக்கிற வளையங்களிலே, அதை அவைகளாலே சுமக்கும்படிக்குப் பாய்ச்சினான்; அதைப் பலகைகளினாலே குழாயாக்கினான்.

௮ ¶ *ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் கும்பு கும்பாய் வந்து காணிக்கை செலுத்துகிற ஸ்திரிகளின் கண்ணாடிகளாலே, வெண்கலத்தொட்டியையும் அதின் வெண்கலப் புரிமணையையும் உண்டாக்கினான்; †பிரகாரத்தையும் உண்டுபண்ணினான்.
*௨ மோ. ௩௰. ௰௮. †௨ மோ. ௨௭. ௯.

௯ ¶ தெற்கே தென்பக்கத்திற்கு எதிராயிருக்கிற திரித்த மெல்லிய பஞ்சுநூலால் நெய்த பிரகாரத்தின் வெளியாடைகள் நூறு முழமும்,

௰ அவைகளின் தூண்கள் இருபது; அவைகளின் இருபது கால்கள் வெண்கலமும், தூண்களின் வளைவாணிகளும் அவைகளின் வளையங்களும் வெள்ளியுமானது.

௰௧ வடபக்கத்திற்கு எதிரானவைகளும் நூறு முழமும், அவைகளின் தூண்கள் இருபது; இவைகளின் இருபது கால்கள்

Digitized by Google

வெண்கலமும், தூண்களின் வளைவாணி
களும் வளையங்களும் வெள்ளியுமானது.
௰௨ மேல்பக்கத்திற்கு எதிரான வெளி
யாடைகள் ஐம்பது முழமானது; அவைக
ளின் தூண்கள் பத்து; இவைகளின் கால்
களும் பத்து; தூண்களின் வளைவாணிக
ளும் வளையங்களும் வெள்ளி.
௰௩ சூரியன் உதிக்கிற கிழ்ப்பக்கத்திற்கு
எதிரானவைகளும் ஐம்பது முழம்.
௰௪ அங்கே ஒருபுறத்து வெளியாடைகள்
பதினைந்து முழமானது; அவைகளின்
தூண்கள் மூன்றும் இவைகளின் கால்கள்
மூன்றும்தானே.
௰௫ பிரகாரவாசலின் இந்தப்பக்கத்துக்
குச்சரியாக அந்தப்பக்கத்திலும் மறுபுறத்
து வெளியாடைகள் பதினைந்து முழமான
து; அவைகளின் தூண்கள் மூன்றும் இ
வைகளின் கால்கள் மூன்றும்தானே.
௰௬ சுற்றிலும் பிரகாரத்தின் வெளியாடை
களெல்லாம் மெல்லிய பஞ்சுநூலால் நெய்
தது.
௰௭ தூண்களின் கால்கள் வெண்கலமும்,
தூண்களின் வளைவாணிகளும் வளையங்க
ளும் வெள்ளியுமானது; அவைகளின் குமி
ழ்கள் வெள்ளித்தகட்டால் மூடப்பட்ட
தும், பிரகாரத்தின் தூண்களெல்லாம் வெ
ள்ளி வளையங்கள் போடப்பட்டவைகளு
மாயிருந்தன.
௰௮ *பிரகாரவாசலின் மறைவோவென்று
ல், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவ
ப்புநூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலுமா
கிய சித்திரத்தையல்வேலையாயிருந்தது; அ
தின் நீளம் இருபது முழமும், அகலமாகிய
அதின் உயர்வு பிரகாரத்தின் வெளியாடை
களுக்குச் சரிசமானமாய் ஐந்து முழமு
மானது. *௨ மோ. ௨௭. ௰௪.
௰௯ அவைகளின் தூண்கள் நான்கு; அ
வைகளின் நான்கு கால்கள் வெண்கலமும்,
அவைகளின் வளைவாணிகள் வெள்ளியும்,
அவைகளின் குமிழ்கள் மூடப்பட்ட தக
டும், அவைகளின் வளையங்களும் வெள்ளி
யுமாயிருந்தன.
௨௰ வாசஸ்தலத்திற்கும் பிரகாரத்திற்கும்
சுற்றிலுமிருந்த எல்லா முளைக்கூச்சுகளும்
வெண்கலம்.
௨௧ ¶ சாட்சியின் வாசஸ்தலத்திற்குச் செ
ன்றவைகளின்கணக்கோவென்றால், அவை
கள் மோசேயின் சொல்படி ஆசாரியனாகிய
ஆரோனின் குமாரனான இத்தமாரின் கையி
லே லேவியரின் ஊழியத்திற்கென்று எண்
ணப்பட்டது.
௨௨ யூதா கோத்திரத்து ஊரின் மகனாகிய
ஊரியின் குமாரன் பெத்சாலெயேல் கர்த்
தர் மோசேக்குக் கற்பித்ததை எல்லாம்
பண்ணினான்.
௨௩ அவனோடேகூடத் தாண்கோத்திரத்து
அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப்
சூட்சவேலைசெய்கிற தொழிலாளியும், இள
நீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவ
ப்புநூலாலும், மெல்லிய பஞ்சுநூலாலும்,
சித்திரத்தையல் வேலைசெய்கிறவனுமாயிரு
ந்தான்.
௨௪ ¶ பரிசுத்தஸ்தலத்தின் வேலைக்கெல்
லாம் அசைவாட்டும் காணிக்கையாகக்
கொடுக்கப்பட்டு, செலவான பொன்னெல்
லாம் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலாலே
இருபத்தொன்பது தாலந்தும் எழுநூற்று
முப்பது சேக்கல் நிறையுமாயிருந்தன.
௨௫ ¶ சபையில் எண்ணப்பட்டவர்களின்
வெள்ளி பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலால்
நூறுதாலந்தும், ஆயிரத்தெழுநூற்றெழுபத்
தைந்து சேக்கலுமாயிருந்தது.
௨௬ அதேதெனில் எண்ணப்படுகிறவர்
களின் கணக்கிலே வந்த இருபது வயது
முதல்கொண்டு மேல்தரமான அறுநூற்று
மூவாயிரத்தைந்நூற்றைம்பதுபேர்களில் ஒ
வ்வொரு தலைக்காகப் பரிசுத்தஸ்தலத்தின்
சேக்கலாலே அரைச் சேக்கல் விழுக்காடு
சேர்ந்தது.
௨௭ வெள்ளியில் நூறுதாலந்து பரிசுத்த
ஸ்தலத்தின் கால்களையும் திரையின் கால்க
ளையும் வார்ப்பிக்கிறதற்குச் செலவாயிற்று;

Digitized by Google

காலுக்கு ஒரு தாலந்து விழுக்காடு நூறு கால்களுக்கு நூறு தாலந்துதானே.

௨௮ ஆனால் அந்த ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்து சேக்கலாலே தூண்களுக்கு வளைவாணிகளைப் பண்ணி, அவைகளின் குமிழ்களைத் தகடுகளால் மூடி, அவைகளுக்கு வளையங்களை உண்டாக்கினான்.

௨௯ ¶ அசைவாட்டும் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட வெண்கலமோவெனில், எழுபது தாலந்தும் இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறையுமாயிருந்தது.

௩௰ அதினாலே ஆசரிப்புக்கூடாரவாசல் மறையின் கால்களையும் வெண்கலப் பலிபீடத்தையும் அதற்கிருக்கிற வெண்கலச் சல்லடையையும் பலிபீடத்தின் சகல முட்டுகளையும்,

௩௰௧ சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் கால்களையும் பிரகாரவாசல் மறையின் கால்களையும் வாசஸ்தலத்தின் சகல முளைக்கூச்சுகளையும் சுற்றிலுமிருக்கிற பிரகாரத்தின் சகல முளைக்கூச்சுகளையும் உண்டுபண்ணினான்.

௩௰௯. அதிகாரம்.

* இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், அவர்கள் பரிசுத்தஸ்தலத்தில் ஆராதனைசெய்கிறதற்கு வேண்டிய சீலைகளையும், ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களையும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே பண்ணினார்கள். *௨ மோ. ௨௮. ௧.

௨ ¶ ஆசாரிய சால்வையைப் பொன்னினாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணினான்.

௩ பொன்னை இளநீலநூலுக்கும், இரத்தாம்பரநூலுக்கும், சிவப்புநூலுக்கும், மெல்லிய பஞ்சுநூலுக்கும் நடுவே விநோதமாய் நெய்யும்படிக்கு, அதின் தகடுகளை வளர்த்தினார்கள், அவைகளை நூல்களாக அறுத்தான்.

௪ இரண்டு தோளின்மேலும் அதை அதின் இரண்டு முனைகளாலே சேர்த்தார்கள்; அங்கே இணைக்கப்பட்டிருந்தது.

௫ அதின்மேல் அதனோடே ஏகத்துண்டாயிருக்கிற விநோதமான கச்சை, அந்த வேலையாகப் பொன்னினாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி பண்ணப்பட்டது.

௬ ¶ முத்திரைகள் வெட்டப்படுகிற வேலையாக இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களைக் கோமேதகக் கல்லுகளில் வெட்டி, சுற்றிலுமிருக்கிற பொன்னில் இவைகளைப் பதித்தவைகள் ஆக்கினார்கள்.

௭ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவைகளை இஸ்ரவேல் புத்திரருக்கான நினைப்புக் கற்களாக ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேலே வைத்தான்.

௮ ¶ ஆசாரிய சால்வையின்வேலைக்கொத்த விநோதவேலையாக மார்ப்பதக்கத்தையும், பொன்னினாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணினான்.

௯ அந்த மார்ப்பதக்கத்தைச் சதுரமும் இரட்டையும் ஒருசாண் நீளமும் ஒருசாண் அகலமுமாக்கி,

௰ அதிலே இரத்தினக் கற்களை நான்கு பத்தி நிறையப் பதித்தார்கள்; முதலாம் பத்திகெம்பும், புஷ்பராகமும், மரகதமும்,

௰௧ இரண்டாம் பத்தி சிவப்புக்கல்லும், நீலக்கல்லும், வயிரமும்,

௰௨ மூன்றும் பத்தி பதமராகமும், வயிடூரியமும், அமெதீஸ்தும்,

௰௩ நான்காம் பத்தி தர்சீஸ் இரத்தினமும், கோமேதகமும், யஸ்பியுமானது; அவைகள் தங்களிடங்களிலே சுற்றும் பொன்னில் பதிக்கப்பட்டிருந்தன.

௰௪ இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரர் நாமங்களின்படியே பன்னிரண்டும் அவர்களுடைய நாமங்களுள்ளவைகளுமாயிருந்தன; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றின் நாமம் ஒவ்வொன்றில் முத்திரை வெட்டாய் வெட்டி இருந்தது.

Digitized by Google

௰௫ மார்ப்பதக்கத்திற்கென்று சரிபணவுகளும் முடிச்சுக்குத்திகள் வேலையுமான சரப்பளிகளையும் சுத்தப் பொன்னினாலே பண்ணி,

௰௬ இரண்டு பொன் வளையங்களையும் இரண்டு பொன் மோதிரங்களையும் பண்ணி, இந்த இரண்டு மோதிரங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு மூலைகளில் வைத்து,

௰௭ பொன்னான அந்த இரண்டு முடிச்சுக்குத்திகளை மார்ப்பதக்கத்தின் மூலைகளிலிருக்கிற இரண்டு மோதிரங்களில் மாட்டி,

௰௮ இரண்டு முடிச்சுக்குத்திகளின் இரண்டு தலைகளை ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேல் அதின் முன்புறத்திலிருக்கிற அந்த இரண்டு வளையங்களில் மாட்டிவிட்டார்கள்.

௰௯ பின்னையும் இரண்டு பொன்மோதிரங்களைப்பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையின் கீழ்ப்புறத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தின் மற்ற இரண்டு மூலைகளில் அதின் ஓரத்திற்குள்ளாக வைத்து,

௨௰ வேறே இரண்டு பொன்வளையங்களையும் பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையினுடைய முன்புறத்தின் இரண்டு கீழ்ப்பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும், ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,

௨௧ மார்ப்பதக்கம் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாக இருக்கும்படிக்கும், ஆசாரிய சால்வையிலிருந்து விட்டுப்போகாதபடிக்கும், அதை அதின் மோதிரங்களால் ஆசாரிய சால்வையின் மோதிரங்களோடே இளநீலமான கயிற்றினாலே பராபரன் மோசேக்குக் கற்பித்தபடியே கட்டினார்கள்.

௨௨ ஆசாரிய சால்வையின் கீழிருக்கும் அங்கியையோவென்றால், முழுவதும் இளநீலநூலால் நெய்தான்.

௨௩ அங்கியின் நடுவில் மார்க்கவசத்தின் வாய்க்கொப்பான அதின் வாயும் அது கிழியாதபடிக்குச் சுற்றிலும் அதற்கான ஓரமுமிருந்தன.

௨௪ அங்கியின்கீழ் ஓரங்களிலே தொங்கத் திரித்த இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலுமான வேலையாக மாதளம்பழங்களைப் பண்ணி,

௨௫ சுத்தப் பொன்னினாலே மணிகளையும் பண்ணி, அந்த மணிகளை அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் மாதளம்பழங்களின் நடுவே தொங்கவைத்தார்கள்.

௨௬ ஆராதனைசெய்ய அங்கியின் ஓரங்களிலே சுற்றிலும் ஒரு மணியும் ஒரு மாதளம்பழமுமாகக் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே தொங்கி இருக்கத்தானே.

௨௭ ¶ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் மெல்லிய பஞ்சுநூல் நெய்தலாக உள்சட்டைகளையும்,

௨௮ பாகையையும், அலங்காரமான குல்லாக்களையும், திரித்த மெல்லியநூல் நெய்தலாகச் சணல்நூல் சல்லடங்களையும்,

௨௯ திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், சித்திரத்தையல் வேலையாக நடுக்கட்டையும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே பண்ணினார்கள்.

௩௰ ¶ *சுத்தப் பொன்னினாலே பரிசுத்த கிரீடமென்ற பட்டத்தையும் பண்ணி, அதிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்பதை முத்திரை வெட்டாக வெட்டி, *௨ மோ. ௨௮. ௩௬, ௩௭.

௩௧ அதைப் பாகையில் உயரக்கட்டும்படிக்கு, இளநீலமான கயிற்றினாலே கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கோத்தார்கள்.

௩௨ இப்படியே ஆசரிப்பின் கூடாரமென்ற வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்திருந்தார்கள்.

௩௩ ¶ பிற்பாடு வாசஸ்தலத்தை மோசேயண்டைக்குக் கொண்டுவந்தார்கள்; கூடாரத்தையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், அதின் துறடுகளையும், அதின் பல

Digitized by Google

கைகளையும், அதின் தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும்,

௩௪ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களின் மூடியையும், தகசுத்தோல்களின் மூடியையும், மறைவின் திரையையும்,

௩௫ சாட்சியின் பெட்டியையும், அதின் வாரைகளையும், கிருபாசனமான மூடியையும்,

௩௬ மேசையையும், அதின் எல்லா முட்டுகளையும், சமுகத்தப்பங்களையும்,

௩௭ சுத்தமான குத்துவிளக்கையும், வரிசையாய் ஆயத்தப்பட்ட அதின் விளக்குகளையும், அதின் எல்லா முட்டுகளையும், வெளிச்சத்திற்கு எண்ணெயையும்,

௩௮ பொன்பீடத்தையும், அபிஷேகத்தெண்ணெயையும், சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும், வாசஸ்தலத்தின் வாசல் மறைவையும்,

௩௯ வெண்கலப் பலிபீடத்தையும், அதற்கிருக்கிற வெண்கலச் சல்லடையையும், அதின் வாரைகளையும், அதின் எல்லா முட்டுகளையும், தொட்டியையும், அதின் புரிமணையையும்,

௪௰ பிரகாரத்தின் வெளியாடைகளையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும், பிரகாரத்து வாசல் மறைவையும், அதின் கயிறுகளையும், அதின் முளைக்கூச்சுகளையும், ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வேலைக்கடுத்த எல்லா முட்டுகளையும்,

௪௧ பரிசுத்த ஸ்தலத்திலே செய்யும் ஆராதனைக்கடுத்த சீலைகளையும், ஆசாரிய ஊழியம் செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும் தானே.

௪௨ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலையையும் செய்திருந்தார்கள்.

௪௩ மோசே எல்லாக் கிரியையையும் பார்த்தான்; இதோ கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள். ஆகையால் மோசே அவர்களை ஆசீர்வதித்தான்.

௪௰. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ முதலாம் மாதம் முதல் தேதியிலே ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை எடுப்பித்து,

௩ அதிலே சாட்சியின் பெட்டியை வைத்து, பெட்டியைத் திரையினால் மறைத்து.

௪ மேசையைக் கொண்டுவந்து, அதின் முஸ்திதை அடுக்கிவைத்து, குத்துவிளக்கைக் கொண்டுவந்து, அதின் விளக்குகளை ஏற்றி,

௫ பொன்தூபபீடத்தைச் சாட்சியின் பெட்டிக்கு முன்பாக வைத்து, வாசஸ்தலத்தின் வாசல் மறைவைத் தூக்கிவைக்கக்கடவாய்.

௬ பிற்பாடு நீ தகனபலிபீடத்தை ஆசரிப்புக்கூடாரமானவாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து,

௭ தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்த்து,

௮ சுற்றிலும் பிரகாரத்தை நிறுத்தி, பிரகார வாசல் மறைவைத் தூக்கிவைத்து,

௯ அபிஷேகத்தெண்ணெயை எடுத்து. வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, அதை அதின் முட்டுகளோடெல்லாம் பரிசுத்தமாக்கக்கடவாய்; அப்பொழுது பரிசுத்தமாய் இருக்கும்.

௰ தகனபலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, அதைப்பரிசுத்தமாக்கக்கடவாய்; அப்பொழுது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான பலிபீடமாய் இருக்கும்.

௰௧ தொட்டியையும் அதின் புரிமணையையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கக்கடவாய்.

௰௨ பிற்பாடு நீ ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரினால் கழுவி,

Digitized by Google

௰௩ ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை
உடுத்தி, நமக்கு ஆசாரிய ஊழியம் செய்
யும்படிக்கு அவனை அபிஷேகம்பண்ணி,
பரிசுத்தமாக்கி,
௰௪ அவன் குமாரரையும் சேரப்பண்ணி,
அவர்களுக்குச் சட்டைகளை உடுத்தி,
௰௫ அவர்கள் நமக்கு ஆசாரிய ஊழியம்
செய்யும்படிக்கு அவர்களை, அவர்கள் தகப்
பனை அபிஷேகம்பண்ணினபடி, அபிஷே
கம் பண்ணக்கடவாய்; அவர்களுடைய
அபிஷேகம் அவர்களுக்கு அவர்களுடைய
தலைமுறைகளில் நித்திய ஆசாரியபட்டத்
திற்கென்று உண்டாயிருப்பதாக என்றார்.
௰௬ ¶ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி எல்
லாம் மோசே செய்தான்.
௰௭ சம்பவித்ததேதென்றால், இரண்டாம்
வருஷம் முதலாம் மாதம் முதல்தேதியி
லே வாசஸ்தலம் எடுப்பிக்கப்பட்டது.
௰௮ அதேதென்றால் மோசே கூடாரத்தை
எடுப்பித்தான்; அவன் அதின் கால்களை வை
த்து, அதின் பலகைகளை நிறுத்தி, அதின்
தாழ்ப்பாள்களைப் பாய்ச்சி, அதின் தூண்
களை நிறுத்தி,
௰௯ கூடாரத்தை வாசஸ்தலத்தின்மேல்
விரித்து, கூடாரத்தின் மூடியை உயர அதின்
மீதில் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி போ
ட்டான்.
௨௰ ¶ அவன் சாட்சியை எடுத்து, அதைப்
பெட்டியிலே வைத்து, வாளாகளைப் பெட்
டியிலே பாய்ச்சி, கிருபாசனமான மூடி
யை உயரப் பெட்டியின்மீதில் வைத்து,
௨௧ பெட்டியை வாசஸ்தலத்திலே கொ
ண்டுவந்து, மறைவின் திரையைத் தூக்கி
வைத்து, சாட்சியின் பெட்டியைக் கர்த்தர்
தனக்குக் கற்பித்தபடி மறைத்தான்.
௨௨ ¶ பிற்பாடு அவன் மேசையை ஆச
ரிப்பின் கூடாரத்திலே வாசஸ்தலத்தின் வ
டபுறமாய்த் திரைக்குப் புறம்பாக வைத்து,
௨௩ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே
அதின்மேல் கர்த்தருக்கு முன்பாக அப்பத்
தை வரிசையாக அடுக்கிவைத்தான்.

௨௪ ¶ பிற்பாடு அவன் குத்துவிளக்கை
ஆசரிப்பின் கூடாரத்தில் மேசைக்கு எதி
ராக வாசஸ்தலத்தின் தென்புறத்திலே
வைத்து,
௨௫ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே
விளக்குகளைக் கர்த்தருக்கு முன்பாக ஏற்றி
னான்.
௨௬ ¶ பிற்பாடு அவன் பொன்பீடத்தை
ஆசரிப்பின் கூடாரத்தில் திரைக்கு முன்
பாக வைத்து,
௨௭ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே
அதின்மேல் சுகந்தவர்க்கத்தினாலே தூபம்
காட்டினான்.
௨௮ ¶ பிற்பாடு அவன் வாசஸ்தலத்தின்
வாசல் மறைவைத் தூக்கிவைத்து,
௨௯ தகனபலிபீடத்தை ஆசரிப்புக்கூடா
ரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்
பாகவைத்து, அதின்மேலே சர்வாங்கதக
னபலியையும், காணிக்கையையும் கர்த்தர்
தனக்குக் கற்பித்தபடியே செலுத்தினான்.
௩௰ ¶ அவன் தொட்டியை ஆசரிப்புக்
கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே
வைத்து, கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர்
வார்த்தான்.
௩௧ அவ்விடத்திலே மோசேயும் ஆரோ
னும் அவன் குமாரரும் தங்கள் கைகளை
யும் தங்கள் கால்களையும் கழுவினார்கள்.
௩௨ அவர்கள் ஆசரிப்பின் கூடாரத்திற்கு
உள்பிரவேசிக்கிறபொழுதும், பலிபீடத்த
ண்டையில் சேருகிறபொழுதும், அவர்கள்
கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கழு
விக்கொள்ளவேண்டியது.
௩௩ ¶ பிற்பாடு அவன் வாசஸ்தலத்தை
யும் பலிபீடத்தையும் சுற்றிலும் பிரகாரத்
தை நிறுத்தி, பிரகாரத்தின் வாசல் மறை
வைத் தூக்கிவைத்தான்; இப்படியே மோ
சே கிரியையை முடித்தான்.
௩௪ ¶ அப்பொழுது *ஒரு மேகம் ஆசரிப்
பின் கூடாரத்தை மூடி, கர்த்தருடைய
மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

*௪ மோ. ௯. ௰௫. ௧ இரா. ௮. ௰.

Digitized by Google

௩௫ ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவே
சிக்க மோசேக்குக் கூடாதிருந்தது; ஏனெ
னில் மேகம் அதின்மேலே தங்கி, கர்த்த
ருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்
பிற்று.
௩௬ மேகம் வாசஸ்தலத்திலிருந்து எழும்
புகிறபொழுதுதானே, இஸ்ரவேல் புத்திரர்
தங்கள் பயணங்களுக்கெல்லாம் புறப்ப
டுவார்கள்.
௩௭ மேகம் எழும்பாதிருந்ததேயாகில்,
அவர்கள் அது எழும்பும் நாள்மட்டும் பய
ணம்பண்ணாதிருப்பார்கள்.
௩௮ அதேதெனில் இஸ்ரவேல் வீட்டாரு
டைய எல்லாப் பயணங்களிலும் அவர்கள்
எல்லாருடைய கண்களுக்கு முன்பாகப்
பகலில் வாசஸ்தலத்தின்மேலே கர்த்தரு
டைய மேகம் இருந்தது, இரவிலோவென்
ருல், அக்கினி அதில் இருந்தது.

மோசே எழுதின

மூன்ரும் ஆகமம்.

௧. அதிகாரம்.

கர்த்தர் ஆசரிப்பின் கூடாரத்திலிருந்து
மோசேயைக் கூப்பிட்டு அவனோடே பே
சிச் சொன்னதாவது:
௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அ
வர்களுக்குச் சொல்லவேண்டியதேதென்
ருல், உங்களில் ஒரு மனிதன் கர்த்தருக்
குப் பலியைச் செலுத்தப்போனல், மாட்
டுமந்தையிலும் ஆட்டுமந்தையிலுமுள்ள
மிருகங்களில் எடுத்து, உங்கள் காணிக்
கைகளைச் செலுத்துவீர்களாக.
௩ ¶ அவன் செலுத்துவது மாட்டுமந்தை
யில் எடுக்கிற சர்வாங்கதகனபலியானல்,
அவன் பழுதற்ற காளையைச் செலுத்துவா
னுக; கர்த்தரின் சந்நிதியிலே தன்மேலே
பிரியம்வர, அவன் அதை *ஆசரிப்புக்
கூடாரத்தின் வாசலுக்குக் கொண்டுவந்து,
*௨ மோ. ௰௨. ௰௩, ௰௪.
௪ அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்
கிகரிக்கப்படும்படிக்குத் தன் கையை அ
தினுடைய தலையின்மேல் வைத்து,
௫ கர்த்தருக்கு முன்பாகக் காளையின் குரல்
வளையை அறுக்கக்கடவன்; அப்பொழுது
ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அ
தின் இரத்தத்தைக் கொண்டுவந்து, அதை
ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலிருக்கிற
பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்
கடவர்கள்.
௬ பிற்பாடு அவன் தகனபலியைத் தோலு
ரித்து, அதை அதின் சந்துசந்தாகத் துண்
டித்துப்போடுவானுக.
௭ அப்பொழுது ஆசாரியனுகிய ஆரோ
னின் குமாரர் பலிபீடத்தின்மேலே அக்கி
னியைப் போட்டு, அக்கினியின்மேலே
கட்டைகளை அடுக்கி,
௮ பிற்பாடு அவன் குமாரராகிய அந்த ஆ
சாரியர்கள் துண்டங்களையும் தலையையும்
கொழுப்பையும் பலிபீடத்தின்மேல் அக்
கினியின்மேலிருக்கிற கட்டைகளின்மீதில்
அடுக்கிவைக்கக்கடவர்கள்.
௯ அதின் குடல்களையும் அதின் தொடை
களையும் அவன் தண்ணீரினுல் கழுவுவா
னுக; அவைகளை எல்லாம் ஆசாரியன் பலி
பீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியாகக்
கொளுத்திவிடக்கடவன்; அது கர்த்தருக்கு
ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.
௰ ¶ அவன் ஆட்டுமந்தையிலுள்ள ஆடுக

Digitized by Google

விலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் எடுத்து, சர்வாங்கதகனபலியைச் செலுத்தப் போனானேயாகில், அவன் பழுதற்ற கடாவைக் கொண்டுவந்து,

௰௧ கர்த்தருக்கு முன்பாகப் பலிபீடத்தின் வடபுறத்திலே அதின் குரல்வளையை அறுக்கக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௰௨ பிற்பாடு அவன் அதை அதின் சந்துசந்தாகத் துண்டித்து, அதின் தலையையும் அதின் கொழுப்பையும் கூடவைப்பானாக; அவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே அக்கினியின்மேல் இருக்கிற கட்டைகளின்மீதில் அடுக்கிவைக்கக்கடவன்.

௰௩ குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரினாலே கழுவுவானாக; அவைகளை எல்லாம் ஆசாரியன் கொண்டுவந்து, பலிபீடத்தின்மேலே கொளுத்திவிடக்கடவன், அது சர்வாங்கதகனபலி; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௰௪ ¶ அவன் பறவைகளில் எடுத்து, கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியைச் செலுத்தப் போனானேயாகில், காட்டுப்புறாக்களிலாகிலும் புறாக்குஞ்சுகளிலாகிலும் எடுத்துச் செலுத்தக்கடவன்.

௰௫ அதை ஆசாரியன் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அதின் தலையைக் கிள்ளிப் பிடுங்கி, பலிபீடத்திலே கொளுத்திவிட்டு, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் சுவரிலே விழவிட்டு,

௰௬ அதின் இரைப்பையை அதின் இறகுகளோடுங்கூட வாங்கி, அதைப் பலிபீடத்தண்டையிலே கிழக்கே சாம்பலிருக்கிற இடத்திலே போட்டு,

௰௭ பிற்பாடு அதை அதின் செட்டைகளுக்குள்ளே இரண்டாக்காமல் பிளப்பானாக; பிற்பாடு ஆசாரியன் அதைப் பலிபீடத்தின்மேலே அக்கினியின்மேலிருக்கிற கட்டைகளின்மீதில் கொளுத்திப்போடக்கடவன்; அது சர்வாங்கதகனபலி; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௨. அதிகாரம்.

ஒரு ஆத்துமா கர்த்தருக்குக் காணிக்கையான படைப்பைச் செலுத்துவதுண்டானால், அவன் படைப்பு மெல்லியமாவாயிருப்பதாக; அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மீதில் குங்குலிகம்போட்டு,

௨ அதை ஆரோனின் குமாரரான ஆசாரியர்களண்டைக்குக் கொண்டுவருவானாக; அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய எல்லாக் குங்குலிகத்தோடுங்கூட எடுத்து, நினைப்புக்கான அதைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௩ காணிக்கையில் மீதியானதோவென்றால், ஆரோனையும் அவன் குமாரரையும் சேரக்கடவது; கர்த்தருடைய தகனங்களில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௪ ¶ அடுப்பிலே சுட்ட காணிக்கையான படைப்பைச் செலுத்தப் போனானேயாகில், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவின் புளிப்பில்லாத அதிரசங்களும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளுமாய் இருப்பதாக.

௫ ¶ நீ படைப்பது தட்டின்மேல் சுட்ட காணிக்கையேயானால், அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினுடையதாய் இருப்பதாக.

௬ அதைத் துண்டுகளாகப் பிட்டு, அதின்மேல் எண்ணெய் வார்ப்பாயாக; அது ஒரு காணிக்கை.

௭ ¶ நீ படைப்பது சட்டியிலே செய்யப்படுகிற காணிக்கையேயானால், அது எண்ணெயிலே மெல்லிய மாவினாலே செய்யப்படுவதாக.

௮ இப்படிச் செய்யப்பட்ட காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக;

Digitized by Google

அது ஆசாரியனண்டையில் சேர்ந்தபொழுது, அவன் அதைப் பலிபீடத்திற்குக் கொண்டுபோய்,

௯ நினைப்புக்கான பங்கைக் காணிக்கையிலிருந்து ஏறெடுத்து, பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௰ காணிக்கையில் மீதியானதோவென்றால், ஆரோனையும் அவன் குமாரரையும் சேரக்கடவது; கர்த்தருடைய தகனங்களில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௰௧ ¶ கர்த்தருக்குச் செலுத்தும் ஒரு காணிக்கையும் உப்பினதாகச் செய்யப்படாதிருப்பதாக; ஏனெனில் புளித்த மாவுள்ளதொன்றையும் தேனுள்ளதொன்றையும் கர்த்தருக்குத் தகனமாகக் கொளுத்தீர்களாக.

௰௨ முதல் கனிகளின் படைப்பாக, அவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தலாம்; ஆனால் பலிபீடத்தின்மேல் அவைகள் ஆற்றுகிற வாசனையாக ஏற்றப்படவேண்டாம்.

௰௩ ¶ உன் காணிக்கையாகிற எந்தப் படைப்பும், *உப்பினால் சாரம் ஏற்றப்படுவதாக; உன் காணிக்கையிலே உன் பராபரனுடைய உடம்படிக்கையின் உப்பைக் குறைய ஒட்டாமல், நீ படைப்பதிலே எல்லாம் உப்பைச் செலுத்தக்கடவாய்.
*மாற். ௯. ௪௯. கொலோ. ௪. ௬.

௰௪ நீ முதல் பலன்களின் காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துகிறதுண்டானால், பச்சையான நிறைந்த கதிர்களை நெருப்பிலே சுட்டு உதிர்த்து, இப்படியே உன் முந்தினபலன்களின் காணிக்கையைக் கொண்டுவந்து,

௰௫ அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மீதில் குங்குலிகம் போடுவாயாக; அது ஒரு காணிக்கை.

௰௬ பிற்பாடு ஆசாரியன் உதிர்க்கப்பட்டதிலும் எண்ணெயிலும் நினைப்புக்கான பங்கை, அதினுடைய எல்லாக் குங்குலிகத்தோடுங்கூட எடுத்துக் கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கான தகனம்.

௩. அதிகாரம்.

அவன் செலுத்துவது சமாதான பலியானால், அப்பொழுது அதை மாட்டுமந்தையில் எடுத்துச் செலுத்தப் போனானேயாகில், அவன் அது ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி, பழுதற்றிருக்கிறதைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து,

௨ அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௩ பிற்பாடு சமாதானபலியிலே குடல்களை மூடிய கொழுப்பையும், குடல்களின்மேல் இருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௪ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கும் கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௫ அதை ஆரோனின் குமாரர் பலிபீடத்திலே, அக்கினியின்மேலுள்ள கட்டைகளின்மேலே போட்டிருக்கும் சர்வாங்கதகன பலியின்மீதில் போட்டு, கொளுத்தக்கடவர்கள்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

௬ ¶ அவன் ஆட்டுமந்தையில் எடுத்து, கர்த்தருக்குச் சமாதானபலியைச் செலுத்தப் போனானேயாகில், அப்பொழுது அது ஆண்ஆனாலும் பெண்ஆனாலும் சரி, பழுதற்றிருக்கிறதைச் செலுத்துவானாக.

௭ ஆட்டைச் செலுத்தவேண்டுமென்றால், அவன் அதைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து,

௮ அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, ஆசரிப்பின் கூடாரத்திற்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பா

Digitized by Google

னாக; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௯ பிற்பாடு அவன் சமாதான பலியிலே அதின் கொழுப்பையும், நடு எலும்பிலே பிடுங்கின முழு வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகளின்மேல் இருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௰ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௰௧ அதை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கான தகன ஆகாரம்.

௰௨ ¶ அவன் செலுத்துவது வெள்ளாடாயிருந்ததேயானால், அவன் அதைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து,

௰௩ அதினுடைய தலையின்மேல் தன் கையை வைத்து, ஆசரிப்பின் கூடாரத்திற்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௰௪ அதிலே அவன் குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௰௫ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௰௬ அவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது ஆற்றுகிற வாசனையாகும் தகன ஆகாரம்; எல்லாக் கொழுப்பும் கர்த்தருடையது.

௰௭ *கொழுப்பும் இரத்தமும் என்னப்பட்டதொன்றையும் நீங்கள் புசிக்கவேண்டாமென்பது, உங்கள் வாசஸ்தலங்கள் எங்குமுள்ள உங்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாயிருப்பதென்று சொல்லென்றார். *௩ மோ. ௭. ௨௩, ௨௭; ௰௭. ௰, ௰௪.

௪. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒரு ஆத்துமா கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றைத் தப்பிதத்தினாலே மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவம்பண்ணினால், அறியவேண்டியதாவது:

௩ அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியன் சனத்தைக் குற்றத்திற்குள்ளாக்கிப் பாவம் செய்தால், அவன் செய்த பாவத்தின்நிமித்தம், கர்த்தருக்குப் பாவம்போக்கும் பலியாக மாடுகளிலே பழுதற்ற ஒரு காளை எருதைச் செலுத்தி,

௪ அதை ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து, அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, கர்த்தருக்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக.

௫ அப்பொழுது அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியன் காளை எருதின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, அதை ஆசரிப்பின் கூடாரத்திலே கொண்டுவந்து,

௬ தன் விரலை இரத்தத்திலே தோய்த்து, ஏழுதரம் கர்த்தருக்கு முன்பாகப் பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே தெளிக்கக்கடவன்.

௭ பிற்பாடு ஆசாரியன் அந்த இரத்தத்திலே கொஞ்சம் ஆசரிப்பின் கூடாரத்திலே கர்த்தருக்குமுன்பாக இருக்கிற சுகந்தவர்க்கங்களினுடைய தூபபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, காளை எருதினுடைய இரத்தத்தை எல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

Digitized by Google

௮ பாவம்போக்கும் பலியான காளை எரு
தின் சகல கொழுப்பாகிய குடல்களை மூடி
ய கொழுப்பையும், அவைகள்மேலிருக்கிற
எல்லாக் கொழுப்பையும்,
௯ இரண்டு குண்டிக்காய்களையும், அவை
களின்மேலே சிறு குடல்களினிடத்தில் இ
ருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்க
ளோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்
வையும் பிடுங்கி,
௰ சமாதானபலியான மாட்டிலிருந்து எ
டுக்கிறதுபோல, அதிலிருந்து எடுத்தவை
களைத் தகனபலிபீடத்தின்மேலே கொளுத்
தக்கடவன்.
௰௧ ஆனால் காளை எருதின் தோலையும், அ
தின் எல்லா மாம்சத்தையும், அதனோடே
கூட அதின் தலையையும், தொடைகளையும்
அதின் குடல்களையும், அதின் சாணியையும்,
௰௨ காளை எருது முழுவதையும், அவன்
பாளயத்திற்குப் புறம்பே சாம்பலைக் கொட்
டுகிற சுத்தமான இடத்திலே கொண்டு
போய், கட்டைகளின்மேலே போட்டு, அக்
கினியாலே சுட்டெரிக்கக்கடவன்; கொட்
டி இருக்கிற சாம்பலின்மேலேதானே அ
தைச் சுட்டெரிக்கக்கடவன்.
௰௩ ¶ ஆனால் இஸ்ரவேலின் சபை எல்
லாம் தப்பிநடந்து, காரியம் தங்கள் கண்
களுக்கு மறைவாயிருக்கிறதினாலே, கர்த்த
ருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்
றை மீறி, செய்யத்தகாததைச் செய்து
குற்றவாளிகளாகப் போனால்,
௰௪ அப்பொழுது அவர்கள் செய்த பா
வம் அறியப்பட்டதாகில், சபை மாடுக
ளில் ஒரு காளை எருதைப் பாவம்போக்கும்
பலியாகச் செலுத்தி, அதை ஆசரிப்புக்கூ
டாரத்திற்கு முன்பாகக் கொண்டுவந்து,
௰௫ சபையின் மூப்பர் கர்த்தருக்கு முன்
பாகத் தங்கள் கைகளை அதினுடைய தலை
யின்மேலே வைப்பார்களாக; பிற்பாடு
கர்த்தருக்கு முன்பாகக் காளை எருதின்
குரல்வளை அறுக்கப்படுவதாக.
௰௬ அப்பொழுது அபிஷேகம்பண்ணப்ப
பட்ட ஆசாரியன் அதின் இரத்தத்திலே
கொஞ்சம் ஆசரிப்பின் கூடாரத்திலே கொ
ண்டுவந்து,
௰௭ தன் விரலை இரத்தத்திலே தோய்த்து,
ஏழுதரம் கர்த்தருக்கு முன்பாகத் திரைக்கு
எதிரே தெளித்து,
௰௮ ஆசரிப்பின் கூடாரத்திலே கர்த்தருக்
குமுன்பாக இருக்கிற பீடத்தினுடைய
கொம்புகளின்மேலே அதிலே கொஞ்சம்
பூசி, இரத்தத்தை எல்லாம் ஆசரிப்புக்கூ
டார வாசலின்முன் இருக்கிற தகனபலிபீ
டத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,
௰௯ அதின் கொழுப்பை எல்லாம் அதிலி
ருந்து எடுத்து, பலிபீடத்தின்மேலே கொ
ளுத்தி,
௨௰ பாவம்போக்கும் அந்தக் காளை எரு
தை எப்படிச்செய்தானோ, அப்படி இதை
யும் செய்து, இந்த அடைவாய் அவர்கள்
பாவத்தை நிவிர்த்தி ஆக்கக்கடவன்; அப்
பொழுது அவர்களுக்கு மன்னிக்கப்படும்.
௨௧ பிற்பாடு காளை எருதைப் பாளயத்
திற்குப் புறம்பே கொண்டுபோய், முந்தின
காளை எருதைச் சுட்டெரித்ததுபோலச்
சுட்டெரிக்கக்கடவன், இது சபையின்
பாவம்போக்கும் பலி.
௨௨ ¶ ஒரு பிரபு தன் பராபரனாகிய கர்த்த
ருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்
றை மீறி, தப்பிதத்தினாலே செய்யத்தகாத
தைச் செய்து, பாவம்பண்ணி, குற்றவாளி
யாகப்போனால்,
௨௩ அல்லவென்று அவன் செய்த பாவம்
அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதானால், அ
வன் வெள்ளாடுகளிலே பழுதற்ற ஒரு
கடாவைத் தன்னுடைய பலியாகக் கொண்
டுவந்து,
௨௪ தன் கையை அதினுடைய தலையின்
மேலே வைத்து, சர்வாங்கதகனபலி குரல்
வளை அறுக்கப்படுகிற இடத்திலே கர்த்த
ருக்குமுன்பாக அதின் குரல்வளையை அறுப்
பானாக; அது பாவம்போக்கும் பலி.
௨௫ அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்

Digitized by Google

தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, அதின் இரத்தத்தைத் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

௨௬ அதின் கொழுப்பை எல்லாம் சமாதானபலியின் கொழுப்பைப்போலப் பலிபீடத்தின்மேலே கொளுத்தி, இந்த அடைவாய் அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௨௭ ¶ தேசத்துச் சனத்தில் ஒரு ஆத்துமா தப்பிதத்தினாலே கர்த்தரின் கற்பனைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவம்பண்ணி, குற்றவாளியானால்,

௨௮ அல்லவென்று அவன் செய்த பாவம் அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதானால், அவன் செய்த பாவத்தின்நிமித்தம் வெள்ளாடுகளிலே பழுதற்ற பெண்ணாட்டைத் தன்னுடைய பலியாகக் கொண்டுவந்து,

௨௯ பாவம்போக்கும் பலியினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, சர்வாங்கதகனம் செய்யப்படுகிற ஸ்தலத்திலே அதின் குரல்வளையை அறுப்பானாக.

௩௰ அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, மற்ற இரத்தத்தை எல்லாம் பலிபீடத்தடியில் ஊற்றிவிட்டு,

௩௧ கொழுப்புச் சமாதான பலியிலிருந்து பிடுங்கப்படுவதுபோல, அதின் கொழுப்பை எல்லாம் பிடுங்கி, பலிபீடத்தின்மேலே கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்தி, இந்த அடைவாக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௩௨ ¶ பாவம்போக்கும் பலியாக ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர மனதாயிருந்தானேயாகில், அவன் பழுதற்ற பெண்குட்டியைக் கொண்டுவந்து,

௩௩ பாவம்போக்கும் பலியினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, சர்வாங்கதகனபலி குரல்வளை அறுக்கப்படும் தலத்திலே அதின் குரல்வளையைப் பாவம்போக்கும் பலியாகும்படிக்கு அறுப்பானாக.

௩௪ அப்பொழுது ஆசாரியன் இரத்தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, இரத்தத்தை எல்லாம் பலிபீடத்தடியில் ஊற்றிவிட்டு,

௩௫ சமாதானபலியான ஆட்டுக்குட்டியின் கொழுப்புப் பிடுங்கப்படுவதுபோல, அதின் கொழுப்பை எல்லாம் பிடுங்கி, பலிபீடத்தின்மேலே கர்த்தருடைய தகனபலிகளின்மீதில் போட்டுக் கொளுத்தி, இந்த அடைவாக அவன் செய்த பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௫. அதிகாரம்.

ஒரு ஆத்துமா கண்ட, அல்லது அறிந்த சாட்சியாய் இருந்து, ஆணையிடப்பட்ட சத்தத்தைக் கேட்டும் காரியத்தை அறிவிக்காதே போகிற பாவத்தைச் செய்தால், அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௨ அல்லது தீட்டான காட்டுச் சீவனின் உடலாகிலும் சரி, தீட்டான மிருகத்தின் உடலாகிலும் சரி, தீட்டான ஊர்வைகளின் உடலாகிலும் சரி, அப்படிக்கொத்த தீட்டான யாதொரு வஸ்துவை ஒரு ஆத்துமா அறியாமையினாலாகிலும் தொட்டால் அவன் தீட்டும் குற்றமுமுள்ளவன்.

௩ அல்லது எந்தத் தீட்டினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை அவன் அறியாமல் தொட்டுப் பிற்பாடு அறிந்தால், அவன் குற்றமுள்ளவன்.

௪ மனிதர் பதறி ஆணையிடும் எந்தக்காரியத்திலும் சரி, ஒரு ஆத்துமாத் தீமைசெய்கிறதற்காகிலும் நன்மை செய்கிறதற்காகிலும் தன் உதடுகளினாலே பதறி ஆணையிட்டு, அதை அறியாமல் செய்து, பிற்பாடு அறிவடைந்தால், அதிலே குற்றமுள்ளவனாயிருப்பான்.

Digitized by Google

௫ இப்படிக்கொத்தவைகளில் ஒன்றிலே
ஒருவன் குற்றமுள்ளவனானபொழுது, அ
வன் தான் செய்த பாவத்தை அறிக்கை
யிட்டு,
௬ அதின்நிமித்தம் கர்த்தருக்குத் தன் பா
வக்குற்றத்தைப் போக்கும் பலியாக, ஆடுக
ளிலாகிலும்வெள்ளாடுகளிலென்கிலும் ஒரு
பெண் குட்டியைப் பிடித்துக்கொண்டு
வருவானாக; அதினாலே ஆசாரியன் அவ
னுக்காக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்
கக்கடவன்.
௭ ¶ ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அ
வன் கைக்கு இல்லாதிருந்ததேயானால், அ
வன் தான் செய்த பாவத்தின் குற்றத்தைப்
போக்கும் பலியாக, இரண்டு காட்டுப்பு
றாக்களையாகிலும் இரண்டு புறாக்குஞ்சுகளை
யாகிலும் ஒன்றைப் பாவம்போக்கும் பலி
யாகவும் மற்றதைச் சர்வாங்க தகனபலி
யாகவும் கர்த்தருக்குச் செலுத்தி,
௮ அவைகளை ஆசாரியனண்டையிலே கொ
ண்டுவருவானாக; இவன் பாவம்போக்கும்
பலியாகிறதை முதல் சேரப்பண்ணி, அதின்
தலையை அதின் பிடரியின் கிட்டக் கிள்ளி,
இரண்டாக்காமல் வைத்து,
௯ அதின் இரத்தத்திலே கொஞ்சம் பலி
பீடத்தின் சுவரிலே தெளித்து, மீதியான
இரத்தத்தைப் பலிபீடத்தடியிலே விழவிடு
வானாக; அது பாவம்போக்கும்பலி.
௰ மற்றதை அவன் நியாய முறைமையின்
படியே சர்வாங்கதகனபலியாக்கி, இப்படி
ஆசாரியன் அவனுக்காக அவன் செய்த
பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன், அப்
பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.
௰௧ ¶ இரண்டு காட்டுப்புறாக்களையாகி
லும் இரண்டு புறாக்குஞ்சுகளையென்கிலும்
கொண்டுவர, அவன் கைக்கு இல்லாதிருந்
ததேயாகில் பாவம் செய்தவன் பாவம்போ
க்குதலுக்காக ஒரு மரக்கால் மெல்லியமா
விலே பத்தில் ஒரு பங்கைத் தன் காணிக்
கையாகக் கொண்டுவந்து, அது பாவம்
போக்குதலானபடியினாலே, அதின்மேல்
எண்ணெய் வாராமலும் குங்குலிகம் போ
டாமலுமிருந்து,
௰௨ அதை ஆசாரியனண்டையில் கொண்
டுவருவானாக; அதிலே ஆசாரியன் நினைப்
புக்கான பங்காகத் தன் கைப்பிடி நிறை
யப் பிடித்தெடுத்து, பலிபீடத்தின்மேலே
கர்த்தருடைய தகனபலிகளின்மீதில் போ
ட்டுக் கொளுத்தக்கடவன்; அது பாவம்
போக்குதல்.
௰௩ இப்படி ஆசாரியன் அந்தப் பாவங்க
ளில் ஒன்றைச் செய்தவனுக்காகப் பாவ
நிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்
பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்;
மீதியானது காணிக்கையைப்போல ஆசாரி
யனைச் சேருமென்றார்.
௰௪ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:
௰௫ ஒரு ஆத்துமா கர்த்தருடைய பரிசுத்த
மானவைகளிலே தப்பிதத்தினாலே அறியா
யம்பண்ணிப் பாவம்செய்தால், அவன்
தன் குற்றத்தைப் போக்க, நீ பரிசுத்தஸ்த
லத்துச் சேக்கல் கணக்காய் அவன்மேலே
சுமத்தும் அபராதப்படி, அத்தனை வெள்
ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்
டுக்கடாவைக் குற்றம்போக்கும் பலியாகக்
கர்த்தருக்குக் கொண்டுவந்து,
௰௬ பரிசுத்தமானதிலே தான் பாவம்செய்
தெடுத்ததைச் செலுத்தி, அதிலே ஐந்தில்
ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, ஆசாரிய
னுக்குக் கொடுப்பானாக; அப்பொழுது ஆ
சாரியன் குற்றம்போக்கும் ஆட்டுக்கடாவி
னாலே அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்
கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்
கப்படும்.
௰௭ ¶ ஒரு ஆத்துமா கர்த்தருடைய சகல
கற்பனைகளிலும் யாதொன்றை மீறி, செய்
யத்தகாததை அறியாமையினாலாகிலும் செ
ய்து பாவம்பண்ணினால், அவன் குற்றமுள்
ளவனாயிருந்து, தன் அக்கிரமத்தைச் சுமப்
பான்.
௰௮ ஆகையால் அவன் குற்றம்போக்கும்

Digitized by Google

பலியாக, உன் மதிப்புக்குச் சரியான, பழு
தற்ற ஒரு ஆட்டுக்கடாவை ஆசாரியனண்
டைக்குக் கொண்டுவருவானாக; அப்பொ
ழுது ஆசாரியன் அவன் அறியாமல் செய்த
தப்பிதத்தை அவனுக்காக நிவிர்த்தியாக்கக்
கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்
னிக்கப்படும்.
௰௯ அது குற்றம் போக்கும்பலி; ஏனெ
னில் கர்த்தருக்கு நேரஸ்தன் ஆனான்
என்றார்.

௬. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பே
சிச் சொன்னதாவது:
௨ ஒரு ஆத்துமா கர்த்தருக்கு விரோதமாக
அநியாயம்செய்து, தன் அடைக்கலத்திலே
கொடுக்கப்பட்டதிலும் அல்லது தன் கை
யிலே வைக்கப்பட்டதிலும் தனக்கடுத்தவ
னுக்கு மாறாட்டம்பண்ணி, அல்லவென்று
எதையாகிலும் பறித்துக்கொண்டு, அல்ல
து தனக்கடுத்தவனுக்கு இடுக்கண்செய்து,
௩ அல்லது காணாமல்போனதைக் கண்டு
பிடித்தும், அதை மறுதலித்துப் பொய்யா
ணையிட்டும், மனிதன் பாவத்தைக் கட்டிக்
கொண்டு செய்யும் இவை முதலான சகல
காரியங்களிலும் ஒன்றிலே பாவம்செய்தி
ருந்தால்,
௪ அவன் செய்த பாவத்தினாலே குற்றவா
ளியானபடியினாலே, தான் பறித்துக்கொண்
டதையும், அல்லது இடுக்கண்செய்து வா
ங்கினதையும், அல்லது தன் அடைக்கலத்
திலே வைக்கப்பட்டதையும், அல்லது
தான் கண்டுபிடித்த காணாமல்போயிருந்த
வஸ்துவையும்,
௫ அல்லது தான் பொய்யாணையிட்ட சக
லத்தையும், *திரும்பக் கொடுத்து, அந்த
முதலைச் செலுத்துகிறதும் அல்லாமல், அ
தில் ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்
டி, அதைத் தன் குற்றம்போக்குதலின் நாளி
லே அதின் எசமானனுக்குக் கொடுத்துவிட்
டு,

*ஏசே. ௩௩. ௰௫.

௬ தன் குற்றத்தைப் போக்கும்பலியாக,
உன் மதிப்புக்குச் சரியான, பழுதற்ற ஆட்
டுக்கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தி, அ
தை ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரு
வானாக.
௭ அப்பொழுது ஆசாரியன் கர்த்தருக்கு
முன்பாக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்
கக்கடவன்; அப்பொழுது அவன் குற்றவா
ளியாகிச் செய்த அப்படிப்பட்ட எந்தக்
காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும்
என்றார்.
௮ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:
௯ நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும்
கற்பிக்கவேண்டியதாவது: சர்வாங்கதகன
பலியின் நியாயப்பிரமாணம் ஏதெனில்,
அது இராமுழுவதும் விடியற்காலம்மட்டும்
பலிபீடத்தின்மேலே வேகவும் பலிபீடத்
தின் அக்கினியே அதில் எரியவும்கடவது.
௰ ஆசாரியன் சணல்நூலான தன் அங்கி
யை உடுத்து, சணல்நூலான தன் சல்லடத்
தைச் சதையின்மேலே தரித்துக்கொண்டு,
அக்கினியானது பலிபீடத்தின்மேலே சர்
வாங்கதகனபலியை எரித்துவிட்டபிற்பா
டு, சாம்பலை எடுத்து, அதைப் பலிபீடத்
தருகே கொட்டி,
௰௧ பிற்பாடு தன் வஸ்திரங்களைக் கழற்றிப்
போட்டு, வேறே வஸ்திரங்களை உடுத்துக்
கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்திற்
குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே
கொண்டுபோய்க் கொட்டக்கடவன்.
௰௨ பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினி
யோவெனில், அதில் அவியாமல் எரிவ
தாக; ஆசாரியன் காலையிலெல்லாம் அதின்
மேலே கட்டைகளை எரியப்போட்டு, அதின்
மேல் சர்வாங்கதகனபலியை வரிசையாக
வைத்து, அதின்மீதில் சமாதானபலிகளின்
கொழுப்புகளைப் போட்டு, கொளுத்தக்
கடவன்.
௰௩ பலிபீடத்தின்மேலே அக்கினி அவி
யாமல் எப்பொழுதும் எரிவதாக.

Digitized by Google

௰௪ ¶ காணிக்கையின் நியாயப்பிரமாண
மாவது: ஆரோனின் குமாரரில் ஒருவன்
அதைக் கர்த்தருக்குமுன்பாகப் பலிபீடத்
தின்முன் கொண்டுவந்து.
௰௫ காணிக்கையின் மெல்லிய மாவிலும்
அதின் எண்ணெயிலும் தன் கைப்பிடிநிறை
ய, காணிக்கையின்மேலுள்ள எல்லாக் குங்
குலிகத்தோடுங்கூட அள்ளி எடுத்து, நினைப்
புக்கான அதைப் பலிபீடத்தின்மேலே கர்த்
தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்
தக்கடவன்.
௰௬ அதில் மீதியானதை ஆரோனும் அவன்
குமாரரும் புசிப்பார்களாக; அது புளிப்
பில்லாததாகப் பரிசுத்தஸ்தலத்திலே புசிக்
கப்படக்கடவது; ஆசரிப்புக்கூடாரத்தின்
பிரகாரத்திலே அதைப் புசிப்பார்களாக.
௰௭ அது புளித்தமாவுள்ளதாகச் சுடப்ப
ட்டவேண்டாம்; அது நம்முடைய தகனங்
களில் நாம் அவர்களுக்குக் கொடுத்த அவர்
களுடைய பங்கு; பாவம்போக்கும் பலி
யைப்போலவும் குற்றம்போக்கும் பலி
யைப்போலவும் அது பரிசுத்தத்திற்குப் பரி
சுத்தம்.
௰௮ ஆரோனின் பிள்ளைகளில் ஆண்சாதி
யான யாவரும் அதைப் புசிக்கக்கடவர்
கள்; கர்த்தருடைய தகனங்களில் அது உங்
கள் தலைமுறைகளுக்கு நித்திய கட்டளை
யாய் இருக்கவும், அவைகளைத் தொடுகிறவ
னெல்லாம் பரிசுத்தமாய் இருப்பானாக
வென்று சொல்லென்றார்.
௰௯ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:
௨௰ ஆரோன் அபிஷேகம்பண்ணப்படுகிற
நாளிலே, அவனும் அவன் குமாரரும் கர்த்
தருக்குச் செலுத்தவேண்டிய படைப்பு
என்னவெனில், ஒரு மரக்கால் மெல்லிய
மாவிலே பத்தில் ஒரு பங்கை, காலையிலே
பாதியும் அந்திநேரத்திலே பாதியும், நித்திய
காணிக்கையாகச் செலுத்துவார்களாக.
௨௧ தட்டின்மேல் எண்ணெயிலே அது
செய்யப்படக்கடவது; அதை நீ சுடப்பட்
டதாகக் கொண்டுவந்து, காணிக்கையின்
சுட்டதுண்டுகளைக் கர்த்தருக்கு ஆற்றுகிற
வாசனையாகச் செலுத்தக்கடவாய்.
௨௨ அவன் குமாரரில் அவன் ஸ்தலத்திலே
அபிஷேகம்பண்ணப்படுகிற ஆசாரியனும்
அப்படிச் செய்யக்கடவன்; அது நித்திய
கட்டளை; கர்த்தருக்கென்று அது முழுதும்
கொளுத்தப்படக்கடவது.
௨௩ ஆசாரியனுடைய எந்தக் காணிக்கை
யும் புசிக்கப்படாமல், முழுவதும் சுட்டெ
ரிக்கப்படவேண்டுமென்றார்.
௨௪ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:
௨௫ நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும்
சொல்லவேண்டியது, பாவம்போக்கும் ப
லியின் நியாயப்பிரமாணம் என்னவெனில்,
சர்வாங்கதகனபலி குரல்வளை அறுக்கப்ப
டும் இடத்திலே, பாவம்போக்கும் பலியும்
கர்த்தருக்குமுன்பாகக் குரல்வளை அறுக்கப்
படக்கடவது; அது பரிசுத்தத்திற்குப் பரி
சுத்தம்.
௨௬ பாவம்போக்க அதைப் பலியிடுகிற
ஆசாரியன் அதைப் புசிக்கக்கடவன்; ஆச
ரிப்புக்கூடாரத்தின் பிரகாரமென்ற பரிசுத்
தஸ்தலத்திலே அது புசிக்கப்படுவதாக.
௨௭ அதின் மாம்சத்தைத் தொடுகிறவன்
எல்லாம் பரிசுத்தமாயிருப்பானாக; அதின்
இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்தி
லே தெறித்ததானால், அதைப் பரிசுத்தஸ்த
லத்திலே வெளுப்பாயாக.
௨௮ அது வேவிக்கப்பட்ட மண்பாண்டம்
உடைக்கப்படக்கடவது; செப்புப்பானை
யில் வேவிக்கப்பட்டதேயானால், அது வி
ளக்கப்பட்டுத் தண்ணீரில் அலசிப்போ
டக்கடவது.
௨௯ ஆசாரியரில் ஆண்சாதியானவன் எல்
லாம் அதைப் புசிப்பானாக; அது பரிசுத்
தத்திற்குப் பரிசுத்தம்.
௩௰ ஆனால் பாவம்போக்கும் எந்தப் பலி
யின் இரத்தத்திலே கொஞ்சம் பரிசுத்த
ஸ்தலத்திலே பாவத்தை நிவிர்த்தியாக்கும்

Digitized by Google

படிக்கு, ஆசரிப்பின் கூடாரத்திற்குள்ளே கொண்டுவரப்பட்டதோ, அந்தப் பலி புசிக்கப்படாமல் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படக்கடவது.

௭. அதிகாரம்.

குற்றம்போக்கும் பலியின் பிரமாணம் என்னவெனில், அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௨ சர்வாங்கதகனபலியைக் குரல்வளை அறுக்கும் இடத்திலே, குற்றம்போக்கும்பலியையும் குரல்வளை அறுப்பார்களாக; அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

௩ அதினுடைய எல்லாக் கொழுப்பையும், அதின் வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும்,

௪ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறுகுடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிடுங்கி, செலுத்துவானாக.

௫ இவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே, கர்த்தருக்குத் தகனமாகக் கொளுத்தக்கடவன்; அது குற்றம் போக்கும் பலி.

௬ ஆசாரியரில் ஆண்சாதியானவர்களெல்லாம் அதைப் புசிப்பார்களாக; பரிசுத்தஸ்தலத்தில் அது புசிக்கப்படக்கடவது; அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௭ ¶ பாவம்போக்கும் பலிக்குக் குற்றம்போக்கும்பலி சரிசமானம்; இரண்டிற்கும் ஒரே நியாயப்பிரமாணம் இருக்கும்; அதினாலே பாவத்தை நிவிர்த்தியாக்கின ஆசாரியனை அது சேர்வதாக.

௮ ஒருவனுடைய சர்வாங்கதகனபலியை ஆசாரியன் செலுத்தினால், அதின் தோல் அதைச் செலுத்தின ஆசாரியனுடையதாயிருக்கும்.

௯ அடுப்பிலே சுடப்பட்டதும் சட்டியிலும், தட்டின்மேலும் செய்யப்பட்டதுமான காணிக்கையாவும் அதைச் செலுத்துகிற ஆசாரியனுடையவைகளாயிருக்கும்.

௰ எண்ணெயிலே பிசைந்ததும் எண்ணெய் இல்லாததுமான சகல காணிக்கையும் ஆரோனுடைய எல்லாக் குமாரரையும் அவனவனுக்குச் சரியானபடி சேரும்.

௰௧ கர்த்தருக்குச் செலுத்துகிற சமாதானபலியின் நியாயப்பிரமாணம் என்னவெனில்,

௰௨ அதை ஸ்தோத்திரத்திற்காகச் செலுத்தினானால், அவன் ஸ்தோத்திரபலியோடுங்கூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மா அதிரசங்களையும்,

௰௩ அவைகளும் தவிரப் புளித்தமா அப்பத்தையும், தன்னுடைய சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியோடுங்கூடத் தன் படைப்பாகக் கொண்டுவந்து,

௰௪ அந்த எல்லாப் படைப்பிலும் ஒன்றைக் கர்த்தருக்கு ஏறெடுத்துச் செலுத்துவானாக; அது சமாதானபலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனுடையதாயிருக்கும்.

௰௫ அவனுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமோவென்றால், அவன் அதைச் செலுத்தின அன்றே புசிக்கப்படக்கடவது, அதிலொன்றும் விடியற்காலம்மட்டும் வைக்கப்படவேண்டாம்.

௰௬ அவன் செலுத்துகிற பலி ஒரு பொருத்தனையும், அல்லது உற்சாகப் பலியுமாயிருந்ததேயானால், அது செலுத்தப்பட்ட அந்நாளிலும் அதில் மீதியானது மறுநாளிலும் புசிக்கப்படுவதாக.

௰௭ ஆனால் பலியின் மாம்சத்தில் மூன்றும் நாளில் மீதியாய் இருக்கிறது அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது.

௰௮ அவனுடைய சமாதானபலியின் மாம்சத்தில் மூன்றும்நாளிலே புசிக்கவே புசிக்கப்பட்டால், அதைச் செலுத்தினவன் பிரி

Digitized by Google

யமாயிருப்பதில்லை, அது அவனுக்குப் பலியாமல் அருவருப்பாயிருக்கும்; அதிலே புசித்த ஆத்துமா தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௰௯ தீட்டான எந்த வஸ்துவும் தொட்ட அந்த மாம்சம் புசிக்கப்படாமல், அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது; புசிக்கப்படும் மாம்சத்திலோவென்றால், சுத்தமாயிருக்கிறவனெல்லாம் புசிக்கலாம்.

௨௰ ஒரு ஆத்துமா தன் தீட்டுத் தன்மேலிருந்தும் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்தானேயாகில், அந்த ஆத்துமா தன் சனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

௨௧ ¶ மனிதனுடைய தீட்டாவது, தீட்டான மிருகமாவது, தீட்டான எந்த அருவருப்புமாவது, ஒரு ஆத்துமா தீட்டான அப்படிக்கொத்த யாதொன்றைத் தொட்டிருந்தும், கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்திலே புசித்தால், அந்த ஆத்துமா தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பானென்றார்.

௨௨ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௩ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், மாடு ஆடு வெள்ளாடு என்றவைகளின் கொழுப்பில் ஒன்றையும் புசியீர்களாக.

௨௪ தானாய்ச் செத்ததின் கொழுப்பும் பீறுண்டதின் கொழுப்பும் பலவித வேலைக்கு வழங்கப்படலாம்; ஆனால் நீங்கள் அவைகளைப் புசிக்கவே புசிக்கவேண்டாம்.

௨௫ ஏனெனில் கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

௨௬ *உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் ஒரு பறவையின் இரத்தத்தையானாலும் ஒரு மிருகத்தின் இரத்தத்தையானாலும் புசியீர்களாக. *௩ மோ. ௩. ௰௭.

௨௭ யாதொரு இரத்தத்தைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பான் என்று சொல்லென்றார்.

௨௮ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௯ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், கர்த்தருக்குத் தன்னுடைய சமாதான பலியைச் செலுத்துகிறவன் அதிலே செலுத்துகிறதைக் கர்த்தருக்குக் கொண்டுவருவானாக.

௩௰ அவனுடைய கைகள் கர்த்தருடைய தகனங்களாகிய மார்க்கண்டத்தையும் அதனோடுங்கூட அதின்மேலே வைத்த கொழுப்பையும் கர்த்தருக்குமுன்பாகக் காணிக்கையாக அசைவாட்டும்படிக்குக் கொண்டுவரக்கடவது.

௩௧ அப்பொழுது ஆசாரியன் அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; மார்க்கண்டமோவெனில் ஆரோனையும் அவன் குமாரரையுஞ்சேரும்.

௩௨ உங்கள் சமாதானபலிகளில் வலது முன்னந்தொடையையும் ஏறெடுக்கும்படிக்கு ஆசாரியனுக்குக் கொடுப்பீர்களாக.

௩௩ ஆரோனுடைய குமாரரில் சமாதானபலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு வலது முன்னந்தொடை பங்காகச் சேரும்.

௩௪ ஏனெனில் இஸ்ரவேல் புத்திரரின் சமாதானபலிகளில் அசைவாட்டின மார்க்கண்டத்தையும் ஏறெடுத்த முன்னந்தொடையையும் நாம் அவர்கள் கையில் வாங்கி, அவைகளை ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல் புத்திரரால் நடக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தோமென்று சொல்லென்றார்.

௩௫ கர்த்தருக்கு ஆசாரிய ஊழியஞ்செய்ய அவர் ஆரோனையும் அவன் குமாரரையும் சேர்த்தநாளிலே, இது அபிஷேகம் பண்ணப்பட்ட அவர்களுக்குக் கர்த்தருடைய தகனங்களிலே செல்லும் கட்டளை ஆயிற்று.

Digitized by Google

௩௬ இப்படி அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரராலே அவர்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாகக் கொடுக்கப்பட, கர்த்தர் அவர்களை அபிஷேகம்பண்ணின நாளிலே கற்பித்தார்.

௩௭ ¶ சர்வாங்கதகனத்திற்கும், காணிக்கைக்கும், பாவம்போக்கும் பலிக்கும், குற்றம்போக்கும் பலிக்கும், கைகளை நிரப்பும் பலிகளுக்கும், சமாதானபலிகளுக்கும், அடுத்த நியாயப்பிரமாணம் இதுதானே.

௩௮ கர்த்தருக்குத் தங்கள் செலுத்துதல்களைச் செலுத்த அவர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சீனாயின் வனாந்தரத்திலே கற்பிக்கும் நாளிலே இவைகளை மோசேக்குச் சீனாய் பர்வதத்திலே கட்டளையிட்டார்.

௮. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரரையும் அழைத்து, வஸ்திரங்களையும் அபிஷேகத்தெண்ணெயையும் பாவம்போக்குதலுக்கு ஒரு காளை எருதையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் புளிப்பில்லாத அப்பங்களுள்ள ஒரு கூடையையும் கொண்டுவந்து,

௩ சபையை எல்லாம் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாகக் கூட்டென்றார்.

௪ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே மோசே செய்தான்; சபை ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு முன்பாகக் கூடின பொழுது,

௫ ¶ மோசே சபையுடனே, இது கர்த்தர் செய்யக் கற்பித்த காரியம் என்றான்.

௬ பிற்பாடு மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் சேர அழைத்து, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, அவர்களைத் தண்ணீரினாலே கழுவி,

௭ *அவனுக்கு உள்சட்டையைப் போட்டு, நடுக்கட்டுக் கட்டி, அங்கியை உடுத்து, ஆசாரிய சால்வையைப் போர்த்து, அதின்மேல் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சையை அவனுக்குக் கட்டி,

*௨ மோ. ௨௮. ௪.

௮ அவனுக்கு மார்ப்பதக்கத்தைத் தரித்து, மார்ப்பதக்கத்திலே *வெளிச்சங்களையும் உத்தமங்களையும் வைத்து, *௨மோ. ௨௮. ௩௰.

௯ அவன் தலையிலே பாகையைப் போட்டு, பாகையின்மேல் அவன் முகத்திற்கு நேராகப் பரிசுத்த கிரீடமென்ற பொன்பட்டத்தைக் கட்டினான்.

௰ பிற்பாடு மோசே அபிஷேகத்தெண்ணெயை எடுத்துக்கொண்டு, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கி,

௰௧ அதில் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் தொட்டியையும் அதின் புரிமணையையும் பரிசுத்தமாக்கும்படிக்கு அபிஷேகம்பண்ணி,

௰௨ அபிஷேகத்தெண்ணெயிலே கொஞ்சம் *ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தமாக்கும்படிக்கு அபிஷேகம்பண்ணினான். *சங். ௱௩௩. ௨.

௰௩ பிற்பாடு மோசே ஆரோனின் குமாரரைச் சேர அழைத்து, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அவர்களுக்குச் சட்டைகளை உடுத்து, நடுக்கட்டுகளைக் கட்டி, குல்லாக்களைப் போட்டுக்கட்டி,

௰௪ ¶ பாவம்போக்குதலின் காளை எருதைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௰௫ அப்பொழுது அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் மற்ற இரத்தத்தைப் பிடித்து, தன் விரலினாலே பலிபீடத்தின் கொம்புகளின்மேலே சுற்றிலும் பூசி, பலிபீடத்திற்காகப் பாவம்போக்குதலைச் செய்து, இரத்தத்தைப் பலிபீடத்தடியில் ஊற்றிப்போட்டு, அதின்மேலே பாவநிவிர்த்தி உண்டாகும்படிக்கு அதைப் பரிசுத்தமாக்கினான்.

Digitized by Google

௰௬ பின்பு மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, குடல்கள்மேலிருந்த எல்லாக் கொழுப்பையும் கல்லீரலின்மேல் இருந்த சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின் கொழுப்பையும் எடுத்துக்கொண்டு, பலிபீடத்தின்மேலே கொளுத்தி,

௰௭ காளை எருதையும் அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியாலே சுட்டெரித்தான்.

௰௮ ¶ பின்பு சர்வாங்கதகனமாகும் ஆட்டுக்கடாவைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௰௯ அப்பொழுது அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலேசுற்றிலும்தெளித்தான்.

௨௰ ஆட்டுக்கடா சந்துசந்தாகத் துண்டித்துப் போடப்பட்டபின் மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, தலையையும் துண்டங்களையும் கொழுப்பையும் கொளுத்தி,

௨௧ குடல்களையும் தொடைகளையும் தண்ணீரினாலே கழுவி, ஆட்டுக்கடாவை முழுவதும் பலிபீடத்தின்மேலே கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனைக்கான சர்வாங்கதகனமாகக் கொளுத்தினான்.

௨௨ ¶ பின்பு கைகளை நிரப்புதலின் இரண்டாம் ஆட்டுக்கடாவைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௨௩ பின்பு அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் இரத்தத்திலே கொஞ்சம் பிடித்து, ஆரோனுடைய வலது காதின் மடலிலும் வலதுகையின் பெருவிரல்மேலும் வலதுகாலின் பெருவிரல்மேலும் பூசினான்.

௨௪ பின்பு ஆரோனுடைய குமாரரையும் அழைத்து, அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரல்மேலும் வலதுகாலின் பெருவிரல்மேலும் பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

௨௫ கொழுப்பையும், வாலையும், குடல்கள்மேலிருந்த எல்லாக் கொழுப்பையும், கல்லீரலின்மேல் இருந்த சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும் எடுத்து,

௨௬ கர்த்தருக்குமுன்பாக வைத்திருந்த புளிப்பில்லாத அப்பங்களின் கூடையிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் எண்ணெய் அப்பமாகிய ஒரு அதிரசத்தையும் ஒரு அடையையும் எடுத்து, அந்தக் கொழுப்பின்மேலும் முன்னந்தொடையின்மேலும் வைத்து,

௨௭ அவைகளை எல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவன் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும் காணிக்கையாகக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டி,

௨௮ பின்பு அவைகளை அவர்கள் உள்ளங்கைகளில் எடுத்து, பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியின்மீதில் கொளுத்தினான்; அது ஆற்றுகிற வாசனைக்கான கைநிரப்புதலின் பலியும் கர்த்தருக்குத் தகனமும் ஆயிற்று.

௨௯ பின்பு மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருக்குமுன்பாகக் காணிக்கையாக அலைசவாட்டினான்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவைகள் கைகளை நிரப்புதலின் ஆட்டுக்கடாவிலே மோசேயின் பங்காயின.

௩௰ ¶ மோசே அபிஷேகத்தெண்ணெயிலும் பலிபீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனின்மேலும் அவன் வஸ்திரங்களின்மேலும் அவன் குமாரரின்மேலும் அவர்கள் வஸ்திரங்களின்மேலும் தெளித்தான்; ஆரோனையும் அவன் வஸ்

Digitized by Google

திரங்களையும் அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தம் பண்ணினான்.

௩௧ ¶ கடைசியிலே மோசே ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொன்னதாவது: நீங்கள் அந்த மாம்சத்தை ஆசரிப்புக்கூடாரவாசலிலே வேவித்து, ஆரோனும் அவன் குமாரரும் அதைப் புசிப்பார்களாக என்று கற்பித்திருக்கிறபடியே, அங்கே அதையும் உங்கள் கைகளை நிரப்புதலின் கூடையிலிருக்கிற அப்பத்தையும் புசித்து,

௩௨ மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியாலே சுட்டெரித்து,

௩௩ கைகளை நிரப்புகிற நாள்கள் நிறைவேறும்மட்டும், ஏழுநாள் ஆசரிப்புக்கூடாரவாசலைவிட்டுப் புறப்படாதிருப்பீர்களாக; ஏனெனில் ஏழுநாள்மட்டும் உங்கள் கைகள் நிரப்பப்படும்.

௩௪ இந்நாளிலே செய்யப்பட்டதுபோல, உங்கள் பாவநிவிர்த்திக்காக, இனிமேலும் செய்யப்படவேண்டுமென்று கர்த்தர் கற்பித்தார்.

௩௫ நீங்கள் சாவாதபடிக்கு ஏழுநாள் இரவும்பகலும் ஆசரிப்புக்கூடாரவாசலிலிருந்து, கர்த்தருடைய காவலைக் காக்கக்கடவீர்கள்; ஏனென்றால் இப்படிக் கற்பிக்கப்பட்டேனென்றான்.

௩௬ கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள்.

௯. அதிகாரம்.

சம்பவித்ததேதென்றால் எட்டாம்நாளிலே, மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து,

௨ ஆரோனோடே சொன்னதாவது: நீ பாவம்போக்கும்பலியாக மாடுகளிலே பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும் சர்வாங்கதகனபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் பிடித்து, கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவா.

௩ ஆனால் இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதேதெனில், கர்த்தருக்குமுன்பாகப் பலியிடும்படிக்கு, நீங்கள் பாவம்போக்கும்பலியாகப் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவையும், சர்வாங்கதகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், ஒரு ஆட்டுக்குட்டியையும்,

௪ சமாதானபலியாக ஒரு எருதையும், ஒரு ஆட்டுக்கடாவையும், எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும், கொண்டுவாருங்கள்; ஏனெனில் இன்று கர்த்தர் உங்களுக்குத் தரிசனையாவார் என்று சொல்லென்றான்.

௫ மோசே கற்பித்தவைகளை ஆசரிப்புக்கூடாரத்திற்குமுன்பாகக் கொண்டுவந்தார்கள்; சபை எல்லாம் சேர்ந்து, கர்த்தருக்குமுன்பாக நின்றது.

௬ அப்பொழுது மோசே, கர்த்தர் கற்பித்த இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படும் என்றான்.

௭ ¶ பிற்பாடு மோசே ஆரோனுடனே, நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கற்பித்தபடியே பாவம்போக்கும் உன் பலியையும் சர்வாங்கதகனமான உன் பலியையும் செலுத்தி, உனக்காகவும் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தி உண்டாக்கி, சனத்தின் பலியையும் செலுத்தி, அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கென்றான்.

௮ ¶ அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, தன் பாவம்போக்குதலின் கன்றுக்குட்டியைக் குரல்வளை அறுத்தான்.

௯ ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அவன் தன் விரலை இரத்தத்திலே தோய்த்து, பலிபீடத்தின் கொம்புகளின்மேலே பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தடியில் ஊற்றி,

௰ பாவம்போக்கும்பலியின் கொழுப்பையும், குண்டிக்காய்களையும், கல்லீரலைவிட்டு

Digitized by Google

வாங்கின சவ்வையும், பலிபீடத்தின்மேலே கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கொளுத்தப்படவைத்தான்.

௰௧ ஆனால் மாம்சத்தையும் தோலையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியாலே சுட்டெரித்தான்.

௰௨ ¶ பிற்பாடு சர்வாங்கதகனபலியின் குரல்வளையை அறுத்தான்; ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அதைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்தான்.

௰௩ துண்டங்கள் ஆக்கப்பட்ட சர்வாங்கதகனபலியையும் தலையையும் அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அவன் அவைகளைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தப்படவைத்து,

௰௪ குடல்களையும் தொடைகளையும் கழுவி, பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனத்தின் மீதில் கொளுத்தப்படவைத்தான்.

௰௫ ¶ பிற்பாடு அவன் சனத்தின் பலியைக் கிட்டக் கொண்டுவந்து, சனத்திற்காகிய பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடாவைப் பிடித்து, அதின் குரல்வளையை அறுத்து, முந்தினவைக்குச் சரியாக அதைப் பாவம்போக்கும்பலியாக்கி,

௰௬ சர்வாங்கதகனபலியைக் கிட்டக் கொண்டுவந்து, நியாயமுறைமையின்படியே செலுத்தி,

௰௭ காணிக்கையையும் கிட்டக் கொண்டுவந்து, தன் உள்ளங்கையை அதினால் நிரப்பி, அதைக் காலையில் செலுத்தும் சர்வாங்கதகனமும் அல்லாமல், பலிபீடத்தின்மேல் கொளுத்தப்படவைத்தான்.

௰௮ பிற்பாடு சனத்தின் சமாதானபலியாகிய எருதையும் ஆட்டுக்கடாவையும் குரல்வளை அறுத்தான்; அதின் இரத்தத்தை ஆரோனின் குமாரர் அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அதைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்தான்.

௰௯ எருதிலும் ஆட்டுக்கடாவிலும் எடுத்த கொழுப்புகளையும் வாலையும், குடல்களை மூடியதையும், குண்டிக்காய்களையும், கல்லீரலின்மேலிருந்த சவ்வையும் கொண்டுவந்து,

௨௰ கொழுப்புகளை மார்க்கண்டங்களின் மேலே வைத்தார்கள்; அந்தக் கொழுப்புகளைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தப்படவைத்தான்.

௨௧ ¶ ஆனால் மார்க்கண்டங்களையும் வலதுமுன்னந் தொடையையும், ஆரோன் மோசேக்குக் கற்பித்தபடியே, கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக அசைவாட்டினான்.

௨௨ பிற்பாடு ஆரோன் தன் கைகளைச் சனத்திற்குநேராக ஏறெடுத்து, அவர்களை ஆசீர்வதித்து, தான் பாவம்போக்கும்பலியையும், சர்வாங்கதகனபலியையும், சமாதானபலியையும், செலுத்தின இடத்திலிருந்து இறங்கினான்.

௨௩ மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசித்து, வெளியே வந்து, சனத்தை ஆசீர்வதித்தார்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை எல்லாச் சனத்திற்கும் காணப்பட்டது.

௨௪ ¶ *அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, பலிபீடத்தின்மேலிருந்த சர்வாங்கதகனபலியையும் கொழுப்புகளையும் எரித்துவிட்டது; சனமெல்லாம் அதைக் கண்டபொழுது கெம்பீரமாய் முகம்குப்புறவிழுந்தார்கள். *௧ இரா. ௰௮. ௩௮. ௨ நாளா. ௭. ௧.

௰. அதிகாரம்.

நாதாப், அபியூ என்ற ஆரோனின் குமாரரோவெனில், ஒவ்வொருவன் தன் தன் தூபகலசத்தை எடுத்து, அவைகளில் நெருப்பையும் அதின்மேலே தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கற்பிக்காதிருந்த அந்நிய அக்கினியை அவருக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

Digitized by Google

௨ அப்பொழுது அக்கினி கர்த்தரின் சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப்

பட்சித்தது; அங்கே கர்த்தருக்குமுன்பாகச் செத்தார்கள்.

௩ அப்பொழுது மோசே ஆரோனோடே, நம்மண்டையில் சேருகிறவர்களால் நாம் பரிசுத்தம் விளங்கி, எல்லாச் சனத்திற்கும் முன்பாக மகிமைப்படுவோமென்று கர்த்தர் பேசிச் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்.

௪ பிற்பாடு மோசே ஆரோனின் சிறியதகப்பனான ஊசியேலின் குமாரராகிய மீசவேலையும் எலிசாப்பானையும் அழைத்து, அவர்களோடே, நீங்கள் சேர்ந்து, உங்கள் சகோதரரைப் பரிசுத்தஸ்தலத்திற்குமுன்பாக இருந்தெடுத்து, பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோங்கள் என்றான்.

௫ இவர்கள் மோசே சொன்னபடி சேர்ந்து, அவர்களை அவர்கள் சட்டைகளோடெடுத்து, பாளயத்திற்குப்புறம்பே கொண்டுபோனார்கள்.

௬ ¶ மோசே ஆரோனோடும் எலெயாசார், இத்தாமாரென்ற அவன் குமாரரோடும் சொன்னதாவது: நீங்கள் சாவாதபடிக்கும், சபையின்மேலெல்லாம் கடுங்கோபம் வாராதபடிக்கும் நீங்கள் உங்கள் தலைகளைத்திறவாமலும் உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் வீட்டார் எல்லாரும் கர்த்தர் சுட்ட இந்தச் சூட்டிற்காக அழுவார்கள்.

௭ நீங்கள் சாவாதபடிக்கு ஆசரிப்புக்கூடாரவாசலிலிருந்து புறப்படீர்களாக; ஏனெனில் கர்த்தருடைய அபிஷேகத்தெண்ணெய் உங்கள்மேல் இருக்கிறதென்றான்; மோசேயினுடைய வார்த்தையின்படியே செய்தார்கள்.

௮ ¶ கர்த்தர் ஆரோனோடே பேசிச் சொன்னதாவது:

௯ நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாவாதபடிக்கு, ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபொழுது, திராட்சப்பழ இரசத்தையும் லாகிரியுள்ளதையும் குடியீர்களாக.

௰ பரிசுத்தமானதற்கும் பரிசுத்தம் அல்லாததற்கும், தீட்டானதற்கும் சுத்தமானதற்கும், வித்தியாசம்பண்ணுவதற்கும்,

௰௧ கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன சகல பிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிப்பதற்கும், இது உங்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாய் இருக்குமென்றார்.

௰௨ ¶ மோசே ஆரோனோடும் மீதியான அவன் குமாரராகிய எலெயாசாரோடும் இத்தாமாரோடும் சொன்னதாவது: நீங்கள் கர்த்தருடைய தகனங்களில் மீதியான காணிக்கையை எடுத்துக்கொண்டு, பலிபீடத்தண்டையிலே புளிப்பில்லாததாகப் புசியுங்கள்; ஏனெனில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௰௩ அதைப் பரிசுத்தஸ்தலத்திலே புசிப்பீர்களாக; ஏனெனில் அது கர்த்தருடைய தகனங்களில் உன் கட்டளையும் உன் குமாரரின் கட்டளையுமானது; அதேனென்றால் இப்படிக் கற்பிக்கப்பட்டேன்.

௰௪ அசைவாட்டின மார்க்கண்டத்தையும், ஏறெடுத்த முன்னந்தொடையையும், நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் குமாரத்திகளும் சுத்தஸ்தலத்திலே புசிப்பீர்களாக; ஏனெனில் இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளில் அவைகள் உன்னுடைய கட்டளையாகவும், உன் பிள்ளைகளுடைய கட்டளையாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

௰௫ கொழுப்புகளின் தகனபலிகளோடேகூட அவர்கள் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக ஏறெடுக்கும் முன்னந்தொடையையும், அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் கொண்டுவருவார்கள்; அது கர்த்தர் கற்பித்தபடியே உன்னையும் உன்னோடேகூட உன் பிள்ளைகளையும் நித்திய கட்டளையாகச் சேருமென்றான்.

௰௬ ¶ பாவம்போக்கும்பலியான வெள்ளாட்டுக்கடாவை மோசே தேடவே தேடினான்; ஆனால் இதோ, சுட்டெரிக்கப்பட்

Digitized by Google

டிருந்தது; ஆகையால் எலெயாசார், இத்தாமார் என்ற ஆரோனின் மீதியான குமாரர் மேலே அவன் கடுங்கோபமாகி,

௰௭ பாவம்போக்கும்பலியை நீங்கள் பரிசுத்தஸ்தலத்திலே புசியாதேபோனதென்ன? அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கின்றதே; சபையின் அக்கிரமத்தைச் சுமக்கவும், அவர்களுக்காகப் பாவநிவிர்த்தியைக் கர்த்தருக்குமுன்பாக உண்டாக்கவும், அதை உங்களுக்குக் கொடுத்தாரே.

௰௮ இதோ, அதின் இரத்தம் பரிசுத்தஸ்தலத்திற்குள் கொண்டுபோகப்பட்டதில்லையே; ஆகையால் நீங்கள் அதை நான் கற்பித்தபடி பரிசுத்தஸ்தலத்திலே புசிக்கவே புசிக்கவேண்டியதாய் இருந்தது என்றான்.

௰௯ அப்பொழுது ஆரோன் மோசேயோடே சொன்னதாவது: இதோ, அவர்கள் பாவம்போக்கும் தங்கள் பலியையும், தங்கள் சர்வாங்கதகனபலியையும், கர்த்தருக்கு முன்பாகச் செலுத்தின இன்றுதானே எனக்கு இப்படி நடந்ததே; பாவம்போக்கும்பலியை இன்று புசிப்பேனே, அது கர்த்தரின் பார்வைக்கு நன்றாய் இருக்குமோ என்றான்.

௨௰ மோசே இதைக் கேட்கிறபொழுது அது அவன் பார்வைக்கு நன்றாயிருந்தது.

௰௧. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி, அவர்களோடே சொன்னதாவது:

௨ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது, * பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க சீவன்கள் ஏதெனில், * ௫ மோ. ௰௪. ௪. அப். ௰. ௰௪, ௰௫.

௩ மிருகங்களில் விரிதல்குளம்புள்ளதாய் இருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமானவைகளை எல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

௪ ஆனால் அசைபோடுகிறவைகளிலும், அல்லவென்று விரிதல் குளம்புள்ளவைகளிலும், நீங்கள் புசிக்கத்தகாதது ஏதென்றால் ஒட்டகம்; ஏனெனில் அது அசைபோட்டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௫ குழிமுசலும், ஏனெனில் அது அசைபோட்டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௬ முசலும், ஏனெனில் அது அசைபோட்டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௭ பன்றியும், ஏனெனில் அதின் குளம்பு விரிதல்குளம்பும் இரண்டாகப் பிரிந்ததுமாய் இருந்தும் அசைபோடாதிருக்கும், அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௮ இவைகளின் மாம்சத்திலே புசியாமலும் இவைகளின் உடல்களைத் தொடாமலும் இருப்பீர்களாக; இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

௯ ¶ தண்ணீர்களிலிருக்கிற யாவிலும் நீங்கள் புசிக்கத்தக்கது ஏதென்றால், கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகும் செதிளும் உள்ளவைகளை எல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

௰ ஆனால் கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களில் நீந்துகிறதும் இருக்கிறதுமான உயிர்ப்பிராணிகளில் எல்லாம் சிறகும் செதிளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.

௰௧ அவைகள் உங்களுக்கு அருவருப்பாய் இருக்கக்கடவது; அவைகளினுடைய மாம்சத்திலே புசியாதிருந்து, அவைகளின் உடல்களை அருவருப்பீர்களாக.

௰௨ தண்ணீர்களிலே சிறகும் செதிளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாய் இருக்கக்கடவது.

௰௩ ¶ பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்கவேண்டியவைகள் எவையென்றால், கழுகும், கருடனும், கடல் உராஞ்சியும்,

Digitized by Google

௰௪ பருந்தும், சாதி சாதியான வல்லூறும்,
௰௫ சகலவித சாதியான காகங்களும்,
௰௬ தீவுக்குருவியும், கருவாட்டுவாலியும், செம்புகமும், சாதி சாதியான ஆள்காட்டியும்,
௰௭ ஆந்தையும், சகோரப்பட்சியும், கோட்டானும்,
௰௮ வௌவாலும், நாரையும், கோட்டுவாளும்,
௰௯ கொக்கும், சாதி சாதியான இராசாளியும், கொண்டலாத்தியும், துரிஞ்சிலும் என்றவைகள்.
௨௰ ¶ பறக்கிறவைகளில் நான்கு காலால் நடமாடுகிற ஊர்வன யாவும் உங்களுக்கு அருவருப்பாய் இருப்பதாக.
௨௧ ஆகிலும் பறக்கிறவைகளில் நான்கு காலால் நடமாடுகிற யாவிலும், நீங்கள் எதைப் புசிக்கலாமென்றால், தரையிலே குதிக்கிறதற்குக் கால்களின்மேலே தொடைகள் உண்டாயிருக்கிறவைகளிலே,
௨௨ வெட்டுக்கிளிச் சாதியாயிருக்கிறதையும், சோலையாம் என்ற கிளிச்சாதியாய் இருக்கிறதையும், அரகொலென்ற கிளிச் சாதியாய் இருக்கிறதையும், ஆகாப்பென்ற கிளிச்சாதியாய் இருக்கிறதையும், நீங்கள் புசிக்கலாம்.
௨௩ பறக்கிறவைகளில் நான்கு காலுண்டாய் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.
௨௪ அவைகளாலே தீட்டடைவீர்கள்; அவைகளின் உடலைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.
௨௫ அவைகளின் உடலைச் சுமந்தவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.
௨௬ ¶ விரிதல் நகங்களுள்ளவைகளாய் இருந்தும், அவைகளை இரண்டாகப் பிரியப்பண்ணாமலும், அசைபோடாமலும் இருக்கிற சகல மிருகங்களும் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; அவைகளைத் தொடுகிறவனெல்லாம் தீட்டடைவான்.
௨௭ நான்கு காலால் நடக்கிற சகல சீவன்களிலும் தங்கள் உள்ளங்கால்களை ஊன்றி நடக்கிற யாவும் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; அவைகளின் உடலைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.
௨௮ அவைகளின் உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவைகள் உங்களுக்குத் தீட்டுள்ளவைகள்.
௨௯ ¶ தரையோடே ஊருகிற ஊர்வனவைகளில் உங்களுக்குத் தீட்டாயிருப்பவைகள், பெருச்சாளியும், எலியும், சாதி சாதியான ஆமையும்,
௩௰ உடும்பும், அளுங்கும், ஓணானும், பல்லியும், பச்சோந்தியும் என்றவைகள்.
௩௧ சகல ஊர்வனவற்றிலும் இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; செத்த அவைகளைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.
௩௨ செத்த அவைகளில் யாதொன்று எதின்மேல் விழுகிறதோ, அதுவெல்லாம் தீட்டுப்பட்டிருக்கும்; அது எந்த மரமுட்டானாலும், வஸ்திரமானாலும், தோலானாலும், பையானாலும் வேலைசெய்கிற எந்த ஆயுதமானாலும் சரி, தண்ணீரிலே போடப்பட்டு, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பதாக; அப்பொழுது சுத்தமாம்.
௩௩ அவைகளில் யாதொன்று எந்த நவ பாண்டத்திற்குள்ளும் விழுந்தால், அதற்குள் இருக்கின்றவை எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும்; அதையோவென்றால் உடைப்பீர்களாக.
௩௪ புசிக்கிற சகல போசனத்திலும் எதிலே தண்ணீர் வந்திருக்கின்றதோ, அது தீட்டாகும்; குடிக்கிற சகலமும் எந்தப்பாத்திரத்தில் இருந்தாலும் சரி, தீட்டாம்.

Digitized by Google

௩௫ அவ்வைகளின் உடலில் யாதொன்று எதின்மேல் விழுகிறதோ, அது எல்லாம் தீட்டாம்; அடுப்பும் மண்தொட்டியுமானாலும் சரி, தகர்க்கப்படுவதாக, அவைகள் தீட்டுப்பட்டிருக்கும்; ஆகையால் உங்களுக்கு அவைகள் தீட்டாயிருக்கும்.

௩௬ நீர் ஊற்றும் தண்ணீர் உண்டாகிய கிணறுமோவென்றால், சுத்தமாயிருக்கும்; ஆனால் அவைகளின் உடலைத் தொடுகிறவன் தீட்டுப்படுகிறான்.

௩௭ அவைகளின் உடலில் யாதொன்று விதைக்கிற எந்தத் தானியத்தின்மேல் விழுந்தாலும், அது சுத்தமாயிருக்கும்.

௩௮ தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின்மேல் விழுந்ததேயாகில், உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக.

௩௯ ¶ உங்களுக்கு ஆகாரத்திற்கான ஒரு மிருகம் செத்தாலும் அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௪௰ அதின் உடலிலே புசித்தவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் உடலை எடுத்துப்போனவனும் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௪௧ ¶ தரையோடே நகருகிற ஊர்வனவெல்லாம் அருவருப்பாயிருக்கக்கடவது; அவை புசிக்கப்படலாகாது.

௪௨ தரையோடே ஊருகிற சகல ஊர்வனவற்றிலும் வயிற்றாலே நகருகிற யாதொன்றையும், நான்குகாலால் நடக்கிற யாதொன்றையும், அல்லது அநேகம் கால்களுள்ள யாதொன்றையும் புசியீர்களாக; ஏனெனில் அவைகள் அருவருப்பாய் இருக்கின்றவைகள்.

௪௩ ஊருகிற எந்த ஊர்வனவற்றாலும் உங்கள் ஆத்துமாக்களை அருவருப்பாக்காமலும், அவைகளால் தீட்டுப்படாமலும் இருப்பீர்களாக; ஏனெனில் அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்.

௪௪ அதேனென்றால் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்; ஆகையால் உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராய் இருப்பீர்களாக; ஏனெனில் நாம் பரிசுத்தர்; ஆனபடியினாலே தரையோடே ஊருகிற எந்த ஊர்வனவற்றாலும் உங்கள் ஆத்துமாக்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள்.

௪௫ உங்கள் பராபரனாயிருக்கும்படிக்கு நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின கர்த்தர்; ஆகையால்பரிசுத்தராயிருப்பீர்களாக; ஏனெனில் நாம் பரிசுத்தர்.

௪௬ ¶ தீட்டானதற்கும், சுத்தமானதற்கும், புசிக்கப்படும் சீவனுக்கும் புசிக்கப்படாத சீவனுக்கும், வித்தியாசம்பண்ணுவதற்காக,

௪௭ இது மிருகத்திற்கும் பறவைக்கும் தண்ணீர்களில் நீந்துகிற சகல சீவசெந்திற்கும் பூமியின்மேலே ஊருகிற சகல சீவனுக்கும் அடுத்த நியாயப்பிரமாணம் என்று சொல்லுங்களென்றார்.

௰௨. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒரு ஸ்திரி கர்ப்பம்தரித்து, ஆண்பிள்ளையைப் பெற்றால், அவள் தூரஸ்திரியாய் விலக்கமாயிருக்கிற நாள்களுக்குச் சரியாக ஏழுநாள் தீட்டாயிருப்பாள்.

௩ எட்டாம்நாளிலே அதினுடைய நுனித்தோலின் மாம்சம் சுன்னத்துப் பண்ணப்படக்கடவது.

௪ பிற்பாடு அவள் முப்பத்துமூன்றுநாள் தன் உதிரச் சுத்திகரிப்பிலிருந்து, தன் சுத்திகரிப்பின் நாள்கள் நிறைவேறும்மட்டும், பரிசுத்தமான யாதொரு வஸ்துவைத் தொடவும் பரித்தஸ்தலத்திற்கு வரவும் வேண்டாம்.

௫ பெண்பிள்ளையைப் பெற்றாளேயாகில்,

Digitized by Google

அவன் இரண்டு வாரம் தூரஸ்திரியாயிருக்கிறதுபோல, தீட்டாயிருந்து, பிற்பாடு அறுபத்தாறு நாள் தன் உதிரச் சுத்திகரிப்பிலிருக்கக்கடவள்.

௬ ¶ ஆண்பிள்ளையை, அல்லது பெண்பிள்ளையைப் பெற்றதற்காக அவள் சுத்திகரிப்பின் நாள்கள் நிறைவேறினபின்பு, அவள் ஒரு வயதான ஆட்டுக்குட்டியைச் சர்வாங்கதகனபலியாகவும், ஒரு புறாக்குஞ்சையாகிலும் காட்டுப்புறாவை என்கிலும் பாவம்போக்கும் பலியாகவும், ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு ஆசாரியனண்டையிலே கொண்டுவரக்கடவள்.

௭ அதை அவன் கர்த்தருக்குமுன்பாகச் செலுத்தி, அவளுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்குவானாக; அப்பொழுது தன் உதிரஊறலில் தீட்டிற்குச் சுத்தமாவாள்; இது ஆண்பிள்ளையை அல்லது பெண்பிள்ளையைப் பெற்றவளின் நியாயப்பிரமாணம்.

௮ ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவள் கைக்கில்லாதிருந்ததேயாகில், அவள் இரண்டு காட்டுப்புறாக்களை, அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளை ஒன்றைச் சர்வாங்கதகனபலியாகவும், மற்றதைப் பாவம்போக்கும் பலியாகவும், கொண்டுவருவாளாக; அதினால் ஆசாரியன் அவளுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருப்பாளென்று சொல்லென்றார்.

௰௩ அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨ ஒருமனிதனுடைய மாம்சத்தின் தோலிலே குஷ்டவாதையைப்போலிருக்கிற ஒரு வீக்கமாகிலும் சிரங்காகிலும் வெள்ளை மறு என்கிலும் உண்டானால், அவன் ஆசாரியனாகிய ஆரோனண்டைக்கு, அல்லது ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனண்டைக்குக் கொண்டுவரப்படக்கடவன்.

௩ அப்பொழுது ஆசாரியன் மாம்சத்தின் தோலிலிருக்கிற வாதையின் இடத்தைப் பார்க்கக்கடவன்; அதிலே மயிர் வெண்மையாக மாறினதும் வாதையினிடம் அவன் மாம்சத்தின் தோலைப்பார்க்கிலும் பள்ளமுமாயிருந்தால், அது குஷ்டத்தின் வாதை; ஆசாரியன் அவனைப் பார்த்தபொழுது, அவனைத் தீட்டுள்ளவனாகத் தீர்க்கக்கடவன்.

௪ அவன் மாம்சத்தோலிலே வெள்ளை மறு இருந்தாலும், அவ்விடம் அவன் மாம்சத்தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிராமலும் அதின் மயிர் வெண்மையாக மாறாமலும் இருந்ததாகில், ஆசாரியன் அவனை ஏழு நாள் அடைத்துவைத்து,

௫ ஏழாம்நாளிலே அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, வாதையினிடம் தோலிலே அதிகப்படாமல், வாதை அவன் பார்வைக்கு நின்றிருந்தால், ஆசாரியன் இரண்டாம்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௬ இரண்டாம்தரம் அவனை ஏழாம்நாளிலே பார்க்கக்கடவன்; இதோ வாதை தோலிலே அதிகப்படாமல் சுருங்கி இருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது சிரங்குதான்; அவன் தன் வஸ்திரங்களை வெளுத்துச் சுத்தமாயிருப்பானாக.

௭ தன்னைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கிறதற்கு அவன் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பித்தபின்பு, சிரங்கு தோலிலே இடம் கொள்ளவே கொண்டதேயானால், அவன் மறுபடியும் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பிக்கக்கடவன்.

௮ இதோ சிரங்கு தோலிலே இடம் கொண்டதென்று ஆசாரியன் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டம்தானே.

௯ ¶ குஷ்டவாதை ஒரு மனிதனிலிருந்தால், ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரப்படக்கடவன்.

௰ இதோ, தோலிலே வெண்மையான வீக்கமிருந்து அது மயிரை வெண்மையாக

Digitized by Google

மாறப்பண்ணிற்றென்றும், வீக்கத்திலே பச்சைச் சதையின் குணம் உண்டென்றும், ஆசாரியன் கண்டால்,

௰௧ அப்பொழுது அது அவன் மாம்சத்தின் தோலிலே நாள்பட்ட குஷ்டம்; ஆசாரியன் அவனை அடைத்துவைக்காமல், தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் அவன் தீட்டுள்ளவன்தானே.

௰௨ குஷ்டம் தோலிலே துளிர்க்கவே துளிர்த்து, வாதையுள்ளவனுடைய தலைதுவக்கி அவன் கால்கள்மட்டும் ஆசாரியனுடைய கண்களுக்குத் தெரிகிற எவ்விடமும் தோலை எல்லாம் மூடிக்கொண்டிருந்ததேயானால்,

௰௩ அப்பொழுது ஆசாரியன் பார்த்து, இதோ, குஷ்டம் அவன் மாம்சத்தை எல்லாம் மூடியிருந்தால், அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; எல்லாம் வெண்மையாக மாறிற்று; அவன் சுத்தமானவன்.

௰௪ ஆனால் பச்சைச்சதை அவனில் காணப்படும்நாளிலே அவன் தீட்டுள்ளவன்.

௰௫ ஆகையால் ஆசாரியன் பச்சைச்சதையைக் காணும்பொழுது, அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்ப்பானாக; பச்சைச்சதை தீட்டுள்ளது, அது குஷ்டம்.

௰௬ அல்லவென்று பச்சைச்சதை மாறி வெண்மையாகப்போனால், அவன் ஆசாரியனண்டையில் வருவானாக.

௰௭ ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, வாதையின் இடம் வெண்மையாகமாறிற்றானால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் சுத்தமுள்ளவன்.

௰௮ ¶ மாம்சத்தின் தோலிலே எரிச்சல் உண்டாயிருந்து ஆறிப்போய்,

௰௯ பிற்பாடு அவ்விடத்தில் ஒரு வெள்ளை வீக்கம், அல்லது சிவப்புக்கலந்த ஒரு வெள்ளை மறு உண்டானால், ஆசாரியனுக்குக் காண்பிக்கப்படவேண்டும்.

௨௰ ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் தாழ்ந்ததும் அதின் மயிர் வெண்மையாக மாறினதுமாயிருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்ப்பானாக; அது எரிச்சலிலே எழும்பின குஷ்டம்.

௨௧ ஆசாரியன் அதைப் பார்க்கும்பொழுது, இதோ அதில் வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் தாழ்ந்திராமல், சுருங்கி இருக்கிறதென்றும், கண்டானேயாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௨௨ அது தோலில் இடம் கொள்ளவே கொண்டால், அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது அந்த வாதைதான்.

௨௩ அந்த வெள்ளை மறு அதிகப்படாமல், தன்னிடத்திலே நின்றதேயாகில், அது எரிபந்தத்தினுடைய வடுவாயிருக்கும்; ஆகையால் ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

௨௪ ¶ அல்லது ஒருவனுடைய மாம்சத்தின் தோலிலே நெருப்புப்பட்டதினாலே சூடுண்டாய், சூடாறிப்போன இடத்திலே சிவப்பாகிய அல்லது வெண்மையாகிய மறு உண்டானால்,

௨௫ ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அந்த மறுவிலே மயிர் வெண்மையாக மாறி, அவ்விடம் மற்றத்தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிருந்தால், அது சூட்டினால் எழும்பின குஷ்டம்; ஆகையால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டத்தின் வாதைதான்.

௨௬ ஆசாரியன் அதைப் பார்க்கிறபொழுது, இதோ மறுவிலே வெள்ளைமயிர் இல்லையென்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் தாழ்ந்திராமல் சுருங்கி இருக்கிறதென்றும், கண்டானேயாகில், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௨௭ ஏழாம்நாளில் அவனைப் பார்க்கக்

Digitized by Google

கடவன்; அது தோலில் இடம்கொள்ளவே கொண்டிருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டத்தின் வாதை.

௨௮ மறுவானது தோலில் இடம்கொள்ளாமல், தன்னிடத்திலே நின்று சுருங்கியிருந்ததேயாகில், அது சூட்டினால் உண்டான வடு; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் அது சூட்டினுடைய சிரங்கு.

௨௯ ¶ ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் தலையிலே அல்லது தாடியிலே ஒரு வாதை உண்டானால்,

௩௰ ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமும் அதிலே மயிர் பொன்நிறமும் கொஞ்சமுமாயிருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனாகத் தீர்க்கக்கடவன்; அது தலையிலே அல்லது தாடியிலே குஷ்டமான சொறியாயிருக்கும்.

௩௧ ஆசாரியன் அதைப் பார்க்கிறபொழுது, இதோ அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிராவிட்டாலும் அதிலே கறுப்பான மயிர் இல்லையென்று கண்டால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௩௨ ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; இதோ அந்தச் சொறி இடம்கொள்ளாமலும், அதிலே பொன்னிற மயிர் இல்லாமலும், அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமல்லாமலும் இருந்தால்,

௩௩ அவன் சிரைத்துக்கொண்டு, சொறியையோ சிரைத்துக்கொள்ளாதிருக்கக்கடவன்; பிற்பாடு ஆசாரியன் இரண்டாம் முறை அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௩௪ ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; இதோ, சொறி தோலில் இடம்கொள்ளாமலும் அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமல்லாமலுமிருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அவன் தன் வஸ்திரங்களை வெளுத்தபின் சுத்தமாயிருப்பான்.

௩௫ அவன் சுத்தமுள்ளவனென்று தீர்க்கப்பட்ட பிறகு அந்தச் சொறி தோலில் இடம்கொள்ளவே கொண்டதானால்,

௩௬ ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, சொறி தோலில் இடம்கொண்டிருந்தால், அப்பொழுது மயிருக்காக அது பொன்நிறமோ என்று ஆசாரியன் விசாரிக்கக் கவைஇல்லை; அவன் தீட்டுள்ளவன்தானே.

௩௭ தன் பார்வைக்கு அந்தச்சொறி நின்று, அதிலே கறுப்புமயிர் முளைத்ததேயாகில், சொறி தாவிலையாயிற்று; அவன் சுத்தமாயிருக்கிறான்; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

௩௮ ¶ ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் அவர்கள் மாம்சத்தின் தோலிலே வெள்ளை மாசுகளாகிய மாசுகளுண்டானால்,

௩௯ ஆசாரியன் பார்க்கக்கடவன்; இதோ, அவர்கள் மாம்சத்தோலிலே சுருங்கினதான வெள்ளை மாசுகளிருந்தால் அது தோலில் எழும்புகிற வெள்ளைத் தேமல்; அவன் சுத்தமுள்ளவன்.

௪௰ ¶ ஒருவனுடைய தலைமயிர் உதிர்ந்து, அவன் மொட்டையனானால், அவன் சுத்தமாயிருக்கிறான்.

௪௧ அவனுடைய முன்னந்தலை மயிர் உதிர்ந்தால், அவன் அரை மொட்டையன்; அவன் சுத்தமாயிருக்கிறான்.

௪௨ மொட்டைத்தலையில் அல்லது அரை மொட்டைத்தலையில் சிவப்புக்கலந்த வெண்மையான நிறம் உண்டாயிற்றேயானால், அது அதிலே எழும்புகிற குஷ்டம்.

௪௩ ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, அவனுடைய மொட்டைத் தலையிலே அல்லது அரைமொட்டைத்தலையிலே மாம்சத்தினுடைய தோலின் குஷ்டத்தைப்போலக் காணப்படுகிற சிவப்புக்கலந்த வெண்மையான வீக்கமிருந்தால்,

Digitized by Google

௪௪ அவன் குஷ்டரோகி, அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கவே தீர்க்கக்கடவன்; அவன் வாதை அவன் தலையிலே இருக்கின்றது.

௪௫ ¶ வாதை உண்டாயிருக்கிற குஷ்டரோகியின் வஸ்திரங்கள் கிழிந்தவைகளும் அவன் தலை திறந்ததுவுமாய் இருக்கவும், அவன் தன் தாடியை மூடிக்கொண்டிருந்து, தீட்டுள்ளவன், தீட்டுள்ளவனென்று கூப்பிடவும் வேண்டியது.

௪௬ அந்த வாதை அவனில் இருக்கும் நாளெல்லாம் தீட்டாக எண்ணப்படுவானாக; அவன் தீட்டானவன், தனியே குடியிருப்பானாக; அவன் குடியிருப்புப் பாளயத்திற்குப்புறம்பே இருக்கக்கடவது.

௪௭ ¶ ஆட்டுமயிர் அல்லது பஞ்சுநூல் நெசவான ஒரு வஸ்திரத்திலாகிலும்,

௪௮ பஞ்சுநூலும் அல்லது ஆட்டுமயிருமான பாவிலாகிலும், உண்டைநூலிலாகிலும், ஒரு தோலிலாகிலும், தோலான எந்தவித வேலையிலென்கிலும், குஷ்டத்தின் உரு உண்டாகி,

௪௯ வஸ்திரத்திலாகிலும், தோலிலாகிலும், பாவிலாகிலும், உண்டைநூலிலாகிலும், தோலான எந்தவித வேலையில் என்கிலும், அது கொஞ்சம் பச்சை அல்லது சிவப்பாயிருந்தால், குஷ்டமாயிருக்கும்; அது ஆசாரியனுக்குக் காண்பிக்கப்படக்கடவது.

௫௰ ஆசாரியன் அதைப்பார்த்து ஏழுநாள் அடைத்துவைத்து,

௫௧ ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; வஸ்திரத்திலேயாவது, பாவிலேயாவது, உண்டைநூலிலேயாவது, தோலிலேயாவது, தோலால் எந்தவிதமுமாகச் செய்யப்பட்ட வேலையிலேயாவது, அது அதிகப்பட்டிருந்தால், அது அரிக்கிற குஷ்டமாயிருக்கும் தீட்டாயிருக்கின்றது.

௫௨ அந்த உருவிருக்கிற ஆட்டுமயிரும் அல்லது பஞ்சுநூலுமான வஸ்திரத்தையும், அல்லது பாவையும், அல்லது உண்டைநூலையும், அல்லது தோலான எந்தவிதமுமான பணிமுட்டையும், சுட்டெரிக்கக்கடவன்.

௫௩ ¶ ஏனெனில் அது அரிக்கிற குஷ்டம்; அக்கினியாலே சுட்டெரிக்கப்படுவதாக. ஆனால் வஸ்திரத்திலாகிலும் பாவிலாகிலும் உண்டைநூலிலாகிலும் தோலான எந்தவிதமுமான பணிமுட்டிலென்கிலும் இதோ அந்த உருவத்திலே அதிகப்பட்டதில்லை என்று ஆசாரியன் கண்டால்,

௫௪ அப்பொழுது ஆசாரியன் அதைக் கழுவச்சொல்லி, இரண்டாம்முறை ஏழுநாள் அடைத்துவைத்து,

௫௫ அது கழுவப்பட்டபின்பு, அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அந்த உரு அதிகப்படாதிருந்தாலும் மாறாததாயிருந்தால் தீட்டாயிருக்கும்; அக்கினியால் அதைச் சுட்டெரிக்கவேண்டும்; அது அதின் உள்புறத்திலானாலும் வெளிப்புறத்திலானாலும் உருவ அரிக்கிறதாயிருக்கின்றது.

௫௬ கழுவப்பட்டபின்பு, இதோ, அது குறுகிற்றென்று ஆசாரியன் கண்டானேயாகில், அதை வஸ்திரத்திலே, அல்லது தோலிலே, அல்லது பாவிலே, அல்லது உண்டைநூலிலே, இராதபடிக்குக் கிழித்துப்போடவேண்டும்.

௫௭ அது இன்னம் வஸ்திரத்திலாகிலும் பாவிலாகிலும் உண்டைநூலிலாகிலும் தேவையான எந்தவிதமுமான பணிமுட்டிலென்கிலும் காணப்பட்டதேயானால், அது துளிர்க்கிறதாயிருக்கும்; ஆகையினால் அதை அக்கினியாலே சுட்டெரிக்கவேண்டும்.

௫௮ வஸ்திரமும் அல்லது பாவும் அல்லது உண்டைநூலும் அல்லது எந்தவிததோல் பணிமுட்டும் கழுவப்பட்டபின்பு, அந்த உருவு அதைவிட்டுப்போயிற்றேயானால், அது இரண்டாம்முறை கழுவப்படட்டும், அப்பொழுது சுத்தமாயிருக்கும்.

௫௯ ¶ ஆட்டுமயிர் அல்லது பஞ்சுநூல் நெசவான வஸ்திரத்தையாகிலும், பாவையாகிலும், உண்டைநூலையாகிலும், எந்தவிததோல் பணிமுட்டை என்கிலும் சுத்த

Digitized by Google

மாக அல்லது திட்டாகத் தீர்க்கிறதற்கு,
இது அதினுடைய குஷ்டவாதைக்கடுத்த
நியாயப்பிரமாணமென்றார்.

௰௪. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பே
சிச் சொன்னதாவது:
௨ குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின்
நாளிலே அவனுக்கடுத்த நியாயப்பிரமா
ணம் என்னவெனில், *அவன் ஆசாரிய
னண்டைக்குக் கொண்டுவரப்பட, ஆசாரி
யன் பாளயத்திற்குப்புறம்பே போகவேண்
டும். *மத். ௮. ௪.
௩ இதோ, குஷ்டரோகியின் குஷ்டவாதை
குணமாயிற்றென்று ஆசாரியன் கண்டால்,
௪ அவன் சுத்திகரிக்கப்படப்போகிறவ
னுக்காக, சுத்தமாயிருக்கிற உயிருள்ள இ
ரண்டு குருவிகளையும், ஒருகேதுருக்கட்டை
யையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும்
வாங்கிவரக் கற்பிப்பானாக.
௫ பிற்பாடு ஆசாரியன் அந்தக் குருவிக
ளில் ஒன்றை ஒரு மண்பாண்டத்திலுள்ள
சுரப்புத் தண்ணீர்மேல் கழுத்தை அறுக்கச்
சொல்லி,
௬ உயிருள்ள குருவியையும், கேதுருக்
கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்
பையும், எடுத்துக்கொண்டு இவைகளையும்
உயிருள்ள குருவியையும் சுரப்புத் தண்
ணீரின்மேல் கழுத்தறுக்கப்பட்ட குருவி
யின் இரத்தத்திலே தோய்த்து,
௭ குஷ்டமறச் சுத்திகரிக்கப்படப்போகி
றவன்மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச்
சுத்தம்பண்ணி, உயிருள்ள குருவியை வெ
ளியின் விசாலத்திலே விட்டுவிடக்கடவன்.
௮ ¶ சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்தி
ரங்களை வெளுத்து, தன் மயிரையெல்லாம்
சிரைத்து, தான் சுத்தமாகும்படிக்கு, தண்
ணீரிலே முழுகி, பிற்பாடு பாளயத்திற்குள்
பிரவேசித்து, தன் கூடாரத்திற்குப் புறம்பே
ஏழுநாள் தங்கி,
௯ ஏழாம்நாளிலே தன் தலையையும், தாடி
யையும், புருவங்களையும், தன்னுடைய எல்
லா மயிரையும் சிரைத்து, தன் வஸ்திரங்க
ளை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீ
ரினாலே கழுவிச் சுத்தமாயிருப்பானாக.
௰ எட்டாம்நாளிலே அவன் பழுதற்ற இ
ரண்டு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு வயதா
ன பழுதற்ற ஒரு பெண்குட்டியையும், ஒரு
மரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் மூன்
று பங்கான எண்ணெயிலே பிசைந்த கா
ணிக்கையையும், ஒரு ஆழாக்கெண்ணெ
யையும் கொண்டுவரக்கடவன்.
௰௧ சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்
கப்படுகிற மனிதனையும் அவைகளையும் கர்த்
தருக்குமுன்பாக ஆசரிப்புக்கூடாரவாசலி
லே நிறுத்தக்கடவன்.
௰௨ பிற்பாடு ஆசாரியன் ஒரு ஆட்டுக்
குட்டியைப் பிடித்து, அதையும் அந்த ஆ
ழாக்கெண்ணெயையும் குற்றம்போக்குகிற
தற்காகக் கொண்டுவந்து, கர்த்தருக்குமுன்
பாக அசைவாட்டும் காணிக்கையாக அ
சைவாட்டி,
௰௩ பாவம்போக்கும்பலியும் சர்வாங்கத
கனபலியும் குரல்வளை அறுக்கப்படுகிற பரி
சுத்தஸ்தலத்திலே அந்த ஆட்டுக்குட்டி
யைக் குரல்வளை அறுப்பானாக; ஏனெனில்
குற்றம்போக்கும்பலி, பாவம்போக்கும்
பலியைப்போல ஆசாரியனுடையது; அது
பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.
௰௪ குற்றம்போக்கும் அந்தப் பலியின் இ
ரத்தத்திலே ஆசாரியன் கொஞ்சம் பிடித்து,
சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மட
லிலும், அவன் வலதுகையின் பெருவிரல்
மேலும், வலதுகாலின் பெருவிரல்மேலும்
பூசக்கடவன்.
௰௫ பிற்பாடு ஆசாரியன் அந்த ஆழாக்
கெண்ணெயிலே கொஞ்சம் தன் இடது
கையில் வார்த்து,
௰௬ அதிலே தன் வலதுவிரலைத் தோய்த்து,
தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெ
யில் எடுத்து, கர்த்தருக்குமுன்பாகத் தெ
ளித்து,

Digitized by Google

௰௭ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை
எண்ணெயிலே கொஞ்சம் சுத்திகரிக்கப்ப
டுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன்
வலதுகையின் பெருவிரல்மேலும், வலது
காலின் பெருவிரல்மேலும் முந்தப் பூசியி
ருக்கிற குற்றம்போக்கும்பலியினுடைய இ
ரத்தத்தின்மீதில் பூசி,

௰௮ தன் உள்ளங்கையில் இருக்கிற குறை
எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன்
தலையிலே தடவி, கர்த்தருக்கு முன்பாக
அவனுக்காகப் பாவநிவிர்த்தியை உண்
டாக்கி,

௰௯ பாவம்போக்கும்பலியையும் செலுத்
தி, சுத்திகரிக்கப்படுகிறவனுக்காக அவன்
தீட்டறப் பாவநிவிர்த்தியை உண்டாக்கிப்
பிற்பாடு சர்வாங்கதகனபலியைக் குரல்வ
ளை அறுத்து,

௨௰ அதையும் காணிக்கையையும் பலிபீ
டத்தின்மேல் ஏற்றி, அவனுக்காகப் பாவ
நிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்
பொழுது சுத்தமாயிருப்பான்.

௨௧ ¶ அவன் தரித்திரனும் அம்மாத்திரம்
அவகாசம் அற்றவனுமேயானால் அவன்
தன் பாவநிவிர்த்திக்கென்று குற்றம்போக்
கும்பலியாகவும் அசைவாட்டும் காணிக்
கையாகவும் ஒரு ஆட்டுக்குட்டியையும்,
ஒருமரக்கால் மெல்லிய மாவிலே பத்தில்
ஒரு பங்கான எண்ணெயிலே பிசைந்த
காணிக்கையையும், ஒரு ஆழாக்கெண்ணெ
யையும்,

௨௨ தன் அவகாசத்திற்குத்தக்கவைகளாக
இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இர
ண்டு புறாக்குஞ்சுகளை என்கிலும், ஒன்று பா
வம்போக்கும்பலியும் மற்றது சர்வாங்க
தகனபலியுமாகும்படிக்கு வாங்கி,

௨௩ தன் சுத்திகரிப்பின் எட்டாம்நாளி
லே ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்த
ருக்குமுன்பாக ஆசாரியனண்டையிலே
கொண்டுவருவானாக.

௨௪ அப்பொழுது ஆசாரியன் குற்றம்
போக்கும் ஆட்டுக்குட்டியையும் அந்த ஆ
ழாக்கெண்ணெயையும் வாங்கி, கர்த்தருக்
குமுன்பாக அசைவாட்டும் காணிக்கை
யாக அசைவாட்டி,

௨௫ குற்றம்போக்கும் ஆட்டுக்குட்டியின்
குரல்வளையை அறுத்து, அதின் இரத்தத்தி
லே கொஞ்சம் பிடித்து, சுத்திகரிக்கப்படு
கிறவன் வலதுகாதின் மடலிலும் அவன்
வலதுகையின் பெருவிரல்மேலும் வலது
காலின் பெருவிரலின்மேலும் பூசி,

௨௬ அந்த எண்ணெயிலே கொஞ்சம் தன்
இடதுகையில் வார்த்து,

௨௭ இதிலிருக்கும் எண்ணெயிலே தன்
வலது விரலால் எடுத்து, கர்த்தருக்குமுன்
பாக ஏழுதரம் தெளித்து,

௨௮ தன் உள்ளங்கையிலிருக்கிற எண்
ணெயிலே கொஞ்சம் சுத்திகரிக்கப்படுகி
றவன் வலதுகாதின் மடலிலும், அவன் வல
துகையின் பெருவிரல்மேலும், வலதுகா
லின் பெருவிரல்மேலும் குற்றம்போக்கும்
பலியின் இரத்தம் பூசி இருக்கிற இடத்
தின்மீதில் பூசி,

௨௯ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை
எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன்
தலையின்மேல் அவன்நிமித்தம் கர்த்தருக்
குமுன்பாகப் பாவநிவிர்த்தியை உண்டாக்
கும்படிக்குத் தடவி,

௩௰ பிற்பாடு அவன் தன் அவகாசத்திற்
குத்தக்கவைகளாகக் கொண்டுவந்தவை
கள், காட்டுப்புறாக்களானாலும் சரி, புறாக்
குஞ்சுகளானாலும் சரி,

௩௧ அவைகளில் ஒன்றைப் பாவம்போக்
கும்பலியும், மற்றதைச் சர்வாங்கதகனப
லியுமாக்கி, காணிக்கையோடேகூடச் செ
லுத்தி, இப்படியே ஆசாரியன் சுத்திகரிக்
கப்படுகிறவன்நிமித்தம் கர்த்தருக்குமுன்
பாகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கட
வன்.

௩௨ ¶ இது தன் சுத்திகரிப்புக்கு அவகா
சம் போதாதிருக்கிற குஷ்டவாதையுள்ள
வனுடைய நியாயப்பிரமாணம் என்றார்.

௩௩ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடும்

ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:
௩௪ நாம் உங்களுக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் கானான்தேசத்திலே நீங்கள் வந்தபின்பு, நாம் உங்கள் காணியாட்சியான தேசத்தில் ஒரு வீட்டிலே குஷ்டவாதையை வரப்பண்ணினால்,
௩௫ அப்பொழுது அந்த வீட்டிற்கு உடையவன் வந்து, வீட்டிலே வாதையைப்போலிருக்கிறதாக எனக்குக் காண்கிறதென்று ஆசாரியனுக்கு அறிவிக்கக்கடவன்.
௩௬ அப்பொழுது வீட்டிலிருக்கிற யாவும் தீட்டாகாதபடிக்கு, ஆசாரியன் அந்த வாதையைப்பார்க்க வரும்முன்னே, வீட்டை ஒழித்துவைக்கச்சொல்லி, பிற்பாடு வீட்டைப் பார்க்கவந்து,
௩௭ அந்த வாதையிருக்கிற இடத்தைப் பார்க்கக்கடவன்; இதோ, வீட்டுச்சுவர்களிலே கொஞ்சம் பச்சையும் கொஞ்சம் சிவப்புமான குழிகளிருந்து, அவைகளின் உருவு சுவரைப்பார்க்கிலும் பள்ளமாயிருந்தால்,
௩௮ ஆசாரியன் வீட்டிலிருந்து வாசல்படியிலே புறப்பட்டு, வீட்டை ஏழுநாள் அடைத்துவைத்து,
௩௯ ஏழாம்நாளிலே திரும்பவந்து, இதோ வாதை வீட்டுச் சுவர்களில் இடம்கொண்டதென்று கண்டால்,
௪௰ அவன் அவ்விடத்திலிருக்கிற கல்லுகளைப் பேர்க்கவும், பட்டணத்திற்குப் புறம்பே தீட்டான ஒரு ஸ்தலத்திலே போடவும் கற்பித்து,
௪௧ வீட்டை உள்ளே சுற்றிலும் சீவச்சொல்லி, சீவிப்போட்ட மண்ணைப் பட்டணத்திற்குப் புறம்பே தீட்டான ஒரு ஸ்தலத்திலே கொட்டவும்,
௪௨ வேறே கல்லுகளை எடுத்துவந்து, அந்தக் கல்லுகளுக்குப் பதிலாகக்கட்டி, வேறே மண்ணை எடுத்து வீட்டைப்பூசவும் சொல்லுவானாக.
௪௩ கல்லுகளைப் பேர்த்து, வீட்டைச் சீவி, நவமாய்ப் பூசினபிற்பாடு, அந்த வாதை திரும்ப வீட்டில் எழும்பிற்றேயானால்,
௪௪ ஆசாரியன் வந்து பார்க்கக்கடவன்; இதோ, வாதை வீட்டில் இடம்கொண்டதாகில், அது வீட்டிலே அரிக்கிற குஷ்டமானது; தீட்டாயிருக்கின்றது.
௪௫ ஆகையால் வீட்டை எல்லாம் அதின் கல்லுகளையும், மரங்களையும், அதின் மண்ணையும் இடித்து, பட்டணத்திற்குப்புறம்பே தீட்டான ஸ்தலத்திலே கொண்டுபோக வேண்டும்.
௪௬ வீடு அடைக்கப்பட்ட நாளெல்லாம் அதற்குள் பிரவேசிக்கிறவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.
௪௭ வீட்டிலே படுத்துக்கொண்டவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; வீட்டிலே சாப்பிட்டவனும் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்.
௪௮ ¶ ஆசாரியன் திரும்பவந்து, இதோ, வீடு பூசப்பட்டபிறகு வீட்டிலே அந்த வாதை இடம்கொண்டதில்லை என்று கண்டானேயாகில், அவன் அந்த வீட்டைச் சுத்தமென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் வாதை நிவிர்த்தி ஆயிற்று.
௪௯ அப்பொழுது வீட்டின் பாவத்தைப் போக்க, இரண்டு குருவிகளையும் கேதுருக் கட்டையையும் சிவப்புநூலையும் ஈசோப்பையும் வாங்கி,
௫௰ ஒரு குருவியை ஒரு மண்பாண்டத்திலுள்ள சுரப்புத் தண்ணீரின்மேலே கழுத்தறுத்து,
௫௧ கேதுருக்கட்டையையும், ஈசோப்பையும், சிவப்புநூலையும், உயிருள்ள குருவியையும் எடுத்துக்கொண்டு, இவைகளைக் கழுத்தறுக்கப்பட்ட குருவியின் இரத்தத்திலும் சுரப்புத்தண்ணீரிலும் தோய்த்து, வீட்டின்மேல் ஏழுதரம் தெளித்து,
௫௨ குருவியின் இரத்தத்தினாலும், சுரப்புத்தண்ணீரினாலும், உயிருள்ள குருவியினாலும், கேதுருக்கட்டையினாலும், ஈசோப்பினாலும், சிவப்புநூலினாலும், வீட்டின் பாவத்தைப்போக்கி,

Digitized by Google

௫௩ உயிருள்ள குருவியைப் பட்டணத்
திற்குப்புறம்பே வெளியின் விசாலத்திலே
விட்டுவிட்டு, இப்படியே வீட்டிற்காகப்
பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்;
அப்பொழுது சுத்தமாயிருக்கும்.
௫௪ ¶ இது சகலவித குஷ்டவாதைக்கும்,
சொறிக்கும்,
௫௫ வஸ்திரத்தின் குஷ்டத்திற்கும், வீட்
டின் குஷ்டத்திற்கும்,
௫௬ வீக்கத்திற்கும், சிரங்குக்கும், வெள்ளை
மறுவுக்கும், அடுத்த நியாயப்பிரமாணம்.
௫௭ எப்பொழுது தீட்டானதென்றும், எப்
பொழுது சுத்தமானதென்றும், போதிக்கிற
தற்கு இது குஷ்டத்திற்கு அடுத்த நியாயப்
பிரமாணமென்றார்.

௰௫. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடும் ஆ
ரோனோடும் பேசிச் சொன்னதாவது:
௨ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே பே
சிச் சொல்லவேண்டியதேதெனில், எவ
னொருவன் மாம்சத்திலே பிரமியமுண்டா
னால், அவன் தன் பிரமியத்தினாலே தீட்
டானவன்.
௩ அவனுடைய மாம்சத்திலே பிரமியம்
ஊறினாலும், அவன் மாம்சப்பிரமியம் அ
டைபட்டிருந்தாலும், அது அவனிலே தீட்
டாயிருக்கும்.
௪ பிரமியக்காரன் படுக்கிற படுக்கையெல்
லாம் தீட்டாம்; அவன் எதின்மேல் உளுக்
காருகிறானோ, அதுவெல்லாம் தீட்டாம்.
௫ அவன் படுக்கையைத் தொடுகிறவன்
தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரிலே
முழுகக்கடவன்; சாயங்காலம்மட்டும்
தீட்டுப்பட்டிருப்பானாக.
௬ பிரமியக்காரன் உளுக்காந்ததின்மேல்
உளுக்காருகிறவன் தன் வஸ்திரங்களை வெ
ளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்
மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.
௭ அவன் மாம்சத்தைத் தொடுகிறவன்
தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரிலே
முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்
டிருப்பானாக.
௮ அவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல்
துப்பினால், இவன் தன் வஸ்திரங்களை வெளு
த்து, தண்ணீரிலே முழுகி, சாயங்காலம்
மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.
௯ அவன் எதின்மேல் ஏறிப்போகிறானோ,
அது எல்லாம் தீட்டாம்.
௰ அவன்கீழிருந்த எதையாகிலும் தொடு
கிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்
டுப்பட்டிருப்பான்; அதை எடுத்துச் சுமக்
கிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்
ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்
டுப்பட்டிருப்பானாக.
௰௧ அவன் தன் கைகளைத் தண்ணீரினாலே
கழுவாதிருக்கும்போது, எவனையாகிலும்
தொட்டால், அவன் தன் வஸ்திரங்களை வெ
ளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்
மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.
௰௨ அவன் தொட்டிருக்கிற மண்பாண்
டம் உடைக்கப்படவும் மரப்பாண்டமெல்
லாம் தண்ணீரில் அலசப்படவும் கடவது.
௰௩ அவன் தன் பிரமியம் அறச் சுத்தமா
னால், அவன் தன் சுத்திகரிப்புக்கென்று ஏ
ழுநாள் எண்ணிக்கொண்டு, தன் வஸ்திரங்
களை வெளுத்து, தன் மாம்சத்தைச் சுரப்
புத்தண்ணீரிலே கழுவக்கடவன்; அப்
பொழுது சுத்தமாயிருக்கிறான்.
௰௪ எட்டாம்நாளிலோவெனில், அவன்
இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும், இ
ரண்டு புறாக்குஞ்சுகளையாகிலும், ஆசரிப்
புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குமுன்பா
கக் கொண்டுவந்து, ஆசாரியனுக்குக் கொ
டுக்கக்கடவன்.
௰௫ ஆசாரியன் அவைகளில் ஒன்றைப்
பாவம்போக்கும்பலியும் மற்றதைச் சர்
வாங்கதகனபலியுமாக்கி, அவனுக்காகக்
கர்த்தரின் சந்நிதியிலே, அவன் பிரமியத்
தின்நிமித்தம் பாவநிவிர்த்தியை உண்டாக்
கக்கடவன்.
௰௬ ¶ இந்திரியம் ஒருவனிலிருந்து கழிந்த

Digitized by Google

துண்டானால், அவன் தன் மாம்சத்தை எல்லாம் தண்ணீரிலே கழுவி, சாயங்காலம் மட்டும் தீட்டாயிருப்பானாக.

௰எ கழிந்த இந்திரியம் பட்ட சகல வஸ்திரமும் சகல தோலும் தண்ணீரினாலே கழுவப்பட்டு, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பதாக.

௰அ இந்திரியம் கழிந்தவனோடே பெண்சாதி படுத்துக்கொண்டிருந்தால், இருவரும் தண்ணீரிலே முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டாயிருப்பார்களாக.

௰௯ ¶ தன் மாம்சத்திலே உதிரம் ஓடுகிற ஸ்திரீ ஏழுநாள் தன் விலக்கத்தில் இருக்கக்கடவள்; அவளைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௰ அவள் விலகி இருக்கையில், எதின்மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ, எதின்மேல் உளுக்காருகிறாளோ, அதெல்லாம் தீட்டாம்.

௨௧ அவள் படுக்கையைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨௨ அவள் உளுக்காந்த யாதொரு மணையைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨௩ அவள் படுக்கையின்மேலும், அல்லது அவள் உளுக்காந்த மணையின்மேலும் இருந்த எதையாகிலும் தொட்டவன், சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௪ ஒருவன் அவளோடே படுக்கவே படுத்துக்கொண்டதும் அவள் தீட்டு அவன் மேலே பட்டதும் உண்டானால், அவன் ஏழுநாள் தீட்டாயிருப்பான்; அவன் படுக்கிற படுக்கையுமெல்லாம் தீட்டுப்படும்.

௨௫ ¶ ஒரு ஸ்திரீ விலகியிருக்கும்காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேகம்நாள் ஓடவே ஓடி, அல்லது அந்தக் காலத்திற்கு மிஞ்சி ஓடினால், அவள் அது ஓடுகிற நாளெல்லாம் தன் விலக்கத்தின் நாள்களைப்போலத் தீட்டாயிருப்பாள்.

௨௬ அந்தச் சகல நாளும் அவள் படுக்கிற படுக்கை எல்லாம், அவளுக்கு அவள் விலக்கத்தின் படுக்கைக்குச் சரியாய் இருப்பதாக; அவள் எதின்மேல் உளுக்காருகிறாளோ, அது அவளுடைய விலக்கத்தின் தீட்டைப்போலத் தீட்டாயிருக்கும்.

௨எ அப்படிக்கொத்தவைகளைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨அ அவள் தன் உதிரம் அறச் சுத்தமானால், அவள் ஏழுநாள் எண்ணிக்கொள்வாளாக; பிற்பாடு சுத்தமாயிருப்பாள்.

௨௯ எட்டாம்நாளிலோவெனில், இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும், இரண்டு புறாக்குஞ்சுகளை என்கிலும் ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனண்டைக்குக் கொண்டு வரக்கடவள்.

௩௰ ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவம்போக்கும்பலியும் மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி, அவளுக்காகக் கர்த்தரின் சந்நிதியில் அவளுடைய உதிர ஓடலின்நிமித்தம் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

௩௧ ¶ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நடுவே இருக்கிற நம்முடைய வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, தங்கள் தீட்டுகளால் சாவாதபடிக்கு, இப்படி நீங்கள் அவர்கள் தீட்டுகளுக்கு அவர்களை விலக்கிவைக்க வேண்டும்.

௩௨ ¶ இது பிரமியக்காரனுக்கும், இந்திரிய நஷ்டமானதினாலே தீட்டானவனுக்கும்,

௩௩ தன் விலக்கத்திலே பலவீனப்பட்டவளுக்கும், மாம்சம் உருகியிருக்கிற ஆண்சாதிக்கும் பெண்சாதிக்கும், தீட்டாயிருக்கிறவளோடே படுத்துக்கொண்டவனுக்கும், செல்லும் நியாயப்பிரமாணமென்று சொல்லுங்களென்றார்.

Digitized by Google

௰௬. அதிகாரம்.

1 ஆரோனின் இரண்டு குமாரர் *கர்த்தரின்
சந்நிதியிலே சேருகையில் செத்துப்போன
பிற்பாடு, கர்த்தர் மோசேயோடே பேசிச்
சொன்னதாவது: *௩ மோ. ௰. ௧,௨.
௨ உன் சகோதரனாகிய ஆரோன் சாவா
தபடிக்கு, பரிசுத்தஸ்தலத்திலே திரைக்
குட்புறத்திலிருக்கிறபெட்டியின்மீதிலுள்ள
கிருபாசனமான மூடிக்குமுன்பாக சகல
வேளையிலும் வரவேண்டாமென்று அவனுக்
குச் சொல்; ஏனெனில் கிருபாசனமான
மூடியின்மீதில் மேகத்திலே காணப்படு
வோம்.
௩ ஆரோன் பரிசுத்தஸ்தலத்துக்குள் பிர
வேசிக்கப்போனால், ஒரு காளை எருதைப்
பாவம்போக்கும்பலியாகவும், ஒரு ஆட்
டுக்கடாவைச் சர்வாங்கதகனபலியாகவும்,
செலுத்திப் பிரவேசிக்கவேண்டும்.
௪ அவன் பரிசுத்தமான பஞ்சுநூல் சட்
டையை உடுத்து, தன் மாம்சத்தின்மே
லே பஞ்சுநூல் சல்லடத்தைப் போட்டு,
பஞ்சுநூல் நடுக்கட்டைக் கட்டி, பஞ்சு
நூல் பாகையைப் போட்டுக்கொண்டிருக்
கவேண்டும்; இவைகள் பரிசுத்தமான வஸ்
திரங்கள்; அவன் தன் மாம்சத்தைத் தண்
ணீரிலே கழுவி, அவைகளை உடுத்துக்கொ
ண்டு,
௫ இஸ்ரவேல் புத்திரருடைய சபையின்
கையிலே, பாவம்போக்கும்பலியாக இர
ண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், சர்வா
ங்கதகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவை
யும் வாங்கி,
௬ ¶ பிற்பாடு தனக்காகவும் தன் வீட்டா
ருக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்
கும்படிக்கு, தன்னுடைய பாவம்போக்கு
தலின் காளை எருதைச் சேரப்பண்ணி,
௭ அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்
களையும் கொண்டுவந்து, ஆசரிப்புக்கூடா
ரவாசலிலே கர்த்தருக்கு முன்பாக நிறுத்தி,
௮ அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்க
ளின்மேலே ஒரு சீட்டைக் கர்த்தருக்கென்
றும், பின்னொரு சீட்டைப் போகவிடப்ப
டும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்றும் போ
ட்டு,
௯ கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்
ளாட்டுக்கடாவைப் பாவம்போக்கும் பலி
யாக்குகிறதற்குச் சேரப்பண்ணி,
௰ போகவிடப்படச் சீட்டு விழுந்த வெ
ள்ளாட்டுக்கடாவையோவென்றால், அதின்
மேலே பாவநிவிர்த்தியை உண்டாக்கி, அ
தை வனாந்தரத்திலே போகவிடுகிறதற்குக்
கர்த்தருக்குமுன்பாக உயிரோடே நிறுத்தி,
௰௧ ¶ பிற்பாடு தனக்காகவும் தன் வீட்
டாருக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டா
க்குகிறதற்கு, தன்னுடைய பாவம்போக்
குதலின் காளை எருதைச் சேரப்பண்ணி,
அதின் குரல்வளையை அறுத்து,
௰௨ கர்த்தருக்குமுன்பாகப் பலிபீடத்
தின்மேலிருக்கிற தணலினால் கலசத்தை
நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூப
வர்க்கங்களிலே தன் கைப்பிடிகள் நிறைய
எடுத்து, திரைக்குள்ப்புறமாகக் கொண்டு
வந்து,
௰௩ தூபத்தின் மேகம் சாட்சியின்மேலி
ருக்கிற கிருபாசனமான மூடியைத் தான்
சாவாதபடிக்கு மூடத்தக்கதாக, தூபவர்க்
கத்தைக் கர்த்தருக்குமுன்பாக அக்கினி
யின்மேலே போட்டு,
௰௪ பிற்பாடு காளை எருதின் இரத்தத்திலே
கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று,
தன் விரலினாலே கிருபாசனமான மூடி
யின்மேலே தெளித்து, ஏழுமுறை தன்
விரலினால், அந்த இரத்தத்தில் எடுத்து
கிருபாசனமான மூடிக்குமுன்பாகவும் தெ
ளிப்பானாக.
௰௫ ¶ பிற்பாடு அவன் சனத்தினுடைய
பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடா
வைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்
தைத் திரைக்குள்ப்புறமாகக் கொண்டுவந்
து, தான் காளை எருதின் இரத்தத்தாலே
செய்ததுபோல, அதின் இரத்தத்தாலும்

Digitized by Google

செய்து, அதைக் கிருபாசனமான மூடியின் மேலும், அதற்குமுன்பாகவும் தெளித்து,

௰௬ இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகள் நிமித்தமும், அவர்களுடைய எல்லாப் பாவங்களிலும் உண்டான மீறுதல்களின் நிமித்தமும் பரிசுத்தஸ்தலத்திற்காக, பாவநிவிர்த்தியை உண்டாக்கி, இந்தவிதமாக அவர்களிடத்தில் அவர்கள் தீட்டுகளின் நடுவே தங்கியிருக்கிற ஆசரிப்பின் கூடாரத்திற்காகச் செய்யக்கடவன்.

௰௭ அவன் பாவநிவிர்த்தியை உண்டாக்கப் பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறது முதல்கொண்டு, அவன் புறப்படும்மட்டும், ஒரு மனிதனும் ஆசரிப்பின் கூடாரத்தில் இருக்கவேண்டாம்; அவன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேலின் முழுச்சபைக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

௰௮ புறப்பட்டு, கர்த்தருக்குமுன்பாக இருக்கிற பீடத்தண்டை வந்து, அதற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கி, காளை எருதின் இரத்தத்திலும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்திலும் கொஞ்சம் பிடித்து, கொம்புகளின்மேலே சுற்றிலும் பூசி,

௰௯ தன் விரலினால் அந்த இரத்தத்தில் எடுத்து, ஏழுதரம் அதின்மேலே தெளித்து, அதை இஸ்ரவேல் புத்திரரின் தீட்டுகள் அறச் சுத்திகரிக்கவும் பரிசுத்தமாக்கவும் கடவன்.

௨௰ ¶ அவன் பரிசுத்தஸ்தலத்திற்கும் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் பீடத்திற்குமாக, பாவநிவிர்த்தியை இப்படி உண்டாக்கித் தீர்ந்தபிற்பாடு, உயிரோடே இருக்கிற வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ணி,

௨௧ அதினுடைய தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய எல்லா அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களால் உண்டாகிய அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேலே சுமத்தி, அதை அதற்கான ஆள்கையிலே வனாந்தரத்திற்கு அனுப்பிவிடக்கடவன்.

௨௨ அந்த வெள்ளாட்டுக்கடா தன்மேலே அவர்களுடைய அக்கிரமங்களை எல்லாம் வெட்டிப்போடப்படுதலின் தலத்திற்குச் சுமந்துகொண்டு போவதாக; பிறகு அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே போகவிடக்கடவன்.

௨௩ ¶ ஆரோனோவெனில் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் வந்து, தான் பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறபொழுது உடுத்திருந்த பஞ்சுநூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு,

௨௪ தன் மாம்சத்தைப் பரிசுத்த இடத்திலே தண்ணீரினாலே கழுவி, தன்னுடைய வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு புறப்பட்டு, தன்னுடைய சர்வாங்கதகனத்தையும் சனத்தின் சர்வாங்கதகனத்தையும் படைத்து, தனக்காகவும் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

௨௫ பாவம்போக்கும்பலியின் கொழுப்பைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்.

௨௬ போகவிடப்படும் வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டுபோய் விட்டவன், தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரினாலே கழுவிப் பிற்பாடு பாளயத்தில் வருவானாக.

௨௭ குரல்வளை அறுக்கப்பட்டு, இரத்தம் பாவநிவிர்த்திக்கென்று பரிசுத்தஸ்தலத்திற்குள் கொண்டுபோகப்பட்ட பாவம்போக்குதலின் காளை எருதையும், பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடாவையும், பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய், அவைகளின் தோல்களையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவர்கள்.

௨௮ அவைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரினாலே கழுவி, பிற்பாடு

Digitized by Google

பாளயத்தில் வருவானாக.

௨௯ ¶ ஏழாம்மாதம் பத்தாம் தேதியிலே நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதும், தேசத்திலே பிறந்தவனானாலும் சரி, உங்கள் நடுவே தங்குகிற பரதேசியானாலும் சரி, ஒரு வேலையையும் செய்யாதிருப்பதும், உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது.

௩௰ ஏனெனில் உங்களைச் சுத்திகரிக்கும்படிக்கு, அந்நாளில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கப்படும்; கர்த்தருக்கு முன்பாக உங்களுடைய எல்லாப் பாவங்களும் அறச் சுத்திகரிக்கப்படுவீர்கள்.

௩௧ உங்களுக்கு அது ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; இது நித்தியகட்டளை.

௩௨ அபிஷேகம்பண்ணப்பட்டவனும், தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியம்செய்யக் கைநிரப்பப்பட்டவனுமாகிய ஆசாரியனே, பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய பஞ்சுநூல் வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு,

௩௩ பரிசுத்தமாகிய பரிசுத்தஸ்தலத்திற்கும் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் பீடத்திற்குமாக, பாவநிவிர்த்தியை உண்டாக்கி, ஆசாரியருக்காகவும் சபையின் எல்லாச் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

௩௪ இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய எல்லாப் பாவங்களுக்கும் நிவிர்த்தியை உண்டாக்குவது உங்களுக்கு நித்தியகட்டளையாய் இருக்கக்கடவதென்று சொல்லென்றார்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே ஆரோன் செய்தான்.

௰௭. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் பேசி, அவர்களுக்குச் சொல்லவேண்டியது, கர்த்தர் கற்பித்த வார்த்தை என்னவெனில்,

௩ இஸ்ரவேல் வீட்டாரில் எவனாகிலும் மாட்டையாகிலும் ஆட்டையாகிலும் வெள்ளாட்டை என்கிலும் ஆசரிப்புக்கூடாரவாசலென்ற கர்த்தரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக, கர்த்தருக்குச் செலுத்தும்படிக்குக் கொண்டுவராமல்,

௪ அதைப் பாளயத்திலாகிலும் பாளயத்திற்குப் புறம்பேயாகிலும் குரல்வளை அறுத்தால், அது அந்த மனிதனுக்குப் பழியாக எண்ணப்படும்; அவன் இரத்தம் சிந்திப்போட்டான், அந்த மனிதன் தன் சனத்திற்குள் இராமல், அறுப்புண்பான்.

௫ ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் வெளியின் விசாலத்திலே பலியிடுகிற தங்கள் பலிகளை, ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனண்டையிலே கர்த்தருக்குக் கொண்டுவந்து, அங்கே அவருக்குச் சமாதானபலிகளாகச் செலுத்தக்கடவர்கள்.

௬ அங்கே ஆசாரியன் இரத்தத்தை ஆசரிப்புக்கூடாரவாசலிலிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தின்மேலே தெளித்து, கொழுப்பைக் கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்தக்கடவன்.

௭ தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற பேய்களுக்கு, தங்கள் பலிகளை இனிச் செலுத்தார்களாக; இது அவர்கள் தலைமுறைகளில் அவர்களுக்கு நித்தியகட்டளையாயிருக்கக்கடவது.

௮ ¶ ஆகையால் நீ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில் இஸ்ரவேல் வீட்டாரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் ஒருவனாகிலும் சர்வாங்கதகனமுதலான பலியைப் பலியிட்டு,

௯ அதை ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குச் செலுத்தும்படிக்குக் கொண்டுவாராவிட்டால், அவன் தன் சனத்தாருக்குள் இராமல் அறுப்புண்பான்.

Digitized by Google

௰ ¶ இஸ்ரவேல் வீட்டாரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலும் *இரத்தமென்னப்பட்டதைப் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக நாம் நமது முகத்தைத் திருப்பி, அவனை அவன் சனத்திற்குள் இராதபடிக்கு அறுப்போம். *௩ மோ. ௩. ௰௭.

௰௧ ஏனெனில் *மாம்சத்தின் உயிர் இரத்தத்திலுள்ளது; நாம் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக, பாவநிவிர்த்தியை உண்டாக்கும்படிக்குக் கட்டளையிட்டோம்; ஏனெனில் அது ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்குகிற இரத்தம். *௧ மோ. ௯. ௪.

௰௨ அதின்நிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்கவேண்டாம்; உங்கள் நடுவே தங்குகிற பரதேசியும் இரத்தம் புசிக்கவேண்டாமென்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னோம்.

௰௩ ¶ இஸ்ரவேல் புத்திரரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலும் புசிக்கத்தக்க ஒரு மிருகத்தை அல்லது ஒரு பட்சியை வேட்டையாடிப் பிடித்தால், அவன் அதின் இரத்தத்தைச் சிந்தப்பண்ணி, மண்ணினால் மூடக்கடவன்.

௰௪ ஏனெனில் சகல மாம்சத்திற்கும் அது சீவனாயிருக்கிறது; அதின் இரத்தம் சீவனுக்குச் சரி; ஆகையால் இஸ்ரவேல் புத்திரருக்கு எந்தமாம்சத்தின் இரத்தத்தையும் புசியீர்களாக; ஏனெனில் சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தம்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்பானென்றோம்.

௰௫ ¶ தேசத்திலே பிறந்தவர்களிலும் பரதேசிகளிலும் செத்த உடலை, அல்லது பீறுண்டதைப் புசித்திருக்கிறவன் எல்லாம், தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பானாக; பிற்பாடு சுத்தமாயிருப்பான்.

௰௬ அவன் தன் வஸ்திரங்களை வெளுக்காமலும் தன் மாம்சத்தைக் கழுவாமலும் போனால், தன் அக்கிரமத்தைச் சுமப்பானென்று சொல்லென்றார்.

௰௮. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களுக்குச் சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩ நீங்கள் குடியிருந்த எகிப்துதேசத்தினுடைய செய்கையின்படி செய்யாமலும், நாம் உங்களை அழைத்துப்போகிற கானான் தேசத்தினுடைய செய்கையின்படி செய்யாமலும், அவர்களுடைய முறைமைகளில் நடவாமலும்,

௪ நம்முடைய நியாயங்களின்படியே செய்து, நம்முடைய கட்டளைகளையே அவைகளில் நடக்கும்படிக்குக் கைக்கொள்ளக்கடவீர்கள்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௫ ஆகையால் நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிற மனிதன் *அவைகளாலே பிழைப்பான்; நாம் கர்த்தர். *ஏசே. ௨௰. ௰௧.

௬ ¶ ஒருவனும் தனக்குக் கிட்டின சதையாகிய ஒருத்தியோடும் அவளுடைய நிருவாணத்தைத் திறக்கிறதற்குச் சேரவேண்டாம்; நாம் கர்த்தர்.

௭ உன் தகப்பனுடைய நிருவாணத்தையும் உன் தாயின் நிருவாணத்தையும் திறவாயாக; அவள் உன் தாயானவள்; அவள் நிருவாணத்தைத் திறவாயாக.

௮ உன் தகப்பனுடைய பெண்சாதியின் நிருவாணத்தைத் திறவாயாக; அது உன் தகப்பனுடைய நிருவாணம்.

௯ உன் தகப்பனுக்கு, அல்லது உன் தாய்க்குக் குமாரத்தியாகிய உன் சகோதரி, வீட்டிலே பிறந்திருந்தாலும் புறத்திலே பிறந்திருந்தாலும் சரி, அவளுடைய நிருவாணத்தைத் திறவாயாக.

Digitized by Google

௰ உன் குமாரனுடைய மகளின் நிருவாணத்தையாகிலும் உன் குமாரத்தியினுடைய மகளின் நிருவாணத்தையென்கிலும் திறவாயாக; ஏனெனில் அது உன்னுடைய நிருவாணம்.

௰௧ உன் தகப்பனுக்கு அவன் பெண்சாதியினிடத்திலே பிறந்த குமாரத்தியின் நிருவாணத்தைத் திறவாயாக; அவள் உனக்குச் சகோதரி.

௰௨ உன் தகப்பனுடைய சகோதரியின் நிருவாணத்தைத் திறவாயாக; அவள் உன் தகப்பனுடைய சதையானவள்.

௰௩ உன் தாயினுடைய சகோதரியின் நிருவாணத்தைத் திறவாயாக; ஏனெனில் அவள் உன் தாயின் சதையானவள்.

௰௪ உன் தகப்பனுடைய சகோதரன் நிருவாணத்தைத் திறவாயாக; அவன் பெண்சாதியோடே சேராயாக; அவள் உனக்குச் சிறியதாய்.

௰௫ உன் மருமகளின் நிருவாணத்தைத் திறவாயாக; அவள் உன் குமாரனுக்குப் பெண்சாதி, அவளுடைய நிருவாணத்தைத் திறவாயாக.

௰௬ உன் சகோதரனுடைய பெண்சாதியின் நிருவாணத்தைத் திறவாயாக; அது உன் சகோதரனுடைய நிருவாணம்.

௰௭ ஒரு பெண்சாதியோடேகூட அவள் மகளின் நிருவாணத்தையும் திறவாயாக; அவளுடைய குமாரரின் மகளையும் அல்லது அவள் குமாரத்தியின் மகளையும் இவளுடைய நிருவாணத்தைத் திறக்கும்படிக்கு விவாகம்பண்ணாயாக; இப்படிக்கொத்தவர்கள் அவளுடைய சதையானவர்கள்; அது தோஷம்.

௰௮ பெண்சாதியண்டையிலே உயிரோடே இருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக, அவள் சகோதரியின் நிருவாணத்தையும் திறக்கிறதற்கு இவளைக்கூட விவாகம் பண்ணாயாக.

௰௯ ¶ பெண்சாதி தன் விலக்கத்தில் இருக்கையில், அவளுடைய நிருவாணத்தைத் திறக்கும்படிக்கு அவளோடே சேராயாக.

௨௰ நீ உனக்கடுத்தவனுடைய பெண்சாதிக்கு உன் அறுபோகத்தைக் கொடுக்கவும் அவளால் உன்னைத் தீட்டாக்கவும் வேண்டாம்.

௨௰௧ நீ உன் வித்தில் ஏதையாகிலும் தீயைக் கடக்கிறதற்கு மோளேகுக்குக் கொடுக்கிறதினால், உன் பராபரனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காயாக; நாம் கர்த்தர்.

௨௰௨ ஸ்திரியின் அறுபோகமாய் ஆணோடே சயனிக்காயாக; அது அருவருப்பானது.

௨௰௩ யாதொரு மிருகத்தினிடத்தில் நீ உன் அறுபோகத்தைக் கொடுக்கவும் அதினால் உன்னைத் தீட்டாக்கவும் வேண்டாம்; ஸ்திரி மிருகத்தின் முன்னின்று, அதைத் தன்மேல் ஏறப்பண்ணவும் வேண்டாம்; அது அருவருப்பான தாறுமாறு.

௨௰௪ ¶ இவைகளில் ஒன்றினாலும் உங்களைத் தீட்டாக்காதிருப்பீர்களாக; ஏனென்றால் நாம் உங்களுக்கு முன்பாகத் துரத்துகிற சாதிகள் இவைகளால் எல்லாம் தங்களைத் தீட்டாக்கினதினாலே தேசம் தீட்டாயிற்று.

௨௰௫ ஆனதுகொண்டு தேசம் தன் குடிகளைக் கக்கிப்போடத்தக்கதாக, அதினுள்ள அக்கிரமத்தை விசாரிக்கிறோம்.

௨௰௬ ஏனெனில் இந்த அருவருப்புகளை எல்லாம் உங்களுக்கு முன்னிருந்த அந்தத் தேசத்தின் மனிதர் செய்ததினாலே தேசம் தீட்டாயிற்று.

௨௰௭ இப்பொழுதும் உங்களுக்கு முன்னிருந்த சாதிகளைத் தேசம் கக்கிப்போட்டது போல, அது உங்களையும் நீங்கள் அதைத் தீட்டாக்கும்பொழுது கக்கிப்போடாதபடிக்கு,

௨௰௮ நீங்கள் நம்முடைய. கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் சரி, உங்கள் நடுவே தங்குகிற பரதேசியானாலும் சரி, இந்த அருவருப்புகளில் ஒன்றை

Digitized by Google

யும் செய்யாதிருப்பீர்களாக.

௨௯ ஏனென்முல் எவர்களாகிலும் இந்த எல்லா அருவருப்புகளிலும் யாதொன்றைச் செய்தால், செய்த அந்த ஆத்துமாக்கள் தங்கள் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்பார்கள்.

௩௰ ஆகையால் உங்களுக்கு முன்நடந்த அருவருப்பான முறைமைகளில் யாதொன்றின்படியே நீங்கள் செய்து, அவைகளால் தீட்டாகாதபடிக்கு, நம்முடைய கட்டளையைக் கைக்கொள்வீர்களாக; நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தரென்று சொல்லென்முர்.

௰௯. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் பேசிச் சொல்லவேண்டியதேதெனில், *பரிசுத்தவான்களாய் இருக்கக்கடவீர்கள்; ஏனெனில் உங்கள் பராபரனை கர்த்தராகிய நாம் பரிசுத்தர். *௧ பே. ௧. ௰௬.

௩ ¶ நீங்கள் அவனவன் தன் தன் தாய்க்கும் தன் தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும் நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்கொள்ளவும் கடவீர்கள்; நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

௪ ¶ விக்கிரகங்களை நோக்காமலும் வார்ப்பிக்கப்பட்ட தேவர்களை உங்களுக்கு உண்டாக்காமலும் இருப்பீர்களாக; நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

௫ ¶ நீங்கள் சமாதானபலியைக் கர்த்தருக்குச் செலுத்தினுல், அதை உங்கள் மனப்பூர்வத்தினுலே செலுத்துவீர்களாக.

௬ நீங்கள் அதைச் செலுத்துகிற அந்நாளிலும் மறுநாளிலும் அது புசிக்கப்படவும் மூன்ரும் நாள்மட்டும் மீதியானது அக்கினியாலே சுட்டெரிக்கப்படவும்கடவது.

௭ மூன்ரும்நாளில் அதில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால், ஓக்காளிப்பாயிருக்கும்; பிரியமாயிராது.

௮ அப்படிப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்; ஏனெனில் கர்த்தருக்குப் பரிசுத்தமானதைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினுன்; அந்த ஆத்துமா தன் சனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

௯ ¶ உங்கள் தேசத்தில் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும்,

௰ உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக, நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

௰௧ ¶ களவுசெய்யாமலும் பொய்சொல்லாமலும் ஒருவர்க்கொருவர் கபடுபண்ணுமலும்,

௰௨ நமது நாமத்தைக்கொண்டு பொய்யாணை இடுகிறதினுல், உங்கள் பராபரனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.

௰௩ உனக்கடுத்தவனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலுமிருப்பாயாக; கூலிக்காரனுடைய கூலி உன்னிடத்தில் விடியற்காலம்மட்டும் இராத்தங்கவேண்டாம்.

௰௪ ¶ செவிடனைச் சபிக்காமலும், குருடன்முன்பாகத் தடுக்கலை வைக்காமலும், உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக; நாம் கர்த்தர்.

௰௫ ¶ நியாயத்திலே நியாயக்கேடு செய்யீர்களாக; சிறியவனுடைய முகத்தைப் பாராமலும், பெரியவனுடைய முகத்தை எண்ணுமலும், உனக்கடுத்தவனுக்கு நீதியாக நியாயம் தீர்ப்பாயாக.

௰௬ ¶ உன் சனத்தாருக்குள்ளே பின்புறணிக்காரனுய்த் திரியாயாக; உனக்கடுத்தவனுடைய இரத்தத்திற்கு விரோதமாய் நிற்காயாக; நாம் கர்த்தர்.

௰௭ ¶ உன் சகோதரனை உன் இருதயத்தி

Digitized by Google

லே பகையாயாக; உனக்கடுத்தவன்மேலே
பாவத்தை இருக்க ஒட்டாமல், அவனைக்
கடிந்துகொள்ளவே கொள்வாயாக.
௰௮ சரிக்குச்சரிக்கட்டாமலும், உன் சனப்
புத்திரர்மேலே கோபம்வைக்காமலும், உ
னக்கடுத்தவனை உன்னைப்போலச் சிநேகிப்
பாயாக; நாம் கர்த்தர்.
௰௯ ¶ நம்முடைய கட்டளைகளைக் கைக்
கொள்வீர்களாக; உன் மிருகசீவன்களை
வேற்றுச்சாதியோடே கூட்டிவிடாயாக;
உன் வயலில் வெவ்வேறுவகை விதையை
விதையாயாக; இருவகை நூலுள்ள வஸ்தி
ரம் உன்மேல் ஏறாதிருப்பதாக.
௨௰ ¶ ஒருவனுக்கு அடிமையாயிருந்து,
அவனால் இகழ்ச்சியாக்கப்பட்டும், மீட்கப்
படாமலும் தன் இச்சையாய் விடப்படா
மலும் போன பெண்ணோடே ஒருவன் அநு
போகமாய்ச் சயனித்தால், அவர்கள் சா
வாமல் அடிக்கப்படவேண்டும்; ஏனெ
னில் அவள் தன்னிச்சையானவளல்ல.
௨௧ அவன் தன் குற்றத்தைப்போக்கும்
பலியாக, கர்த்தருக்கு ஒரு ஆட்டுக்கடா
வை ஆசரிப்புக்கூடாரவாசலிலே கொண்
டுவரக்கடவன்.
௨௨ அதினாலே ஆசாரியன் அவன் செய்த
பாவத்தினிமித்தம் அவனுக்குக் கர்த்த
ருக்கு முன்பாகப் பாவநிவிர்த்தியை உண்
டாக்கக்கடவன்; அப்பொழுது அவன்
செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்
படும்.
௨௩ ¶ நீங்கள் தேசத்திலே வந்து, புசிக்
கும் கனிகளைத் தருகிற பலவித மரங்களை
வைத்தால், அவைகளின் கனியைச் சுன்
னத்துப்பண்ணிப்போடக்கடவீர்கள்; மூ
ன்று வருஷம் அது புசிக்கப்படாமல், உங்
களுக்குச் சுன்னத்தில்லாததாய் எண்ணப்
படுவதாக.
௨௪ பிறகு நான்காம் வருஷத்திலே அவை
களின் கனி எல்லாம் கர்த்தருக்குத் துதி
செலுத்தப் பரிசுத்தமாயிருப்பதாக.
௨௫ ஐந்தாம் வருஷத்திலோவென்றால், அ
வைகளின் கனியைப் புசிக்க, அவைகள்
உங்களுக்குத் தங்கள் பலனைக் கொடுத்து
வரக்கடவது; நாம் உங்கள் பராபரனாகிய
கர்த்தர்.
௨௬ ¶ இரத்தத்தோடிருக்கிறதைப் புசியீர்
களாக; நிமித்தம்பாராமலும் நாள்களைப்
பாராமலும் இருப்பீர்களாக.
௨௭ உங்கள் தலைமயிரைச் சுற்றிலும் ஒதுக்
காமலும் தாடியின் ஓரங்களைக் கெடுக்கா
மலும்,
௨௮ செத்தவனுக்காக உங்கள் மாம்சத்
தைக் கீறிக்கொள்ளாமலும் அடையாள
மான எழுத்தை உங்களிலே போடாமலும்
இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.
௨௯ ¶ தேசம் வேசித்தனம்பண்ணித் தோ
ஷத்தால் நிறையப்படாதபடிக்கு, உன்
குமாரத்தியை வேசித்தனம்பண்ணவிடுகி
றதினாலே பரிசுத்தக்குலைச்சலாக்காயாக.
௩௰ ¶ நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்
கொண்டு, நம்முடைய பரிசுத்தஸ்தலத்திற்
குப் பயப்படுவீர்களாக; நாம் கர்த்தர்.
௩௧ அஞ்சனம்பார்க்கிறவர்களையும் குறிகா
ரரையும் நோக்காதிருப்பீர்களாக; அவர்க
ளைத் தேடி, அவர்களாலே தீட்டுப்படாதீர்க
ளாக; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.
௩௨ ¶ நரைத்தவனுக்குமுன்பாக எழுந்து,
முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்
பண்ணி, உன் பராபரனுக்குப் பயப்படுவா
யாக; நாம் கர்த்தர்.
௩௩ ¶ பரதேசி உங்கள் தேசத்தில் உன்
னோடே தங்கினால், அவனைச் சிறுமைப்
படுத்தீர்களாக.
௩௪ உங்களிடத்திலே தங்குகிற பரதேசி
உங்களுக்குத் தேசத்திலே பிறந்தவனைப்
போல இருப்பானாக; அவனை உன்னைப்
போல சிநேகிப்பாயாக; ஏனெனில் எகிப்
துதேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள்;
நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.
௩௫ ¶ நியாய விசாரணையிலும் அளவிலும்
நிறுக்கிற நிறையிலும் படியிலும் நியாயக்
கேடு செய்யீர்களாக.

Digitized by Google

௩௬ சுமுத்திரையான தராசும், சுமுத்திரையான படிக்கட்டும் சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களுக்கு இருக்கக்கடவது; நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௭ ஆகையால் நம்முடைய எல்லாக் கட்டளைகளையும் நம்முடைய எல்லா நியாயங்களையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; நாம் கர்த்தரென்று சொல்லென்றார்.

௨௰. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ பின்னையும் நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது ஏதெனில், இஸ்ரவேல் புத்திரரிலும் இஸ்ரவேலிலே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலும் தன் வித்திலே யாதொன்றை மோளேகுக்குக் கொடுத்தால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; தேசத்தின் சனம் அவனைக் கல்லெறிவதாக.

௩ நாம் அப்படிக்கொத்தவனுக்கு விரோதமாக நமது முகத்தைத் திருப்பி, அவன் நமது பரிசுத்தஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, நமது பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கும்படிக்கு, தன் வித்தை மோளேகுக்குக் கொடுத்தபடியினாலே, அவனைத் தன் சனத்தாரில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

௪ அப்படிக்கொத்தவன் தன் வித்திலே யாதொன்றை மோளேகுக்குக் கொடுக்கும்போது, தேசத்தின் சனம் அவனைக் கொலைசெய்யாதபடிக்கு, தங்கள் கண்களை அவனைவிட்டு மறைக்கவே மறைத்தால்,

௫ நாம் அந்த மனிதனுக்கும் அவன் வம்சத்திற்கும் விரோதமாக நம்முடைய முகத்தைத் திருப்பி, அவனையும், அவன் பிறகாலே மோளேகோடே விபசாரம்பண்ண அவனைப் பின்தொடர்ந்து சோரம்போன யாவரையும், தங்கள் சனத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

௬ *அஞ்சனம்பார்க்கிறவர்களையும் குறிகாரரையும் பின்தொடர்ந்து சோரம்போக, எந்த ஆத்துமா அவர்களைநோக்கி இருக்கிறதோ, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாகவும் நமது முகத்தைத் திருப்பி, அவனைத் தன் சனத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம். *௩ மோ. ௰௯. ௩௧.

௭ ஆனபடியினாலே உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தவான்களாயிருங்கள்; ஏனெனில் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௮ நம்முடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யுங்கள்; நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

௯ ¶ எவனாகிலும் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தால், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக.

௰ ¶ ஒருவனுடைய பெண்சாதியோடே எவனொருவனாகிலும் விபசாரம்பண்ணினால், அப்பொழுது தனக்கடுத்தவன் பெண்சாதியோடே விபசாரம்பண்ணின அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்.

௰௧ ¶ தன் தகப்பன் பெண்சாதியோடே சயனிக்கிறவன் தன் தகப்பன் நிருவாணத்தைத் திறந்தான், இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

௰௨ ¶ ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால், இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; தாறுமாறுபண்ணினார்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

௰௩ ¶ ஒருவன் ஸ்திரியின் அநுபோகமாக ஆணோடே சயனித்தால், அருவருப்பான காரியம்செய்த இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; அவர்கள்

Digitized by Google

இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

௰௪ ¶ ஒருவன் ஒரு பெண்சாதியையும் அவள் தாயையும் படைத்தால், அது தோஷம்; உங்கள் நடுவே தோஷமிராதபடிக்கு, அவனையும் இவர்களையும் அக்கினியாலே சுட்டெரிப்பார்களாக.

௰௫ ஒருவன் மிருகத்தினிடத்திலே தன் அநுபோகத்தை விட்டால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; அந்த மிருகத்தையும் கொல்லக்கடவீர்கள்.

௰௬ ஒரு ஸ்திரி யாதொரு மிருகத்தோடே அதைத் தன்மேல் ஏறப்பண்ணிச் சேர்ந்தால், அந்த ஸ்திரியையும் அந்த மிருகத்தையும் கொல்லக்கடவாய்; இருசீவனும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவது; அவைகளின் இரத்தப்பழி அவைகளின்மேல் இருப்பதாக.

௰௭ ¶ ஒருவன் தன் தகப்பனுக்கு அல்லது தன் தாய்க்குக் குமாரத்தியாகிய தன் சகோதரியைச் சேர்த்துக்கொண்டு, அவன் இவள் நிருவாணத்தையும் இவள் அவன் நிருவாணத்தையும் பார்த்தால், அது பாதகம்; அவர்கள் தங்கள் சனப்புத்திரரின் கண்களுக்குமுன்பாக அறுப்புண்ணக்கடவர்கள்; தன் சகோதரியின் நிருவாணத்தைத்திறந்த அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௰௮ ஒருவன் தூரஸ்திரியோடே சயனித்து, அவளுடைய நிருவாணத்தையும் ஊற்றையும் திறந்து, அவளும் தன் உதிரத்தின் ஊற்றைத் திறந்துவைத்தால், இருவரும் தங்கள் சனத்தாரின் நடுவிலிராதபடிக்கு அறுப்புண்ணக்கடவர்கள்.

௰௯ ¶ உன் தாயினுடைய சகோதரியின் நிருவாணத்தையும் உன் தகப்பனுடைய சகோதரியின் நிருவாணத்தையும் திறவாயாக, அப்படிக்கொத்தவன் தன் சதையை அவமானமாக்கினான்; தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்.

௨௰ ஒருவன் தன் சிற்றப்பன் பெண்சாதியோடே சயனித்தால், அவன் தன் சிற்றப்பன் நிருவாணத்தைத் திறந்தான்; தங்கள் பாவத்தைச் சுமப்பார்கள், சந்தானமில்லாமல் சாவார்களாக.

௨௧ ஒருவன் தன் சகோதரன் பெண்சாதியைப் படைத்தால், அது அசுத்தம்; தன் சகோதரன் நிருவாணத்தைத் திறந்தான், சந்தானம் அற்றிருப்பார்கள்.

௨௨ ¶ ஆகையால் நீங்கள் குடி இருப்பதற்காக நாம் உங்களைக் கொண்டுபோகிற தேசம் உங்களைக் கக்கிப்போடாதபடிக்கு, நீங்கள் நம்முடைய சகல கட்டளைகளையும் சகல நியாயங்களையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யுங்கள்.

௨௩ நாம் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடுகிற சாதியினுடைய வழிபாடுகளில் நடவாதிருங்கள்; ஏனெனில் அப்படிக்கொத்த காரியங்களையெல்லாம் செய்தார்கள்; ஆகையால் நாம் அவர்களை அரோசித்து,

௨௪ நீங்கள் அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பீர்களென்று உங்களோடே சொன்னோம்; பாலும் தேனும் ஓடிய அந்தத் தேசத்தை உங்களுக்குச் சுதந்தரமாகவும் கொடுப்போம்; நாம் உங்களைச் சனசதனங்களை விட்டுப் பிரித்தெடுத்த உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௨௫ ¶ ஆகையால் சுத்தமான மிருகங்களுக்கும் தீட்டான மிருகங்களுக்கும், தீட்டான பறவைகளுக்கும் சுத்தமான பறவைகளுக்கும், நீங்கள் வித்தியாசம்பண்ணி, நாம் உங்களுக்குத் தீட்டாக எண்ணச் சொல்லி விலக்கின மிருகங்களாலும் பறவைகளாலும் தரையோடே ஊருகிற யாதொன்றாலும் உங்கள் ஆத்துமாக்களை அருவருப்பாக்காதிருப்பீர்களாக.

௨௬ நமக்குப் பரிசுத்தவான்களாய் இருப்பீர்களாக, ஏனெனில் கர்த்தராகிய நாம் பரிசுத்தராயிருந்து, நீங்கள் நம்முடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களைச் சனசதனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தோமே.

௨௭ *அஞ்சனம்பார்க்கிற ஆவியுள்ள, அல்

Digitized by Google

லது குறிசொல்லுகிற மனிதனாகிலும் ஸ்திரி
யாகிலும் கொலையுண்ணவே கொலையுண்
ணக்கடவர்கள்; அவர்களைக் கல்லெறிவார்
களாக; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்
மேல் இருக்கக்கடவதென்று சொல்லென்
றார். *உ மோ. உஉ. ௰அ.

உக. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்
னதாவது: ஆரோனின் குமாரராகிய ஆசாரி
யர்களில் ஒருவனும் தன் சனத்தாரில் செத்
துப்போன ஒருவராலே தன்னைத் தீட்டுப்
படுத்தவேண்டாமென்று அவர்களோடே
சொல்.

உ தன்னுடைய கிட்டின சதையாகிய தன்
தாயினாலும், தன் தகப்பனாலும், தன் குமா
ரனாலும், தன் குமாரத்தியாலும், தன் சகோ
தரனாலும்,

௩ புருஷனுக்கு வாழ்க்கைப்படாமல் தன்
கிட்ட இருந்த கன்னியாஸ்திரியான தன்
சகோதரியாலுமே ஒழிய,

ச வேறொருவராலும் தன் சனத்தாரிலே
பெரியவனாகிய அவன் தன்னைப் பரிசுத்தக்
குலைச்சலாக்கி, தீட்டுப்படுத்தவேண்டாம்.

ரு அவர்கள் தங்கள் தலையை மொட்டை
யிடாமலும் தங்கள் தாடியின் ஓரங்களைச்
சிரைத்துப்போடாமலும் தங்கள் மாம்சத்
தைக் கீறிக்கொள்ளாமலும் இருப்பார்க
ளாக.

சு தங்கள் பராபரனுடைய நாமத்தைப்
பரிசுத்தக்குலைச்சல் ஆக்காமல், அவருக்
குப் பரிசுத்தராயிருப்பார்களாக; ஏனெ
னில் கர்த்தரின் தகனங்களென்ற தங்கள்
பராபரனுடைய அப்பத்தை அவர்கள் செ
லுத்தி, பரிசுத்தமாயிருக்கிறார்கள்.

எ சோரஸ்திரியையும் பரிசுத்தம் குலைந்த
வளையும் விவாகம்பண்ணார்களாக; தன்
புருஷனாலே தள்ளப்பட்ட பெண்சாதியை
யும், விவாகம்பண்ணார்களாக; ஏனெனில்
அவன் தன் பராபரனுக்குப் பரிசுத்தமான
வன்.

அ அவனைப் பரிசுத்தனென்று எண்ணுவா
யாக; ஏனெனில், உன் பராபரனுடைய
அப்பத்தைச் செலுத்துகிறான்; உனக்குப்
பரிசுத்தனாயிருப்பானாக; ஏனெனில் உங்
களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நாம்
பரிசுத்தர்.

கூ ஆசாரியனுடைய குமாரத்தி வேசித்தன
ம்பண்ணத்துவக்கினால், அவள் தன் தகப்
பனைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறாள்; அ
க்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவள்.

௰ ¶ சிரசில் அபிஷேகத்தெண்ணெய் வா
ர்க்கப்பட்டவனும் வஸ்திரங்களைத் தரிக்கக்
கைநிரப்பப்பட்டவனுமாகிய தன் சகோ
தரரிலிருக்கிற பிரதான ஆசாரியனானவெ
னில், தன் தலையைத் திறவாமலும், தன் வஸ்
திரங்களைக் கிழித்துக்கொள்ளாமலும்,

௰க செத்த எந்தச் சவத்தண்டையிலும்
வராமலும், தன் தகப்பனாலும் தன் தாயா
லும் தன்னைத் தீட்டுப்படுத்தாமலும்,

௰உ பரிசுத்தஸ்தலத்திலிருந்து புறப்படா
மலும், தன் பராபரனுடைய பரிசுத்தஸ்த
லத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும்
இருப்பானாக; ஏனெனில் அவனுடைய
பராபரனின் அபிஷேகத்தெண்ணெய் என்
ற கிரீடம் அவன்மேல் இருக்கிறது; நாம்
கர்த்தர்.

௰௩ கன்னியாஸ்திரியாகிய பெண்ணை அ
வன் விவாகம்பண்ணுவானாக.

௰ச அவன் கைம்பெண்சாதியையானாலும்,
தள்ளப்பட்டவளையானாலும், பரிசுத்தம்
குலைந்தவளையானாலும், வேசியையானாலும்
விவாகம்பண்ணாமல், தன் சனத்தாரிலுள்ள
ஒரு கன்னியாஸ்திரியை விவாகம்பண்ணி,

௰ரு தன்னுடைய வித்தைத் தன் சனத்தா
ருக்குள்ளே பரிசுத்தகுலைச்சலாக்காதிருப்
பானாக; ஏனெனில் நாம் அவனைப் பரி
சுத்தமாக்குகிற கர்த்தரென்று சொல்லென்
றார்.

௰சு ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:

௰எ நீ ஆரோனோடே பேசவேண்டியதே

Digitized by Google

தெனில் உன் வித்தாராகிய உன் தலைமுறை
யாரில் அங்கவீனமுள்ளவன் தன் பராபர
னுடைய அப்பத்தைச் செலுத்தச் சேர
ஒண்ணாது.
௰௮ அங்கவீனமுள்ள ஒருவனும் சேரவே
ண்டாம்; குருடனானாலும், சப்பாணியானா
லும், குறைந்த அல்லது நீண்ட அவயவ
முள்ளவனானாலும்,
௰௯ காலொடிந்தவனானாலும், கை ஒடிந்
தவனானாலும்,
௨௰ கூனனானாலும், நேர்ந்த உடம்பினனா
னாலும், பூப்பட்ட கண்ணனானாலும், சொ
றியனானாலும், படுவனுள்ளவனானாலும், வி
தை நசுங்கினவனானாலும் சரி,
௨௧ ஆசாரியனாகிய ஆரோனின் வித்தாரில்
அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின்
தகனங்களைச் செலுத்தச் சேரவேண்டாம்;
அங்கவீனம் அவனிலிருக்கையால், அவன்
தன் பராபரனுடைய அப்பத்தைச் செ
லுத்தச் சேரவொண்ணாது.
௨௨ தன் பராபரனுடைய அப்பமாகிய
பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானவைகளி
லும் பரிசுத்தமானவைகளிலும் அவன் புசி
க்கலாம்.
௨௩ ஆனால் திரையண்டை வாராமலும்
பீடத்தண்டையில் சேராமலும் இருப்பா
னாக; ஏனெனில் அங்கவீனம் அவனிலி
ருக்கின்றது; நம்முடைய பரிசுத்தஸ்தலத்
தை அவன் பரிசுத்தக்குலைச்சலாக்கவே
ண்டாம்; ஏனெனில் நாம் அவர்களைப் பரி
சுத்தம்பண்ணுகிற கர்த்தரென்று சொல்
லென்றார்.
௨௪ ¶ மோசே இவைகளை ஆரோனோடும்
அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர்
அனைவரோடும் சொன்னான்.

௨௨. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பே
சிச் சொன்னதாவது:
௨ இஸ்ரவேல் புத்திரர் நமக்கு நியமித்
துச் செலுத்துகிற பரிசுத்தவஸ்துக்களால்
ஆரோனும் அவன் குமாரரும் நம்முடைய
பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்ச
லாக்காதபடிக்கு, எச்சரிக்கையோடே இ
ருக்கவேண்டும் என்று அவர்களோடே
சொல்; நாம் கர்த்தர்.
௩ நீ அவர்களோடே சொல்லவேண்டிய
தேதெனில், உங்கள் தலைமுறைகளிலுள்ள
உங்கள் எல்லா வித்தாரிலும் எவனாகிலும்
தன்மேலே தீட்டிருக்கும்போது, இஸ்ர
வேல் புத்திரர் கர்த்தருக்கு நியமித்துச்
செலுத்துகிற பரிசுத்தவஸ்துக்களண்டை
யில் சேர்ந்தால், அந்த ஆத்துமா நமக்கு
முன்பாக இராதபடிக்கு அறுப்புண்பான்;
நாம் கர்த்தர்.
௪ ஆரோனின் வித்தாரில் எவன் குஷ்ட
ரோகியோ, எவன் பிரமியக்காரனோ, அவன்
சுத்தமாகும்மட்டும், பரிசுத்தவஸ்துக்களி
லே புசிக்கவேண்டாம்; செத்த உடலா
லே தீட்டானதெதையாகிலும் தொட்டவ
னும், அல்லது இந்திரியம் கழிந்தவனும்,
௫ அல்லது தீட்டுப்படுத்துகிற யாதொரு
ஊர்வதையாகிலும் எந்தத் தீட்டுமுள்ள
மனிதனையாகிலும் தொட்டவனும், அப்ப
டித்தானே.
௬ அப்படித் தொட்டவன் சாயங்காலம்
மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் ப
ரிசுத்தவஸ்துக்களிலே புசியாமல், தன் மா
ம்சத்தைத் தண்ணீரினால் கழுவக்கடவன்.
௭ சூரியன் அஸ்தமித்தபிற்பாடு சுத்தமா
யிருப்பான்; பிறகு அவன் பரிசுத்தவஸ்
துக்களிலே புசிக்கலாம்; ஏனெனில் அது
அவனுடைய அப்பம்.
௮ தானாய்ச் செத்ததையும் பீறுண்டதை
யும் அவன் புசிக்கிறதினாலே தீட்டுப்பட
வேண்டாம்; நாம் கர்த்தர்.
௯ ஆகையால் பரிசுத்தமானதை அவர்கள்
பரிசுத்தக்குலைச்சலாக்குகிறதினாலே, தங்
கள்மேலே பாவம் சுமத்திச்சாவாதபடிக்கு,
நம்முடைய காவலைக் காக்கக்கடவர்கள்;
நாம் அவர்களைப் பரிசுத்தமாக்குகிறகர்த்தர்.
௰ ¶ அந்நியன் ஒருவனும் பரிசுத்தவஸ்

Digitized by Google

துக்களிலே புசிக்கவேண்டாம்; ஆசாரியன்
வீட்டில் விடுதியாயிருக்கிறவனும் கூலி
வேலைசெய்கிறவனும் பரிசுத்தவஸ்துவிலே
புசிக்கவேண்டாம்.

௰௧ ஆசாரியன் தன் பணத்தினாலே கொ
ண்டவனும் அவன் வீட்டிலே பிறந்தவ
னுமோவெனில், அவனுடைய அப்பமா
கிய அதிலே புசிப்பார்களாக.

௰௨ ஆசாரியனுடைய குமாரத்தி பிறனுக்கு
வாழ்க்கைப்பட்டால், பரிசுத்தவஸ்துக்க
ளின் படைப்பிலே புசிக்கவேண்டாம்.

௰௩ கைம்பெண்சாதியாய்ப்போன, அல்
லது தள்ளப்பட்டவளான ஆசாரியனு
டைய குமாரத்தி வித்தில்லாதிருந்து, தன்
தகப்பன் வீட்டிலே தன்னுடைய இளவய
திலிருந்ததுபோல, திரும்பிவந்து இருந்தா
ளேயாகில், தன் தகப்பன் அப்பத்திலே
புசிப்பாளாக; ஆனால் அந்நியனாகிய ஒரு
வனும் அதிலே புசிக்கவேண்டாம்.

௰௪ ஒருவன் அறியாமல் பரிசுத்தவஸ்து
விலே புசித்ததுண்டானால், அவன் அதிலே
ஐந்தில் ஒருபங்கை அதிகமாகக்கூட்டி, பரி
சுத்தவஸ்துவோடுங்கூட ஆசாரியனுக்குக்
கொடுக்கக்கடவன்.

௰௫ அவர்கள் கர்த்தருக்கு ஏறெடுக்கிற
இஸ்ரவேல் புத்திரரின் பரிசுத்தவஸ்துக்க
ளைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும்,

௰௬ அவைகளைப் புசிக்கிறதிலே அவர்கள்
மேலே குற்றமான அக்கிரமத்தைச் சுமரப்
பண்ணாமலும் இருப்பார்களாக; ஏனெ
னில் நாம் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற
கர்த்தரென்று சொல்லென்றார்.

௰௭ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:

௰௮ நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும்
இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் பேசிச்
சொல்லவேண்டியதேதெனில்,இஸ்ரவேல்
வீட்டாரிலும் இஸ்ரவேலிலே தங்குகிற பர
தேசிகளிலும் எவர்கள் தங்களுடைய சகல
பொருத்தனைகளின்படியாகிலும் உற்சாகத்
தின்படியாகிலும் சர்வாங்கதகனமாகக் கர்த்
தருக்குத் தங்கள் காணிக்கையைச் செலுத்
தப்போகிறார்களோ,

௰௯ அவர்கள் தங்கள் மனதின்படியே மா
டுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளா
டுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆண்சீவ
னைப் பிடித்துவந்து செலுத்துவார்களாக.

௨௰ பழுதுள்ள ஒன்றையும் செலுத்தீர்
களாக; ஏனெனில் அது உங்களுக்காகக்
கர்த்தருக்குப் பிரியமாய் இருப்பதில்லை.

௨௰௧ ஒருவன் விசேஷித்த பொருத்தனைக்
காக, அல்லது உற்சாகமனதாக, கர்த்த
ருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும்
சமாதானபலியைச் செலுத்தப்போனால்,
அது பிரியமாய் இருக்கும்படிக்கு ஒரு ப
ழுதுமில்லாத உத்தமமாயிருக்கவேண்டும்.

௨௰௨ குருடு, நெரிசல், ஊனம், கழிச்சல்,
சொறி, புண்ணுள்ளது முதலானவைகளை
நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும்,
அவைகளாலே கர்த்தருக்குப் பலிபீடத்
தின்மேலே தகனபலியை ஏற்றாமலும் இரு
ப்பீர்களாக.

௨௰௩ நீண்ட, அல்லது குறைந்த அவயவ
முள்ள மாட்டையும் ஆட்டையும் நீ உற்
சாகபலியாக்கலாம்; ஆனால் பொருத்தனைக்
காக அது பிரியமாயிருப்பதில்லை.

௨௰௪ நசுங்கினதையும் நொறுங்கினதையும்
காயம்பட்டதையும் விதை அறுக்கப்பட்
டதையும் நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தா
மலும் உங்கள் தேசத்திலே பலிஇடாம
லும் இருப்பீர்களாக.

௨௰௫ அந்நிய புத்திரன்கையிலும் இப்படிக்
கொத்ததை வாங்கி, உங்கள் பராபரனு
டைய அப்பமாகச் செலுத்தீர்களாக; ஏனெ
னில் அவைகளின் கேடும் பழுதும் அவை
களில் இருக்கின்றன; அவைகள் உங்க
ளுக்காகப் பிரியமாயிருப்பதில்லை என்று
சொல்லென்றார்.

௨௰௬ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:

௨௰௭ ஒரு கன்று, அல்லது ஆட்டுக்குட்டி,
அல்லது வெள்ளாட்டுக்குட்டி பிறந்தால்

Digitized by Google

அது ஏழுநாள் தன் தாயின்கீழ் இருக்கக்
கடவது; எட்டாம்நாள் முதல்கொண்டு,
அது கர்த்தருக்குத் தகனகாணிக்கையாகச்
செலுத்தப்படப் பிரியமாயிருக்கும்.
௨௮ மாட்டையும் அதின் கன்றையும், அல்
லது ஆட்டையும் அதின் குட்டியையும்,
ஒரேநாளிலே குரல்வளை அறுக்கீர்களாக.
௨௯ ஸ்தோத்திரப்பலியைக் கர்த்தருக்குச்
செலுத்தினீர்களானால், உங்கள் மனப்பூர்
வத்தால் அதைச் செலுத்துவீர்களாக.
௩௰ அந்நாளிலேதானே அது புசிக்கப்ப
டுவதாக; விடியற்காலம்மட்டும் நீங்கள் அ
தில் ஒன்றும் மீதியாக வைக்கவேண்டாம்;
நாம் கர்த்தர்.
௩௧ ¶ நம்முடைய கற்பனைகளைக் கைக்
கொண்டு, அவைகளின்படி செய்யக்கட
வீர்கள்; நாம் கர்த்தர்.
௩௨ நாம் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரி
சுத்தமாக்கப்பட, நம்முடைய பரிசுத்த
நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிரு
ப்பீர்களாக; நாம் உங்களைப் பரிசுத்தமாக்
குகிற கர்த்தர்.
௩௩ நாம் உங்களுக்குப் பராபரனாயிருப்
பதற்காக, உங்களை எகிப்துதேசத்திலிருந்
து புறப்படப்பண்ணினவர்; நாம் கர்த்த
ரென்று சொல்லென்றார்.

௨௩. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பே
சிச் சொன்னதாவது:
௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச்
சொல்லவேண்டியதேதெனில், சபைகூடி
வந்து, பரிசுத்தநாள்களாக ஆசரிக்கும்
படிக்கு, நீங்கள் கூறவேண்டிய கர்த்தரு
டைய பண்டிகை நாள்களாவது:
௩ ஆறுநாள் வேலைசெய்யப்படுவதாக;
ஏழாம்நாளோவெனில், சபைகூடும் பரி
சுத்த ஓய்வுநாள், அதில் ஒரு வேலையையும்
செய்யீர்களாக; அது உங்கள் வாசஸ்
தலங்களில் எல்லாம் கர்த்தருக்கென்று
ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக.
௪ ¶ சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆச
ரிக்கும்படிக்கு, நீங்கள் திட்டமான காலத்
திலே கூறவேண்டிய கர்த்தரின் பண்டி
கைகள் எவைகளெனில்,
௫ *முதலாம்மாதம் பதினாலாம்தேதி
அந்திநேரமாகிறவேளையிலே கர்த்தருக்குப்
பஸ்காவும், *௨ மோ. ௰௨. ௰௪.
௬ அந்த மாதம் பதினைந்தாம்தேதியிலே,
கர்த்தருக்குப் புளிப்பில்லாத அப்பங்க
ளின் பண்டிகையுமாயிருக்கும்; ஏழுநாள்
புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பீர்க
ளாக.
௭ முதலாம்நாள் உங்களுக்குச் சபைகூ
டும் பரிசுத்தநாள்; அதிலே யாதொரு பணி
விடை வேலையைச் செய்யீர்களாக.
௮ ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனம்செ
லுத்தக்கடவீர்கள்; ஏழாம்நாள் சபைகூடும்
பரிசுத்தநாள்; அதில் யாதொரு பணிவி
டை வேலையையும் செய்யீர்களாக என்று
சொல்லென்றார்.
௯ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:
௰ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச்
சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்
களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள்
வந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்
கும்பொழுது, உங்கள் அறுப்பின் முதல்
பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியன்
அண்டையில் கொண்டுவரக்கடவீர்கள்.
௰௧ உங்கள்மேலே பிரியம் உண்டாக,
ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வு
நாளுக்குப் பின்னான மறுநாளிலே கர்த்த
ருக்குமுன்பாக அசைவாட்டுவானாக.
௰௨ நீங்கள் அதை அசைவாட்டுகிற அந்
நாளிலே, கர்த்தருக்குச் சர்வாங்கதகனப
லியாக, ஒருவயதான பழுதற்ற ஒரு ஆட்
டுக்குட்டியையும்,
௰௩ கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையான
தகனமாக, ஒரு மரக்காலிலே பத்தில் இர
ண்டுபங்கானதும், எண்ணெயிலே பிசைந்
ததுமான மெல்லிய மாவாகிய அதின் கா

Digitized by Google

ணிக்கையையும், திராட்சப்பழ இரசத்திலே கால்படியாகிய அதின் ஊற்றுதலையும், செலுத்தக்கடவீர்கள்

௰௪ உங்கள் பராபரனுடைய காணிக்கையை நீங்கள் கொண்டுவரும் அந்நாள்மட்டும், அப்பமும் சுட்ட கதிரும் பச்சைக்கதிரும் புசியீர்களாக, இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

௰௫ ¶ நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட்டைக் கொண்டுவந்த ஓய்வுநாளுக்குப் பின்னுன அந்த மறுநாள்முதல்கொண்டு எண்ணத்துவக்கி, ஏழுவாரங்களைச் சரியாகப் போகவிட்டு,

௰௬ ஏழாம் ஓய்வுநாளுக்குப் பின்னுன மறுநாளாகிய ஐம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதுக்காணிக்கையைச் செலுத்தக்கடவீர்கள்.

௰௭ நீங்கள் ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டுபங்காகிய மெல்லியமாவிலே புளிப்பாகச் சுட்ட அசைவாட்டும் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கு முதல்பலனாகக் கொண்டுவந்து,

௰௮ அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாக, ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளை எருதையும், இரண்டு ஆட்டுக்கடாக்களையும், கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையான தகனமாக அவைகளுக்கு அடுத்த காணிக்கையையும் ஊற்றுதல்களையும் செலுத்தி,

௰௯ வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பாவம்போக்கும் பலியும், ஒருவயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைச் சமாதானபலியுமாக்கக்கடவீர்கள்.

௨௰ அவைகளை ஆசாரியன் முதல்பலனாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூட, கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டக்கடவன்; கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையவைகளாம்.

௨௰௧ அந்த நாள்தானே உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாளென்று கூறக்கடவீர்கள்; யாதொரு பணிவிடை வேலையை அதிலே செய்யீர்களாக; இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

௨௰௨ ¶ *உங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், உன் வயலின் ஓரத்தில் இருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடுவாயாக; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார். * ௫ மோ. ௰௯. ௯.

௨௰௩ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௰௪ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், உங்களுக்கு ஏழாம்மாதம் முதலாம்தேதி கெம்பீரப்பிரஸ்தாபத்தின் பண்டிகை என்ற சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாளாய் இருப்பதாக.

௨௰௫ அதிலே யாதொரு பணிவிடை வேலையைச் செய்யாமல், கர்த்தருக்குத் தகனம் செலுத்துவீர்களாக என்றுசொல்லென்றார்.

௨௰௬ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௰௭ அந்த ஏழாம்மாதம் பத்தாம்தேதியோவென்றால், உங்களுக்குப் பாவநிவிர்த்தி ஆகுதலின் நாளும் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருக்கும்; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத்தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத்தகனம்செலுத்தக்கடவீர்கள்.

௨௰௮ ஆகையால் அந்நாளிலே யாதொரு வேலையையும் செய்யீர்களாக; ஏனெனில் அது உங்கள் பராபரனாகிய கர்த்தரின் சந்நிதியில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும் நாளாயிருக்கின்றது.

௨௰௯ அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவும் தன் சனத்தாரிலிராதபடிக்கு அறுப்புண்பான்.

௩௰ அந்நாளிலே யாதொரு ஆத்துமா யா

தொரு வேலையைச் செய்தால், அந்த ஆத்
துமாவை அவன் சனத்தின் நடுவிலே வைக்
காமல் அழிப்போம்.
௩௧ நீங்கள் எந்த வேலையும் செய்யாதி
ருப்பது, உங்கள் வாசஸ்தலங்களிலெல்
லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்
லும் நித்தியகட்டளை.
௩௨ அது உங்களுக்கு ஓய்வுக்கு ஓய்வு
நாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத்
தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; அந்த மா
தத்தின் ஒன்பதாம்தேதி சாயங்காலம்து
வக்கி, மறுசாயங்காலம்மட்டும், உங்கள்
ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார்.
௩௩ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே
பேசிச் சொன்னதாவது:
௩௪ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச்
சொல்லவேண்டியதேதெனில், அந்த ஏழா
ம்மாதம் பதினைந்தாம்தேதி கர்த்தருக்கு ஏழு
நாளாக ஆசரிக்கும் கூடாரப்பண்டிகை.
௩௫ முதலாம்நாள் சபைகூடும் பரிசுத்த
நாள்; யாதொரு பணிவிடை வேலையும்
செய்யீர்களாக.
௩௬ ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனம்செ
லுத்தக்கடவீர்கள்; எட்டாம்நாளும் உங்
களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதி
லே கர்த்தருக்குத் தகனம் செலுத்தக்கட
வீர்கள்; அது ஆசரிக்கப்படும்நாள்; அதி
லே யாதொரு பணிவிடை வேலையைச்
செய்யாதிருப்பீர்களாக.
௩௭ நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாள்களி
லே செலுத்துவதல்லாமலும், நீங்கள் கர்த்
தருக்குப் படைக்கிற உங்கள் எல்லாக்
காணிக்கைகளும் பொருத்தனைகளும் உற்
சாகப்பலிகளும் அல்லாமலும்,
௩௮ நீங்கள் அந்தந்த நாளுக்குத்தக்கபடி,
கர்த்தருக்குச் சர்வாங்கதகனம், காணிக்
கை, பலி, ஊற்றுதல் முதலான தகனங்க
ளைச் செலுத்தும்படிக்குச் சபைகூடிவந்து,
பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக, நீங்கள்
கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகை
கள் இவைகள்தானே.
௩௯ நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்திருக்
கும் ஏழாம்மாதம் பதினைந்தாம்தேதியிலோ
வென்றால், கர்த்தருடைய பண்டிகையை
ஏழுநாளாக ஆசரிக்கக்கடவீர்கள்; முத
லாம்நாளிலும் ஓய்வு; எட்டாம்நாளிலும்
ஓய்வு.
௪௰ முதலாம்நாளிலே, அலங்கார விருட்
சங்களின் கனிகளையும் பேரீச்சமட்டை ஓ
லைகளையும் தழைந்திருக்கிற விருட்சங்க
ளின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்
டுவந்து, உங்கள் பராபரனாகிய கர்த்தருக்
குமுன்பாக ஏழுநாள் மகிழ்ச்சியாயிருந்து,
௪௧ வருஷம்தோறும் ஏழுநாள் கர்த்தருக்
கு இந்தப் பண்டிகையை ஆசரிக்கக்கட
வீர்கள்; இது உங்கள் தலைமுறைகளுக்குச்
செல்லும் நித்தியகட்டளை; ஏழாம்மாதத்தில்
அதை ஆசரிக்கக்கடவீர்கள்.
௪௨ நாம் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து
தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபொ
ழுது, அவர்களைக் கூடாரங்களிலே குடியி
ருக்கப்பண்ணினதை உங்கள் தலைமுறை
தலைமுறையாக அறியும்படிக்கு,
௪௩ ஏழுநாள் கூடாரங்களிலே குடியிருக்
கக்கடவீர்கள்; இஸ்ரவேலிலே பிறந்தவர்
கள் எல்லாரும் கூடாரங்களிலே குடியி
ருப்பார்களாக; நாம் உங்கள் பராபரனாகிய
கர்த்தரென்று சொல்லென்றார்.
௪௪ ¶ அப்படியே மோசே கர்த்தருடைய
பண்டிகைகளின் வர்த்தமானத்தை இஸ்ர
வேல் புத்திரருக்குச் சொன்னான்.

உ௪. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பே
சிச் சொன்னதாவது:
௨ *குத்துவிளக்கில் எப்பொழுதும் வெ
ளிச்சம் ஏற்றும்படிக்கு, இஸ்ரவேல் புத்
திரர் இடித்துப் பிழியப்பட்ட தெளிவான
ஒலிவ எண்ணெயை உன்னண்டைக்குக்
கொண்டுவர அவர்களுக்குக் கற்பி.

*௨ மோ. உ௭. உ௰.

௩ ஆசரிப்புக்கூடாரத்திலே சாட்சியின்

Digitized by Google

திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை
எப்பொழுதும், சாயங்காலந்துவக்கி, விடி
யற்காலம்மட்டும், கர்த்தருக்குமுன்பாக
எரியவைக்கக்கடவன்; இது உங்கள் தலை
முறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.
௪ அவன் எப்பொழுதும் கர்த்தருக்குமுன்
பாகச் சுத்தமான குத்துவிளக்கின்மேலிருக்
கிற விளக்குகளை எரியவைக்கக்கடவன்.
௫ ¶ மெல்லிய மாவைவாங்கி, அதைப் பன்
னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக; ஒவ்
வொரு அப்பம் மரக்காலிலே பத்தில் இர
ண்டுபங்கு மாவினாலே செய்யப்படுவதாக.
௬ அவைகளை நீ கர்த்தருக்குமுன்பாக, சுத்
தமான மேசையின்மேல் இரண்டு அடுக்
காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு இருக்
கும்படிக்கு வைத்து,
௭ ஒவ்வொரு அடுக்கினிடத்திலே சுத்த
மான குங்குலிகம் போடக்கடவாய்; அது
அப்பத்தோடிருந்து நினைப்புக்கென்று கர்த்
தருக்குத் தகனமாயிருக்கும்.
௮ அதை நித்திய உடம்படிக்கையாக இஸ்
ரவேல் புத்திரர்கையிலே வாங்கி, ஓய்வு
நாள்தோறும் கர்த்தருக்குமுன்பாக அடுக்
கிவைக்கக்கடவன்.
௯ அது ஆரோனையும் அவன் குமாரரை
யும் சேரும்; அதைப் பரிசுத்தவிடத்திலே
புசிக்கக்கடவர்கள்; ஏனெனில் அது பரி
சுத்தத்திற்குப் பரிசுத்தம், கர்த்தருடைய
தகனங்களில் அது அவனுக்கு நித்தியகட்
டளை என்றார்.
௰ ¶ இஸ்ரவேல் சாதியான ஸ்திரிக்கும் எ
கிப்தியபுருஷனுக்கும் மகனாகிய ஒருவன்,
இஸ்ரவேல் புத்திரரோடேகூடப் புறப்பட்
டுவந்திருந்தான்; இவனும் இஸ்ரவேலனாகி
ய ஒரு மனிதனும் பாளயத்திலே சண்டை
பண்ணினார்கள்.
௰௧ அப்பொழுது இஸ்ரவேல் சாதியான
அந்த ஸ்திரியின் மகன் நாமநிந்தை சொல்
லித் தூஷணித்தான்; ஆகையால் அவனை
மோசேயண்டைக்குக் கொண்டுவந்தார்
கள்; அவன் தாயின்பேர் சேலோமீத்,
அவள் தாண் கோத்திரத்தானாகிய திப்ரி
யின் குமாரத்தி.
௰௨ கர்த்தரின் வாக்கினாலே தங்களுக்கு
உத்தரவு வரும்மட்டும், அவனைக் காவல்ப
டுத்தினார்கள்.
௰௩ அப்பொழுது கர்த்தர் மோசேயோ
டே பேசிச் சொன்னதாவது:
௰௪ தூஷணித்தவனைப் பாளயத்திற்குப்
புறம்பே கொண்டுபோ; கேட்டவர்கள்
எல்லாரும் தங்கள் கைகளை அவன் தலை
யின்மேல் வைப்பார்களாக; பிற்பாடு சபை
யெல்லாம் அவனைக் கல் எறியக்கடவது.
௰௫ ஆனால் இஸ்ரவேல் புத்திரரோடே நீ
சொல்லவேண்டியதேதெனில், எவனாகி
லும் தன் பராபரனைத் தூஷணித்தால், அ
வன் தன் பாவத்தைச் சுமப்பான்.
௰௬ கர்த்தரின் நாமத்தை நிந்தையாகச்
சொல்லுகிறவன் கொலையுண்ணவே கொ
லையுண்ணக்கடவன்; சபையெல்லாம் அவ
னைக் கல் எறியவே எறியக்கடவது; பரதே
சியாகிலும் சரி, தேசத்திலே பிறந்தவனாகி
லும் சரி, நாமத்தைத் தூஷணித்தானானால்
கொலையுண்ணக்கடவன்.
௰௭ யாதொரு மனித சீவனை ஒருவன்
கொன்றால், கொலையுண்ணவே கொலை
யுண்ணக்கடவன்.
௰௮ மிருகசீவனைக் கொன்றவன் சீவனுக்
குச் சீவனைச் செலுத்தக்கடவன்.
௰௯ ஒருவன் தனக்கு அடுத்தவனில் ஊ
னம் உண்டாக்கினால், அவன் செய்தபடி
அவனுக்குச் செய்யப்படக்கடவது.
௨௰ நொறுக்குதலுக்கு நொறுக்குதலும்,
கண்ணுக்குக் கண்ணும், பல்லுக்குப் பல்
லும்தானே; அவன் மனிதனில் ஊனம்
உண்டாக்கினபடியே அவனிலும் உண்
டாக்கப்படக்கடவது.
௨௧ மிருகத்தைக் கொன்றவன் பதில் கொ
டுக்கக்கடவன்; மனிதனைக் கொன்றவனோ,
கொலையுண்ணக்கடவன்.
௨௨ உங்களில் பரதேசிக்கும் தேசத்திலே
பிறந்தவனுக்கும் ஏகமான நியாயம் இருக்

Digitized by Google

கக்கடவது; ஏனெனில் நாம் உங்கள் பரா
பரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார்.
௨௩ அப்படியே தூஷணித்தவனைப் பாள
யத்திற்குப் புறம்பே கொண்டுபோய், அவ
னைக் கல் எறிவதற்காக மோசே இஸ்ரவேல்
புத்திரரோடே சொன்னான்; கர்த்தர் மோ
சேக்குக் கற்பித்தபடியே இவர்கள் செய்
தார்கள்.

௨௫. அதிகாரம்.

கர்த்தர் சீனாய்ப்பர்வதத்தில் மோசேயோ
டே பேசிச் சொன்னதாவது:
௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச்
சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்
களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள்
வந்திருக்கும்பொழுது, தேசம் கர்த்தருக்
கென்றோய்வுகளைக்கொண்டாடவேண்டும்.
௩ *ஆறுவருஷம் உன் வயலை விதைத்து,
உன் திராட்சத்தோட்டத்தைக் கிளை நறுக்கி,
அதின் பலனைச் சேர்ப்பாயாக. *௨ மோ.
௨௩. ௰, ௰௧.
௪ ஏழாம்வருஷத்திலோவென்றால், கர்த்
தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்
திற்கு இருக்கவேண்டும்; உன் வயலை வி
தைக்காமலும், உன் திராட்சத்தோட்டத்
தைக் கிளை நறுக்காமலும்,
௫ சயமாய் உனக்கு விளைந்த பயிரானதை
அறுத்துக்கொள்ளாமலும், நீ கிளை நறுக்கா
தே விட்ட திராட்சச்செடியின் பழங்களைச்
சேர்க்காமலும் இருப்பாயாக; தேசத்திற்கு
அது ஓய்ந்திருக்கும் வருஷமாய் இருக்கக்
கடவது.
௬ தேசத்தின் ஓய்விலே பயிராகிறது உங்
களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; உனக்
கும், உன் வேலைக்காரனுக்கும், உன் வேலைக்
காரிக்கும், உன் கூலியாளுக்கும், உன்னி
டத்திலே தங்குகிற உன்னுடைய பரதே
சிக்கும்,
௭ உன் மிருகஜீவனுக்கும், உன் தேசத்தி
லிருக்கிற காட்டுச்சீவனுக்கும், அதின் பல
னெல்லாம் ஆகாரமாய் இருப்பதாக.

௮ ¶ பின்னையும் ஏழு ஓய்வு வருஷங்க
ளுள்ள ஏழேழு வருஷங்களை எண்ணுவா
யாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களுள்ள
நாள்கள் உனக்கு நாற்பத்தொன்பது வரு
ஷம் ஆகும்.
௯ அப்பொழுது ஏழாம்மாதம் பத்தாம்
தேதியிலே தொனிக்கிற எக்காளத்தைச்
சுற்றித் திரியப்பண்ணுவாயாக; பாவநிவிர்
த்தியாகுதலின் நாளிலே அதை உங்கள் தே
சமெங்கும் திரியப்பண்ணி,
௰ ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்
கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல்
லாம் விடுதலையைக் கூறக்கடவீர்கள்; அது
உங்களுக்குச் சீர்திருந்தும் வருஷம்; அதி
லே நீங்கள் அவரவர் தங்கள் காணியாட்
சிக்கும் அவரவர் தங்கள் வம்சத்திற்கும்
திரும்புவீர்கள்.
௰௧ அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்
குச் சீர்திருந்தும் வருஷமாயிருப்பதாக;
அதிலே விதைக்காமலும், சயமாய் விளைந்
து பயிரானதை அறுத்துக்கொள்ளாமலும்
கிளை நறுக்காதே விடப்பட்ட திராட்சச்செ
டியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்
பீர்களாக.
௰௨ ஏனெனில், அது சீர்திருந்தும் வரு
ஷம்; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்
கவேண்டும்; அதின் பலனை வயலில் எடுத்
து, புசித்துக்கொண்டு இருப்பீர்களாக.
௰௩ சீர்திருந்தும் அந்த வருஷத்தில் நீங்கள்
அவரவர் தங்கள் காணியாட்சிக்குத் திரும்
புவீர்கள்.
௰௪ ஆகையால் ஏதாகிலும் உங்களுக்கடுத்
தவனுக்கு விற்று, அல்லவென்று அவன்
கையிலே கொண்டீர்களானால், ஒருவரை
ஒருவர் இடுக்கண் செய்யீர்களாக.
௰௫ சீர்திருந்தும் வருஷத்திற்குப்பிறகு
சென்ற வருஷங்களின் இலக்கத்திற்குத்
தக்கதாக உனக்கடுத்தவன் கையிலே கொ
ள்ளுவாயாக; பலனுள்ள வருஷங்களின்
இலக்கத்திற்குத்தக்கதாக அவன் உனக்கு
விற்பானாக.

Digitized by Google

௰௬ வருஷங்கள் அநேகமானால் அதின் வி
லையை உயர்த்தி, கொஞ்சமானால் அதைத்
தாழ்த்துவாயாக; ஏனெனில் பலனுள்ள
வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து,
அவன் உனக்கு விற்கிறான்.
௰௭ உங்களில் ஒருவனும் தனக்கடுத்தவ
னை இடுக்கண் செய்யவேண்டாம்; உன்
பராபரனுக்குப் பயப்படுவாயாக; ஏனெ
னில் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.
௰௮ ¶ நம்முடைய கட்டளைகளின்படி
செய்து, நம்முடைய நியாயங்களைக் கைக்
கொண்டு, அவைகளின்படி செய்யக்கட
வீர்கள்; அப்பொழுது தேசத்திலே சுக
மாய்க் குடியிருந்து,
௰௯ பூமி தன் கனியைத் தருகிறதினாலே
திர்ப்தியாகச் சாப்பிட்டு, அதிலே சுகமாய்க்
குடியிருப்பீர்கள்.
௨௰ ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்
போம்? இதோ நாங்கள் விதைக்காமலும்,
எங்கள் பலனைச் சேர்க்காமலும் இருக்க
வேண்டுமே என்றீர்களேயானால்,
௨௧ ஆறாம் வருஷம் மூன்று வருஷங்க
ளின் பலனைத் தர, நமது ஆசிர்வாதத்தை
உங்களுக்காகக் கட்டளையிடுவோம்.
௨௨ ஆனதினாலே நீங்கள் எட்டாம் வரு
ஷத்திலே விதைத்து, பழைய பலனிலே
ஒன்பதாம் வருஷம்மட்டும் சாப்பிடுவீர்
கள்; இதின் பலன் வரும்மட்டுக்கும் பழை
ய பலனைச் சாப்பிடுவீர்கள்.
௨௩ ¶ நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்க
வேண்டாம்; அதேனென்றால் தேசம் நம்
முடையது; நீங்கள் நமக்குமுன்பாகப் பர
தேசிகளும் தங்கியிருக்கிறவர்களும்தானே.
௨௪ ஆகையால் உங்கள் காணியாட்சியா
ன தேசமெங்கும், நிலங்களின் மீட்புக்கு
இடம்கொடுக்கக்கடவீர்கள்.
௨௫ உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு,
தன் காணியாட்சியிலே சிலதை விற்றால்,
அவனைச் சேர்ந்த மீட்பன் வந்து, தன் ச
கோதரன் விற்றதை மீட்கக்கடவன்.
௨௬ மீட்பன் இல்லாதவனுக்கோவெனில்,
தன் மீட்புக்குத் தேவையான அவகாசம்
அகப்பட்டால்,
௨௭ அவன் தன்னுடைய காணியாட்சிக்
குத் திரும்பிவரும்படிக்கு, அதை விற்றபி
றகு சென்ற வருஷங்களின் கணக்கைத்
தள்ளி, மீதியானதை அதைக் கொண்டவ
னுக்குத் திரும்பக் கொடுப்பானாக.
௨௮ இவனுக்குத் திரும்பக் கொடுப்பதற்
கான அவகாசம் அவனுக்கு அகப்படாமல்
போயிற்றேயாகில், அவன் விற்றது கொண்
டவன் கையிலே சீர்திருந்தும் வருஷம்
மட்டும் இருந்து, சீர்திருந்தும் வருஷத்தி
லோவென்றால், அவன் தன் காணியாட்சிக்
குத் திரும்பி வரும்படிக்கு அது நீங்கலா
கக்கடவது.
௨௯ ¶ ஒருவன் மதிலுள்ள பட்டணத்தில்
வாசஸ்தலமாகிய வீட்டை விற்றால், அதை
விற்றபிறகு ஒரு வருஷம்மட்டும் அதின்
மீட்புச் செல்லும்; அதின் மீட்புக்கு ஒரு
முழுவருஷம் தவணையாய் இருப்பதாக.
௩௰ ஒரு முழுவருஷகாலம் நிறைவேறும்
மட்டும் அது மீட்கப்படாதிருந்ததேயா
னால், அப்பொழுது மதிலுள்ள பட்டணத்
திலிருக்கும் அந்த வீட்டைக் கொண்டவ
னுக்குஅது தலைமுறைதலைமுறையாக நிலைத்
திருக்கக்கடவது; சீர்திருந்தும் வருஷத்தில்
அது நீங்கலாவதும் இல்லை.
௩௧ சுற்றிலும் மதிலில்லாத கிராமங்களின்
வீடுகளோவெனில், தேசத்தின் வயல்வெ
ளிக்குச் சரியாக எண்ணப்படுவதாக; அ
வைகளுக்கு மீட்பிருக்கும்; சீர்திருந்தும்
வருஷத்தில் நீங்கலுமாகும்.
௩௨ இலேவியரின் காணியாட்சியாகிய பட்
டணங்களின் வீடுகளுக்கோவென்றால், இ
லேவியருக்கு என்றைக்கும் மீட்புக்கு இ
டமுண்டு.
௩௩ விற்றவனுடைய காணியாட்சிப் பட்
டணமான ஊரின் வீடு இலேவியரில் பின்
னொருவரால் மீட்கப்பட்டிருந்தாலும், சீர்
திருந்தும் வருஷத்தில் நீங்கலாகவேண்
டும்; ஏனெனில் இலேவியருடைய பட்ட

Digitized by Google

ணங்களின் வீடுகள் இஸ்ரவேல் புத்திரரின்
நடுவிலே அவர்களுக்கு இருக்கிற காணி
யாட்சி.
௩௪ ஆனால் அவர்கள் பட்டணங்களுடை
ய பேட்டைகளின் வயல்வெளி விற்கப்
படாதிருப்பதாக; ஏனெனில் அது அவர்
களுக்கு நித்தியகாணியாட்சியாய் இருக்
கின்றது.
௩௫ ¶ உன் சகோதரன் உன்னிடத்திலே
தரித்திரப்பட்டு, கை இளைத்தவனானால்,
அவனைத் திடப்படுத்துவாயாக; பரதேசி
யையும் தங்கவந்தவனையும்போல, அவன்
உன்னோடே பிழைப்பானாக.
௩௬ நீ அவன் கையில் வட்டியையும் சொ
ச்சத்தையும் வாங்காமல், உன் சகோதரன்
உன்னோடே பிழைக்கும்படிக்கு, உன் பரா
பரனுக்குப் பயப்படக்கடவாய்.
௩௭ அவனுக்கு உன் பணத்தை வட்டிக்
கும் உன் போசனத்தைச் சொச்சத்திற்கும்
கொடாயாக.
௩௮ நாம் உங்களுக்குக் கானான்தேசத்
தைக் கொடுத்து, உங்களுக்குப் பராபர
யிருக்கும்படிக்கு, உங்களை எகிப்துதேசத்
திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள்
பராபரனாகிய கர்த்தர்.
௩௯ ¶ உன் சகோதரன் உன்னிடத்திலே
தரித்திரனாகி உனக்கு விலைப்பட்டுப்போ
னால், அவனை அடிமைவேலைகொள்ளாயாக.
௪௰ அவன் கூலிக்காரனைப்போலவும் தங்
கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்
து, சீர்திருந்தும் வருஷம்மட்டும் உன்னி
டத்திலே சேவித்து,
௪௧ அப்பொழுது தன் பிள்ளைகளோடுங்
கூட உன்னைவிட்டு நீங்கலாகி, தன் வம்சத்
தண்டைக்கும் தன் பிதாக்களின் காணி
யாட்சிக்கும் திரும்பிவருவானாக.
௪௨ ஏனெனில் அவர்கள் நாம் எகிப்து
தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நம்
முடைய வேலைக்காரர்; அடிமை விற்கப்
படுவதுபோல, அவர்கள் விற்கப்படவேண்
டாம்.
௪௩ *நீ அவனைக் கோரமாய் ஆளாமல்,
உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக.
*எபே. ௬. ௯.
௪௪ உனக்கிருக்கும் அடிமையும் அடி
மைப்பெண்ணும் உங்களைச் சுற்றிலுமிருக்
கிற புறச்சாதிகளின் மனிதராயிருக்கவேண்
டும்; அவைகளில் நீ அடிமையையும், அடி
மைப்பெண்ணையும் கொள்ளலாம்.
௪௫ உங்களிடத்தில் பரதேசிகளாய்த் தங்
குகிற அந்நியரின் புத்திரரிலும், உங்கள்
தேசத்தில் உங்களிடத்திலே பிறந்திருக்கிற
அவர்களுடைய வம்சத்தாரிலுங்கூட, நீங்
கள் உங்களுக்கு அடிமைகளைக் கொண்டு,
௪௬ அவர்களை உங்களுக்கும் உங்களுக்
குப்பிற்பாடு உங்கள் பிள்ளைகளுக்கும் சொ
ந்தச் சுதந்தரமாக்கி, என்றைக்கும் ஆண்டு
கொண்டிருக்கலாம்; ஆனால் இஸ்ரவேல்
புத்திரராகிய உங்கள் சகோதரரில் ஒருவ
ரை ஒருவர் கோரமாக ஆளவேண்டாம்.
௪௭ ¶ உன்னிடத்திலிருக்கிற பரதேசியும்
அந்நியனும் அவகாசம்பெற்றிருக்கும்போ
து, அவனிடத்திலிருக்கிற உன் சகோதரன்
தரித்திரப்பட்டு, அவனுக்கும் அல்லது அ
வன் வம்ச சந்ததிக்கும் விலைப்பட்டுப்போ
னால்,
௪௮ விலைப்பட்டுப்போனபிற்பாடு அவ
னுக்கு மீட்புண்டாவதாக; அவன் சகோத
ரரில் ஒருவன் அவனை மீட்கக்கடவன்.
௪௯ அவனுடைய பெரிய சிறியதகப்பனா
னாலும், பெரிய சிறியதகப்பன் குமாரனா
னாலும் அவன் வம்சத்தில் அவனைச் சேர்ந்த
சபையாரில் ஒருவனானாலும், அவனை மீட்
பானாக; அல்லவென்று அவனுக்கு அவகா
சம்கிடைத்தால், தன்னைத்தான் மீட்கலாம்.
௫௰ அவன் தன்னைக் கொண்டவன் கையி
லே விலைப்பட்டுப்போன வருஷத்திற்கும்
சீர்திருந்தும் வருஷத்திற்கும் இருக்கும்
காலத்தை அவனோடே கணக்குப்பார்ப்
பானாக; அவனோடே ஒரு கூலிக்காரனாய்
இத்தனைநாள் இருந்ததுபோல, அவனுடை
ய விலைக்கிரயம் வருஷங்களின் இலக்கத்

திற்கொத்துப் பார்க்கப்படக்கடவது.

௫௧ இன்னம் அநேகம் வருஷங்கள் இருந்தால், அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாக, திரும்பக் கொடுக்கக்கடவன்.

௫௨ சீர்திருந்தும் வருஷம்மட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால், அவனோடே கணக்குப்பார்த்து, தன் வருஷங்களுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாக, திரும்பக் கொடுக்கக்கடவன்.

௫௩ ஒரு கூலிக்காரனைப்போல, அவனோடே வருஷத்திற்கு வருஷம் இருப்பானாக; அவன் இவனை உன் பார்வைக்குக் கொடூரமாக ஆளவேண்டாம்.

௫௪ இவ்விதங்களாய் அவன் மீட்டுக்கொள்ளப்படாதேபோனால், அவனும் அவன் பிள்ளைகளும்கூடச் சீர்திருந்தும் வருஷத்திலே நீங்கலாவார்கள்.

௫௫ ஏனெனில் இஸ்ரவேல் புத்திரர் நமக்கு வேலைக்காரர், அவர்கள் நாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நம்முடைய வேலைக்காரராயிருக்கிறார்கள்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

உ௬. அதிகாரம்.

நீங்கள் உங்களுக்கு *விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நாட்டாமலும், சித்திரம் தீர்ந்த கல்லை அதற்குமுன்பாகப் பணிய உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக; ஏனெனில் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர். *உ மோ. உ௰. ௪.

உ நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்கொண்டு, நம்முடைய பரிசுத்தஸ்தலத்திற்கு அஞ்சி இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.

௩ ¶ *நீங்கள் நம்முடைய கட்டளைகளில் நடந்து, நம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்தால்,
*௫ மோ. உ௮. ௧.

௪ நாம் ஏற்றகாலத்தில் உங்கள் மழைகளைத் தருவோம்; பூமி தன் பலனையும் நிலத்தின் மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்.

௫ போரடிப்பு உங்களுக்குத் திராட்சப்பழ அறுப்புமட்டும் வரும்; திராட்சப்பழ அறுப்பு விதைப்புக்காலம்மட்டும் வரும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

௬ தேசத்திலே சமாதானம் கட்டளை இடுவோம்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொண்டிருப்பீர்கள்; துஷ்டமிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவோம்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.

௭ உங்கள் சத்துருக்களைத் துரத்துவீர்கள்; அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

௮ உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்குமுன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

௯ நாம் உங்கள்மேலே நோக்கமாயிருந்து, உங்களைப் பலுகவும் பெருகவும்பண்ணி, உங்களோடிருக்கும் நம்முடைய உடம்படிக்கையைத் திடப்படுத்துவோம்.

௰ போன வருஷத்தின் பழைய தானியத்தைச் சாப்பிட்டு, புதியது வந்ததினாலே பழையதை விலக்குவீர்கள்.

௰௧ நம்முடைய வாசஸ்தலத்தை உங்கள் நடுவிலே வைப்போம்; நம்முடைய ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை.

௰௨ நாம் உங்கள் நடுவிலே உலாவி, உங்களுக்குப் பராபரனாயிருப்போம்; நீங்கள் நமக்குச் சனமாயிருப்பீர்கள்.

௰௩ நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு, நாம் உங்களை அவர்கள் தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் நுகத்தடிகளை உடைத்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

Digitized by Google

௰௪ ¶ நீங்கள் நம்முடைய சொல்கேளா
மலும், இந்தக் கற்பனைகளின்படி எல்லாம்
செய்யாமலும்,
௰௫ நம்முடைய கட்டளைகளை வெறுக்கிற
தும், உங்கள் ஆத்துமா நம்முடைய நியாய
ங்களை அரோசிக்கிறதும், நீங்கள் நம்முடை
ய கற்பனைகளின்படி எல்லாம் செய்யாத
படிக்கு, நம்முடைய உடம்படிக்கையை
முறித்துப்போடுகிறதும் உண்டேயாகில்,
௰௬ நாம் உங்களுக்குச் செய்வதேதென்
றால், கண்களைப் பூத்துப்போகப்பண்ணுகி
றதும் ஆத்துமாவைக் கஸ்திப்படுத்துகிறது
மான திகிலையும் இளைப்பையும் காய்ச்சலையும்
உங்கள்மேலே வரப்பண்ணுவோம்; உங்
கள் விதையை விருதாவாக விதைப்பீர்கள்;
உங்கள் சத்துருக்கள் அதைத் தின்னுவார்
கள்.
௰௭ நமது முகத்தை உங்களுக்கு விரோத
மாகத் திருப்புவோம்; உங்கள் சத்துருக்
களுக்குமுன்பாக முறியடிக்கப்படுவீர்கள்;
உங்கள் பகைஞர் உங்களை ஆண்டுகொள்
வார்கள்; உங்களைத் துரத்துவார் இல்லா
மல் ஓடுவீர்கள்.
௰௮ நீங்கள் இதனோடே இன்னம் நம்மு
டைய சொல்கேளாதேபோனால், நாம் உங்
கள் பாவங்களினிமித்தம் பின்னையும் ஏ
ழத்தனையாக உங்களைத் தண்டித்து,
௰௯ உங்கள் வல்லமையின் பெருமையை
முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப்
போலவும், உங்கள் பூமியை வெண்கலத்
தைப்போலவும் இருக்கப்பண்ணுவோம்.
௨௰ உங்கள் பலம் விருதாவிலே செல
வழியும்; உங்கள் தேசம் தன் பலனையும்,
தேசத்தின் மரங்கள் தங்கள் கனியையும்
கொடாதேபோம்.
௨௧ நீங்கள் நமது சொல்கேட்க மனதில்
லாமல் நமக்கெதிர்த்து நடந்தீர்களேயா
னால், நாம் உங்கள் பாவங்களுக்குத்தக்க
தாக இன்னம் ஏழத்தனை வாதையை உங்
கள்மேலே வரப்பண்ணி,
௨௨ உங்களுக்குள்ளே வெளியின் துஷ்ட
மிருகங்களை வரவிடுவோம்; அவைகள்
உங்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்கி,
உங்கள் மிருகஜீவன்களை அழித்து, உங்
களைக் குறைந்துபோகப்பண்ணும்; உங்கள்
வழிகள் பாழ்த்துக்கிடக்கும்.
௨௩ நீங்கள் இந்தமட்டில் நமது தண்ட
னையாலே குணப்படாமல், நமக்கெதிர்த்து
நடந்தால்,
௨௪ நாம் உங்களுக்கெதிர்த்து நடந்து,
நாம் உங்களை உங்கள் பாவங்களினிமித்
தம் ஏழத்தனையாக வாதித்து,
௨௫ உடம்படிக்கையின் நீதியை விசா
ரிக்கிறதாகிய சரிக்குச்சரிக்கட்டும் பட்ட
யத்தை உங்கள்மேலே வரப்பண்ணி, நீங்
கள் உங்கள் பட்டணங்களில் வந்தடைந்
தபிறகு, பெருவாரிக்காய்ச்சலை உங்கள்
நடுவில் அனுப்புவோம்; சத்துருவின் கை
யில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள்.
௨௬ நாம் அப்பமென்ற ஆதரவுகோலை
உங்களுக்கு ஒடித்திருக்கும்பொழுது, பத்
து ஸ்திரிகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்
பத்தைச் சுட்டு, அதைத் திரும்ப உங்க
ளுக்கு நிறுத்துக்கொடுப்பார்கள்; திர்ப்தி
அடையாமல் சாப்பிடுவீர்கள்.
௨௭ ¶ இதனுடனே நீங்கள் நம்முடைய
சொல்கேளாமல், நமக்கு எதிர்த்து நடந்
தால்,
௨௮ நாமும் உக்கிரத்தோடே உங்களுக்கு
எதிர்த்து நடந்து, நாம் நாமே உங்களை உங்
கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையா
கத் தண்டிப்போம்.
௨௯ உங்கள் குமாரரின் மாம்சத்தையும்
உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும்
புசிப்பீர்கள்.
௩௰ நாம் உங்கள் மேடைகளை அழித்து,
உங்கள் விக்கிரகச்சிலைகளை நிர்த்தூளியாக்
கி, உங்கள் உடல்களை உங்கள் நரகலான
தேவர்களுடைய உடல்களின்மேலே போ
டுவிப்போம்; நம்முடைய ஆத்துமா உங்
களை அரோசிக்கும்.
௩௧ நாம் உங்கள் பட்டணங்களை வனாந்

Digitized by Google

தரமும் உங்கள் பரிசுத்தஸ்தலங்களைப் பாழுமாக்கி, உங்களுடைய ஆற்றுகிற வாசனையை முகராதிருப்போம்.

௩௨ நாம் தேசத்தை அதிலே குடியிருக்கப்போகிற உங்கள் சத்துருக்கள் பிரமிக்கத்தக்கதாகப் பாழாக்கி,

௩௩ உங்களைச் சாதிகளுக்குள்ளே சிதறடித்து, உங்கள் பிறகாலே பட்டயத்தை உருவுவோம்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாம்.

௩௪ நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்திலிருக்கும் அப்பொழுது, தேசமானது பாழாய்க்கிடக்கிற நாளெல்லாம் தன்னுடைய ஓய்வுகளை இரம்மியமாய் அநுபவிக்கும்; அப்பொழுது ஓய்வடைந்து, தன் ஓய்வுகளை இரம்மியமாய் அநுபவிக்கும்.

௩௫ நீங்கள் அதிலே குடியிருக்கும்பொழுது அது உங்கள் ஓய்வு வருஷங்களில் ஓய்வடையாதபடியினாலே, அது பாழாய்க்கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும்.

௩௬ உங்களில் மீதியாயிருப்பவர்களின் இருதயங்களில் நாம் அவர்கள் சத்துருக்களின் தேசங்களிலே மனத்தளர்ச்சியை வரப்பண்ணுவோம்; காற்றடிக்கும் இலையின் இரைச்சல் அவர்களை ஓட்டும்; அவர்கள் பட்டயத்திற்குத்தப்பி ஓடுகிறதுபோல ஓடி, துரத்துவாரில்லாமல் விழுவார்கள்.

௩௭ துரத்துவாரில்லாமல் ஒருவர்மேல் ஒருவர், பட்டயம் பிறகாலே வருகிறதுபோல, இடறிவிழுவார்கள்; உங்கள் சத்துருக்களுக்குமுன்பாக உங்களுக்குத் தரிக்கக்கூடாததாயிருக்கும்.

௩௮ புறச்சாதிகளுக்குள் அழிவீர்கள்; உங்கள் சத்துருக்களின் தேசம் உங்களைப் பட்சிக்கும்.

௩௯ ¶ உங்களில் மீதியாய் இருப்பவர்கள் உங்கள் சத்துருக்களின் தேசங்களிலே தங்கள் அக்கிரமங்களினாலும் தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலுங்கூட வாடிப்போய்,

௪௰ தாங்கள் நமக்குவிரோதமாகத் துரோகம்பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும்,

௪௧ தாங்கள் நமக்கு எதிர்த்து நடந்தபடியினாலே, நாமும் தங்களுக்கெதிர்த்து நடந்து, தங்களைத் தங்கள் சத்துருக்களின் தேசத்திலே கொண்டுபோய் விட்டதையும், அறிக்கை இடுவார்கள்; அப்பொழுது சுன்னத்தில்லாத அவர்கள் இருதயம் தாழ்ந்துபோய், அவர்கள் தங்கள் அக்கிரமத்தின் ஆக்கினையை நல்லதென்று ஒத்துக்கொண்டால்,

௪௨ நாம் யாக்கோபோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும், இசாக்கோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும் நினைப்போம்; தேசத்தையும் நினைப்போம்.

௪௩ ¶ அவர்கள்நிமித்தம் வெறுமையே விடப்பட்டதும், பாழாய்க் கிடக்கிறதினாலே தன் ஓய்வுகளை இரம்மியமாக அநுபவிக்கிறதுமான தேசத்தைத்தானே; அவர்களும் நம்முடைய நியாயங்களை வெறுத்தபடியினாலும், அவர்களுடைய ஆத்துமா நம்முடைய கட்டளைகளை அரோசித்தபடியினாலும், அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நல்லதென்று ஒத்துக்கொள்ளுவார்கள்.

௪௪ ஆனதுகொண்டு அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நாம் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கவிதமாகவும், அவர்களோடிருக்கிற நம்முடைய உடம்படிக்கையை அவத்தமாக்கத்தக்கவிதமாகவும் அவர்களைப் புறக்கணிப்பதும் இல்லை, அரோசிப்பதும் இல்லை; ஏனெனில் நாம் அவர்கள் பராபரனாகிய கர்த்தர்.

௪௫ அவர்களுடைய பராபரனாயிருக்கும்படிக்கு, நாம் புறச்சாதிகளின் கண்களுக்குமுன்பாக எகிப்துதேசத்திலிருந்து புறப்

Digitized by Google

படப்பண்ணின அவர்களுடைய முன்னோர்களோடே நாம் பண்ணின உடம்படிக்கையை அவர்களுக்காக நினைவுகூருவோம்; நாம் கர்த்தர் என்று சொல்லென்றார்.

௪௬ ¶ தமக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே இருக்கும்படிக்கு, கர்த்தர் சீனாய் பர்வதத்திலே மோசேயைக்கொண்டு கொடுத்த கட்டளைகளும் நியாயங்களும் நியாயப்பிரமாணங்களும் இவைகள்தாமே.

௨௭. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒருவன் ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணியிருந்தால், ஆத்துமாக்கள் உன் மதிப்பின்படிக்குக் கர்த்தருடையவர்கள்.

௩ இருபதுவயதுமுதல்கொண்டு, அறுபது வயதுக்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை நீ பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலாகிய ஐம்பது வெள்ளிச்சேக்கலாகவும்,

௪ பெண்சாதியை முப்பது சேக்கலாகவும், மதிப்பாயாக.

௫ ஐந்துவயது முதல்கொண்டு இருபது வயதிற்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை இருபது சேக்கலாகவும், பெண்பிள்ளையைப் பத்துச் சேக்கலாகவும்,

௬ ஒருமாதம் முதல்கொண்டு ஐந்து வயதிற்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை ஐந்து வெள்ளிச் சேக்கலாகவும், பெண்பிள்ளையை மூன்று வெள்ளிச் சேக்கலாகவும்,

௭ அறுபது வயதும் அதிகமுமான ஆண்பிள்ளையைப் பதினைந்து சேக்கலாகவும், பெண்சாதியைப் பத்துச் சேக்கலாகவும், மதிக்கக்கடவாய்.

௮ உன் மதிப்பைச் செலுத்தக்கூடாத தரித்திரனாயிருந்தானேயாகில், அவன் ஆசாரியனுக்குமுன்பாகத் தன்னை மதிக்கும்படிக்கு வந்து நிற்கக்கடவன்; பொருத்தனைபண்ணினவனுடைய கைக்கு உதவுகிறதற்குத்தக்கவிதமாக ஆசாரியன் அவனை மதிப்பானாக.

௯ ¶ கர்த்தருக்குப் பலியிடப்படத்தக்க மிருகஜீவனேயானால், அவன் கர்த்தருக்குக் கொடுக்கிற அப்படிக்கொத்ததெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக.

௰ அதை மாற்றாமலிருப்பானாக; இளப்பமானதற்குப்பதிலாக நல்லதையும், நல்லதற்குப்பதிலாக இளப்பமானதையும், கொடாமலிருப்பானாக; அவன் மிருகத்திற்குப் பதிலாக மிருகத்தைக் கொடுத்தானேயாகில், அப்பொழுது அதுவும் அதற்குப் பதிலானதும் பரிசுத்தமாய் இருப்பதாக.

௰௧ அது கர்த்தருக்குப் பலியிடப்படத்தகாத தீட்டான யாதொரு மிருகமேயானால், அதை ஆசாரியனுக்குமுன்பாக நிறுத்தக்கடவன்.

௰௨ ஆசாரியன் அதை அதின் நன்மைக்கும் இளப்பத்திற்கும்தக்கதாக மதிப்பானாக; அவன் அதை மதிக்கிறபடியே இருக்கக்கடவது.

௰௩ அதை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்போடே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்.

௰௪ ¶ ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினால், ஆசாரியன் அதை அதின் நன்மைக்கும் இளப்பத்திற்கும்தக்கதாக மதிப்பானாக, அவன் அதை மதிக்கிறபடி இருக்கக்கடவது.

௰௫ பரிசுத்தம்பண்ணினவன் தன் வீட்டை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்; அப்பொழுது அவனுடையதாயிருக்கும்.

௰௬ ¶ ஒருவன் தன் காணியாட்சி வயல்வெளியிலே ஏதாகிலும் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினால், உன் மதிப்பு அதின் விதைப்புக்குத்தக்கதாய் இருக்கவேண்டும்; ஒரு கலம் வாற்கோதுமை விதைக்கிற வயல் ஐம்பது வெள்ளிச் சேக்கலாக மதிக்கப்படக்கடவது.

௰௭ சீர்திருத்தும் வருஷம் முதல்கொண்

Digitized by Google

டே அவன் தன் வயலைப் பரிசுத்தம்பண்ணினால், உன் மதிப்பின்படி இருக்கக்கடவது.

௰௮ சீர்திருந்தும் வருஷத்திற்குப்பிற்பாடு அதைப் பரிசுத்தம்பண்ணினானேயாகில், அப்பொழுது சீர்திருந்தும் வருஷம்மட்டும் இருக்கும்; குறை வருஷங்களின்படியே திரவியம் ஆசாரியனாலே கணக்குப்பார்க்கப்பட்டு, அதற்குத் தக்கது உன் மதிப்பிலே தள்ளப்படக்கடவது.

௰௯ வயலைப் பரிசுத்தம்பண்ணினவன் அதை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்பான திரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டக்கடவன்; அப்பொழுது அவனுடையதாயிருக்கும்.

௨௰ அவன் வயலை மீட்காதேபோய், அதை வேறொருவனுக்கு விற்றானேயானால், இனி மீட்கப்படக்கூடாமல்,

௨௧ அது சீர்திருந்தும் வருஷத்தில் நீங்கலாகும்பொழுது, சாபத்தீடான வயலாகக் கர்த்தருக்குப்பரிசுத்தமாயிருக்கக்கடவது; அதின் காணியாட்சி ஆசாரியனைச் சேரும்.

௨௨ ஒருவன் தன் காணியாட்சி வயல் அல்லாததாகிய தான் கொண்ட ஒரு வயலைக் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினானேயாகில்,

௨௩ அது சீர்திருந்தும் வருஷம்மட்டும், உன் மதிப்பின்படி பெறும் விலையை ஆசாரியன் அவனோடே கணக்குப்பார்ப்பானாக; அந்த உன் மதிப்பை அவன் அந்நாளிலே கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, கொடுக்கக்கடவன்.

௨௪ யார்கையிலே அந்த வயலைக் கொண்டானோ, அந்தக் காணியாட்சிக்காரன் வசமாய், அது சீர்திருந்தும் வருஷத்திலே திரும்பும்.

௨௫ உன் மதிப்பெல்லாம் பரிசுத்தஸ்தலச் சேக்கல் கணக்காயிருக்கக்கடவது; சேக்கலானது இருபது கேரா.

௨௬ ¶ தலையீற்றுகளோவென்றால், கர்த்தருடையதானபடியினாலே தலையீற்றாகிய மிருகஜீவனை ஒருவரும் பரிசுத்தம்பண்ணவொண்ணாது; அது மாடானாலும், ஆடானாலும், கர்த்தருடையதாயிருக்கிறதே.

௨௭ தீட்டான மிருகத்தினுடையதேயானால், அவன் உன் மதிப்பின்படி அதை மீட்டு, அதனுடனே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்; மீட்கப்படாமல் போயிற்றேயாகில், உன் மதிப்பின்படி விற்கப்படக்கடவது.

௨௮ ¶ ஒருவன் தனக்குண்டான நரஜீவன், மிருகஜீவன், காணியாட்சி, நிலம் முதலானவைகளில் எதையாகிலும் சாபத்தீடானதாகக் கர்த்தருக்குக் கொடுத்தானேயாகில், அது விற்கப்படவும் மீட்கப்படவும் வேண்டாம்; சாபத்தீடானவைகளாகக் கொடுக்கப்பட்டவைகளெல்லாம், கர்த்தருக்குப் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௨௯ நரஜீவனில் சாபத்தீடாக நியமிக்கப்பட்டவைகளெல்லாம் மீட்கப்படாமல் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவது.

௩௰ ¶ தேசத்திலே நிலத்தின் விதைகளிலும், மரங்களின் கனியிலும், பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருடையது; அது கர்த்தருக்குப் பரிசுத்தம்.

௩௧ ஒருவன் பத்தில் ஒருபங்காகிய அதிலே சிலவற்றை மீட்க மனதாயிருந்தானேயானால், அதினுடனே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்.

௩௨ கோலின்கீழ்ப்போகிற ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தம்.

௩௩ அது நல்லதோ இளப்பமானதோ, என்று அவன் பார்க்கவேண்டாம்; அதற்குப் பதில்கொடுக்கவும் வேண்டாம்; பதில் கொடுத்தானேயாகில், அதுவும் அதற்குப் பதிலானதும் பரிசுத்தமாயிருக்கும்; அது மீட்கப்படக்கூடாதென்று அவர்களோடே சொல்லென்றார்.

௩௪ ¶ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படிக்குக் கர்த்தர் மோசேக்குச் சீனாய் பர்வதத்திலே கற்பித்த கற்பனைகள் இவைகள்தானே.

Digitized by Google

மோசே எழுதின

நான்காம் ஆகமம்.

௧. அதிகாரம்.

அவர்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம்வருஷம் இரண்டாம் மாதம் முதல்தேதியிலே, கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலிருக்கிற ஆசரிப்புக்கூடாரத்திலே மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் முழுச் சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களிலுள்ள ஆண்பிள்ளைகளாகிய சகல தலைகளையும் பேர்பேராக எண்ணித் தொகை ஏற்றுங்கள்.

௩ இஸ்ரவேலிலே இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களை எல்லாம் நீயும் ஆரோனுமாய் அவர்கள் சேனைகளின்படியே இலக்கம் பார்ப்பீர்களாக.

௪ ஒவ்வொரு கோத்திரத்திற்கு அவர்களுடைய பிதாக்களின் வீட்டுத்தலைவனாகிய ஒவ்வொரு மனிதன் உங்களோடிருப்பானாக.

௫ ¶ உங்களோடே நிற்கும் மனிதரின் நாமங்களாவன: ரூபன் கோத்திரத்திலே சேதேயூரின் குமாரன் எலிசூர்.

௬ சிமெயோன் கோத்திரத்திலே சூரிஷதாயின் குமாரன் செலூமியேல்.

௭ யூதா கோத்திரத்தில் அம்மீனதாபின் குமாரன் நாகசோன்.

௮ இசக்கார் கோத்திரத்திலே சூகாரின் குமாரன் நெத்தானெயேல்.

௯ செபுலோன் கோத்திரத்தில் ஏலோனின் குமாரன் எலியாப்.

௰ யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீம் கோத்திரத்தில் அம்மியூதின் குமாரன் எலிஷம்மா, மனாசே கோத்திரத்திலே பெதாத்சூரின் குமாரன் கமாலியேல்.

௰௧ பென்யமீன் கோத்திரத்திலே கிதெயோனின் குமாரன் அபீதான்.

௰௨ தாண் கோத்திரத்தில் அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர்.

௰௩ ஆசேர் கோத்திரத்தில் ஒகிரானின் குமாரன் பாகியேல்.

௰௪ காத் கோத்திரத்திலே தேகுவேலின் குமாரன் எலியாசாப்.

௰௫ நவ்தலி கோத்திரத்தில் ஏனானின் குமாரன் அகிரா.

௰௬ சபையில் அழைக்கப்பட்டு, தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களின் பிரபுக்களும் இஸ்ரவேலில் ஆயிரங்களுக்குத் தலைவருமாயிருப்பவர்களில் இவர்கள்தான் என்றார்.

௰௭ ¶ அப்படியே மோசேயும் ஆரோனும் பேர்பேராகக் குறிக்கப்பட்ட இந்த மனிதரைக் கூட்டிக்கொண்டு,

௰௮ இரண்டாம்மாதம் முதல்தேதியிலே சபையையெல்லாம் கூட்டம்கூட்டினார்கள்; அவர்கள் தங்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சப்பிறப்புகளின்படியே பார்க்கப்பட்டு, இருபதுவயதுமுதல்கொண்டிருந்த பேர்கள் தலைதலையாக எண்ணப்பட்டார்கள்.

௰௯ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, இவன் அவர்களைச் சீனாயின் வனாந்தரத்தில் இலக்கம்பார்த்தான்.

௨௰ ¶ இஸ்ரவேலின் மூத்தவனாகிய ரூப

Digitized by Google

ளின் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில், இருபதுவயதுமுதல் கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் தலைதலையாக எண்ணப்பட்டபொழுது,

௨௧ ரூபன் கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்தாறாயிரத்து ஐந்நூறுபேர்.

௨௨ ¶ சிமெயோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் தலைதலையாக எண்ணி இலக்கம் பார்க்கப்பட்டபொழுது,

௨௩ சிமெயோன் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்தொன்பதினாயிரத்து முந்நூறுபேர்.

௨௪ ¶ காத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௨௫ காத் கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்தையாயிரத்து அறுநூற்று ஐம்பதுபேர்.

௨௬ ¶ யூதா புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௨௭ யூதா கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், எழுபத்து நாலாயிரத்து அறுநூறுபேர்.

௨௮ ¶ இசஷார் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௨௯ இசஷார் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர்.

௩௦ ¶ செபுலோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௩௧ செபுலோன் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர்.

௩௨ ¶ யோசேப்பின் குமாரரில் எப்பிராயீம் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல் கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௩௩ எப்பிராயீம் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

௩௪ ¶ மனாசே புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௩௫ மனாசே கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், முப்பத்திராயிரத்து இருநூறுபேர்.

௩௬ ¶ பென்யமீன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௩௭ பென்யமீன் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், முப்பத்தையாயிரத்து நானூறுபேர்.

௩௮ ¶ தாண் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௩௯ தாண் கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், அறுபத்திராயிரத்து எழுநூறுபேர்.

Digitized by Google

௪௰ ¶ ஆசேர் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயது முதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௪௧ ஆசேர் கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர்.

௪௨ ¶ நவ்தலி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

௪௩ நவ்தலி கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேராயிருந்தார்கள்.

௪௪ ¶ மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலுடைய பிதாக்களின் வீடுகளில் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பிரபுக்களான பன்னிரண்டுபேரும் இலக்கம்பார்த்தவர்கள் இவர்கள்தான்.

௪௫ இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் வீட்டாரில் இருபதுவயதுமுதல்கொண்டு, இஸ்ரவேலில் யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களாகிய இலக்கம்பார்க்கப்பட்டபேர்களெல்லாம்,

௪௬ அறுநூற்று மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பதுபேராயிருந்தார்கள்.

௪௭ ¶ ஆனால் இலேவியர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படியே, அவர்களுக்குள்ளே இலக்கம் பார்க்கப்பட்டதில்லை.

௪௮ ஏனெனில் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௪௯ இலேவி கோத்திரத்தாரைமாத்திரம் நீ இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இலக்கம் பாராமலும், அவர்கள் தொகையை ஏற்றாமலும்,

௫௰ இலேவியரை நீ சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதினுடைய எல்லாப் பணிமுட்டுகளுக்கும், அதிலுள்ள எல்லாவற்றிற்கும், விசாரிப்புக்காரராக வை; அவர்கள் வாசஸ்தலத்தையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும் சுமந்து, அதினிடத்தில் ஊழியம்செய்து, வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயம் இறங்கக்கடவர்கள்.

௫௧ வாசஸ்தலம் பயணப்படுகையில், இலேவியர் அதை இறக்கிவைத்து, அது பாளயம் இறங்குகையில், இலேவியர் அதை எடுத்து நிறுத்தக்கடவர்கள்; சேருகிற அந்நியன் கொலையுண்பானாக.

௫௨ இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் பாளயத்தோடும் அவரவர் தங்கள் சேனையின் கொடியோடும் கூடாரம்போடக்கடவர்கள்.

௫௩ இஸ்ரவேல் புத்திரருடைய சபையின் மேலே கடுங்கோபம் வராதபடிக்கு, இலேவியர் வாசஸ்தலத்தின் சுற்றிலும் பாளயம் இறங்கி, இலேவியர் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் காவலைக் காப்பார்களாக என்றார்.

௫௪ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.

௨. அதிகாரம்.

-கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨ இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் பிதாக்களுடைய வீட்டின் அடையாளமாகிய தங்களுடைய கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப் போட்டு, ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளயம் இறங்கக்கடவர்கள்.

௩ ¶ யூதாவுடைய பாளயத்துக் கொடியின் கீழிருக்கிற சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயம் இறங்குவது; யூதாபுத்திரரின் பிரபு, அம்மினதாபின் குமாரன் நாகசோன்.

௪ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை எழுபத்து நாலாயிரத்து அறுநூறுபேர்.

Digitized by Google

௫ அவன் கிட்டப் பாளயம் இறங்குபவர்கள் இசக்கார் கோத்திரத்தார்; இசக்கார் புத்திரரின் பிரபு, சூவாரின் குமாரன் நெத்தானெயேல்.

௬ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர்.

௭ பிற்பாடு செபுலோன் கோத்திரத்தாரும்தானே; செபுலோன் புத்திரரின் பிரபு ஏலோனின் குமாரன் எலியாப்.

௮ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர்.

௯ இலக்கம்பார்க்கப்பட்ட யூதாவின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே நூற்றெண்பத்து ஆறாயிரத்து நானூறுபேர்; இவர்கள் பயணத்திலே முதல் பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

௰ ¶ ரூபனுடைய பாளயத்துக் கொடியின்கீழிருக்கிற சேனைகள் தென்புறத்தில் இறங்குவது; ரூபன் புத்திரரின் பிரபு, சேதேயூரின் குமாரன் எலீசூர்.

௰௧ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை நாற்பத்தாறாயிரத்து ஐந்நூறுபேர்.

௰௨ அவன் கிட்டப் பாளயம் இறங்குபவர்கள் சிமெயோன் கோத்திரத்தார்; சிமெயோன் புத்திரரின் பிரபு, சூரிஷதாயின் குமாரன் செலூமியேல்.

௰௩ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்தொன்பதினாயிரத்து முந்நூறுபேர்.

௰௪ பிற்பாடு காத் கோத்திரத்தாரும்தானே; காத் புத்திரரின் பிரபு, ரேகுவேலின் குமாரன் எலியாசாப்.

௰௫ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை நாற்பத்தையாயிரத்து அறுநூற்றைம்பதுபேர்.

௰௬ இலக்கம்பார்க்கப்பட்ட ரூபனின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே நூற்றைம்பத்து ஓராயிரத்து நானூற்றைம்பதுபேர்; இவர்கள் பயணத்தில் இரண்டாம் பாளயமாய்ப் போகுபவர்கள்.

௰௭ ¶ பிற்பாடு ஆசரிப்புக்கூடாரம் இலேவியரின் சேனையோடே பாளயங்களின் நடுவே பயணப்பட்டுப்போம்; எப்படிப் பாளயம் இறங்குகிறார்களோ, அப்படி அவரவர் தங்கள் வரிசையிலே தங்கள் கொடிகளின்படியே பயணப்படுவார்களாக.

௰௮ ¶ எப்பிராயீமுடைய பாளயத்துக் கொடியின் சேனைகள் மேல்புறத்தில் இறங்குவது; எப்பிராயீமின் புத்திரரின் பிரபு, அம்மியூதின் குமாரன் எலிஷாமா.

௰௯ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

௨௰ அவன் கிட்டப் பாளயம் இறங்குபவர்கள் மனாசே கோத்திரத்தார்; மனாசே கோத்திரத்தாரின் பிரபு, பெதாத்சூரின் குமாரன் கமாலியேல்.

௨௧ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை முப்பத்திராயிரத்து இருநூறுபேர்.

௨௨ பிற்பாடு பென்யமீன் கோத்திரத்தாரும்தானே; பென்யமீன் புத்திரரின் பிரபு, கிதெயோனீயின் குமாரன் அபீதான்.

௨௩ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை முப்பத்தையாயிரத்து நானூறுபேர்.

௨௪ இலக்கம்பார்க்கப்பட்ட எப்பிராயீமின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின்படியே நூற்றெண்ணாயிரத்து ஒருநூறுபேர்; இவர்கள் பயணத்தில் மூன்றாம் பாளயமாய்ப் போகுபவர்கள்.

௨௫ ¶ தாணுடைய பாளயத்துக் கொடியின் சேனைகள் வடக்கே இறங்குவது; தாண் புத்திரரின் பிரபு, அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர்.

௨௬ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை அறுபத்திராயிரத்து எழுநூறுபேர்.

௨௭ அவன் கிட்டப் பாளயம் இறங்குபவர்கள் ஆசேர் கோத்திரத்தார்; ஆசேர் கோத்திரத்தாரின் பிரபு, ஒகிரானின் குமாரன் பாகியேல்.

Digitized by Google

௨௮ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர்.

௨௯ பிற்பாடு நவ்தலி கோத்திரத்தாரும் தானே; நவ்தலி புத்திரரின் பிரபு, ஏனானின் குமாரன் அகீரா.

௩௰ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர்.

௩௧ இலக்கம்பார்க்கப்பட்ட தாணின் பாளயத்தார் எல்லாரும் நூற்றைம்பத்தேழாயிரத்து அறுநூறுபேர்; இவர்கள் தங்கள் கொடிகளின்படியே பின்பாளயமாய்ப் போகுபவர்களென்றார்.

௩௨ ¶ இவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் வீட்டாரில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள்; பாளயங்களிலே தங்கள் தங்கள் சேனைகளின்படியே இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் எல்லாரும் அறுநூற்று மூவாயிரத்து ஐந்நூற்றைம்பதுபேராயிருந்தார்கள்.

௩௩ இலேவியரோவெனில் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இலக்கம் பார்க்கப்பட்டதில்லை.

௩௪ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்து, அப்படியே தங்கள் கொடிகளின்கீழ்ப் பாளயம் இறங்கி, அப்படி அவரவர் தங்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களின்படியே பயணப்பட்டுப் போனார்கள்.

௩ அதிகாரம்.

சீனாய்பர்வதத்திலே கர்த்தர் மோசேயோடே பேசின நாளிலே, ஆரோன் மோசே என்றவர்களுடைய சந்ததிகளின் நடபடியாவது:

௨ ஆரோனுடைய குமாரர் யாரென்றால், முதல்பிறந்தவனாகிய நாதாபும், அபியூவும், எலெயாசாரும், இத்தாமாரும் என்னப்பட்டவர்கள்.

௩ ஆசாரிய ஊழியம்செய்கிறதற்கு, கைகள் நிரப்பப்பட்டு அபிஷேகம்பெற்ற ஆசாரியரான ஆரோனுடைய குமாரரின் நாமங்கள் இவைகள்தான்.

௪ ஆனால் நாதாப்பும், அபியூவும், சீனாயின் வனாந்தரத்தில் அந்நிய அக்கினியைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவருகையில், கர்த்தருக்குமுன்பாகச் செத்தார்கள்; அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை; எலெயாசாரும் இத்தாமாருமோவெனில், தங்கள் தகப்பனாகிய ஆரோனுக்குமுன்பாக ஆசாரிய ஊழியம்செய்தார்கள்.

௫ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௬ நீ இலேவி கோத்திரத்தாரைச் சேர்த்து, ஆசாரியனாகிய ஆரோனுக்குமுன்பாக அவனுக்குப் பணிவிடை செய்யும்படிக்கு நிறுத்து.

௭ அவர்கள் வாசஸ்தலத்தின் பணிவிடை வேலைசெய்யும்படிக்கு, ஆசரிப்புக்கூடாரத்திற்குமுன்பாக அவனுடைய காவலையும் எல்லாச்சபையின் காவலையும் காத்து,

௮ வாசஸ்தலத்தின் பணிவிடைவேலையைச் செய்யும்படிக்கு, ஆசரிப்புக்கூடாரத்தின் எல்லாத் தட்டுமுட்டுகளையும், இஸ்ரவேல் புத்திரரின் காவலையும் காக்கக்கடவர்கள்.

௯ ஆகையால் இலேவியரை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுப்பாயாக; இஸ்ரவேல் புத்திரரில் இவர்கள் அவனுக்குக் கொடுக்கவே கொடுக்கப்பட்டவர்கள்.

௰ ஆரோனையும் அவன் குமாரரையுமோவெனில், தங்கள் ஆசாரிய ஊழியத்தை விசாரிப்பதற்காக வைக்கக்கடவாய்; சேருகிற அந்நியன் கொலையுண்ணக்கடவனென்றார்.

௰௧ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௨ இதோ, இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பம்திறந்து பிறக்கிற முதல்பேறான யாவுக்கும் பதிலாக, நாம் இலேவியரை இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் அவர்கள் நம்முடையவர்களாயிருக்க எடுத்துக்கொண்டோம்.

௰௩ ஏனெனில் முதல்பேறனைவையெல்

Digitized by Google

லாம் நம்முடையவை; நாம் எகிப்துதேசத்தில் முதல்பேருன யாவையும் சங்கரித்த நாளிலே, இஸ்ரவேலிலே மனிதன்முதல்கொண்டு மிருகம்மட்டுமுள்ள முதல்பேறுகளை எல்லாம் நமக்குப் பரிசுத்தமாக்கினதினுலே, அவைகள் நம்முடையவைகளாயிருக்கும்; நாம் கர்த்தரென்முர்.

௰௪ ¶ பின்னையும் கர்த்தர் சீனுயின் வனுந்தரத்தில் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௫ இலேவி புத்திரரை அவர்கள் பிதாக்களின் வீட்டு வம்சங்களின்படியே இலக்கம்பார்; அவர்களில் ஒருமாதம் முதல்கொண்டு மேல்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளையெல்லாம் இலக்கம் பார்ப்பாயாக என்முர்.

௰௬ அப்பொழுது கர்த்தருடைய வாக்கின்படி, மோசே அவர்களைத் தனக்குக் கற்பிக்கப்பட்டபிரகாரமாக இலக்கம் பார்த்தான்.

௰௭ இலேவியின் குமாரர் தங்கள் நாமங்களின்படியே, கெர்சோன், கோகாத், மேமுரி என்னப்பட்டவர்கள்.

௰௮ தங்கள் வம்சத்தார்களாய்ப் பிரிந்த கெர்சோனுடைய குமாரரின் நாமங்கள், லிப்னீயும் சிமேயியும்தானே.

௰௯ தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த கோகாத்துடைய குமாரர், அம்ராம், இத்சேயார், எபிரோன், ஊசியேல்.

௨௰ தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த மேமுரியினுடைய குமாரர், மகெலியும், மூசியும்தானே; இவர்களே இலேவியருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தார்கள்.

௨௧ ¶ கெர்சோனுல் லிப்னீயர் வம்சமும் சிமேயியர் வம்சமும் இருந்தன; இவைகளே கெர்சோனியரின் வம்சங்கள்.

௨௨ அவர்களில் ஒருமாதம் முதல்கொண்டு மேல்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது, இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் ஏழாயிரத்து ஐந்நூறுபேராயிருந்தார்கள்.

௨௩ கெர்சோனியரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் பிறகாலே மேற்கே பாளயம் இறங்குவது.

௨௪ கெர்சோனியருடைய தகப்பன் வீட்டுப்பிரபு, லாயேலின் குமாரனுகிய எலியாசாப்.

௨௫ ஆசரிப்புக்கூடாரத்திலே கெர்சோன் புத்திரரின் காவலாவது: வாசஸ்தலமும், கூடாரமும், அதின் மூடியும், ஆசரிப்புக்கூடாரவாசல் மறைவும்,

௨௬ வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலுமிருக்கிற பிரகாரத்தின் வெளியாடைகளும், பிரகாரவாசல் மறைவும், அவைகளின் வேலைக்கெல்லாம் அடுத்த அவைகளின் கயிறுகளும்தானே.

௨௭ ¶ கோகாத்தினுல் அம்ராமியரின் வம்சமும், இத்சேயாரின் வம்சமும், எபிரோனியரின் வம்சமும், ஊசியேலரின் வம்சமும் இருந்தன; இவைகளே கோகாத்தியரின் வம்சங்கள்.

௨௮ ஒருமாதம் முதல்கொண்டு மேல்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது, பரிசுத்தஸ்தலத்தின் காவலைக்காப்பவர்கள், எண்ணுயிரத்து அறுநூறுபேராயிருந்தார்கள்.

௨௯ கோகாத் புத்திரரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் தென்புறமான பக்கத்திலே பாளயம் இறங்குவது.

௩௰ அவர்களின் பிரபு, ஊசியேலின் குமாரனுகிய எலித்சாப்பான்.

௩௧ ¶ அவர்களுடைய காவலாவது: பெட்டியும், மேசையும், குத்துவிளக்கும், பீடங்களும், ஆராதனைசெய்யும் பரிசுத்தஸ்தலத்தின் முட்டுகளும், மறைவும், அதினுடைய எல்லா வேலையும்தானே.

௩௨ இலேவியருடைய பிரபுக்களின் பிரபு, ஆசாரியனுகிய ஆரோனின் குமாரன் எலேயாசார்தானே; அவன் பரிசுத்தஸ்தலத்தின் காவலைக் காக்கிறவர்களின் விசாரிப்புக்காரனுயிருப்பவன்.

௩௩ ¶ மேமுரியினுல் மகெலியரின் வம்ச

Digitized by Google

மும் மூசியரின் வம்சமும் இருந்தன; இ
வைகளே மேருரியின் வம்சங்கள்.

௩௪ அவர்களில் ஒருமாதம் முதல்கொண்
டு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைக
ளெல்லாம் எண்ணப்பட்டபொழுது, இ
லக்கம்பார்க்கப்பட்டவர்கள் ஆறுயிரத்து
இருநூறுபேராயிருந்தார்கள்.

௩௫ அவர்கள் பிரபு, அபியாயெலின் குமா
ரனுகிய சூரியெல்; இவர்கள் வாசஸ்தலத்
தின் வடபுறமான பக்கத்திலே பாளயம்
இறங்குவது.

௩௬ அவர்களுடைய காவல்விசாரிப்பாவ
து: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்
பாள்களும், தூண்களும், கால்களும், அதி
னுடைய எல்லா முட்டுகளும், அதினுடை
ய எல்லா வேலையும்,

௩௭ சுற்றுப்பிரகாரத்தின் தூண்களும், அ
வைகளின் கால்களும், கூச்சுகளும், கயிறு
களும்தானே.

௩௮ ¶ ஆசரிப்புக்கூடாரமாகிய வாசஸ்த
லத்திற்குமுன்பாக, சூரியன் உதிக்கும் கீழ்ப்
புறத்திலே மோசேயும் ஆரோனும் அவன்
குமாரரும் கூடாரங்களைப் போட்டிறங்கி,
இஸ்ரவேல் புத்திரரின் காவலுக்குப் பதி
லாகப் பரிசுத்தஸ்தலத்தின் காவலைக் காப்
பவர்கள்; சேருகிற அந்நியன் கொலையுண்
பானுக.

௩௯ மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய
வாக்கின்படியே, இலேவியரில் அவர்களு
டைய வம்சங்களின்படியே இலக்கம்
பார்த்த ஒருமாதம் முதல்கொண்டிருந்த
ஆண்பிள்ளைகளெல்லாம் இருபத்தீராயிரம்
பேராயிருந்தார்கள்.

௪௰ ¶ அதின்பிறகு கர்த்தர் மோசேயோ
டே சொன்னதாவது: நீ இஸ்ரவேல் புத்திர
ரில் ஒருமாதம் முதல்கொண்டு மேல்ப்
பட்ட வயதுள்ள முதல்பேருன ஆண்பிள்
ளைகளையெல்லாம் இலக்கம்பார்த்து, அவர்
கள் நாமங்களின் தொகையை ஏற்றி,

௪௧ இலேவியரை இஸ்ரவேல் புத்திரரி
லுள்ள முதல்பேருன யாவுக்கும் பதிலாக
வும், இலேவியரின் மிருகஜீவன்களை இஸ்ர
வேல் புத்திரரின் மிருகஜீவன்களிலுள்ள த
லையீற்றுன யாவுக்கும் பதிலாகவும், நமக்கு
எடுத்துக்கொள்; நாம் கர்த்தரென்ருர்.

௪௨ அப்பொழுது மோசே கர்த்தர் தனக்
குக் கற்பித்தபடியே, இஸ்ரவேல் புத்திரரி
லுள்ள முதல்பேருன யாவரையும் இலக்
கம்பார்த்தான்.

௪௩ ஒருமாதம் முதல்கொண்டு மேல்பட்
ட வயதாயிருந்து, பேர்பேராக எண்ணப்
பட்ட முதல்பேருன ஆண்பிள்ளைகளெல்
லாம் இருபத்தீராயிரத்து இருநூற்றெழு
பத்து மூன்றுபேராயிருந்தார்கள்.

௪௪ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோ
டே பேசிச் சொன்னதாவது:

௪௫ நீ இலேவியரை இஸ்ரவேல் புத்திரரி
லுள்ள எல்லா முதல்பேற்றுக்குப் பதிலா
கவும், இலேவியரின் மிருகஜீவன்களை அவர்
களுடைய மிருகஜீவன்களுக்குப் பதிலாக
வும் எடுத்துக்கொள்; இலேவியர் நம்மு
டையவர்களாயிருப்பார்கள்; நாம் கர்த்தர்.

௪௬ இஸ்ரவேல் புத்திரருடைய முதல்பே
றுகளில் இலேவியரின் இலக்கத்திற்கு அதி
கமாயிருந்து, மீட்கப்படவேண்டிய இரு
நூற்றெழுபத்து மூன்றுபேருக்கோவெனில்,

௪௭ நீ ஒவ்வொரு தலைக்கீடாக அவ்வைந்
து சேக்கலைப் பரிசுத்தசேக்கல் கணக்காக
வாங்குவாயாக; அந்தச் சேக்கல் இருபது
கேரா.

௪௮ அவர்களுடைய இலக்கத்திற்கு அதி
கமாயிருந்து, மீட்கப்பட்டவர்களுடைய
அந்தத் திரவியத்தை ஆரோனுக்கும் அவன்
குமாரருக்கும் கொடுப்பாயாகவென்ருர்.

௪௯ அப்படியே இலேவியராலே மீட்கப்
பட்டவர்களின் இலக்கத்திற்கு அதிகமாயி
ருந்து, இன்னம் மீட்கப்படவேண்டியவர்
களுக்கு இடாக மோசே இஸ்ரவேல் புத்தி
ரருடையமுதல்பேருனவர்களின்கையிலே,

௫௰ ஆயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து
சேக்கலாகிய திரவியத்தை, பரிசுத்தஸ்த
லத்துச்சேக்கல் கணக்காக வாங்கி,

Digitized by Google

௫௧ அதைக் கர்த்தருடைய வாக்கின்படியே ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கர்த்தர் தனக்குக் கற்பித்தபிரகாரமாகக் கொடுத்தான்.

௪. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨ இலேவியின் புத்திரருக்குள் இருக்கிற கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில்,

௩ முப்பதாம் வயதுமுதல்கொண்டு ஐம்பதாம் வயதுமட்டும் இருந்து, ஆசரிப்புக்கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்குட்படத்தக்க எல்லாரையும் எண்ணி, தொகை ஏற்று.

௪ ¶ ஆசரிப்புக்கூடாரத்திலே கோகாத் புத்திரரின் பணிவிடை பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானதற்கு அடுத்தது.

௫ பாளயம் பயணப்படுகையில், ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவான திரையை இறக்கி, சாட்சியின் பெட்டியை அதினால் மூடி,

௬ அதின்மேலே தகசுத்தோல் மூடியைப் போட்டு, அதின்மீதில் சுத்த நீலமான துப்பட்டியை விரித்து, அதின் வாரைகளைப் பாய்ச்சி,

௭ சமுகத்தப்பங்களுடைய மேசையின்மேலே இளநீலத்துப்பட்டியை விரித்து, கலங்களையும் தூபக்கிண்ணிகளையும் கரகங்களையும் மூடுகிற தட்டுகளையும் அதின்மேலே வைப்பார்களாக; எப்பொழுதும் வைக்கும் அப்பமும் அதின்மேல் இருக்கக்கடவது.

௮ அவர்கள் அவைகளின்மேலே சிவப்புத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியினால் மூடி, அதின் வாரைகளைப் பாய்ச்சி,

௯ இளநீலத்துப்பட்டியை வாங்கி, வெளிச்சத்தின் விளக்குத்தண்டையும் அதின் விளக்குகளையும் அதின் கத்திரிகளையும் விளக்கணைக்கிற எத்தனங்களையும் அதற்கு எண்ணெய்வார்க்கிற சகல பாத்திரங்களையும் மூடி,

௰ அதையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தகசுத்தோல் மூடியிலே போட்டு, அதை வாரைகளின்மேலே வைத்து,

௰௧ பொன்பீடத்தின்மேலே இளநீலத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியினால் மூடி, அதின் வாரைகளைப்பாய்ச்சி,

௰௨ தாங்கள் பரிசுத்தஸ்தலத்தில் ஆராதனைசெய்யும் எல்லாப் பணிமுட்டுகளையும் எடுத்து, இளநீலத்துப்பட்டியிலே போட்டு, தகசுத்தோல் மூடியினால் மூடி, வாரைகளின்மேலே வைத்து,

௰௩ பலிபீடத்தைச் சாம்பல் அறவிளக்கி, அதின்மேல் இரத்தாம்பரத் துப்பட்டியை விரித்து,

௰௪ தாங்கள் அதின்மேலே ஆராதனைசெய்யும் அதினுடைய சகல பணிமுட்டுகளாகிய கலசங்களையும், முள்துறடுகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், கலங்களையும், பலிபீடத்தின் எல்லா முட்டுகளையும், அதின்மேலே வைத்து, அதின்மேலே தகசுத்தோல் மூடியை விரித்து, அதின் வாரைகளைப் பாய்ச்சக்கடவர்கள்.

௰௫ பாளயம் பயணப்படுகையில், ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்தஸ்தலத்தையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் மூடித் தீர்ந்ததற்குப்பிற்பாடு, கோகாத் புத்திரர் எடுத்துப்போகிறதற்கு வரக்கடவர்கள்; அவர்கள் சாவாதபடிக்குப் பரிசுத்தமானதைத் தொடவேண்டாம்; ஆசரிப்புக்கூடாரத்திலே கோகாத் புத்திரரின் சுமை இதுதான்.

௰௬ ¶ ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார் விசாரிப்பதேதென்றால், விளக்கின் எண்ணெயும், சுகந்தங்களின் தூபவர்க்கமும், அன்றாடகக் காணிக்கையும், அபிஷேகத்தெண்ணெயும், வாசஸ்தலம் அனைத்தும், அதிலே பரிசுத்தஸ்தலத்திலும்

Digitized by Google

அதின் பண்டம்பாடிகளிலும் இருக்கிற அனைத்தும், அவன் விசாரிப்பாய் இருப்பதாக என்றார்.

௰௭ ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௰௮ கோகாத் வம்சத்தாரின் கோத்திரத்தை இலேவியருக்குள்ளே சங்காரமாகப் பண்ணீர்களாக.

௰௯ அவர்கள் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானதைக் கிட்டுகையில், சாவாமல் உயிரோடிருக்கும்படிக்கு, நீங்கள் அவர்களுக்காகச் செய்யவேண்டியதேதெனில்,

௨௰ பரிசுத்தமானதை மூடும்போது, அவர்கள் பார்க்கிறதற்கு உள்பிரவேசித்துச் சாவாதபடிக்கு, ஆரோனும் அவன் குமாரரும் வந்து, அவர்களில் அவனவனை அவன் வேலைக்கும் அவன் சுமைக்கும் வைக்கக் கடவர்களென்றார்.

௨௧ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௨ கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் முப்பதாம் வயதுமுதல்கொண்டு ஐம்பதாம்வயதுமட்டும் இருந்து,

௨௩ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் இராணுவச் சேனைகளுக்கு உள்படத்தக்க எல்லாரையும் இலக்கம் பார்த்து, தொகை ஏற்றுவாயாக.

௨௪ பணிவிடை செய்கிறதிலும் சுமக்கிறதிலும் கெர்சோன் வம்சத்தாரின் வேலை ஏதெனில்,

௨௫ அவர்கள் வாசஸ்தலத்திற்கும் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் இருக்கிற சமுக்காளங்களையும், அவைகளின் மூடியையும், உயர அவைகளின்மீதில் இருக்கிற தகசுத்தோல் மூடியையும், ஆசரிப்புக்கூடாரவாசல் மறைவையும்,

௨௬ பிரகாரத்தின் வெளி ஆடைகளையும், வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலுமிருக்கிற பிரகாரத்தினுடைய வாசல்மறைவையும், அவைகளின் கயிறுகளையும், அவைகளின் வேலைக்கடுத்த எல்லாப் பணிமுட்டுகளையும் சுமந்து, அவைகளுக்காகச் செய்யப்படும் எல்லா வேலையையும் செய்யக்கடவர்கள்.

௨௭ கெர்சோன் புத்திரருடைய எல்லாச் சுமைக்கும் அவர்களுடைய எல்லாப் பணிவிடைக்கும் அடுத்த அவர்கள் வேலையெல்லாம் ஆரோனும் அவன் குமாரரும் சொல்லுகிறபடியே நடக்கவேண்டும்; அவர்களுடைய சுமையின் காவலையெல்லாம் அவர்களுக்கு ஒப்புவிக்கக்கடவீர்கள்.

௨௮ கெர்சோன் புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக்கூடாரத்திலே செய்யும் பணிவிடை இதுதான்; அவர்களுடைய காவல் ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமாருடைய கையின் கீழாயிருப்பதாக.

௨௯ ¶ மெராரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டுவம்சங்களிலும் முப்பதாம்வயதுமுதல்கொண்டு ஐம்பதாம்வயதுமட்டும் இருந்து,

௩௰ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடைவேலைசெய்யும் சேனைக்குள்படத்தக்கவர்களை எல்லாம் இலக்கம்பார்க்கக்கடவாய்.

௩௧ ஆசரிப்புக்கூடாரத்தில் அவர்களுடைய எல்லாப் பணிவிடைக்கும் அடுத்த சுமையின் காவலேதெனில், வாசஸ்தலத்தின் பலகைகளும், அவைகளின் தாழ்ப்பாள்களும், தூண்களும், கால்களும்,

௩௨ சுற்றிலுமிருக்கிற பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் கால்களும், முளைகளும், கயிறுகளும், அவைகளின் எல்லா முட்டுகளும், எல்லா வேலையுங்கூடத்தானே; அவர்கள் சுமந்து காவல்காக்கும் முட்டுகளைப் பேர்பேராக எண்ணக்கடவீர்கள்.

௩௩ ஆசாரியனாகிய ஆரோனுடைய குமாரனாகிய இத்தாமாருடைய கையின்கீழ் மெராரி புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக்கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு அடுத்த எல்லாவேலையும் இதுதான் என்றார்.

௩௪ ¶ அப்படியே மோசேயும் ஆரோனும்

Digitized by Google

சபையின் பிரபுக்களும் கோகாத் புத்திர
ருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில்
முப்பதாம்வயதுதுவக்கி ஐம்பதாம்வயது
மட்டும் இருந்த,
௩௫ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை
செய்யும் சேனைக்கு உள்படத்தக்க யாவ
ரையும் இலக்கம்பார்த்தார்கள்.
௩௬ அவர்கள் வம்சங்களில் இலக்கம்
பார்க்கப்பட்டவர்கள் இரண்டாயிரத்து எ
ழுநூற்று ஐம்பதுபேர்.
௩௭ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே,
மோசேயும் ஆரோனும் கோகாத் வம்சத்
தாரில் எல்லாரும் ஆசரிப்புக்கூடாரத்தில்
வேலைசெய்கிறதற்காக இலக்கம்பார்த்தவர்
கள் இவர்கள்தான்.
௩௮ ¶ கெர்சோன் புத்திரருடைய பிதாக்க
ளின் வீட்டு வம்சங்களிலும் முப்பதாம்வய
துதுவக்கி ஐம்பதாம்வயதுமட்டும் இருந்த,
௩௯ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை
செய்யும் சேனைக்கு உள்படத்தக்க யாவ
ரும் இலக்கம்பார்க்கப்பட்டார்கள்.
௪௰ அவர்களில் இலக்கம்பார்க்கப்பட்ட
வர்கள் அவரவர் குலத்தின்படிக்கும், பி
தாக்களுடைய வம்சத்தின்படிக்கும் இரண்
டாயிரத்து அறுநூற்றுமுப்பதுபேர்.
௪௧ மோசேயும் ஆரோனும் கர்த்தர் கற்
பித்தபடியே கெர்சோன் புத்திரரின் வம்
சத்தாரில் ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை
செய்ய இலக்கம்பார்த்தவர்கள் இவர்கள்
தான்.
௪௨ ¶ மெராரி புத்திரருடைய பிதாக்களின்
வீட்டு வம்சங்களிலும் முப்பதாம்வயதுது
வக்கி ஐம்பதாம்வயதுமட்டும் இருந்த,
௪௩ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை
செய்யும் சேனைக்கு உள்படத்தக்க யாவ
ரும் இலக்கம்பார்க்கப்பட்டார்கள்.
௪௪ அவர்களில் இலக்கம்பார்க்கப்பட்ட
வர்கள் தங்கள் வம்சங்களின்படியே மூவா
யிரத்து இருநூறுபேர்.
௪௫ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி
யே, மோசேயும் ஆரோனும் மெராரி புத்தி
ரரின் வம்சத்தாரில் இலக்கம்பார்த்தவர்
கள் இவர்கள்தான்.
௪௬ ¶ இலேவியருடைய பிதாக்களின்
வீட்டு வம்சங்களில் முப்பதாம்வயதுமு
தல்கொண்டு ஐம்பதாம்வயதுமட்டும் இரு
ந்த ஆசரிப்புக்கூடாரத்திலே செய்யும் பணி
விடை வேலைக்கும் சுமையின் வேலைக்கும்
உள்படத்தக்கவர்களும்,
௪௭ மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலின்
பிரபுக்களும் இலக்கம்பார்த்தவர்களுமெ
ல்லாம்,
௪௮ எண்ணாயிரத்து ஐந்நூற்றெண்பதுபே
ராயிருந்தார்கள்.
௪௯ கர்த்தர் மோசேக்குக் கற்பித்த வாக்
கின்படியே, அவர்கள் தங்கள் தங்கள் பணி
விடைக்கென்றும் தங்கள் தங்கள் சுமைக்
கென்றும் இலக்கம்பார்க்கப்பட்டார்கள்.

௫. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்
னதாவது:
௨ எல்லாக் குஷ்டரோகிகளையும் எல்லாப்
பிரமியக்காரரையும் சவத்தினாலே தீட்டுப்
பட்ட யாவரையும் பாளயத்திலிருந்து வி
லக்கிவிட, இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பி.
௩ ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளுமா
ன அப்படிக்கொத்தவர்களை நீங்கள் விலக்
கி, நாம் தங்கள் நடுவே வாசம்பண்ணுகிற
தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டாக்கா
தபடிக்கு, அவர்களைப் பாளயத்திற்குப் பு
றம்பாக்கிவிடக்கடவர்கள் என்றார்.
௪ கர்த்தர் மோசேயோடே சொன்னபடி
யே, இஸ்ரவேல் புத்திரர் இந்தப்படியே
செய்து, அவர்களைப் பாளயத்திற்குப் புறம்
பாக்கிவிட்டார்கள்.
௫ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொ
ன்னதாவது:
௬ நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல
வேண்டியதேதெனில், ஒரு ஆண்பிள்ளையா
னும் பெண்பிள்ளையானும் மனிதன்
செய்யும் சகலவித பாவங்களில் ஒன்றைச்

Digitized by Google

செய்து, கர்த்தருக்கு ஏற்காத அநியாயம் பண்ணினால், அந்த ஆத்துமாவின்மேலே குற்றம்சுமந்தது.

௭ அவர்கள் செய்த தங்கள் பாவத்தை அறிக்கையிடக்கடவர்கள்; அப்படிக்கொத்தவன் குற்றம்செய்த முதலைத் திரும்பக் கொடுத்து, அதனோடே ஐந்தில் ஒருபங்கை அதிகமாய்க் கூட்டி, தான் நேரஸ்தனாகப் போனவனுக்குச் செலுத்தக்கடவன்.

௮ அதைக் கேட்டு வாங்குகிறதற்கு ஒருவரும் இல்லாதிருந்ததேயானால், அப்பொழுது அவனுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கப்படும்; ஆட்டுக்கடாச் செலுத்தப்படுவதுமல்லாமல், கர்த்தருக்கு அந்த முதல் செலுத்தப்பட்டு, ஆசாரியனைச் சேரவேண்டும்.

௯ ¶ இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தம்பண்ணுகிற சகலத்திலும் ஏறெடுத்து, ஆசாரியனண்டைக்குக் கொண்டுவருகிற எல்லாப் படைப்பும் அவனுடையவைகளாயிருக்கும்.

௰ அவனவன் பரிசுத்தம்பண்ணுகின்றவைகள் அவனுடையவைகளாயிருக்கும்; அவனவன் ஆசாரியனுக்குக் கொடுக்கிறவைகளும் அவனுடையவைகளாய் இருக்குமென்று சொல்லென்றார்.

௰௧ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௰௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்களுக்குச் சொல்லவேண்டியதேதெனில், எவன் ஒருவன் பெண்சாதி புறமுகம் பார்த்து, அவனுக்குத் துரோகம்பண்ணி,

௰௩ ஒருவன் அவளோடே அநுபோகமாகச் சயனித்திருந்தாலும், அவளுடைய புருஷன் கண்களுக்கு அது ஒளிப்பிடமானதினால் அவள் அதை மறைக்கின்றபொழுதும் அவள் தீட்டாக்கப்பட்டிருந்தும், சாட்சி இல்லாமலும் அவள் கையும் களவுமாகப் பிடிபடாமலும் இருக்கிறபொழுதும்,

௰௪ எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து அவன் தீட்டாக்கப்பட்ட தன் பெண்சாதியின்மேல் வயிராக்கியமானால், அல்லவென்று எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து தீட்டாக்கப்படாத தன் பெண்சாதியின்மேல் வயிராக்கியமானால்,

௰௫ அப்பொழுது அந்தப் புருஷன் தன் பெண்சாதியை ஆசாரியனண்டைக்கு அழைத்துவந்து, அவள்நிமித்தம் படைப்பாக ஒரு மரக்கால் வால்கோதுமைமாவிலே பத்தில் ஒரு பங்கைக் கொண்டுவந்து, அது எரிச்சலின் காணிக்கையும் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணுகிற காணிக்கையுமானபடியினாலே, அதின்மேல் எண்ணெய் வாராமலும் குங்குலிகம் போடாமலும் இருப்பானாக.

௰௬ ¶ ஆசாரியன் அவளைச் சேரப்பண்ணி. கர்த்தருக்குமுன்பாக நிறுத்தி,

௰௭ ஒரு மண்பாண்டத்திலே பரிசுத்த தண்ணீரை வார்த்து, வாசஸ்தலத்தின் தரையிலிருக்கும் தூளிலே கொஞ்சம் எடுத்து. அந்தத் தண்ணீரிலே போட்டு,

௰௮ பெண்சாதியைக் கர்த்தருக்குமுன்பாக நிறுத்தி, அவள் தலையைத் திறந்துவைத்து. எரிச்சலின் காணிக்கையாகிய நினைப்பூட்டுதலின் காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைப்பானாக; ஆசாரியன் கையிலோவென்றால், சாபம் கொடுக்கிற அந்தக் கசப்பான தண்ணீர் இருக்கக்கடவது.

௰௯ அப்பொழுது ஆசாரியன் அவளை ஆணையிடுவித்துக்கொண்டு, ஒருவனும் உன்னோடே சயனிக்காமலும், உன் புருஷன்கீழிருக்கிற நீ தீட்டுப்படப் புறமுகம்பாராமலும் இருந்தால், சாபம்கொடுக்கிற இந்தக் கசப்பான தண்ணீரின் தோஷத்திற்கு நீங்கலாயிரு.

௨௰ உன் புருஷன்கீழிருக்கிற நீ புறமுகம் பார்த்து, தீட்டாக உன் புருஷனல்லாத ஒருவன் உன்னோடே அநுபோகமாய்ச் சயனித்ததுண்டேயானால்,

௨௰௧ கர்த்தர் உன் இடுப்பைச் சூம்பவும். உன் வயிற்றை வீங்கவும்பண்ணுவதினால். உன்னை உன் சனத்தின் நடுவே சாபமா

Digitized by Google

கவும் ஆணையிடுதலாகவும் வைப்பாராக.
௨௨ உன் வயிற்றை வீங்கவும் இடுப்பைச் சூம்பவும்பண்ண, இந்தக் கசப்பான தண்ணீர் உன் குடல்களுக்கு போகவும்கடவதென்கிற சாபவார்த்தையாலே பெண்சாதியை ஆணை இடுவித்துக்கொள்வானாக; அதற்குப் பெண்சாதி, ஆமன், ஆமன் என்று சொல்லக்கடவள்.
௨௩ பிற்பாடு ஆசாரியன் இந்தச் சாபவார்த்தைகளை ஒரு சீட்டிலே எழுதி, கசப்பான தண்ணீரினாலே கழுவிப்போட்டு,
௨௪ கசப்பாகும் அந்தச் சாபத்தண்ணீர் அவளுக்குள் போகும்படிக்கு, அதை அவளுக்குக் குடிக்கக்கொடுக்கக்கடவன்.
௨௫ ¶ எப்படியெனில் முந்தி ஆசாரியன் எரிச்சலின் காணிக்கையைப் பெண்சாதியின் கையில் வாங்கி, அதைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டி, பீடத்தின்மேலே செலுத்தி,
௨௬ நினைப்புக்கென்று அதிலே ஒரு கைப்பிடி நிறைய எடுத்து, பீடத்தின்மேலே கொளுத்தி, பிற்பாடு பெண்சாதிக்கு அந்தத் தண்ணீரைக் குடிக்கக்கொடுக்கக்கடவன்.
௨௭ குடிக்கக் கொடுத்தபிற்பாடு சம்பவிப்பதேதெனில், அவள் தீட்டாகி, தன் புருஷனுக்குத் துரோகம்பண்ணியிருந்தால், அந்தச் சாபத்தண்ணீர் கசப்புண்டாக அவளுக்குள் போனதினாலே, அவள் வயிறு வீங்கி, அவள் இடுப்புச் சூம்பும்; அப்படியே அந்தப் பெண்சாதி தன் சனத்திற்குள்ளே சாபமாக இருப்பாள்.
௨௮ பெண்சாதி தீட்டாக்கப்படாமல் சுத்தமாயிருந்தாளேயாகில், அவள் கர்ப்பம் தரிக்கத்தக்கவளாய் அதற்கு நீங்கலாயிருப்பாள்.
௨௯ ¶ புருஷன்கீழிருக்கிற பெண்சாதி புறமுகம் பார்த்துத் தீட்டானதினால் உண்டான எரிச்சலுக்கும்,
௩௰ அல்லது புருஷன்மேல் எரிச்சலின் ஆவிவருகிறதினாலே, அவன் தன் பெண்சாதியின்மேலே அடைந்த எரிச்சலுக்கும், அடுத்த நியாயப்பிரமாணம் இதுதானே; அவன் கர்த்தருக்குமுன்பாகப் பெண்சாதியை நிறுத்துவானாக; அப்பொழுது ஆசாரியன் இந்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் அவளுக்குச் செய்யக்கடவன்.
௩௧ புருஷன் அக்கிரமத்திற்கு நீங்கலாயிருப்பான்; அப்படிக்கொத்த பெண்சாதியோவென்றால், தன் அக்கிரமத்தைச் சுமப்பாளென்று சொல்லென்றார்.

௬. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:
௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒரு ஆண்சாதியாகிலும் பெண்சாதியாகிலும் கர்த்தருக்கென்று வர்ச்சித்தவர்களாயிருக்கும்படிக்கு நசரேயர் பொருத்தனையாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணினால்,
௩ அப்படிக்கொத்தவன் *திராட்சப்பழ இரசத்தையும், லாகிரியுள்ள பானத்தையும், வர்ச்சித்திருக்கக்கடவன்; அவன் திராட்சப்பழ இரசத்தின் காடியையும், லாகிரியுள்ள பானத்தின் காடியையும், திராட்சப் பழங்களுடைய எந்தவிதமான சாற்றையும் குடிக்காமலும் திராட்சப் பச்சைப் பழங்களையாகிலும் வற்றலான பழங்களையாகிலும் புசிக்காமலும், *௩ மோ. ௰. ௯.
௪ தான் நசரேயனாகிய நாளெல்லாம் திராட்சக்கனியின் விதையினாலாகிலும் தோலினாலாகிலும் செய்யப்பட்ட யாதொன்றைப் புசிக்காமலும் இருக்கக்கடவன்.
௫ நசரேய பொருத்தனை அவன்மேலிருக்கும் நாளெல்லாம் *சவரகன் கத்தி அவன் தலையின்மேல் வரவேண்டாம்; அவன் கர்த்தருக்கென்று வர்ச்சித்திருக்கும் நாள் நிறைவேறும்மட்டும் பரிசுத்தமாயிருந்து, தன் தலையின் மயிர்களை வளர்க்கக்கடவன்.
*நியா. ௰௩. ௫.
௬ அவன் கர்த்தருக்கென்று வர்ச்சித்திருக்

Digitized by Google

கும் நாளெல்லாம் செத்த சவத்தண்டையிலே வரவேண்டாம்.

௭ *மரணமடைந்த தன் தகப்பனானாலாகிலும், தாயினாலாகிலும், சகோதரனாலாகிலும், சகோதரியினாலாகிலும், அவன் தீட்டுப்படானாக; ஏனெனில் அவனுடைய பராபரனின் நசரேய பொருத்தனை அவன் தலையின்மேல் இருக்கின்றது. *௩ மோ. ௨௧. ௰௧.

௮ அவன் நசரேயனாகிய நாளெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தன்.

௯ அவனண்டையிலே எவன் ஒருவன் அசுப்பான சடுதியிலே செத்ததினாலே, நசரேய பொருத்தனையுள்ள அவனுடைய தலை தீட்டுப்பட்டதேயாகில், அவன் தன் சுத்திகரிப்பின் நாளாகிய ஏழாம்நாளிலே தன் தலையைச் சிரைத்துக்கொண்டு,

௰ எட்டாம்நாளிலே இரண்டு காட்டுப் புறாக்களை, அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளை ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரக்கடவன்.

௰௧ அப்பொழுது ஆசாரியன் ஒன்றைப் பாவம்போக்கும் பலியும், மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி, சவத்தினாலேபட்ட தீட்டின் நிவிர்த்தியை அவனுக்காக உண்டாக்கி, அவன் தலையை அந்நாளிலே பரிசுத்தமாக்குவானாக.

௰௨ அதின்பிறகு இவன் தன் பொருத்தனையின் நாள்களிலே, கர்த்தருக்கென்று வர்ச்சித்தவனாயிருந்து, ஒருவயது ஆட்டுக்குட்டியைக்குற்றம்போக்கும்பலியாகக்கொண்டுவரக்கடவன்; முந்தின நாள்களோவெனில், அவனுடைய நசரேய பொருத்தனை, தீட்டுப்பட்டதினால் வீணாயிற்று.

௰௩ ¶ நசரேயனுடைய நியாயப்பிரமாணமாவது: அவனுடைய பொருத்தனையின் நாள்கள் நிறைவேறின அன்றே அவன் ஆசரிப்புக்கூடாரவாசலிலே வந்து,

௰௪ சர்வாங்கதகனபலியாக ஒருவயதுள்ள பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும், பாவம்போக்கும்பலியாக ஒருவயதுள்ள பழுதற்ற ஒரு பெண் ஆட்டுக்குட்டியையும், சமாதானபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும்,

௰௫ ஒரு கூடையில் எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லியமாவின் அதிரசங்களையும், எண்ணெய் தடவப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், அவைகளுக்கு அடுத்த காணிக்கையையும், பானபலிகளையும், கர்த்தருக்குத் தன் காணிக்கையாகச் செலுத்தக்கடவன்.

௰௬ அதை ஆசாரியன் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து, பாவம்போக்கும் அவனுடைய பலியையும் அவனுடைய சர்வாங்கதகனபலியையும் செலுத்தி,

௰௭ ஆட்டுக்கடாவைக் கூடையிலிருக்கும் புளிப்பில்லாத அப்பங்களோடும் கூடக் கர்த்தருக்குச் சமாதானபலியாகச் செலுத்தி, அவனுடைய காணிக்கையையும் பானபலியையும் படைப்பானாக.

௰௮ அப்பொழுது நசரேயன் ஆசரிப்புக்கூடாரவாசலிலே, தன் பொருத்தனையுள்ள தலையைச் சிரைத்து, தன் பொருத்தனையுள்ள தலைமயிரை எடுத்துக்கொண்டு, சமாதானபலியின்கீழெரிகிற அக்கினியின்மேலே போடக்கடவன்.

௰௯ நசரேயன் தன் பொருத்தனையுள்ள தலையைச் சிரைத்துக்கொண்டபிற்பாடு, ஆசாரியன் ஆட்டுக்கடாவினுடைய வேவிக்கப்பட்ட ஒரு முன்னங்கால் தொடையையும் கூடையில் இருக்கிறவைகளிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் புளிப்பில்லாத ஒரு அடையையும் எடுத்துக்கொண்டு, அவனுடைய உள்ளங்கைகளில் வைத்து,

௨௰ அவைகளைக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டக்கடவன்; அது அசைவாட்டப்பட்ட மார்க்கண்டத்தோடும், ஏறெடுத்துப் படைக்கப்பட்ட முன்னந்தொடையோடும், ஆசாரியனைச்சேரும் பரிசுத்தமானது; பிற்பாடு நசரேயன் திராட்சப்பழ இரசம் குடிக்கலாம்.

Digitized by Google

௨௰௧ இது பொருத்தனை பண்ணின நசரே

பனுக்கும், அவன் தன் கைக்கு உதவுகிறதை அல்லாமல், தன் நசரேய பொருத்தனையின் நிமித்தம் கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கைக்கும் அடுத்த நியாயப்பிரமாணம்; அவன் பொருத்தனைபண்ணினதற்குச் சரியாக, தன் பொருத்தனையினுடைய நியாயப்பிரமாணத்தின்படியே செய்து தீரவேண்டுமென்று சொல்லென்றார்.

௨௨ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௩ நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் பேசிச்சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்க, அவர்களுக்குச் சொல்லவேண்டியதாவது:

௨௪ கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.

௨௫ கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேலே பிரகாசிக்கப்பண்ணி, உன்மேலே கிருபையாய் இருக்கக்கடவர்.

௨௬ கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவரென்பதுதானே.

௨௭ இப்படி நம்முடைய நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் வைப்பார்களாக; நாம் அவர்களை ஆசீர்வதிப்போமென்று சொல்லென்றார்.

௭. அதிகாரம்.

மோசே வாசஸ்தலத்தை எடுப்பித்து, அதையும் அதின் எல்லா முட்டுகளையும் பலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கித் தீர்ந்தநாளிலே சம்பவித்ததேதெனில்,

௨ தங்கள் பிதாக்களுடைய வீட்டாரின் தலைவரும், இலக்கம் பார்க்கப்பட்டவர்களின் விசாரிப்புக்கு வைக்கப்பட்ட கோத்திரப் பிரபுக்களுமாகிய இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள்.

௩ தங்கள் காணிக்கையாக, ஆறு குலால் வண்டில்களையும், பன்னிரண்டு மாடுகளையும், இரண்டிரண்டு பிரபுக்களுக்கு ஒவ்வொரு வண்டிலும், ஒவ்வொரு பிரபுக்கு ஒவ்வொரு மாடுமாக, கர்த்தருக்குச் செலுத்த வாசஸ்தலத்திற்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

௪ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

௫ நீ அவர்கள் கையில் அவைகளை ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்காக வாங்கி, இலேவியருக்கு அவரவர் வேலைக்குத்தக்கவைகளாக, பங்கிட்டுக் கொடுவென்றார்.

௬ அப்பொழுது மோசே அந்த வண்டில்களையும் மாடுகளையும் வாங்கி, இலேவியருக்குக் கொடுத்தான்.

௭ இரண்டு வண்டில்களையும் நான்கு மாடுகளையும் கெர்சோன் புத்திரருக்கு, அவர்கள் வேலைக்குத்தக்க பங்காகக் கொடுத்து,

௮ நான்கு வண்டில்களையும் எட்டு மாடுகளையும் மெராரியின் புத்திரருக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமாருடைய கையின்கீழிருக்கிற அவர்களுடைய வேலைக்குத்தக்க பங்காகக் கொடுத்தான்.

௯ கோகாத்தின் புத்திரருக்கோவெனில், ஒன்றும் கொடுத்ததில்லை; ஏனெனில் தோளின்மேலே சுமக்கும் பரிசுத்தஸ்தலத்தின் வேலை அவர்கள்மேலே சுமந்திருந்தது.

௰ ¶ பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்ட நாளிலே, பிரபுக்கள் அதின் பிரதிஷ்டைக்காகவும் காணிக்கைகளைச் செலுத்தி, பலிபீடத்திற்கு முன்பாகத் தங்கள் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

௰௧ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, ஒவ்வொருநாளிலே ஒவ்வொரு பிரபு பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காகத் தங்கள் காணிக்கையைச் செலுத்துவார்களாக என்றார்.

௰௨ ¶ அப்படியே முதலாம்நாளிலே தன் காணிக்கையைச் செலுத்தினவன் யூதாகோத்திரத்தானாகிய அமினதாபின் குமாரன் நகசோன்.

௰௩ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்

Digitized by Google

வித்தாலமும், எழுபது சேக்கல் நிறையா
ன ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும்
படைக்கும் காணிக்கையாக எண்ணெயி
லே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்தி
ருந்தன.
௰௪ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச்
சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூ
பக்கிண்ணியும்,
௰௫ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை
எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவய
தான ஒரு ஆட்டுக்குட்டியும்,
௰௬ பாவம்போக்கும் பலியாக ஒரு வெள்
ளாட்டுக்கடாவும்,
௰௭ சமாதானபலியாக இரண்டு மாடுக
ளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து
வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான
ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது அ
மீனதாபின் குமாரனாகிய நாகேசோனின்
காணிக்கை.
௰௮ ¶ இரண்டாம்நாளிலே இசக்காரின்
பிரபுவாகிய சூவாரின் குமாரன் நெத்தானி
யேல் செலுத்துதல்செய்தான்.
௰௯ அவன் தன் காணிக்கையாகச் செலுத்
தினதாவது: பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல்
கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறை
யான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது
சேக்கல் நிறையான ஒருவெள்ளிக்கலமும்,
இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக
எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவி
னால் நிறைந்திருந்தன.
௨௰ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச்
சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூ
பக்கிண்ணியும்,
௨௰௧ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை
எருதும்; ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவய
தான ஒரு ஆட்டுக்குட்டியும்,
௨௰௨ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்
ளாட்டுக்கடாவும்,
௨௰௩ சமாதானபலியாக இரண்டு மாடுக
ளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து
வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான
ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது சூ
வாரின் குமாரனாகிய நெத்தானியேலின்
காணிக்கை.
௨௰௪ ¶ மூன்றாம்நாளிலே ஏலோனின் கு
மாரனாகிய எலியாப்பென்ற செபுலோனின்
புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.
௨௰௫ அவன் காணிக்கை ஏதெனில், பரி
சுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்
றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்
ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையா
ன ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும்
படைக்கும் காணிக்கையாக எண்ணெயி
லே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்
திருந்தன.
௨௰௬ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச்
சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூ
பக்கிண்ணியும்,
௨௰௭ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை
எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவய
தான ஒரு ஆட்டுக்குட்டியும்,
௨௰௮ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்
ளாட்டுக்கடாவும்,
௨௰௯ சமாதானபலியாக இரண்டு மாடுக
ளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து
வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான
ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது
ஏலோனின் குமாரனாகிய எலியாப்பின் கா
ணிக்கை.
௩௰ ¶ நான்காம்நாளிலே சேதேயூரின் கு
மாரனாகிய எலிசூரென்ற ரூபன் புத்திர
ரின் பிரபு செலுத்துதல்செய்தான்.
௩௰௧ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்த
ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்
பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தா
லமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு
வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்
கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசை
ந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.
௩௰௨ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச்
சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு
தூபக்கிண்ணியும்,

Digitized by Google

௬௩ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௬௪ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௬௫ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது சேதேயூரின் குமாரனாகிய எலிசூரின் காணிக்கை.

௬௬ ¶ ஐந்தாம்நாளிலே சூரிஷதாயின் குமாரனாகிய செலுமியேலென்ற சிமெயோன் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

௬௭ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

௬௮ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூபக்கிண்ணியும்,

௬௯ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௭௦ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௭௧ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது சூரிஷதாயின் குமாரனாகிய செலுமியேலின் காணிக்கை.

௭௨ ¶ ஆறாம்நாளிலே தேகுவேலின் குமாரனாகிய எலியாசாபென்ற காத் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

௭௩ அவன் காணிக்கை ஏதெனில் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

௭௪ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூபக்கிண்ணியும்,

௭௫ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௭௬ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௭௭ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது தேகுவேலின் குமாரனாகிய எலியாசாபின் காணிக்கை.

௭௮ ¶ ஏழாம்நாளிலே அம்மியூதின் குமாரனாகிய எலிஷமா என்ற எப்பிராயீம் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

௭௯ அவன் காணிக்கை ஏதெனில் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

௮௦ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூபக்கிண்ணியும்,

௮௧ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௮௨ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௮௩ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து

Digitized by Google

வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது அம்மியூதின் குமாரனாகிய எலிஷாமாவின் காணிக்கை.

௫௪ ¶ எட்டாம்நாளிலே பெதாத்சூரின் குமாரனாகிய காமாலியேல் என்ற மனாசே புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

௫௫ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

௫௬ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூபக்கிண்ணியும்,

௫௭ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௫௮ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௫௯ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது பெதாத்சூரின் குமாரனாகிய காமாலியேலின் காணிக்கை.

௬௰ ¶ ஒன்பதாம்நாளிலே கிதேயோனின் குமாரனாகிய அபிதான் என்ற பென்யமீன் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

௬௧ அவன் காணிக்கை ஏதெனில் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

௬௨ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூபக்கிண்ணியும்,

௬௩ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௬௪ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௬௫ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது கிதேயோனின் குமாரனாகிய அபிதானின் காணிக்கை.

௬௬ ¶ பத்தாம்நாளிலே அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேர் என்ற தாண் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

௬௭ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

௬௮ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூபக்கிண்ணியும்,

௬௯ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும் ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௭௰ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௭௧ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது அம்மிஷதாயின் குமாரனாகிய அகியேசேரின் காணிக்கை.

௭௨ ¶ பதினோராம்நாளிலே ஓகிரானின் குமாரனாகிய பாகியேல் என்ற ஆசேர் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

Digitized by Google

௭௩ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந்திருந்தன.

௭௪ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூபக்கிண்ணியும்,

௭௫ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௭௬ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௭௭ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது ஓகிரானின் குமாரனாகிய பாகியேலின் காணிக்கை

௭௮ ¶ பன்னிரண்டாம்நாளிலே ஏனானின் குமாரனாகிய அகிரா என்ற நவ்தலி புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

௭௯ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

௮௰ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச்சேக்கல் நிறையுள்ள பொன்னான ஒரு தூபக்கிண்ணியும்,

௮௧ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

௮௨ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

௮௩ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது ஏனானின் குமாரனாகிய அகிராவின் காணிக்கை.

௮௪ ¶ அப்படியே பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்டபொழுது, இஸ்ரவேலின் பிரபுக்களாலே செய்யப்பட்ட அதினுடைய பிரதிஷ்டையாவது: வெள்ளித்தாலங்கள் பன்னிரண்டு, வெள்ளிக்கலங்கள் பன்னிரண்டு, பொன்னான தூபக்கிண்ணிகள் பன்னிரண்டு.

௮௫ ஒவ்வொரு வெள்ளித்தாலம் நூற்றுமுப்பது சேக்கல் நிறையும், ஒவ்வொரு கலம் எழுபது சேக்கல் நிறையுமாக, இந்தப் பாத்திரங்களின் வெள்ளியெல்லாம் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காய் இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறையாயிருந்தது.

௮௬ தூபவர்க்கத்தால் நிறைந்த பொன்னான பன்னிரண்டு தூபக்கிண்ணிகளில் ஒவ்வொன்று பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காய்ப் பத்துச்சேக்கல் நிறையாக, தூபக்கிண்ணிகளின் பொன்னெல்லாம் நூற்றிருபது சேக்கல் நிறையாயிருந்தன.

௮௭ சர்வாங்கதகனபலியாகச் செலுத்தப்பட்ட காளை எருதுகளெல்லாம் பன்னிரண்டு, ஆட்டுக்கடாக்கள் பன்னிரண்டு, ஒருவயதான ஆட்டுக்குட்டிகள் பன்னிரண்டு, அவைகளுக்கடுத்த படைப்புக்காணிக்கைகளும்கூட இருந்தன; பாவம்போக்கும் பலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக்கடாக்கள் பன்னிரண்டு.

௮௮ சமாதானபலியாகச் செலுத்தப்பட்ட காளை எருதுகளெல்லாம் இருபத்துநான்கு; ஆட்டுக்கடாக்கள் அறுபது, வெள்ளாட்டுக்கடாக்கள் அறுபது, ஒருவயது ஆட்டுக்குட்டிகள் அறுபது; பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்டபிற்பாடு செய்யப்பட்ட அதின் பிரதிஷ்டை இதுதானே.

Digitized by Google

௮௯ ¶ மோசே அவரோடே பேசுகிறதற்காக ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்பொழுது, தன்னோடே பேசுகிற சத்தத்தைச் *சாட்சியினுடைய பெட்டியின்மேலுள்ள கிருபாசனமான மூடியின்மீதில் இரண்டு கேருபீன்களின் நடுவே இருந்துண்டாகக் கேட்பான்; அங்கே இருந்து அவனோடே பேசுவார். *௨ மோ. ௨௫. ௨௨. சங். ௮௰. ௨.

௮. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ ஆரோனோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், *நீ விளக்குகளை ஏற்றுகையில் ஏழு விளக்குகளும் விளக்குத்தண்டிற்கு நேர் ஒழுங்காய் எரியவேண்டுமென்று சொல்லென்றார். *௨ மோ. ௨௫. ௩௭.

௩ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபிரகாரமாக ஆரோன் செய்து, விளக்குத்தண்டிற்கு நேர் ஒழுங்காக அதின் விளக்குகளை ஏற்றுவான்.

௪ இந்தக் குத்துவிளக்கின் வேலை, அதின் பாதம்துவக்கி அதின் பூக்கள்மட்டும், அடிக்கப்பட்ட பொன்னாயிருந்தது; கர்த்தர் மோசேக்குக் காண்பித்த மாதிரியின்படியே அவன் குத்துவிளக்கைப் பண்ணினான்.

௫ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௬ நீ இலேவியரை இஸ்ரவேல் புத்திரருடைய நடுவில் எடுத்து, அவர்களைச் சுத்திகரிப்பாயாக.

௭ அவர்களைச் சுத்திகரிக்க நீ அவர்களுக்குச் செய்யவேண்டியதேதெனில், அவர்கள்மேலே பாவம்போக்கும் தண்ணீரைத் தெளி; பிற்பாடு அவர்கள் தங்களைச் சுத்திகரிக்க, தங்கள் மாம்சத்தின்மேலெல்லாம் சவரகன் கத்தியைப் போகப்பண்ணி, தங்கள் வஸ்திரங்களை வெளுத்து,

௮ ஒரு காளை எருதையும் எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவாகிய அதற்கு அடுத்த காணிக்கையையும் கொண்டுவரக்கடவர்கள்; பாவம்போக்கும்பலியாக வேறொரு காளை எருதையும் நீ வாங்கி,

௯ இலேவியரை ஆசரிப்புக்கூடாரத்திற்குமுன்பாகச் சேரப்பண்ணி, இஸ்ரவேல் புத்திரரின் சபையையெல்லாம் கூட்டுவாயாக.

௰ நீ இலேவியரைக் கர்த்தருக்குமுன்பாகச் சேரப்பண்ணினபொழுது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை இலேவியர்மேல் வைக்கக்கடவர்கள்.

௰௧ பிறகு இலேவியர் கர்த்தரின் பணிவிடைவேலை செய்கிறவர்களாகும்படிக்கு, ஆரோன் இஸ்ரவேல் புத்திரரில் எடுக்கப்பட்ட அவர்களைக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாக நிறுத்தக்கடவன்.

௰௨ பிற்பாடு இலேவியர் தங்கள் கைகளைக் காளை எருதுகள் தலையின்மேல் வைப்பார்களாக; அதின்பிறகு நீ இலேவியருக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்குவதற்கு, கர்த்தருக்கு அவைகளில் ஒன்றைப் பாவம்போக்கும்பலியும் மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி,

௰௩ ¶ இலேவியரை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும்முன்பாக நிறுத்தி, அவர்களைக் கர்த்தருக்கு அசைவாட்டப்படும் காணிக்கையாக்கி,

௰௪ இப்படி இலேவியர் நம்முடையவர்களாயிருக்கும்படிக்கு, அவர்களை இஸ்ரவேல் புத்திரர் நடுவிலிருந்து பிரித்தெடுக்கக்கடவாய்.

௰௫ அதற்குப் பிறகு இலேவியர் ஆசரிப்புக்கூடாரத்தில் வேலைசெய்யப் பிரவேசிக்கக்கடவர்கள்; இப்படி அவர்களைச் சுத்திகரித்து, அவர்களை அசைவாட்டும் காணிக்கையாக்கக்கடவாய்.

௰௬ ஏனெனில் அவர்கள் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலிருந்து நமக்குக் கொடுக்கவே கொடுக்கப்பட்டார்கள்; இஸ்ரவேல் புத்திரரில் எல்லாம் கர்ப்பம்திறந்து பிறக்கிற

Digitized by Google

சகல முதல்பேற்றுக்கும் பதிலாக அவர்களை நமக்கு எடுத்துக்கொண்டோம்.

௰௭ ஏனென்றால் இஸ்ரவேல் புத்திரரிலே, மனிதரிலும் மிருகசீவன்களிலும் *முதல்பேறனதெல்லாம் நம்முடையது; நாம் எகிப்துதேசத்திலே முதல்பேறு சகலத்தையும் சங்கரித்தநாளிலே அவைகளை நமக்குப் பரிசுத்தமாக்கி, *௨ மோ. ௰௩. ௨.

௰௮ பிற்பாடு *இலேவியரை இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதல்பேறு சகலத்திற்கும் பதிலாக எடுத்துக்கொண்டு, *௪ மோ. ௩. ௰௨.

௰௯ இலேவியர் இஸ்ரவேல் புத்திரருடைய பணிவிடைவேலையை ஆசரிப்புக்கூடாரத்திலே செய்யும்படிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கும்படிக்கும் இஸ்ரவேல் புத்திரர்தானே பரிசுத்தஸ்தலத்திற்குச் சேருகிறதினால் இஸ்ரவேல் புத்திரரில் வாதை உண்டாகாதபடிக்கும், இலேவியரை அவர்கள் நடுவில் எடுத்து, ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுக்கவே கொடுத்தோமென்றார்.

௨௰ அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தும் கர்த்தர் இலேவியரைக்குறித்து மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இலேவியருக்குச் செய்தார்கள்.

௨௧ இலேவியர் பாவம்போக்குதலைப் பண்ணிக்கொண்டு, தங்கள் வஸ்திரங்களை வெளுத்தார்கள்; பிற்பாடு ஆரோன் அவர்களைக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்தி, அவர்களைச் சுத்திகரிக்க அவர்களுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கினான்.

௨௨ அதற்குப்பிறகு இலேவியர் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் முன்பாக ஆசரிப்புக்கூடாரத்திலே தங்கள் பணிவிடைவேலையைச் செய்யப் பிரவேசித்தார்கள்; கர்த்தர் இலேவியரைக்குறித்து மோசேக்குக் கற்பித்தபடியே அவர்களுக்குச் செய்தார்கள்.

௨௩ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௪ இலேவியருக்கான கட்டளை ஏதெனில், இருபத்தைந்துவயது முதல்கொண்டு அதற்கு மேல்த்தரமுமான அனைவரும் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலையைச் செய்யும் இராணுவத்திலே சேவிக்க வரவேண்டும்.

௨௫ ஆனால் ஐம்பதாம்வயதுமுதல்கொண்டு அவர்கள் இனி வேலைசெய்யாதபடிக்கு வேலைசெய்யும் இராணுவத்தை விட்டு,

௨௬ பணிவிடைவேலையைச் செய்யாமல், ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கிறதற்கே தங்கள் சகோதரரோடேகூடச் சேவிக்கக்கடவர்கள்; இப்படி இலேவியருக்கு அவர்களுடைய காவல்களின் வேலைக்காகத் திட்டம்பண்ணக்கடவாயென்றார்.

௯. அதிகாரம்.

அவர்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதல்மாதத்திலே கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலே மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ இஸ்ரவேல் புத்திரர் *பஸ்காவை அதின் திட்டமான காலத்திலே ஆசரிக்கக்கடவர்கள். *௨ மோ. ௰௨. ௩.

௩ இந்த மாதம் பதினாலாம்தேதி அந்திநேரமானவேளை என்றதின் திட்டமான காலத்திலே அதை ஆசரிக்கக்கடவீர்கள்; அதினுடைய எல்லாக் கட்டளையின்படியேயும் நியாயத்தின்படியேயும் அதை ஆசரிக்கக்கடவீர்களென்றார்.

௪ ஆகையால் பஸ்காவை ஆசரிக்கிறதற்காக மோசே இஸ்ரவேல் புத்திரரோடே பேசினான்.

௫ அப்படியே முதலாம்மாதம் பதினாலாம்தேதி அந்திநேரமானவேளையிலே, சீனாய் வனாந்தரத்திலே பஸ்காவை ஆசரித்தார்கள்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.

௬ ¶ ஆனால் சவத்தினாலே தீட்டுப்பட்ட

Digitized by Google

படியினாலே, அந்நாளில் பஸ்காவை ஆச
ரிக்கக்கூடாத மனிதர் இருந்தார்கள்; அவர்
கள் அந்நாளிலே மோசேக்கும் ஆரோனுக்
கும்முன்பாகச் சேர்ந்துவந்து,
௭ அவர்களோடே, நாங்கள் சவத்தினாலே
தீட்டுப்பட்டவர்கள்; இஸ்ரவேல் புத்திர
ருக்குள்ளே திட்டமானகாலத்திலே கர்த்த
ருக்குக் காணிக்கையைச் செலுத்தாதபடிக்
கு, நாங்கள் விலக்கப்பட்டிருப்பானேனெ
ன்றார்கள்.
௮ மோசே அவர்களுடனே, பொறுங்கள்;
கர்த்தர் உங்களுக்காகக் கற்பிப்பது ஏதென்
று கேட்பேனென்றான்.
௯ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொ
ன்னதாவது:
௰ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச்
சொல்லவேண்டியதேதெனில், உங்களிலா
கிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் எவர்
ஒருவர் சவத்தினாலே தீட்டுப்பட்டு, அல்ல
வென்று தூரப்பயணத்தில் இருந்தாலும்,
கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கவேண்
டும்.
௰௧ அவர்கள் அதை இரண்டாம்மாதம்
பதினாலாம்தேதி அந்திநேரமானவேளையில்
ஆசரித்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்
களோடும் கசப்பான கீரைகளோடும் புசி
த்து,
௰௨ விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும்
மீதியாகவைக்காமலும், அதில் ஒரு எலும்
பை முறிக்காமலும், பஸ்காவினுடைய கட்
டளையின்படி எல்லாம் அதை ஆசரிக்கக்
கடவர்கள்.
௰௩ ஆனால் ஒருவன் சுத்தமும் பயணத்
தில் இராதவனுமாயிருந்தும், பஸ்காவை
ஆசரிக்காதேபோனால், அந்த ஆத்துமாத்
திட்டமான காலத்திலே கர்த்தரின் காணிக்
கையைச் செலுத்தாதபடியினாலே தன் ச
னத்தாரில் இராமல், *அறுப்புண்டுபோ
வான்; அந்த மனிதன் தன் பாவத்தைச்
சுமப்பான். *௧ மோ. ௰௭. ௰௪.
௰௪ ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி,
கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கப்போ
னால், அவன் அதைப் பஸ்காவின் கட்டளை
யின்படியும் அதின் நியாயத்தின்படியும் ஆ
சரிக்கக்கடவன்; பரதேசிக்காகவும் தேசத்
திலே பிறந்தவனுக்காகவும் ஏககட்டளை
உங்களுக்கு இருப்பதாகவென்று சொல்
லென்றார்.
௰௫ ¶ வாசஸ்தலம் எடுப்பிக்கப்பட்டநா
ளிலே, *மேகம் சாட்சியின்கூடாரம் இருக்
கிற வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்கால
மானபொழுதோவெனில், வாசஸ்தலத்தின்
மேல் விடியற்காலம்மட்டும் அக்கினியின்
உருவிருந்தது. *௨ மோ. ௪௰. ௩௪.
௰௬ இப்படி எப்பொழுதும் இருந்தது:
மேகமும் இராவில் அக்கினி உருவும் அதை
மூடியிருந்தன.
௰௭ மேகம் கூடாரத்திலிருந்து எழும்புகிற
தைப் பார்த்து, இஸ்ரவேல் புத்திரர் அதின்
பிறகு பயணப்படுவார்கள்; மேகம் எந்த
ஸ்தலத்திலே தங்கித்தரிக்குமோ, அங்கே
இஸ்ரவேல் புத்திரர் பாளயம் இறங்குவார்
கள்.
௰௮ கர்த்தருடைய கட்டளையின்படியே
இஸ்ரவேல் புத்திரர் பயணப்படுவார்கள்;
கர்த்தருடைய கட்டளையின்படியேயும் பா
ளயம் இறங்குவார்கள்; மேகம் வாசஸ்தல
த்தின்மேலே தங்கியிருக்கும் நாளெல்லாம்
பாளயத்தில் இறங்கி இருப்பார்கள்,
௰௯ மேகம் வெகுநாள் வாசஸ்தலத்தின்
மேலே தரித்திருக்கையில், இஸ்ரவேல் புத்
திரர் பயணப்படாமல், கர்த்தரின் காவலைக்
காத்திருப்பார்கள்.
௨௰ மேகம் கொஞ்சநாள் வாசஸ்தலத்தின்
மேலிருக்கும்பொழுது, கர்த்தருடைய கட்
டளையின்படியே பாளயம் இறங்கியிருந்து,
கர்த்தருடைய கற்பனையின்படியே பயண
ப்படுவார்கள்.
௨௰௧ மேகம் சாயங்காலம்துவக்கி விடியற்
காலம்மட்டும் இருந்து, விடியற்காலத்தில்
எழும்பும்பொழுது, அந்நேரம் பயணப்ப
டுவார்கள்; பகலிலாகிலும் இராவிலாகிலும்

Digitized by Google

மேகம் எழும்பும்பொழுது, பயணப்படுவார்கள்.

௨௨ அல்லவென்று மேகம் இரண்டொரு நாள், அல்லது ஒருமாதம், அல்லது அதிக நாள், வாசஸ்தலத்தின்மேலே தங்கியிருக்கும்பொழுது, இஸ்ரவேல் புத்திரர் பயணப்படாமல், பாளயம் இறங்கி இருப்பார்கள்; அது எழும்பும்பொழுதோவெனில், பயணப்படுவார்கள்.

௨௩ கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயம் இறங்குவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பயணப்படுவார்கள்; கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிடும்படியே கர்த்தருடைய காவலைக் காப்பார்கள்.

௰. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ உனக்கு இரண்டு வெள்ளிப் பூரிகைகளை அடிக்கப்பட்ட வெள்ளியினாலே உண்டுபண்ணு; அவைகள் உனக்குச் சபையை வரவழைப்பிக்கிறதற்கும் பாளயங்களைப் பயணப்படுத்துகிறதற்கும் உதவுவதாக.

௩ அவைகளை ஊதும்பொழுது சபை எல்லாம் ஆசரிப்பின் கூடாரத்தின் வாசலில் உன்னண்டைக்குக் கூடக்கடவது.

௪ ஒன்றை ஊதும்பொழுதோவெனில், இஸ்ரவேலில் ஆயிரங்களுக்குத் தலைவராகிய பிரபுக்கள் உன்னண்டைக்குக் கூடக்கடவர்கள்.

௫ நீங்கள் அவைகளைக் கெம்பீரமாக ஊதும்பொழுதோவெனில், கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பயணப்படக்கடவது.

௬ அவைகளை நீங்கள் இரண்டாம்முறை கெம்பீரமாக ஊதும்பொழுது, தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பயணப்படக்கடவது; அவர்களைப் பயணப்படுத்துகிறதற்குக் கெம்பீரமாய் ஊதக்கடவர்கள்.

௭ ஆனால் சபையைக் கூட்டுகிறதற்குக் கெம்பீரமில்லாத ஊதுதலாக ஊதக்கடவீர்கள்.

௮ ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள்; அவைகள் உங்கள் தலைமுறைகளில் உங்களுக்கு நித்திய கட்டளையாக இருக்கக்கடவது.

௯ நீங்கள் உங்கள் தேசத்தில் உங்களை நெருக்கப்படுத்துகிற சத்துருவுக்கு எதிராக யுத்தத்திற்குள் பிரவேசிக்கும்பொழுது, *பூரிகைகளைக் கெம்பீரமாக ஊதக்கடவீர்கள்; அப்பொழுது நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தரின் சமுகத்திலே நினைக்கப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாய் இரட்சிக்கப்படுவீர்கள். * ௪ மோ. ௩௧. ௬.

௰ உங்கள் மகிழ்ச்சியின்நாளிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாதப்பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்கதகனங்களும் சமாதான பலிகளும் செலுத்தப்படுகையில், பூரிகைகளை ஊதுவீர்களாக; அப்பொழுது அவைகள் உங்கள் பராபரன் சமுகத்திலே உங்களை நினைக்கப்பண்ணும்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்றார்.

௰௧ ¶ இரண்டாம்வருஷம் இரண்டாம்மாதம் இருபதாம்தேதியிலே மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின்மீதிலிருந்து எழும்பிற்று.

௰௨ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சீனாய்வனாந்தரத்திலிருந்து தங்கள் பயணவரிசைகளாய்ப் புறப்பட்டார்கள்; மேகம் பாரான் வனாந்தரத்திலே தங்கித்தரித்தது.

௰௩ இப்படியே கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்டபடியே முதல்பயணம் பண்ணினார்கள்.

௰௪ ¶ முதல் யூதாபுத்திரருடைய பாளயக்கொடியின்கீழிருக்கிறவர்கள் தங்கள் சேனைகளின்படியே புறப்பட்டார்கள்; அவனுடைய சேனைக்கு அமீனதாபின் குமாரன் நாகேசோன் தலைவனாய் இருந்தான்.

௰௫ இசக்கார் புத்திரருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சூவாரின் குமாரன் நெத்தானியேல் தலைவனாய் இருந்தான்.

Digitized by Google

௰௬ சேபுலோன் புத்திரருடைய கோத்தி
ரத்தின் சேனைக்கு ஏலோனின் குமாரன் எ
லியாப் தலைவனாயிருந்தான்.
௰௭ அப்பொழுது வாசஸ்தலம் இறக்கி
வைக்கப்பட்டது; அதைக் கெர்சோன் புத்
திரரும் மெராரி புத்திரரும் சுமந்துகொண்டு
புறப்பட்டார்கள்.
௰௮ ¶ பிற்பாடு ரூபன் புத்திரருடைய
பாளயக் கொடியின்கீழிருக்கிறவர்கள் தங்
கள் சேனைகளின்படியே புறப்பட்டார்கள்;
அவன் சேனைக்குச் சேதேயூரின் குமாரன்
எலீத்சூர் தலைவனாய் இருந்தான்.
௰௯ சிமெயோன் புத்திரருடைய கோத்தி
ரத்தின் சேனைக்குச் சூரிஷதாயின் குமாரன்
செலூமியேல் தலைவனாயிருந்தான்.
௨௰ காத் புத்திரருடைய கோத்திரத்தின்
சேனைக்குத் தேகுவேலின் குமாரன் எலியா
சாப் தலைவனாயிருந்தான்.
௨௧ அப்பொழுது கோகாத்தியர் பரிசுத்த
மானதைச் சுமந்துகொண்டு புறப்பட்டார்
கள்; இவர்கள் வருமட்டும் அவர்கள் வா
சஸ்தலத்தை எடுத்து நிறுத்தினார்கள்.
௨௨ பிற்பாடு எப்பிராயீம் புத்திரருடைய
பாளயக்கொடியின்கீழிருக்கிறவர்கள் தங்
கள் சேனைகளின்படியே புறப்பட்டார்கள்;
அவனுடைய சேனைக்கு அம்மியூதின் குமா
ரன் எலிஷாமா தலைவனாயிருந்தான்.
௨௩ மனாசே புத்திரருடைய கோத்திரத்தின்
சேனைக்குப் பெதாத்சூரின் குமாரன் காமா
லியேல் தலைவனாயிருந்தான்.
௨௪ பென்யமீன் புத்திரருடைய கோத்தி
ரத்தின் சேனைக்கு கீதேயோனியின் குமா
ரன் அபிதான் தலைவனாயிருந்தான்.
௨௫ ¶ பிற்பாடு தாண் புத்திரருடைய பா
ளயக்கொடியின்கீழிருக்கிறவர்கள் சகல
பாளயங்களுக்கும் கடைப்பாளயமாகத்
தங்கள் சேனைகளின்படியே புறப்பட்டார்
கள்; அவனுடைய சேனைக்கு அம்மிஷதா
யின் குமாரன் அகியேசேர் தலைவனாயிருந்
தான்.
௨௬ ஆசேர் புத்திரருடைய கோத்திரத்தின்
சேனைக்கு ஒகிரானின் குமாரன் பாகியேல்
தலைவனாயிருந்தான்.
௨௭ நவ்தலி புத்திரருடைய கோத்திரத்தின்
சேனைக்கு ஏனானின் குமாரன் அகிரா தலை
வனாயிருந்தான்.
௨௮ இந்த வரிசையாய் இஸ்ரவேல் புத்தி
ரர் தங்கள் சேனைகளின்படியே பயணம்
போனார்கள்.
௨௯ ¶ மோசே தன் மாமனாகிய ரேகுவே
லென்ற மீதியானனுடைய குமாரனை நோக்கி: உன்னோ
புடனே, உங்களுக்குக் கொடுக்கிறோமென்
று கர்த்தர் சொன்ன ஸ்தலத்திற்கு நாங்கள்
பயணம்போகிறோம்; எங்களோடேகூட
வா, உனக்கு நன்மைசெய்வோம்; ஏனெ
னில் கர்த்தர் இஸ்ரவேலுக்கு நல்ல வாக்
குத்தத்தம்பண்ணினாரென்றான்.
௩௰ ஆனால் இவன் அவனோடே நான் வரா
மல், என் தேசத்திற்கும் என் இனத்தன
டைக்கும் போவேனென்றான்.
௩௧ அப்பொழுது அவன் சொன்னதாவது:
நீ எங்களை விடாயாக; ஏனெனில் வனாந்த
ரத்திலே நாங்கள் பாளயம் இறங்கும் தா
னங்களை நீ அறிந்திருக்கிறபடியினாலே, எங்
களுக்குக் கண்களைப்போல இருப்பாய்.
௩௨ நீ எங்களோடே கூடவந்தால் அப்
பொழுது கர்த்தர் எங்களுக்குச் செய்தரு
ளும் அந்த நன்மையின்படியே உனக்கும்
நன்மைசெய்வோமென்றான்.
௩௩ ¶ அவர்கள் கர்த்தருடைய பர்வதத்
தைவிட்டு, மூன்றுநாள் பயணம்போனார்
கள்; மூன்றுநாள் பயணத்திலும் கர்த்தரு
டைய உடம்படிக்கையின்பெட்டி அவர்க
ளுக்கு இளைப்பாறும் தலத்தை விசாரித்துக்
காட்டும்படிக்கு அவர்கள்முன்பாகப் போ
யிற்று.
௩௪ அவர்கள் பாளயத்திலிருந்து பயணம்
போகிறபொழுது, கர்த்தருடைய மேகம்
பகலில் அவர்கள்மேல் இருந்தது.
௩௫ ¶ பெட்டி புறப்படும்பொழுது மோ
சே என்றவன்: கர்த்தாவே, உம்முடைய
சத்துருக்கள் சிதறடிக்கப்படவும், உம்

Digitized by Google

மைப் பகைக்கிறவர்கள் உமக்குமுன்பாக ஓடிப்போகவும் எழுந்தருளும் என்பான். * சங். ௬௮. ௨.

௩௬ அது தங்குகிறபொழுது அவன், கர்த்தாவே, அநேகம் ஆயிரங்களாகிய இஸ்ரவேலரண்டைக்குத் திரும்புமென்பான்.

௧௧. அதிகாரம்.

ஆனால் சனம் முறையிட்டுக்கொண்டிருந்தது; அது கர்த்தருடைய செவிகளிலே பொல்லாப்பாயிருந்தது; ஏனெனில் கர்த்தர் அதைக் கேட்டபொழுது, அவருடைய கோபம் மூண்டது; அப்பொழுது கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றி எரிந்து, கடைசிப் பாளயத்தில் இருந்த சிலரைப் பட்சித்தது.

௨ சனம் மோசேயைநோக்கிக் கூப்பிட்டது; மோசே கர்த்தரைநோக்கி விண்ணப்பம்பண்ணினான்; அப்பொழுது அக்கினி அவிந்துபோயிற்று.

௩ கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றி எரிந்ததினாலே அவ்விடத்திற்குத் தபேராவென்று பேரிட்டான்.

௪ ¶ அவர்களுக்குள் இருந்த *பலசாதியான சனம் மகா இச்சையுள்ளதாயிற்று; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார் என்றும், *௨ மோ. ௰௨. ௩௮. ௨ மோ. ௰௬. ௩. ௧ கொரி. ௰. ௬.

௫ நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், சிறுவெண்காயங்களையும், வெண்காயங்களையும், வெள்ளை வெண்காயங்களையும் நினைக்கிறோம்.

௬ இப்பொழுதோவெனில் நம்முடைய ஆத்துமா வாடிப்போயிற்று; இந்த மன்னாவைத்தவிர நம்முடைய கண்களுக்குமுன்பாகப் பின் ஒன்றுமில்லை என்றும் சொன்னார்கள்.

௭ மன்னாவோவென்றால் கொத்தமல்லி விதை அம்மாத்திரமும், அதின் நிறம்பெதோளாகின் நிறம்போலவும் இருந்தது.

௮ சனம் திரிந்து அதைப் பொறுக்கிக்கொண்டுவந்து, ஏந்திரங்களில் அரைத்து, அல்லது உரல்களில் இடித்து, பானைகளிலே சமைப்பார்கள்; அதை அப்பங்களும் ஆக்குவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசியாயிருந்தது.

௯ இராவில் பனி பாளயத்தின்மேல் இறங்குகையில், மன்னா அதின்மேல் இறங்கிற்று.

௰ ¶ சனம் வம்சம் வம்சமாகத் தங்கள் தங்கள் கூடாரவாசலில் அழுகிறதை மோசே கேட்டான்; கர்த்தருக்குக் கோபம் மிகவும் மூண்டது; மோசேயின் பார்வைக்கும் பொல்லாப்பாயிருந்தது.

௰௧ அப்பொழுது மோசே கர்த்தரோடே சொன்னதாவது: நீர் இந்த எல்லாச் சனத்தின் பாரத்தையும் என்மேலே சுமத்தினதினாலே, உம்முடைய அடியானுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன? உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதே போனதென்ன?

௰௨ நாம் அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திற்கு, நீ அவர்களை ஒரு தகப்பன் முலையுண்கிற பாலகனைச் சுமக்கிறது போல, உன் மடியிலே சுமந்துகொண்டு போவென்று நீர் என்னோடே சொல்லும்படிக்கு, நான் இந்தச் சனத்தையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? நான் இதைப்பெற்றேனோ?

௰௩ இந்தச் சனத்திற்கெல்லாம் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்? ஏனெனில் எங்களுக்கு இறைச்சியைச் சாப்பிடக் கொடுவென்று என்னைப் பார்த்து அழுகிறார்கள்.

௰௪ நான் ஒருவன் இந்தச் சனத்தையெல்லாம் சுமக்கக்கூடாது; ஏனென்றால் எனக்கு மிஞ்சின பாரமாயிருக்கின்றது.

௰௫ எனக்கு உம்முடைய கண்களிலே கிருபைகிடைத்ததானால், தேவரீர் இப்படி எனக்குச் செய்கிறதைப்பார்க்கிலும், என்

Digitized by Google

உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு என்
னைக் கொல்லவே கொல்லும் என்றான்.
௰௬ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோ
டே சொன்னதாவது: நீ இஸ்ரவேலின் மூப்
பரில் சனத்திற்கு மூப்பரும் தலைவருமாயி
ருக்கத்தக்கவர்கள் என்று அறிந்திருக்கிற
எழுபதுபேரை நமக்குக் கூட்டி, அவர்களை
ஆசரிப்புக்கூடாரத்தண்டையிலே அங்கே
உன்னோடேகூட நிற்கும்படிக்குச் சேர்த்
துக்கொள்.
௰௭ அப்பொழுது நாம் இறங்கி, அங்கே
உன்னோடேபேசி, நீ ஒருவன் சனத்தின் பா
ரத்தைச் சுமக்காமல், அவர்கள் உன்னோ
டேகூட அதைச் சுமப்பதற்காக உன்மே
லிருக்கிற ஆவியில் எடுத்து, அவர்கள்மே
லே வைப்போம்.
௰௮ ஆனால் சனத்தோடே நீ சொல்லவே
ண்டியதேதெனில், இறைச்சி சாப்பிட நா
ளைக்கு உங்களைப் பரிசுத்தம்பண்ணுங்கள்;
ஏனெனில், எங்களுக்கு இறைச்சி சாப்பி
டக் கொடுப்பவர் யார்? எகிப்திலே எங்க
ளுக்கு நன்றாயிருந்ததென்று கர்த்தருடைய
செவிகளின்முன்பாக அழுதீர்கள்; ஆகை
யால் கர்த்தர் உங்களுக்கு இறைச்சி சாப்
பிடக்கொடுப்பார்.
௰௯ நீங்கள் ஒருநாள் அல்ல, இரண்டு
நாளும் அல்ல, ஐந்துநாளும் அல்ல, பத்
துநாளும் அல்ல, இருபதுநாளும் அல்ல,
௨௰ ஒரு மாதம் முழுவதும் அது உங்கள்
நாசிகளிலிருந்து புறப்பட்டு, உங்களுக்குத்
தெவிட்டிப்போகும்மட்டும் சாப்பிடுவீர்
கள்; ஏனென்றால் உங்கள்நடுவே இருக்
கிற கர்த்தரை அசட்டைபண்ணி, நாங்கள்
ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோமென்று
அவருக்குமுன்பாக அழுதீர்களென்று சொ
ல்லென்றார்.
௨௧ ¶ அப்பொழுது மோசே சொன்னதா
வது: நான் இருக்கிற சனம் அறுநூறாயிரம்
காலாள்கள்; தேவரீரோவெனில் ஒரு முழு
மாதம்மட்டும் சாப்பிட அவர்களுக்கு இ
றைச்சி கொடுப்போம் என்றீர்.
௨௨ *அவர்களுக்குப் போந்தது கிடைக்க
ஆடுமாடுகள் அவர்களுக்காக அடிக்கப்ப
டுமோ? அவர்களுக்குப் போந்தது கிடைக்
கச் சமுத்திரத்து மச்சங்களெல்லாம் அவர்
களுக்காகச் சேர்க்கப்படுமோவென்றான்.
*யோவா. ௬. ௭.
௨௩ ஆனால் கர்த்தர் மோசேயுடனே, *கர்த்
தருடைய கை குறுகி இருக்கிறதோ? நம்மு
டைய வார்த்தையின்படி உனக்கு வந்து ந
டக்குமோ, நடவாதோவென்று இப்பொ
ழுது பார்ப்பாய் என்றார். *ஏசா. ௫௰. ௨:
௫௯. ௧.
௨௪ ¶ மோசே புறப்பட்டு, கர்த்தருடைய
வார்த்தைகளைச் சனத்திற்குச் சொல்லி, ச
னத்தின் மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி,
அவர்களைக் கூடாரத்தைச் சுற்றிலும் நிறுத்
தினான்.
௨௫ அப்பொழுது கர்த்தர் மேகத்தில் இ
றங்கி, அவனோடேபேசி, அவன்மேலிருந்த
ஆவியில் எடுத்து, மூப்பராகிய அந்த எழு
பதுபேர்மேலே வைத்தார்; சம்பவித்ததே
தெனில் ஆவி அவர்கள்மேலே வந்து தங்
குகையில், தீர்க்கதரிசனம் சொன்னார்கள்;
சொல்லிப் பிறகு ஓய்ந்தார்கள்.
௨௬ ஆனால் இரண்டுபேர் பாளயத்தில் இ
ருந்துவிட்டார்கள்; ஒருவன்பேர் எல்தாத்
மற்றவன்பேர் மேதாத்; அவர்கள் கூடப்
பேர்எழுதப்பட்டிருந்தும்,கூடாரத்திற்குப்
போகப் புறப்படாதிருந்தார்கள்; அவர்கள்
மேல் ஆவிவந்து தங்கினதினாலே, பாளயத்
திலே தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.
௨௭ ஒரு பிள்ளையாண்டான் ஓடிவந்து,
எல்தாதும் மேதாதும் பாளயத்திலே தீர்க்க
தரிசனம் சொல்லுகிறார்களென்று மோசேக்
கு அறிவித்தான்.
௨௮ அப்பொழுது மோசேயால் தெரிந்து
கொள்ளப்பட்டவர்களில் அவன் வேலைக்
காரனாகிய நூனின் குமாரன் யோசுவா பிர
தியுத்தாரமாக, என் ஆண்டவனாகிய மோ
சேயே, *அவர்களுக்குத் தடைபண்ணுமெ
ன்றான். *லூக். ௯. ௪௯.

Digitized by Google

௨௯ மோசேயோவென்றால், அவனுக்கு நீ எனக்காகப் பத்திவைராக்கியம் காண்பிக்கிறாயோ? ஆ, கர்த்தருடைய சனமெல்லாம் தீர்க்கதரிசனம் சொல்லத்தக்கதாய், கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல்இறங்கப்பண்ணினால் தாவிலையென்றான்.

௩௰ பிற்பாடு மோசேயும் இஸ்ரவேல் மூப்பரும் பாளயத்திலே வந்து சேர்ந்தார்கள்.

௩௧ ¶ அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து *காற்றுப் புறப்பட்டு, சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக்கொண்டுவந்து, பாளயத்தின்மேலே, பாளயத்தைச் சுற்றிலும் இந்தப்பக்கம் ஒருநாள் பயணமும் அந்தப்பக்கம் ஒருநாள் பயணமும், தரையின்மேல் இரண்டுமுழ உயர்த்தியுமாய் விழுந்துகிடக்கத் தெளித்தது. *சங். ௱௩௫. ௭.

௩௨ அப்பொழுது சனம் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும், காடைகளைச் சேர்த்தார்கள்; கொஞ்சமாய்ச் சேர்த்தவன் பதின்கலம் அம்மாத்திரம் சேர்த்தான்; அவைகளைப் பாளயத்தைச் சுற்றிலும் தங்களுக்காகப் பரப்பிப்போட்டார்கள்.

௩௩ *ஆனால் இறைச்சி இன்னம் அவர்கள் பல்லுகள் நடுவே இருக்கையில், கர்த்தருடைய கோபம் அவர்கள் அதைச் சாப்பிட்டுத் தீராததற்குமுன்னே, சனத்திற்குள்ளே மூண்டுகொள்ளுகையால், கர்த்தர் சனத்தை மகா பெரிய வாதையால் அடித்தார். *சங். ௭௮. ௩௰, ௩௧.

௩௪ இச்சையுள்ள சனத்தை அங்கே அடக்கம்பண்ணினதினாலே, அந்த ஸ்தலத்திற்கு இச்சையின் பிரேதக்குழிகளென்று பேரிட்டான்.

௩௫ ¶ சனம் இச்சையின் பிரேதக்குழிகளைவிட்டு, ஆத்சரோத்திற்குப் பயணம் வந்து ஆத்சரோத்திலே தரித்திருந்தது.

௰௨. அதிகாரம்.

மோசே கூஸ்சாதியான *பெண்சாதியை விவாகம்பண்ணினபடியினாலே, மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின கூஸ்சாதியான பெண்சாதியின் நிமித்தம் அவனுக்கு விரோதமாகப் பேசி, *௨ மோ. ௨. ௨௧.

௨ கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள்; அதைக் கர்த்தர் கேட்டார்.

௩ ஆனால் மோசேயென்கிறவன் பூமியிலிருக்கிற சகல மனிதரைப்பார்க்கிலும் மகா சாதுத்துவமுள்ளவனாயிருந்தான்.

௪ அசுப்பிலே கர்த்தர் மோசேயோடும், ஆரோனோடும், மிரியாம் என்றவளோடும், நீங்கள் மூன்றுபேரும் ஆசரிப்புக்கூடாரத்திற்குப் புறப்பட்டுப் போங்களென்றார்; மூன்றுபேரும் போனார்கள்.

௫ கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரத்தின் வாசலில் நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; அவர்கள் இருவரும் போனார்கள்.

௬ அப்பொழுது அவர் சொன்னதாவது: நம்முடைய வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே தீர்க்கதரிசி இருந்தால், கர்த்தராகிய நாம் அவனுக்குத் தரிசனையில் நம்மை வெளிப்படுத்துவோம்; சொப்பனத்தில் அவனோடே பேசுவோம்.

௭ நம்முடைய தாசனாகிய மோசே அப்படி அல்ல, *நம்முடைய வீடனைத்திலும் அவன் உண்மையுள்ளவன். *எபி. ௩. ௨.

௮ மறைபொருளாக அல்ல, *முகமுகமாகவும் திருட்டாந்தமாகவும் அவனோடே பேசுகிறோம்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்பொழுதும் நீங்கள் நம்முடைய தாசனாகிய மோசேக்கு விரோதமாகப் பேசப் பயப்படாதே போனதென்ன என்றார். *௨ மோ. ௩௩. ௰௧. ௫ மோ. ௩௪. ௰.

௯ கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது; அவர் போய்விட்டார்.

௰ மேகம் கூடாரத்தைவிட்டு அகன்றுபோயிற்று; இதோ மிரியாம் உறைந்த மழை

Digitized by Google

யின் வெண்மையாய்க் குஷ்டம் பிடித்திருந்தாள்; ஆரோன் மிரியாமைப் பார்த்தான்; இதோ அவள் குஷ்டம்பிடித்தவள்.

௰௧ அப்பொழுது ஆரோன் மோசேயோடே சொன்னதாவது: ஆ, என் ஆண்டவனே, நாங்கள் பயித்தியம் கொண்டு செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேலே சுமத்தாதிரும்.

௰௨ தன் தாயின் கர்ப்பத்திலிருந்து புறப்படுகையில், பாதி மாம்சம் அழுகி இருக்கிற சாவு பிள்ளையைப்போல, அவள் இராதிருப்பாளாக என்றான்.

௰௩ அப்பொழுது மோசே, ஆ, பராபரனே, அவளைக் குணமாக்குமென்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.

௰௪ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித்துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்படவேண்டாமோ? அவள் *ஏழுநாள் பாளயத்திற்குப் புறம்பே அடைக்கப்பட்டிருந்து, பிற்பாடு சேர்க்கப்படக்கடவளென்றார். *௩ மோ. ௰. ௩.

௰௫ அப்படியே மிரியாம் ஏழுநாள் பாளயத்திற்குப் புறம்பே அடைக்கப்பட்டிருந்தாள்; மிரியாம் சேர்க்கப்படும்மட்டும் சனம் பயணம்போகாதிருந்தது.

௰௬ பிற்பாடு சனம் ஆத்சரோத்திலிருந்து புறப்பட்டு, பாரான்வனாந்தரத்திலே பாளயம் இறங்கிற்று.

௰௩. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நாம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான்தேசத்தைச் சோதித்துப் பார்க்கிறதற்கு மனிதரை அனுப்பு; அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு கோத்திரத்திலே ஒவ்வொரு பிரபுக்களாகிய மனிதரையே அனுப்பக்கடவீர்களென்றார்.

௩ அப்படியே மோசே கர்த்தருடைய வாக்கின்படியே அவர்களைப் பாரான்வனாந்தரத்திலிருந்து அனுப்பினான்; அந்த மனிதர் எல்லாரும் இஸ்ரவேல் புத்திரரில் தலைவரானவர்கள்.

௪ அவர்கள் நாமங்களாவன: ரூபன் கோத்திரத்திலே சக்கூரின் குமாரன் சம்முவா.

௫ சிமெயோன் கோத்திரத்திலே ஓரியின் குமாரன் சாப்பாத்.

௬ யூதா கோத்திரத்திலே எப்புன்னேயின் குமாரன் காலேப்.

௭ இசஷார் கோத்திரத்திலே யோசேப்பின் குமாரன் இகேயால்.

௮ எப்பிராயீம் கோத்திரத்திலே நூனின் குமாரன் ஓசேயா.

௯ பென்யமீன் கோத்திரத்திலே ரப்பூவின் குமாரன் பல்த்தி.

௰ செபுலோன் கோத்திரத்திலே சோதியின் குமாரன் காதியேல்.

௰௧ யோசேப்பின் கோத்திரத்திற்கடுத்த மனாசே கோத்திரத்திலே சூசின் குமாரன் காதி.

௰௨ தாண் கோத்திரத்திலே கெமல்லியின் குமாரன் அம்மியேல்.

௰௩ ஆசேர் கோத்திரத்திலே மிகவேலின் குமாரன் சேத்தூர்.

௰௪ நவதலி கோத்திரத்திலே ஒப்பேசியின் குமாரன் நாகெபி.

௰௫ காத் கோத்திரத்திலே மாகியின் குமாரன் கூவேல்.

௰௬ இவைகள் தேசத்தைச் சோதித்துப் பார்க்க, மோசே அனுப்பின மனிதரின் நாமங்கள்; நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கோவென்றால், மோசே யோசுவாவென்று பேரிட்டான்.

௰௭ ¶ அவர்களை மோசே கானான்தேசத்தைச் சோதித்தறிய அனுப்பி, அவர்களோடே சொன்னதாவது: நீங்கள் இப்படித் தெற்காகப்போய், மலைத்தேசத்தில் ஏறி,

௰௮ தேசம் எப்படிக்கொத்தது? அதிலே குடியிருக்கிற சனம் பலத்ததோ? பலமற்றதோ? கொஞ்சமோ? அநேகமோ?

Digitized by Google

௰௯ அது குடியிருக்கிற தேசம் எப்படி இருக்கும்? அது நல்லதோ? ஆகாததோ? அது குடியிருக்கிற ஊர்கள் எப்படியிருக்கும்? அவைகள் பாளயங்களோ? கோட்டைகளோ?

௨௰ நிலம் என்னவாயிருக்கும்? அது புஷ்டியோ, இளப்பமோ? அதில் விருட்சங்கள் உண்டோ, இல்லையோ? என்று பார்த்து, மனத்திடனாயிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றை அறுத்துக்கொண்டு வாருங்களென்றான்; அந்நாள்களோவென்றால், திராட்சங்களுடைய முதல் கனிகளின் நாள்களாயிருந்தன.

௨௧ அவர்கள் போயேறி, சீன்வனாந்தரம் துவக்கி, ஆமாத்திற்குப்போகிற வழியாகிய ரேகொப்மட்டும், தேசத்தைச் சோதித்துப் பார்த்து,

௨௨ தெற்கேயும் போய், எபிரோன்மட்டும் வந்தார்கள், அங்கே ஏனாக்கின் குமாரராகிய அகிமானும் சேசாயும் தல்மாயும் இருந்தார்கள்; எபிரோனோவெனில், எகிப்தின் பட்டணமாகிய சோவான் கட்டப்பட்ட ஏழு வருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது.

௨௩ ¶ பிற்பாடு எஸ்கோல் பள்ளத்தாக்குமட்டும் வந்து, அங்கே ஒரே திராட்சக்குலையுள்ள ஒரு கொடியை அறுத்தார்கள்; அதை இரண்டுபேர் ஒரு தடியிலே தூக்கிக்கொண்டு போனார்கள்; மாதளம்பழங்களிலும் அத்திப்பழங்களிலும் சிலவற்றை அறுத்துக்கொண்டு போனார்கள்.

௨௪ இஸ்ரவேல் புத்திரர் அங்கே அறுத்த திராட்சக்குலையைத்தொட்டு, அவ்விடம் எஸ்கோல்பள்ளத்தாக்கு என்னப்பட்டது.

௨௫ அவர்கள் தேசத்தைச் சோதித்துப் பார்த்து, நாற்பதாம்நாள் முடிவிலே திரும்பி,

௨௬ ¶ பாரான்வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்குவந்து, மோசே ஆரோன் இஸ்ரவேல் புத்திரரின் எல்லாச் சபையினண்டையிலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபை அனைத்திற்கும் மறு செய்தியை அறிவித்து, அவர்களுக்குத் தேசத்தின் கனிகளைக் காண்பித்து,

௨௭ அவனுக்கு விவரித்துச் சொன்னதாவது: நீர் எங்களை அனுப்பின தேசத்திற்கு நாங்கள் போய்வந்தோம்; *அது பாலும் தேனும் ஓடுகிற தேசம்தான்; இது அதினுடைய கனி. * ௨ மோ. ௩. ௮.

௨௮ ஆனால் தேசத்திலே குடியிருக்கிற சனம் பலத்ததும், பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாயிருக்கின்றன; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம்.

௨௯ ஆமலேக்கியர் தென்புறமான தேசத்திலே குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும் எபூசியரும் எமோரியரும் மலைச்சீமையிலே குடியிருக்கிறார்கள்; கானானியரோவென்றால் கடலண்டையிலும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் என்றார்கள்.

௩௰ அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாகச் சனத்தை அமர்த்தி, ஏறவே ஏறிப்போய், அதைச் சுதந்தரிக்கக்கடவோம்; ஏனெனில் அதை நாம் கட்டிக்கொண்டு செயிக்கவே செயிப்போமென்றான்.

௩௧ அவனோடேகூட ஏறிப்போய் வந்த மனிதரோவென்றால், நாம் அந்தச் சனத்திற்கு எதிராக ஏறிப்போகக்கூடாது; ஏனெனில் அது நம்மைப்பார்க்கிலும் பலத்திருக்கின்றதென்று சொல்லி,

௩௨ தாங்கள் சோதித்துப்பார்த்த தேசத்திற்கு இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே அபகீர்த்தியைப் பிறக்கப்பண்ணி, நாங்கள் சோதித்தறியும்படிக்கு, கடந்துவந்த அந்தத் தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசமானது; நாங்கள் அதிலே கண்ட சனமெல்லாம் உயர்ந்த மனிதர்.

௩௩ அங்கே இராட்சதர் சந்ததியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்குக் கிளிகளைப்போல இருந்தோம்; அப்படியே அவர்கள் பார்வைக்கும் இருந்தோம் என்றார்கள்.

Digitized by Google

௰௪. அதிகாரம்.

அப்பொழுது சபையெல்லாம் எழும்பிக்
கூப்பிட்டு, சனம் அன்று இராத்திரி அழுது
கொண்டிருந்தது.
௨ இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோ
சேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறு
முறுத்தார்கள்; சபையெல்லாம் அவர்க
ளோடே சொன்னதாவது: எகிப்துதேசத்
திலே செத்துப்போனோமானால் நாவிலை;
அல்லது இந்த வனாந்தரத்திலே நாங்கள்
செத்தால் நாவிலை.
௩ நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்
கும், எங்கள் பெண்சாதிகளும் குழந்தை
களும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர்
எங்களை அந்தத் தேசத்திற்குக் கொண்டு
போகிறதென்ன? எகிப்திற்குத் திரும்புகி
றது எங்களுக்கு வாசி அல்லவோ என்று,
௪ ஒருவரோடொருவர், ஒரு தலைவனை
வைத்து, எகிப்திற்குத் திரும்புவோம் வா
ருங்களென்று சொல்லிக்கொண்டார்கள்.
௫ ¶ அப்பொழுது மோசேயும் ஆரோனும்
இஸ்ரவேல் புத்திரருடைய சபைக்கூட்டம்
எல்லாவற்றிற்குமுன்பாகவும் முகங்குப்பு
றவிழுந்தார்கள்.
௬ தேசத்தைச் சோதித்துப்பார்த்தவர்க
ளில் நூனின் குமாரனாகிய யோசுவாவும்,
எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும்,
தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,
௭ இஸ்ரவேல் புத்திரரின் சபையோடெல்
லாம் சொன்னதாவது: நாங்கள் சோதித்
துப்பார்க்கக் கடந்துவந்ததேசம் மகா நல்
லதேசம்.
௮ கர்த்தர் நம்மேலே பிரியமாயிருந்தால்,
அவர் நம்மைப் பாலும் தேனும் ஓடும் தே
சமாகிய அந்தத் தேசத்திலே கொண்டு
போய் அதை நமக்குக் கொடுப்பார்.
௯ கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கல
கம்பண்ணீர்களாக; *நீங்கள் அந்தத் தே
சத்தின் சனத்திற்கும் பயப்படீர்களாக;
ஏனெனில் நமக்கு அவர்கள் அப்பத்திற்குச்
சரி; அவர்களுடைய நிழல் அவர்கள்மே
லிருந்து விலகிற்று; நம்மோடேகூடவென்றால்
கர்த்தர் இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்
படீர்களாக என்றார்கள். *௫ மோ. ௨௰. ௩.
௰ ¶ அப்பொழுது சபையெல்லாம் அவர்க
ளைக் கல்லெறியவேண்டுமென்றது; ஆனால்
*கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடா
ரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும்
முன்பாகக் காணப்பட்டது. *௨ மோ. ௰௬. ௰.
௰௧ ¶ கர்த்தர் மோசேயோடே சொன்னதா
வது: எந்தமட்டும் இந்தச்சனம் நமக்குக்
கோபம் உண்டாக்கும்? எந்தமட்டும் அது
நாம் அதன் நடுவிலே செய்த சகல அடை
யாளங்களைக் கண்டும், நம்மை விசுவாசி
யாதேபோம்?
௰௨ நாம் அதைப் பெருவாரிக்காய்ச்ச
லால் அடித்து, சுதந்தரத்திற்குப் புறம்பாக்
கிப்போட்டு, *உன்னை அதைப்பார்க்கிலும்
பருத்ததும் பலத்ததுமான சாதி ஆக்கு
வோமென்றார். *௨ மோ. ௩௨. ௰.
௰௩ மோசே கர்த்தரோடே சொன்னதாவ
து: *அப்பொழுது எகிப்தர் அதைக் கேட்
பார்கள்; ஏனெனில் உம்முடைய வல்ல
மையினாலே இந்தச் சனத்தை அவர்கள்
நடுவிலிருந்து ஏறிவரப்பண்ணினீர்.
*௨ மோ. ௩௨. ௰.
௰௪ ஆகையால் கர்த்தராகிய தேவரீர் இந்
தச் சனத்தின் நடுவே இருக்கிறதையும்,
கர்த்தராகிய தேவரீர் முகமுகமாய்த் தரிச
னை ஆகிறதையும், உம்முடைய மேகம் இ
வர்கள்மேல் நிற்கிறதையும், தேவரீர் பக
லில் மேகத்தூணிலும் இரவில் அக்கினித்
தூணிலும் இவர்கள்முன் நடக்கிறதையும்,
கேட்டிருக்கிற இந்தத் தேசத்தின் குடிக
ளோடே அவர்கள் என்ன சொல்லுவார்கள்.
௰௫ ¶ இந்தச் சனத்தை ஒரே மனிதனைப்
போலக் கொன்றீரானால், அப்பொழுது
உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கிற
புறச்சாதியார்,
௰௬ கர்த்தர் அந்தச் சனத்திற்கு ஆணையிட்
டிருந்த தேசத்திலே அதைக் கொண்டு

Digitized by Google

போய் விடக்கூடாதே போனபடியினாலே, அவர்களை வனாந்தரத்திலே கொலைசெய்தார் என்பார்கள்.

௰௭ இப்பொழுதும் *கர்த்தர் நீடியசாந்தமும் மகா கிருபையுமுள்ளவரென்றும், அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர், அவர் குற்றமுள்ளவனைக் குற்றம்அற்று நீங்கலாக்காமல், பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலே மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறாரென்றும், நீர் சொன்னபடியே,
*௨ மோ. ௩௪. ௬, ௭.

௰௮ ஆண்டவருடைய பலம் பெரிதாய் இருக்கட்டுமே.

௰௯ உம்முடைய கிருபையினுடைய மகத்துவத்தின்படியேயும், நீர் எகிப்துதுவக்கி இவ்விடம்மட்டு இந்தச் சனத்திற்கு மன்னித்துவந்தபடியேயும், இந்தச் சனத்தின் அக்கிரமத்தை மன்னியுமே என்றான்.

௨௰ ¶ அப்பொழுது கர்த்தர் சொன்னதாவது: உன் வார்த்தையின்படியே மன்னித்தோம்.

௨௧ ஆனால் பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினாலே நிறையப்படுமென்று நம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறோம்.

௨௨ அதேதெனில் நமது மகிமையையும் நாம் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த நம்முடைய அடையாளங்களையும் கண்டிருந்தும், நம்முடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல், இதனோடே பத்துமுறை நம்மைப் பரிட்சைபார்த்த மனிதரில் ஒருவரும்,

௨௩ *நாம் தங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தைக் காண்பதில்லை; நமக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காண்பதில்லை. *௪ மோ. ௨௬. ௬௫. சங். ௯௫. ௰௧.

௨௪ நம்முடைய தாசனாகிய காலேபிடத்திலோவென்றால், வேறே ஆவி இருக்கிறபடியினாலும், அவன் நம்மை உத்தமமாய்ப் பின்பற்றிவந்தபடியினாலும், நாம் அவனை அவன் போய்வந்த தேசத்திலே வந்து சேரப்பண்ணுவோம்; அவன் வித்தார் அதைச் சுதந்தரித்துக்கொண்டிருப்பார்கள்.

௨௫ ஆமலேக்கியரும் கானானியரும் பள்ளத்தாக்கிலே குடியிருக்கிறபடியினாலே, நீங்கள் நாளைத் திரும்பிக்கொண்டு, நாணல் கடலுக்குப் போகிறவழியாகிய வனாந்தரத்திற்குப் பயணம்பண்ணுங்களென்றார்.

௨௬ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨௭ நமக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையோடே எந்தமட்டும் இருப்போம்? இஸ்ரவேல் புத்திரர் நமக்கு விரோதமாய் முறுமுறுக்கிற முறுமுறுப்புகளைக் கேட்டோம்.

௨௮ நீ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் நம்முடைய செவிகள் கேட்கச் சொன்னபிரகாரமாக உங்களுக்குச் செய்வோம் என்கிறதை நம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறோமென்று கர்த்தர் உரைக்கிறார்.

௨௯ இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபதுவயது முதல்கொண்டு மேல்த்தரமாயிருந்து, உங்களுடைய எல்லாத் தொகைக்குள்ளும் எண்ணப்பட்டு, நமக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிற அனைவரின் பிரேதங்களும் தானே.

௩௰ எப்புன்னேயின் குமாரன் காலேபையும் நூனின் குமாரன் யோசுவாவையும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நாம் உங்களைக் குடியேற்றுவோமென்று நம்முடைய கரத்தை ஏறெடுத்த தேசத்திலே வராதிருப்பீர்கள்.

௩௧ கொள்ளையாவார்களென்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோவென்றால், நாம் அதிலே வரப்பண்ணுவோம்; அவர்கள் நீங்கள் அசட்டைபண்ணின தேசத்தை அறிந்துகொள்ளுவார்கள்.

Digitized by Google

௩௨ உங்கள் பிரேதங்களோவெனில், இந்த வனாந்தரத்திலே விழும்.

௩௩ அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீருமட்டும், உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே மேய்ப்பராயிருந்து, நீங்கள் சோரம்போனதைச் சுமப்பார்கள்.

௩௪ நீங்கள் தேசத்தைச் சோதித்துப்பார்த்த நாற்பதுநாளுடைய இலக்கத்தின்படியே நீங்கள் நாற்பதுவருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, நம்முடைய உடம்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்; ஒவ்வொருநாள் ஒவ்வொரு வருஷமாகத்தானே.

௩௫ கர்த்தராகிய நாம் இதைச் சொன்னோம்; நமக்கு விரோதமாய்க் கூட்டங்கூடின இந்தப் பொல்லாத சபைக்கெல்லாம் இப்படியே செய்வோம்; இந்த வனாந்தரத்திலே சரியாவார்கள்; இங்கே சாவார்களென்று சொல்லென்றார்.

௩௬ தேசத்தைச் சோதித்துப்பார்க்க மோசேயால் அனுப்பப்பட்டு, திரும்பி வந்து, தேசத்திற்குத் தூர்க்கீர்த்தியை உண்டாக்கி,

௩௭ சபையையெல்லாம் அவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கப்பண்ணின அந்த மனிதர் கர்த்தருக்குமுன்பாக வாதையினாலே செத்தார்கள்.

௩௮ தேசத்தைச் சோதித்துப்பார்க்கப் போன அந்த மனிதரில் நூனின் குமாரன் யோசுவாவும் எப்புன்னேயின் குமாரன் காலேபுமோவெனில், உயிரோடிருந்தார்கள்.

௩௯ ¶ மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபிற்பாடு சனம் மிகவும் துக்கித்து,

௪௰ அதிகாலமே எழுந்திருந்து, இதோ நாங்கள் கர்த்தர் சொன்ன இடத்திற்கு ஏறிப்போவோம்; ஏனென்றால் பாவம் செய்தோமென்று சொல்லி, பர்வதத்தின் கொடுமுடியில் ஏறினார்கள்.

௪௧ மோசேயோவெனில் சொன்னதாவது: நீங்கள் இப்படிக் கர்த்தருடைய வார்த்தையை மீறுவானேன்? அது உங்களுக்கு வாய்க்காது.

௪௨ நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறாதிருப்பீர்களாக; ஏனெனில் கர்த்தர் உங்கள் நடுவில் இரார்.

௪௩ ஏனென்றால் ஆமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்கு முன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள், ஏனெனில் நீங்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கினபடியினாலே, கர்த்தர் உங்களோடிருப்பதில்லை என்றான்.

௪௪ அவர்களோவென்றால் பர்வதத்தின் கொடுமுடியில் ஏறத் துணிவாய் ஏறினார்கள்; ஆனால் கர்த்தருடைய உடம்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளயத்தைவிட்டு அசைந்ததில்லை.

௪௫ ¶ அப்பொழுது அந்த மலைத்தேசத்திலே குடியிருக்கிற ஆமலேக்கியரும் கானானியரும் இறங்கிவந்து, அவர்களை முறியடித்து, அவர்களை ஓர்மாமட்டும் துரத்திநறுக்கினார்கள்.

௰௫. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்களுக்குக் கொடுக்கும் உங்கள் குடியிருப்பாகிற தேசத்திலே நீங்கள் வந்து,

௩ விசேஷித்த பொருத்தனைக்காகிலும், உச்சாய மனதினாலாகிலும், உங்கள் பண்டிகைகளிலே செலுத்துவதற்காகிலும், கர்த்தருக்கு மாடுகளிலாவது ஆடுகளிலாவது சர்வாங்கதகனபலியை, அல்லவென்று வேறொரு பலியைக் கர்த்தருக்கு ஆற்றிய வாசனையாகும் தகனமாகப் பலியிடும்பொழுது,

௪ தன் காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துகிறவன், சர்வதகனமும் அல்லது

வேறே பலியுமாகிய ஒரு ஆட்டுக்குட்டிக்
காக, மரக்காலிலே பத்தில் ஒருபங்கான
தும் கால்படி எண்ணெயில் பிசைந்தது
மான மெல்லியமாவின் காணிக்கையைச்
செலுத்தக்கடவன்.
௫ ஊற்றுதலாகக் கால்படி திராட்சப்பழ
இரசத்தையும் படைப்பாயாக.
௬ ஆட்டுக்கடாவாயிருந்ததேயானால், நீ பத்
தில் இரண்டுபங்கானதும் படியில் மூன்
றத்தொருபங்காகிய எண்ணெயிலே பிசை
ந்ததுமான மெல்லியமாவின் காணிக்கை
யையும்,
௭ ஊற்றுதலாகப் படியில் மூன்றத்தொ
ருபங்காகிய திராட்சப்பழ இரசத்தையும்
கர்த்தருக்கு ஆற்றிய வாசனையாகச் செலு
த்துவாயாக.
௮ நீ விசேஷித்த பொருத்தனைக்காகிலும்,
சமாதானபலிக்காகிலும், ஒரு காளை எரு
தைக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனமாக,
அல்லது வேறே பலியாகச் செலுத்தினாயே
யானால்,
௯ நீ அதனோடே பத்தில் மூன்றுபங்கா
னதும் அரைப்படி எண்ணெயிலே பிசைந்
ததுமான மெல்லியமாவின் காணிக்கை
யையும்,
௰ ஊற்றுதலாக அரைப்படி திராட்சப்பழ
இரசத்தையும், கர்த்தருக்காற்றிய வாசனை
யாகும் தகனமாகப் படைக்கக்கடவாய்.
௰௧ இந்தத் திட்டமாக ஒவ்வொரு மாட்
டிற்காகவும், அல்லது ஆட்டுக்கடாவுக்கா
கவும், அல்லது ஆட்டுக்குட்டி வெள்ளாட்
டுக்குட்டிக்காகவும் படைப்பாயாக.
௰௨ இப்படி நீங்கள் பலியிடுகிறவைகளின்
இலக்கத்திற்குத் தக்கதாய் ஒவ்வொன்றிற்
காகச் செய்யக்கடவீர்கள்.
௰௩ தேசத்திலே பிறந்தவனெல்லாம் கர்த்
தருக்காற்றிய வாசனையாகும் தகனத்தைச்
செலுத்துகையில் இப்படிச் செய்யவேண்
டும்.
௰௪ ¶ ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி
அல்லது உங்கள் நடுவே உங்கள் தலைமு
றைகளுக்குள்ளே குடியிருந்து, கர்த்தருக்
காற்றிய வாசனையாகும் தகனத்தைச் செ
லுத்தப்போனால், நீங்கள் செய்கிறபடியே
அவனும் செய்யவேண்டும்.
௰௫ *சபையாகிய உங்களுக்கும் உங்களில்
தங்குகிற பரதேசிக்கும் ஒரே பிரமாணம்
இருக்கவேண்டுமென்பது உங்கள் தலைமு
றைகளில் நித்தியகட்டளையாயிருக்கக்கடவ
து; கர்த்தருக்குமுன்பாகப் பரதேசி உங்
களைப்போல இருக்கவேண்டும். *௨ மோ.
௰௨. ௪௯.
௰௬ உங்களுக்கும் உங்களிடத்தில் தங்
குகிற பரதேசிக்கும் ஒரே பிரமாணமும்
ஒரே நியாயமும் இருக்கக்கடவதென்று
சொல்லென்றார்,
௰௭ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோ
டே பேசிச் சொன்னதாவது:
௰௮ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச்
சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்
களை அழைத்துப்போகிற தேசத்திலே நீங்
கள் வந்து.
௰௯ தேசத்தின் அப்பத்திலே புசிக்கை
யில், கர்த்தருக்கு ஏறெடுக்கும் காணிக்
கையைப் படைக்கக்கடவீர்கள்.
௨௰ உங்கள் பிசைந்தமாவிலே முதல்
பலனாகிய ஒரு அதிரசத்தை ஏறெடுத்துப்
படைப்பீர்களாக; போரடிக்கிற களத்தி
லே படைப்பை ஏறெடுக்கிறதுபோல அ
தை ஏறெடுப்பீர்களாக.
௨௧ இப்படி உங்கள் தலைமுறைகளிலே
கர்த்தருக்கு உங்கள் பிசைந்தமாவின் மு
தல்பலனிலே படைப்பை ஏறெடுத்துக்
கொடுக்கக்கடவீர்கள்.
௨௨ ¶ கர்த்தர் மோசேயோடே சொன்ன
இந்த எல்லாக் கற்பனைகளின்படியேயும்,
௨௩ கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்
பனைதந்த நாள்முதல்கொண்டு அவர் உங்
களுக்கும் உங்கள் தலைமுறைகளுக்கும் கற்
பித்த எல்லாவற்றின்படியேயும் நீங்கள்
செய்யாமல், ஒரு தப்பிதம் பண்ணினீர்
களானால்,

Digitized by Google

௨௪ அப்பொழுது சபையின் கண்களுக்கு மறைவாக யாதொன்றைத் தப்பிதமாகச் செய்யப்பட்டதுண்டாகில், சபையெல்லாம் கர்த்தருக்கு ஆற்றிய வாசனைக்கென்று சர்வாங்கதகனமாக மாடுகளில் ஒரு காளை எருதையும், முறைமை நியாயத்தின்படி இருக்கிற அதின் காணிக்கையையும், அதின் பானத்தையும், பாவம்போக்கும் பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்துவதாக.

௨௫ அதினால் ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்திற்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது அவர்களுக்கு மன்னிக்கப்படும்; ஏனெனில் அது ஒரு தப்பிதமாயிருந்தது; அவர்கள் அதின்நிமித்தம் கர்த்தருக்குத் தகனமான தங்கள் படைப்பையும் பாவம்போக்கும் தங்கள் பலியையும் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்தார்களே.

௨௬ ஆகையால் அது இஸ்ரவேலின் புத்திரரின் சபையனைத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற பரதேசிக்கும் மன்னிக்கப்படும்; ஏனெனில் சனத்திற்கெல்லாம் அது தப்பிதத்தினாலே வந்தது.

௨௭ ¶ ஒரே ஆத்துமா தப்பிதத்தினாலே பாவம் செய்தானேயாகில், ஒருவயதான வெள்ளாட்டைப் பாவம்போக்கும்பலியாகச் செலுத்துவானாக.

௨௮ அப்பொழுது கர்த்தருக்குமுன்பாக அவன் பாவத்தை நீக்கும்படிக்கு, ஆசாரியன் தப்பிதத்தினாலே பாவம்செய்த அந்த ஆத்துமாவுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௨௯ தப்பிதம் செய்தவனுக்காக இஸ்ரவேல் புத்திரராகிய உங்களில் பிறந்தவனுக்கும் உங்களுக்குள்ளே தங்குகிற பரதேசிக்கும் ஏக நியாயப்பிரமாணம் இருப்பதாக.

௩௰ ¶ ஆனால் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் பரதேசிகளிலாகிலும் சரி, எந்த ஆத்துமா ஓங்கின கையால் யாதொன்று செய்தானோ, அவன் கர்த்தரைத் தூஷணித்தான்; அந்த ஆத்துமா தன் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகவேண்டும்.

௩௧ ஏனெனில் கர்த்தரின் வார்த்தையை அசட்டைபண்ணி, அவர் கற்பனையை முறித்துவிட்டான்; அப்படிப்பட்ட ஆத்துமா அறுப்புண்ணவே அறுப்புண்டு போகவேண்டும்; அவன் அக்கிரமம் அவன்மேல் இருக்குமென்று சொல்லென்றார்.

௩௨ ¶ இஸ்ரவேலின் புத்திரர் வனாந்தரத்தில் இருக்கையில், ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்குகிற ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார்கள்.

௩௩ அவனை விறகுகளைப் பொறுக்குகிறவனாகக் கண்டுபிடித்தவர்கள், அவனை மோசே ஆரோன் என்றவர்களண்டைக்கும் சபையனைத்தண்டைக்கும் கொண்டுவந்தார்கள்.

௩௪ *அவனுக்குச் செய்யவேண்டியது இன்னதென்று தீர்க்கமான உத்தரவு இல்லாதபடியினாலே, அவனைக் காவலிலே வைத்தார்கள். *௩ மோ. ௨௪. ௰௨.

௩௫ கர்த்தர் மோசேயுடனே, அந்த மனிதன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; சபையெல்லாம் அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கல்லெறிவதாக என்றார்.

௩௬ அப்பொழுது சபையெல்லாம் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவனைப் பாளயத்திற்குப்புறம்பே கொண்டுபோய், கல்எறிந்தார்கள்; அவன் செத்தான்.

௩௭ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

௩௮ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் தங்கள் தலைமுறைகளிலே தங்களுக்குத் *தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கலை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீலமான கயிற்றைப் போடவேண்டும் என்று அவர்களோடே சொல். *௫ மோ. ௨௨. ௰௨. மத். ௨௩. ௫.

௩௯ நீங்கள் பின்பற்றிச் சோரம்போகிற உங்கள் இருதயமும் உங்கள் கண்களும்

Digitized by Google

போகும்போக்கை நோக்கிப்போகாமல், அந்தக் கயிற்றைப்பார்த்து, கர்த்தரின் கற்பனைகளை எல்லாம் நினைத்து, அவைகளின் படியே செய்யும்படிக்கு, அது அந்தத் தொங்கலில் உங்களுக்கு இருக்கவேண்டும்.

௪௰ நீங்கள் நம்முடைய கற்பனைகளையெல்லாம் நினைத்து, அவைகளின்படியே செய்து, உங்கள் பராபரனுக்குப் பரிசுத்தராயிருக்கிறதற்காகத்தானே.

௪௧ நாம் உங்களுக்குப் பராபரனாயிருக்கும்படிக்கு, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பராபரனாகிய கர்த்தர்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார்.

௰௬. அதிகாரம்.

இலேவிக்குப் பிறந்த கோகாத்திற்குக் குமாரனான இத்செயாரின் மகன் *கோறாகோவென்றால், எலியாபின் குமாரராகிய தாத்தானையும், அபீராமையும், ரூபன் புத்திரரில் பேலேத்தின், குமாரனாகிய, ஓனையும் கூட்டிக்கொண்டு, *௪ மோ. ௨௬. ௯. யூதா. ௰௧.

௨ இஸ்ரவேல் புத்திரரில் சபைக்குத் தலைவரும் சபையிலே அழைக்கப்பட்டவர்களும் பேர்பெற்ற மனிதருமாகிய இருநூற்றைம்பதுபேரோடும்கூட மோசேக்கு முன்பாக எழும்பி,

௩ மோசேக்கும் ஆறோனுக்கும் விரோதமாகக் கூட்டம்கூடி, அவர்களுடனே, நீங்கள் மிஞ்சிச் செய்கிறீர்கள்; ஏனென்றால் சபையார் எல்லாரும் ஏகமாய்ப் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே, பின்னை ஏன் உங்களைக் கர்த்தருடைய சபையின்மேல் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்.

௪ ¶ மோசே இதைக் கேட்டபொழுது, *முகங்குப்புறவிழுந்தான். *௪ மோ. ௰௪. ௫.

௫ பிற்பாடு அவன் கோறாகோடும் அவனுடைய எல்லாக் கூட்டத்தோடும் பேசிச் சொன்னதாவது: நாளைக்குக் கர்த்தர் தம்முடையவன் யாரென்றும், தம்மண்டையிலே சேரத் தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் யாரென்றும், அறியப்பண்ணுவார்; அப்பொழுது எவனைத் தெரிந்துகொள்ளுவாரோ, அவனைத் தம்மண்டையில் சேரக் கட்டளையிடுவார்.

௬ ஒன்று செய்யுங்கள்; கோறாகே, அவனுடைய எல்லாக் கூட்டமுமானவர்களே, நீங்கள் தூபகலசங்களை எடுத்துக்கொண்டு,

௭ நாளைக்கு அவைகளில் அக்கினிபோட்டு, அவைகளில் கர்த்தருக்குமுன்பாகத் தூபவர்க்கம் போடுங்கள்; அப்பொழுது கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்ளுவாரோ, அவன் பரிசுத்தவானாயிருப்பான்; இலேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள் என்றான்.

௮ பின்னையும் மோசே கோறாகோடே சொன்னதாவது: இலேவியின் புத்திரரே, கேளுங்கள்.

௯ கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைவேலையைச் செய்யவும், சபையாரின் முன்னே அவர்களுக்காகச் சேவிக்கவும், உங்களைத் தம்மண்டையிலே சேரப்பண்ணும்படிக்கு, இஸ்ரவேலின் பராபரன் இஸ்ரவேல் சபையில் உங்களைப் பிரித்து எடுத்ததும்,

௰ இப்படியே அவர் உன்னையும் உன்னோடேகூட இலேவியின் புத்திரராகிய உன்னுடைய எல்லாச் சகோதரரையும் சேரப்பண்ணினதும், உங்களுக்குக் கொஞ்சமான காரியமோ? இப்பொழுது ஆசாரியபட்டத்தையும் தேடுகிறீர்களோ?

௰௧ *ஆகையால் நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகக் கூட்டம்கூடினீர்கள்; ஆறோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரமென்றான். *௨ மோ. ௰௬. ௭.

௰௨ ¶ பிற்பாடு மோசே எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபீராமையும் அழைத்தனுப்பினான்; ஆனால் அவர்கள் சொன்னதாவது: நாங்கள் வருகிறதில்லை.

Digitized by Google

௰௩ நீ எங்களை இந்த வனாந்தரத்திலே கொன்றுபோட, எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணினது கொஞ்சமானகாரியமென்று சொல்லி, எங்கள்மேலே துரைத்தனமும்பண்ணவே பண்ணுவாயோ?

௰௪ நீ எப்படி எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற ஒரு தேசத்திற்குக் கொண்டுவந்து, எங்களுக்கு நிலங்களையும் திராட்சத்தோட்டங்களையும் சுதந்தரமாகக் கொடுத்தாய்? இந்த மனிதருடைய கண்களைப் பிடுங்குவாயோ? நாங்கள் வருகிறதில்லை என்றார்கள்.

௰௫ அப்பொழுது மோசே மிகுதியும் கோபம் மூண்டவனாகி, கர்த்தருடனே, அவர்கள் காணிக்கையைப் பாராதிருப்பீராக; நான் அவர்களுடையதில் ஒரு கழுதையையாகிலும் எடுத்துக்கொண்டதும் இல்லை; அவர்களில் ஒருவனுக்குப் பொல்லாப்புச் செய்ததும் இல்லை என்றான்.

௰௬ பிற்பாடு மோசே கோராகோடே சொன்னதாவது: நீயும் உன்னுடைய எல்லாக் கூட்டத்தாருமாய் நாளைக்குக் கர்த்தருக்கு முன்பாக வந்திருங்கள்; நீயும் அவர்களும் ஆரோனுமாய்த்தானே.

௰௭ நீங்கள் அவரவர் தங்கள் தூபகலசத்தை எடுத்து, அவைகள்மேலே தூபவர்க்கத்தைப்போட்டு, அவரவர் தங்கள் தூபகலசங்களை இருநூற்று ஐம்பது தூபகலசங்களாகக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவாருங்கள்; நீயும் ஆரோனும் ஒவ்வொருவன் தன்தன் தூபகலசத்தைக் கொண்டுவாருங்கள் என்றான்.

௰௮ ¶ அப்படியே அவரவர் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும்போட்டு, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாக வந்துநின்றார்கள்; மோசேயும் ஆரோனும் அங்கே நின்றார்கள்.

௰௯ கோராகோவெனில் இவர்களுக்கு விரோதமாகச் சபையையெல்லாம் ஆசரிப்புக்கூடாரவாசலுக்குமுன்பாகக் கூடிவரப்பண்ணினான்; *ஆனால் கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது.

*௪ மோ. ௰௪. ௰.

௨௰ ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி,

௨௧ இந்தச் சபையின் நடுவிலிருந்து பிரிந்துபோங்கள்; க்ஷணப்பிலே அவர்களை அதமாக்குவோமென்றார்.

௨௨ அப்பொழுது அவர்கள் முகங்குப்புறவிழுந்து, சகல மாம்சத்தினுடைய ஆவிகளுக்கும் தேவனாகிய பராபரனே, ஒரு மனிதன் பாவம்செய்யும் அளவில் சபையின்மேல் எல்லாம் கடுங்கோபம் அடைவீரோ என்றார்கள்.

௨௩ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே,

௨௪ கோராக், தாத்தான், அபீராம் குடியிருக்கிற ஸ்தலத்தைச் சுற்றிலுமிருந்து விலகிப் போங்களென்று சபையோடே சொல்லென்றார்.

௨௫ ¶ அப்பொழுது மோசே எழுந்திருந்து, தாத்தான் அபீராம் என்றவர்களிடத்திலே போனான்; இஸ்ரவேலின் மூப்பர் அவர்களுக்குப் பின்சென்றார்கள்.

௨௬ அவன் சபையுடனே, இந்த ஆகாத மனிதருடைய எல்லாப் பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களைவிட்டு விலகி, அவர்களுக்குண்டானது ஒன்றையும் தொடாதே போங்கள் என்றான்.

௨௭ அப்படியே அவர்கள் கோராக், தாத்தான், அபீராம் குடியிருந்த ஸ்தலத்தைச் சுற்றிலுமிருந்து விலகிப்போனார்கள்; தாத்தானும் அபீராமுமோவென்றால், வெளியே வந்து, தங்கள் பெண்சாதி பிள்ளைகள் குழந்தைகளோடும் தங்கள் கூடாரங்களின் வாசல்படியிலே நின்றுகொண்டார்கள்.

௨௮ அப்பொழுது மோசே சொன்னதாவது: இந்தக் கிரியைகளையெல்லாம் செய்ய, கர்த்தர் என்னை அனுப்பினாரென்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்

Digitized by Google

லையென்றும், நீங்கள் எதினாலே அறிவீர்க
ளென்றால்,
௨௯ இவர்கள் சகலமனிதரும் சாகிறபடி
செத்து, சகலமனிதரும் விசாரிக்கப்படு
கிறபடி விசாரிக்கப்பட்டால், கர்த்தர் என்
னை அனுப்பினதில்லை.
௩௰ கர்த்தர் புதியகாரியத்தைச் சிருஷ்டிப்
பதினாலே, பூமி தன் வாயைத்திறந்து, அவர்
கள் உயிரோடே பாதாளத்தில் இறங்க, அ
வர்களையும் அவர்களுக்குண்டான யாவை
யும் விழுங்கிப்போட்டதேயானால், இந்த
மனிதர் கர்த்தரைத் தூஷணித்தார்கள் என்
கிறதை அறிவீர்கள் என்றான்.
௩௧ ¶ அவன் இந்த வார்த்தைகளையெல்
லாம் சொல்லித் தீர்ந்தபொழுது சம்பவித்
ததேதெனில், *அவர்கள் கீழிருந்த பூமி
பிளந்து, *௫ மோ. ௰௧. ௬.
௩௨ பூமி தன் வாயைத்திறந்து, அவர்களை
யும் அவர்கள் வீடுகளையும் கோராகுக்கிருந்த
எல்லா மனிதரையும் எல்லா ஆஸ்தியையும்
விழுங்கிவிட்டது.
௩௩ அவர்கள் தங்களுக்குண்டானவை எல்
லாவற்றோடுங்கூட உயிரோடே பாதாளத்
தில் இறங்கினார்கள்; பூமி அவர்கள்மேலே
மூடிக்கொண்டது; இப்படிச் சபையின்
நடுவிலிருந்து அழிந்தார்கள்.
௩௪ அவர்களைச் சுற்றிலும் இருந்த இஸ்ர
வேலர் எல்லாரும் அவர்கள் கூக்குரலைக்
கேட்டு, பூமி நம்மையும் விழுங்குமோ என்
று ஓடிப்போனார்கள்.
௩௫ அக்கினியும் கர்த்தரிடத்திலிருந்து பு
றப்பட்டு, தூபம் காட்டின இருநூற்று ஐம்
பதுபேரையும் பட்சித்தது.
௩௬ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச்
சொன்னதாவது:
௩௭ அக்கினிக்குள் அகப்பட்ட தூபகல
சங்களை எடுத்து, அவைகளிலிருக்கிற அக்
கினியை அப்பாலே கொட்டிப்போட, ஆ
சாரியனான ஆரோனின் குமாரனாகிய எலே
யாசாருக்குச் சொல்; ஏனெனில் அவை
கள் பரிசுத்தமாயின.
௩௮ தங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதம்
பண்ணின அந்தப் பாவிகளின் தூபகலசங்
களைப் பலிபீடத்தை மூடத்தக்க தட்டை
யான தகடுகளாக அடிக்கக்கடவர்கள்; ஏ
னெனில் அவர்கள் கர்த்தருக்குமுன்பாக,
அவைகளைக் கொண்டுவந்ததினாலே அவை
கள் பரிசுத்தமாயின; அவைகள் இஸ்ர
வேல் புத்திரருக்கு அடையாளமாவதாக
என்றார்.
௩௯ அப்படியே ஆசாரியனாகிய எலேயா
சார் வெந்துபோனவர்கள் கொண்டுவந்தி
ருந்த வெண்கலத் தூபகலசங்களை எடுத்து,
௪௰ *ஆரோனின் வித்தல்லாத ஒரு அந்நி
யன் கர்த்தருக்குமுன்பாகத் தூபம்காட்டு
கிறதற்குச் சேராதபடிக்கும், கோராகைப்
போலும் அவன் கூட்டத்தாரைப்போலும்
இராதபடிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கு
நினைப்புண்டாக, அவைகளைக் கர்த்தர் மோ
சேயைக்கொண்டு தனக்குச் சொன்னபடி
யே பலிபீடத்தை மூடும் தகடுகளாக அடிப்
பித்தான். *௪ மோ. ௩. ௰.
௪௧ ¶ மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரரின்
சபையெல்லாம் மோசேக்கும் ஆரோனுக்
கும் விரோதமாக முறுமுறுத்து, கர்த்தரின்
சனத்தைக் கொன்றுபோட்டீர்கள் என்றார்
கள்.
௪௨ சபை மோசேக்கும் ஆரோனுக்கும்
விரோதமாகக் கூடுகையில் சம்பவித்ததே
தென்றால், அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்
திற்குநேராக முகத்தைத் திருப்புகிறபொழு
து, இதோ மேகம் அதை மூடி, கர்த்தரின்
மகிமை காணப்பட்டது.
௪௩ மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்
கூடாரத்திற்குமுன்பாக வந்தார்கள்.
௪௪ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே
பேசி,
௪௫ *இந்தச் சபையின் நடுவிலிருந்து வில
குங்கள்; க்ஷணப்பிலே அவர்களை அதமாக்கு
வோம் என்றார்; அப்பொழுது முகங்குப்
புற விழுந்தார்கள். *௪ மோ. ௨௧. ௨௨:
௰௪. ௰௨.

Digitized by Google

௪௬ ¶ மோசே ஆரோனுடனே, நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் வைத்து, அதின்மேலே தூபவர்க்கம்போட்டு, சீக்கிரமாய்ச் சபையண்டையிலே போய், அவர்களுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கு; ஏனெனில் கர்த்தரின் சந்நிதியிலிருந்து கடும்கோபம் புறப்பட்டது; வாதை துவக்கிற்றென்றான்.

௪௭ மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக்கொண்டு சபையின் நடுவில் ஓடினான்; இதோ சனத்தில் வாதை துவக்கியும் இருந்தது; அவன் தூபவர்க்கம்போட்டு, சனத்திற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

௪௮ செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.

௪௯ கோருகுடைய வர்த்தமானத்தின்நிமித்தம் செத்தவர்களைத்தவிர, அந்த வாதையினாலே செத்தவர்கள் பதினாலாயிரத்து எழுநூறுபேர்.

௫௰ ஆரோன் ஆசரிப்புக்கூடாரவாசலுக்கு மோசேயண்டையில் திரும்பிவந்தான்; ஏனெனில் வாதை நிறுத்தப்பட்டுப்போயிற்று.

௰௭. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்களில் அவர்கள் பிதாக்களின் வீடுகளாகிய ஒவ்வொரு வீட்டினுடைய பிரபுவின் கையில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோலை வாங்கி, அவனவன் கோலின்மேலே அவனவன் பெயரை எழுதி,

௩ இலேவியினுடைய கோலின்மேலோவென்றால், ஆரோனின் பெயரை எழுதக்கடவாய்; ஏனெனில் அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு வீட்டுத்தலைவனுக்காக ஒவ்வொரு கோல் இருக்கவேண்டும்.

௪ அவைகளை ஆசரிப்புக்கூடாரத்திலே நாம் உங்களைச் சந்திக்கும் தலமாகிய சாட்சிக்குமுன்பாக வைக்கக்கடவாய்.

௫ அப்பொழுது சம்பவிப்பதேதெனில், நாம் தெரிந்துகொள்பவனுடைய கோல் துளிர்க்கும்; அப்படியே இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்புகளை நம்மைவிட்டோயப்பண்ணுவோமென்றார்.

௬ ¶ இதை மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்; அப்பொழுது அவர்களுடைய பிரபுக்களெல்லாரும் அவர்கள் பிதாக்களின் ஒவ்வொரு வீட்டிற்கு ஒவ்வொரு பிரபு அவனுக்கு ஒவ்வொரு கோலைப் பன்னிரண்டு கோலாகக் கொடுத்தார்கள்; ஆரோனின் கோல் அவர்கள் கோல்களுக்குள்ளே இருந்தது.

௭ அந்தக் கோல்களை மோசே சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருக்குமுன்பாக வைத்தான்.

௮ சம்பவித்ததேதெனில் மறுநாளிலே மோசே சாட்சியின் கூடாரத்திற்குள் பிரவேசித்தபொழுது, இதோ இலேவியின் வீட்டிற்காக இருக்கிற ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப்பழங்களைக் கொடுத்தது.

௯ அப்பொழுது மோசே கர்த்தருக்குமுன்பாக இருந்த எல்லாக் கோல்களையும் வெளியே எல்லா இஸ்ரவேல் புத்திரரண்டைக்கும் கொண்டுவந்தான்; அவர்கள் கண்டு அவரவர் தங்கள் கோலை வாங்கிக்கொண்டார்கள்.

௰ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, *ஆரோனின் கோல் கலகக்காரரான புத்திரருக்கு அடையாளமாகக் காக்கப்பட, நீ அதைத் திரும்பச் சாட்சிக்குமுன்பாகக் கொண்டுபோய் வைத்து, இப்படியே அவர்கள் சாவாதபடிக்கு, அவர்கள் முறுமுறுப்புகளை நம்மைவிட்டு முடியப்பண்ணென்றார். *எபி. ௯. ௪.

௧௧ கர்த்தர் தனக்குக் கற்பித்த அந்தப்படியே மோசே செய்தான்.

Digitized by Google

௧௨ ¶ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் மோசேயுடனே, இதோ மாண்டு அழிந்து போகிறோம், நாங்கள் எல்லாரும் அழிந்து போகிறோம்.

௧௩ கர்த்தரின் வாசஸ்தலத்திற்குச் சேரவே சேருகிறவனெல்லாம் சாகிறான்; நாங்கள் மாண்டுபோகிறதினாலே சரியாகவேண்டுமோவென்றார்கள்.

௰௮. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் ஆரோனோடே சொன்னதாவது: நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உன் தகப்பன் வீட்டாரும் பரிசுத்தஸ்தலத்தில் நடக்கும் அக்கிரமத்தைச் சுமப்பீர்கள்; நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உங்கள் ஆசாரிய ஊழியத்தில், நடக்கும் அக்கிரமத்தைச் சுமப்பீர்கள்.

௨ உன் தகப்பனாகிய இலேவியின் கோத்திரத்தாரான உன் சகோதரரையும் உன்னோடே கூடியிருக்கவும் உன்னிடத்திலே சேவிக்கவும் உன்னுடனே சேர்த்துக்கொள்; ஆனால் நீயும் உன் குமாரனும்கூடச் சாட்சியின் கூடாரத்திற்குமுன்பாக இருக்கக்கடவீர்கள்.

௩ அவர்கள் உன் காவலையும் கூடாரம் அனைத்தின் காவலையும் காப்பார்களாக; ஆனால் அவர்களும் நீங்களும்கூடச் சாவாதபடிக்கு, அவர்கள் பரிசுத்தஸ்தலத்தின் தளவாடங்களண்டைக்கும் பீடத்தண்டைக்கும் சேராமல்,

௪ உன்னோடே கூடிக்கொண்டு, கூடாரத்திற்கு அடுத்த எல்லாப் பணிவிடையையும் செய்ய, ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கக்கடவர்கள்; அந்நியன் உங்களண்டையில் சேரவேண்டாம்.

௫ இஸ்ரவேல் புத்திரர்மேல் இனிக் கடுங்கோபம் வாராதபடிக்கு, நீங்கள் பரிசுத்தஸ்தலத்தின் காவலையும் பலிபீடத்தின் காவலையும் காக்கக்கடவீர்கள்.

௬ ஏனெனில் இதோ ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடை வேலையைச்செய்ய, *கர்த்தருக்குக் கொடுக்கப்பட்ட உங்கள் சகோதரராகிய இலேவியரை நாம் இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் எடுத்து, உங்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தோம். *௪ மோ. ௩. ௯.

௭ ஆனால் நீயும் உன்னோடேகூட உன் குமாரரும்கூடப் பலிபீடத்திற்கும் திரைக்குள்புறத்திற்கும் அடுத்த எல்லாவற்றையும் செய்ய, உங்கள் ஆசாரியவேலையைக் காத்துச் சேவிக்கக்கடவீர்கள்; உங்கள் ஆசாரியவேலையை உங்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தோம்; சேருகிற அந்நியன் கொலைஉண்ணக்கடவனென்றார்.

௮ ¶ பின்னையும் கர்த்தர் ஆரோனோடே சொன்னதாவது: இதோ இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தம்பண்ணுகிறவைகளிலெல்லாம் ஏறெடுக்கப்படுகிற நம்முடைய படைப்புகளைக் காவல்காக்கிறீர்களே, அவைகளை உனக்குக் கொடுத்தோம்; அபிஷேகத்தின் நிமித்தம் அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் நித்தியகட்டளையாகக் கொடுத்தோம்.

௯ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானதிலே, அக்கினிக்குள்படாமல் உன்னுடையதாய் இருப்பதேதெனில், அவர்கள் தங்களுடைய எல்லாப் படைப்பிலும், தங்களுடைய எல்லாக் காணிக்கையிலும் பாவம்போக்கும் தங்களுடைய எல்லாப் பலியிலும், குற்றம்போக்க நமக்குச் செலுத்துகிற தங்களுடைய எல்லாப்பலியிலும், படைக்கிறதெல்லாம்தானே; இது உனக்கும் உன் குமாரருக்கும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருப்பது.

௰ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்திலே அதைப் புசிப்பாயாக; ஆண்சாதியானவனெல்லாம் அதைப் புசிப்பானாக; அது உனக்குப் பரிசுத்தமாயிருக்கக்கடவது.

௧௧ இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுக்கிறதும் அசைவாட்டுகிறதுமான அவர்களுடைய எல்லாக் காணிக்கைகளின் படைப்பும் உன்னுடையவைகளாயிருக்கும்; அவைக

Digitized by Google

லை உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமா
ரத்திகளுக்குங்கூட நித்தியகட்டளையாகக்
கொடுத்தோம்; உன் வீட்டிலே சுத்தமான
வர்களெல்லாரும் அவைகளைப் புசிப்பார்
களாக.
௰௨ அவர்கள் கர்த்தருக்குக் கொடுக்கும்
அவர்களுடைய முதல்பலன்களாகிய மே
ல்தரமான எல்லா எண்ணெயையும்
மேல்தரமான திராட்சப்பழ இரசத்தை
யும் தானியத்தையும் உனக்குக் கொடுத்
தோம்.
௰௩ தங்கள் தேசத்திலிருக்கிற யாவிலும் அ
வர்கள் கர்த்தருக்குக் கொண்டுவரும் மு
தல்பலன்கள் உன்னுடையதாயிருக்கும்;
உன் வீட்டிலே சுத்தமானவர்களெல்லா
ரும் அவைகளைப் புசிப்பார்களாக.
௰௪ இஸ்ரவேலிலே *சாபத்தீடானவைக
ளெல்லாம் உன்னுடையவைகளாயிருக்
கும். *௩ மோ. ௨௭. ௨௮.
௰௫ மனிதரும் மிருகஜீவன்களுமான சகல
மாம்சத்திலும் கர்ப்பந்திறந்து, கர்த்தருக்
குச் செலுத்தப்படுகிற யாவும் உன்னுடை
யவைகளாயிருக்கும்; ஆனால் மனிதனில்
பிறந்த முதல்பேற்றை நீ மீட்கவே மீட்கச்
சொல்லவேண்டும்; தீட்டான மிருகஜீவ
னின் முதலீற்றையும் மீட்கச்சொல்லக்கட
வாய்.
௰௬ மீட்கப்படுபவைகள் ஒரு மாதத்திற்கு
அதிகமாயிருந்தால், உன் மதிப்பான ஐந்து
சேக்கலாலே அவைகளை மீட்கச் சொல்லு
வாயாக; பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல்
கணக்காகத்தானே, அது இருபது கேரா.
௰௭ ஆனால் மாட்டின் தலையீற்றும், ஆட்
டின் தலையீற்றும், வெள்ளாட்டின் தலையீற்
றும், மீட்கப்படவேண்டாம்; அவைகள்
பரிசுத்தம்; நீ அவைகளின் இரத்தத்தைப்
பீடத்தின்மேலே தெளித்து, அவைகளின்
கொழுப்பைக் கர்த்தருக்கேற்றிய வாசனை
யான தகனமாகக் கொளுத்தக்கடவாய்.
௰௮ அவைகளின் மாம்சம் அசைவாட்டும்
மார்க்கண்டத்தைப்போலும் வலது முன்
னந்தொடையைப்போலும் உன்னுடைய
தாயிருக்கும்.
௰௯ இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏ
றெடுத்துப் படைக்கிற பரிசுத்தப் படைப்
புகளையெல்லாம் உனக்கும் உன் குமாரருக்
கும் உன் குமாரத்திகளுக்குங்கூட நித்திய
கட்டளையாகக் கொடுத்தோம்; கர்த்தருக்கு
முன்பாக இது உனக்கும் உன் வித்திற்கும்
கூட என்றைக்கும் செல்லும் மாறாத உடம்
படிக்கை என்றார்.
௨௰ ¶ பின்னையும் கர்த்தர் ஆரோனோடே
சொன்னதாவது: *அவர்களுடைய தேசத்
தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக்கொள்ள
வேண்டாம், அவர்கள் நடுவே உனக்குப்
பங்குண்டாயிருக்கவும்வேண்டாம்; இஸ்ர
வேல் புத்திரரின் நடுவே நாமே உன் பங்
கும் உன் சுதந்தரமுமானவர். *௫ மோ.
௰௮. ௧, ௨. யோசு. ௰௩. ௩௩.
௨௧ பின்னையும் இதோ இலேவியின் புத்
திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடை
வேலையைச் செய்கிற அவர்களுடைய வே
லைக்காக, நாம் அவர்களுக்கு இஸ்ரவேலி
லே பத்தில் ஒரு பங்கானவைகளையெல்
லாம் சுதந்தரமாகக் கொடுத்தோம்.
௨௨ இஸ்ரவேல் புத்திரர் குற்றஞ்சுமந்து
சாவாதபடிக்கு, இனி ஆசரிப்புக்கூடாரத்
திற்குச் சேராதிருக்கக்கடவர்கள்.
௨௩ இலேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின்
பணிவிடை வேலையைச் செய்து, தங்கள்
அக்கிரமத்தைச் சுமக்கக்கடவர்கள்; அது
அவர்களுடைய தலைமுறைகளுக்கு நித்திய
கட்டளையாயிருக்கும்; அவர்கள் இஸ்ரவேல்
புத்திரர் நடுவே சுதந்தரத்தைச் சுதந்தரித்
துக்கொள்ளவேண்டாம்.
௨௪ ஏனெனில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்
தருக்குப் படைப்பாகப் பத்தில் ஏறெடுக்
கும் ஒன்றை இலேவியருக்குச் சுதந்தர
மாகக் கொடுத்தோம், ஆகையால் இஸ்ர
வேல் புத்திரரின் நடுவே சுதந்தரம் சுதந்
தரிக்கவேண்டாமென்று அவர்களுக்குச்
சொன்னோமென்றார்.

Digitized by Google

௨௫ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨௬ நீ இலேவியரோடே பேசி அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்குகிறதற்கு நாம் உங்களுக்கு உங்கள் சுதந்தரமாகக் கொடுத்த பத்தில் ஒன்றை நீங்கள் அவர்கள் கையில் வாங்கினபொழுது, பத்தில் ஒன்றாகிய அதிலே பத்தாம்பங்கை ஏறெடுத்து, கர்த்தருக்குப் படைப்பாகச் செலுத்துவீர்களாக.

௨௭ அது நீங்கள் களத்திலே தானியத்தையும் ஆலையில் இரசத்தையும் படைப்பாக ஏறெடுக்குமாப்போல, உங்களுக்கு எண்ணப்படும்.

௨௮ இப்படியே நீங்கள் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கும் பத்தில் ஒன்றாகிய உங்கள் பங்குகளிலெல்லாம் நீங்களும் கர்த்தருக்கென்று ஒரு படைப்பை ஏறெடுத்து, ஏறெடுத்த அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்குச் செலுத்தக்கடவீர்கள்.

௨௯ உங்களுக்குக் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு காணிக்கைகளிலும் கர்த்தருக்கு ஒவ்வொரு படைப்பை ஏறெடுத்து, அவைகளில் மேல்தரமானதிலெல்லாம் அதிலுடைய பரிசுத்தபங்கைச் செலுத்துவீர்களாக என்று சொல்லி,

௩௰ பின்னையும் நீ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் அதில் மேல்தரமானதை ஏறெடுத்துச் செலுத்துகிறபொழுது, அது இலேவியர் போர்க்களத்தின் வரத்திலும் ஆலையின் வரத்திலும் எடுத்துச் செலுத்துமாப்போல எண்ணப்படும்.

௩௧ அதை நீங்களும் உங்கள் வீட்டாரும் சகல இடத்திலும் புசிக்கலாம்; ஏனெனில் அது நீங்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே செய்கிற பணிவிடைக்கீடான உங்கள் சம்பளம்.

௩௨ இப்படி அதில் மேல்தரமானதை ஏறெடுத்துச் செலுத்தினீர்களானால், நீங்கள் அதற்காகப் பாவஞ்சுமக்காமலும் இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தமாக்கினவைகளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் சாவாமலும் இருப்பீர்கள் என்று சொல்லென்றார்.

௰௯. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨ கர்த்தர் கற்பித்த நியாயப்பிரமாணமான கட்டளை ஏதெனில், இஸ்ரவேல் புத்திரர் பழுதற்றதும் ஊனமில்லாததும் நுகத்தடி ஏறாததுமான சிவப்பான கிடாரியை உன்னண்டையில் கொண்டுவர அவர்களோடே சொல்.

௩ அதை எலெயாசாரென்ற ஆசாரியனுக்கு ஒப்புக்கொடுப்பீர்களாக;அவன்அதைப் பாளயத்திற்கு வெளியே கொண்டுபோகக்கடவன்; அங்கே அது அவனுக்குமுன்பாகக் குரல்வளை அறுக்கப்படுவதாக.

௪ அப்பொழுது ஆசாரியனாகிய எலெயாசார் தன் விரலினாலே அதின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக *ஏழுமுறை தெளிக்கக்கடவன். *௩ மோ. ௪. ௬, ௰௭.

௫ பிற்பாடு கிடாரியை ஒருவன் அவன் கண்களுக்குமுன்பாகச் சுட்டெரிப்பானாக; *அதின் தோலும் அதின் மாம்சமும் அதின் இரத்தமும் அதின் சாணமுங்கூடச் சுட்டெரிக்கப்படக்கடவது. *௨ மோ. ௨௯. ௰௪.

௬ *அப்பொழுது ஆசாரியன் கேதுருக்கட்டையையும் இசோப்பையும் சிவப்பு நூலையும் எடுத்து, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே போடக்கடவன்.
*௩ மோ. ௰௪. ௬.

௭ பிற்பாடு ஆசாரியன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தன்மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவி, அதின்பிறகு பாளயத்தில் வருவானாக; ஆசாரியன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௮ அதைச் சுட்டெரித்தவனும் தன் வஸ்

Digitized by Google

திரங்களைத் தண்ணீரில் வெளுத்து, தன்
மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவி, சாயங்
காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.
௯ ஆனால் சுத்தமான ஒருவன் கிடாரியின்
சாம்பலை வாரிக்கொண்டு, பாளயத்திற்குப்
புறம்பே சுத்தமான ஒரு தலத்திலே கொ
ட்டிவைக்கக்கடவன்; *அது தீட்டை நீக்
கும் தண்ணீருக்கென்று இஸ்ரவேல் புத்திர
ரின் சபைக்காகக் காத்துவைக்கப்படக்
கடவது; அது பாவம்போக்குகின்றது.
*எபி. ௯. ௰௩.
௰ கிடாரியின் சாம்பலை வாரினவன் தன்
வஸ்திரங்களை வெளுத்து, சாயங்காலம்மட்
டும் தீட்டுப்பட்டிருப்பான்; இது இஸ்ர
வேல் புத்திரருக்கும் அவர்கள் நடுவிலே
தங்குகிற பரதேசிக்கும் நித்திய கட்டளையா
யிருப்பதாக.
௰௧ ¶ செத்துப்போன யாதொரு மனித
பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்
டுப்பட்டிருப்பான்.
௰௨ அவன் மூன்றாம்நாளிலும் ஏழாம்நாளி
லும் அதினாலே பாவம்போக்கக்கடவன்;
அப்பொழுது சுத்தமாயிருப்பான்; மூன்
றாம்நாளிலும் ஏழாம்நாளிலும் பாவம்போக்
கானேயாகில் சுத்தமாகான்.
௰௩ செத்த மனிதபிரேதத்தைத் தொட்டும்,
பாவம்போக்காதவனெல்லாம், கர்த்தரின்
வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்துகிறான்;
அந்த ஆத்துமா இஸ்ரவேலிலிராமல் அறுப்
புண்பான்; ஏனெனில் தீட்டைநீக்கும் தண்
ணீர் அவன்மேலே தெளிக்கப்படவில்லை;
அவன் தீட்டுப்பட்டிருப்பான்; அவன்
தீட்டு இன்னம் அவன்மேலிருக்கும்.
௰௪ கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால்,
அதற்கான நியாயப்பிரமாணமாவது: கூ
டாரத்திற்குள் பிரவேசிக்கிறவனுக்கும் கூ
டாரத்திலிருக்கிறவனுக்கும் எல்லாம் ஏழு
நாள் தீட்டுண்டாயிருக்கும்.
௰௫ மூடிக் கட்டப்பட்டிராமல், திறந்தி
ருக்கிற பண்டமெல்லாம் தீட்டுப்பட்டி
ருக்கும்.
௰௬ வெளியிலே பட்டயத்தால் வெட்டு
ண்டவனையாவது, செத்தவனையாவது, மனி
த எலும்பையாவது, பிரேதக்குழியையாவ
து, தொட்டவனெல்லாம், ஏழுநாள் தீட்
டுப்பட்டிருப்பான்.
௰௭ ¶ ஆகையால் தீட்டுப்பட்டவனுக்
காக, பாவம்போக்கும் கிடாரியின் சாம்ப
லிலே கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்
திலேபோட்டு, அதின்மேலே சுரப்புத்தண்
ணீர்வார்க்கவேண்டும்.
௰௮ பிற்பாடு சுத்தமான ஒருவன் ஒரு ஈ
சோப்பை எடுத்துக்கொண்டு, அந்தத் தண்
ணீரிலே தோய்த்து, கூடாரத்தின்மேலும்
சகல பண்டம் பாடிகள்மேலும் அங்கே
இருக்கிற ஆத்துமாக்கள்மேலும், அல்ல
வென்று எலும்பையாகிலும் வெட்டுண்ட
வனையாகிலும் செத்தவனையாகிலும் பிரேதக்
குழியையாகிலும் தொட்டவன்மேலும் தெ
ளிக்கக்கடவன்.
௰௯ சுத்தமாயிருக்கிற ஒருவன் தீட்டுப்
பட்டவன்மேலே மூன்றாம்நாளிலும் ஏழாம்
நாளிலும் தெளித்து, இப்படி ஏழாம்நாளி
லே அவனுடைய பாவத்தைப் போக்கக்க
டவன்; இவன் தன் வஸ்திரங்களை வெளுத்
து, தண்ணீரில் முழுகி, சாயங்காலத்திலே
சுத்தமாயிருப்பான்.
௨௰ தீட்டுப்பட்டிருந்தும் பாவம்போக்கா
தேபோகிற ஆத்துமாவோவெனில், சபை
யில் இராதபடிக்கு அறுப்புண்பான்; ஏனெ
னில், கர்த்தரின் பரிசுத்தஸ்தலத்தைத் தீட்
டுப்படுத்தினான்; தீட்டை நீக்கும் தண்ணீர்
அவன்மேலே தெளிக்கப்படவில்லை; அ
வன் தீட்டுப்பட்டிருக்கிறான்.
௨௰௧ இது அவர்களுக்கு நித்தியகட்டளை
யாயிருக்கக்கடவது; தீட்டை நீக்கும் தண்
ணீரைத் தெளித்தவனும் தன் வஸ்திரங்களை
வெளுக்கக்கடவன்; தீட்டை நீக்கும் தண்
ணீரைத் தொட்டவனும் சாயங்காலம்மட்
டும் தீட்டுப்பட்டிருப்பான்.
௨௰௨ தீட்டுப்பட்டிருக்கிறவன் தொடுகிற
வைகளெல்லாம் தீட்டுப்படும், அவைக

Digitized by Google

லைத் தொடுகிற ஆத்துமாவும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் என்றார்.

௨௰. அதிகாரம்.

இஸ்ரவேல் புத்திரரின் சபை எல்லாம் முதலாம்மாதத்திலே சீன்வனாந்தரத்திலே வந்தது; அங்கே சனம் காதேசிலே தங்கித் தரித்தது; அங்கே மிரியாம் மரணம் அடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள்.

௨ ¶ சனத்திற்குத் தண்ணீர் இல்லாதிருந்தது; அப்பொழுது *மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டம்கூடினார்கள். *௨ மோ. ௰௭. ௨.

௩ சனம் மோசேயோடே வாக்குவாதம் பண்ணிச் சொன்னதாவது: எங்கள் சகோதரர் கர்த்தருக்குமுன்பாக மாண்டபொழுது. நாங்கள் மாண்டோமானால் தாவிலை.

௪ நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாக, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டுவந்ததென்ன?

௫ விதைப்பும் அத்திமரமும் திராட்சச்செடியும் மாதளம்செடியும் குடிக்கத் தண்ணீரும் இல்லாத இந்த ஆகாத இடத்திற்கு எங்களைக் கொண்டுவரும்படிக்கு, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து ஏறிவரப்பண்ணினதென்ன என்றார்கள்.

௬ ¶ ஆனால் மோசேயும் ஆரோனும் சபைக்குமுன்பாக இருந்து, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குப் போய், முகம்குப்புறவிழுந்தார்கள்; *அப்பொழுது கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது. *௪ மோ. ௰௪. ௰.

௭ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௮ நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையைக்கூட்டி; அவர்கள் கண்களுக்குமுன்பாகக் கல்மலையோடே பேசுங்கள்; அப்பொழுது அது தன் தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கல்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபைக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக்கொடுப்பாயாக என்றார்.

௯ ¶ அப்பொழுது மோசே கர்த்தருடைய சமுகத்திலிருக்கிற கோலை, அவர் தனக்குக் கற்பித்தபடியே எடுத்துக்கொண்டான்.

௰ மோசேயும் ஆரோனும் சபையைக் கல்மலைக்குமுன்பாகக் கூட்டினார்கள்; அப்பொழுது மோசே அவர்களுடனே, கலகக்காரரே, கேளுங்கள்; உங்களுக்கு இந்தக்கல்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி,

௰௧ தன் கையை ஓங்கி, கல்மலையைத் தன் கோலினால் இரண்டுமுறைஅடித்தான்; அப்பொழுது பரிபூரணமான தண்ணீர்கள் புறப்பட்டதினாலே, சபையும் அவர்கள் மிருகங்களும் குடித்தன.

௰௨ ¶ கர்த்தரோவெனில் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது: *நம்மை இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்குமுன்பாகப் பரிசுத்தம்பண்ணும்படிக்கு, நீங்கள் நம்மை விசுவாசியாதே போனபடியினாலே, நீங்கள் இந்தச் சபையை நாம் அவர்களுக்குக் கொடுக்கிற தேசத்திற்குள் கொண்டுபோவதில்லை என்றார். *௫ மோ. ௧. ௩௭.

௰௩ இவைகள் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடே வாக்குவாதம் பண்ணினதும் அவர் இவர்களுக்குள் பரிசுத்தம் விளங்கினதுமான மேரிபாவின் தண்ணீர்கள்.

௰௪ ¶ பிற்பாடு மோசே காதேசிலிருந்து ஏதோமின் இராசாவண்டைக்குத் தானாபதிகளை அனுப்பிச்சொல்லச்சொன்னதாவது:

௰௫ எங்கள் பிதாக்கள் எகிப்திலே போய் இறங்கினதும், நாங்கள் எகிப்திலே நீடியநாள் குடியிருந்ததும், எகிப்தர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப்படுத்தினதுமான எங்களுக்கு வந்த பிரயாசத்தையெல்லாம் நீ அறிந்திருக்கிறாய்.

௰௬ கர்த்தரைநோக்கி நாங்கள் கூப்பிட்டோம்; அப்பொழுது அவர் எங்கள் சத்தத்தைக் கேட்டு, ஒரு தூதனை அனுப்பி,

Digitized by Google

எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; இப்பொழுதும் இதோ நாங்கள் உன் கடைசி எல்லைக்குச் சமீபமான காதேஸ் ஊரில் இருக்கிறோம்.

௰௭ நாங்கள் உன் தேசத்து வழியாகக் கடந்துபோகட்டுமே; நாங்கள் வயல்வெளிகள் வழியாக, அல்லது திராட்சத்தோட்டங்கள் வழியாகப் போகாமலும், துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், இராசபாதையாகப் போய், உன் எல்லையைக் கடந்துதீருமட்டும், வலது இடதுபுறமாகச் சாயாதிருப்போமென்று உன் சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறானென்று சொல்லச்சொன்னான்.

௰௮ ஏதோமோவெனில், நீ என் வழியாகக் கடந்துபோகவேண்டாம்; மற்றப்படி பட்டயத்தோடே உனக்கு எதிராகப் புறப்படுவேனென்று அவனுக்குச் சொல்லச்சொன்னான்.

௰௯ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனோடே, நடப்பான வழியிலே ஏறிப்போவோம்; நாங்களும் எங்கள் மிருகஜீவன்களும் உன் தண்ணீரிலே குடித்தால், அதின் விலைக்கிரயத்தைக் கொடுப்போம், கால்நடையாகமாத்திரம் கடந்துபோவோம், பின் ஒன்றும் வேண்டாமென்றார்கள்.

௨௰ ஏதோமோவென்றால், நீ கடந்துபோகவேண்டாமென்று சொல்லி, வெகுசனத்தோடும் பலத்த கையோடும் அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டு,

௨௧ தன் எல்லைவழியாகக் கடந்துபோக, இஸ்ரவேலுக்கு உத்தாரம் கொடாதேபோனான்; ஆகையால் இஸ்ரவேல் அவனைவிட்டு விலகிற்று.

௨௨ ¶ இஸ்ரவேல் புத்திரரான சபையெல்லாம் காதேசைவிட்டுப் பயணம்பண்ணி, ஓரென்ற பர்வதத்திற்கு வந்தது.

௨௩ ¶ ஏதோம்தேசத்தின் எல்லைக்கு அருகான ஓரென்ற பர்வதத்திலே கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது:

௨௪ ஆரோன் தன் சனத்தாரோடே சேர்த்துக்கொள்ளப்படுவான்; ஏனெனில் மேரிபாவின் தண்ணீர்கள் காரியத்திலே நீங்கள் நம்முடைய வாக்குக்குக் கீழ்ப்படியாமல் போனபடியினாலே, அவன் நாம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கிற தேசத்தில் வருவதில்லை.

௨௫ நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு அவர்களை ஓரென்ற பர்வதத்தில் ஏறப்பண்ணி,

௨௬ ஆரோன் உடுத்திருக்கிற அவன் வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துவாயாக; ஏனெனில் ஆரோன் சேர்த்துக்கொள்ளப்பட்டு, அங்கே மரிப்பானென்றார்.

௨௭ கர்த்தர் கற்பித்தபடியே மோசே செய்தான்; சபையெல்லாம் பார்க்க, அவர்கள் ஓரென்ற பர்வதத்தில் ஏறினார்கள்.

௨௮ அங்கே மோசே, ஆரோன் உடுத்திருந்த வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தினான்; அப்பொழுது ஆரோன் அங்கே பர்வதத்தின் கொடுமுடியிலே மரித்தான்; பிற்பாடு மோசேயும் எலெயாசாரும் பர்வதத்திலிருந்து இறங்கிவந்தார்கள்.

௨௯ ஆரோன் ஜீவித்துப்போனானென்றதைச் சபையெல்லாம் கண்டபொழுது, இஸ்ரவேல் வீட்டாரெல்லாரும் ஆரோனுக்காக முப்பதுநாள் அழுதுகொண்டிருந்தார்கள்.

௨௧. அதிகாரம்.

வேவுகாரர் காண்பித்த வழியாக இஸ்ரவேல் வருகிறதை தெற்கே வாசம்பண்ணுகிற ஆராதின் இராசாவாகிய கானானியன் கேட்டபொழுது, அவன் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களில் சிலரைச் சிறைபிடித்துக்கொண்டுபோனான்.

௨ அப்பொழுது இஸ்ரவேல், தேவரீர் அந்தச் சனத்தை என்கையில் ஒப்புக்கொடுக்

கலே ஒப்புக்கொடுத்தால், அவர்களுடைய பட்டணங்களைச் சங்காரம்பண்ணுவேனென்று இஸ்ரவேல் கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணினான்.

௩ கர்த்தர் இஸ்ரவேலின் சத்தத்தைக் கேட்டு, கானானியனை ஒப்புக்கொடுத்தார்; அப்பொழுது அவர்களையும் அவர்கள் பட்டணங்களையும் சங்காரம்பண்ணி, அவ்விடத்திற்கு ஓர்மாவென்று பேரிட்டார்கள்.

௪ ¶ அவர்கள் ஏதோம்தேசத்தைச் சுற்றிப் போகும்படிக்கு, ஓரென்ற பர்வதத்தைவிட்டு, நாணல் சமுத்திரத்தின்வழியாகப் பயணம்பண்ணினார்கள்; ஆனால் வழியிலே சனத்தின் ஆத்துமா விதனமடைந்தது.

௫ சனம் பராபரனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி, நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படிக்கு, நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணினதென்ன? ஏனென்றால் இங்கே அப்பமுமில்லை, தண்ணீருமில்லை; *அற்பமான இந்த அப்பம் எங்கள் ஆத்துமாவிற்கு வெறுப்பாய் இருக்கின்றதென்றார்கள். *௪ மோ. ௰௧. ௬.

௬ அப்பொழுது கர்த்தர் *கொள்ளிவாய்ச் சர்ப்பங்களைச் சனத்திற்குள் அனுப்பினார்; அவைகள் சனத்தைக் கடித்ததினாலே இஸ்ரவேலில் வெகுசனம் செத்தது. *௧ கொரி. ௰. ௯.

௭ அப்பொழுது சனம் மோசேயண்டைக்கு வந்து, நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாகப் பேசினதினாலே பாவம் செய்தோம்; சர்ப்பங்களை எங்களைவிட்டு அகற்ற, கர்த்தரை விண்ணப்பம்பண்ணும் என்றார்கள்; மோசே சனத்திற்காக விண்ணப்பம்பண்ணினான்.

௮ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, *நீ ஒரு கொள்ளிவாய்ச்சர்ப்பத்தின் உருவத்தை உனக்குண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேலே தூக்கிவை; அப்பொழுது சம்பவிப்பதேதெனில், கடிக்கப்பட்டு, அதை நோக்கிப்பார்க்கிறவனெல்லாம் பிழைப்பான் என்றார். *யோவா. ௩. ௰௪.

௯ அப்பொழுது மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேலே தூக்கிவைத்தான்; சம்பவித்ததேதெனில், ஒருவனை ஒரு சர்ப்பம் கடித்தபொழுது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்.

௰ ¶ இஸ்ரவேல் புத்திரர் பயணப்பட்டுப் போய், ஓபோத்தில்பாளயம்இறங்கினார்கள்.

௰௧ அவர்கள் ஓபோத்திலிருந்து பயணப்பட்டுப் போய், சூரியோதயத்திற்கு நேராக மோவாபுக்கு எதிரான வனாந்தரத்தில் இருக்கிற ஆபரீமின் மேடுகளிலே பாளயம் இறங்கினார்கள்.

௰௨ ¶ அங்கேயிருந்து பயணப்பட்டுப் போய், சாரேத் பள்ளத்தாக்கிலே பாளயம் இறங்கினார்கள்.

௰௩ அங்கேயிருந்து பயணப்பட்டுப் போய், எமோரியரின் எல்லையிலிருந்து வருகிறதும் வனாந்தரத்தில் ஓடுகிறதுமான அர்னோன் ஆற்றுக்கு இப்புறம் பாளயம் இறங்கினார்கள்; ஏனெனில் அர்னோன் மோவாபுக்கும் எமோரியருக்கும் நடுவே இருக்கிற மோவாபின் எல்லை.

௰௪ ஆகையால் சூப்பாவில் இருக்கிற வாகேபும், அர்னோனின் ஆற்றுக்கால்களும்,

௰௫ ஆரென்ற வாசஸ்தலத்திற்குத் திரும்பி ஓடுகிற ஆற்றுக்கால்களின் ஓடையும், மோவாபின் எல்லையோடே இருக்கிறதென்று கர்த்தருடைய யுத்தங்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கின்றது.

௰௬ ¶ அங்கேயிருந்து பேயேருக்கு வந்தார்கள்; சனத்தைக் கூட்டு, அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்போமென்று கர்த்தர் மோசேக்குச் சொன்ன ஊற்றிருக்கிற ஸ்தலம் அதுதான்.

௰௭ அப்பொழுது இஸ்ரவேல் பாடின பாட்டாவது: ஊற்றுத்தண்ணீரே, பொங்கிவா; அதின்நிமித்தம் பாடுவோம் வாருங்கள்.

௰௮ நியாயம் கற்பிக்கிறவனோடும் கூடப்

Digitized by Google

பிரபுக்கள் தங்கள் ஊன்றுகோல்களைப்பிடித்
துக்கொண்டிருந்து, இந்தத் துரவை வெட்
டுவித்தார்கள்; சனத்தில் மேன்மையான
வர்கள் அதைத் தோண்டினார்களென்று பா
டினார்கள்; அந்த வனாந்தரத்திலிருந்து மாத்
தனாவுக்கும்,
௰௯ ¶ மாத்தனாவிலிருந்து நகாலியேலுக்
கும், நகாலியேலிலிருந்து பாமோத்திற்கும்,
௨௰ பாமோத்திலிருந்து மோவாபின் வெளி
யில் இருக்கிறதும் வனாந்தரத்திற்கு எதிராக
இருக்கிற பிஸ்காவின் கொடுமுடிக்கு அடுத்
ததுமான பள்ளத்தாக்குக்கும் வந்தார்கள்.
௨௰௧ ¶ அப்பொழுது இஸ்ரவேல் எமோரி
யரின் இராசாவாகிய சீகோனண்டைக்குத்
தானாபதிகளை அனுப்பி,
௨௰௨ உன் தேசத்துவழியாக நான் கடந்து
போகட்டும்; நாங்கள் வயல்களிலும், திராட்
சத்தோட்டங்களிலும் சாயாமலும், துரவுக
ளின் தண்ணீரைக் குடியாமலும், உன் எல்
லையைக் கடந்துதீருமட்டும் இராசபா
தையாய் நடந்துபோவோமென்று சொல்
லச்சொன்னார்கள்.
௨௰௩ சீகோனோவென்றால் தன் எல்லைவழி
யாகக் கடந்துபோக இஸ்ரவேலுக்கு உத்தா
ரம் கொடாமல், தன் சனத்தையெல்லாம்
கூட்டி, இஸ்ரவேலுக்கு எதிராக வனாந்தரத்
திலே புறப்பட்டு, யாகத்சாவுக்கு வந்து,
இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்
ணினான்.
௨௰௪ *ஆனால் இஸ்ரவேல் அவனைப் பட்ட
யக்கருக்கினால் வெட்டி, அர்னோனைத்து
வக்கி, யாபோக்மட்டும் அம்மோன் புத்திர
ரின் தேசம்மட்டும் இருக்கிற அவன் தே
சத்தைக் கட்டிக்கொண்டார்கள்; ஏனெ
னில் அம்மோன் புத்திரரின் எல்லை அர
ணிப்பாயிருந்தது. *சங். ௱௩௫. ௰௧, ௰௨.
௨௰௫ இஸ்ரவேல் அந்தப் பட்டணங்களை
யெல்லாம் பிடித்து, எமோரியருடைய எல்
லாப் பட்டணங்களுமாகிய எஸ்போனிலும்
அதினுடைய எல்லா ஊர்க்கிராமங்களிலும்
குடியிருந்தார்கள்.

௨௰௬ ஏனெனில் எஸ்போன் எமோரியரின்
இராசாவாகிய சீகோனின் பட்டணமாயி
ருந்தது; அதேனென்றால் இவன் மோவா
பியரின் முந்தின இராசாவுக்கு விரோதமாக
யுத்தம்பண்ணி, அர்னோன்மட்டுக்குமிருந்த
அவன் தேசத்தையெல்லாம் அவன் கையி
லே பறித்துக்கொண்டிருந்தான்.
௨௰௭ ஆகையால் பழமொழிக்காரர் சொன்
னது: எஸ்போனுக்கு வாருங்கள்; சீகோ
னின்பட்டணம் கெட்டியாகக் கட்டப்படு
வதாக.
௨௰௮ ¶ ஏனெனில் எஸ்போனிலிருந்து அக்
கினியும் சீகோனின் பட்டணத்திலிருந்து
சுவாலையும் புறப்பட்டு, மோவாபியரின்
ஆரென்ற ஊரையும், அர்னோனுடைய மேடு
களின் எசமான்களையும் பட்சித்தது.
௨௰௯ மோவாபே, உனக்கு ஐயோ, காமோஸ்
தேவனின் சனமே, நீ கெட்டாய்; அது
தப்பி ஓடின தன் குமாரரையும் தன் குமா
ரத்திகளையும் எமோரியரின் இராசாவாகிய
சீகோனுக்குச் சிறைகளாக ஒப்புக்கொடுத்
தது.
௩௰ அவர்களை எய்துவிட்டோம்; எஸ்
போன் பட்டணம் தீபோன் ஊர்மட்டும்
கெட்டுப்போயிற்று; மேதேபாமட்டும் ஆ
ண்டிருந்த நோப்பாப்பட்டணபரியந்தம்
அவர்களைப் பாழாக அடித்தோம் என்பார்
கள்.
௩௰௧ ¶ அப்படியே இஸ்ரவேல் எமோரிய
ரின் தேசத்திலே குடியிருந்தது.
௩௰௨ பிற்பாடு மோசே யாசேசேர் பட்ட
ணத்தை வேவுபார்க்கிறவர்களை அனுப்பி
னான்; அதின் ஊர்களைக் கட்டிக்கொண்டு,
அங்கே இருந்த எமோரியரைத் துரத்திவிட்
டார்கள்.
௩௰௩ ¶ பிறகு பாசானுக்குப் போகிறவழிக்
குத் திரும்பிக்கொண்டு எதிப்போனார்கள்;
அப்பொழுது பாசான் இராசாவாகிய ஓகும்
அவனுடைய எல்லாச் சனமுங்கூட அவர்
களுக்கு எதிராக யுத்தம்பண்ணும்படிக்கு,
எதிரேயுக்குப் புறப்பட்டு வந்தார்கள்.

Digitized by Google

௩௪ கர்த்தர் மோசேயுடனே, அவனுக்குப் பயப்படாயாக; ஏனெனில் அவனையும் அவனுடைய எல்லாச் சனத்தையும், அவன் தேசத்தையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தோம்; எஸ்போனிலே குடியிருந்த எமோரியரின் இராசாவாகிய சீகோனுக்கு நீ செய்தபடியே அவனுக்குச் செய்யக்கடவாயென்றார்.

௩௫ அப்படியே அவனையும், அவன் குமாரரையும், அவனுடைய எல்லாச் சனத்தையும், ஒருவரும் அவனுக்கு மீந்திராத வகையாக வெட்டிப்போட்டு, அவன் தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள்.

௨௨. அதிகாரம்.

பிற்பாடு இஸ்ரவேல் புத்திரர் பயணம்பண்ணி, எரிகோவின் கிட்ட இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளிகளிலே பாளயம் இறங்கினார்கள்.

௨ ¶ ஆனால் இஸ்ரவேல் எமோரியருக்குச் செய்ததையெல்லாம் சிப்போரின் குமாரனாகிய பாலாக் கண்டான்.

௩ அப்பொழுது மோவாபியர் அந்தச் சனம் ஏராளமென்று அதற்குமுன்பாக வெகு பயம் அடைந்து, இஸ்ரவேல் புத்திரரின்மேல் மனமடிவாகி,

௪ மீதியானியரின் மூப்பரோடே, மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக்கூட்டம் நம்மைச் சுற்றிலும் இருக்கிறதையெல்லாம் மேயுமென்றார்கள்; சிப்போரின் குமாரனாகிய பாலாகேனவெனில், அக்காலத்திலே மோவாபின் இராசாவாயிருந்தான்.

௫ அவன் பேயோரின் குமாரனாகிய பீலேயாமை அழைப்பிக்க, அவனுடைய சனபுத்திரரின் தேசத்தில் நதியண்டையிலிருக்கிற பெத்தோருக்குத் தானாபதிகளை அனுப்பி, இதோ ஒரு சனசதளம் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தது; இதோ பூமியின் விசாலத்தை அது மூடி, எனக்கு எதிரே இறங்கியிருக்கின்றது.

௬ இப்பொழுதும் நீ வந்து, எனக்காக அந்தச் சனத்தைச் சபி; ஏனெனில் அது என்னிலும் பலத்தது; அப்பொழுது ஒருவேளை நான் அதை முறியஅடித்து, அதைத் தேசத்திலிருந்து துரத்தலாம்; ஏனென்றால் நீ ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்றறிவேனென்று சொல்லி அனுப்பினான்.

௭ அப்படியே மோவாபின் மூப்பரும் மீதியானின் மூப்பரும் *குறிசொல்லுதலின் கூலியைத் தங்கள்கையில் எடுத்துக்கொண்டு போய், பீலேயாமண்டைக்கு வந்து, பாலாகின் வார்த்தைகளை அவனுக்குச் சொன்னார்கள். *௨ பே. ௨. ௰௫.

௮ அவன் அவர்களோடே இராத்திரிக்கு இங்கே தங்கி இருங்கள்; கர்த்தர் என்னோடே சொல்லும்படியே உங்களுக்கு மறுமொழி கொண்டுவருவேன் என்றான்; அப்படியே மோவாபின் பிரபுக்கள் பீலேயாமிடத்திலே தங்கியிருந்தார்கள்.

௯ பராபரன் பீலேயாமண்டைக்கு வந்து, உன்னிடத்திலிருக்கிற இந்த மனிதர் யாரென்றார்.

௰ ¶ பீலேயாம் பராபரனோடே சொன்னதாவது: சிப்போரின் குமாரனாகிய பாலாக்கென்ற மோவாபின் இராசா அவர்களை என்னண்டைக்கு அனுப்பி,

௰௧ இதோ எகிப்திலிருந்து வந்திருக்கிற ஒரு சனசதளம் பூமியின் விசாலத்தை மூடுகிறது; இப்பொழுது நீ வந்து எனக்காக அதைச் சபி; அப்பொழுது ஒருவேளை நான் அதனோடே யுத்தம்பண்ணி, அதைத் துரத்திவிடலாமென்று சொல்லச்சொன்னானென்றான்.

௰௨ அப்பொழுது பராபரன் பீலேயாமோடே, நீ அவர்களோடே போகவேண்டாம்; அந்தச் சனத்தைச் சபிக்கவும்வேண்டாம்; ஏனெனில் அது ஆசீர்வதிக்கப்பட்டதென்றார்.

௰௩ ¶ ஆகையால் பீலேயாம் காலமே எ

Digitized by Google

மூந்திருந்து பாலாக்கின் பிரபுக்களுடனே, உங்கள் தேசத்திற்குப் போய்விடுங்கள், ஏனெனில் உங்களோடேகூடப் போகிறதற்கு, கர்த்தர் எனக்கு உத்தரவுகொடுக்க மாட்டோம் என்றாரென்று சொன்னான்.

௰௪ அப்படியே மோவாபியருடைய பிரபுக்கள் எழுந்துபோய், பாலாக்கண்டைக்கு வந்து, பீலெயாம் எங்களோடேவரமாட்டேன் என்றானென்று சொன்னார்கள்.

௰௫ ¶ மறுபடியும் பாலாக் அவர்களிலும் கனமுள்ள அதிகமான பிரபுக்களை அனுப்பினான்.

௰௬ அவர்கள் பீலெயாமண்டைக்கு வந்து, அவனோடே சொன்னதாவது: நீ என்னண்டைக்கு வரமாட்டேனென்று சொல்லாயாகவென்றும்,

௰௭ உன்னை மிகவும் கனம்பண்ணவே பண்ணுவேன்; நீ என்னோடே சொல்வதையெல்லாம் செய்வேன்; நீ வந்து, எனக்காக அந்தச் சனத்தைச் சபியேன் என்றும், சிப்போரின் குமாரனாகிய பாலாக் சொல்லச்சொன்னார் என்றார்கள்.

௰௮ பீலெயாம் பாலாக்கின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: பாலாக் எனக்குத் தன் வீடுநிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும், நான் சிறியகாரியமானாலும் பெரியகாரியமானாலும் செய்கிறதினாலே, என் பராபரனாகிய கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது.

௰௯ இப்பொழுதும் கர்த்தர் அப்புறம் என்னோடே என்ன சொல்லுவார் என்கிறதை நான் அறியும்படிக்கு, நீங்களும் இந்த இராத்திரியிலே இங்கே இருங்களென்றான்.

௨௰ ¶ இரவிலே பராபரன் பீலெயாமண்டைக்கு வந்து, அவனுடனே, அந்த மனிதர் உன்னை அழைக்கவந்தார்களானால், நீ எழுந்து அவர்களோடே கூடப்போ; ஆனால் நாம் உன்னோடே சொல்லும் வார்த்தையின்படிமாத்திரம் நீ செய்யக்கடவாயென்றார்.

௨௧ ¶ பீலெயாம் காலமே எழுந்திருந்து, தன் கழுதையின்மேலே சேணம்போட்டு, மோவாபின் பிரபுக்களோடேகூடப் போனான்.

௨௨ ஆனால் அவன் போகிறதினாலே பராபரனுக்குக் கோபமூண்டது; கர்த்தரின் தூதனானவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றுகொண்டார்; அவனோவெனில் தன் கழுதையின்மேல் ஏறிப்போனான்; அவன் வேலைக்காரர் இரண்டுபேரும் அவனோடிருந்தார்கள்.

௨௩ உருவின தமது பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்து, வழியிலேநிற்கிற கர்த்தருடைய தூதனைக் கழுதை கண்டு, வழியைவிட்டு, வயலிலே விலகிப்போயிற்று; அதை வழிக்குத் திருப்பப் பீலெயாம் அதை அடித்தான்.

௨௪ ஆனால் கர்த்தருடைய தூதனானவர் இருபுறத்திலும் சுவர் இருந்த திராட்சத்தோட்டங்களின் பாதையிலே போய் நின்றார்.

௨௫ கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, மதில் ஓரமே ஒதுங்கி, பீலெயாமின் காலை மதிலோடே நெருக்கிற்று; அப்பொழுது திரும்ப அதை அடித்தான்.

௨௬ கர்த்தருடைய தூதன் அப்புறம்போய் வலதுபுறத்திற்கும், இடதுபுறத்திற்கும், விலக வழியில்லாத இடுக்கமான ஸ்தலத்திலே நின்றுகொண்டார்.

௨௭ அப்பொழுது கழுதை கர்த்தருடைய தூதனைக்கண்டு, பீலெயாமின்கீழ்ப் படுத்துக்கொண்டது; பீலெயாமோவெனில் கோபமூண்டவனாகி, கழுதையைத் தடியினால் அடித்தான்.

௨௮ அப்பொழுது கர்த்தர் *கழுதையின் வாயைத்திறந்தார்; அது பீலெயாமுடனே. நீர் என்னை இதனோடே மூன்றுதரம் அடித்ததற்கு நான் உமக்குஎன்ன செய்தேனென்றது. *௨ பே. ௨. ௰௬. யூதா. ௰௧.

௨௯ அப்பொழுது பீலெயாம் கழுதையைப்பார்த்து, நீ என்னைப் பரியாசம்பண்ணிவருகிறாய்; என்கையில் ஒரு பட்டயம்

Digitized by Google

இருந்தால் தாவிலை; இப்பொழுதுதானே உன்னைக் கொன்றுபோடுவேனென்றான்.

௩௰ கழுதையோவென்றால் பீலெயாமுடனே, நீர் என்னைக் கையாண்ட காலமெல்லாம் இந்நாள்வரைக்கும் நீர் ஏறின கழுதை நான் அல்லவோ, உமக்கு அப்படிச் செய்ய எப்போதாகிலும், எனக்குப் பழக்கமாயிருந்ததோ என்றது; அதற்கு அவன் இல்லையென்றான்.

௩௧ அப்பொழுது கர்த்தர் பீலெயாமின் கண்களைத் திறந்தார்; வழியிலே நின்று உருவின தமது பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனை அவன் கண்டு, குனிந்து, முகங்குப்புறப் பணிந்தான்.

௩௨ கர்த்தருடைய தூதனானவர் அவனோடே சொன்னதாவது: நீ உன் கழுதையை இதனோடே மூன்றுதரம் அடித்ததென்ன? இதோ நாம் எதிரியாகப் புறப்பட்டு வந்தோம்; ஏனெனில் இந்த வழி நமக்கு முன்பாக மாறுபாடாயிருக்கின்றது.

௩௩ கழுதையோவெனில் நம்மைக்கண்டு, இந்த மூன்றுதரம் நமது முகத்தைவிட்டு விலகிற்று; நமது முகத்தைவிட்டு விலகாதிருந்ததானால், இப்பொழுது நாம் உன்னைத்தானும் கொன்றுபோட்டு, கழுதையை உயிரோடே வைப்போமே என்றார்.

௩௪ அப்பொழுது பீலெயாம் கர்த்தருடைய தூதனுடனே, நான் பாவம்செய்தேன்; ஏனெனில் தேவரீர் வழியிலே எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன்; இப்பொழுதும் உமது பார்வைக்கு இது பொல்லாப்பாயிருந்தால் திரும்பிக் கொள்ளுவேன் என்றான்.

௩௫ கர்த்தருடைய தூதனானவர் பீலெயாமுடனே, அந்த மனிதரோடே கூடப்போ; ஆனால் நாம் உன்னோடே சொல்லும் வசனத்தைமாத்திரமே நீ சொல்லக்கடவாயென்றார்; அப்படியே பீலெயாம் பாலாக்கின் பிரபுக்களோடே கூடப்போனான்.

௩௬ ¶ பீலெயாம் வருகிறதைப் பாலாக் கேட்டபொழுது, கடைசி எல்லையான அர்னோன் நதியின் ஓரத்திலிருக்கிற மோவாபின் பட்டணமட்டும் அவனுக்கு எதிர்கொண்டுபோய்,

௩௭ பீலெயாமுடனே, உன்னை அழைப்பிக்க நான் உன்னண்டைக்கு ஆள் அனுப்பவே அனுப்பவில்லையோ? என்னண்டைக்கு ஏன் வாராதேபோனாய்? உன்னை ஏற்றபிரகாரமாக நான் கனம்பண்ணமாட்டேனோ என்றான்.

௩௮ அப்பொழுது பீலெயாம் பாலாக்குடனே, இதோ உம்மண்டைக்கு வந்தேன்; இப்பொழுதும் ஏதாகிலும் சொல்ல என்னாலே ஆகவே ஆகுமோ? பராபரன் என் வாயிலே கொடுக்கும் வசனத்தையே சொல்லுவேனென்று சொல்லி,

௩௯ ¶ பாலாக்குடனேகூடப் போனான்; அவர்கள் கீரியாத் ஊத்சோத்திற்கு வந்தார்கள்.

௪௰ அங்கே பாலாக் ஆடுமாடுகளை அடித்து, பீலெயாமுக்கும் அவனோடிருந்த பிரபுக்களுக்கும் அனுப்பினான்.

௪௧ ¶ மறுநாள் காலமேயோவென்றால் பாலாக் பீலெயாமைக் கூட்டிக்கொண்டு, அவனைப் பாகாலுடைய மேடுகளில் ஏறப்பண்ணினான்; அவ்விடத்திலிருந்து சனத்தின் கடைசிப் பாளயத்தைப் பார்த்தான்.

உ௩. அதிகாரம்.

பீலெயாம் பாலாக்குடனே, நீர் எனக்கு இங்கே ஏழு பலிபீடங்களைக் கட்டி, ஏழு காளை எருதுகளையும் ஏழு ஆட்டுக்கடாவையும் இங்கே எனக்கு ஆயத்தமாக நிறுத்துமென்றான்.

௨ பீலெயாம் சொன்னபடியே பாலாக் செய்தான்; பாலாக்கும் பீலெயாமும் ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளை எருதையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டார்கள்.

௩ அப்பொழுது பீலெயாம் பாலாக்குடனே, உம்முடைய சர்வாங்கதகனத்தண்டை

Digitized by Google

யிலே நின்றிரும்; நான் போகிறேன்; ஒருவேளை கர்த்தர் வந்து என்னைச் சந்திப்பார்; அவர் எனக்குக் காண்பிக்கிறதை உமக்கு அறிவிப்பேனென்று சொல்லி, ஒரு மேட்டின்மேலே போனான்.

௪ பராபரன் பிலேயாமைச் சந்தித்தார்; அப்பொழுது அவருடனே, நான் ஏழு பலிபீடங்களை ஆயத்தம்பண்ணி, ஒவ்வொரு பலிபீடத்தில் ஒவ்வொரு காளை எருதையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டேன் என்றான்.

௫ அப்பொழுது கர்த்தர் பிலேயாமின் வாயிலே வசனத்தைக் கொடுத்து, நீ பாலாக்கண்டையிலே திரும்பிப்போய், இன்னபடி சொல்லக்கடவாயென்றார்.

௬ அவனண்டைக்குத் திரும்பிப்போனான்; இதோ பாலாக் மோவாபுடைய சகல பிரபுக்களோடும்கூடத் தன் சர்வாங்கதகனத்தண்டையில் நின்றிருந்தான்.

௭ ¶ அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துச் சொன்னதாவது: நீ வந்து எனக்காக யாக்கோபைச் சபி; நீ வந்து இஸ்ரவேலை வெறுத்துவிடு என்று மோவாபின் இராசாவாகிய பாலாக் என்னைக் கிழக்குப்பர்வதங்களிலிருக்கிற சூரியாவிலிருந்து அழைத்துவரப்பண்ணினான்.

௮ பராபரன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?

௯ ஏனெனில் நான் கல்மலைகளின் கொடுமுடியில் இருந்து அவனைக் கண்டு, மேடுகளிலிருந்து அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்; இதோ அந்தச் சனம் சாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருக்கும்.

௰ யாக்கோபின் *தூளையும் இஸ்ரவேலுடைய கால்பங்கின் இலக்கத்தையும் எண்ணுபவன் யார்? என் ஆத்துமா நீதிமான்களின் மரணமாய் மரித்து, என் முடிவு அவர்கள் முடிவைப்போல இருக்கக்கடவதென்றான். * ௧ மோ. ௨௮. ௰௪.

¶ அப்பொழுது பாலாக் பிலேயாமுடனே, நீ எனக்கு என்னசெய்துவருகிறீர் என் சத்துருக்களைச் சபிக்க உன்னை அழைப்பித்தேன்; ஆனால் இதோ அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தாயென்றான்.

௰௨ அவன் பிரதியுத்தாரமாக, கர்த்தர் என் வாயிலே கொடுத்ததையே சொல்ல, நான் கவனமாயிருக்கவேண்டாமோ என்றான்.

௰௩ ¶ அப்பொழுது பாலாக் அவனுடனே, நீ அவர்களைக் காணத்தக்க வேறொரு இடத்திற்கு என்னோடேகூட நடந்துவா; அங்கே அவர்களையெல்லாம் காணாமல் அவர்கள் கடைசிப் பாளயத்தைமாத்திரம் காண்பாய்; அங்கேயிருந்து எனக்காக அவர்களைச் சபி என்று சொல்லி,

௰௪ அவனைப் பிஸ்காவின் கொடுமுடியில் இருக்கிற சோப்பீம் வெளியிலே அழைத்துக்கொண்டுபோய், ஏழு பலிபீடங்களைக் கட்டினான்; ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளை எருதையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டான்.

௰௫ அவன் பாலாக்குடனே, இங்கே உம்முடைய சர்வாங்கதகனத்தண்டையிலே நின்றிரும்; நான் அங்கே அவரைச் சந்தித்துக்கொள்ளப் போவேனென்றான்.

௰௬ கர்த்தர் பிலேயாமைச் சந்தித்து, வசனத்தை அவன் வாயிலே கொடுத்து, நீ பாலாக்கண்டையிலே திரும்பிப்போய், இன்னபடி சொல்லக்கடவாயென்றார்.

௰௭ அவனண்டை அவன் வருகிறபொழுது, இதோ அவன் மோவாபின் பிரபுக்களோடுங்கூடத் தன்னுடைய சர்வாங்கதகனத்தண்டையிலே நின்றிருந்தான்; பாலாக் அவனுடனே, கர்த்தர் சொன்னதென்னவென்றான்.

௰௮ ¶ அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துச் சொன்னதாவது: பாலாகே, எழுந்து கேளும்; சிப்போரின் குமாரனே, எனக்குச் செவிகொடும்.

௰௯ *பராபரன் பொய்சொல்ல, ஒரு மனிதன் அல்ல; சொன்னது தமக்கு மனஸ்தாபமாயிருக்க, அவர் ஒரு மனுப்புத்திரன்

Digitized by Google

அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்
பாரோ? அவர் வசனித்தும் அதை நிறை
வேற்றாதிருப்பாரோ? * ௧ சாமு. ௰௫. ௨௯.
௨௰ இதோ ஆசீர்வதிக்கக் கட்டளை பெற்
றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார்; அதை நான்
திருப்பக்கூடாது.
௨௧ யாக்கோபிலே வருத்தம் தெரிகிறது
மில்லை; இஸ்ரவேலிலே பிரயாசம் காணப்
படுகிறதும் இல்லை; அவர்களுடைய பரா
பரனாகிய கர்த்தர் அவர்களோடிருக்கிறார்;
இராசாவின் கெம்பீரம் அவர்களிடத்தில்
இருக்கின்றது.
௨௨ பராபரன் அவர்களை எகிப்திலிருந்து
புறப்படப்பண்ணினார்; காண்டாமிருகத்
துக்கொத்த சத்துவம் அவர்களுக்கு இருக்
கின்றது.
௨௩ ஏனெனில் யாக்கோபுக்கு விரோதமா
கத்தக்க நிமித்தம்பார்க்குதலுமில்லை; இஸ்ர
வேலுக்கு விரோதமாகத்தக்க குறிசொல்லு
தலுமில்லை; பராபரன் செய்தது ஏதென்று
கொஞ்சக்காலத்திலே யாக்கோபையும்இஸ்
ரவேலையும்குறித்துச் சொல்லப்படும்.
௨௪ இதோ சனம் துஷ்டசிங்கத்தைப்
போல எழும்பி, இளஞ்சிங்கத்தைப்போல
உயரும்; அது எடுத்த இரையைப் பட்சித்
து, வெட்டுண்டவர்களின் இரத்தத்தைக்
குடியாதிருக்கும்மட்டும் படுத்துக்கொள்
ளாதென்றான்.
௨௫ ¶ அப்பொழுது பாலாக் பீலெயாமு
டனே, நீ அதைச் சபிக்கவே சபிக்கவும்
வேண்டாம்; ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்க
வும்வேண்டாமென்றான்.
௨௬ பீலெயாம் பாலாக்குக்குப் பிரதியுத்தா
ரமாக கர்த்தர் சொல்லும்படியெல்லாம்
செய்வேனென்று உம்மோடே நான் சொல்
லவில்லையோ என்றான்.
௨௭ ¶ அப்பொழுது பாலாக் பீலெயாமுட
னே, வா, வேறொரு இடத்திற்கு உன்னை
அழைத்துக்கொண்டுபோவேன்; நீ அங்
கேயிருந்து எனக்காக அதைச் சபிக்க,
ஒருவேளை பராபரனுடைய பார்வைக்குச்
செவ்வையாயிருக்கும் என்று சொல்லி,
௨௮ அவனை வனாந்தரத்திற்கு எதிராயிருக்
கிற பேயோரின் கொடுமுடிக்கு அழைத்
துக்கொண்டு போனான்.
௨௯ அப்பொழுது பீலெயாம் பாலாக்கு
டனே, இங்கே எனக்கு ஏழு பலிபீடங்க
ளைக் கட்டி, இங்கே எனக்கு ஏழு காளை எரு
தையும் ஏழு ஆட்டுக்கடாவையும் ஆயத்த
மாக நிறுத்தும் என்றான்.
௩௰ பீலெயாம் சொன்னபடி பாலாக் செ
ய்தான்; அப்பொழுது ஒவ்வொரு பீடத்
தில் ஒவ்வொரு காளை எருதையும் ஒவ்
வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டான்.

௨௪. அதிகாரம்.

இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறது கர்த்தரின்
பார்வைக்கு ஏற்றிருக்கும் என்றதை பீலெ
யாம் கண்டபொழுதோவெனில், அவன்
முந்திச் செய்துவந்ததுபோல, நிமித்தங்
களைச் சந்தித்துக்கொள்ளப் போகாமல்,
தன் முகத்தை வனாந்தரத்திற்கு நேராகத்
திருப்பி,
௨ தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ரவேல்
தன் கோத்திரங்களின்படியே தங்கிஇருக்
கிறதைப் பார்த்தான்; அப்பொழுது பரா
பரனுடைய ஆவி அவன்மேல் வந்ததினால்,
௩ அவன் தன் வாக்கியத்தை எடுத்துச்
சொன்னது: பேயோரின் குமாரனாகிய பீ
லெயாம் சொல்லுகிறதென்ன? கண்தெளி
விக்கப்பட்ட புருஷன் சொல்லுகிறதெ
ன்ன?
௪ பராபரனுடைய வார்த்தைகளைக் கே
ட்டு, சர்வத்திற்கும் வல்லவரின் தரிசனத்
தைக் கண்டு, தாழவிழும்பொழுது, கண்
கள் திறக்கப்படுகிறவனே சொல்லுகிற
தென்னவெனில்,
௫ யாக்கோபே, உன் கூடாரங்களும், இ
ஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும், எத்
தனை வடிப்பமாயிருக்கின்றன?
௬ பரவிப்போகிற ஆறுகளைப்போலவும்,
நதி அருகான தோட்டங்களைப்போலவும்,

Digitized by Google

கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப்போலவும், தண்ணீர்கள் ஓரத்தில் இருக்கிற கேதுருக்களைப்போலவும் இருப்பார்கள்.

௭ அவர்களுடைய தொட்டிகளிலிருந்து தண்ணீர் பாயும்; அவர்கள் வித்துத் திரள் நீர்ப்பாய்ச்சலாயிருக்கும்; அவர்களுடைய இராசா ஆகாகைப்பார்க்கிலும் உயருவான்; அவர்கள் இராச்சியம் மேன்மையாயிருக்கும்.

௮ பராபரன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; காண்டாமிருகத்துக்கொத்த சத்துவங்கள் அவர்களுக்கு இருக்கின்றது; அவர்கள் தங்கள் சத்துருக்களாகிய சாதிகளைப் பட்சித்து, அவர்கள் எலும்புகளை நொறுக்கி, அவர்களைத் தங்கள் அம்புகளாலே எய்வார்கள்.

௯ சிங்கத்திற்கும் துஷ்டசிங்கத்திற்குமே ஒப்பாய் மடங்கிப் படுத்துக்கொண்டார்கள், அவர்களை எழுப்புபவன் யார்? உங்களை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்; உங்களைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவனென்றான்.

௰ ¶ அப்பொழுது பாலாக் பீலேயாமின்மேல் கோபம்மூண்டவனாகிக் கையோடே கை தட்டி, பீலேயாமோடே சொன்னதாவது: என் சத்துருக்களைச் சபிக்க உன்னை அழைத்தனுப்பினேன்; நீயோவெனில் இதோ இந்த மூன்றுமுறையும் அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தாய்.

௰௧ இப்பொழுதும் உன்னிடத்திற்கு ஓடிப்போ; உன்னைக் கனம்பண்ணவே பண்ணுவேனென்றேன்; ஆனால் இதோ கர்த்தர் உனக்குக் கனம்வராதபடிக்குப் பண்ணினாரென்றான்.

௰௨ அப்பொழுது பீலேயாம் பாலாக்கோடே சொன்னதாவது: பாலாக் எனக்குத் தன் வீடுநிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும் நான் என் மனதாய் நன்மையாகிலும் தீமையாகிலும் செய்கிறதற்குக் கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது; கர்த்தர் சொல்வதையே சொல்லுவேனென்று,

௰௩ நீர் என்னண்டைக்கு அனுப்பின உம்முடைய தானாபதிகளோடும் நான் சொல்லவில்லையோ?

௰௪ இப்பொழுதும் இதோ நான் என் சனத்தண்டைக்குப் போய்விடுகிறேன்; பிற்காலத்தில் இந்தச் சனம் உம்முடைய சனத்திற்குச் செய்வது இன்னதென்று உமக்கு யோசனையாய்ச் சொல்லுவேன் வாருமென்றான்.

௰௫ ¶ அவன் தன் வாக்கியத்தை எடுத்துச் சொன்னது: பேயோரின் குமாரன் பீலேயாம் சொல்லுகிறதென்ன? கண்தெளிவிக்கப்பட்ட புருஷன் சொல்லுகிறதென்ன?

௰௬ பராபரனுடைய வார்த்தைகளைக் கேட்டு, உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்து, சர்வத்திற்கும் வல்லவரின் தரிசனத்தைக் கண்டு, தாழவிழுகையில், கண்கள் திறக்கப்படுகிறவனே சொல்லுகிறதென்னவெனில்,

௰௭ அவரைக் காண்பேன்; ஆனால் இப்பொழுது அல்ல, அவரைப் பார்ப்பேன்; ஆனால் சமீபத்திலல்ல, ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதித்து, ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பி, மோவாபியரின் எல்லைகளை நொறுக்கி, சேத் புத்திரரையெல்லாம் நிர்மூலமாக்கும்.

௰௮ ஏதோம் அவனுக்குச் சுதந்தரமாகி, சேயீர் தன் சத்துருக்களுக்குச் சுதந்தரமாய்ப் போம்; இஸ்ரவேல் பலம்செய்யும்.

௰௯ *ஆளுகிறவர் யாக்கோபிலிருந்து வந்து, பட்டணங்களில் மீதியானதை அழிப்பாரென்றான். *மிகா. ௫. ௧.

௨௰ ¶ அவன் ஆமலேக்கைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்து, ஆமலேக் சாதிகளில் முந்தி எழும்பினவன், ஆனால் அவன் பின்சந்ததி முழுவதும் அழியுமென்றான்.

௨௧ ¶ அவன் கேனியரைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்து, உன் வாசஸ்தலம் அரணிப்பானது; கல்மலையில் உன் கூட்டைக் கட்டிப்போட்டாய்.

Digitized by Google

௨௨ ஆகிலும் கேனியன் அழிந்துபோவான்;
அசூர் உன்னைச் சிறைபிடித்துக்கொண்டு
போக, எத்தனைகாள் செல்லுமென்றான்.
௨௩ பின்னையும் அவன் தன் வாக்கியத்தை
எடுத்து, ஆ, இதைப் பராபரன் செய்யும்
பொழுது, உயிரோடிருப்பவன் யார்?
௨௪ கித்தீமின் கரைதுறையிலிருந்து கப்
பல்கள் வந்து, அசூரைச் சிறுமைப்படுத்தி,
ஏபேரையும் சிறுமைப்படுத்தும்; ஆனால்
அவனும் அழிந்துபோவான் என்றான்.
௨௫ ¶ பிற்பாடு பீலேயாம் எழுந்து புறப்
பட்டு, தன்னிடத்திற்குத் திரும்பினான்; பா
லாக்கும் தன் வழியே போனான்.

௨௫. அதிகாரம்.

இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருந்தது;
அங்கே சனம் மோவாப் குமாரத்திகளோ
டே வேசித்தனம்பண்ணத் துவக்கிற்று.
௨ *இவர்கள் சனத்தைத் தங்கள் தேவர்க
ளுடைய பலிகளின் விருந்துகளுக்கு அ
ழைத்தார்கள்; சனம் போய்ப் புசித்து, அ
வர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டது.

*௪ மோ. ௩௧. ௰௬.

௩ இஸ்ரவேல் பேயோர் மலை பாகாலுக்கு
உடந்தையாயிற்று; ஆகையால் இஸ்ரவேலி
ன்மேலே கர்த்தருடையகோபம்மூண்டது.
௪ கர்த்தர் மோசேயுடனே, நீ சனத்தின்
தலைவரையெல்லாம் கூட்டிக்கொண்டு,
கர்த்தருடைய கோபத்தின் உக்கிரம் திரும்
ப இஸ்ரவேலைவிட்டு நீங்கும்படிக்கு, அப்
படிக்கொத்தவர்களைக் கர்த்தருக்காகச் சூரி
யனுக்கு எதிரே தூக்கிவிடு என்றார்.
௫ அப்படியே மோசே இஸ்ரவேலின் நியா
யாதிபதிகளோடே நீங்கள், அவரவர் பே
யோர்மலை பாகாலுக்கு உடந்தையான உங்
கள் மனிதரைக் கொன்றுவிடுங்கள் என்
றான்.
௬ அப்பொழுது இதோ மோசேயின் கண்
களுக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய எல்
லாச் சபையின் கண்களுக்கும்முன்பாக
வும், இவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வா
சலுக்குமுன்பாக அழும்போதும், இஸ்ர
வேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிச்
சியைத் தன் சகோதரரிடத்திலே அழைத்
துக்கொண்டு வந்தான்.
௭ அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமா
ரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ்
கண்டபொழுது, அவன் நடுச்சபையிலி
ருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கை
யிலே பிடித்து,
௮ இஸ்ரவேல் மனிதன் வேசித்தனம்பண்
ணும் மூலையிலே அவன் பின்னாலே போய்,
இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரியுமா
கிய இருவரையும் ஈட்டி அவள் வயிற்றில்
உருவிப்போக அதினாலே குத்திப்போட்
டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரி
லுண்டான வாதை நின்றுபோயிற்று.
௯ அந்த வாதையால் செத்தவர்கள் இரு
பத்து நாலாயிரம்பேராயிருந்தார்கள்.
௰ ¶ கர்த்தர் மோசேயோடே சொன்னதா
வது:
௰௧ நாம் நம்முடைய எரிச்சலில் இஸ்ர
வேல் புத்திரரை நிர்மூலம் ஆக்காதபடிக்
கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான
எலெயாசாரின் மகன் பினெகாஸ், அவர்
கள் நடுவில் நமக்காகப் பத்திவயிராக்கி
யம் காண்பித்ததினாலே, இஸ்ரவேல் புத்தி
ரர்மேல் உண்டான நம்முடைய உக்கிரத்
தைத் திருப்பினான்.
௰௨ ஆகையால் இதோ நாம் அவனுக்கு
நம்முடைய சமாதானத்தின் உடம்படிக்
கையைக் கட்டளையிடுகிறோம்.
௰௩ அவன் தன் பராபரனுக்காகப் பத்தி
வயிராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத
திரருக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கின
படியினாலே, அவனுக்கும் அவனுக்குப்பிற்
பாடு அவன் வித்திற்கும் நித்திய ஆசாரிய
பட்டத்தின் உடம்படிக்கை உண்டாயிருக்
குமென்று சொல்லென்றார்.
௰௪ மீதியானிச்சியோடேகூடக் குத்துண்
டுசெத்த இஸ்ரவேல் மனிதனுடைய பேர்
சலுவின் குமாரன் சிம்றி, அவன் சிமெயோ

Digitized by Google

னியரின் தகப்பன் வீட்டில் ஒரு பிரபுவா
யிருந்தவன்.
௧௫ குத்துண்ட மீதியான் சாதியான ஸ்திரி
யின் பேரோவெனில், சூரின் குமாரத்தி
கஸ்பி; இவன் மீதியானியரின் தகப்பன்
வீட்டாரான சனசதளங்களின் தலைவனாயி
ருந்தான்.
௧௬ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச்
சொன்னதாவது:
௧௭ மீதியானியரை இறுகப்பிடித்து, அவர்
களை வெட்டிப்போடுங்கள்.
௧௮ ஏனென்றால் பேயோரின் சம்மதியி
லும் பேயோர் காரியத்தின் நிமித்தம் உண்
டான வாதையின் நாளிலே, குத்துண்ட அ
வர்கள் சகோதரியாகிய கஸ்பி என்ற மீதி
யான் பிரபுவினுடைய குமாரத்தியின் சம்ம
தியிலும், அவர்கள் உங்களுக்குச் செய்த
தங்கள் சர்ப்பனைகளினாலே, உங்களை மோ
சம்போக்கி இறுகப்பிடித்தார்களென்றார்.

௨௬. அதிகாரம்.

அந்த வாதைக்குப் பிற்பாடு சம்பவித்த
தேதென்றால், கர்த்தர் மோசேயோடும் ஆ
சாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெ
யாசாரோடும் சொன்னதாவது:
௨ இஸ்ரவேல் புத்திரரின் சகல சபை
யான அவர்கள் பிதாக்களுடைய வீட்டி
லே, இருபதுவயதுமுதல்கொண்டிருந்து
இஸ்ரவேலிலே யுத்தத்திற்குப் புறப்படத்
தக்கவர்களையெல்லாம் தொகை ஏற்றுங்க
ளென்றார்.
௩ அப்பொழுது மோசேயும் ஆசாரியனா
கிய எலெயாசாரும் எரிகோவின் கிட்ட
இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோ
வாபின் சமனான வெளிகளிலே அவர்க
ளோடே பேசி,
௪ கர்த்தர் மோசேக்கும் எகிப்துதேசத்தி
லிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திர
ருக்கும் கற்பித்திருக்கிறபடியே, இருபது
வயதுமுதல்கொண்டிருக்கிறவர்களை எண்
ணுங்கள் என்றார்கள்.

௫ ¶ ரூபன் இஸ்ரவேலின் முதல்பேறான
வன்; அவனுடைய குமாரர், ஆனோக்கிய
ரின் வம்சத்தகப்பன் ஆனோக்கும், பலூவி
யரின் வம்சத்தகப்பன் பலூவும்,
௬ எத்சிரோனியரின் வம்சத்தகப்பன் எத்
சிரோனும், கற்மியரின் வம்சத்தகப்பன் கற்
மியும்தானே.
௭ இவைகளே ரூபனியரின் வம்சங்கள்;
அவர்களில் இலக்கம்பார்க்கப்பட்டவர்
கள், நாற்பத்துமூவாயிரத்து எழுநூற்று முப்
பதுபேர்.
௮ பலூவின் பிள்ளைகளில் ஒருவன் எலி
யாப் என்றவன்.
௯ எலியாபின் குமாரர் நேமுவேல், தாத்
தான், அபீராம், என்றவர்கள்; கர்த்தருக்கு
விரோதமாகச் சண்டைபண்ணுகிற கோரு
கின் கூட்டாளிகளாகி, மோசேக்கும் ஆரோ
னுக்கும் விரோதமாகச் சண்டைபண்ணின
தாத்தானும் அபீராமும் என்ற சபையில்
அழைக்கப்பட்டவர்கள் இவர்கள்தான்.
௰ பூமி தன் வாயைத் திறந்து, அவர்களை
யும் கோருலகையும் விழுங்கினதினாலும், அக்
கினி இருநூற்று ஐம்பதுபேரைப் பட்சித்த
தினாலும், அந்தக் கூட்டம் செத்து ஒரு அ
டையாளமாயிற்று.
௧௧ கோருகின் குமாரரோவெனில் சாவா
திருந்தார்கள்.
௧௨ ¶ சிமெயோனுடைய குமாரரின் வம்
சங்களாவது: நேமுவேலின் சந்ததியான
நேமுவேலரின் வம்சமும், யாமீனின் சந்த
தியான யாமீனியரின் வம்சமும், யாகீனின்
சந்ததியான யாகீனியரின் வம்சமும்,
௧௩ சேராகின் சந்ததியான சேராகியரின்
வம்சமும், சவுலின் சந்ததியான சவுலியரின்
வம்சமும்தானே.
௧௪ இவைகளே சிமெயோனியரின் வம்
சங்கள், அவர்கள் இருபத்திரண்டாயிரத்து இரு
நூறுபேர்.
௧௫ ¶ காத்துடைய குமாரரின் வம்சங்க
ளாவது: செப்போனின் சந்ததியான செப்
போனியரின் வம்சமும், ஆகியின் சந்ததி

Digitized by Google

யான ஆஸ்னியரின் வம்சமும், ஏரியின் சந்
ததியான ஏரியரின் வம்சமும்,
௰௬ ஒஸ்னியின் சந்ததியான ஒஸ்னியரின்
வம்சமும், ஏரியின் சந்ததியான ஏரியின்
வம்சமும்,
௰௭ ஆரோதின் சந்ததியான ஆரோதியரின்
வம்சமும், அரெலியின் சந்ததியான அரெ
லியரின் வம்சமும்தானே.
௰௮ இவைகளே காத் புத்திரரின் வம்சங்
கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்ட
வர்கள், நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.
௰௯ ¶ யூதாவின் குமாரரான ஏரும், ஓனா
னும் கானான்தேசத்திலே செத்தார்கள்.
௨௰ யூதாவுடைய மற்றக் குமாரரின் வம்
சங்களாவது: சேலாவின் சந்ததியான சே
லாவியரின் வம்சமும், பேரேசின் சந்ததி
யான பேரேசியரின் வம்சமும், சேராகின்
சந்ததியான சேராகியரின் வம்சமும்தானே.
௨௧ பேரேசுடைய குமாரரின் வம்சங்க
ளாவெனில், எஸ்ரோனின் சந்ததியான
எஸ்ரோனியரின் வம்சமும், ஆமூலின் சந்
ததியான ஆமூலியரின் வம்சமும்தானே.
௨௨ இவைகளே யூதாவின் வம்சங்கள்;
அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்
கள், எழுபத்தாறாயிரத்து ஐந்நூறுபேர்.
௨௩ ¶ இசக்காருடைய குமாரரின் வம்சங்
களாவது: தோலாவின் சந்ததியான தோலா
வியரின் வம்சமும், பூவாவின் சந்ததியான
பூவாவியரின் வம்சமும்,
௨௪ யாசுபின் சந்ததியான யாசுபியரின்
வம்சமும், சிம்ரோனின் சந்ததியான சிம்
ரோனியரின் வம்சமும்தானே.
௨௫ இவைகளே இசக்காரின் வம்சங்கள்;
அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்
கள், அறுபத்து நாலாயிரத்து முந்நூறுபேர்.
௨௬ ¶ செபுலோனுடைய குமாரரின் வம்
சங்களாவது: சேரேதின் சந்ததியான சேரே
தியரின் வம்சமும், ஏலோனின் சந்ததியான
ஏலோனியரின் வம்சமும், யாலேயேலின்
சந்ததியான யாலேயேலியரின் வம்சமும்
தானே.
௨௭ இவைகளே செபுலோனியரின் வம்
சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்
பட்டவர்கள் அறுபதினாயிரத்து ஐந்நூறு
பேர்.
௨௮ ¶ யோசேப்புடைய குமாரரான மனா
சே, எப்பிராயீம் என்றவர்களின் வம்சங்க
ளாவது:
௨௯ மனாசேயினுடைய குமாரரின் வம்
சங்கள் ஏதெனில், மாகீரின் சந்ததியான
மாகீரியரின் வம்சமும், மாகீர் பெற்ற கிலெ
யாதின் சந்ததியான கிலெயாதியரின் வம்ச
மும்,
௩௰ கிலெயாத் பெற்ற இயேசேரின் சந்ததி
யான் இயேசேரியரின் வம்சமும், ஏலேக்
கின் சந்ததியான ஏலேக்கியரின் வம்சமும்,
௩௧ அஸ்ரியேலின் சந்ததியான அஸ்ரியே
லரின் வம்சமும், சேகேமின் சந்ததியான
சேகேமியரின் வம்சமும்,
௩௨ செமீதாவின் சந்ததியான செமீதாவிய
ரின் வம்சமும், ஏப்பேரின் சந்ததியான ஏப்
பேரியரின் வம்சமும்தானே.
௩௩ ஏப்பேரின் குமாரனான செலாப்பெ
யாத்திற்கோவெனில், குமாரர் இல்லாமல்,
குமாரத்திகள்மாத்திரம் இருந்தார்கள்; இ
வர்கள் நாமங்கள், மக்லாள், நோவாள், ஒக்
லாள், மில்க்காள், திர்சாள் என்பன.
௩௪ இவைகளே மனாசேயின் வம்சங்கள்;
அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்
கள் ஐம்பத்திராயிரத்து எழுநூறுபேர்.
௩௫ ¶ எப்பிராயீமுடைய குமாரரின் வம்
சங்களாவது: சூத்தெலாகின் சந்ததியான
சூத்தெலாகியரின் வம்சமும், பெகேரின்
சந்ததியான பெகேரியரின் வம்சமும், தாகா
னின் சந்ததியான தாகானியரின் வம்சமும்,
௩௬ சூத்தெலாக் பெற்ற ஏரானின் சந்ததி
யான ஏரானியரின் வம்சமும்தானே.
௩௭ இவைகளே எப்பிராயீம் புத்திரரின்
வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்
கப்பட்டவர்கள் முப்பத்திராயிரத்து ஐந்நூ
றுபேர்; இவைகளே யோசேப் புத்திரரின்
வம்சங்கள்.

Digitized by Google

௩௮ ¶ பென்யமீனுடைய குமாரரின் வம்சங்களாவது: பேலாவின் சந்ததியான பேலாவியரின் வம்சமும், அஸ்பேலின் சந்ததியான அஸ்பேலியரின் வம்சமும், அகிராமின் சந்ததியான அகிராமியரின் வம்சமும்,

௩௯ சூப்பாமின் சந்ததியான சூப்பாமியரின் வம்சமும், ஊப்பாமின் சந்ததியான ஊப்பாமியரின் வம்சமும்,

௪௰ பேலாப் பெற்ற ஆரேதின் சந்ததியான ஆரேதியரின் வம்சமும், நாமானின் சந்ததியான நமானியரின் வம்சமும்தானே.

௪௧ இவைகளே பென்யமீன் புத்திரரின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து அறுநூறுபேர்.

௪௨ ¶ தாணுடைய குமாரரின் வம்சங்கள்; சூகாமின் சந்ததியான சூகாமியரின் வம்சம்தானே; இவைகள் தாணின் வம்சங்கள்.

௪௩ சூகாமியரின் வம்சங்களில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் எல்லாரும் அறுபத்துநாலாயிரத்து நானூறுபேர்.

௪௪ ¶ ஆசேருடைய குமாரரின் வம்சங்களாவது: இம்னாவின் சந்ததியான இம்னாவியரின் வம்சமும், இஸ்வியின் சந்ததியான இஸ்வியரின் வம்சமும், பெரீயாவின் சந்ததியான பெரீயாவியரின் வம்சமும்,

௪௫ பெரீயா பெற்ற ஏபேரின் சந்ததியான ஏபேரியரின் வம்சமும், மல்கியேலின் சந்ததியான மல்கியேலியரின் வம்சமும்தானே.

௪௬ ஆசேருடைய குமாரத்தியின்பேர் சாராள்.

௪௭ இவைகளே ஆசேர் புத்திரரின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்துமூவாயிரத்து நானூறுபேர்.

௪௮ ¶ நப்தலியினுடைய குமாரரின் வம்சங்களாவது: யாத்சேயேலின் சந்ததியான யாத்சேயேலியரின் வம்சமும், கூனியின் சந்ததியான கூனியரின் வம்சமும்,

௪௯ எத்சேரின் சந்ததியான எத்சேரியரின் வம்சமும், சில்லேமின் சந்ததியான சில்லேமியரின் வம்சமும்தானே.

௫௰ இவைகளே நப்தலியின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்தையாயிரத்து நானூறுபேர்.

௫௧ ¶ இஸ்ரவேல் புத்திரரில் இலக்கம்பார்க்கப்பட்ட இவர்கள் அறுலக்ஷத்தோராயிரத்து எழுநூற்று முப்பதுபேராயிருந்தார்கள்.

௫௨ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௫௩ இவர்களுக்குத் தேசம் பேர்களின் இலக்கத்திற்குத்தக்கதாய்ச் சுதந்தரமாகப் பங்கிடப்படக்கடவது.

௫௪ அநேகருக்கு அநேகமும் கொஞ்சமானவர்களுக்குக் கொஞ்சமுமாய், சுதந்தரமாகக் கொடுப்பாயாக; அவர்களில் எண்ணப்பட்டவர்களின் இலக்கத்திற்குத்தக்கதாக அவரவர்களுக்கு அவரவர்கள் சுதந்தரம் கொடுக்கப்படக்கடவது.

௫௫ ஆகிலும் சீட்டுகளைப் போட்டு, தேசம் பங்கிடப்படக்கடவது; தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களுக்கு இருக்கும் நாமங்களின்படியே சுதந்தரிக்கக்கடவர்கள்.

௫௬ அநேகமானவர்களுக்கும், கொஞ்சமானவர்களுக்கும் அவர்களுடைய சுதந்தரங்கள் சீட்டுகள் விழுகிறபடியே பங்கிடப்படுவதாகவென்றார்.

௫௭ ¶ இலக்கம்பார்க்கப்பட்ட இலேவியரின் வம்சங்களாவது: கெர்சோனின் சந்ததியான கெர்சோனியரின் வம்சமும், கோகாத்தின் சந்ததியான கோகாத்தியரின் வம்சமும், மெராரியின் சந்ததியான மெராரியரின் வம்சமும்,

௫௮ இலேவியின் மற்ற வம்சங்களாகிய லீப்னியரின் வம்சமும், எப்ரோனியரின் வம்சமும், மகேலியரின் வம்சமும், மூசியரின் வம்சமும், கோராகியரின் வம்சமும்தானே; கோகாத் அம்ராமைப் பெற்றான்.

௫௯ அம்ராமுடைய பெண்சாதியின் பேர் யோகெபேத்; அவள் இலேவிக்கு எகிப்

Google

திலே பிறந்த குமாரத்தி; அவள் அம்ராமுக்கு ஆரோனையும், மோசேயையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள்.

௬௰ ஆரோனுக்கு நாதாபும், அபியூவும், எலெயாசரும், இத்தாமாரும் பிறந்தார்கள்.

௬௧ ஆனால் நாதாபும், அபியூவும் அந்நிய அக்கினியைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவருகிறபொழுது, செத்துப்போனார்கள்.

௬௨ அவர்களில் ஒருமாதம்முதல்கொண்டிருந்து இலக்கம்பார்க்கப்பட்ட ஆண்சாதியானவர்கள் எல்லாரும் இருபத்துமூவாயிரம்பேர்; ஏனென்றால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரம்கொடுக்கப்படாதபடியினாலே, அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் இலக்கத்திற்குள்பட்டதில்லை.

௬௩ ¶ மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவின் கிட்ட இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளிகளில் இஸ்ரவேல் புத்திரரை இலக்கம்பார்க்கிறபொழுது இருந்தவர்கள் இவர்கள்தான்.

௬௪ முதல் மோசேயும் ஆசாரியனாகிய ஆரோனும் சீனாயின் வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரை இலக்கம்பார்க்கும்பொழுது இருந்தவர்களிலே, இவர்கள் ஒருவருமில்லை.

௬௫ ஏனென்றால் வனாந்தரத்திலே சாவவே சாவார்களென்று கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருந்தார்; எப்புனேயின் குமாரனாகிய காலேபையும், நூனின் குமாரனாகிய யோசுவாவையும் ஒழிய, வேறொருவரும் அவர்களில் மீதியாயிருந்ததில்லை.

௨௭. அதிகாரம்.

யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் வம்சங்களிலே, மனாசேயின் குமாரனாகிய மாகீரின் மகனான கிலெயாத்திற்குப் பிறந்த எப்பேருக்குக் குமாரனாயிருந்த *செலாப்பெயாத்தின் குமாரத்திகளாகிய மக்லான், நோகாள், ஒக்லான், மில்க்காள், திற்சாள் என்னப்பட்டவர்கள் சேர்ந்துவந்து,

*௪ மோ. ௨௬. ௩௩.

௨ ஆசரிப்புக்கூடாரவாசலிலே மோசேக்கும், ஆசாரியனாகிய எலெயாசாருக்கும், பிரபுக்களுக்கும், சபை அனைத்திற்கும்முன்பாக நின்றுகொண்டு சொன்னதாவது:

௩ எங்கள் தகப்பன் வனாந்தரத்தில் மரணமடைந்தார்; ஆனால் அவர் கர்த்தருக்கு விரோதமாகக் கூடின கோராகின் கூட்டத்தாரில் ஒருவராயிராமல், தம்முடைய பாவத்தினாலே மரித்தார்; அவருக்குக் குமாரரில்லை.

௪ எங்கள் தகப்பனுக்குக் குமாரன் இல்லாததினாலே, அவர்பேர் அவருடைய வம்சத்தில் அற்றுப்போவானேன்? எங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே எங்களுக்குக் காணியாட்சியைத் தாருமென்றார்கள்.

௫ ¶ மோசே அவர்கள் நியாயத்தைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுபோனான்.

௬ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

௭ செலாப்பெயாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது நிதானம்; அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கவே கொடுக்கப்படக்கடவது; அவர்கள் தகப்பன் பின்வைத்த சுதந்தரத்தை அவர்களுக்கு வரப்பண்ணுவாயாக.

௮ இஸ்ரவேல் புத்திரருக்கும் நீ சொல்லவேண்டியதேதெனில், ஒருவன் குமாரனில்லாமல் மரித்தால், அவன் பின்வைத்த சுதந்தரத்தை அவன் குமாரத்திக்கு வரப்பண்ணக்கடவீர்கள்.

௯ அவனுக்குக் குமாரத்தி இல்லாதிருந்தால், அதை அவன் சகோதரருக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

௰ அவனுக்குச் சகோதரர் இல்லாதிருந்தால், அதை அவன் தகப்பனுடைய சகோதரருக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

௰௧ அவன் தகப்பனுக்குச் சகோதரர் இல்

Digitized by Google

லாதிருந்தால், அதை அவன் வம்சத்திலே அவனுக்குக் கிட்டின உறவின்முறையானுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கக்கடவீர்கள்; இது, கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயப்பிரமாணமாயிருக்கக்கடவதென்று சொல்லென்றார்.

௰௨ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: *நீ இந்த அபரீம்பர்வதத்தில் ஏறி, நாம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப்பார். *௫ மோ. ௩௨. ௪௮, ௪௯.

௰௩ நீ அதைப் பார்த்தபிறகு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டது போல, உன் சனத்தாரிடத்திலே சேர்க்கப்படுவாய்.

௰௪ ஏனெனில் சபை வாக்குவாதம்பண்ணின சீன்வனாந்தரத்தில் நம்மைத் தண்ணீரின் சங்கதியிலே அவர்கள் கண்களுக்குமுன்பாகப் பரிசுத்தம் பண்ணவேண்டிய நீங்கள் *நம்முடைய கட்டளைக்கு இரண்டகம்பண்ணினீர்களென்றார்; அது சீன்வனாந்தரத்திலே காதேஸ் ஊர்க்கிட்ட உண்டான மேரிபாவின் தண்ணீர்தானே. *௪ மோ. ௨௰. ௰௨.

௰௫ ¶ அப்பொழுது மோசே கர்த்தரோடே சொன்னதாவது:

௰௬ கர்த்தருடைய சபை மேய்ப்பனில்லாத மந்தையைப்போல இராதபடிக்கு,

௰௭ அவர்களுக்குமுன்பாகப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கும் அவர்களைப் போகவும் வரவும்பண்ணுகிறதற்குமான ஒரு புருஷனை, சகல மாம்சத்தினுடைய ஆவிகளின் பராபரனாகிய கர்த்தர் அவர்கள்மேல் அதிகாரியாக வைப்பாராக என்றான்.

௰௮ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: ஆவி வாசமாயிருக்கிற புருஷனாகிய யோசுவாவென்ற நூனின் குமாரனை நீ சேர்த்துக்கொண்டு, அவன்மேலே உன் கையைவைத்து,

௰௯ அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபை அனைத்திற்கும்முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்குமுன்பாக அவனுக்குக் கற்பனைகொடுத்து,

௨௰ இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு, உன் மகிமையில் சிலவற்றை அவன்மேலே வை.

௨௧ அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்குமுன்பாக நிற்பானாக; இவன் அவனுக்காகக் கர்த்தருக்குமுன்பாக வந்து, வெளிச்சங்களின் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன்; அவருடைய கட்டளையின்படியே, அவனும் அவனோடேகூட இஸ்ரவேலின் எல்லாப் புத்திரரும் சபை அனைத்தும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும்வேண்டியதென்றார்.

௨௨ ¶ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே. மோசே செய்து, யோசுவாவைச் சேர்த்துக்கொண்டு, அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபை அனைத்திற்கும் முன்பாக நிறுத்தி,

௨௩ அவன்மேலே தன் கைகளை வைத்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவனுக்குக் கற்பனைகொடுத்தான்.

௨௮. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

௨ நமக்கு ஆற்றிய வாசனைக்கான நம்முடைய தகனபலிகளுக்கு அடுத்த நம்முடைய காணிக்கையையும் நம்முடைய அப்பத்தையும், அவைகளின் திட்டமான காலத்திலே நமக்குச் செலுத்தும்படிக்கு, கவனமாயிருக்கக்கடவீர்களென்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பித்து,

௩ ¶ அவர்களுக்குச் சொல்லவேண்டியதாவது: நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தகனபலி என்னவென்றால், நாள் ஒன்றிற்கு நித்தம் சர்வாங்கதகனபலியாக ஒருவயதுள்ள பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகள்தானே.

Digitized by Google